PSGR Krishnammal College for Women

# PRANAV JOURNAL OF TAMIL

ISSN: 2582-9599

**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)**

**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி**

**மற்றும்**

**பிரணவ் தமிழியல் ஆய்விதழ்**

**இணைந்து நடத்திய**

**இணையவழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம்**

**கட்டுரைகளின் தொகுப்பு நூல்**

# பகுதி- 2

# பாராட்டுரை



**டாக்டர். நந்தினி ரங்கசாமி,**

**கல்லூரித் தலைவர்,**

**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**

**கோயம்புத்தூர் - 641 004**

**மெய் வருத்தம் பாரார் பசிநோக்கார் கண் துஞ்சார்**
**எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி**
**அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்**
**கருமமேகண் ஆயினார். - நீதிநெறி விளக்கம்**

எண்ணி முடிப்பதில் பேரார்வமும் அதை முடிக்கும் வல்லமையும் பெற்றவர்கள் கோவை மாநகரில் சிறந்த பெண்கல்வி நிறுவனமாக விளங்கும் பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி. 1963ஆம் ஆண்டு தெய்வத்திரு ஜி.ஆர்.கோவிந்தராஜுலு அறக்கட்டளையின் கீழ் நிறுவப்பட்டது. நிறுவனரின் தாயார் பெயரால் அழைக்கப்படும் இக்கல்லூரி அறுபதாண்டுகளுக்கு முன்பே தொலைநோக்குப் பார்வையோடு பெண்களுக்கென உருவாக்கப்பட்ட தனித்துவம் வாய்ந்த முதன்மைக் கல்லூரியாக விளங்குகிறது. இக்கல்லூரியின் தமிழ்த்துறை நீண்ட நெடிய பாரம்பரியத்தையுடையது. பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி தோன்றிய நாள் முதல் இன்று வரை பல சிறப்பான செயல்பாடுகளைச் செய்துவருகிறது.

தமிழ்த்துறை சந்திரகாந்தம் தமிழ்மன்றம், தொல்காப்பியர் தமிழ் ஆய்வுமையம் ஆகியவற்றின் மூலம் மாணவிகளின் அறிவுத்திறனை மேம்படுத்தி வருகிறது. கல்விப்பணி மட்டுமின்றி சமூகப்பணியிலும் இணைந்து செயல்பட்டுவரும் தமிழ்த்துறை பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு உளவியல் சங்கம், சென்னை ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய **“தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்”** என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடத்துவது மகிழ்வுக்குரியது மட்டுமல்ல பெருமைக்குரியதுமாகும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள உதவும் ஆவணங்களுள் ஒன்று இலக்கியம். காலத்தின் பிரதிபலிப்பாக விளங்கும் இலக்கியங்கள் வெளிப்படுத்தும் உளவியல் சிந்தனைகளை நாம் ஆய்வுக்குட்படுத்தும்போது அவற்றைப் பற்றிய தெளிவும் பெருமிதமும் மேலோங்குகிறது. தமிழ்த்துறையினரின் முயற்சிக்கு பாராட்டுக்கள். மேலும் மேலும் வளர வாழ்த்துக்கள்.

**டாக்டர். நந்தினி ரங்கசாமி**

## **மகிழ்வுரை**



**முனைவர் நா.யசோதாதேவி,**
**கல்லூரிச் செயலர்,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர் - 641 004.**

"**நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்**
**பண்புபா ராட்டும் உலகு**"

என்ற வள்ளுவனின் வாக்கிற்கு ஏற்ப வாழ்ந்து காலங்களால் அழிக்கமுடியாத புகழைப் பெற்றோர் தெய்வத்திரு ஜி.ஆர்.கோவிந்தராஜுலு, தெய்வத்திருமதி சந்திரகாந்தி அம்மையார் அவர்கள் ஆவர். பெண்கல்வி உயர்வை சிந்தையில் நிறைத்து செயலிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி புதுவாழ்வு பிறக்க வழி செய்தவர். அகில இந்திய அளவில் சிறந்ததொரு பெண் கல்வி நிறுவனமாகவும், ISO தரவரிசை தனிச்சிறப்புத் திறன் கல்லூரி,NAAC,NIRF போன்ற தகுதிகளைப் பெற்று நாடு போற்றும் கல்லூரியாக தலைசிறந்து விளங்கும் பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரியை நிறுவியவர் . அறிவொளி பரப்பிய ஞாயிறு, பெண் கல்விக் காவலர், கோவை மாநகர கல்வி நிறுவனங்களின் நந்தாவிளக்கு, ஜி.ஆர். ஜி கல்வி நிறுவனத்தின் குலவிளக்கு தெய்வத்திரு ஜி. ஆர். கோவிந்தராஜுலு அவர்கள்.

எம் கல்லூரி தேசிய அளவில் மட்டுமின்றி பன்னாட்டு அளவிலும் டொலிடோ பல்கலைக்கழகம், சாண்டியாகோ பல்கலைக்கழகம் போன்ற பல பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து மாணவிகள் வளம்பெற ஓயாது உழைத்து வருகிறது.

இத்தகு சிறப்பு வாய்ந்த கல்லூரியில் தனித்துவமிக்க துறையாக தமிழ்த்துறை விளங்குகிறது. இலக்குகளை இயம்புவதே இலக்கியத்தின் நோக்கம் என்பதற்கிணங்க "சந்திரகாந்தம் தமிழ் மன்றம்", "தொல்காப்பியர் தமிழாய்வு மையம்", "வேலைவாய்ப்புக் கல்வி" ஆகியவற்றின் மூலம் பல நிகழ்ச்சிகளை நடத்தி மாணவிகளின் தரத்தை முன்னேற்றி வருகின்றனர். கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இடையேயான போட்டிகளில் பல மாணவிகள் சாதனை படைத்து வருகின்றனர். மலேசியா, இலங்கை, ஜெர்மன் போன்ற நாடுகளுடன், பல தமிழ் அமைப்புகளுடன் சேர்ந்து பன்னாட்டுக் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றனர். இதன் தொடர்ச்சியாக பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு உளவியல் சங்கம், சென்னை ஆகியவற்றுடன் இணைந்து நடத்திய "**தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்**" என்ற தலைப்பில் இணையவழி பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கிற்கு ஆணி வேராக இருந்து செயல்பட்டு வரும்

தமிழ்த்துறையினருக்கு எனது வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் தெரிவிப்பதில் உள்ளம் மகிழ்கின்றேன். இக்கருத்தரங்கம் தமிழ் இலக்கியங்களில் காணலாகும் உளவியல் பதிவுகளையும், சிந்தனைகளையும் மொழி கடந்து எல்லை கடந்து உலகமே அறியும் படி செய்யும் என்பதில் ஐயமில்லை.

இக்கருத்தரங்கில் இலங்கை, மலேசியா, ஆஸ்திரேலியா போன்ற மேலைநாட்டு பேராசிரியர்களும், ஆர்வலர்களும், ஆய்வு மாணவர்களும் ஆய்வுக் கட்டுரைகள் எழுதி இருப்பதும், கருத்தரங்கத்தின் நோக்கினை மெய்ப்பிக்கும் வகையில் கட்டுரைகளை வாசிக்க இருப்பதும், இவை அனைத்தும் தொகுத்து மலராக வெளியிட்டு இருப்பதும் போற்றுதலுக்குரியது. தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் ஆற்றிய பெரும் பணியை உளமாரப்பாராட்டி இது போன்ற பல நிகழ்வுகள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று வாழ்த்தி மகிழ்கிறேன்.

**முனைவர் நா.யசோதாதேவி**

# <u>வாழ்த்துரை</u>



**முனைவர் எஸ். நிர்மலா,**
**கல்லூரி முதல்வர்,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர்- 641 004.**

தமிழ் என்னும் சொல்லுக்கு இனிமை என்று பொருள். “எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெரும் தமிழணங்கே” என மனோன்மணியம் சுந்தரனாரும், “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்” என மகாகவி பாரதியும், “தமிழுக்கும் அமுதென்றுபேர் – அந்தத்தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என புரட்சிக்கவி பாரதிதாசனும், கொண்டாடி மகிழும் நமது அன்னைத் தமிழின் சிறப்புகள் சொல்லிமாளாது. தமிழ் மொழியின் சிறப்பு அளவிடற்க்கரியது. தமிழின் தொன்மை, இனிமை, எளிமை, இலக்கண வளம், இலக்கியச் செழுமை என எண்ணற்ற சிறப்புகளைத் தமிழாய்ந்த பெருமக்கள் மட்டுமின்றிப் பிற மொழி அறிஞர்களும் புலவர் பெருமக்களும் தமிழ்மொழியை வியந்து போற்றுகின்றனர்.’வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி என்பார் மகாகவி பாரதி. அத்தகைய வளம் நிரம்பியது தமிழ் மொழியாகும். இலக்கியம் என்பது மக்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டும் கண்ணாடி என்பர். அப்படிப்பட்ட சங்க இலக்கியப் பாக்களில் கருத்துச் செறிவு கொண்ட வாழ்வியல் விழுமியக் கருத்துகள் எல்லாம் அகம் சார்ந்த ஆளுமைகளாக இருக்கின்றன.

அகம் என்பது மனம் சார்ந்த செயல்பாடுகள் இச்செயல்பாட்டுடன் தொடர்பு உடையது உளவியல் ஆகும். இக்கருத்தைக்கொண்டு நல்தலைப்பைத் தேர்ந்தெடுத்த தமிழ்த்துறைக்கு மனமார்ந்த பாராட்டுக்கள். ‘தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவச் செய்தல் வேண்டும்’ என்ற கனவினை நனவாக்கும் வகையில் எமது கல்லூரியின் தமிழ்த்துறை நடத்தும் “**தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்**” என்னும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருப்பது மிகுந்த பெருமைக்குரியது. இப்பெரும் பணியை நிறைவேற்றிட பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் மற்றும் தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா, தமிழ்நாடு உளவியல் சங்கம், சென்னை ஆகியவற்றுடன் கரம் கோர்த்து செயல்படும் தமிழ்த்துறையினருக்கு மனமார்ந்த பாராட்டுக்களுடன் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறேன். இந்நன்முயற்சியைத் தமிழ் கூறும் நல்லுலகம் வரவேற்கும்.

**வாழ்த்துதலுடன்**



**முனைவர் எஸ். நிர்மலா**

# என்னுரை

**முனைவர் கோ. சுகன்யா,**

**உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ.),**

**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு),**

**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**

**கோயம்புத்தூர் - 641 004.**



சங்க இலக்கியங்கள் தமிழில் கிடைத்த காலத்தால் முற்பட்ட இலக்கியங்கள். அவை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டவை. உளவியல் அண்மையில் உருவாகிய புத்தறிவுத்துறை. தமிழ், தமிழர், தமிழ்ப் பண்பாடு என்ற உரிமையையும், தனித்தன்மையையும் கால்கொள்ளக் களம் அமைத்துக் கொடுத்தது சங்ககாலம். அவ்விலக்கியங்களை பாட்டும் தொகையும் சேர்ந்த தொகை இலக்கியம் என்பர். சங்க இலக்கியத்திற்கு பிறிதொரு பெயர் சூட்டுக என்று கேட்டால் தயங்காமல் உளவியல் இலக்கியம் என குறிப்பிடலாம். அந்த அளவுக்கு அகத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு நூறும், புறத்திணைப் பாடல்கள் நூற்றுக்கு எழுபத்தைந்து சதவிகிதமும் உளவியல் பற்றினயவே என்று தமிழண்ணல் கூறுகிறார். சங்க இலக்கியங்கள் அகப்பாடல்கள், புறப்பாடல்கள் என்னும் வகைமைக்குள் அடங்கியவை. சங்கப்பாடல்கள் முழுவதும் உளவியல் குறித்த ஆய்வுக்கு வழிவகுக்கின்றன. இலக்கியமென்பது ஒருவகையில் ஒரு அறிதல் முறை. படைப்பின் நேர்மையோடு உருவான எந்த ஒரு இலக்கியமும் ஒரு வரலாற்று ஆவணமே. மனித வாழ்வின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் உளவியல் செல்வாக்கு செலுத்துகின்றது. உளவியல் அறிஞர்கள் மனித நடத்தை பற்றி ஆராய்கின்ற துறையை உளவியல் என வரைவிலக்கணம் செய்வார். மனித உள்ளத்தின் உணர்வே ஆக்கம், அழிவு போன்ற செயல்களுக்கு ஊற்றுக்கண்ணாக விளங்குகின்றது. மனிதனுக்குள் தோன்றும் உள்ளுணர்வுகளே உளவியல் எனப்படுகிறது. சமுதாயத்தில் மனிதன் நடந்து கொள்ளும் பாங்கு, அவனது செயல்பாடுகள், அறிதல் திறன், நினைவாற்றல், மறதி போன்றவைகளைக் கண்டு ஆராய்வது உளவியல் துறை. மனித மன வளர்ச்சிக்கு ஏற்ப அவனது சிந்தனைகள் அமைகின்றன.

உளவியலுக்கும் இலக்கியத்திற்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. இலக்கியம் கவிஞனின் உணர்ச்சிப் பிழம்பாய் ஆன வெளிப்பாடு. கவிதை உடலியல் சம்பந்தமானது. நல்ல கவிதையைக் கேட்கும் போது உடலில் ஏற்படும் மெய்சிலிர்ப்பைக் கொண்டு இதை உணரலாம். “உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாம்” என்கிறார் பாரதி. கவிஞனின் அக உணர்வில் ஆழமாகப் பதிந்திருக்கும் அழகுணர்வு, காதல், வேட்கை, அவலம், வெற்றிப்பெருமிதம் முதலானவையே செய்யுள்களாக, கவிதையாக வளர்கின்றன. வாழ்க்கையின் ஒவ்வொரு செயல்களிலும் உளவியலுக்கு தொடர்பு உண்டு. இலக்கியங்களில் காட்டப்படும் மனித மனங்களை ஆராய உளவியல் அணுகுமுறை பயன்படுகிறது. உளவியல் நோக்கில் தமிழ் இலக்கியங்களை பல்வேறுபட்ட கோணங்களில் அணுகி ஆராய்ந்துள்ளனர் கட்டுரையாளர்கள். இலக்கியங்களில் மனித நடத்தைகளை மையப்படுத்தி

எழுதப்பட்ட 75 கட்டுரைகள் ஆய்வாளர்களால் உளவியல் கண்ணோட்டத்தில் அணுகி அவற்றை கட்டுரைகளாக ஆக்கியுள்ளனர். இலக்கியத்தைத் தான் சார்ந்த துறைகளில் இன்றைக்கு பலரும் ஒப்பிட்டு ஆய்வு செய்து வருகின்ற வேளையில் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள் பற்றிய இந்த ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு நூலானது மிகுந்த வரவேற்புக்குரியதாகின்றது. இத்தொகுப்பில் உள்ள கட்டுரைகள் வாயிலாக உளவியலின் சுவையை நீங்கள் நுகர முடியும். இந்நூலிலுள்ள கட்டுரைகளில் கூறியது கூறல் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாகி உள்ளது. பல்வேறு எழுத்தாளர்களின் படைப்புகளை உளவியல் நோக்கில் திறனாய்வு செய்து கட்டுரைகளை அளித்துள்ள கட்டுரையாளர்கள் ஒவ்வொருவருமே உளவியல் தேர்ச்சியில் முதலிடம் பெறுகின்றனர். திறனாய்வில் உளவியல் கொள்கைகளை எளிமையாகவும், தெளிவாகவும், இலக்கியங்களுக்குப் பொருந்தும் வகையிலும் கையாண்டுள்ள ஆற்றலும் ஆய்வாளர்கள் ஒவ்வொருவரது கட்டுரைகளிலும் வெளிப்பட்டுள்ளது சிறப்பிற்குரிய ஒன்றாகும். **“தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்”** என்ற தலைப்பிலான இணையவழிப் பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கிற்கு கட்டுரைகளை உரிய காலத்தில் அனுப்பி உதவிய ஆய்வாளர்கள் ஒவ்வொருவருமே போற்றுதலுக்குரியவர்கள். ஏனெனில் பொதுவாக இந்த மாதிரியான தலைப்புகளில் ஆய்வுலகப் பெருமக்கள் கட்டுரைகள் எழுதுவதில்லை. இவ்வாறான ஆய்வுகளை மேற்கொள்பவர்கள் அரிதாகவே காணப்படுகிறார்கள். எனினும் பெரும்பேராசிரியர்கள் முதல் ஆய்வு மாணவர்கள் வரை இந்தத் தலைப்பில் தங்கள் கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி பாராட்டுகளுக்குரியது.

தமிழ் ஆய்வு மையத்தின் ஒவ்வொரு செயல்பாடுகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற கல்லூரித் தலைவர் நந்தினி ரங்கசாமி அவர்கள் தம் பல்வேறு பணிகளுக்கிடையே நூலுக்கு பாராட்டுரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். எப்பொழுதும் தமிழின் மீதும், தமிழ்த்துறையினர் மீதும் பற்றுக்கொண்டு, தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவினரான எம் முதல் முயற்சிக்கு மிகுந்த ஈடுபாட்டுடன் வழிநடத்திவரும் கல்லூரிச் செயலர் முனைவர் நா. யசோதாதேவி அவர்கள் மகிழ்வுரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அவர்களுக்கும் என் நெஞ்சம் நிறை நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன். தமிழ்துறையின் செயல்பாடுகளுக்கு அடித்தளம் அமைத்துக்கொடுத்து, எம்மை வெற்றிப்பெருமிதத்தோடு நாளும் நடை போட வைக்கும் மிகச் சிறந்த நிர்வாகி, கல்லூரி முதல்வர் முனைவர் எஸ். நிர்மலா அவர்கள் வாழ்த்துரை வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு என் சிரம் தாழ்ந்த நன்றிகள்.

இந்த கல்வியாண்டுக்குரிய கருத்தரங்கம் நடத்தவேண்டும் என்றவுடன் எம் கல்லூரியோடு இணைந்து இவ்வறப் பணியாற்ற பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழின் நிறுவனர் மற்றும் தலைவர் முனைவர் இராஜ. சீதாலஷ்மி அவர்களை அணுகியபோது, எவ்வித தயக்கமும் இன்றி, ஒப்புதல் அளித்தார். அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகள். அதேபோல பிரணவ் தமிழியல் ஆய்விதழின் பதிப்பாளர் திருவாளர் மோகன்குமார் மாணிக்கவேலு அவர்களும் அழைப்பிதழ் தொடங்கி, கருத்தரங்க நூலாக்கம் வரை மிகவும் பொறுமையுடன் நடந்து, அச்சுப்பிழைகள் இல்லாமல் ஒவ்வொன்றையும் மிகநேர்த்தியாக வடிவமைத்துக் கொடுத்தமைக்காக, அவர்களுக்கும் என் சிறப்பான நன்றிகள். மேலும் எங்களுடன் கரம் கோர்த்து பலம் சேர்த்த ஆஸ்திரேலியா, தமிழ் வளர்ச்சி

மன்றத்தின் நிறுவனர் முனைவர் சந்திரிகா சுப்பிரமணியன் அவர்களுக்கும், தமிழ்நாடு உளவியல் சங்கத்தின் தலைவர் திரு க. பாலமுருகன் ஐயா அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கருத்தரங்கம் இவ்வளவு சிறப்பாக நடந்தேறியமைக்கு மிக முக்கிய காரணகர்த்தாவாக இருந்து, என்னுடன் தோளோடு தோளாக இருந்து, நூலின் பணிச்செம்மைக்கு உறுதுணையாக இருந்தவர் முனைவர் ந. பிரதீபா அவர்களுக்கு நான் மிகுந்த நன்றிக்கடப்பாடுடையவள் ஆவேன். இக்கருத்தரங்க நூலின் உருவாக்கத்தில் பிழை திருத்தம் செய்தும், கருத்தரங்கப் பணிகளை சுணங்காது செய்து முடித்த தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்கள் அனைவருமே பாராட்டுதலுக்குரியவர்கள். அவர்களுக்கும் என் முத்தான நன்றிகள். இன்னும் எத்தனையோ அன்புக்கரங்களின் உதவியால் தான் இப்பணி இனிதே நிறைவடைந்தது. அவர்கள் அத்தனை பேருக்கும் நன்றி மலர்களைக் காணிக்கையாக்கிக் கொள்கிறேன். நன்றி என்பதை நிறைவாய் உணர்ந்து, நெகிழ்ந்து நன்றி கூறிக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

கோ. சுகன்யா.

**முனைவர் கோ.சுகன்யா**

# பொருளடக்கம்


| வ. எண் | பொருளடக்கம் | கட்டுரையாளர் பெயர் | பக்கம் எண் |
|---|---|---|---|
| 38 | நற்றிணையில் தனிமனித உளவியல் | முனைவர் கோ. வசந்திமாலா | 268 - 275 |
| 39 | வள்ளுவரின் கனவு நிலை உரைத்தலும் ஃபிராய்டின் கனவு பற்றிய உளவியல் கோட்பாடும் | முனைவர் வெ. விஜயலட்சுமி | 276-280 |
| 40 | கல்கி- உளவியல் பார்வையில் நந்தினி | முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி | 281 - 289 |
| 41 | சிலப்பதிகார கதைமாந்தரின் சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகள் | ச. பா. ஹரிஷ்மிதா & தே.சோனாலி | 290 - 299 |
| 42 | ஐங்குறுநூற்றில் தலைவியின் ஆளுமை உளவியல் | மு. அபிநயா | 300-303 |
| 43 | உளவியல் நோக்கில் திரையிசைப்பாடல் வழி தமிழ் இலக்கணம் கற்பித்தல் | இரா. அருணா | 304 - 308 |
| 44 | செல்லாத பணம் வெளிப்படுத்தும் உளவியல் | க. இக்பால் | 309 - 314 |
| 45 | தமிழ் இலக்கியத்தில் உளவியல் | சு. உமாராணி | 315 - 321 |
| 46 | உளவியல் நோக்கில் திருமங்கை ஆழ்வார் திருமடல்கள் காட்டும் தலைவி | முனைவர் ந. காயத்ரி | 322 - 325 |
| 47 | கம்பராமயணத்தில் உளவியல் | முனைவர் சு. சத்தியா | 326- 329 |
| 48 | உளவியல் நோக்கில் கலித்தொகைத் தோழி | முனைவர் தே. சத்யா | 330-335 |
| 49 | திருக்குறளில் உளவியல் கருத்துகள் | முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் | 336 - 342 |
| 50 | பட்டுக்கோட்டையார் பாடல்களில் சமூக உளவியல் | முனைவர் செ. சம்சு ஷஹிதா | 343- 348 |
| 51 | தமிழ் இலக்கியங்களில் உளவியல் கூறுகள் | முனைவர் நா. சிவாஜி கபிலன் | 349 - 354 |

| | | | |
|---|---|---|---|
| 52 | வெள்ளிவீதியார் பாடல்களில் உளவியல் சிந்தனைகள் | முனைவர் கோ. சுகன்யா | 355- 364 |
| 53 | பெரியபுராணத்தில் பெண்ணின் உளவியல் உணர்வுகள் | முனைவர் க. சுப்புலட்சுமி | 365 - 369 |
| 54 | நாலடியார் உணர்த்தும் இல்லற உளவியல் | தி. தமிழ்செல்வி | 370 - 374 |
| 55 | பெண்ணிய உளவியல் நோக்கில் கந்தர்வன் கவிதைகள் | முனைவர் இரா. தனசுபா | 375 - 381 |
| 56 | குறிஞ்சித்திணைக் கூற்றுகளில் உணர்வு வெளிப்பாடு | முனைவர் வே. தனபாக்கியலட்சுமி | 382- 389 |
| 57 | தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள் | கு. திலகவதி | 390 - 395 |
| 58 | சங்கற்ப நிராகரணத்தில் தலைமைப் பண்புகள் | முனைவர் ர. நித்யா | 396 - 400 |
| 59 | தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள் | க. பெர்னாட்சன் | 401 - 408 |
| 60 | "சொல்லில் விழுந்த கணம்" உளவியல் பதிவு | முனைவர் இர. மணிமேகலை | 409 - 418 |
| 61 | எழுதுகோலை நேசித்த செங்கோல்கள் | முனைவர் எம். மெஹ்முதா | 419- 425 |
| 62 | சங்கபெண்பால் புலவர்களின் பாடல்களின் உளவியல் சிந்தனைகள் | முனைவர் த. மைவிழி | 426- 431 |
| 63 | கலித்தொகையில் உளவியல் | ஜொ.சி. மோனிஷா | 432- 438 |
| 64 | பாரதி- உளவியல் பார்வை | முனைவர் மா. ரேணுகா | 439 - 444 |
| 65 | தீபம் நா. பார்த்தசாரதியின் பட்டுப்பூச்சி நாவலில் உளவியல் கூறுகள் | முனைவர் க. ர. லதா | 445 - 449 |
| 66 | சங்க இலக்கியத்தில் உளவியல் | நா. வளர்மதி | 450 - 455 |
| 67 | எட்டுத்தொகை நூல்களில் உளவியல் சிந்தனைகள் | முனைவர் உ. ஜோதிமலர் | 456 - 460 |
| 68 | நற்றிணைப் பாடல்களில் உளவியல் கோட்பாடுகள் | முனைவர் இரா. ஜோதிமணி | 461- 465 |
| 69 | புறநானூற்றில் போர் அற உளவியல் | முனைவர் பா.ஷியாமளாதேவி | 466- 469 |

| | | | |
|---|---|---|---|
| 70 | காரைக்கால் அம்மையார் வாழ்வியல்- ஓர் உளவியல் பார்வை | முனைவர் ம. ஷீலா | 470 - 477 |
| 71 | உளவியல் நோக்கில் திருக்குறள் சுட்டும் உடல்நலமும் உணவு முறையும் | முனைவர் இரா. சீதாலட்சுமி இராதாகிருஷ்ணன் | 478- 488 |
| 72 | ஃபிராய்டிய நோக்கில் சங்கபுலவர் பொன்முடியார் பாடல்கள் | பொருநை க. மாரியப்பன் | 489 - 495 |
| 73 | சங்க இலக்கியங்களில் மருத நில மகளிரின் உளப்பாங்கு | சு. உமா | 496- 505 |
| 74 | சங்கப் பாடல்களில் தலைவனின் உள்ளப்பாங்கு | முனைவர் க. ஆனந்தி | 506 - 513 |
| 75 | The usage of Word 'ANJADI' among Malaysian Tamils – A Psycho lexical Study | Dr. Kingston Pal Thamburaj | 514 - 518 |

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நற்றிணையில் தனிமனித உளவியல்

38

முனைவர் கோ.வசந்திமாலா, இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி,
கோவை

**ஆய்வுச்சுருக்கம்**

உளவியல் அடிப்படையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் மனித உளவியலை பல்வேறு சான்றுகள் காட்டி உளவியலை ஆய்வதாகவும் உணர்வுநிலை, உளவியல் ஊடல் பற்றிய உளவியல், அச்சவுணர்வு, இரங்கல் ஆகிய நிலைப்பாடுகளில் உளவியல் குறித்த சிந்தனைகளை ஆய்வதாக இவ்வாய்வு அமைகின்றது.

**ஆய்வு நோக்கம்**

ஒவ்வொரு தனி மனிதனுடைய தனி மனிதப் பண்புகளை அறியும் பொருட்டும் சமுதாய பண்புகளை அறியும் பொருட்டும் வாழ்க்கை நெறிகள் வகுக்கப்படுகின்றன. பன்னெடுங்காலமாக உருவாக்கப்பட்டுள்ள சமூகப் பண்பாட்டுக் கட்டமைப்புகள் உளவியலின் அடித்தளமாகும். இவையே சமூக வளர்ச்சிக்குக் காலந்தோறும் நிகழும் மாற்றங்களுக்கும் காரணமாகின்றன. இவ்வாய்வுக் கட்டுரை தனிமனித உளவியல் என்ற பகுப்பு முறையை ஆய்வதாக அமைகின்றது

**முன்னுரை**

மனிதனின் மனம் அவனை இயக்கும் சக்தியாக இயங்குகிறது. மக்களின் தேவை கருதியும் விருப்பத்திற்கு ஏற்பதாயும் அமைந்து புதுப்பொலிவுடன் தன்னையும் தன்னைச் சார்ந்தோரையும் இன்புறச் செய்வது இலக்கியமாகும். வாழ்வியல் எதிர்பார்ப்புகளையும் எதார்த்தங்களையும் வெளிப்படுத்துவதாக இலக்கியங்கள் அமைகின்றன. இத்தகைய இலக்கியங்கள் மனித உளவியலை சமூகத்துக்கு எடுத்துக் காட்டும் ஒரு கண்ணாடியாகத் திகழ்கின்றன. காலத்தால் முற்பட்டதும், பண்பாட்டின் சிகரமாகவும் திகழ்வது நமது சங்க இலக்கியங்கள். சங்க இலக்கியத்தில் காணலாகும் உளவியல் கோட்பாடுகளைக் குறித்த ஆய்வாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது. ஆய்வு எல்லை கருதி ஆய்விற்கு சில சங்கப் பாடல்கள் மட்டும் எடுத்தாளப்படுகிறது.

**உளவியல் கோட்பாடுகள்**

அமைப்பு நிலை கொள்கை, செயல்முறை நிலை கொள்கை, நடத்தைக் கொள்கை, நோக்கக் கொள்கை, உளப்பகுப்புக் கொள்கை என்பதன் அடிப்படையில் உளவியல் கோட்பாடுகள் அமைகின்றன. உளவியல் பல்வேறு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை யாவும் சமுதாயத்திற்குக் கருத்துக்களைத் தெரிவிப்பதன் அடிப்படையிலேயே அமைகின்றன.

**பொது உளவியல் (General Psychology)**

பொது உளவியல் என்பது மனிதனின் வளர்ச்சி நிலைகள் மரபு மற்றும் சூழலின் பங்கு மனிதனின் உடல் வளர்ச்சி மற்றும் உள்ள வளர்ச்சி தனியார் வேறுபாடுகள் சிந்தனை மற்றும் கவனம் நுண்ணறிவு மனவெழுச்சி ஆக்கச் சிந்தனை ஆளுமை போன்ற அம்சங்களை விவரிக்கும் ஒரு இயல் ஆகும் பொது உளவியல் அனைத்து உறவுகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

ஆங்கிலத்தில் "சைக்காலஜி" என்னும் சொல் உளவியல் என்கின்ற தமிழ் சொல்லுக்கு நேரானது. சைக்கி (Phyche) லோகஸ் (Logus) ஆகிய இரண்டு சொற்களின் கூட்டாக சைக்காலஜி வழங்கப்படுகிறது. சைக்கி ஆன்மாவைக் குறிக்கும் கிரேக்கச் சொல், லோகஸ் என்பது அறிவு என்ற பொருளில் வரும் மற்றொரு கிரேக்கச் சொல். ஆன்மாவை அறியும் அறிவியல் (Science of the Soul) சயின்ஸ் ஆப் த ஸோல் என்பதே சைக்காலஜியின் பொருளாகும் "(உளவியல் நோக்கில் திருக்குறள் ப.1) என்று க. பலராமன் குறிப்பிடுகிறார்.

சைக்காலஜி என்ற சொல்லை முதன் முதலாக ரூடோல்ப் ஜியோக்கல் (Rudolf Gookle) பயன்படுத்தினார். (கற்பித்தல் கற்றலின் உளவியல். ப.28) என்று அந்தோணிசாமி கூறுகிறார்.

உளவியல் சிந்தனைகள் சங்கத்தமிழ் மக்களிடையே நிலைபெற்று இருந்துள்ளமையை சங்கத்தமிழ் செய்யுள்களின் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாய்வுக் கட்டுரையானது முதல் நிலையாக நற்றிணையில் காணக் கிடக்கும் உளவியலைக் குறிப்பிடுவதுடன் உணர்வு, சமூக மதிப்பீடுகள் மற்றும் அறிவுநிலை வெளிப்பாடுகள் ஆகியவற்றின் உளவியல் சிந்தனைகள் பழந்தமிழரிடையே எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பதனை அறிந்து ஆய்வதாக அமைந்துள்ளது.

**உளவியல்**

உளவியல் என்பது வளர்ந்து வருகின்ற ஒரு துறையாகும். இதனை ஒரு திட்டமிட்ட வரைவிலக்கணம் ஒன்றினை ஒப்பிட்டுக் கூறிவிட முடியாது என்றாலும் கூட உளவியலாளர்கள் பிராய்ட், யூங், லக்கான் போன்றோர் கூறிய கருத்துக்களை அறிவியலுக்கான வரையறைகள் ஆக நாம் எடுத்துக்கொள்ளலாம். அகராதிகளின் துணை கொண்டு ஆராயும்போது மனித மனம் செயல்படுவது குறித்தும் மனிதன் செயல்பாடுகளை நடத்தை குறித்து ஆராயும் அறிவியல் துறை Psychology எனவும் The Science of the Mind - மனத்தத்துவ சாஸ்திரம் எனவும் பொருள் கூறுகிறது. இந்த வகையில் சிக்மண்ட் பிராய்ட் மனதின் இயல்பு பாகுபாடு செயல்பாடுகள் என்னும் நிலைப்பாடுகளில் உளவியலை ஆராய்ந்து உளவியலுக்கு அறிவியல் அந்தஸ்து அளித்து உள்ளார். இலக்கியப் படைப்புகளை ஆராயப் பயன்படும் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) பற்றி முதன்முதலில் எடுத்துக்காட்டுடன் விளக்கியவர் அவரே ஆவார் .

எனவே மனித மனதின் செயல்பாடுகளுக்கு அடிமனம் எவ்வாறு காரணமாகிறது என்பதனையும் கலை இலக்கியப் படைப்புகளில் அடிமனத்தின் பங்கு எத்தகையது என்பதையும் இவர்கள் விளக்கியுள்ளனர் இந்த அடிப்படையில் இலக்கியப் படைப்புகளில் இடம்பெறக்கூடிய அடிக்கருத்து பாத்திரப்படைப்பு

படைப்புகளில் கையாளப்படும் குறியீடுகள் போன்றவற்றை ஆராயும் உளவியல் சிந்தனைகளுக்கு வித்திட்டவர்கள் இவர்களே ஆவர். எனவே தெளிவுபடுத்த பெற்ற அடிமனம், ஆழ்மனம் என்னும் பாகுபாட்டில் லகான் அதிகம் ஆர்வம் கொள்ளவில்லை மாறாக அடிமனம் எவ்வாறு தொழில்படுத்தப்படுகிறது, அடிமன செயல்பாட்டிற்கும் மொழிக்கும் உள்ள தொடர்பு என்ன என்பது குறித்து ஆராய்ந்துள்ளார். இவ்வாறாக இலக்கியத்தில் உளவியலின் தாக்கம் எத்தகையதாக அமைந்துள்ளது என்பதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**நற்றிணையில் உளவியல்**

நல் + திணை என்ற இரு சொற்களின் கூட்டு நற்றிணை ஆகும். நல்ல ஒழுகலாறுகளைக் கூறுவது என்பது இதன் பொருள். திணை என்ற சொல்லுக்கு இலக்கியத்தில் ஒழுக்கம் என்றும் இடம், நிலம், ஒழுக்கம், பகுப்பு எனவும் பொருள் கூறுகின்றது. அகராதிகள், சங்ககால அகத்திணை இலக்கியங்களுள் நற்றிணையும் ஒன்றாகும். நற்றிணையில் 9 முதல் 12 அடிகள் வரை பாடல்களைக் காணமுடிகின்றது நற்றிணைப் பாடல்களை தொகுக்கச் செய்தவர் பன்னாடு தந்த மாறன் வழுதி தொகுப்பித்தவர் பற்றி அறிய முடியவில்லை.

**உணர்வு நிலையும் உளவியல் சிந்தனையும்**

சங்க இலக்கியங்கள் உயிரோட்டம் வாய்ந்தவை. இவற்றில் உணர்வு என்பது அத்தகைய செய்யுட்களில் உயிராக நின்று இருப்பதனைக் காணலாம். உணர்வு என்பது மொழிகளைத் தாண்டி அனைத்து உயிர்களுக்கும் மனிதர்களுக்கும் பொதுவானது. இதனையே தொல்காப்பியர் தனது மெய்ப்பாட்டியலில் மனிதருக்குள் தோன்றும் அடிப்படை உணர்வுகள் குறித்து உளவியல் ரீதியாக குறிப்பிட்டுள்ளதனை அவரது சூத்திரத்தின் வழி அறிய முடிகிறது.

**"அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப "** **(தொல்காப்பியர் - தொல்காப்பியம் நூ.எ.252)**

சிரிப்பு, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்று எட்டு மெய்ப்பாடு என்ற வரையறைக்குள் குறிப்பிடுகிறார். இந்த வகையில் உணர்வுக்கும் தொழில் பாட்டுக்கும் இடையே காரணகாரிய தொடர்பை ஏற்படுத்திக் காட்டுகின்றார். எனவே மனித மனத்தின் உணர்வுகளே மெய்ப்பாடுகள் ஆக மனித உடலில் தோன்றுகின்றது என்பதனை இதன் வழி அறிய முடிகிறது.

**நற்றிணையில் அச்ச உணர்வு**

நற்றிணையில் பாலை நிலத்தின் தன்மையை நினைத்து தோழியிடம் ஒரு தலைவி புலம்பும் போது தன்னைக் குறிக்கும் பொழுதும் உணர்வு தோன்ற புலம்பும் தன்மையினைக் காணமுடிகிறது. இந்த உணர்வானது ஒரு பொருளை அடைய முடியாத நேரத்திலும் தனக்குக் கிடைக்குமா கிடைக்காதா என்ற ஏக்கத்தில் காரணமாகவும் தோன்றுகிறது என்று குறிப்பிடலாம்.

**"உயர்தர உற்ற இயங்கு அருங் கவலைப்**

**பிரிந்தோர் வருந்தும் புணரப் புணர்ந்தோன்**

**யாதனின் தவிர்க்கவும் காதலர் செலவே"** **( கண்ணகனார் - நற்றிணை - பா.79)**

நற்றிணைப் பாடலில் தலைவனுடைய பிரிவினால் ஏற்படும் துயரத்தைத் தாங்க ஆற்றாமல் தன்னிடம் இல்லை எனவும் அப்பிரிவுத் துயரை தாங்காமல் தான் இறந்து விடுவேன் என்றும் தலைவி குறிப்பிடும் இடத்தில் தலைவியின் அஞ்சும் உளவியல் சிந்தனையானது வெளிப்படுகின்றது.

சங்க இலக்கியத்தில் தாய் ஒருத்தி தனது மகள் கொடிய பாலைவனத்தில் தலைவனைத் தேடி சென்றுள்ள பொழுது தலைவன் அவளோடு செல்லாமை கண்டு இரங்கும் மன எழுச்சி நிலையினை பிறிதொரு பாடலில் காணமுடிகின்றது.

**"அழுந்துபட வீழ்ந்த பெருந் தண் குன்றத்து**

**ஒலி வல் ஈந்தின் உலவைஅம் காட்டு**

**ஆறு செல் மாக்கள் சென்னி எறிந்த"** **(பெரும்பதுமனார் - நற்றிணை - பா.02)**

என்ற நற்றிணைப் பாடலில் மகளின் பிரிவினால் ஏற்பட்ட துயரை விட தலைவன் மகளோடு உடன் போகலாகாது என்ற நிலையினை அவளுக்கு அழுகை வெளிப்படக் காரணமாக அமைந்தது என்று குறிப்பிடலாம். இவ்வகையில் தமிழ்ப் புலவர்கள் உளவியல் சார்ந்து சிந்தித்து தன்னுடைய சிந்தனை ஆற்றலை கவிதைகளின் வழி உணரமுடிகின்றது.

**ஊடலும் உளவியலும்**

சங்ககால பாடல்களில் ஊடல் என்கின்ற அக உலகமானது பல்வேறு பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஊடல் என்பது மனதில் ஏற்படும் ஒரு வகையான உணர்வு நிலையின் வெளிப்பாடு ஆகும். இது தலைவியினது உளவியலை வெளிக்காட்டுவதாக அமைகின்றது. உதாரணமாக ஊடல் என்பது தலைவிக்குத் தலைவன் மேல் வரும் ஒரு பொய்க் கோபம் என்று குறிப்பிடலாம். இது தலைவிக்குத் தலைவன் மேல் மட்டும் தோன்றும். இருப்பினும் இந்த ஊடலை விளைவிப்பதில் வளர்ப்பதில் பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன என்று குறிப்பிட முடியும். தலைவன் பரத்தையை விட்டு நீங்கி தலைவியிடம் செல்லுகின்றான். பரத்தையோ தன்னோடு தலைவன் இருந்த செய்தியையும் தலைவனின் செயல்களையும் தலைவியின் தோழி என் காதில் கேட்கும் படி தனது தோழியிடம் கூறி தலைவிக்கு ஊடலைத் தூண்டி விடுகின்றாள். இச்செய்தியினை,

**"உள்ளுதொறும் நகுவேன் தோழி**

**நன்னர் ஆளன் நடுங்கஞர் நிலையே"** **(அறியப்படவில்லை - நற்றிணை - பா.107)**

என்ற மருதத்திணை பாடலில் ஊடல் எண்ணம் மன எழுச்சியைப் பரத்தைத் தலைவியிடம் தோற்றுவிக்கும் உளவியல் செயல்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றுமொரு பாடலில் தலைவன் பரத்தையிடம் சென்றதை அறிந்த தலைவி தலைவனோடு ஊடல் உற்று அவனை வாயில் மறுத்து விடுகிறாள். இதனை அறிந்த தோழி தலைவியின் கோபம் தீரும் வகையில் தலைவனை இகழ்ந்து பேசுவது போல பேசி தலைவியின் கோபம் தணிக்கும் உள்ள ஆற்றலை சிந்தனைக்கு கொண்டுவருவதாகச் சங்கப்பாடல் அமைகின்றது.

**"அரிகால் மாறிய அங்கண் அகல்வயல்**

**புன்கண் அஞ்சும் பண்பின்**

**மென்கண் செல்வஞ் செல்வம் என்பதே" (மிளைக்கிழான் நல்வேட்டனார் - நற்றிணை.பா.எ. 210)**

என்ற இப்பாடலில் தலைவியின் கோபத்தை ஆற்றுவதற்கு தலைவனின் மனநிலையைப் பாதிக்காத வகையில் உளவியல் உத்தியை கையாண்டுள்ளமையானது இப்பாடலில் புலப்படுகின்றது. உண்மையான செல்வம் என்பது உன்னை நம்பி உள்ளவருக்கு எந்தக் குறையும் இல்லாதவாறு காத்தலே அல்லாமல் வேறு இல்லை நீ தலைவியைத் துன்பம் அடையச் செய்து அன்பு இல்லை என்பதனையே வெளிக்காட்டுகிறது. எனக் கூறுவதால் தலைவனின் செயலைக் குறித்து தோழி எடுத்துரைப்பது போலவும் தலைவன் தலைவியின் உளவியலை அறிந்து பேசுவது போலவும் இப்பாடல் அமைந்துள்ளது.

**இரங்கலும் உளவியலும்**

அகப்பொருள் மரபின்படி இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தல் திணையின் பாற்படும் தொழில் தொழில் நிமித்தம் தன்னைப் பிரிந்து போகும் தலைவனின் பிரிவை ஆற்றாது தலைவி இரங்கல் நிலையிலே தவிப்பாள் அந்த நிலையை உளவியல் சிந்தனையின் அடிப்படையில் வெளிப்படுத்துவதாக சங்கப் பாடல்கள் அமைந்துள்ளன. தலைவி ஒருத்தி தலைவனை பிரிந்ததனால் மெலிவடைந்து காணப்படுகின்றாள். அவள் தனக்கு ஆறுதல் கூறும் தோழியைப் பார்த்து இல்லறத்தில் சேர்ந்து இன்பம் அனுபவிப்பதைக் காட்டிலும் சிறந்த செல்வம் கருதி பொருள் தேடிச் சென்று விட்டார் சென்றபோதும் என்னை அவர் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை அவர் நினைத்திருந்தால் எனக்கு ஏற்பட்டிருக்கும் என்று கூறுகிறாள்.

**"வடிவென்று நிறைந்த மான்தேர்த் தென் கண்**

**எவ்வநோய் பிறிது உயவுத்துணை" (ஔவையார் - நற்றிணை.பா.எ.390)**

என்று குறிப்பிடும் இச்செய்யுளில் தான் கொண்ட எண்ணம் சரி அல்லது பிழை என வாதிடும் உளவியல் சிந்தனையானது புலப்படுகின்றது.

**இருத்தலும் உளவியலும்**

முல்லைத் திணைக்குரிய அகத்திணை ஒழுக்கம் இருத்தல். இது காத்திருத்தல். காவல் இருத்தல் என்ற இரு வகைகளில் நோக்கப்படுகின்றது உளவியல் சிந்தனையின் அடிப்படையில் நோக்கும் பொழுது நற்றிணையின் பல்வேறு செய்யுள்களில் இத்தகைய பாடல்களைக் காணமுடிகின்றது. தலைவன் பாசறை முடித்து தன் தேர்ப்பாகனிடம் விரைந்து போகும் குதிரைகளைத் தெரிந்து தேரில் மாட்டு எனக்காக தலைவி கண்களில் நீரோடு காத்திருப்பாள் என்று அவளோடு இணைந்து விருந்து உண்ண வேண்டும் என்று கூறுகிறான்.

**"அழுதனள் உறையும் அம்மா அரிவை**
**விருந்தயர் வருப்பொடு விருந்தினர் அசைஇ**
**முறுவல் இன் நகை காண்கம்"** **(அகம்பன் மாலாதனார் - நற்றிணை - பா. 81)**

இப்பாடலில் ஒரு பிரச்சனையை மற்றவர் நிலையில் இருந்து பார்க்கும் பொழுது மற்றவர் நிலைக்குள்ளாதல்(Empathy)என்னும் உளவியல் சிந்தனை வெளிப்படுத்துகிறது. இது புலவனின் குடும்ப உறவில் சிந்தனையை காட்டுவதாக அமைகின்றது.

**நட்பும் உளவியலும்**

உளவியல் சிந்தனைகளில் சமூக மதிப்பீடுகள் ஒழுக்க நியமங்களில் நட்பு என்பது மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றது ஒரு நண்பனை தேர்ந்தெடுப்பதிலும் நட்பு பாராட்டுவதிலும் ஒவ்வொருவருக்கும் இடையில் தனித்துவங்கள் உண்டு அவ்வகையில் நண்பர்களை தேர்ந்தெடுப்பது என்பது ஒரு சிறந்த உளவியல் ஆக அமைகின்றது என்பதனை காட்டுவதாக

**"அரிய வாழி தோழி பெரியார்**
**நாடி நட்பின் அல்லது**
**நட்டு நாடார்தம் ஆகியோர் திறந்தே"** **(கபிலர் - நற்றிணை- பா.32)**

**"முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனி நாகரிகர்"** **(அறியப்படவில்லை - நற்றிணை-பா.355)**

இவ்விரு பாடல்களிலும் நட்பாராய்தல் குறித்தும் ஆய்ந்து நட்பு கொண்டபின் நண்பன் நஞ்சைக் கொடுத்தாலும் அதை மகிழ்ச்சியோடு ஏற்கும் நிலையினையும் சமூக மதிப்பீடு உளவியலாகக் காண முடிகின்றது. மேலும் திருமணம் குடும்பம் பற்றிய உளவியல் சிந்தனைகளையும் பண்டைய தமிழர்களிடத்தில் காணலாம்.

தலைவன் தலைவியை உண்மையாக அன்பு செய்கின்றான். தலைவியும் தலைவனின் பிரிவை தாங்க முடியாது துவண்டு அழுது போய்விடுகிறாள் புலம்புகிறாள். இந்நிலையில் தோழி இருவருக்கும்

உடன் போக வழி செய்து வரும் தருவாயில் குடும்பம் ஒன்றுக்கு வேண்டிய உளவியல்சார் கருத்தானது முன்வைக்கப்படுகின்றது.

**"அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்**
**பொன் நேர் மேனி மணியிற் றாழ்ந்த**
**பிழையா நன்மொழி தேறிய இவட்கே"** **(அறியப்படவில்லை - நற்றிணை பா.10)**

என்ற இச்செய்யுளில் தலைவியின் மார்புகள் தளர்ந்து இளமை போய் முதுமை வந்த நிலையிலும் கருங்கூந்தல் நரைகூடிப் போன பொழுதும் உன்னை நம்பி வந்தவளை கைவிடாதே என்று அறிவுரை கூறுவது போல அறிவுரை கூறி நிற்கின்ற ஒரு உளவியலானது இப்பாடலில் வெளிப்படுவதைக் காணலாம்.

**ஆடவர் ஒழுக்கமும் உளவியலும்**

ஆண் பெண் இருவரின் உளவியலையும் சங்க இலக்கியத்தில் பல்வேறு பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும் ஆடவரின் ஒழுக்க நிலைப்பாடுகளைக் கூறும் பொழுது அவர்களின் உளவியல் வெளிப்படுத்துவதாகவும் பாடல்கள் அமைந்துள்ளன. ஒரு ஆணைப் பற்றிய பெண்ணின் மனப் பதிவானது எவ்வாறு இருக்க வேண்டும் எப்படி எல்லாம் இருக்கக் கூடாது என்பதனைப் பெண்ணின் நிலையில் நின்று சிந்தித்துப் பார்க்கும் பொழுது உளவியில் வெளிப்பாட்டினை வெளிப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**"நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்**
**என்றும் என் தோள் பிரிபு அறி யலரே**
**நறுநுதல் பசத்தல் அஞ்சிச்**
**சிறுமை உருவமோ செய்புஅறி யலரே"** **(கபிலர் - நற்றிணை-பா.1)**

இதில் தோழிக்குத் தலைவனின் சிறப்புகளைக் கூறுவதிலிருந்து ஒருவரைப் பற்றிய புரிதலுக்கு நல்லெண்ண உளவியல் அவசியம் என்பதனை புலப்படுத்துவதாக இச்செய்யுள் அமைந்துள்ளது.

**உள்ளநிலையும் உளவியலும்**

உள்ளமானது அமைதியாக உடலும் அமைதி ஆகின்றது. உள்ளம் மென்மையானது உடலின் அமைதியின்மை ஆக மாறி விடுகின்றது. இதனால் உறக்கமின்மை பெருமூச்சு போன்றவை தோன்றுகின்றன உள்ளம் துன்புறும் போது உறக்கத்திற்கு இடையூறு ஏற்படுகின்றது உடல்நலக் கேடும் உறக்கமின்மையும் இணைகின்றன. தலைவன் மீது வெறுப்புக் கொண்டு காதல் நோயால் துன்புறும் தலைவி இரக்கமின்றி தவிக்கிறாள். இதனால் உறங்கும் ஊர் மக்கள் மீது சீற்றம் கொள்ளுகிறாள். தலைவியின் செயல்பாட்டினையும் புலம்பும் நிலையினையும் அவளது உளவியலையும் பாடலில் வெளிப்படக் காணலாம்.

**"ஆ அ ஒல் எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே" (ஔவையார் - குறுந்தொகை- பா. 28)**

என்று தலைவியின் உளவியலை உடல்நிலையில் வெளிப்பாடாக புலப்படும் தன்மையினை ஔவையார் இப்பாடலில் பதிவுசெய்துள்ளார்.

**முடிவுரை**

மனிதர்களின் இனம் தொடங்கி பண்பாடு, குலம், கல்வி, தொழில் போன்றவைகளும், நம்பிக்கைகள், பண்பாடு, சடங்கு முதலானவைகளோடு குடும்பத்தின் அமைப்புமுறைகளும் பாடப்பட்டுள்ளன. சமூக வளர்ச்சிக்குக் காலந்தோறும் நிகழும் மாற்றங்களுக்கும் காரணமாகி, தனிமனித உளவியல் என்ற பகுப்பு முறையை நற்றிணை விளக்கி நிற்பதை சான்றுகளுடன் ஆய்ந்து உணர முடிகின்றது. அகப்பாடல்களின் வழியே தலைவன் தலைவி தோழி போன்ற பாத்திரங்களின் வாயிலாகத் தனி மனித உளவியலை மையமாகக் கொண்ட நூலாக அமைவது சிறப்புக்குரியதாகும்.

**துணைநூல்கள்**

1. க. பலராமன் - உளவியல் நோக்கில் திருக்குறள்,ஜனவரி - 2021, பழனியப்பா பிரதர்ஸ் .
2. அந்தோணிசாமி - கற்பித்தல் கற்றலின் உளவியல் முதல் பதிப்பு - 2008, லத்திஷ்டாப் பதிப்பகம் பட்டுக்கோட்டை .
3. வேங்கடராமன், (மூ.ப) 2013, நற்றிணை மூலமும் உரையும், சென்னை, டாக்டர் உ.இவே.சாமிநாதையர் நூல் நிலையம்.
4. உரையாசிரியர் இரா. பிரேமா, குறுந்தொகை (மூலமும் உரையும்), 1998 வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
5. ச. வே. சுப்பிரமணியன், தொல்காப்பியம் முழுவதும் விளக்கவுரை, 2008 மெய்யப்பன் பதிப்பகம், சென்னை.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# வள்ளுவரின் கனவு நிலை உரைத்தலும் ஃபிராய்டின் கனவு பற்றிய உளவியல் கோட்பாடும்

39

முனைவர் வெ.விஜயலட்சுமி, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியங்களோடு உளவியல் மிக நெருங்கிய தொடர்பு கொண்டது. இலக்கியங்கள் வாழ்வியலின் அடிப்படையாகத் திகழ்கின்றன. மனிதன் தன் வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களை இலக்கியங்கள் பாடுபொருளாகக் கொண்டு அவனது மன நிலையையும், அதற்கேற்ற சூழ்நிலையையும் வெளிப்படுத்துவதாக விளங்குகின்றன.

கனவுகளின் பொருள் விளக்கக் கோட்பாடுகளில் பிராய்ட் அவர்கள் கனவுகளுக்கு பொருள் உண்டு என்று விவரித்துள்ளார். காலையில் விழித்தவுடன் நாம் கண்ட கனவுகளின் சில உணர்ச்சி மிக்க காட்சிகள், தெளிவான படிவங்கள் நமக்கு ஞாபகம் வருகின்றன. இதனை கனவில் வெளிப்படையான உட்பொருள் என்றழைத்தார் ஃபிராய்டு. ஒரு வழியில் அவை அவற்றுக்கு மீறிய பொருளை வெளிப்படுத்துகின்றன. கனவுகளுக்கு ஆழமான மறைந்து உள்ளுறையும் பொருள் இருக்கிறது என்பது பழமையான நம்பிக்கை.

ஆனால் பிளாட்டோ, நமக்குள்ளே உள்ள விருப்பங்களின் வெளிப்பாடுதான் கனவு என்று கருதினார். அவர் தமது குடியரசு என்ற நூலில் பெரும்பாலும் நமக்கு தெரியாத கட்டுப்பாடற்ற ஆசையுடன் நாம் பிறக்கிறோம் என்று சாக்ரடீஸின் கருத்து வழியாகச் சொல்கிறார்.

கனவு நம் உள் மன ஆழத்திலிருந்து ஆசையை வெளிப்படுத்தும் கூற்றாகவும் விளங்குகின்றது. நிறைவேறாத ஆசைகளே கனவுகளாக வருகின்றன என்றும் கூறுகின்றனர். வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமையும் இலக்கியங்களும் உளவியலோடு தொடர்பு கொண்டே இன்றுவரை உருவாக்கப்பட்டு வருகின்றன.

அவ்வகையில் இலக்கியங்கள், கனவுகளுக்கு என்று ஒரு தனி இடம் ஒதுக்கி உள்ளன. வாழ்வியல் மாற்றங்களுக்கு வழி வகுக்கும் திருக்குறளும் கனவுநிலை உரைத்தல் என்ற அதிகாரத்தில் தலைவி கூறும் கனவின் தன்மையை உளவியல் பார்வையில் விளக்குகின்றது. அதை ஆய்வு செய்யும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

**ஃபிராய்டின் கனவு பற்றிய கொள்கை**

ஃபிராய்டு கனவுகளின் பொருள் விளக்கம் காண மூன்று கொள்கைகளை முன்வைக்கிறார். முதலாவதாக கனவின் பொருள் விளக்கம் காணும்போது கனவு காண்பவரின் வாழ்க்கைச் சூழலைக் கணக்கில் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த முறை கனவில் உட்பொருளை மட்டுமன்றி கனவு காண்பவரின் பண்பு, சூழல் ஆகியவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்கிறது.

ஒரு கனவின் உட்பொருளை மட்டும் பார்க்காமல் அந்த உட்பொருள் கனவு காண்பவரின் அன்றாட வாழ்வில் எவ்வாறு படிந்திருக்கிறது என்பதைக் காண வேண்டும். ஒவ்வொரு கனவின் பொருளும் விழித்திருக்கும் அறிவு சார்ந்த செயல்பாடுகளைப் பொருத்தமான இடத்தில் பொருத்துவதாக இருக்கும்.

இரண்டாவது கொள்கை கனவுப் பொருள் விளக்கம் மொத்தத்தையும் எளிதாக விளக்க வேண்டும். ஒரு கனவின் ஒட்டுமொத்தமாகவே பொருள் விளக்கம் காண வேண்டும். கனவின் தனிப் பகுதிகள் ஒவ்வொன்றும் முழுமையானதன் அடிப்படையிலேயே தனியானதொரு இடத்தைப் பெறுகின்றது. குறிப்பாக சிறு சிறு பகுதிகளாகப் பிரித்துப் பார்த்து விளக்கம் காணும் பழைய முறையில் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

மூன்றாவது கொள்கை கனவு காண்பவர் மட்டுமே தனது கனவின் பொருளைக் விளக்கக்கூடிய அதிகாரம் உடையவர். இதன்படி கனவு காண்பவர்கள் தங்கள் கனவிற்கு என்ன பொருள் தர வேண்டும் என்று சொல்ல வேண்டும். தங்களைத் தாங்களே ஒரு விளக்கம் காண வேண்டும். மேலும், கனவு தங்கள் வாழ்க்கையின் மொத்தத்தில் எவ்வாறு பொருந்துகிறது என்றும், அது ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் தங்களுக்கு விளக்கிக் கொள்ள வேண்டும்.

"The Interpretation of dreams is the royal root to a knowledge of the unconscious activities of the mind" – Sigmund Freud

கனவுகளின் பொருள் விளக்கமானது ஒரு ஒழுக்க நெறி சார்ந்த செயலாகிறது. ஏனெனில் எப்படி வாழவேண்டும் என்ற ஒருவரின் வினாவிற்கு விடை அளிக்கும் முயற்சியில் அது இணைந்திருக்கிறது. பிராய்டின் கனவு பொருள் விளக்கம் இடம் மற்றும் சூழலைப் பொருத்து அமைகிறது. அதாவது ஒரு கனவினைப் புரிந்துகொள்ள கனவு காண்பவரின் வாழ்க்கைச் சூழல்களை ஆராயவேண்டும். ஒரு கனவின் பொருளை சரியா தவறா எனக் காட்டும் இறுதி நடுவர் கனவு காண்பவர் மட்டுமே.

உடல் தூங்கினாலும் உள்ளம் தூங்குவதில்லை. ஆழ்ந்த உறக்கம் இல்லாதபோது மனத் திரையில் தோன்றும் காட்சி தான் கனவு. மனித வாழ்வில் கனவு காணாத நபர்களே இல்லை. அவ்வாறு மனித மனதில் உயிர்த்தெழும் கனவுகள் உள்ள உணர்வுகளை பிரதிபலித்துக் காட்டுகின்றன. எதிர்கால விளைவுகளையும் தொடர்புபடுத்துகின்றன.

**கனவிற்கான காரணம் - சான்றோர் கருத்து**

கனவு சிலருக்கு விழிப்பு நிலைக்கும் உரக்க நிலைக்கும் இடையில் உணர்வுகள் மேலோங்குகின்ற போது உண்டாகின்றது. அடி மனதில் பதிந்த எண்ணங்களும், எண்ணங்களின் விளைவுகளும், இடைவிடாத நினைவுகளும் கனவுகளாக வரும் என தண்டபாணி தேசிகர் குறிப்பிட்டுள்ளார்.

புறக் கண்ணால் காண்பது நனவாகும், அகக் கண்ணால் காண்பது கனவாகும் என்று விளக்கப்படுகின்றது. ஆழ்ந்த உறக்கம் இல்லாதபோது கனவுகள் தோன்றுகின்றன. Dreams appeal only with when sleep is not sufficiently deep என்று கனவைப்பற்றி ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

நனவு மனம் உணர்ந்த உணர்வுகளை அல்லது எண்ணங்களை துயிலும் போது நனவிலி மனம் மீண்டும் நினைப்பதால் கனவுகள் வருகின்றன. மனித மனம் எதை ஆழமாக சிந்திக்கும் போதோ அல்லது ஆழமாக உணர்ந்து இடைவிடாது இயங்க ஏங்குகின்றதோ கருத்தாக்க உணர்வுகளே கனவுகளாக வெளிப்படுகின்றன.

**கனவுநிலை உரைத்தல்**

நினைவின் மிகுதியும் ஆழ் மன உணர்வுகளும் கனவுகளாக வெளிப்படும் என முன்பே பார்த்தோம். அதன்வழி கனவுநிலையைத் தலைவியின் கூற்றாக எடுத்துக்கொண்டால் முதல் நாள் நிகழ்ச்சிகள் அல்லது மனதில் தங்கியிருக்கும் நினைவுகள், கற்பனைகள் ஆகியவற்றை கனவுகள் உள்ளடக்கியிருக்கும் என்று சிக்மன்ட் ப்ராய்ட் கூறுகின்றார்.

திருக்குறளில் களவுக்குப்பின் அதை நினைத்துப் புலம்புகின்ற தலைவியின் நிலையும், தலைவனை நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கும் தலைவியின் நிலையும் பேசப்படுகின்றது. இங்கு தலைவனைப் பிரிந்து தலைவி இருக்கின்றாள் அதுவும் பிரிந்த தலைவனை ஆள் மனதில் நினைத்துக் கொண்டே இருக்கின்றாள். இடைவிடாத அந்நினைவு அவளது ஆழ்மனதில் படிந்திருக்க அதுவே கனவாக வந்துள்ளது என்பதை கனவு நிலை உரைத்தல் அதிகாரத்தின் மூலம் உணர முடிகின்றது.

**கயலுன்கண் யானிரப்ப துஞ்சின் கலந்தார்க்**
**குயலுண்மை சாற்றுவேன் மன்.** (குறள் -1212)

தலைவனை நினைத்துப் புலம்பக் கூடிய நினைந்தவர் புலம்பல் அதிகாரமும், கனவு நிலை உரைத்தல் அதிகாரமும் முறைப்படி அடுத்தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

**நனவினால் நல்கா தவரைக் கனவினால்**
**காண்டலின் உண்டென் உயிர்** (குறள் 1213)

தலைவி கூற்றுப்படி நனவில் வராத கொடியவர் கனவில் ஏன் வந்தார் என்று புலம்புவதும், நனவில் வராதவர் கனவில் வந்ததால்தான் தான் உயிர் வாழ்கிறேன் என்றும் குறிப்பிடுகின்றாள்.

**நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்**

**கண்ட பொழுதே இனிது** (குறள் 1215)

நினைவில் மட்டும் தலைவன் இன்பம் தரவில்லை கனவிலும்தான் இன்பம் தருகிறான் ஆகையால் இவ்விருவகை இன்பமும் இனிதே என்று கூறும்போதும் மகிழ்ச்சி அடைகிறாள்.

நேரில் வராத தலைவனைக் கண் துயின்றாலாவது கனவில் காணலாம். ஆனால் கண்கள் துயில மறுக்கின்றது என்று உறக்கம் இல்லாத நிலையைப் பற்றிக் கூறிப் புலம்புகின்றாள்.

**துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்**

**நெஞ்சத்த ராவர் விரைந்து** (குறள் 1218)

நனவில் நெஞ்சில் இருக்கக்கூடிய தலைவன் கனவில் தன் தோளில் உறங்குவது எவ்வாறு என்பதை வியந்து கூறுகின்றாள். இவை தலைவியின் நனவு, நனவிலி மனப் போராட்டத்தை ஒரு முரண்பட்ட நிலையில் சித்தரிக்கின்றது.

**கனவினான் உண்டாகும் காமம் நனவினான்**

**நல்காரை நாடித் தரற்கு** (குறள் 1214)

கனவு இன்பத்தைக் காம இன்பம் என்றும், தலைவனைத் தன்நெஞ்சு தவறு என்று சுட்டப்படும் சொற்களும், கருத்துக்களும் அவள் ஆழ் மனத்தில் தலைவனைப் பற்றிய இன்ப உணர்வுகளாகப் பதித்திருக்கின்றன என்பதை உணர வைக்கின்றன.

தலைவனின் பிரிவால் அவருடன் கலந்து அனுபவித்த இன்ப உணர்வுகள் அடக்கப்பட்டு அடிமனத்தில் வெளிப்படாது உறைந்து கிடக்கின்றன. அவ்வுணர்வை வெளிக்காட்ட முடியாதவாறு அடக்கி வைக்கும் எதிர்ப்பு சக்திகளும் உள்ளன. இந்நிலையில் அவளது நனவு நிலைக்கும் நனவிலி நிலைக்கும் இடையே போராட்டம் நிகழ்கிறது. அப்போது அடிமனதில் உறைந்துள்ள தலைவனைப் பற்றிய உணர்வின்பம் மேலோங்கி ஆதிக்கம் செலுத்துகின்றது.

இந்நிலையில் அடக்கி வைக்கப்பட்ட அல்லது ஒடுக்கப்பட்ட நனவிலி மனமானது செயல் திறன் மேம்பாடு அடைய அடி மன உணர்வுகள் கனவுகளாக வெளிப்படுகின்றன. ஆகவே பிராய்டின் கருத்துப்படி தலைவியின் அடக்கி வைக்கப்பட்ட ஆசைகளை நிறைவேற்ற கனவுகளாக அவை வெளிப்படுகின்றன.

**முடிவுரை**

நனவிலி மனம்தான் கனவை உருவாக்கத் தூண்டிவிடும் சாதனம் என்பதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. நிறைவேறாத ஆசைகள் மட்டும் கனவுகளாக வருவதில்லை என்று பிராய்ட் மேல் பல கருத்து விவாதங்கள் உண்டு. எனினும் கனவுக் கொள்கை ஒரு மறுபார்வை என்ற அவர் கட்டுரையில் கூறியது போல கனவு நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றி வைக்கும் ஒரு முயற்சியாக அமைகிறது என்பது பொருத்தமாக அமைந்துள்ளது.

தலைவனை விட்டுப் பிரிந்த தலைவியால் பிரிவுக் காலத்தில் உணரப்பட்ட நிறைவேறாத ஆசைகள் இங்கு கனவு என்ற நனவிலி மனத்தின் உணர்வு தூண்டுதலாக வெளிப்பட்டுள்ளன. பிரிந்த தலைவனை விரைவில் அடைய வேண்டும் என்ற மன விருப்ப உணர்வே தலைவியின் உளவியல் வெளிப்பாடாகவும் வந்துள்ளது.

**துணை நூல்கள்**


- **ஃப்ராய்டு** - ஜோனாத்தன் லியர், தமிழில் - ச.வின்சென்ட், இரண்டாம் பதிப்பு - 2013, எதிர் வெளியீடு, பொள்ளாச்சி
- **உலகத் திருக்குறள் மாநாடு** - கருத்தரங்கக் கட்டுரைக்கோவை, முதல் பதிப்பு - டிசம்பர் 1999
- **திருக்குறள் உரைக் களஞ்சியம்** - ச. தண்டபாணி தேசிகர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
- **The Interpretation of dreams** - Sigmund Freud, August 21, 2012 (Online Source)

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

40

# கல்கி - உளவியல் பார்வையில் நந்தினி

**முனைவர் ஸ்ரீ. ஸ்ரீஜெயந்தி, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணாம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர்**

**ORCiD:**https://orcid.org/0000-0002-3938-1985

**ஆய்வுச்சுருக்கம்**

பொன்னியின் செல்வன் நாவல் காலத்தால் அழியாத காப்பியத்தைப் போன்றது. கையில் எடுத்துப் படிக்கத் தொடங்கி விட்டால் கதையோடு நம்மை ஒன்றச் செய்வது படிக்கின்றவர்களின் மனதை வேறு பக்கம் திசை திரும்ப விடாமல் தம் பக்கமாகவே இழுத்துப் பிடிக்கும் திறம் வாய்ந்தது இதை எழுதிய ஆசிரியர் கல்கி தமிழுலகம் நன்கறிந்த புகழ் பெற்ற இவருடைய பிற படைப்புக்களும் அனைவராலும் புகழ்ந்து பேசப்பட்டாலும் பொன்னியின் செல்வன் நாவலுக்குத் தனிச் சிறப்பிடம் இருப்பதைத் தமிழுலகம் நன்கறியும். சோழர் வரலாற்றை ஆராய்ந்து நன்கறிந்து கதைக்களத்தைக் கல்கி அமைத்திருக்கிறார். வரலாறு தொடர்பான சில விளக்கங்களையும், வரலாற்றுச் செய்திகளையும் தக்க சான்றுகளுடனும் கல்கி அங்கங்கே கூறுவதோடு, பார்த்திபேந்திரன், நந்தினி போன்றோரின் மன மாற்றம் பற்றியும் கூறுகிறார். அமைகின்ற மனித வாழ்க்கை பற்றிய படைப்பிலக்கியத்திற்கும் உளவியல் சார்ந்த எண்ணங்களே அடிப்படையாக அமைகின்றன. கல்கியின், 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் முக்கிய பாத்திரமான 'நந்தினி'.

"நந்தினி' கல்கியால் படைக்கப்பட்டுள்ள ஒரு வசீகரமான பாத்திரம். பலரையும், வரலாற்று மாந்தர்களையும், சராசரி மனிதர்களையும் தன் அழகால் வசீகரித்தவள். சாதி, மதம், மொழி, நாடு, பணம், புகழ், செல்வாக்கு என வேறுபாடில்லாமல் அனைவரையும் ஈர்க்கக்கூடிய அழகு அவளுக்கு இயற்கையாய் அமைந்ததே அவளது பலமாகும். அவளது இப்பாத்திரத்தைக் கல்கி எப்படிப்படைத்திருக் கிறாரோ, அவ்வழியிலேயே சென்று அவளை உளவியல் ரீதியாக ஆய்வாக இக்களம் அமைகிறது.

நந்தினி 'மனச்சிதைவு நோய்' கொண்டவள் எனப் பல உளவியலார் கருத்தை மேற்கோள் காட்டி விளக்கியிருப்பது சிறப்பாக அமைகின்றது. குறிப்பாக உள்ளக் கோளாறுகளின் வகைகளான.

1. முதல்நிலை மனச்சிதைவு
2. நாணமில்லா உளச்சிதைவு
3. நினைவு, சொல், செயல் மாறாட்டக் கோளாறு
4. கருத்துத் திரிபுப் பிணி

என்ற நான்கில் மாறாட்டக் கோளாறு நீங்கலாக ஏனைய மூன்று கோளாறுகள் உடையவள் நந்தினி எனச் சான்றுகளுடன் காட்டியிருக்கிறார் ஆசிரியர்.

நந்தினியின் பாத்திரப்படைப்பை ஆராய்ந்து ஆசிரியர் தரும் முடிவுகள் கவனிக்கத்தக்கன. அவள் யார் மீதும் காதல் கொள்ள வில்லை; அவள் மீது கொண்ட காதலால் யாருடைய உள்ளமும் குளிரவில்லை; எல்லோருடைய உள்ளமும் தீப்பற்றி எரிகிறது; பெண்மைக்குரிய மென்மையோ, அன்போ, இரக்கமோ இல்லா தவள்; அவள் ஒரு குழப்பவாதி; தெளிந்த சிந்தனை இல்லாதவள்; அவள்

"அழகான நாகம்;

இனிமையான விஷம் ;

மெல்லக் கொல்லும் அமுதம்;

இரும்பை உருக்கும் காந்தம்;

மௌனத் தீ;

அமைதி காட்டும் ஆழ்கடல்

மயக்கும் நீர்ச்சுழல்;

அடங்கிக் கிடக்கும் எரிமலை;

பசி அடங்காத அக்கினி ;

வெறி கொண்ட காட்டாறு ; குளிர்ச்சி நிறைந்த/ பூக்கள் படர்ந்த/ புன்னகை புரியும் புதை சேறு;

விடுவிக்க முடியாத புதிர்;

உரமிட்டு வளர்ந்த விஷச்செடி;

வேரூன்றி வளர்ந்த முள்மரம்; திசை மாறிப்போன தென்றல்; புலித்தோல் போர்த்திய பசு;

மரணம் அனுப்பிய தூது" என நந்தினியின் பாத்திரப் படைப்பை இவ்வாறாக ஆசிரியர் விமர்சிக்கிறார். இந்த நிலையில் நந்தினியை உளவியல் ரீதியாக ஆய்வு செய்வது இக்களம் அமைகிறது.

**முன்னுரை**

பொன்னியின் செல்வன் வரலாற்று உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனை கலந்து எழுதப்பட்ட சுவையான வரலாற்று நாவல் இந்நாவல் முக்கிய பாத்திரமான நந்தினி ஆராயப்பட வேண்டியவள். சரித்திர நாயகர்களை மட்டுமல்லாது, நல்லவர்களை மட்டுமல்லாது, வாசகர்களையும் தனது ஆகர்ஷணசக்தியால் ஆட்டிப் படைக்கின்ற நந்தினி ஆராயப்பட வேண்டியவள், முன்னுக்குப் பின் முரணாகப் பேசி, முரண்பாடாகச் செயல்பட்டு, தன் போக்கில் காரியத்தை நிறைவேற்ற முற்படும் நந்தினி ஆராயப்பட வேண்டியவள். ஒரு பெரிய சாம்ராஜ்யத்தின் மன்னருக்கு அடுத்த நிலையில் உள்ள வயது முதிர்ந்த, கடூரமான தோற்றங் கொண்ட ஒரு பெரிய அதிகாரியை மணந்து கொண்ட இளம் வயதுடைய, அழகிய பெண் நந்தினி ஆராயப்பட வேண்டியவள். மனிதகுலத்துக்குரிய இயல்பான எண்ணங்களிலிருந்து விலகி, மிருகத்தன்மை நிறைந்த பழி வாங்கும் உணர்ச்சிக்கே முக்கியத்துவம் கொடுக்கின்ற நந்தினி ஆராயப்பட வேண்டியவள், மனிதனுக்கேயுரிய ஆசைகளும், தன்னைத்தானே காத்துக் கொள்ள வேண்டும் என்ற சுயநலமும், வெற்றி தேடும் மனப்பான்மையும், போட்டியும், பொறாமையும் நிறைந்த

மாந்தர்களையே- பலங்களும், பலவீனங்களும் நிறைந்த மாந்தர்களையே நாம் பொன்னியின் செல்வனில் சந்திக்கின்றோம். ஆனால் இவர்களிலிருந்து நந்தினி வேறுபடுகிறாள். பிரச்சினைக் குரிய உளவியலுக்கு ஆட்பட்டவளாக இருக்கிறாள். அவளால் மிக நீண்ட மன அழுத்தத்திற்கு ஆளானவன் ஆதித்த கரிகாலன். கடமை தவறியவர் பெரிய பழுவேட்டரையர். அவளுடைய மனபாதிப்பு, பிறரைப் பாதிக்கின்றது. அதனாலும் அவள் ஆராயப்பட வேண்டியவளாகின்றாள்.

நந்தினி பலவீனமானவள்; சொல்லப் போனால் பரிதாபத்திற்கும் உரியவள். ஆதரிப்பார் யாருமின்றி பிறருடைய ஆதரவில் ஒரு சாதாரண ஏழையின் வீட்டில் வளர்ந்தவள். அப்படிப்பட்டவளுக்குச் சோழ நாட்டின் மீது பகைமை உணர்வு ஏற்படவும், பழி வாங்கும் உணர்வு ஏற்படவும் என்ன காரணம்?பரிதாபத்திற்கு உரியவள் என்பதற்காக அவளுக்கு இரக்கப்பட முடியாது. அவளுக்குள் அகமனப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அந்தப் போராட்டத்திற்கு முடிவு காண முடியாமல் திகைக்கிறாள். வீரபாண்டியனை ஆதித்த கரிகாலன் கொன்றபோது அவள் ஐயோ என்று கதறவில்லை; ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடவில்லை. மாறாக, தனக்குரிய வாழ்க்கையைக் கிடைக்க விடாமல் செய்ததற்கான குரோதத்துடன் அவள் ஆதித்த கரிகாலனைப் பார்க்கிறாள். அந்தக் குரோதம் நிறைந்த பார்வை ஆதித்த கரிகாலனை நிம்மதியில்லாமல் அலைக்கழிக்கிறதென்றால், அது எப்படிப்பட்ட பார்வையாக இருக்க வேண்டும்?பழிக்குப் பழி வாங்க வேண்டும் என்ற உணர்வு நிறைந்தவளாகவே நந்தினி காணப்படுகிறாள். அவளை முறையாக நன்னெறிப்படுத்தக் கூடியவர்கள் யாரும் இல்லாமல் போனது அவளுடைய துரதிர்ஷ்டமாகும் செம்பியன் மாதேவியின் ஆணைப்படி தன்னுடைய வீட்டில் தன்னுடைய தங்கையாக வளர்கின்ற நந்தினியை ஓரளவிற்குக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றவன், ஆழ்வார்க்கடியான். அவனுடைய அன்பிற்கு அவள் கட்டுப்படக் கூடியவளாக இருக்கிறாள். ஆனால் அவளுடைய மனதில் சுழன்றடிக்கின்ற புயலால் அவனுடைய அன்புக் கூட்டுக்குள் அடைபட அவள் விரும்பவில்லை. அதனால்தான் ஆழ்வார்க்கடியான் அவளைச் சந்திக்க முயற்சிப்பதை அறிந்தும் கூட அவனைச் சந்திக்க மறுக்கிறாள். "அவருக்கு நந்தினி என்று சகோதரி இருந்தாள் என்பதை மறந்து விடும் படிச் சொல்லும்!" (1:260) என்று வந்தியத்தேவனிடம் கூறியனுப்புகிறாள். ஆனால் கடைசியாக அவள் சோழ நாட்டிலிருந்து வெளியேறும்போது கண்ணீருடன் "திருமலை! உனக்கு நான் இத்தனை துரோகம் செய்தும், நீ என்னிடம் வைத்த அபிமானம் மாறவில்லை. உனக்கு நீ வணங்கும் நாராயணன் அருள் புரிவார்." (5:400) என்று கூறுகிறாள் அந்த வார்த்தைகள் அவளுக்குள்ளும் கனிவு இருந்ததைக் காட்டுகிறது. ஆனால் துளியளவாய் அவளுக்குள் துளிர்த்த நல்ல பண்புகளை வளரவிட அவள் விரும்பவில்லை.

தான் சோழநாட்டுச் சக்கரவர்த்தினியாக வேண்டும் என்று அவள் பெரிய பழுவேட்டரையரிடமும் கூறுகிறாள் ஆதித்த கரிகாலனிடமும் கூறுகிறாள். ஆனால் அது அவள் நோக்கமன்று. சோழ வம்சத்தைச் சிதைக்க வேண்டும் என்பதே அவள் மனதின் ஆழத்தில் வேரூன்றி வைக்கப்பட்ட விதையாக இருக்கின்றது. அதற்குப் பாண்டிய நாட்டு ஆபத்துதவிகள் உதவி செய்கிறார்கள். பெரிய பழுவேட்டரையர்,

ஆதித்த கரிகாலன், குந்தவை, சுந்தரசோழர், மந்தாகினி, பார்த்திபேந்திரன், கந்தன்மாறன் என ஒவ்வொருவருடனும் ஒவ்வொருவிதமாகச் செயல்படுகின்ற நந்தினியின் தொடர்பு எப்படிப்பட்டதாக இருந்தது என்று கண்ட நாம் அவளுடைய முரண்பட்ட செயல்பாடுகளுக்குரிய பின்னணி என்ன? காரணம் என்ன? அவள் யாருக்கும் புரியாத புதிராக இருப்பதன் மர்மம் என்ன? உளவியல் சார்ந்த ஆய்வு அவளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவுமா? என முயன்று பார்ப்போம்.

**மனதின் இயல்பும், இயல்பு பிறழ்ந்த நிலையும்:**

சில மனிதன் சிந்திக்கத் தெரிந்தவன்; பகுத்தறிவுடையவன் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் என்று பரிணாம வளர்ச்சிக் கொள்கை தெளிவுபடுத்துகிறது. பகுத்தறிவு அவனைப் புடம்போட்டு, பண்பாடு நிறைந்தவனாக வாழச் செய்ய முயன்றாலும் அவன் நேரங்களில் மிருககுணம் உள்ளவனாகவே வாழ்கிறான். சுயநலம், பொறாமை, கோபம், வஞ்சகம், சூழ்ச்சி போன்ற தீயகுணங்கள் தலை தூக்கும்போது அவனுக்குள் இருக்கும் மிருககுணமும் தலை தூக்குகிறது அவனுக்குள் நிறைந்துள்ள அன்பு, இரக்கம், தெய்வநம்பிக்கை, நற்சிந்தனைகள் போன்ற நல்ல குணங்கள் அந்த மிருககுணத்தை எழுச்சி பெற விடாமல் தடுக்க முயல்கின்றன. அந்த முயற்சியில் நற்குணங்கள் வெற்றி பெறுமாயின் அவன் மனிதனாகவே வாழ்கிறான்; தோல்வி பெறுமாயின் மிருகமாகிறான்; இயல்புநிலை பிறழ்ந்தவனாகிறான்.

மனச்சிதைவு நோய்க்கு எல்லோரும் ஆளாவதில்லை. உடல் நோய்க்குப் பலவிதமான காரணங்கள் இருப்பதைப் போலவே, உள்ள நோய்க்கும் பலவிதமான காரணங்கள் இருக்கின்றன. மனிதன் சில தருணங்களில் கோபம், பொறாமை, காமம், சுயநலம் போன்ற வாழ்க்கையின் நிம்மதியைக் கெடுக்கக் கூடிய தேவையற்ற குணங்களைக் கொண்டவனாகவே வாழ்கிறான். நன்மை, தீமைகளின் கலவையாகத் தான் மனிதன் வாழ்ந்து கொண்டிருக்கின்றான். எந்த மனிதனும் நூற்றுக்கு நூறு உத்தமனாக வாழ்ந்ததாக - வாழ்கின்றதாகர் சொல்ல முடியாது. அவனிடம் உள்ள தீயகுணங்கள், கடல் கரைக்கு உட்பட்டதாக இருப்பதைப் போல் அக்கினி விளக்குக்கு உட்பட்டு இருப்பதைப் போல் ஒரு எல்லைக்கு உட்பட்டதாக இருக்கின்ற வரை அவனுக்கோ, சமுதாயத்திற்கோ எந்தப் பிரச்சினையும் இல்லை. கரை கடந்த புயலாக, எல்லை கடந்த அக்கினியாக வரும் போது எவ்வாறு உலகத்தினர் பாதிக்கப்படுகின்றார்களோ, அது போலவே எல்லையினைக்கடக்கின்ற தீயகுணங்கள் அக்குணங்களுடை யோனை மனக்கோளாறுகளுக்கு உள்ளாக்கி அவனது வாழ்க்கைத் திசையை மாற்றி விடுகின்றது. பொதுவாக, ஊரோடு ஒத்து வாழும் இயல்பின்றி, பிறரிடமிருந்து தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு வாழ்கின்றவர் களே பெரும்பாலும் மனச்சிதைவு நோய்க்கு ஆளாகின்றனர். வெளித் தோற்றத்தில் மனித இயல்பு உடையவர்களைப் போலவே இருந்தாலும் மனதளவில் பாதிக்கப்பட்டவர்கள் உள்ளத்தில் மனித இயல்பிலிருந்து பிறழ்ந்தவர்களாகவும், மிருகத்தனம் நிறைந்தவர்களாகவும் இருப்பர். நந்தினியும் இவ்வாறுதான் இருக்கிறாள். “ஒய்யாரக் கொண்டையாம் தாழம்பூவாம் அதன் உள்ளே இருப்பதுவோ ஈறும் பேனாம்” என்னும் பழமொழிக்கேற்றவாறு வெளித்தோற்றத்தில் சிங்காரித்து அழகாக இருக்கிறாள்; மனத்தளவிலோ

பொறாமையும், துவேஷமும், பழி வாங்கும் குணமும், உக்கிரமும் நிறைந்தவளாக இருக்கிறாள். மனிதனாகப் பிறவி எடுத்தவன் யாராக இருந்தாலும் சிறிதளவேனும் மன்னிக்கும் பக்குவத்தைப் பெற்றிருக்க வேண்டும். அது நந்தினியிடம் அறவே இல்லாமல் போகிறது.

**மனச்சிதைவு நோய் (Schizophrenia) :**

மனித இயல்புக்குரிய நடத்தையிலிருந்து மாறுபட்டவளாக நடந்து கொள்வதால், நந்தினி மனச்சிதைவுக்கு ஆளானவளாக இருக்கக் கூடுமோ? என்ற சந்தேகம் எழுகின்றது. அவள் மனச்சிதைவுடையவளா என்பதை ஆராய்வதற்கு, முதலில் மனச்சிதைவுக்குரிய அறிகுறிகளைப் பற்றி அறிய வேண்டியது அவசியமாகின்றது. "மனித நடத்தைக்குரிய குணங்களை முழுமையாக இழந்த இயல்புப் பிறழ்ச்சி உடையவன் உள்ளக் சுட்டப்படுகின்றான். மனிதனுக்குரிய குணநலன்கள் முற்றிலுமாகச் சிதைந்துபட்ட நிலையில் அவன், தான் வாழுகின்ற சூழ்நிலைக்குப் பொருத்தமற்றவனாகக் காணப்படுகின்றான். பித்த சோர்வுப் பைத்தியநிலை உடையவர்கள், கருத்துத் திரிபுப் பிணியர், மனச்சிதைவுடையோர் ஆகியோர் கோளாறு உடையவனாகச் இயல்புப் பிறழ்ச்சியுடை வகையைச் சேர்ந்தவர்களாவர். உள்ளச் செயல்பாடுகளினால் மகிழ்ச்சியின் உச்சகட்டத்திற்குச் செல்லல் அல்லது உற்சாகமின்றி மந்தமாக இருத்தல், அடிக்கடி. சுழற்சி முறையில் உணர்வுமாற்றம் பெறுதல் ஆகியவை பித்த சோர்வுப் பைத்தியநிலையின் அறிகுறியாகும். தீர்மானிக்க முடியாத பலவீனம், ஒழுங்குபடுத்தப்பட்ட ஏமாற்றம் ஆகியவை நினைவு, சொல், செயல் மாறாட்டக் கோளாறு (paranoia) நோயின் அறிகுறியாகும். படிப்படியாக அறிவுணர்வின் தரம் கெடுதலோடு உந்தப்பட்ட உணர்ச்சி, மனச்சோர்வு, ஏமாற்றம், திக்பிரமை, நோக்கமின்மை என உணர்ச்சிகளில் இடையூறு தோன்றுதல் போன்றவை மனச்சிதைவின் அறிகுறியாகும்" என்று மனநிலை பாதிப்புப் பற்றி உளவியலறிஞர்கள் கூறுகின்றனர். இத்தகைய அறிகுறிகள் நந்தினியிடம் காணப்படுகின்றன.

நந்தினி சோழ நாட்டில் வளர்ந்தவளாக இருந்தபோதிலும் பாண்டிய நாட்டினள். ஆதலின் பாண்டிய நாட்டின் மீது பற்றுதல் இருப்பதாகச் சொன்னால் கூட அவளை இயல்பான பிறவியாக, எல்லோரையும் போல் தாய் நாட்டின் மீது பற்றுதல் உள்ளவளாகக் கொள்ளலாம். ஆனால் அந்த உணர்விலிருந்து அவள் மாறுபடுகிறாள். அவளுக்குப் பாண்டிய நாட்டை விட அங்கும் யாரும் விரும்பிச் செல்ல முடியாத இடங்களே பிடித்திருக்கின்றன. சாதாரணமான மன மனிதர்களுக்குரிய இயல்பு நிலையில் அவள் இல்லை.

**முரண்பாடுகளில் உருவான நந்தினி**

நந்தினி நினைவாலும் செயலாலும் சொல்லாலும் முரண்பட்டகளாகவே இருக்கிறார் மதுராந்தகம் சோழப் பேரரசின் மீது ஆசை கொள்ளச் செய்கிறாள். பழுவேட்டரையருக்குச் சோழப் பேரரசின் மீது ஆசை வரச் செய்கிறாள், வந்தியத்தேவனுக்கு சோழப் பேரரசின் மீது ஆசை வர வைப்பதற்கு முயற்சிக்கிறாள். ஆனால் வீரபாண்டியனின் மகன் என்று சொல்லப்படும் சிறுவனின் தலையில் சோழப் பேரரசின் மகுடத்தைச் சுட்டப் போவதாகவும் கூறுகிறாள். இவ்வாறு தெளிவின்றி, கேட்பவர்களைக் குழப்பும்

விதமாகவே பேசுகிறாள். தெளிவான இலட்சியமோ, குறிக்கோளோ இன்றி மனம்போன போக்கில் பேசுகின்றாள்; செயல்படுகின்றாள்.

நந்தினி யாரிடமும் காதல் வார்த்தை பேசவில்லை. தம்மிடம் வந்து விட்டில் பூச்சிகளாய் விழுந்த பார்த்திபேந்திரன், கந்தன் மாறனிடம் கூட அவள் எந்த நம்பிக்கையும் கொடுத்துப் பேசவில்லை. பழுவேட்டரையரிடமும் அவளுக்குக் காதல் இல்லை. அவரிடமிருந்து அவள் தன்னைத் தனிமைப்படுத்திக் கொள்ளவே முயற்சிக்கிறாள். சூழ்நிலையின் காரணமாக அவள் விதி இழுத்த போக்கில் சென்று விளையாடுகின்றாள். பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையும் காட்டிப் பிழைக்கின்ற விலாங்கு மீனைப் போலவே செயல்படுகின்றாள். எல்லோரிடமும் அன்பு கொண்டவளைப் போலவே நடிக்கின்றாள் எல்லோருக்கும் தன் மீது இரக்கம் பிறக்கும்படியான சொற்களைப் பேசுகின்றாள். தமிழ் மரபிற்கு மாறாக எதையும் செய்யத் துணியவில்லை. ஊரறிய மணந்த பெரிய பழுவேட்டரையருக்கு அவள் சமுதாய ரீதியாகத் துரோகம் செய்யவில்லை. ஆதித்த கரிகாலனின் கொலைக்குப் பின்னர், அவளுடைய வெறி அடங்கிய பிறகு வாழ்க்கை வெறுமையாகிறது. இந்த நிலையில்தான் அவளுடைய மனசாட்சி விழித்துக் கொள்கிறது. யாருடைய அரண்மனையில் இருந்து கொண்டு யாரைக் கைப்பாவையாக்கித் தனது பழியைத் தீர்த்துக் கொண்டாளோ அவர் மீது கொலைப்பழி விழாமல் அவரை நிலவறையிலேயே விட்டு வந்துவிடாமல் தூக்கி வந்து நினை வில்லாமல் கிடந்த அவருக்குப் பணிவிடைகள் செய்து, தனது கடந்த கால வாழ்க்கைத் திட்டங்களை எல்லாம் அவரிடம் சொல்லி விட்டு, தான் பெரிய பழுவேட்டரையருக்குத் துரோகம் செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்தி விட்டு அவரை விட்டுப் பிரிந்து செல்கிறாள். கடைசியாக அவருக்கு முன்பாக கால்களில் விழுந்து வணங்கியவள் தான் செய்த பாவங்களுக்கு மன்னிப்புக் கோரி வணங்கினாளோ அல்லது கணவனுக்குச் செய்ய வேண்டிய மரியாதை நிமித்தமாக வணங்கினாளோ தெரியாது. தன்னளவில் சரி என்று மனதிற்குப் பட்டதைச் செய்துவிட்டு அவள் அங்கிருந்து விரைந்து போகின்றாள். அவள் இறுதிவரை பெரியபழுவேட்டரையரின் மனைவி என்ற கௌரவத்தைக் காப்பாற்றி விடுகின்றாள். ஆனாலும் சோழர் குலத்துக்குத் துரோகம் செய்து அவருக்குத் தீராப் பழியைத் தேடித் தருகின்றாள். பாம்பென்றும் நம்ப முடியாமல் பழுதை என்று மிதிக்கவும் முடியாமல் இருக்கும்படியான நிலையை- நெருக்கடியை உருவாக்குகிறாள். அன்று பழுவேட்டரையரைக் கொன்று தன்னைச் சக்கரவர்த்தி யாக்கும்படிக் கூறியவள் இன்று அவரைக் காப்பாற்றுகிறாள் மறுபிறவியில் அவருடைய மனைவியாக வேண்டும் என்கிறாள். சில நேரங்களில் கேட்பவர்களுக்குத் தலைச்சுற்றல் வருமளவிற்கு நிகழ்வுகளை மாற்றிப் பேசுகிறாள் அல்லது அவர்களது பேச்சுக்கும், செயலுக்கும் வேறு அர்த்தம் கற்பித்துக் கூறுகிறாள். இத்தகைய முரண்பட்ட அவளுடைய செய்கைகளைப் பார்க்கும்போது அவளைப் புரிந்து கொள்ள முயற்சிப்பது ஆழங்காண முடியாத ஆழ்கடலின் ஆழங்காணும் முயற்சி என்றே எண்ணத் தோன்றுகிறது.

வீரபாண்டியனை ஆதித்த கரிகாலன் வீழ்த்த வரும்போது நந்தினி வீரபாண்டியனைத் தனது காதலன் என்றும், தான் திருமணம் செய்து கொள்ளப் போகின்றவன் என்றும் கூறுகின்றாளேயன்றி தன்னுடைய கணவன் என்று கூறவில்லை. ஆனால் பின்னாளில் வரும்போது நந்தினியின் மகனாக ஒரு சிறுவன் காட்டப்படுகிறான். அவனே சோழர் குலத்தைப் பழி வாங்க வந்துள்ள பாண்டியனின் வாரிசாகச் சுட்டப்படுகிறான். "ஒரு சிறு குழந்தையை எந்தக் காட்டிலிருந்தோ பிடித்துக் கொண்டு வந்து தங்களை ஏமாற்றுகிறார்கள்." (3:317) என்று வந்தியத்தேவன் உரைக்கும்போது நந்தினி அதை மறுத்துப் பேசவில்லை. ஆதலின் அச்சிறுவன் அவளை அம்மா என்று அழைத்தபோதும் நந்தினி அவனுடைய தாயன்று என்பது உறுதியாகிறது. "எனக்குச் சிங்காசனமும் வேண்டாம். மணிமகுடமும் வேண்டாம். உன் மகன் என்று யாரோ ஒரு சிறுவனைக் கொண்டு வந்தார்கள். அவனைச் சிங்காசனத்தில் ஏற்றி மணிமகுடம் சூட்டியாயிற்று." (5:239) என்று வீரபாண்டியனின் தலையைக் கண்டு அவள் தனியே பேசுகின்ற பேச்சு, அந்தச் சிறுவன் குறித்து அவளுக்கு ஏதும் தெரியாத தன்மையையே உறுதிப்படுத்துகிறது. அவளது தெளிவற்ற சிந்தனையாக, பிறரைக் குழப்ப அவள் எடுத்துக் கொள்ளும் முயற்சியாகவே இது அமைகிறது. நந்தினி எல்லோரிடமும், எல்லா விஷயங்களிலும் சொல்லாலும், செயலாலும் முரண்படுகின்றாள்.

**மனச்சிதைவின் பொதுத் தன்மை**

தொடர் தூக்கமின்மை, தனக்குத் தானே பேசிக் கொள்ளுதல், தனக்குத் தானே சிரித்துக் கொள்ளுதல், காதில் மாயக்குரல்கள் கேட்டல், அதிகமாக சந்தேகப்படுதல், அனைவரும் தன்னைப் பற்றியே பேசுவதாக உணர்தல், சுற்றத்தார்கள் அனைவரும் தனக்கு எதிராகச் செயல்படுவதாகத் தவறான எண்ணம் கொள்ளுதல், போன்றவை மனச்சிதைவின் அறிகுறிகளாகும். நந்தினியிடம் இத்தகைய மனச் சிதைவுக்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

"நாடகப்பாங்கு நிறைந்த தன்மையுடையவர்கள் தனது பக்குவமற்ற தன்மையை வெளிப்படுத்தும் முனைப்புள்ளவராக இருப்பர்; சுயநல விரும்பிகளாக இருப்பர்; பிறரை வசீகரிக்கும் இயல்புடையவராகவும், பிறருடைய கவனத்தைத் தம் பக்கம் திருப்பும் போக்குடையவராகவும் இருப்பர்; இத்தகையவர்கள் சாதுரியமாகச் செயல்படக் கூடியவரைப் போல் இருப்பர்; எந்த நிலையையும் மறைமுகமாகச் சமாளித்துப் பிறருடைய இரக்கத்தைச் சம்பாதிக்கக் கூடியவராக இருப்பர். - தனது துன்பங்களுக்காகப் . பிறர் இரங்கும்படியாகச் செய்தல் ஆகியவை இவர்களது தனித்திறமை வாய்ந்த உத்தியாகும்."

**முடிவுரை**

நம்பிக்கை! அதுதான் வாழ்க்கையின் அஸ்திவாரம்! நம்பிக்கை இல்லையென்றால் வாழ்க்கை இல்லை. சுந்தர சோழர் அநிருத்தப் பிரம்மராயர் மீதும், பெரிய பழுவேட்டரையர் மீதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார். ஆதித்த கரிகாலன் வந்தியத்தேவன் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறான். பெரிய பழுவேட்டரையர் நந்தினி மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார். செம்பியன் மாதேவி குந்தவை மீது நம்பிக்கை கொண்டிருக்கிறார். குந்தவை அருள்மொழிவர்மன் மீது நம்பிக்கை கொண்டிருக்கிறாள். இவ்வாறு

ஒருவர் மீது ஒருவர் கொண்டிருக்கின்ற நம்பிக்கையின் அடிப்படையில் தான் மனித வாழ்க்கை இயங்கிக் கொண்டிருக்கிறது. வரலாற்று நிகழ்வுகளும் நடந்து கொண்டிருக்கின்றன. சிலருடைய நம்பிக்கை நிறைவேறு கின்றது. சிலருடைய நம்பிக்கை வீணாகப் போகின்றது. இவ்வாறு நம்பிக்கை நிறைவேறுவதற்கும், நிறைவேறாததற்கும் உளவியல் அடிப்படையில் ஏற்படுகின்ற எண்ணங்களே காரணங்களாகின்றன. ஆனால் வாழ்க்கைக்குத் தேவையான - அடிப்படையான அந்த நம்பிக்கை நந்தினிக்கு யார் மீதும் இல்லை. நந்தினியை இயல்பான குணமுடைய பெண்ணாகக் கருதி, கதையின் முடிவில் அவள் இளம் வயதுடையாள் என்றோ, பெண் என்றோ, அழகி என்றோ இரக்கம் காட்டாமல் நடுநிலைமையோடு, நியாயமாக, முழுமையாக நாம் விமர்சிக்கிறார் ஆசிரியர்.

அடங்கிக் கிடக்கும் எரிமலை

பசியடங்காத அக்கினி

வெறி கொண்ட காட்டாறு

குளிர்ச்சி நிறைந்த பூக்கள் படர்ந்த /புன்னகை புரியும் புதைசேறு

விடுவிக்க முடியாத புதிர்

இதை நந்தினியை ஆழமாகப் புரிந்து கொண்டவர்கள் நிச்சயமாக நன்றாக உணர்ந்து கொள்வார்கள்.

நந்தினியோடு இரத்த சம்பந்தம் இல்லாதவர்கள் எல்லாம் அவளால் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால், இரத்த சம்பந்தமுடைய மந்தாகினி அவளால் பாதிக்கப்படவில்லை. நந்தினிதான் மந்தாகினியால் பாதிக்கப்பட்டிருக்கின்றாள். அது வெளி பாதிப்பாக அமையாமல் உள்ளத்தளவில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அவளது வாழ்வின் திசையையும், குணத்தின் போக்கையும் மாற்றியிருக்கிறது.

உளவியல் ஆய்வு நோக்கில் நந்தினியைப் பற்றி ஒருசில முடிவுகளுக்கு நாம் வரமுடிகின்றது.

- பெரிய பழுவேட்டரையரின் வழிகாட்டுதலில் நந்தினி எந்தக் காரியமும் செய்யவில்லை.
- அவள் யார் மீதும் காதல் கொள்ளவில்லை.
- நந்தினியின் மீது கொண்ட காதலால் யாருடைய உள்ளமும் குளிரவில்லை. அவள் கொண்ட காதலால் எல்லோருடைய உள்ளமும் தீப்பற்றி எரிகிறது. வலியும், வேதனையும் நிறைந்த காயத்தைத்தான் அவள் பரிசாக அளித்திருக் கின்றாள்.
- நந்தினியால் நேரடியாகப் பெரிதும் பாதிக்கப்பட்ட வர்கள், ஆதித்த கரிகாலனும், பெரிய பழுவேட்டரை யருமே.
- தோற்றத்தில் அழகுடையவளாக இருந்த போதிலும் உள்ளத்தளவில் வெறித்தனம் நிறைந்தவளாகவே செயல்படுகிறாள்.
- தாயோடு கூடி வாழும் எண்ணத்தை விட, பழி வாங்கும் உணர்வே அவள் நெஞ்சில் நிறைந் திருக்கிறது.

- புறத்தோற்றத்தில் மட்டுமே அவள் பெண்ணுக் இலட்சணங்கள் பொருந்தியவளாக இருக்கிறாள். அகத்தில் பெண்ணுக்குரிய எந்த விதமான மென்மையோ, அன்போ, இரக்கமோ இல்லாதவளாகவே இருக்கிறாள்.
- நந்தினி ஓர் குழப்பவாதி. அவள் தெளிந்த சிந்தனையறிவு இல்லாதவள்.

மன்னிப்பின் மகத்துவத்தை, பெருமையை உணர்ந்த மண்ணின் மைந்தர்கள் நாம். அகவாழ்விலும், புறவாழ்விலும் அறம் சார்ந்த நெறிகளையே பின்பற்றும் தமிழ்ப் பரம்பரையினர் நாம். மன்னிப்பதைப் போன்ற அற்புதமான, மகத்தான, பெருந் தன்மையான செயல் வேறெதுவும் இல்லை. தனக்கும், தனது குடும்பத்திற்கும், தனது பேரரசுக்கும் துரோகம் செய்த பழுவேட்டரையரைச் சுந்தர சோழர் மன்னிக்கின்றார். தனது குடும்பத்திற்கும், சோழ ராஜ்யத்திற்கும் பெரும் இழப்பினை ஏற்படுத்திய நந்தினியை அருள்மொழிவர்மன் மன்னிக்கின்றான். தன் தாயின் அன்பும், அரவணைப்பும், பரிவும், பாராட்டும் சூழ்நிலை வசத்தால் நந்தினிக்குக் கிடைக்காமல் போகின்றன. அது நந்தினியின் குற்றமன்று. சோழர் குலத்தின் அழிவை எண்ணிச் செயல்பட்ட நந்தினியின் மீது ஏற்பட்ட கோபம், அவள் மனக்கோளாறு உடையவள் என்று தெரிந்த பிறகு இரக்கமாக மாறுகின்றது.அவள் மனக் கோளாறுடையவள் என்பது கதை நிகழ்வில் இடம் பெறும் யாருக்கும் தெரியாது. அவ்வாறிருந்தும் அவளை மன்னிக்கத் தலைப்படுகின்றனர், கரிகாலனும், பழுவேட்டரையரும். அவ்வாறிருக்கும் போது, மனக்கோளாறுடையவள் என்ற காரணத்தால் அவள் செய்த பெரும்பிழையை, பெருங்குற்றத்தைப் பிறரும் ஏன் மன்னிக்கக் கூடாது? வெளிப்புறத்திற்குத் தெரியாது உட்பகையாக அவளுக்குள் இருந்த மனக்கோளாறை யாரும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை என்பதற்கு யாரைக் குறை கூற முடியும்?

**துணைநூல் பட்டியல்**


1. உளவியல் நோக்கில் நந்தினி முனைவர் அ.இன்பரதி P பாவை பப்ளிகேஷன்ஸ் 142, ஜானி ஜான் கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014
2. கல்கியின் பொன்னியின் செல்வன்

ISSN:2582-9599
பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிலப்பதிகாரக் கதைமாந்தரின் சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகள்

**வீ. கோபிநாத், உதவிப்பேராசிரியர்,**
**ச.பா.ஹரிஷ்மிதா, தே.சோனாலி,**
**இளம் அறிவியல் உளவியல் மூன்றாமாண்டு,**
**உளவியல் துறை,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை.**

41

**ஆய்வுச்சுருக்கம்**

ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மையானது சிலப்பதிகாரம். சிலம்பு+அதிகாரம்=சிலப்பதிகாரம். சிலம்பு காரணமாக விளைந்த கதை ஆதலால் சிலப்பதிகாரம் ஆகும். இதில் முக்கியமான நான்கு பெரும் கதாபாத்திரங்களான கோவலன், கண்ணகி, மாதவி மற்றும் பாண்டிய மன்னன் ஆகியோர் வெவ்வேறு சூழ்நிலைகளில் எவ்வாறு உணர்வு சார் குண இயல்புடன் நடந்து கொண்டார்கள் என்பதனை சிக்மண்ட் பிராய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின் உதவியுடன் ஆராய்ந்து அறிவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

**கடவுச்சொற்கள்** : சிக்மண்ட் பிராய்ட், உளப்பகுப்பாய்வு கோட்பாடு, சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகள், அது - அகம் - அதியகம், சிலப்பதிகாரக் கதை மாந்தர்.

**முன்னுரை**

மனிதர்கள் மிகவும் சிக்கலானவர்கள். சில சூழ்நிலைகளில் ஒருவர் எவ்வாறு நடந்துகொள்வார் என்பதும் பிற நிகழ்வுகளை எப்படிப் பார்ப்பார் என்பதும் நபருக்கு நபர் மாறுபடும். கூடுதலாக, அன்றாட வாழ்க்கையில் முக்கியமான மற்றும் கடினமான முடிவுகளை மக்கள் எவ்வாறு எடுக்கிறார்கள் என்பதை அறிவது மிகவும் முக்கியம். இங்கு தான் சிக்மண்ட் பிராய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாடு[1] (psychoanalytic theory) மக்களுக்கு உதவும் கருவியாக உள்ளது.

**பிராய்ட்டின் மனப்பகுப்பாய்வு கோட்பாடு**

உணர்வால் உந்தப்படும் அது (ID), முனைப்பால் உந்தப்படும் அகம் (EGO), மிகையான அகத்தால் உந்தப்படும் அதியகம் (SUPER EGO) , இந்த மூன்று குணநலன்களுக்கு இடையில் நடக்கும் போராட்டமே மனித ஆளுமையை தீர்மானிக்கும்[2]. இதுவே மனத்தின் கட்டமைப்பு மாதிரி என்று கூறுகிறார் சிக்மண்ட் பிராயிட்.

**அது (ID)**

அடிப்படை தூண்டுதல்கள், தேவைகள் மற்றும் ஆசைகளை பூர்த்தி செய்ய செயல்படும் சுயநினைவற்ற மன ஆற்றலால் ஆன ஆளுமையே அது (ID) ஆகும். அனைத்து சிற்றின்ப உணர்ச்சிகள், ஆசைகள், விருப்பங்கள் மற்றும் தேவைகளை உடனடியாக திருப்திப்படுத்த பாடுபடும் இன்பக் கொள்கையே இதன் நோக்கமாகும்.

**அகம் (EGO)**

அது (ID) தான் அகம் (EGO) உருவாக அடித்தளமாகும். மேலும் அது (ID) உருவாக்கும் தூண்டுதல்களை நிஜ உலகில் ஏற்றுக்கொள்ளும் வகையில் அகம் (EGO) வால் வெளிப்படுத்த அகம்(EGO) உதவுகிறது. அகம் (EGO) உணர்வுள்ள நினைவிலும், உணர்ச்சி விழிப்பு நிலைக்கு முற்படும் நினைவிலும்,தன்னுணர்வற்ற நினைவிலும் செயல்படுகிறது . இது ஆளுமையின் ஒரு அங்கமாகும். இது யதார்த்தத்தை கையாளும். மேலும் இது சமூக ரீதியான பொருத்தமான வழிகளில் அது (ID)இன் விருப்பங்களை பூர்த்தி செய்ய முயற்சிக்கிறது.

**அதியகம் (SUPER EGO)**

அதியகம் (SUPER EGO) தன்னுணர்வற்ற நினைவின் ஓர் பகுதி, அதாவது நம் மனசாட்சியின் குரல் , சுயவிமர்சனத்தின் ஆதாரம் ஆகும். இது சமூகத்தின் தார்மீக விழுமியங்களை ஓரளவு பிரதிபலிக்கிறது. ஒரு நபர் சில சமயங்களில் தனது சொந்த ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளை அறிந்து அதற்கு ஏற்றவாறு நடப்பார். நாம் அனைவரும் பெரும்பாலும் நம்மை அறியாமலேயே கட்டளை வடிவில் செயல்படுகிறோம். பெற்றோர் மற்றும் அவர்கள் இடத்தில் நம்மை வழிநடத்தும் கல்வியாளர்கள், ஆசிரியர்கள், முன் மாதிரியான ஆட்கள் அவர்களின் சொல்படி நடக்குமாறு பழக்கப்பட்டு இருக்கின்றோம். அது (ID) உருவாக்கும் தூண்டுதல்களை கட்டுப்படுத்துவதும் சமூகத்தால் தடைசெய்யப்பட்ட தூண்டுதல்களை கட்டுப்படுத்துவதமே அதியகத் (SUPER EGO)தின் செயல்பாடு ஆகும்.

தமிழ் இலக்கியத்தில் மிகவும் பிரபலமான மற்றும் முதலாவது இலக்கியம் இளங்கோவடிகள் எழுதிய சிலப்பதிகாரமே ஆகும். ஐம்பெரும் காப்பியங்களில் சிலப்பதிகாரமும் ஒன்றாகும் . இது சாமானிய மனிதர்களை முதன்மையாக கொண்டு பேசுவதால் குடிமக்கள் காப்பியம் என்றும் அழைக்கப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி, மாதவி, பாண்டிய மன்னன் ஆகிய நான்கு முக்கிய கதாபாத்திரங்களின் சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளை, பிராய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாட்டுடன் ஒப்பிட்டு நாம் இங்கு காணலாம்.

**கோவலன்**

மாசாத்துவான் என்ற செல்வந்த வணிகனின் மகனானவன் கோவலன் ஆவான். இவரின் பதினாறு வயதில் மாநாய்கன் என்னும் மற்றோரு செல்வந்த வணிகனின் மகளான கண்ணகியை மணந்தார். பின்னர் மாதவியிடம் வசியப்பட்டு தன்னுடைய செல்வத்தை இழந்தார். இவருடைய சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளை நாம் இங்கு காணலாம்.

**கோவலனின் அது (ID) வெளிப்பட்ட தருணம்**

*கோவலன் வாங்கிக் கூனி தன்னொடு*
*மணமனை புக்கு மாதவி தன்னொடு*
*அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி*
*விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்*
*வடு நீங்கு சிறப்பின்தன் மனை அகம் மறந்து என்* [3]

மாதவியின் அழகு நடனத்தை கண்ட சோழ மன்னன் அவளுக்கு அந்நாட்டு வழக்கப்படி பொன் மாலையை பரிசளித்தான். அந்த மாலை ஆயிரத்து எட்டு கழஞ்சு பத்தரை மாற்று பொன் மதிப்புடையது.

இம்மாலையை அவ்விலை கொடுத்து வாங்குபவர்கள் மாதவிக்கு ஏற்ற மணவாளன் எனக் கூறி அதை கூனியிடம் கொடுக்க அதை பெற்று கொண்டு கடைவீதிக்கு சென்றாள் கூனி. அந்நேரம் அங்கு வந்த கோவலன் அந்த மாலையை பெற்று கொண்டு அவளைப் பின் தொடர்ந்து மாதவியின் வீட்டை அடைந்தான்.

தான் அடைந்த சிற்றின்பத்தால் தன்னுடைய அனைத்து செல்வங்களையும் இழந்தான். தனக்கும் தன் குடும்பத்திற்கும் துன்பம் நேரும் என்று அறிந்தும் இன்பக் கோட்பாடுகளின் தூண்டலால் உள நிகழ்ச்சிகளின் பதட்டத்தை கட்டுப்படுத்த முடியாமல் செயல்பட்டான்.

**கோவலனின் அகம் (EGO) வெளிப்பட்ட தருணம்**

*கானல் வரி யான் பாட தான் ஒன்றின் மேல் மனம் வைத்து*
*மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினாள் என*
*யாழ் இசைமேல் வைத்துத் தன் ஊழ்வினை வந்துஉருத்தது ஆகலின்*
*உவவு உற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை ஞெகிழ்ந்தனன் ஆய்*
*பொழுது ஈங்குக் கழிந்தது ஆகலின் எழுதும் என்று உடன் எழாது*
*ஏவலாளர் உடன் சூழ்தர கோவலன் தான் போன பின்னர்*[4]

கார் இருளை போக்கி மன்மதனே மயங்கும் வண்ணம் நிலவு அழகாக ஜொலித்தது. இது சொர்கத்தின் கடவுளான இந்திரனின் புனிதமான திருவிழா. காதலர்கள் கடற்கரையில் உள்ள பூங்காவில் தங்கள் மாலையை இசையுடன் களித்து மகிழ்தனர். அப்பொழுது மாதவி பாடிய கானல் வரி பாடல் கோவலனை சந்தேகிக்க வைத்தது, அவள் வேறொரு காதலனை பற்றி எண்ணுகிறாளோ என்று. அதனால் கோவலன் முழு நிலவு போன்ற இனிய முகமுடைய மாதவியின் கையோடு பற்றியிருந்த தன் கரங்களை விலக்கிக் கொண்டான். மாதவி அழைப்பதையும் கவனியாது கோவலன் கண்ணகியை தேடிச் சென்றான்.

யதார்த்தமாக மாதவி பாடிய கானல் வரி பாடல் இங்கு கோவலனின் சந்தேகத்தை தூண்டியது, வேதனையைவிட நீண்டகால இலாபத்திற்கு ஏற்றவாறு கோவலன் கண்ணகியை தேடிச் சென்றான் என்பது உண்மை நிலையை நோக்கியதாக இருக்கின்றது. கோவலன் உருவாக்கிய மன விம்பத்தில் இருந்து வெளிவந்தான். நிஜ உலகில் கண்ணகியை தேடும் முயற்சியை மேற்கொண்டான்.

**கோவலனின் அதியகம் (SUPER EGO) வெளிப்பட்ட தருணம்**

*கோவலன் என்றாள் ஓர் குற்றிளையாள் கோவலனும்*
*பாடு அமை சேக்கை உள் புக்கு தன் பைந்தொடி*
*வாடிய மேனி வருத்தம் கண்டு யாவும்*
*சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி*
*குலம் தரு வான் பொருள் குன்றம் தொலைந்த*
*இலம் பாடு நாணுத் தரும் எனக்கு என்ன* [5]

தான் செய்த தவறினை உணர்ந்து தன் அன்பான மனைவியான கண்ணகியிடம் தன் குற்றத்தை ஒப்புக்கொள்கின்றான். தனது சொந்த ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளை அறிந்து அதற்கு ஏற்றவாறு அது (ID) உருவாக்கிய தூண்டுதல்களை கட்டுப்படுத்தி , சமூகத்தால் தடைசெய்யப்பட்ட தூண்டுதல்களையும் கட்டுப்படுத்தி கண்ணகியுடன் தன் அன்பான வாழ்க்கையை தொடங்கினான்.

**கண்ணகி**

சேர நாட்டின் பூம்புகாரில் மாநாய்க்கன் என்னும் வணிகருக்கு மகளாக பிறந்தவள் கண்ணகி. காப்பியத் தலைவி என்று அழைக்கப்படும் கண்ணகி கோவலனின் மனைவியாவாள். தைரியம், ஆற்றல், ஆளுமை திறன் போன்ற நற்பண்புகளைக் கொண்டு வாழ்ந்தவள் கண்ணகி. பொருளீட்டுவதற்காக கோவலனிடம் தன் காற்சிலம்புகளைக் கொடுத்தாள் . பாண்டிய மன்னனின் தவறான நீதிமுறையால் அப்பாவியான தன் கணவனை இழந்தாள். இவருடைய சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளை நாம் இங்கு காணலாம்.

**கண்ணகியின் அது (ID) வெளிப்பட்ட தருணம்**

*கோநகர் சீறினேன் குற்றமிலேன் யான்என்று இடமுலை கையால் திருகி மதுரை வலமுறை மும்முறை வாரா அலமந்து மட்டார் மறுகின் மணிமுலையை வட்டித்து விட்டாள் எரிந்தாள் விளங்கு இழையாள் வட்டித்த* [6]

நெடுஞ்செழியன் தான் செய்த தவறை உணர்ந்து தனது உயிரை விட்ட பிறகும் கண்ணகியின் சினம் தணியவில்லை. தன் கணவன் பிரிந்த துயரை தாங்கிக்கொள்ள முடியாமல் மதுரை மாநகரத்தை மூன்று முறை வலம்வந்து வருந்தி சினத்தை அடக்கமுடியாமல் தனது இடப்பக்க மார்பை பிய்த்தெடுத்தெரிந்து மதுரை மாநகரத்தையே எரிக்கத் துணிந்தாள் .

தனக்கு நடந்த அநியாயத்தால் கடும் கோபம் அடைந்த கண்ணகி மதுரை மாநகரத்தையே எரிக்க துணிந்தமை கோபத்தை கட்டுப்படுத்த முடியாமல் செயல்பட்டமையை வெளிப்படுத்துகிறது .

**கண்ணகியின் அகம் (EGO) வெளிப்பட்ட தருணம்**

*பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்*
*மூத்தோர் குழவிஎனும் இவரைக் கைவிட்டுத்*
*தீத்திறத்தார் பக்கமே சேர்கென்று காய்த்திய*
*பொற்றொடி ஏவப் புகைஅழல் மண்டிற்றே*
*நற்றேரான் கூடல் நகர்.* [7]

தன் வஞ்சத்தினினை தீர்க்க மதுரை முழுவதை எரிப்பேன் என்று சபதம் பூண்ட கண்ணகியின் முன் தோன்றிய தீக்கடவுள் இங்கு இப்பொது நான் யாரை எல்லாம் எரிக்க வேண்டும் யாரை எல்லாம் பிழைக்க வைக்க வேண்டும் என்று கேட்டவுடன் கண்ணகி அறவழிச்செல்வோர், ஆநிரைகள் , பத்தினிப்பெண்கள் , முதியோர் மற்றும் குழந்தைகளை விடுத்து அனைத்தையும் தீ உண்ணட்டும் என்று கண்ணகி கூற தீயவர்கள் பக்கம் தீ பரவிற்று.

தனக்கு இடப்பட்ட கட்டளையை நிறைவேற்ற கண்ணகியின் முன் தோன்றிய தீக்கடவுள் தன் கோபத்தனல் யாரையெல்லாம் உண்ணட்டும் என்று கேட்டமை, கண்ணகிக்கு யதார்த்தத்தை உணர்த்தி குற்றமற்றோரும் உள்ளனர் என்பதை தெளிவு படுத்தியது.

**கண்ணகியின் அதியகம் (SUPER EGO) வெளிப்பட்ட தருணம்**

*இல்வளர் முல்லை மல்லிகை மயிலை*
*தாழிக் குவளை சூழ் செங்கழுநீர்*

*பயில் பூங்கோதைப் பிணையலில் பொலிந்து*

*காமக் களி மகிழ்வு எய்தி காமர்*

*பூம் பொதி நறுவிரைப் பொழில் ஆட்டு அமர்ந்து* [8]

தன்னுடைய அன்பிற்கு மட்டுமே உரிய கணவன் கோவலன் தன்னை விடுத்து மாதவியுடன் சென்றபோதும் அந்த பிரிவின் துயரில் பிறர் பழிக்கும் படி இல்லாது கற்புநெறிகளை பின்பற்றி கற்புகரசியாய் வாழ்ந்தாள் கண்ணகி.

கணவன் தன்னை விடுத்து வேறு ஒருத்தியின் கரம் பற்றியபோதும் தான் ஒழுக்க நெறிகளை பின்பற்றி சமூகத்தின் தார்மீக விழுமியங்களுக்கு உட்பட்டு வாழ்ந்தாள் .

**மாதவி**

கணிகையர் குலத்தில் பிறந்த மாதவி, ஆடல், பாடல், அழகு என்னும் மூன்று பண்புகளிலும் சிறந்தவளாக திகழ்ந்தாள். மன்னன் எதிரில் ஆடல் புனைந்து "தலைக் கோல்" பட்டம் பெற்றவள். தன்னுடைய ஆடல் திறமையால் கோவலனைக் கவர்ந்து ஈர்த்துக் கொண்டவள். இவருடைய சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளை பிராய்ட்யின் மனபகுப்பாய்வு கோட்பாட்டுடன் ஒப்பிட்டு நாம் இங்கு காணலாம்.

**மாதவியின் அது (ID) வெளிப்பட்ட தருணம்**

*வலம்படு தானை மன்னர் இல்வழிப்*

*புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்*

*தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்தக்*

*காதலர்ப் புணர்ந்தோர் களி மகிழ்வு எய்த*

*குழல்வளர் முல்லையில் கோவலர் தம்மோடு* [9]

சோழ மன்னன் அரசவையில் ஆடல் அரங்கேற்றிய மாதவியின் அழகில் தன்னை மறந்து மனையாளை தனிமையில் தவிக்க விட்டு மாதவியிடம் சென்றான் கோவலன். கோவலன் தன்னை பிரியாது காதல் கொண்டு இருப்பதால் உள்ளம் மகிழ்ந்தாள் மாதவி.

கண்ணகி என்னும் மங்கையை கோவலன் மணந்த உண்மை அறிந்தும் கோவலன் தன்பால் காதல் கொண்டு தன்னை பிரியாது இருப்பவனாய் இருந்ததால் கண்ணகியின் துயரை பொருட்டாக கருதாமல் கோவலனோடு மாதவி இல்லறம் நடத்தியது உண்மை மறந்து மாதவி தன் இச்சைக்கு இணங்கியதை வெளிப்படுத்துகிறது

**மாதவியின் அகம் (EGO) வெளிப்பட்ட தருணம்**

*வீழ்துயர் உற்றோள் விழுமம் கேட்டு*
*தாழ்துயர் எய்தித் தான்சென்று இருந்ததும்*
*இருந்துயர் உற்றோள் இணைஅடி தொழுதேன்*
*வரும்துயர் நீக்குஎன மலர்க்கையின் எழுதி*
*கண்மணி அனையாற்குக் காட்டுக என்றே* [10]

இந்திர விழாவில் கானல் வரிப் பாடல் கேட்டு மெய் உணர்ந்த கோவலன் மாதவியை விடுத்து கண்ணகியிடம் சென்றான். அந்தப் பிரிவை ஏற்க முடியாது தனிமையில் வாடினாள் மாதவி. கோவலனை தேடி மாதவி இருப்பிடம் சென்ற கௌசிக மணி, கோவலன் குறித்து வினவ, நடந்ததை கூறினாள் மாதவி. பின், கோவலனிடம் சேர்க்கும்படி ஓர் கடிதத்தை கொடுத்தாள். மாதவியின் மடலை அவன்பால் கொடுக்க, அதை படித்த கோவலன் அவள் குற்றமற்றவள் என்று புரிந்து கொண்டு அந்த மடலை தன் பெற்றோரிடம் சேர்க்கும் படி கௌசிகமணியிடம் வேண்டிக்கொண்டான்.

மடலில் மாதவி கூறிய செய்தி - "உங்கள் பெற்றோருக்கு ஆற்றும் கடமையை விடுத்து தூயவளான கண்ணகியை அழைத்து கொண்டு ஊர் விட்டு செல்லும் படி நான் என்ன தவறு செய்தேன்?" இவ்வரிகள் மாதவி உண்மையை உணர்ந்து எதார்த்தத்தை ஏற்று நடந்ததை வெளிப்படுத்துகிறது.

**மாதவியின் அதியகம் (SUPER EGO) வெளிப்பட்ட தருணம்**

*பண்டைப் பிறப்பிற் குரங்கின் சிறுகை*
*கொண்டு ஒரு பாகத்துக் கொள்கையிற் புணர்ந்த*
*சாயலன் மனைவி தானம் தன்னால்*
*ஆயினன் இவ்வடிவு அறிமினோ எனச்*
*சாவகர்க்கு எல்லாம் சாற்றினன் காட்ட* [11]

கோவலனின் கொடூர மரணம் பற்றிய செய்தியைக் கேட்டு மனமுடைந்த மாதவி, தன் தாயான சித்ராபதியிடம், "மணிமேகலையை நல்லறம் அல்லாது ஆடல் கலையில் ஈடுபடுத்த கூடாது" என கூறி தானும் புத்தப்பள்ளி அடைந்து அறவாழ்வை மேற்கொண்டாள்.

காதலன் இறந்த செய்தி கேட்டு துயர் கொண்ட மாதவி தன் மகளின் வாழ்விற்கு நல்வழி செய்து கொடுத்து தானும் துறவறம் மேற்கொண்டது அவளது கற்பு நெறியை வெளிப்படுத்துகிறது.

**பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்**

பாண்டிய நாட்டினை ஆட்சி செய்த மன்னவர் பாண்டியன் நெடுஞ்செழியன். இவரின் பெருமையையும் வீரத்தையும் பகையரசர் பார்த்து வியந்து பயந்து ஓடி ஒளிந்தார்கள். இவரின் தார்மீக ஆட்சியினால் நாட்டு மக்கள் செழித்து வாழ்ந்தனர். தன் நாட்டு பொற்கொல்லன் கூறிய பொய்யை நம்பி, ஆராயாமல் அப்பாவியான கோவலனை கொன்று பெரும் பாவியானார். இவருடைய சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளை பிராய்டின் மனப்பகுப்பாய்வு கோட்பாட்டுடன் ஒப்பிட்டு நாம் இங்கு காணலாம்.

**பாண்டிய மன்னனின் அது (ID) வெளிப்பட்ட தருணம்**

*பொய்வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட*
*இலக்கண முறைமையின் இருந்தோன் ஈங்குஇவன்*
*கொலைப்படு மகனலன் என்று கூறும்*
*அருந்திறல் மாக்களை அக நகைத்து உரைத்து*
*கருந்தொழில் கொல்லன் காட்டினன் உரைப்போன்* [12]

கோப்பெருந்தேவிக்கு காற்சிலம்பு செய்ய முடிவெடுத்து அரசாங்கப் பொற்கொல்லனை அழைத்து சிலம்பைச்செய்து வருமாறு கட்டளையிட்டான் பாண்டிய மன்னன். பேராசையின் காரணத்தால் பொற்கொல்லன் அதனை திருடி, சூழ்ச்சி செய்து சிலம்பை கவர்ந்த திருடன் கோவலன் தான் என்று பழி கூற உடன் தன் மனைவியின் மீது வைத்திருந்த அன்பாலும் அரசாங்க பொற்கொல்லன் மீதுள்ள நம்பிக்கையாலும் பாண்டிய மன்னன் சிறிதும் ஆராயாமல் திருடனை கொன்று சிலம்பை கொண்டு வா என்று காவலனிடம் உத்தரவிட்டான்.

தன் மனைவியின் காற்சிலம்பை திருடியதனால் கோபத்தின் உச்சிக்கு சென்று அதனால் நிதானத்தை இழந்தான் பாண்டிய மன்னன். மன ஆற்றல் இன்மையால் தன் ஆளுமையை இழந்து அதனின் மற்ற கூறுகளை பாராமல் கோவலனை கொல்ல உத்தரவிட்டான்.

**பாண்டிய மன்னனின் அகம் (EGO) வெளிப்பட்ட தருணம்**

*கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று*
*வெள்வேல் கொற்றம் காண்என ஒள்இழை* [13]

கண்ணகி கூற்றை கேட்ட பாண்டியன் அவளை பார்த்து அமைதியாக "திருடனை கொல்வது குற்றம் அல்ல ஆட்சி முறைமைக்கு அதுதான் அடையாளம் என்பதை நீ உணரவேண்டும்" என்றான்.

கள்வனை கொல்லுதல் தனது நாட்டுச் சட்டமென்றும், அதில் தவறு ஏதும் இல்லை என்றும் கண்ணகியிடம் கூறினான். தான் தவறு செய்யவில்லை என்றும் என் நாட்டை நான் தார்மீக வழியிலேயே ஆட்சி செய்கிறேன் என்று கூறியமை அரசன் தன் நெறிகளை பின்பற்றியதை உணர்த்துகிறது .

**பாண்டிய மன்னனின் அதியகம் (SUPER EGO) வெளிப்பட்ட தருணம்**

*யானோ அரசன் யானே கள்வன்*

*மன்பதை காக்குந் தென்புலங் காவல்*

*என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுளென*

*மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே தென்னவன்* [14]

காற்சிலம்பில் முத்துக்களுக்கு பதிலாக மாணிக்கப்பரல்கள் இருப்பதை கண்டு மன்னன் தவறு நிகழ்த்து விட்டது என்று புரிந்து மனமுடைந்து, பொன் நகை செய்யும் பொற்கொல்லன் பேச்சை நம்பியது என் தவறு என்று வருந்தி, யானோ அரசன் ? யானே கள்வன்! என் ஆயுள் முடிக என்று கூறியவாறே மயங்கி வீழ்ந்து இறந்தான்.

பாண்டியன் தனது சொந்த ஒழுக்கம் மற்றும் நெறிமுறைகளை அறிந்து அதற்கு ஏற்றவாறு தான் பழிக்கு ஆளானதாகவும், இவ்வுலகை கட்டிக்காத்து ஆண்ட பெருமையுடைய தன் பாண்டிய குடிப்புகழிற்கு தன்னால் அழிவு வந்ததாகவும் கருதி, தன் தவறை ஏற்று உயிர் இழந்தான்.

**முடிவுரை**

மனிதர்களாய் பிறந்த எல்லோரும் சூழ்நிலைக்கு ஏற்ப நடப்பவர்களே. அவர்களின் மனதானது ஒருநிலைபடாது, சூழலுக்கு ஏற்ப அலைபாயும். அதற்கு ஏற்றவாறு பின்விளைவுகளும் நிகழும். சிலப்பதிகார கதைமாந்தர்களான, பெரும் வணிகனின் மகனான கோவலன், கற்புக்கரசி கண்ணகி, ஆடல் அரசி மாதவி மற்றும் செங்கோல் ஏந்திய பாண்டிய மன்னன் ஆகியோரின் வாழ்வில் சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளால் அவர்களின் வாழ்வில் ஏற்பட்ட நிகழ்வுகள், சூழ்நிலைகளால் விளையும் வினைகளுக்கு யாரும் விதிவிலக்கல்ல என்று உணர்த்துகிறது. சூழ்நிலை உணர்வு சார் குண இயல்புகளுக்குள் சிக்காது நிலைமையை சீர் தூக்கிப்பார்த்து வாழ்வதே சிறப்பினை கொண்டு வந்து சேர்க்கும் என்பதே இந்த ஆய்வுக்கட்டுரையின் முடிவாகும்.

**துணைநூற்பட்டியல்**


1. *Freud, S. (1977). Introductory Lectures on Psychoanalysis.* United Kingdom: Norton.
2. *அது (Id) அகம் (Ego) அதியகம் (Super Ego).* (2019, February 27). Tamil Social World.
3. **புகார் காண்டம்; அரங்கேற்று காதை; வினை விளை காலம் : பாடல் வரி** 165 - 175
4. **புகார் காண்டம்; கானல் வரி; வினை விளை காலம்:பாடல் வரி** 52

5. புகார் காண்டம்; கனத்திரம் உரைத்த காதை ;கணவனே தெய்வம் என்ற கண்ணகி: பாடல் வரி 66 - 71
6. மதுரை காண்டம் ;வஞ்சின மாலை ;தீ பரவட்டும் :பாடல் வரி 41 - 46
7. மதுரை காண்டம் ;வஞ்சின மாலை;பாவம் இவர்கள்: பாடல் வரி 21 - 25
8. புகார் காண்டம்;இந்திரா விழா ஊர் எடுத்த காதை; பொதிய மலை தென்றல் புறப்பட்டு வந்தது:பாடல் வரி 191 - 195
9. புகார் காண்டம்; அந்திமாலைச் சிறப்புசெய் காதை; பொன் அந்தி மாலைப் பொழுது:பாடல் வரி 11 - 15
10. மதுரை காண்டம்; புறஞ்சேரி இறுத்த காதை ; மாதவி எழுதிய காதல் கடிதம்:பாடல் வரி 71 - 75
11. மதுரை காண்டம்; அடைக்கலக் காதை; தானத்தால் பெற்ற தெய்வ வடிவம்:பாடல் வரி 186 - 190
12. மதுரை காண்டம்; கொலைகளக் காதை ; வினை விரித்த வலை:பாடல் வரி 161 - 165
13. மதுரை காண்டம்; வழக்குரை காதை; கோவலன் மனைவி கண்ணகி நான்:பாடல் வரி 64 - 65
14. மதுரை காண்டம்; வழக்குரை காதை; யானோ அரசன்? யானே கள்வன்!:பாடல் வரி 75 - 78

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ஐங்குறுநூற்றில் தலைவியின் ஆளுமை உளவியல்

நெறியாளர் முனைவர் ப. பாரதி,
மு.அபிநயா, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி,
கோவை

42

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியம் தமிழர்களின் வாழ்வியல் சிறப்புகளையும் மொழியின் பெருமையினையும் எடுத்தியம்புவனவாகும். தொகை நூல்களில் ஐங்குறுநூறு மக்கள் வாழ்வியலைத் தெளிவுப்படுத்தும் வகையில் சிறப்புற்று விளங்கும். உளவியல் நுணுக்கங்களை உணர்ந்து வாழ்வியலை எவ்வாறு செம்மையுற வாழ வேண்டுமென ஒவ்வொரு மனிதனும் தெரிந்திருப்பது அவசியமே. அதாவது உளவியல் மனித மனத்தை ஆராய்கின்ற துறையாகும். அது மனிதனின் நடத்தைக்கான காரணங்களை அறிவியல் முறைப்படி ஆராய்ந்து அடிப்படைக் காரணங்களைக் கண்டறிகிறது. சங்க இலக்கியங்கள் பெரும்பாலும் தன்னுணர்வுப் பாடல்களாகவே அமைந்துள்ளன ஆகவே அவற்றை உளவியல் முறையில் அணுகுவதற்கு மிகுதியான இடமுள்ளது. இதனடிப்படையில் ஐங்குறுநூற்றில் தலைவி தனிமனித உளவியலுக்கு முன்னுரிமை கொடுத்து தன்னுடைய ஆளுமையினை எவ்வாறு வெளிப்படுத்துகிறாள் என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**முன்னுரை**

எட்டுத்தொகை இலக்கியங்களில் பண்பாடு கலையியல் கருவூலமாக தன்மையையும் உளம் சார்ந்த உன்னதச் சிந்தனைகளையும் தன்னகத்தே கொண்டது ஐங்குறுநூறு . ஒரு இலக்கியம் கற்பவர் நெஞ்சங்களில் நிலைபெறுவதற்கும் சுவையூட்டுவதற்கும் அவ்விலக்கியத்தில் பதியப்பெற்றுள்ள பல்வேறு உத்திமுறைகள் விதைகளாகின்றன. அவ்வகையில் ஐங்குறுநூற்றில் பண்டைத்தமிழர் நாகரிகத்தின் சாயலை பண்பாட்டின் சிறப்பினை வாழ்வியல் அர்த்தங்களை அகமன உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதும் தலைவியின் ஆளுமை உளவியல் சிந்தனைகளில் புலப்படும்.

**இலக்கியமும் உளவியலும்:**

உளவியல் என்பது மனிதனின் இயல்பு நிலை, இயல்பு கடந்த நிலை, இயல்பு குறைந்த நிலை என்ற மூன்று நிலைகலையும் முறையாக அறியும் கலையாகும்.

இன்புறுத்தலும் அறிவுறுத்தலும் இலக்கியங்களின் தலையாய இரு பண்புகளாகும் இலக்கியங்கள் மனித வாழ்வின் இலக்குகளை இயம்புவன வாழ்வாங்கு வாழ்ந்த மனிதன் தன்

அனுபவத்தை தான் அறிந்ததை நாளும் நிகழும் நிகழ்வுகளை மற்றவர்களுக்கு உதவும் வகையில் உணர்த்த பதிவு செய்யப்பட்ட ஆவணங்களே இலக்கியங்கள் எனப்படுகின்றன. இலக்கியங்கள் மனித மேம்பாட்டிற்குத் துணை நிற்பதோடு மனிதனின் தவறுகளைச் சுட்டிக் காட்டிச் சிறந்த ஆளுமை உடையவனாக மாற்றி அமைக்கவும் துணைபுரிகின்றன.

**உளவியல் காரணிகள்:**

நாம் யாருடன் நண்பர்களாக இருக்கிறோமோ யாருடன் எல்லாம் தொடர்ந்து பழகி வருகிறோமோ இவர்களது பண்புகளும் நம்முடன் ஒட்டிக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது எனவேதான் உயர்ந்த நிலைத்த பண்புகள் உடையோரிடம் நட்பு வைத்துக்கொள்ள வேண்டும் என்று பெரியோர்கள் அறிவுரை நல்கியுள்ளனர். மனிதர்கள் ஒருவரோடு ஒருவர் உறவு கொள்ளும்போது அவர்கள் ஆளுமைப் பண்பைப் பொறுத்தும் உறவின் தன்மையைப் பொறுத்தும் பிறரது தாக்கம் ஒருவர் ஆளுமையில் மாற்றத்தை உருவாக்குகிறது.

**உளவியல் கூறுகள்:**

ஒருவரது தோற்றம் பேச்சு பழக்க வழக்கம் போன்றவை அவரது ஆளுமைப் பண்பை வெளிக்காட்டுகின்றன. சிறந்த ஆளுமைப் பண்பு கொண்ட ஒருவர் பலராலும் விரும்பப்படுவதால் வெற்றியாளராக மன நிறைவுள்ளவராகவும் மகிழ்ச்சியின் உறைவிடமாகத் திகழ்கிறார் தோற்றம் பேச்சு பழக்கவழக்கம் போன்றவை ஒருவரை எடைபோடத் தூண்டும் பண்புகளாக இருப்பினும் அவை மட்டும் ஆளுமையில் அடங்குவதில்லை. வெவ்வேறு உள்ளார்ந்த மனப்பண்புகளும் ஆளுமையினை அறிய உதவும்.

மனதின் செயல் முறைகளைப் பற்றிய அறிவியலாகத் தோன்றி வளர்ந்து பல்வேறு பிரிவுகளாகக் கிளைத்திருப்பதே இன்றைய உளவியல் ஆகும்.

தற்போதைய உளவியல் மனிதனின் நடத்தையை அறியும் ஒரு விஞ்ஞானவியலாகும். நடத்தையானது குறித்த சூழ்நிலைத் தூண்டல்களினால் ஏற்படுவதன் காரனமாகச் சூழ்நிலை மனிதனின் நடத்தையை அறியலாம்.

**தலைவியின் உளப்பாங்கு:**

இன்பதுன்பங்கள் பொருள்களிலும் சூழ்நிலைகளிலும் மட்டுமல்ல நுகர்வோரின் மனத்தை ஒட்டி அவை பெரிதும் மாறுகின்றன. என்பது கருத்து (**குறுந்தொகைச் செல்வம்**) இச்சிந்தனைக்கு இடமளிக்கும். ஐங்குறுநூற்றுப் பாடல்

**அன்னம் வாழிவேன் டன்னைநம் படப்பைத்**
**தேன்மயற்கு பாலினும் இனிய அவர்நாட்டுத்**
**துலைக் கூவல் கீழ்**

**மானுண் டெஞ்சிய கலுழி நீரே (ஐங்.203)**

என்பதாகும் மானின் எச்சில் நீர் தேனினும் பாலினும் இனிப்பதற்குக் காரணம் தலிவியின் உள்ளம் தெளிந்தேற்ற உடன்போக்கின் இனிமையே என்பதைப் இப் பாடலில் அறியலாம் இதே மன நிலையை உற்ற தன்மையை,

**வள்ளிதழ் அவிழ்ந்த தாமரை**
**நள்ளினும்பொய்கையும் தீயுமோர் அன்றே**

என்ற வரிகளில் பெருங்கோப்பெண்டு பேசுகின்றாள் கணவன் இறந்தபின்பு தனக்குக் கிடைக்கப்போகும் கைமைத் துயரைவிடக் கணவனின் சிதையில் வீழ்ந்து மறைதல் பெருமைதரத் தக்கது என்கிறாள் நீயும் தாமரைக்குளமும் ஒன்றாதல் அவற்றின் இயல்பினால் அல்ல அவற்றை அனுகுவோரின் மனநிலையில்தான் எனக் கூறி தலைவியின் ஆளுமை உளவியலை தனக்கு எடுத்துக் காட்டுகிறாள்.

தினைக்குன்றம், தினைவிளைச்சலில் கூர்ந்து காணும்போது கண்களுக்கும் மனத்திற்கும் மகிழ்ச்சி எழுகிறது . பொலிவு குன்றிப்போய்ப் புல்லாக் காட்சி தருகிறது. புல்லென குன்றத்துப் புலம்புகொள் நெடுவரை (ஐங்.270)

என்ற வரியில் தலைவனும் தலைவியும்; செல்லாமையால் குன்றம் தனிமை கொண்டது என்று தலைவி தன் தனிமையை குன்றின்மேல் ஏற்றிக் கூறுகிறாள் உடன் போக்கின்போது தலைவியின் சுற்றத்தார் தொடர்ந்து வந்த நேரத்தில் தலைவன் மறைந்து கொள்ள குன்றம் துயைசெய்தது.

**அறஞ்சா லியரோ அறஞ்சா லியரோ**

**வறனுண் டாயினும் அறஞ்சா லியரோ (ஐங்.312)**

எனத் தலைவி குன்றினை வாழ்த்தி மகிழ்ந்து வருத்தத்தை குன்றுடன் பேசிப் பகிர்ந்து கொள்கிறாள்;.

மனநிலைக்கு ஏற்பவே வாழ்வும் அதற்குக் கருவியான காலமும் உணரப்படும் என்பதற்கேற்ப பிரிவால் வருந்தும் தலைவி மாலை நேரத்தைத் தனிமையோடும் பிரிவுத் துன்பத்தோடும் தொடர்புபடுத்திப் பேசுவதைக் காணமுடிகிறது .

**பெரும்புள் மாலை ஆனது நினைஇ**

**அரும்பமர் உழத்தல் (ஐங்.486)**

என்ற வரிகளில் மாலைப்பொழுதோடு உள்ளம் கலங்குதல் கையறுதல் அரும்படர் உழத்தல் ஆகிய கூறுகள் தொடர்பு படுத்திப் பேசப்படுகின்றன.

**உளவியலில் ஆளுமைப் பண்பினை வெளிப்படுத்தும் வழிமுறைகள்:**

ஆளுமைப் பண்பு ஒரு மனிதனைப் பிறரிடமிருந்து பிரித்துக் காட்டும் தனித்தன்மை. தமது சூழ்நிலைக்கேற்ப இணக்கமாக நடந்துகொள்வதையும் சமுதாயத்தில் நமக்குரிய மதிப்புகள் நம்பிக்கை மற்றும் எதிர்பார்ப்புகளையும் நமது உளவியல் ஆளுமைப் பண்பு நிர்ணயிப்பதில் அவரது பாரம்பரியமும் சுற்றுச்சூழல் ஆகிய இரண்டும் பெரும்பங்கு வகிக்கிறது.

**வயத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும்**

**தெய்வத்துள் வைக்கப் படும்** (குறள்50)

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப வாழ்வாங்கு வாழ்வதற்கு ஒரு மனிதன் தன் ஆளுமையை மேம்படுத்திக் கொள்வது அவசியமாகும். இதற்குரிய வழிகளாக:

- **பண்புகள் பழக்கவக்கங்கள்**
- **அறிவு**
- **முடிவெடுத்தல்**
- **வீரம்**
- **தெளிவு**
- **அமைப்பு முறை**
- **நகை உணர்வும் மகிழ்ச்சியும்**
- **ஆர்வத்தோடு திகழ்தல்**
- **சிந்தனை செல்வாக்கு சிறப்பாக அமைதல்**
- **பிறரை மாற்றும்முன் நம்மை மாற்றிக் கொள்ளும் தன்மை**
- **பொறுப்பு ஏற்றுக்கொள்ளுதல்**
- **சிறந்த முறையில் பணிபுரிதல் கால மேலாண்மை**
- **குறுகிய கால இலக்குகள்**
- **திட்டமிடுதல்**
- **முக்கியத்திறன்கள்**
- **மேலாண்மைக் கலை**
- **பங்கெடுத்தல்**
- **தொடங்கியதை முடித்தல்**

மேற்கூறிய பண்புகளில் சிறந்து விளங்குவதே சிறந்த ஆளுமைத் தன்மை உடையவனாக மாற்றிக்கொள்ளும் வழிமுறைகளாகும்

**துணைநூற்பட்டியல்**

1. சங்க இலக்கிய ஐங்குறுநூறு மூலமும் உரையும், முனைவர் அ.மா பரிமணம்., முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் -நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் சென்னை.

2. சங்க இலக்கிய ஒப்பீடு - தமிழண்ணல் ,மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

3.இலக்கியமும் உளவியலும் - டாக்டர் சி.இ மறைமலை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

4.உளவியல் துறைகள் (முதல் தொகுதி) - மு.இராசமாணிக்கம்.

5.ஆளுமைமேம்பாடு - எஸ்.சுந்தரசீனிவாசன், தாமரை பப்ளிகேஷன்ஸ்(பி)லிட், சென்னை.

6. சங்க இலக்கிய மறுவாசிப்பு -சிலம்பு நா. செல்வராசு, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.

7. சங்க இலக்கிய உவமைகளில் கற்பனை - தமிழாய்வு,சென்னைப் பல்கலைக்கழகம்

8. தமிழிலக்கியச் செல்வம் -முனைவர் சோ.ந கந்தசாமி , மெய்யப்பன் பதிப்பகம்

# உளவியல் நோக்கில் திரையிசைப்பாடல் வழி தமிழ் இலக்கணம் கற்பித்தல்

**இரா. அருணா, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி**
**கோபிசெட்டிபாளையம்.**

43

**ஆய்வுச் சுருக்கம்**

மாணவர்கள் எளிமையான முறையில் தமிழ் இலக்கணம் கற்பிக்க ஏற்ற வழிமுறையை தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. எனவே, உளவிளல் நோக்கில் தேர்ந்தெடுக்கப்பட்ட திரையிசைப்பாடல் வழி தமிழ் இலக்கணம் கற்பிப்பது பற்றி ஆராய்வதே இக்கட்டுரை ஆகும்.

**முன்னுரை**

இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் தாய்மொழி கற்றல் திறனை மேம்படுத்துவது மிகவும் இன்றியமையாத ஒன்றாகும். எனவே, மாணவர்கள் மிக கடினமான பகுதி என்று உணரும் தமிழ் இலக்கணத்தை எளிமையாகக் கற்பிக்க உளவியல் காரணங்கள் வழி கற்பிக்க திரையிசைப்பாடல்களின் பயன்பாட்டை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கம் ஆகும்.

**கடவுச்சொற்கள்:** கற்றல், கற்பித்தல், தமிழ் இலக்கணம்,திரையிசைப்பாடல்,உளவியல்,மன அழுத்தம், இரட்டைக்கிளவி

**கற்றல் இலக்கணம்**

“கற்றல் என்பது பயிற்சி, அனுபவங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் ஒருவனிடம் ஏற்படக்கூடிய ஓரளவு நிலையான நடத்தை மாற்றத்தைக் குறிப்பதாகும் என்று உளவியல் அறிஞர்கள் கற்றலை வரையறுக்கின்றனர்.”

**தாய்மொழி வழி கற்றல் சிறந்தது என்பதற்கான உளவியல் சான்றுகள்**

பேசும் சொற்களின் பொருள் உணர்ந்தால் மட்டுமே சிந்தனையை வளர்க்க முடியும். சிந்தனை செய்வதற்கு மிகப் பெரிய ஆதாரமாக விளங்குவது தாய்மொழியே ஆகும். எனவே, நம் சிந்தனையை வளர்க்க சொற்களில் அதிக பொருள் உணர வேண்டும். இதற்கு தாய்மொழியில் அதிகமாக நாம் கற்பது அவசியம் ஆகிறது. தாய் மொழியின் மூலமாகத்தான் நம் எண்ணங்களையும் கருத்துக்களையும் உணர்ச்சிகளையும் சிறந்த முறையில் வெளியிட முடியும். “நுண்ணிய எண்ணங்களை மிகச் சிறப்பாக வடிவமைத்து வெளிப்படுத்த தாய்மொழி மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. சமுதாயத்தில் தன் கருத்துக்களை வெளிப்படுத்த தாய்மொழியே மிகச் சிறந்ததாக உள்ளது. தாய்மொழியில் தான் ஒருவர் எளிதாக பள்ளியில் கற்க முடிகிறது. பள்ளியில் தாய் மொழி பயின்று கல்லூரி நிலையிலும் பயிற்று மொழியாக திட்டத்தை மேற்கொள்ள வேண்டும்”.

**மறத்தல் பற்றிய எபிங்காஸின் சோதனை**

"கற்றல் நிகழ்ந்தபின், காலம் செல்லச் செல்ல மறத்தலின் அளவு எவ்விதம் உள்ளது என்று எபிங்காஸ் சோதனைப்படி கற்றபின் முதல் ஒருமணி நேரத்தில் ½ பங்கும், 8 மணி நேரத்தில் 2/3 பங்கும் ஒரு வாரத்தில் 4/5 பங்கும் கற்றவற்றில் மறந்து போகிறது. கல்லூரி வகுப்பின் 40 நிமிட சொற்பொழிவுக்குப்பின், மாணவர்கள் 62% கற்ற பொருட்களையும், 3 நாட்களுக்குப் பின் 45%மும், 1 வாரத்திற்கு பின் 35%மும், 8 வாரத்திற்கு பின் 20% மும் நினைவு கூர்ந்தனர். நாம் கற்றவை ஒரு போதும் முழுமையாக மறந்து போவதில்லை என்பது **எபிங்காஸின்** ஆய்வாகும். மறத்தலை மீட்டுக் கொணரும் பயிற்சியை மேற்கொள்வதால் மற்த்தலைத் தடுத்து நிறுத்த முடியும். எனவே தான் தமிழ் இலக்கணம் விதிவரு முறை வழி கற்பிக்கப்படுகிறது."

**விதிவருமுறை வழி தமிழ் இலக்கணம் எளிய முறையில் கற்பித்தல்**

- **விதிவருமுறை என்பது ஒவ்வொரு மாணவர்களும் அவர்களுக்குத் தெரிந்த எடுத்துக்காட்டுகளைக் கொண்டு அவற்றிடையேயுள்ள ஒற்றுமை, வேற்றுமைகளை ஆராய்ந்து அதன்பின் ஒரு பொது விதியினைக் கற்பிப்பதே ஆகும்.**
- **மாணவர்கள் தங்களின் தினசரி வாழ்நாளில் கிடைக்கப்பெரும் அனுபவத்தின் மூலம் அவர்களின் அறிவுநிலையில் ஏற்படும் மாற்றத்தினையும் விதிவருமுறை எனலாம்.**

**மாணவர்களுக்கு மன அழுத்தம் ஏற்படுத்தும் முக்கிய காரணங்கள்**

- வாழ்வியல் அழுத்தம்
- உள்நிலை அழுத்தம்
- சுற்றுச்சூழல் அழுத்தம்
- களைப்பு மற்றும் அதிக வேலைப்பளு

**மாணவர்களின் மனரீதியான விளைவுகள்**

சரியான முறையில் சிகிச்சை பெறாத போது பலவிதங்களில் வெளிப்படுகின்றன. தீர்க்கப்படாத மனவியல் பிரச்சினைகள் மனநிலையையும் பிறகு உடல் நிலையையும் பாதிக்கும்.

1. கவனம் செலுத்துவதில் சிரமம்
2. முடிவெடுப்பதில் சிரமம்
3. தன்னம்பிக்கை இழத்தல்
4. அடக்கமுடியாத ஆசைகள்
5. தேவையற்ற கவலைகள், படபடப்பு
6. அதீத பயம்

7. பயத்தால் பாதிப்புகள்
8. குணாதிசயத்தில் அடிக்கடி மாற்றங்கள்

**இசையே இனிமையான வரம்**

இசையால் வசமாகாத மனித மனங்கள் இருக்க முடியாது. திரையிசைப்பாடல் வரிகள் மனதுக்கு உதவக்கூடியது என்பது மருத்துவ உண்மை ஆகும். திரையிசைப்பாடல்களை ரசித்துக் கேட்கும் மெல்லிய இசையானது ரத்த அழுத்தத்தைக் குறைக்கும். இதயத்துடிப்பைச் சீராக்கும். பதற்றம், கவலைகளைக் குறைக்கும். இதை பல ஆய்வு முடிவுகளே சொல்லியிருக்கின்றன. எத்தகு பதற்றத்தையும் தணித்து, மனதை அமைதிப்படுத்தும் சக்தி திரையிசைக்கு உண்டு என்பதே உண்மை ஆகும்.

**(விகடன் நாளிதழ் - 05.05.2017 - மனஅழுத்தம் குறைக்க… மகிழ்ச்சி பெருக்க உதவும் 8 எளிய வழிகள்)**

**தமிழ் இலக்கணம் எளிமையாகக் கற்க உதவும் திரையிசைப் பாடல்**

**இரட்டைக்கிளவி**

வாக்கியங்களில் பொருளைத் தெளிவுப்படுத்த உதவும் தொடர்களில் **இரட்டைக்கிளவி**யும் ஒன்றாகும். ஓசையினையோ தோற்றத்தினையோ இயக்கத்தினையோ உணர்வையோ குறிப்பாக உணர்த்தி வரும். இரு சொற்கள் அடுத்தடுத்து வந்து ஒலிக்குறிப்பின் மூலம் பொருள் உணர்த்துவது **இரட்டைக்கிளவி** எனப்படும். இரட்டைக் கிளவிச் சொல் பிரித்தால் அவை தனித்து நின்று பொருள் தராது.

**“கட கட** - விரைவு

**கம கம** - மணம் வீசுதல்

**கல கல** - சிரிப்பு

**கடு கடு** - சினக்குறிப்பு

**கரகர** - காய்ந்து இருத்தல்

**கலீர்கலீர் -** சலங்கை ஒலி

**குடுகுடு** - நடத்தல்

**குளுகுளு -** தென்றல் காற்று

**குசுகுசு** - இரகசியம் பேசுதல்

**சலசல** - நீரோடைச் சத்தம்

**சிடுசிடு** - எரிச்சல் கலந்த கோபம்

**தழுதழு** - நா தடுமாற்றம்

**தகதக** - செந்நிறமான ஒளி

**திருதிரு** - முறித்தல்

**துருதுரு** - சுறுசுறுப்பு

**பளபள** - கண்களைக் கூசச் செய்யும் ஒளி

**வளவள** - தேவையில்லாமல் பேசுவது

**வின்வின்** - வலித்தல்

**மடமட** - தண்ணீர் குடித்தல்

**கொழுகொழு** - பருத்தல்

**பளிச்பளிச்** - மின்னுதல்

**வெதுவெது** - இளம் சூடு

**வெலவெல** - நடுக்கம் அல்லது பதற்றம்"

**திரையிசைப்பாடல் வழி இரட்டைக்கிளவி கற்றல்-கற்பித்தல்**

- பாடல்களில் விரைவாகவும் சுருக்கமாகவும் எளிமையாகவும் பொருள் உணர்த்துவதற்காகப் பயன்படுத்துவது இரட்டைக்கிளவி ஆகும்.
- பாடல் வரிகளை ஓசை, பொருள் என்பவற்றை உணர்த்துவதற்கு பயன்படுத்துவது இரட்டைக்கிளவி ஆகும்.

**எடுத்துக்காட்டு**

**சத்யா** திரைப்படத்தில் பாடலாசிரியர் **வாலி**யின் வரிகளில் பாடப்பட்ட பாடல் **"வளையோசை"** என்றபாடல் இரட்டைக்கிளவிக்கு மிகச்சரியான எடுத்துக்காட்டாக அமைகிறது.

"வளையோசை
**கல கல** கலவென
கவிதைகள் படிக்குது
**குளு குளு** தென்றல்
காற்றும்
வீசுது
சில நேரம்

**சிலு சிலு** சிலுவென

சிறு விரல் **பட பட**

துடிக்குது எங்கும்

தேகம்

கூசுது”

**இப்பாடலில்,**

**கல கல** - சிரிப்பு

**குளு குளு** - தென்றல் காற்று

**சிலு சிலு** - சில்லென்ற காற்று

**பட பட** - விரைவு துடிப்பு

இப்பாடலில், இரண்டுக்கு மேற்பட்ட இரட்டைக்கிளவித் தொடர்கள் வந்தமைவதால் இத்திரையிசைப் பாடல் கற்பிக்க ஏற்றதாக அமைகிறது.

**முடிவுரை**

மாணவர்களின் மனநிலைக்கேற்ப உளவியல் வழி தமிழ் இலக்கணம் கற்பிப்பது அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள முடிகிறது. மேலும், தமிழ் இலக்கணம் கற்பிக்க திரையிசைப்பாடல் மிகவும் பயனுடையதாக உள்ளதை இவ்வாய்வுக் கட்டுரையின் மூலம் விளங்கிக்கொள்ள முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

1. உளவியல் நோக்கில் கற்றலும் மனித மேம்பாடும் - பேராசிரியர் கி. நாகராஜன், தேவ. சீத்தாராமன் - முதல் பதிப்பு- செப்டம்பர்,2013 - ஸ்ரீராம் பதிப்பகம், 74B/1, விவேகானந்தர் தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை - 600093.
2. இலக்கணவியல்(மீக்கொட்பாடும் கோட்பாடுகளும் - சு.இராசாராம் - முதல்பதிப்பு: நவம்பர் 2010 - காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர் கோவில் 629001.
3. நற்றமிழ் கற்பிக்கும் முறைகள் - பேராசிரியர் வி. கணபதி, சந்திரிகா ராஜமோகன் - முதல் பதிப்பு- ஏப்ரல்2002, இரண்டாம் பதிப்பு-2006 - சாந்தா பப்ளிகேஷன்ஸ்,சென்னை-600014.
4. விகடன் நாளிதழ் - 05.05.2017 - மனஅழுத்தம் குறைக்க... மகிழ்ச்சி பெருக்க உதவும் 8 எளிய வழிகள்.
5. இணையதளப் பக்கம் - தமிழாசிரியர்.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# செல்லாத பணம் வெளிப்படுத்தும் உளவியல்

**க.இக்பால், இணைப்பேராசிரியர்,**
**(தன்னிதிப்பிரிவு)**
**முதுகலை & தமிழாய்வுத்துறை, ஜமால் முகமது கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி.**

44

**ஆய்வுச்சுருக்கம்**

உளவியல் என்பது மனம் சார்ந்த படிப்பு எனலாம். இது பல்வேறு வகையில் வளர்ந்துகொண்டே செல்கின்றது. இயல்பு வாழ்க்கையில் நடப்பது போல் புதினத்தில் காண்பிப்பது ஆசிரியர்களின் தகுதிகளில் ஒன்று. தான் கூற நினைக்கும் பாத்திரம் எவ்வாறான உளவியல் தன்மைகளைக் கொண்டுள்ளன என்பது குறித்து ஆய்வதே இவ்வாய்வின் சுருக்கமாகும்.

**முன்னுரை**

ஆசிரியர் இமையம் அவர்களின் செல்லாத பணம் என்ற புதினம் பல்வேறு விதமான யதார்த்தங்களைக் கொண்டுள்ளது. இதில் வரும் பாத்திரங்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் இல்லாமல் தனக்கான தனித்தன்மையை வெளிப்படுத்திச் செல்கின்றன. இதன் காரணம் அவற்றின் உளவியல் தன்மை ஆகும்;. இவ்வாறு புதினம் வெளிப்படுத்தும் உளவியல் சிந்தனைகள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**மனம் - ஒரு புரிதல்**

மனத்தினைப் பொறுத்தவரை நல்ல எண்ணம் மற்றும் தீய எண்ணம் ஆகிய இரண்டுமே விளைகின்ற இடம்தான். எத்தகைய எண்ணத்தினை நாம் செயல்பாட்டுக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதை அந்த மனத்தைக் கொண்டுள்ள மனிதன்தான் தீர்மானிக்க வேண்டும். வள்ளுவர் மனத்தினைப் பற்றிக் கூறும்போது,

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற”**

என்கின்றார். அதாவது மனத்தில் சிறிதளவும் குற்றம் இல்லாமல் இருக்க வேண்டும் என்கின்றார். ஆகவே இத்தகைய பண்புகளைப் பெற்றுள்ள மனம் மனிதனின் உடம்பில் எங்கு உள்ளது என்று சிந்தித்தோமேயானால் அதற்கு விடை இல்லை என்பதே ஆகும். மனித மூளையில் எழும் எண்ணங்கள் தான் மனம் என்று அழைக்கப்படுகின்றது. ஆரூர் ஆர். சுப்பிரமணியன் அவர்கள்

"எண்ணத்தைத் தவிர மனம் அப்படியென்று தனியே இல்லை. எண்ணங்கள் தோன்றுமிடம் இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு அந்த இடத்தையே 'மனம்' என்கிறோம். உள்ளே நுழைந்து விசாரிச்சா மனம் என்ற ஒன்றையே காணமுடியாது."[1]

என்று கூறுகின்றார். அதாவது மனிதனின் மூளையில் தோன்றும் எண்ண அலைகளைத் தவிர மனம் என்ற ஒன்று தனியாக ஒரு உறுப்பாக இல்லை என்பது தெளிவாகின்றது. மனிதனையும் பிற அஃறிணைகளையும் வகைப்படுத்தும்போது தொல்காப்பியர்

**"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே**
**இரண்டறி வதுவே அதனொடு நாவே**
**மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே**
**ஆறறி வதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினர"[2]**

என்கின்றார். ஐந்தறிவு வரையிலான உயிர்கள் அனைத்தும் அஃறிணை என்று அழைக்கப்படுகின்றன. ஐந்தறிவுகளுக்கும் மேலாக ஆறறிவு உயிர்கள் என்பவை உயர்திணையைக் குறிக்கின்றது. அதாவது மனித இனத்தைக் குறிக்கின்றது. மனிதன் தான் உடல், நா, மூக்கு, கண், செவி மற்றும் மனத்தால் அறிகின்றவன். ஐந்தறிவுகள் வரையிலும் இல்லாத ஒரு புதிய பரிணாம வளர்ச்சியினை மனிதனிடத்தில் நாம் காணவியலும். இவ்வாறு மனிதன் மனத்தால் பிற உயிர்களிடத்தில் இருந்து வேறுபடுகின்றான் என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு ஒரு மனிதன் பிற உயிர்களிடத்திலிருந்து வேறுபட்டிருக்க, பிற மனிதனிடத்திலிருந்தும் அவன் வேறுபட்டிருக்கின்றான் என்பதும் நாம் அறிந்த உண்மையே ஆகும். இதற்குக் காரணம் என்ன என்று சொன்னால் ஆறாவது அறிவாகிய மனம் அவனுக்குக் கொடுத்த சுதந்திரமாகும். ஒவ்வொரு மனிதனும் தனக்குப் பிடித்தவாறான செயல்களைச் செய்வதற்கு மனத்தால் சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. மனிதன் பிறப்பிலிருந்து இறப்பு வரையில் பல்வேறு பரிணாமங்களைச் சந்திக்கின்றான். ஒவ்வொரு குறிப்பிட்ட வயதிற்கும் அந்தந்த வயதிற்கான தேடல் மற்றும் செயல்பாடுகளும் இருக்கின்றன. இதனைக் குறித்து ஆதிசங்கரர் கூறுகையில்,

**மழலைப் பேசும்**
**குழவி மனம்**
**பற்றுவது விளையாட்டு**

**இளமைப் பருவமதில்**

**இதயம் பற்றுவது,**

**இளம் மங்கையரை!**

**முதுமைக் காலத்தில்,**

**மனக்கவலைகள் தான்**

**மனிதனைப் பற்றும்**

**ஐயகோ! பற்றற்ற**

**பிரும்மத்தில்இ எவருக்கும்**

**இல்லையே பற்று**

**எம் இறைவா![3]**

என்கிறார். இவ்வாறு மனிதனுடைய ஒவ்வொரு பருவத்திற்கும் அவனுடைய செயல்கள் என்னவென்பதையும் மனிதன் இவ்வுலக வாழ்க்கையில் மூழ்கிக் கிடக்கின்றான் என்பதையும் ஆதிசங்கரர் அவர்கள் தெளிவாகப் பதியவைக்கின்றார்.

**செல்லாத பணம் வெளிப்படுத்தும் உளவியல்**

இமையம் அவர்களின் செல்லாத பணம் என்ற புதினம் முழுவதுமே பல உளவியல் நிகழ்வுகளைப் பதிவிட்டிருக்கின்றார். அவை அன்றாடம் ஒவ்வொரு மனிதருக்குள்ளும் நடக்கும் எதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன. இயல்பாக ஒரு குடும்பத்தில் நடக்கும் நிகழ்வுகளில் அக்குடும்ப உறுப்பினர்களின் பங்கு என்ன என்பதும் அவர்களின் நடத்தை முறை என்ன என்பதும் அவற்றிலிருக்கும் எதார்த்தப் பண்பு போன்றவற்றை இமையம் அவர்கள் தத்ரூபமாகப் படம்பிடித்துக் காட்டுகின்றார்.

நடேசனுடைய மகளான ரேவதி ரவி என்பவனைக் காதலிக்கின்றாள். இந்த செய்தி ரேவதியின் தாயான அமராவதிக்கு நடேசன் வாயிலாகத் தெரியவருகின்றது. இதனால் ரேவதியை முன்னிறுத்தி அமராவதி சில கேள்விகளை எழுப்புகின்றாள். அந்தக் கேள்வியில் உண்மை என்ன என்பதை அறியும் அவாவும் தன் மகள் தவறான பாதையில் சென்றுவிடக் கூடாது என்ற உயர்ந்த எண்ணங்களும் அவ்விடத்தில் வெளிப்படுகின்றன. இவ்வாறு அமராவதி ரேவதியைக் கேள்வி கேட்கும்போது

“ஒங்கப்பா சொல்றது நிஜமாடி?” என்று கேட்டாள். பொய் என்றோ ஆமாம் என்றோ அவள் சொல்லாததிலிருந்தே நடேசன் சொன்னது உண்மை என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது.”[4]

என்ற வரிகளின் வாயிலாக ரேவதியின் இக்கட்டான சூழ்நிலை புலப்படுகின்றது. தாம் காதலிப்பது குறித்த விடயங்கள் தன் குடும்பத்திற்குத் தெரிந்துவிட்டது இனிமேல் மறைக்க இயலாது என்று

எண்ணிக்கொண்டிருக்கும் ரேவதி இல்லை என்றோ அல்லது ஆமாம் என்றோ கூற இயலாது. அதாவது எந்த விடையைக் கூறினாலும் காதலிக்கும் வியம் தெரியத்தான் போகிறது என்ற மனப்போக்கில் ரேவதி அமைதியாக இருக்கின்றாள். ஒருவேளை இல்லை என்று கூறினாலும் தன் காதலைத் தன் பெற்றோரிடத்தில் வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சந்தர்ப்பத்தை மீண்டும் எதிர்பார்க்க நேரிடுமாகையால் ரேவதி எதுவும் பேசாமல் நின்று கொண்டிருப்பதை வைத்து அமராவதிக்கு ரேவதியின் காதல் உண்மை என்பது விளங்குகின்றது.

**நடேசன் பார்வையில் காதல்**

ரேவதி காதலிப்பது உண்மை என்பதை அறிந்த பின் கோபம் அவர் கோபம் கொள்ளாமல் அவளுக்குக் காதல் என்பது தவறு என்பதையும் அதிலிருந்து ரேவதி விலகிக்கொள்ள வழிமுறைகளையும் ரேவதிக்கு விளக்குகின்றார். அவர் கணித ஆசிரியராக இருக்கின்ற காரணத்தினால் கணிதத்தை வைத்தே காதலைத் தவறு என்று விளக்கும் ஒரு மனோபாவம் படைத்தவராக நடேசன் விளங்குகின்றார். இவ்வாறு அவர் ரேவதியிடம் பேசும்போது

“போட்ட கணக்குத் தப்புன்னு தெரிஞ்சும் நான் போட்டன் அதனால அது சரின்னு நீ சொல்வியா? மனசு ஆசப்படுதுங்கறதுக்காக தப்பான கணக்கு எப்பிடி சரியான கணக்கா இருக்க முடியும்?”

“தெனம் நூறு புள்ளைங்களுக்குப் பாடம் சொல்லித்தர்றவன் நானு. ஒனக்கும் சொல்லிக்கொடுத்திருக்கன். இப்ப நான் சொல்றது கூட்டல் கழித்தல் கணக்கில்ல. மத்தவங்க மதிக்கும்படி எப்பிடி கௌரவமா இருக்கிறதுங்கிறதப் பத்தி எப்பிடி உசுரோட இருக்கணும்ங்கிறதப் பத்தி”5

என்கிறார். அதாவது கணக்கு என்பது யார் தவறாகப் போட்டாலும் அது தவறாகத் தான் இருக்க முடியும் என்கிறார் நடேசன். அந்த அளவிற்கு அவர் காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றார். அவர் கணித ஆசிரியராக இருக்கும் பட்சத்தில் தன் பாடத்தை வைத்தே காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அவரது மனப்பாங்கு அமைந்திருப்பதை நாம் காணலாம்.

**இளம்பெண்களின் மனம்**

ரேவதி தன் காதலில் பிடிவாதமாக இருக்கும் பட்சத்தில் அமராவதி ரேவதியின் காதலன் ரவியின் வீட்டிற்குச் சென்று பேசி ரேவதி மற்றும் ரவிக்கு இருக்கும் உறவை முறித்துவிடலாம் என்று எண்ணத்துடன் அமராவதி ரவியின் வீட்டிற்குச் செல்கிறாள். அங்கு அமராவதிக்கும் ரவியின் தாய் கோகிலாவுக்கும் வாக்கு வாதம் நடைபெறத் தொடங்குகின்றது. அமராவதி ரவியைப் பற்றிக் கூறும்போது

“ராவும் பகலும் ஓயாம தொந்தரவு செஞ்சா ஒரு பொண்ணு என்னதான் செய்வா? பொட்டச்சி மனசு எரக்கப்பட்ட மனசுதான?”6

என்கிறாள். அதாவது ஒரு இளைஞன் ஒரு பெண்ணிடம் இரவும் பகலுமாகத் தன்னைக் காதலிக்குமாறு வற்புறுத்துகின்றான். அதனுடைய விளைவு என்பது இரண்டு வகைகளில் வரக்கூடும். ஒன்று அந்தப் பெண் அந்தக் காதலின் ஆழத்தைப் புரிந்துகொண்டு அதனை ஏற்றுக்கொள்ளக் கூடும். மற்றொன்று பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் தெரிவித்துவிடக் கூடும். இதில் ரேவதியின் மனம் முதல் வகையைச் சேர்ந்தது. ரவியின் இந்தக் காதல் வேண்டுதல்களும் ரேவதிக்கு காதலின் உச்சமாகவும் அமராவதிக்கு அது தன் மகளுக்குக் கொடுக்கும் தொந்தரவாகவும் தெரிந்திருக்கின்றது. எனவே ரேவதி அந்தக் காதலை ஏற்கின்றாள். அமராவதி அதனை மறுக்கின்றாள். ஆகவே ரவியின் தொந்தரவால் ரேவதி அத்தகைய முடிவுக்கு வந்துவிட்டால் என்று அமராவதி கோகிலாவிற்கு விளங்கவைக்க முயற்சிக்கின்றாள்.

அமராவதி ரேவதியின் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றாள். இது பெண்ணைப் பெற்ற பெற்றோர்களின் தலையாய கடமையாக உள்ளது. மேலும் ஒரு குடும்பத்தின் யதார்த்தத்தைப் பிரதிபலிக்கச் செய்கின்றது. ரவி ஆட்டோ ஓட்டுபவனாக இருக்கின்றான். ரேவதிக்கு இணையான படிப்பும் இல்லை. மொத்தத்தில் எந்த ஒரு விதத்திலும் ரேவதிக்கு ரவி பொருத்தமானவனாகத் தெரிவானில்லை. இதன் விளைவாகவே அமராவதி ரேவதியின் பண்புகளைச் சுட்டிக் காட்டி சரமாரியான கேள்விகளை அடுக்கிக்கொண்டிருக்கின்றாள். அப்பொழுது ரேவதி ரவியைப் பற்றிய சிந்தனையில் மூழ்கினாள். அவளுக்குள் பல்வேறு கேள்விகள் அமராவதியின் கேள்விக்குப் பதிலைத் தேடிக்கொண்டிருந்தன.

கோயிலில் ஏழெட்டு முறைக்கு மேல் பார்த்திருக்கிறாள். தன்னுடைய பெயரை இரண்டு கைகளிலும் நெஞ்சிலும் பச்சைகுத்தியிருக்கிறான். இவள் எப்போது வருவாள் என்று கோயிலிலேயே உட்கார்ந்திருக்கிறான். ஒரு நாளைக்குக் குறைந்தது முப்பது நாற்பது முறைக்கு மேல் வீட்டு வாசல் வழியே போகிறான். வருகிறான். ஸ்டைலாக கிராப்பும்இ கிருதாவும் மீசையும் வைத்திருக்கிறான். ஆள் வாட்டசாட்டமாக இருக்கிறான். நல்ல நிறமாக இருக்கிறான். வடிவான முகம். பார்க்கும்போதெல்லாம் ஷநீ இல்லன்னா நான் செத்திடுவன்" என்று சொல்வான். இவ்வளவுதான். இதில் எது தனக்குப் பிடித்திருக்கிறது? சட்டென்று அவளால் ஒரு பதிலையும் சொல்ல முடியவில்லை.7

என்ற புதின வரிகள் ரேவதியின் மனநிலையை வெளிப்படுத்துகின்றது. ஒரு பெண் ஒரு ஆடவனைக் காதலிப்பதற்குத் தகுதியான சில வி~யங்கள் அவனிடம் இருக்க வேண்டும். அவ்வகையில் ரவி ரேவதியின் பெயரைக் கைஇ கால்களில் பச்சைக் குத்தியிருக்கின்றான். நீ இல்லன்னா நான் செத்திடுவேன் என்று சினிமா பட வசனத்தைப் பேசிய வண்ணம் இருக்கின்றான். இதெல்லாம் காதலிப்பதற்குத் தகுதிகளா? என்று ரேவதி மதில் மேல் பூனைபோல் இருந்தாள்.

**கிரகக் கோளாறும் யதார்த்தமும்**

இந்துக்களின் ஆன்மீகத்தில் ஜோதிடம் இன்றியமையாத ஒன்றாகும். எந்தவொரு காரியங்களையும் செய்வதற்கு முன்பு ஜோதிடரிடம் கேட்டுத் தெரிந்த பின்னரே செயல்களைச் செய்ய ஆரம்பிக்கின்றனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆனால் செல்லாத பணம் புதினத்தில் வரக்கூடிய நடேசன் என்கின்ற பாத்திரம் இந்து மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும் மனிதர்களின் மனத்தினால் கிரகநிலையையும் வெல்லலாம் என்கின்ற நம்பிக்கையுடையவராகக் காட்டப்படுகின்றார்.

அமராவதி ரேவதியின் ஜாதகத்தை கழுதூர் சுந்தரமூர்த்தியிடம் காண்பித்துவிட்டு வந்ததைப் பற்றி நடேசனிடம் கூறினாள். ரேவதியின் தற்போதைய போக்கிற்குக் காரணம் கிரகநிலை சாதகமில்லாமைதான் என்று ஜோசியக்காரன் கூறிய விசயங்களை நடேசனிடம் அமராவதி கூறினாள். அதற்கு நடேசன்,

'புத்தி சரியா இருந்தா கிரகம் என்னா செய்யும்'8

என்று கேட்டார். அதாவது கிரகங்கள் மனித விதியினை நிர்ணயம் செய்கின்றன என்பது ஒரு புறம் இருக்கட்டும். ஆனால் மனிதன் தான் செய்யும் செயல்கள் அனைத்தும் அவனை அறிந்துதான் நிகழ்கின்றன. ஒருவனுடைய செயலுடைய விளைவுக்கு அம்மனிதனே முழு பொறுப்புடையவனாவான். ஆகவே எந்தவொரு செயலைச் செய்யும் முன்பும் தெளிவான மனதோடு செய்தால் தீய விளைவு எதுவும் இல்லாமல் தடுக்க முடியும். இம்மாதிரியான எண்ணங்களைக் கொண்டவராக நடேசன் காணப்படுகின்றார்.

**தொகுப்புரை**

1. உளவியல் பற்றியும் அதைக் குறித்த அறிஞர்களின் வரையறைகளையும் பற்றியும் தெளிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.
2. உளவியலின் வகைகள் மற்றும் வளர்ச்சி நிலைகள் குறித்து விளக்கப்பட்டுள்ளன
3. செல்லாத பணம் புதினத்தின் இன்றியமையாத பாத்திரமான நடேசனின் உளவியல் வாயிலாக சமுதாயத்தில் பல குடும்பங்களின் வாழ்வியல் முறைகள் இவ்வாறுதான் இருக்கின்றன என்ற முடிவுகள் பிரதிபலிப்பதைக் காணமுடிகின்றது.
4. கணவன் மனைவிக்கு இடையிலான பிரச்சனைகள் ஆரம்பித்து வளரும் முறைகள் குறித்து உளவியல் ரீதியிலான விளக்கங்கள் அளிகப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1. ஆரூர் ஆர். சுப்பிரமணியன் - எத்தனை எத்தனை மனங்கள், ப.எண் 10
2. தொல்காப்பியர், தொல்காப்பியம் - பொருளதிகாரம் நூற்பா எண்: 571
3. ஆதிசங்கரர் - பஜகோவிந்தம் - சுலோகம் 7.
4. இமையம் - செல்லாத பணம், ப. எண். 5
5. மேலது ப. 10
6. மேலது ப. 13
7. மேலது ப. 15
8. மேலது ப. 16

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கியத்தில் உளவியல்

45

**சு.உமாராணி, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, ஜே.கே.கே.நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**குமாரபாளையம்**

**ஆய்வுச்சுருக்கம்**

இரு நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றிய அறிவியல் துறையாக உளவியல் இருப்பினும், இலக்கியங்கள் தோன்றிய காலம் முதற்கொண்டே அவற்றில் மனிதனின் மன உணர்வுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. "உளவியலானது விஞ்ஞான இயலாக 1879- ஆம் ஆண்டு தோன்றி, இன்று பெரிய அளவில் வளர்ச்சி பெற்று 26 பிரிவுகளாக இயங்குகின்றது. இந்தப் பிரிவுகளில் பொது உளவியல், முதியோர் உளவியல், வளர்ச்சி உளவியல், கல்வி உளவியல், விலங்கு உளவியல், ஆளுமை உளவியல் என்பன முக்கியமானவை ஆகும். ஒவ்வொரு நாளும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆராய்ச்சி வெளியீடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இதன் நோக்கில் இலக்கியத்தில் உளவியல் சார்ந்த ஆய்வினை ஆராய்வதே நோக்கமாகும். இந்த ஆராய்ச்சி உண்மைகளில் சிலவற்றை அடிப்டையாகக் கொண்டு தமிழ் இலக்கியத்தில் ஆராய்ச்சி செய்ய இயலும்".[1] என்று தா.ஏ.ஞானமூர்த்தி உளவியலைத் தமிழிலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்வது தொடர்பாகத் "தமிழ் ஆய்வுக் களங்கள்" எனும் நூலில் கூறுகின்றார்.

**தொல்காப்பியம்**

தமிழில் கிடைக்கப்பெற்றள்ள முழுமையான முதல் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். ஏனைய மொழிகள் எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் வகுத்திருக்க, பொருளுக்கும் இலக்கணம் வகுத்த பெருமை தமிழ் மொழிக்கே உரியது. தொல்காப்பியர் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிரினங்னளைப் பகுத்து விளக்க

**"ஒன்று அறிவதுவே உற்று அறிவதுவே**
**இரண்டு அறிவதுவே அதனொடு நாவே**
**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மன்னனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே"[2]**
**"மக்கள் தாமே ஆறு அறிவுயிரே"[3]**

என்ற நூற்பாக்களில் ஆறாம் அறிவு எனப்படுவது மன உணர்வினால் அறியப்படும் அறிவு, மனம் தொடர்பானது என்றும் இவ்வறிவு மனிதர்களிடமே உள்ளது என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மேலும்,

**"நகையே அழுகை இளிவரல் மருட்கை**
**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**
**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"[4]**

என்று உள்ள உணர்வுகள் சார்ந்த உடலின் மெய்ப்பாடுகள் எட்டு என்று வரையறை செய்கின்றார்.

**சங்க இலக்கியங்கள்**

உலக இலக்கியங்கள் அனைத்திற்கும் வீரமும், காதலும் அடிப்படை உணர்வுகளாக அமைந்துள்ளன. இவ்வுணர்வுகளை வெளிப்படுத்திய முறையால் சங்க இலக்கியங்கள் சிறந்து நிற்கின்றன. சங்க இலக்கிய அகப்பாடல்கள் சுட்டி ஒருவர் பெயர் குறிக்கப் பெறாமல் உலக மக்களுக்குப் பொதுவான உணர்வுகளைக் கூறுவனவாகவும், புறப்பாடல்கள் சூழலடிப்படையில் எழுந்த பாடல்களாகவும் அமைந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை தமிழரின் உள இயல்புகளைக் காட்டுவனவாக அமைந்துள்ளன. சங்க இலக்கியங்களில் இடம்பெறாத மானுட மன உணர்வுகளே இல்லை என்று கூறுமளவு உளவியல் களஞ்சியமாக விளங்கும் திறனை சங்க இலக்கியப் பாடல்களின் வழியே உணரலாகின்றது.

**"மாரிப் பித்திகத்து நீர்வார் கொழுமுகை**
**இரும்பனம் பசுங்குடைப் பலவுடன் பொதிந்து**
**பெரும்பெயல் விடியல் விரித்துவிட்டன்ன**
**நறுந்தண் ணியளே நல்மாமேனி**
**புனற்புனை அன்ன சாய்இறைப் பணைத்தோள்**
**மணத்தலும் தணத்தலும் இலமே**
**பிரியின் வாழ்தல் அதனினும் இலமே"[5]**

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவன், தலைவியுடனான புணர்ச்சியை எண்ணி மகிழும் சூழலில், மழைக்கால மாலையில் நீர் சொட்டுமாறு பறித்து பனையோலைக் குடலையில் பொதிந்து வைக்கப்பட்டு, மறுநாள் விடியற்பொழுதில் பிரிந்தவுடன் பரந்து தோன்றுகின்ற பிச்சிபூவின் அற்புதமான மணத்தையும், குளர்ச்சியையும் தலைவியின் உடலுடன் ஒப்புமை செய்கின்றான். அவளைப் பிரிந்தால் உயிர்வாழ்தல் அரிது என்று தடுமாற்றம் கொள்கிறான்.

**"மகளிர் தோள்சேர்ந்த மாந்தர் துயர்கூர நீத்தலும்**

**நீள்சுரம் போக்கியார் வல்லை வந்தளித்தலும்**

**ஊழ்செய் திரவும் பகலும்போல் வேறாகி**

**வீழ்வார்கண் தோன்றுந் தடுமாற்றம் ஞாலத்துள்**

**வாழ்வார்கட் கெல்லாம் வரும்"[6]**

என்று தலைவனின் இத்தகைய தடுமாற்ற உணர்வு உலகப் பொதுமையானது என்கிறார் நல்லந்துவனார்.

**பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்**

சங்க காலத்திற்கு அடுத்து வந்த கி.பி.மூன்றாம் நூற்றாண்டு முதல் ஆறாம் நூற்றாண்டு வரை நீதி நூல்கள் மிகுதியாக எழுதப்பட்டன. பதினெண்கீழ்கணக்கு நூல்கள் அக நூல்கள், அற நூல்கள், புறநூல் என்று வகைப்படுத்தப்பட்டுள்ளன. சங்க அக மரபைச் சார்ந்தவனாக அக நூல்கள் காணப்படுகின்றன. தலைவியைக் கண்ட தொடக்கநிலையில் தலைவனது சிந்தனை முழுமையும் அவளைப் பற்றியதாகவே அமைகின்றது. பூம்பொழில் கண்ட கன்னியை எண்ணி நெஞ்சு வருந்தும் தலைவனின் இவ்வுணர்வு நிலையினை,

**"மயில்கொல் மடவாள்கொல் மாநீர்த்திரையுள்**
**பயில்வதோர் தெய்வங் கொல்"[7]**

என்ற திணைமொழி ஐம்பதின் வரிகளிலும்,

**"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்கு**
**மாதர்கொல் மாலும்என் நெஞ்சு"[8]**
என்ற திருக்குறள் வரிகளிலும் காண முடிகின்றது.

மேலும்,

**"உள்ளியது எய்தல் எளிதுமன் மற்றுந்தான்**
**உள்ளியது உள்ளப் பெறின்"[9]**
**'ஞாலம் கருதினும் கைகூடும் காலம்**
**கருதி இடத்தால் செயின்"[10]**
என்று உள்ளத்தின் இயல்பினையும், எண்ணத்தின் வலிமையினையும் வள்ளுவம் உரைக்கின்றது.

**காப்பியங்கள்**

சங்க இலக்கியங்களாகிய தொகையும், பாட்டும் முறையே உதிப் பாடல்கள் என்ற மரபிலிருந்து வளர்ந்து நெடும்பாடல்களுக்கு வழிவகுத்தன. காப்பியங்கள் தமிழரின் நெடும்பாட்டுப் புலமையை

வெளிப்படுத்துகின்றன. தமிழின் முதற்காப்பியமாகிய சிலப்பதிகாரம் கண்ணகி, மாதவி ஆகிய இரு பெண்களின் மன உணர்வுகளையும் திறம்படப் பதிவு செய்துள்ளது.

**"கூடினார் பால்நிழல் ஆய் கூடார்பால் வெய்யதுஆய்**
**காவலன் வெண்குடை போல் காட்டிற்றே-கூடிய**
**மாதவிக்கும் கண்ணகிக்கும் வான்ஊர் மதிவிரிந்து**
**போது அவிழ்க்கும் கங்குல் பொழுது"**[11]

தாம் விரும்பியவரோடு கூடி இன்புறுபவர்களுக்குத் தண்ணொளி தரும் நிழலாகவும், கூடாமல் கணவரைப் பிரிந்து வாழ்பவர்களுக்குச் சுடும் நெருப்பாகவும், வேந்தன் வெண்கொற்றக் குடைபோல வானிலிருந்து வெண்ணிலா ஒளி பொழியும் இரவுப்பொழுது, கோவலுடன் கூடியிருந்த மாதவிக்கும், கோவலைனைப் பிரிந்து வாடும் கண்ணகிக்கும் முறையே இன்பத்தையும், துன்பத்தையும் தந்த உளநிலையை இவ்வரிகள் காட்டுகின்றன.

**"கண்ணகி அணிமணிக் கால்சிலம்பு உடைப்ப**
**மன்னவன் வாய்முதல்தெறித்து மணியே மணிகண்டு**
**தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்**
**பொன்செய்கொல்லன் தன்சொல்கேட்ட**
**யானோ அரசன் யானே கள்வன்**
**மன்பதை காக்கும் தென்புலம் காவல்**
**என்முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்என**
**மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே தென்னவன்**
**கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கிக்**
**கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்என்று**
**இணையடி தொழுது வீழ்ந்தனளே மடமொழி"**[12]

கண்ணகி தன்காற்சிலம்பை உடைத்ததும் அதிலிருந்து மாணிக்கப் பரல்கள் வெளிப்பட்டமை கண்டு, பாண்டிய மன்னன் மிகுந்த மன அதிர்ச்சிக்கு ஆளாகின்றான்

**"கள்வனைக் கோறல்கடுங்கோல் அன்று**
**வெள்வேல் கொற்றம் காண்என ஒள்இழை"**[13]

என்று தன்னுடைய தீர்ப்பின்மேல் அசையாத நம்பிக்கை கொண்டவனாகப் பாண்டிய மன்னன் இருந்த சூழலில், அவனது ஆழ்ந்த மன உறுதி கண்ணகியின் காற்சிலம்பின் வாயிலாக உடைபட்டமையால் உடனடியாக மரணத்தைத் தழுவுகின்றான். எதிர்பாராத வகையில் கண்முன்னே கணவன் இறந்துபட்ட அதிர்ச்சியில் கோப்பெருந்தேவியும் உயிரிழக்கின்றாள். ஆழ்ந்த மன நம்பிக்கையில் ஏற்படும் பெருத்த அடி, மரணம் தரும் அதிர்ச்சி போன்ற உளவியல் காரணங்கள் உயிரிழப்பு வரையிலான நிகழ்வுகளை ஏற்படுத்தி விடுதலுக்கு இந்நிகழ்வு சான்றாகின்றது.

**பக்தி இலக்கியம்**

கி.பி.7,8,9-ஆம் நூற்றாண்டுகளில் சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் அகச்சமயங்களின் எழுச்சிக்கு வித்திட்டனர். மக்களின் இயல்பான உணர்ச்சிகளோடு சைவ, வைணவ நெறிகள் கலந்து நின்றன. இசைப்பாடலும், ஆடலுமான கலைகள் மூலம் பக்தி பரப்பப்பட்டது. தத்துவங்களும், சித்தாந்தங்களும் வளர்ச்சியுற்றன. இவை உளவியலை அடியொற்றியனவாகக் காணப்படுகின்றன.

**"அறிவானும் தானே அறிவிப்பான் தானே**
**அறிவாய் அறிகின்றான் தானே -அறிகின்ற**
**மெய்ப்பொருளும் தானே விரிச்சுடர் பார்ஆகாயம்**
**அப்பொருளும் தானே அவன்".**[14]

என்ற காரைக்காலம்மையின் பாடலிலும்,

**"உளன்கண்டாய் நல்நெஞ்சே உத்தமன் என்றும்**
**உளன்கண்டாய் உள்ளுவா ருள்ளத்துளன்கண்டாய்**
**வெள்ளத்தின் உள்ளாலும் வேங்கடத்து மேயானும்**
**உள்ளத்தின் உள்ளானென்று ஓர்"**[15]

என்ற பொய்கையாழ்வாரின் பாடலிலும் அவரவர் மனவெளித் தோற்றத்திற்கேற்ப இறைவன் உணரப்படுதல் காட்டப்பெற்றுள்ளது. சைவ சமயக் குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர் சுண்ணாம்புக் காளவாயில் இடப்பட்டபோது,

**"மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நிழலே".**[16]

என்று கொடிய வெப்பம் மிகுந்த காளவாயும் இறையடியின் தண்ணிழலாகக் குளிர்ச்சியாகத் தோன்றியது என்று கூறுகின்றார். எண்ணங்களின் வலிமையும், மாறுதல் இல்லாத மனஉறுதியும் இறையருள் என்ற வடிவில் திருநாவுக்கரசருக்கு உறுதுணை செய்துள்ளமையை இதன்வழி உணரமுடிகின்றது.

**சிற்றிலக்கியங்கள்**

பொதுவாக நாயக்கர் காலம் சிற்றிலக்கிய காலம் என்று கூறப்பெறுகின்றது. பழைய இலக்கியங்களின் கூறுகளை உள்ளடக்கிய புதிய இலக்கிய வகைகளாகச் சிற்றிலக்கியங்கள் பெருகின. கி.பி. 12-ஆம் நூற்றாண்டு தொடங்கி 19 -ஆம் நூற்றாண்டு வரை பல்வகையான பிரபந்தங்கள் எழுதப்பட்டுள்ளன. கி.பி.16-ஆம் நூற்றாண்டு நூலான "பிரபந்த மரபியல்", பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத் தொண்ணூற்றாறு என்று சிற்றிலக்கிய வகையைச் சுட்டுகின்றது. அவ்வாறான தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் கலம்பகமும் ஒன்று நந்திக் கலம்பகம். கலம்பக இலக்கியங்களுள்

சிறப்பித்துக் கூறப்பெறுவதாகும். சொற்சுவையும், பொருட்சுவையும் மிகுந்த பாடல்களாலானதாக இந்நூல் அமைந்துள்ளது.

**"மண்ணெலாம் உய்ய மழைபோல் வழங்குங்கைத்**
**தண்ணுலா மாலைத் தமிழ்நந்தி நன்னாட்டில்**
**பெண்ணிலா வூரிற் பிறந்தாரைப் போலவரும்**
**வெண்ணிலா வேயிந்த வேகம் உனக்காகாதே"[17]**

என்று சங்க அக இலக்கியத்தை ஒத்த அளவில் அமையப் பெற்றுள்ள இப்பாடலில் தலைவனுடன் கூடி இன்புற இயலாத தலைவியின் மன ஆற்றாமை புலனாகின்றது. தலைவன் மீதான தலைவியின் இயலாமைக் கோபம் நிலவின் மீது இடம்பெயர்ந்து (Displacement) அமைகின்றது. இது ஒரு வகையான உளத்தற்காப்பு உத்தியாகும்.

**"ஈட்டு புகழ்நந்திபாண நீஎங்கை யர்தம்**
**வீட்டிருந்துபாட விடிவளவும் கேட்டிருந்தோம்**
**பேய்என்றாள் அன்னை பிறர் நரி யென்றார் தோழி**
**நாய் என்றாள் நீ என்றேன் நான்"18**

என்ற பாடலில் தலைவன் பரத்தையர் மீதான தலைவியின் கோபம் அவ்வாறே பாணன் மீது இடம்பெயர்வதைக் காணமுடிகின்றது.

**முடிவுரை**

உளவியல் கோட்பாடுகள் இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான் தோன்றியவையாயினும் அவற்றை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சங்க இலக்கியம் தொடங்கி இக்கால இலக்கியம் வரையில் பொருந்திப் பார்க்கமுடிகிறது.மேலைநாடுகளைப் போன்று தமிழில் உளவியல் தனியொரு துறையாக வளராவிடின், தொல்காப்பியக் காலம் தொட்டுத் தமிழ்நூல்களில் உளவியல் கூறுகள் குறிப்பிடத் தகுந்த அளவில் இடம்பெற்றுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1.நா.கடிகாசலம்(ப.ஆ).,தமிழ் ஆய்வுக் களங்கள். ப.34

2. ச.வே.சுப்பிரமணியன்(உ.ஆ).,தொல்காப்பியம் நூ.1526

3.மேலது.நூ.1532

4.மேலது.நூ.1197

5.சிறைக்குடியாந்தையார்.,குறுந்தொகை. 168

6.நல்லந்துவனார்.,கலி.145

7.ஹரி.விஜயலட்சுமி.,இலக்கியவரலாறு. ப.102

8.ந.சுப்புரெட்டியார்(உ.ஆ).,திருக்குறள் தெளிவு, குறள் 1081

9.மேலது.,குறள் 340

10.மேலது.,குறள் 484

11.ஞா.மாணிக்கவாசகன்(உ.ஆ).,சிலப்பதிகாரம்,அந்திமாலை சிறப்புச்செய் காதை,வ-ள்90-93

12.மேலது.,வழக்குரைகாதை,வ-ள் 71-81

13.மேலது.,வழக்குரைகாதை,வ-ள் 64,65

14. ஹரி.விஜயலட்சுமி.,இலக்கியவரலாறு,ப.166

15.மேலது.,ப.169

16.அரு.சோமசுந்தரன்., அடியார் அறுபத்து நால்வர்,ப.61

17. ஹரி.விஜயலட்சுமி.,இலக்கியவரலாறு,ப.253

18.மேலது.,ப.253

**துணைநூற்பட்டியல்**

1.அரு.சோமசுந்தரன், அடியார் அறுபத்து நால்வர், பொன்முடி பதிப்பகம், காரைக்குடி. இ.ப-1982

2. ஞா. மாணிக்கவாசகன்.,- சிலப்பதிகாரம் தெளிவுரை, உமா பதிப்பகம், சென்னை-600 001. மு.ப-2002.

3. ஹரி.விஜயலட்சுமி., இலக்கியவரலாறு என்னெஸ் பப்ளிகேஷன், உடுமலைப்பேட்டை-128. இ.ப-2002

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# உளவியல் நோக்கில் திருமங்கையாழ்வார் திருமடல்கள் காட்டும் தலைவி

முனைவர் ந.காயத்ரி, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை
பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர்

46

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் மண்ணில் திருமால் நெறியினை வளர்த்த பெருமை ஆழ்வார்களையே சாரும். இவர்கள் தம்மைத் தலைவியாகவும் இறைவனைத் தலைவனாகவும் கொண்டு இறைவனைப் பாடி மகிழ்ந்துள்ளனர். இம்முறையில் திருமால் மீது காதல் கொண்ட திருமங்கையாழ்வாரும் நாயகன் - நாயகி முறையில் சிறிய திருமடல், பெரிய திருமடல் ஆகிய மடல்களைப் பாடியுள்ளார். இருமடல்களிலும் கண்ணனைக் கண்டு காதல் கொண்ட தலைவி அவனை அடையப் பெறாமையால் தன்னுடைய ஆற்றொண்ணாத துயரத்தை வெளிப்படுத்துவதைக் காணமுடிகிறது. தன்போல் காதல் கொண்ட பெண்களின் செயல்களைக் கதைகளாகக் கூறி இறுதியாக ஊரில் உள்ளவர்கள் இகழ்ந்தாலும் "நான் மடலூர்வேன்" என்று முடிவு செய்கிறாள். இத்தகைய தலைவியின் உள்ளப்பாங்கு திருமடல்களில் வெளிப்படுவதைக் காட்டுவதாய் இக்கட்டுரை அமைகின்றது.

## அகப்பொருள் தத்துவம்

ஆழ்வார்கள் திருமாலைக் கண்டு இன்புறும் முறைகள் பல வகைப்பட்டன. திருமாலின் திருப்பெயர்களைக் கூறியும், திருமாலின் திருக்கலியாண குணங்களைச் சொல்லியும், திருமாலின் வடிவழகைக் கண்டு வருணித்தும், திருமால் எழுந்தருளியுள்ள திருத்தலங்களின் வளங்களைக் கூறியும் இன்புறுவர். இவை எல்லாவற்றிற்கும் மேலாகத் திருமாலைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கற்பனை செய்து இன்புறும் முறையும் ஆழ்வார்களின் அகப்பொருள் கூற்றுப் பாடல்களில் உண்டு.

## நாயக - நாயகி பாவச் சிறப்பு

பெண் என்பவள் அனைத்து உயிர்களையும் உண்டாக்குபவள். அவளுடைய அன்பு எல்லா உயிர்களிடத்தும் செல்லக்கூடியது. எனவேதான் கவிமணி "மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா"[1] என்று கூறுகிறார். அடியார் பெருமக்கள் இறைவன் மீது பாடல்களைப் பாடும்போது தம்மைப் பெண்ணாகவும் இறைவனைத் தலைவனாகவும் கற்பனைசெய்து பாடுகின்றனர். இதை நாயக-நாயகி பாவம் என்பர் சிவபெருமான் முதற்கொண்டு அனைத்து தெய்வங்களையும் இம்முறையில் வழிபட்டு அடியார்கள் பாடல்கள் எழுதியுள்ளனர். சைவத்தில் மாணிக்கவாசகர் திருக்கோவையார், திருவாசகத்தில் சில பதிகங்கள்

இம்முறையிலேயே பாடியுள்ளார். தலைவி நிலையில் பேசும் போது நம்மாழ்வார் பராங்குச நாயகி என்றும் பரகாலராகிய திருமங்கை ஆழ்வார் பரகால நாயகி என்றும் திருப்பெயர்களைப் பெறுகின்றனர்.

**பரகால நாயகியின் நிலை**

பந்தாடிக் கொண்டிருந்த பரகால நாயகியைத் தாயாரும் தோழியாரும் அழைத்துக்கொண்டு குடக்கூத்தைக் காணச் சென்றனர். “பற்றது பற்றின் பரமனைப் பற்றுமின்”[2] என்பதற்கேற்ப அக்குடக்கூத்தில் கண்ணனைக் கண்டது முதல் அவள் அவன் மீது காதல் கொண்டாள். கையிலிருந்த வளையல்கள் நெகிழ்ந்து விழுந்து விட்டன. உருமாறிப் பிதற்றித் திரிவதால் கண்டார் இரக்கம் கொள்ளும்படி ஆகிவிட்டது. அவள் பற்றியும் அவளது நோய் பற்றியும் கேட்பவர் யாருமில்லை. கண்ணனைக் கண்டு கடல் போல இன்பம் அடைந்த பரகால நாயகிக்கு இப்பொழுது அதுவே கடலைவிடப் பெரிய துன்பத்தைத் தந்துவிட்டது. இதையே வள்ளுவம் “இன்பம் கடல் மற்றும் காமம் அஃது அடுங்கால் துன்பம் அதனிற் பெரிது”[3] என்று கூறுகிறது.

**இன்பத்தை வெறுத்தல்**

தென்றல், வேய்ங்குழலின் இன்னிசை, மணியின் ஓசை, மாலைப்பொழுது, இளம்பிறைச் சந்திரன் ஆகியவை பிரிவாற்றாமையால் துன்புறும் காதலர்களுக்கு மேலும் துன்பம் தரக்கடியவை. நெருப்பில் எண்ணையை ஊற்றுவது போன்றதாகும். ஆற்றாமைக் காரணமாகப் பரகால நாயகிக்குத் தென்றல் முதலானவைத் துன்பம் தருவதை “மன்றி மறிகடலுமார்க்கும் மதியிகந்த இன்னிலா வின்கதிரும் என்றனக்கே வெய்தாகும் தன்னுடைய தன்மை தவிர்த்தான் என்கொலோ”[4] “இன்னிலம் பூந் தென்றலும் வீசும் எரியெனக்கே”[5] “இன்னிசை ஓசையும் வந்தென் செவிதனக்கே கொன்னவிலும் மெஃகில் கொடிதாய் நெடிதாகும்”[6] என்ற அடிகளின் வழியாக அறியலாம்.

**திருமாலின் - திருமாலை**

தலைவி திருமாலை அடையமுடியவில்லையாயின் திருமால் அணிந்துள்ள துளசி மாலையைப் பெற்றால் திருமாலை அடைந்தது போன்றதாகும் என்கிறது வைணவ மரபு. பராங்குச நாயகியும் துழாய் மாலை பெற்று அடைந்த பரமானந்தத்தை,

“வெறிகொள் துழாய் மலர் நாறும்
வினையுடை யாட்டியேன் பெற்ற
செறிவளை முன்கைச் சிறுமான்
செய்கின்ற தென் கண்ணுக் கொன்றே”[7]

என்று தாய் கூற்றில் வைத்துப் பாடுகிறார் நம்மாழ்வார்.

**அன்றிலும் மடலும்**

காதலர்களுக்கு அன்றிற் பறவைகளை உவமையாகக் கூறுவர். ஏனெனில் அன்றில் பறவையானது ஒரு சிறிது பொழுது கூடத் தன் துணையைப் பிரிந்திருக்காது. அப்பறவைகள் நீரில் நீந்தும் பொழுது இடைப்பட்டாலும் அப்பிரிவிற்குப் பல ஆண்டுகள் பிரிந்தது போல் துன்பம் அடையும் என்பதைப்

**"பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன**

**நீர் உறை மகன்றிற் புணர்ச்சி போல**

**பிரிவு அரிதாகிய தண்டாக் காமமொடு"**[8]

என்று குறுந்தொகைப் பாடல் கூறுகின்றது. பரகால நாயகி தூதுவிட்ட நெஞ்சமும் அவனிடமே தஞ்சம் எனப் புகுந்ததை நினைந்து திருமாலை அடைய மடல் ஊரப் பனைமடல் எடுக்கச் செல்கிறாள். பிரிவைச் சிறிதும் அறியாத அன்றில் பறவைகள் பனை மரத்தின் மேல் முள்ளையுடைய தாமரைத் தண்டால் செய்யப்பட்ட கூட்டில் காதல் மொழி பேசுகின்றன. அதைக்கண்ட பரகால நாயகிக்கு அதிகமாகத் துன்பம் உண்டாகியது.

**வடநெறி விரும்பும் பரகால நாயகி**

தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் பெண்மடல் ஏறுவதாக மரபு இல்லை. இதைத் தமிழ் நெறி என்று பரகால நாயகி குறிப்பிடுகிறாள். மேலும் இந்நெறியில் நிற்பவர்கள் தென்றல், சூழலின் இன்னிசை, மணியின் ஓசை, அன்றில் பறவையின் மகிழ்ச்சி, சந்திரனின் குளிர்மை, காமனின் கணைகள் முதலியவற்றால் ஏற்படும் துன்பத்தை அறியாதவர்கள் அதனால்தான் பெண்கள் கடல் போலக் காமத்தை அடைந்தாலும் மடல் ஏறக் கூடாது என்கின்றனர் என்று பரகால நாயகி கூறி,

**"அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்**

**மன்னும் மடலூரார் என்பதோர் வாசகமும்**

**தென்னுரையில் கேட்டறிவதுண்டு அதனையாம் தெளியோம் மன்னும் வடநெறியே வேண்டினோம்"**[9]

என்ற அடிகளின் வழியாகத் தம் காதல் நிறைவேறப் பெண்கள் நாணம் விடுத்துச் செயல்படுதல் வடநெறியாகும். அந்நெறியைப் பின்பற்றித் தானும் நாணம் விடுத்து எல்லோரும் அறிய மடலேறப் போவதாகக் குறிப்பிடுகின்றாள். "திருமங்கையாழ்வார் மடல் ஊர்வதாகப் பாடியது தமிழ் மரபுக்கு இணங்கிய ஒன்றே. ஆணாகிய அவரே கற்பனைப் பெண் ஆகின்றாரன்றி அவர் உண்மைப் பெண் அல்லர். எனவே அவர் பாடியது மரபு மீறலாகாது"[10] என்று இராய. சொக்கலிங்கம் குறிப்பார்.

**மடல் ஊர நினைக்கும் இடம்**

திருமால் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்கள் ஒன்றுவிடாமல் மடல் ஊரத் தலைவி எண்ணுகிறாள். நுண்ணிய இடையை உடைய மகளிர் வாழும் தெருக்கள் மறையவர்கள் பலரும்

வாழுகின்ற இடங்கள், திருமாலுடைய அடியார்கள் வாழும் இடங்கள், பூமி முழுவதும் ஆளும் அரசர்கள் வாழும் இடம். இவ்வாறு நாடு முழுவதும் மடல் ஊரப் பரகால நாயகி எண்ணுகிறாள் என்பதை,

**"பேராயிரமும் பிதற்றிப் பெருந்தெருவே**
**ஊராரிகழிலும் ஊராதொழியேன் நான்**
**வாரார் பூம் பெண்ணை மடல்"**[11]

என்ற அடிகளில் எடுத்துரைக்கின்றார்.

**அருள் பெறவே மடல்**

திருமங்கையாழ்வார் மடல் ஏறுவதைத் துறவுக்கு இணையாகக் கருதுகிறார். மரத்தின் அடியில் வாழ்ந்தும், இலை உடுத்தியும், பிச்சையேற்று உண்டும், தவம் செய்தும் அடைய இயலாத திருமாலின் திருவடியை அறம், பொருள், இன்பம் என்ற மூன்றனுள் இன்பத்தைக் கைக்கொண்டு வீட்டின்பத்தை அடைய முற்படுகின்றார். அவர் நாயகி நிலையில் மடல் ஏற்றம் குறித்துக் கூறுவது சிற்றின்பத்திற்கு அல்ல, பேரின்பத்திற்காகும். மடலேறித் தலைவனுடன் இல்வாழ்க்கை நடத்துவதற்கு அல்ல, மடல் ஏறியாவது இறைவனின் திருவடிகளை அடைய வேண்டும் என்பதற்காகும்.

**அடிக்குறிப்புகள்**

1. கவிமணி, மலரும் மாலையும், ப.674
2. திருமூலர், திருமந்திரம், பாடல் - 298
3. திருவள்ளுவர், திருக்குறள், 1166
4. திருமங்கையாழ்வார், பெ.தி.ம கண்ணி 81 - 82
5. மேலது ............. 84
6. மேலது ............. 94 - 95
7. நம்மாழ்வார், திருவாய்மொழி 4.4.3
8. சிறைக்குடி ஆந்தையார், குறுந்தொகை, பா.எ 51
9. திருமங்கையாழ்வார், பெரிய திருமொழி, கண்ணி 38 - 40
10. சந்திரசேகர கவிராஜ பண்டிதர், வருண குலாத்திதன் மடல் முகவுரை.
11. திருமங்கையாழ்வார், சிறிய திருமொழி, கண்ணி 77 - 78

**துணைநூற்பட்டியல்**


1. திருமங்கையாழ்வார் - திருமங்கையாழ்வார் பனுவல் திரட்டு
2. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை - மலரும் மாலையும்
3. சந்திரசேகர கவிராஜ பண்டிதர் - வருணகுலாத்திதன் மடல்
4. திருமூலர் - திருமந்திரம்
5. திருவள்ளுவர் - திருக்குறள்
6. குறுந்தொகை - வர்த்தமானன் பதிப்பகம்

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கம்பராமாயணத்தில் உளவியல்

**முனைவர் சு. சத்தியா, தமிழ்த்துறைத் தலைவர்,**
**பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.**

47

**ஆய்வுச்சுருக்கம்**

**தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்**

**தர்மம் மறுபடி வெல்லும்**

என்பதை இவ்வுலகோருக்குத் தான் படைத்தளித்த காப்பியத்தில் கம்பர் கவிநயத்துடன் எடுத்துரைத்துள்ளார்.. இவ்வுலகில் அறமே வெல்ல வேண்டும். பாவம் தோற்க வேண்டும் என்பதே கம்பராமாயணத்தின் மையக்கருத்தாகும். அறத்தின் வழி கொண்டு விசுவாமித்திரரும் வீடணனும் செயல்பட சுயநலத்திற்காகப் பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் கூனியும் சூர்ப்பநகையும் செயல்பட இராவணன் பலியாகிறான். இறுதியில் அறம் வெல்கிறது. இக்கதையில் பல்வேறு கதாப் பாத்திரங்கள் வழி உளவியல் சிந்தனைகளை உலவ விட்டுள்ள கம்பர் உளவியல் சிந்தனையாளரே என்றால் மிகையாகாது! அவ்வகையில் கம்பராமாயணத்தில் உளவியல் சிந்தனைகளை இக்கட்டுரை முன் வைக்கிறது.

## விசுவாமித்திரரின் உளவியல் சிந்தனை

தசரதனின் குலகுருவான வசிட்டரே புகழக்கூடிய விசுவாமித்திர முனிவர் தசரதனிடம் தாருகாவனத்தில் தான் இயற்றும் தவவேள்வியை அரக்கர்களின் இடையூறு இல்லாமல் முடிக்க இராமனை உடன் அழைத்துச் செல்லக் கேட்டது இராமனின் அவதார நோக்கத்தைக் குறிப்பால் உணர்த்தவே செய்கிறது. இதில்தான் எத்தகைய உளவியல் பார்வை. அவர் நினைத்தால் தானே வேள்வியை முடித்துக் கொள்ளலாம். ஆனால் இராமனால் பின் நிகழப் போகும் அனைத்தையும் மனதில் எண்ணியே விசுவாமித்திரர் அவ்வாறு கேட்கிறார். இதற்கு இராமன் அவரிடம் இனி நான் செய்யவேண்டியவை என்ன என்று வினவ அதற்கு முனிவர்

**பெரிய காரியம் உள அவை முடிப்பது பின்னர் (கம்ப.பாலகாண்.வேள்விப்.48)**

என்பதிலிருந்து ஒட்டுமொத்தக் கதைக்கும் உளவியல் சிந்தனைகள் கருத்துக் கருவூலமாக வலம் வருவதை அறியமுடிகிறது.

## அகலிகை சாபம் நீங்கியதில் உள்ள உளவியல்

கௌதம முனிவரின் சாபத்தால் கல்லாய்க் கிடந்த அவர் மனைவி அகலிகை இராமனின் கால்துகள் கற்பாறையில் பட்டு சாபவிமோசனம் அடைந்ததில்தான் எத்தகை உளவியல். எத்தனையோ நல்ல வழிகள்

காட்டில் இருக்க கல்துகள் நிரம்பிய வழியில் இராமனை முனிவர் அழைத்துச் சென்றது அவனால் அகலிகை விமோசனம் அடைவது ஒன்று மற்றொன்று இராமன் தன் காலால் அப்பாறையை உதைக்கவில்லை.நடக்கும் வழியில் கல்துகள் பட்டே எழும்புகிறாள்.பெண்ணைத் தொடுவதில் அவளின் கணவன் அன்றி பிற ஆடவர் தொடும் மரபு நம் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்புடையதன்று என்றளவில் இலைமறை காயாக வெளிப்படும் இந்நிகழ்வு உணர்த்துகிறது.மேலும்

**இவ்வண்ணம் நிகழ்ந்த வண்ணம்**
**இனி இந்த உலகுக்கு எல்லாம்**
**உய்வண்ணம் அன்றி மற்று ஓர்**
**துயர் வண்ணம் உறுவது உண்டோ (கம்ப.பாலகாண்.மிதிலை.24)**

என்று இராமனை முனிவரே புகழுகிறார்.இதற்குத்தான் பெரிய காரியம் உள அதனை முடிப்பது பின்னர் உள என்றார் போலும்.

**இராமனின் செயலில் வெளிப்படும் உளவியல்**

விசுவாமித்திரர் இராமனின் புகழை மிதிலையில் உள்ள அனைவருக்கும் கூறுகிறார்.சனகனின் மாளிகையில் இருந்த முனிவர் இராமன்தான் வில் ஒடிக்க வேண்டும் என்பதை மனதில் கொள்கிறார்.இவ்வாறு பலரும் நினைக்கும் நினைவுகளை இராமன் அறிந்து வில் ஒடித்ததை கீழ்வரும் பாடல் வழி அறியமுடிகிறது.

**நினைந்த முனி பகர்ந்த எலாம்**
**நெறி உன்னி அறிவனும் தன்**
**புனைந்த சடைமுடி துளக்கி போர்**
**ஏற்றின் முகம் பார்த்தான்**
**வனைந் தனைய திருமேனி வள்ளலும்**
**அம்மாத வத்தோன்**
**நினைந்த எலாம் நினைந்து அந்த**
**நெடுஞ் சிலையை நோக்கினான் (கம்ப.பாலகாண்ட.கார்முகப்.25)**

இதில் இராமன் வில்லை வளைப்பானோ வளைக்க மாட்டானோ என சனகன் நினைக்கிறான்.தன் மகளின் திருமணம் நின்றாள் தன் குலத்துக்கே அவமானம் என்பதை நினைக்கிறான்.இன்னொரு புறம் சதானந்த முனிவர் இப்போட்டி அறிவித்தது தன்னால்தான் என்பதை உணர்ந்து இதில் வெற்றி இல்லையெனில் பழி நம்மேல் வந்து அடையும் என நினைக்கிறார்.மற்றொருபுறம் விசுவாசமித்திரர் இராமன் இப்போட்டியில் தோற்றான் என்றால் தசரதன் குலத்துக்கே அவச்சொல்லாகும் என்று நினைக்கிறார்.இவர்கள் அனைவர் மனநிலையையும் அறிந்த இராமன் வில்லினை சர்வசாதாரணமான முறையில் ஒடித்து வெற்றிக் கண்டான்.ஆனால் இதில் அனைவரின் உளப்பாங்கினையும் அறியும் வகையில் கம்பர் வெளிப்படுத்தியுள்ளது போற்றுதற்குரியதாகும்.மேலும் இராமன் வில் ஒடித்ததை

**தடுத்திமை யாமல் இருந்தவர் தாளில்**

**மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார் (கம்ப.கார்முக.34)**

என்ற பாடல் வழி இன்னொரு உளவியல் கூறினை அறியலாம்.வில்லினை வளைத்து நாணேற்றும்போது இராமனின் பாதத்தில் உள்ள ஒரு முனையை பார்த்த மறுமுனை அவர் பாதம்பட என்னதவம் செய்ததோ என எண்ணி மற்றொன்றும் ஒடிந்து இராமர் பாதத்தில் விழுந்ததாம்.இதனைச் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

**கூனியின் செயலில் விளைந்த உளவியல்**

இராமனுக்கும் கூனிக்கும் பகைமை ஏற்பட்டதற்கு காரணம் உண்டு.இராமன் சிறுபிள்ளையாக இருக்கும்போது கூனியின் கூனல் பாகத்தில் மண் உண்டையை விளையாட்டாக எறிந்தான்.இச்செயலைக் கூனி தவறாக எடுத்துக்கொண்டு இராமன் மீது அன்றுமுதல் பகைமை கொள்கிறாள்.ஆண்டுகள் கடந்தன. ஒரு நாள் இராமனுக்கு முடிசூட்டு விழா என்றதும் கூனி கொதிப்படைகிறாள்.

**பண்டை நாள் இராகவன் பாணி வில்லுமிழ்**

**உண்டையுண் டதனைத் தன்னுள்ளத்து (கம்ப.அயோத்.மந்தரை.49)**

நினைத்து செல்கிறாள்.சிறு வயதில் இராமன் தனக்குச் செய்ததை நினைந்து நினைந்து தன் உள்ளத்தே அதனைப் பெரும் நெருப்பாக்கிக் கொண்டவள். அந்நிகழ்வைத் தடுக்க முற்படுகிறாள். இதனைச் சற்றே சிந்தித்துப் பார்த்தால் என்றோ நடந்த அந்தச் செயல் கூனியின் மனதில் வடுவானது.அதுவே பின்னாளில் கேடானது என எண்ணும்போது பழி வாங்கும் எண்ணம் அன்றே ஆழ்மனதில் பதிவானதும் சமயம் வாய்க்கும்போது சுயரூபத்தைக் காட்ட முயல்வதும் இன்றும் அக்கூனி போல் உள்ள கயவர்களின் செயல்வழி பிரதிபலிப்பதை அறியமுடிகிறது.

**சூர்ப்பநகையின் உளவியல் சிந்தனை**

தன் கணவனைக் கொன்ற இராவணனைப் பழி வாங்க தருணம் பார்த்துக் காத்திருந்தாள் சூர்ப்பநகை.எத்தனை வஞ்சனை மனதில் அண்ணன் என்றுகூடப் பாராமல் வஞ்சகத்துடன் இருந்த அவளின் மனநிலையை இறந்துகிடக்கும் இராவணனைக் கண்டு வீடணன் கூறும்வழி அறியலாம். இதனை

**கொல்லாத மைத்துனரைக் கொன்றாய் என்று**
**அது குறித்துக் கொடுமை சூழ்ந்து**
**பல்லாலே இதழ் அதுக்கும் கொடும்பாவி**
**நெடும்பாரப் பழி தீர்ந்தாளே (கம்ப.மண்டோ.38)**

என்ற இப்பாடல் வழி சூர்ப்பநகை இராவணனின் அழிவுக்குக் காரணமாக இருந்தாள் என்பதை அறிய முடிகிறது. கம்பர் மனித மனம் மற்றவர்களைப் பழிவாங்கும் விதம் அதற்கு அவர்கள் முன்

அனுபவித்தவிதம் அவை ஆழ்மன உணர்வுகளின் வெளிப்பாட்டால் வெளிவரும் நிகழ்வுகள் நேர்வினை அன்றி எதிர்விளைவுகளையே ஏற்படுத்துகின்றன என்பதை தனது காப்பியத்தில் வெளிப்படுத்திய உளவியல் பாங்கு இன்றைய சமூகத்திலும் பல வகையில் பிரதிபலிக்கின்றது.

**அனுமனின் உளபாங்கு**

சொல்லின் செல்வன் என்று போற்றப்படும் அனுமன் இராமா இராமா என்று மந்திரத்தை எப்பொழுதும் சொல்லும் இயல்பினன்.இதனைக் கண்டு அனுமனிடம் இராமன் நான் எங்கு இருக்கிறேன் என்று கேட்க,

**நின்முகம் காண்பார்**

என்று தன் நெஞ்சைப் பிளந்து இராம இலக்குவன் சீதையை அந்நெஞ்சில் காட்டியவன்.இதனை நோக்கும் போது இயல்பாகவே அவர்கள் மூவர்மீதும் அன்புகொண்டிருந்த இராவணனின் உளப்பாங்கு வெளிப்படுகிறது.

இவ்வாறு கம்பர் தனது காப்பியத்தில் பல்வேறு கதை மாந்தர்களின் வழி உளவியல் சிந்தனைகளைச் சித்தரித்துள்ளார். இவை எக்காலத்திற்கும் மானுடவாழ்வியலில் அறத்தை நிலைநிறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

**மனத்தினைத் தூய்மையாக்குவோம்**

**மனிதநேயம் மலரச்செய்வோம்!**

**பார்வை நூல்கள்**

1.கம்பராமாயணத்தில் திருப்புமுனைப் பாத்திரங்கள், முனைவர் அ.லெட்சுமணன், ராசய்யா பதிப்பகம், திருவாரூர். 2009

2.வ.வே.சு.ஐயரின் கம்பராமாயணக் கட்டுரைகள், பெ.சு.மணி, பூங்கொடி பதிப்பகம், சென்னை. 1996

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

48

# உளவியல் நோக்கில் கலித்தொகைத் தோழி

**முனைவர் தே.சத்யா, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**ஜே.கே.கே.நடராஜா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமாராபாளையம்**

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதர்களின் முழு வாழ்க்கையிலும் ஊடுருவிச் சென்று எல்லா காலக் கட்டத்திலும் நிலவி வரும் வாழ்க்கைச் சீர்கேடுகளைச் சீராக்கி வருவது உளவியல் உடலானது புறத்து செயல்படுவது. உள்ளமானது உள்ளிருந்து செயல்படுவது அத்தகைய உள்ளத்தை சிக்மண்ட் ஃபிராய்ட், யுங், லக்கான் போன்றோர் ஆராய்ந்து வகுத்த உளப்பகுப்பாய்வு மனித மனங்களோடு ஒப்பிட்டு பார்க்க இயலுகிறது. இத்தகு உளவியலுக்கும் இலக்கியத்திற்கும் தொடர்பு உள்ளது. இலக்கியங்களில் காணப்படும் கதை மாந்தர்கள் படைப்பாளியின் மனதைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாக அமைகின்றன. மேலும், தனி மனிதனின் நடத்தையையும், நடவடிக்கைகளையும் ஆராய்ந்து வாழ்க்கையைச் செம்மைப் படுத்தி மனநலத்தைப் பாதுகாத்து மனித சமுதாயத்தைக் காக்கும் விரிந்துபட்ட துறையாக விளங்குகிறது. இதனால் மனித வாழ்க்கையோடு என்றும் உறவாடி இருப்பது உளவியல். சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையில் தோழியிடத்துக் காணலாகும் உளவியல் கோட்பாடுகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**உளவியல் - பெயர்க் காரணம்:**

**“மானிட நடத்தைகளையும், மூளைச் செயற்பாடுகளையும் அறிவியல் கண் கொண்டு ஆய்வதே உளவியலாகும். மனம் தொடர்பான அனைத்துச் செயற்பாடுகளையும் ஓர் ஒழுங்கமைப்பின் கீழ் இயங்கச் செய்வதும் உளவியலின் தன்மையாகும்.”**[1]

என விளக்கம் தரப்படுகிறது.“ஆங்கிலத்தில் சைக்காலஜி(Psychology) என்ற சொல் (Psyche), லோகஸ்(Logus) ஆகிய இரண்டு சொற்களின் கூட்டாக வழங்கப்படுகிறது. “சைக்” ஆன்மாவைக் குறிக்கும் கிரேக்கச் சொல்“லோகஸ்” அறிவு என்ற பொருளில் வரும் மற்றொரு கிரேக்கச் சொல். ஆன்மாவை அறியும் அறிவியல் என்பதே சைக்காலஜிக்குப் பொருள்.

இன்று ஆங்கிலத்தில் வழங்கப்படும் சைக்காலஜி என்னும் பெயரை முதன்முறையாகத் தம் நூலுக்கு அமைத்தவா “குளோக்கல்” என்பவராவர். தமிழில் உளவியல் என்ற சொல்லை 1942 இல் தான் பயன்படுத்தி உள்ளனர்”[2]

**கலித்தொகையில் உளவியல்**

சங்க இலக்கியங்கள் தமிழரின் காதல், வீரம், கொடை போன்றவற்றை அடிப்படையாக் கொண்டது. இவைகளே அம்மக்களின் மன இயல்புகள், நம்பிக்கைகள் போன்றவற்றைத் தெரிவிக்கின்றன. இதில் காதல் உணர்வு, சோக உணர்வுகளும் உணர்வுப்

போராட்டங்களும் வெளிப்படையாக அமைந்துள்ளன. உளவியலாளர்கள் கூறியஉளவியல் கொள்கையின் அடிப்படையில் தோழி என்கின்ற மாந்தரை உளவியல் முறையில் ஆராய அணுகலாம். அவ்வகையில் சமூக உளவியல் அடிப்படையில் தோழி புறமுகத் தன்மை உடையவளாகவும், தோழி பேசப்படும் இடங்களில் உள்ளப்போராட்டமும், உள்ள இறுக்கமும் உடையவளாக காணப்படுகிறாள். இந்த அடிப்படையில் தோழியின் கூற்று வழியே அவளின் உளப்பகுப்பாய்விளை ஆய்வு செய்ய முடிகிறது.

**தோழி - அறிமுகம்:**

நற்றாயின் மகள் தலைவி எனப்படுவாள் தலைவியின் தாய்க்குத் தோழியாக அமைந்தவள் செவிலி எனப்படுவாள். தோழி என்பவள் செவிலித்தாயின் மகள் தலைவியின் களவியல் வாழ்வு கற்பியல் வாழ்வாக மலர்வதற்கு எல்லா வகையிலும் தன்னை ஈடுபடுத்திக்

கொள்பவள் இவள் தலைவிக்காகவே படைப்பட்ட மாந்தர் என்றே இவளைக் கூறலாம். செவிலியின் மகள் என்பதால் இவளுக்கும் திருமணம் உண்டு என்பதை உய்த்துணரலாம். ஆனால், தோழியின் குடும்பங்களைப் பற்றிய குறிப்புகளைக் காண இயலவில்லை. சங்க இலக்கியங்களில் தலைவியுடன் சிறப்போடு இருந்த துணைப்பாத்திரமான தோழி "இகுளை, பாங்கி, துணைவி, சேடி, சகிஎன்று பல " சொற்களால் பல்வேறு காலங்களில் வழக்காற்றில் இருந்திருக்கின்றாள். இவற்றுள் தோழி என்ற சொல்லே பழைமைச் சிறப்புடையது. தொல்காப்பியம், வீரசோழியம் போன்ற இலக்கண நூல்களிலும், சங்க இலக்கியங்களிலும் பயின்று வந்த பெருமையுடையது. தலைவியின் ஏவல் தொழிலைச் செய்து முதன்மை பெற்றவள் என்பதால் தோழி எனப்பட்டாள் என அறிய முடிகிறது.

**"குழந்தைப் பருவத்திற்கும் முதிர்ச்சிப் பருவத்திற்கும் இடைப்பட்ட நிலையில் தோழியானவள் காணப்படினும் செவிலி, நற்றாய் போன்று நல்லவழியைக் காட்டி தோழியை அழைத்துச் செல்லும் ஒரு ஒளி விளக்கைப் போல் காணப்படுகிறாள்"[3] "தோழி தானே செவிலி மகளே"[4]**

இங்கு தோழி என்றது காதல் தோழியைக் குறிக்கும். தலைமகளின் தோழியர் பலருள்ளும் இவளே களவிற்குச் சிறந்தவள் என்பதால் " தானே" என்று அழுத்திக் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. தலைவியின் குழந்தைப் பருவத்தில் அவள் உடலைப் போற்றி வளர்ப்பவள் செவிலி, தலைவியின் இளமைப் பருவத்தில் அவள் உள்ளத்தைப் போற்றிக் காப்பவள் தோழி என்று அறிய முடிகிறது.

**தோழியின் தனித்தன்மைகள்**

கலித்தொகைத் தோழி தலைமகளின் காதல் வாழ்க்கையில் பங்கு கொண்டு அரண்போல் விளங்குகின்றாள். ஒத்த வயதும், இயல்பும் கொண்டவளாகக் காட்டப்படும் தோழி தலைவியின் காதலை அறிந்திருந்தாலும், அவள் காதலில் ஈடுபட்டதாக எப்பாடலிலும் கூறப்படவில்லை. கடமை உணர்வுடன் தலைவியின் நலனிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் வரைவு நிகழ வேண்டியும் தலைவனுடன் உரையாடியதைப் பல இடங்களில் காணமுடிகிறது.

"தலைவனும் தலைவியும் காதலில் மகிழும் காலத்திலும், தலைவன் தலைவியை விட்டு உள்ளப் போராட்டத்துடன் பிரிகின்ற காலத்திலும், உலகியல் உண்மைகளை வாழ்க்கை அனுபவங்களோடு இணைத்துக் கூறும் திறன் பெற்றவள். தலைவனைப் பிரிந்தகாலங்களில் தலைவி அவனை எண்ணி தனித்திருப்பாள். அவளின் தனிமைத் துயரைத் துடைக்க ஆறுதல் மொழிகளைப் பேசுவாள் தோழி, அவள் தான் சென்ற காரியம் முடிந்து திரும்பும் காலங்களில் தலைவியோடு சேர்ந்து தானும் மகிழ்கிறாள்"5 இதனால்

எண்ணத்தாலும் சொல்லாலும் செயலாலும் தலைவியின் நல்வாழ்வுக்கெனவே

தொண்டாற்றுபவளாகத் தோழி கருதப்படுகின்றாள் என்பதை உணரமுடிகிறது.

**உள்ளப் போராட்டம்:**

"ஒரே சமயத்தில் ஒன்றுக் கொன்று முரணான தேவைகள், ஆசைகள், உளத்துடிப்புகள் (Impulses) ஆகியன ஒன்றோடொன்று மோதுவதால் உள்ளப் போராட்டங்கள் (Mental Conflict)உண்டாகின்றன"6 மேலும் "இரண்டு சமவலிமையுடைய ஊக்கிகள் (Motives) பூர் தி பெற இயலாது. ஒன்று மற்றொன்றுக்கு ஒன்று தடையாக இருப்பதின் காரணமாக ஏற்படும் உளநிலையே உள்ளப் போராட்டம்"7 என்று டி.ஈ சண்முகம் கூறும் கருத்தும் இங்கு நோக்கத்தக்கது.

மனப் போராட்டம் என்ற பண்பு மனிதனுக்கே உரிய ஒன்று. உள்ளத்தில் இரண்டு கருத்துக்கள் முரண்படுகின்ற போது போராட்டம் ஏற்படுகின்றது. தோழி வாயிலாக நின்று தலைவியின் வருத்தத்தைப் போக்கப் போராடுவாள். அப்பொழுது தோழியின் உள்ளத்திலும் போராட்டங்கள் ஏற்படுவது உண்டு.

தலைவனின் பொருள்வயிற் பிரிவினைத் தடுத்து தலைவி மன மகிழ்ச்சி அடைவதைக்காண விரும்புகிறாள். தலைவியின் துயரைத் தன் துயராக எண்ணி சிந்தனையைச் செலவிட்டாள். இதனால் தோழியும் உள்ளப் போராட்டத்திற்குள்ளானதைத் தோழிக்கூற்றின் பெரும்பாலான பாடல்கள் புலப்படுத்தும்.

**"ஓர் இரா வைகலுள் தாமரைப் பொய்கையுள்**
**நீர் நீத்த மலர்போல நீ நீப்பின் வாழ்வாளோ? என ஆங்கு**

**பொய்ந் நல்கல் புரிந்தனை புறந்தரல் கைவிட்டு**
**எந்நாளோ நெடுங்காய்! நீ செல்வது**
**அந்நாள் கொண்டு இறக்கும் இவள் அரும்பெறல் உயிரே"8 (பாலை.கலி.7:20-25)**

என்னும் வரிகளில் பெறுவதற்கு அரிய தலைவியின் உயிர் இல்லாது போய்விடும் எனது தோழி கூறியதால் தலைவன் பயணத்தைத் தள்ளி வைத்தான்.

**"வினை வெஃகி நீ செலின் விடும் இவள் உயிர் எனப்**
**புனையிழாய்! நின் நிலை யான் கூற பையென**
**நிலவு வேல் நெடுந்தகை நீளிடைச்**
**செலவு ஒழிந்ததனால் செறிக நின் வளையே"9 (பாலை.கலி 10:20-24)**

என்று தோழி தலைவியின் வருத்தம் தீருமாறு தலைவன் செலவொழிந்ததைக் கூறித் துயர் நீங்குகின்றாள். அச்ச மனநிலையில் தன் ஆசைகளை அடக்கி ஏக்க உணர்விற்கு இடையே நின்று தலைவி கொள்ளும் தவிப்பைப் போக்குவது தோழியின் நோக்கம். ஆதலால் தலைவனிடத்து,

**"சென்றோர் முகப்பப் பொருளும் கிடவாது**
**ஒழிந்தவர் எல்லாரும் உண்ணாதும் செல்லார்**
**இளமையும் காம்மும் ஓராங்குப் பெற்றார்**
**வளமை விளைதக்கது உண்டோ? உளநாள்**
**ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்**
**ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை அரிதரோ**
**சென்ற இளமைதரற்கு"7 (பாலை.கலி.18:5-12)**

என்ற வரிகளில் இல்லறமே சிறந்தது என்றும் பொருளைக் காட்டிலும் அன்பே சிறந்தது. எனத் தோழி உலகியல் அறிவு வெளிப்படப் பேசுகிறாள். இவ்வாறு பல இடங்களிலும் தலைவனின் பயணத்தைத் தவிர்க்க செய்வதும், தலைவியை சமாதானம் செய்வதும், தலைவனுக்கு அறிவுரைகளைக் கூறுவதுமான பல காரணங்களால் தோழி உள்ளப்போராட்டத்தோடு இயங்குவதைக் காண முடிகின்றன.

**உள்ள இறுக்கம்:**

உள்ள முறிவு எவ்வகைத் தீர்வுமின்றி நெடுங்காலம் தொடருமானால் உணர்வியல் சார்ந்த முற்றிய விறைப்பு நிலை தோன்றும் அந்நிலையை 'உள்ள இறுக்கம்' என உளவியலாளர் குறிப்பர்.8 உள்ள முறிவினாலும் உள்ளப் போராட்டத்தாலும் மனம் கலங்குவதால் கவலை தோன்றுகிறது.

"மன முறிவுள்ள ஒரு மனிதனும் சரி மனப் போராட்டத்தில் உள்ள மனிதனும் சரி உரு கலக்கம் அடைத்த இறுக்கமான நிலையில் இருக்கின்றான். அவனுடைய மூல ஊக்கியின் தூண்டல் நிலை சிறிதும் குறையாமல் இருக்கின்றது. மேலும் அவனுடைய மன இறுக்கம் போராட்டத்தில் இருந்து எழுந்த மன எழுச்சித் துலங்கலினால் வலிமை ஊட்டப்பட்டிருக்கின்றது."9 இத்தகைய தூண்டுதல்களை உளவியலாளர் உள்ள இறுக்கம் என்பர்.

"தலைவன் குறித்த நாளில் திரும்பி வாராமையினால் அழகு இழந்தாள் தலைவி. தோழிக்குத் தலைவியின் பெருந்துயர் உள்ள இறுக்கத்தைத் தந்தது. தோழி தான் உற்ற வருத்தத்தைக்கூறி, தலைவியைப் போன்று நெட்டுயிர்பு கொண்டு மன இறுக்கத்தோடு இருந்துள்ளாள்." (பாலை.கலி36:16-17,22-26)

**புற முகத் தன்மை**

சூழ்நிலைக் கேற்ப விழிப்பாக இருத்தல், அனைவரிடமும் எளிதாகப் பழகுதல், செயல் துடிப்புடன் இருத்தல், மாறுதல்களை விரும்புதல் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் புறமுகத் தன்மை உடையவராய் இருப்பர். இவையாவும் தோழியின் செயல்களில் வெளிப்படையாகக் காண முடிகிறது.

தலைவன் பொருள் தேடப்பிரிந்து சென்றதை அறிந்த தோழி, சூழ்நிலைக்கு ஏற்றாற் போல் அவனுக்கு அறிவுரை வழங்கியது வியக்கத்தக்கதாக உள்ளது. கற்ற கல்வியோ, பொருளோ தலைவியின் இளமையை மீட்டுத் தர இயலாது. புற வாழ்க்கையில் பெறும் கல்வி, பொருள் முதலியவற்றைக் காட்டிலும் அக வாழ்க்கைச் சிறப்புடையது என வலியுறுத்துகிறாள் தோழி.

**"பணிபுவந்து இரப்பவும் பல சூழ்வாய் ஆயினை**
**துணிபு நீ செலக் கண்டஆற்றிடை" (பாலை.கலி 3:15-16)**

என்று கூறியும் பயணம் செய்வதையே எண்ணும் தலைவனை நினைத்து வருந்துகிறாள். தலைவனிடம் இருக்கும் குற்றத்தைச் செயல் துடிப்புடன் எடுத்துக் கூறியது அவளை புறமுகத் தன்மை உடையவளாகக் காட்டுகிறது.

**நிறைவுரை**

பொதுவாக, கலித்தொகைத் தோழியிடம் அவளுடைய ஊக்கங்களும், உந்துதல்களும் இயல்பூக்கங்களும் தலைவியின் நலனுக்காகவே அமைந்துள்ளன. அறத்தொடு நிற்கும் இடங்களில் தலைவிக்குப் பெரிதும் துணை செய்பவளாய் இருக்கின்றாள். எச் செய்தியை யாரிடத்து எப்படிக் கூற வேண்டுமென்ற நுணுக்கவுணர்வு மிக்கவளாகத் தோழி காணப்படுகின்றாள்.

**அடிக்குறிப்புகள்:**

1.முனைவர் பாகு. இராமலிங்கம், மானிட உளவியல், பக்.11

2.எஸ் சந்தானம், கல்வியின் உளவியல் அடிப்படைகள் பக்.2

3.முனைவர் ஜோ. அருணாதேவி, தொல்காப்பியரின் உளவியல் பார்வை, பக்.81

4.தொல். பொருள், இனம், நூ,1045

5.ரவிக்குமார், பாலைக்கலியில் தோழியின் மதி நுட்பம் ப.141

6.வாழ்வியற் களஞ்சியம், தொகுதி ஆறு.421

7.டி.ஈ.சண்முகம், உள்ளப்போராட்டம், தொகுதி10 ப.134

8.சிவராஜ், சங்க இலக்கியத்தில் உளவியல், ப.326

9.டி.ஈ.சண்முகம், உள்ளப்போராட்டம், கலை கள, தொகுதி10 ப.135

**துணைநூற்பட்டியல்**


1. இராமலிங்கம், பாஞ், - மானிட உளவியல் சாரதா பதிப்பகம், 4, அடுக்ககம், 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, ராயப்பேட்டை, சென்னை-14
2. சந்தானம், எஸ்-கல்வியின் உளவியல் அடிப்படைகள், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை -1976.
3. அருணாதேவி,ஜோ., - தொல்காப்பியரின் உளவியல்பார்வை, செந்தமிழ் பதிப்பகம், தஞ்சாவூர் -1976.
4. தொல்காப்பியம் - பொருளாதிகாரம், இளம்பூரனார் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை -1998.
5. ரவிக்குமார் - கலித்தொகை ஆய்வுக்கோவை, தொகுதி - 4, தோழியின் மதிநுட்பம், 2009.
6. வாழ்வியற் களஞ்சியம்-தொகுதி-6, தமிழ்வளர்ச்சிக்கழகம், சென்னை -1961.
7. சண்முகம்.,டி.ஈ - கலைக் களஞ்சியம் உள்ளப்போராட்டம், தொகுதி -10, தமிழ் வளர்ச்சிக்கழகம், சென்னை -1968.
8. சிவராஜ்.து., - சங்க இலக்கியத்தில் உளவியல், சிவம் பதிப்பகம், வேலூர் -1994.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

49

# திருக்குறளில் உளவியல் கருத்துக்கள்

முனைவர் சந்திரிகா சுப்ரமண்யன்
தமிழ் வளர்ச்சி மன்றம், ஆஸ்திரேலியா.

**ஆய்வுச்சுருக்கம்**

வாழ்க்கை நெறி என்று போற்றப்படும், உலகப் பொதுமறை திருக்குறள் காலத்தால் அழியாதது. தமிழினத்தின் பழம்பெரும் பண்பாட்டையும் பாரம்பரியத்தையும் பற்றி உலகம் வியக்கிறது என்றால், அதற்குரிய காரணங்களில் முக்கியமானது தமிழிலக்கியங்களே ஆகும். மனிதச் சிந்தனையின் சிறந்த பிழிவான திருக்குறளின் சிறப்பும் புகழும் தமிழினத்திற்கும் தமிழ்மொழிக்கும் மட்டுமே சொந்தம் என்றால் மிகையாகாது. ஆனால் அதில் பொதிந்துள்ள கருத்துக்களும் பயன்பாடும் மனித இனத்துக்கே சொந்தமானது என்பதை மறுக்க முடியாது.அந்த வகையில் திருக்குறளில் உள்ள உளவியல் கருத்துக்களை எடுத்துரைப்பதே ஆய்வுக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

அறிவியலாளர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் , உயர் அறிவியலை மூன்றே சொற்களில் கூறும் போது , “time, space, action” அதாவது காலம், இடம், செயல் என்றார். அவருடைய காலம் கிபி 20 ஆம் நூற்றாண்டு, ஆனால் கிமு முதலாம் நுற்றாண்டில் படைக்கப்பட்ட திருக்குறளில் இதையே,

“ஞாலம் கருதினும் கைகூடும்

காலம் {time) கருதி இடத்தால்(space) செயின்(action)” எனக் கூறுகின்றார்.

ஒரு செயலை முடிப்பதற்கு, ஒருவன் ஏற்ற காலம் அறிந்து, சரியான இடத்தோடு செய்தால் உலகத்தையே வெல்ல முடியும் என்று திருக்குறளில் உள்ள “உயர் அறிவியல்” கருத்துக்கு இது சான்றாகும்.

இப்படி அறிவியலைத் தன்னகத்தே கொண்டிருக்கும் திருக்குறள் அறிவியலின் கூறுகளில் ஒன்றான உளவியல் பற்றி பல கோணங்களில் அணுகி குறட்பாக்களைப் படைத்திருக்கின்றது. உளவியல் மனதோடும் உணர்வோடும் தொடர்புடையது. உளவியல் மனதோடு தொடர்புடையது. அகத்தியர் ஞானம் என்ற நூலில் ,

'**மனமது செம்மையானால் மந்திரம் செபிக்கவேண்டாம்**

**மனமது செம்மையானால் வாயுவை உயர்த்தவேண்டாம்**

**மனமது செம்மையானால் வாயுவை நிறுத்தவேண்டாம்**

**மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே!'** -

என, மனம் செம்மையானால் மந்திரங்களும் வேண்டாம் ,எந்த கிரியைகளும் வேண்டாம் என்று அகத்தியர் மனத்தின் மாண்பை தனது ஞானப்பாடலில் விளக்குகிறார்.

திருமூலர் , மனதை செம்மைப்படுத்தும் வழியை,

**"மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு**
**மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை " என்கிறார்**.

**மனத்தூய்மை**

மனம் மனிதனுக்குக் கிடைத்த சிறந்த பரிசு. மனம் தூய்மையாக இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மன நலம் அமைதியுடன் நன்றாக இருக்கும் என்பது உளவியல் உண்மையாகும். எப்போது மனத்தை தூய்மையாக வைத்திருப்பதே சிறந்த அறம் என்பது திருக்குறள் தரும் விளக்கம்.

**'மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்**

**ஆகுல நீர பிற'.( குறள் 34)**

மனதைத் தூய்மையாக வைத்திருக்க மனத்தின் குற்றங்களாக இருக்கக் கூடிய அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகிய நான்கு குற்றங்களையும் களைதல் வேண்டும் என்கிறார் வள்ளுவர் .

அவர் , அமைதியான வாழ்விற்கு அடிப்படையாகும் தூய எண்ணம் என்பதை மனதில் உருவாகக் கூடிய பின் வரும் நான்கு குற்றங்களையும் களைந்த மனமே தூய்மையான மனமாகும் என்பதை,

**'அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**

**இழுக்கா இயன்றது அறம்' ( குறள் எண்:35) என்ற குறளில் சொல்கிறார்.**

தவிர, உள்ளத்தில் இருப்பதற்கு மனத்தில் அன்பு உணர்வு தேவை என்பதை அன்புடமையிலும் , அருள் உணர்வு தேவை என்பதை அருள் உடைமையிலும், பிறர்மேல் பொறாமை கொள்ளாமையின் சிறப்பை அழுக்காறாமையிலும், இரக்க உணர்வுடன் இருப்பதன் சிறப்பை உணர்த்த , கண்ணோட்டத்திலும் , சினம் தவிர்த்து வாழ்வதற்கு, வெகுளாமையிலும் குறட்பாக்களைப் படைத்து, எனப் பல அதிகாரங்களில் தன் கருத்துக்களைத் திருவள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

**பிறர் பொருளை விரும்பாமை**

ஆசையே அனைத்துத் துன்பங்களுக்கும் காரணம் என்பதை 'அவா' என்ற வகையில் வெஃகாமை அதிகாரத்தில் பிறர்பொருளை விரும்புதல் கூடாது என்று குறிப்பிடுகின்றார். வறுமையுற்ற நிலையிலும்,

அவ்வறுமையைக் காரணம் சொல்லி , பிறர்பொருளை விரும்புதல் தீது என வலியுறுத்துகிறார் திருவள்ளுவர்.

**'நடுவின்றி நன்பொருள் வெஃகின் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும் '** (171)

பொருள்களின் மீது கொள்கின்ற அளவு கடந்த பற்று பல துன்பங்களை மனதில் உருவாக்கி உள நலத்தை பாதிப்பன என்பதை,

**'வேண்டின்உண் டாகத் துறக்க துறந்தபின்**
**ஈண்டுஇயற் பால பல'.** (342)

'ஒரு போதும் மன நிறைவைப் பெறாத இயல்பினை உடைய அவாவிற்கு மாறாக மனநிறைவு என்பதை வள்ளுவம்

**'ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே**
**பேரா இயற்கை தரும்'** (370) **என்கிறது.**

அடுத்து தூய்மையான மனம் அடக்கத்தோடு செயல்படுவதின் அவசியத்தையும் மனவடக்கம் என்ற அதிகாரத்தில் முன்வைக்கிறார். 'மனமானது சினம் கொள்ளாதிருப்பின் நினைத்தவை எல்லாம் உடன் எய்தும்' என்று வள்ளுவர் கூறுகின்றார்.

**'உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்**
**உள்ளான் வெகுளி எனின்.'** (309)

**சகிப்புத்தன்மை**

மன அடக்கத்திற்கு சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுத்தல், தியாகம் என்ற மூன்று குணங்களைப் போற்ற வேண்டும். என உளவியல் அறிஞர் கூறுகின்றனர். தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் உயரிய பண்பாடாகும்.

**'உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை**

**அற்றே தவத்திற் குரு'** (261)

என்று வள்ளுவர் குறிப்பிடுவதும் சகிப்புத்தன்மையைத் தான்.

**'ஒப்புரவி னால்வரும் கேடெனின் அஃதொருவன்**

**விற்றுக்கோள் தக்க துடைத்து.'** (220)

என பிறருக்கு உதவுகின்ற சிறப்புடைய ஒன்றினால் தனக்குக் கேடு விளைவிக்கக் கூடியதாக இருந்தாலும் கூட , ஒருவன் தன்னை இழந்தாவது அதை ஏற்றுக் கொள்ளக் கூடிய மதிப்புடையதாகும் என்பதோடு, மனநலத்தைப் பாதிக்கும் மிகக் கேடு விளைக்கக் கூடிய கவலை என்ற உளநோயை விலக்கி மனக்கவலையின்றி வாழ வள்ளுவர் சொல்லும் வழி, அதே போல

பிறர் நமக்குச் செய்த தீமைகளை எண்ணி எண்ணி வெதும்புவதை விட்டு மன்னித்து மறப்பது உளநலம் பேணும் என ,

**'உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்**

**பெற்றியார்ப் பேணிக் கொளல்'** (442) **என்றும்**

**'பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை**

**மறத்தல் அதனினும் நன்று'** (152) **என்றும்**

குறள் கூறும் அறிவுரைகளாகும்.

வரம்பு கடந்து பிறர் செய்யும் தீங்கை எப்போதும் பொறுக்க வேண்டும்; அத் தீங்கை நினைவிலும் கொள்ளாமல் மறந்து விடுதல் பொறுத்தலை விட நல்லது.

**'தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**

**மனக்கவலை மாற்றல் அரிது.'** (7) **என**

'இறைவன் திருவடியைப் பற்றிக் கொண்டால் மனக்கவலை மாறும் ' என்பதாகும்.

**மனவளம்**

ஒரு மனிதனின் வளம் அவனது மனத்தின் வளத்தைப் பொறுத்தே அமைகிறது. மனிதனை இயக்கும் மனத்தின் பகுதிகள் மூன்று,

1. புறமனம்
2. உள்மனம்
3. ஆழ்மனம் அல்லது அடிமனம்.

ஐம்புலன்களின் வழியாகத் தூண்டப்பட்டு, புறப் பணிகளை, செய்வது வெளிமனம். எனவே புலனடக்கம் வேண்டும் என்கிறார்.

**' செறிவு அறிந்து சீர்மை பயக்கும் அறிவு அறிந்து**

**ஆற்றின் அடங்கப் பெறின்'. (குறள்.123)**

**'எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்**

**திண்ணியர் ஆகப் பெறின்.' - குறள்:( 666 )**

என மனத்திண்மை உடைய ஒருவன் தான் எண்ணியதைச்செய்து முடிக்க உறுதியுடன் முயலும் போது உணர்வு கடந்த உள்மனம் கடவுள் போன்று அவனுக்கு வழிகாட்டி நிற்கும் என்பதாகச் சொல்கிறார்.

ஆன்மாவின் ஆழமான ஆழ்மனம் அடிமனம் தொழிற்படுவதன் மூலம் சிந்தனை பிறக்கிறது. சிந்தனையும் செயலும் சிறப்பாக இருக்க ,

**'மனந்தூ ய்மை செய்வினை தூய்மை இரண்டும்**

**இனந்தூய்மை தூவா வரும்'. (455)**

என மனத்தூய்மை, செயல் தூய்மை ஆகிய இரண்டும், ஒருவன் சேர்ந்துள்ள சேர்க்கையால் மட்டுமே திறம் படும் என்கிறார்.

உடல், உயிர், மனம், மெய்ப்பொருள் நான்கின் தொடர்புகளை 'உளவியலாளர் ' நோக்கில் வள்ளுவரும் தவம், மெய்யுணர்தல், அருள் உடைமை போன்ற அதிகாரங்களில் வலியுறுத்துகின்றார்.

**தன்னை அறிதல்**

இவற்றுக்கெல்லாம் மேலாக , தர்க்க அடிப்படையில் சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல் மட்டுமன்று, உளவியல் சார்ந்து ஆற்றல்களை வெளிக் கொண்டு வருவதை உள்ளடக்கி அமைந்தது ஹோவர்ட் கார்டினரின் (Howard Gardner)உணர்வுசார் நுண்ணறிவு அணுகுமுறை பற்றி வள்ளுவம் கூறும் கருத்துக்கள் வியக்க வைக்கின்றன. மனிதன் தன்னுடைய தனிமனிதத் திறன்களை அறிந்துகொள்ளுதல் (Intra-personal), அதேசமயம் மற்றவரின் திறன்களையும் அறிந்துகொள்ளுதல் (Interpersonal) ஆகிய இரண்டின் அடிப்படையில் செயல்படுவதே கார்டினரின் கோட்பாடாகும். இதன் அடிப்படைகளை

1. ஒருவர் தனது உணர்வுநிலையைத் துல்லியமாக அறிதல் ; அறிவுடைமை என்ற அதிகாரத்திலும் , அறிவூக்கம்' என்று அறிவையும் ஊக்கத்தையும் இணைத்துச் சொல்கிறார்.

**"அஞ்சாமை ,ஈகை , அறிவு ஊக்கம் இந்நான்கும்**

**எஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு." (குறள். 382)**

2. **ஒருவர் தன்னைத் தொடர்ந்து ஊக்கப்படுத்திக் கொள்ளுதல் ;**

**உடையர் எனப்படுவது ஊக்கம் அஃதில்லார்**

**உடையது உடையரோ மற்று (குறள். 591). என்ற குறள் மூலம்**

'ஊக்கம் உடையவரே எல்லாவற்றையும் உடையவர்; ஊக்கம் இல்லாதவர் வேறு எதை உடையவர் என்றாலும் உடையவர் ஆகமாட்டார் என்கிறார். ஒருவனின் உயர்வு அவன் மனதில் கொண்ட ஊக்கத்தின் அளவே என்பதை ,

**'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்**

**உள்ளத்து அனையது உயர்வு ' (குறள். 595) என்ற குறளில் சொல்கிறார்.**

3. **ஒருவர் தன்னுடைய உணர்வுநிலையைத் திறம்பட மேலாண்மை செய்தல்** அடக்கமுடைமை என்ற தனி அதிகாரத்தில்

**'அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**

**ஆரிருள் உய்த்து விடும்'** (குறள். 121)

**'செறிவறிந்துசீர்மைபயக்கும்அறிவறிந்து**

**ஆற்றின்அடங்கப்பெறின்'**( குறள். 123)

என்ற குறட்பாக்களில் அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி நடந்தால், அந்த அடக்கம் நல்லோரால் அறியப்பட்டு மேன்மை பயக்கும் என்றும்,

**ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து.**(குறள். 126 ) **தருகிறார்.**

4. **மற்றவர்களுடைய உணர்வுநிலையைப் புரிந்துகொண்டு அங்கீகரித்தல்** வள்ளுவம், 'தெரிந்து வினையாடல்' என்ற அதிகாரத்தில்,

**'அன்புஅறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்**

**நன்குடையான் கட்டேதெளிவு'** (குறள். 513).

என்ற குறளில் அன்பு, அறிவு, ஐயமில்லாமல் தெளியும் ஆற்றல், ஆசையின்மை ஆகிய இந்நான்கு பண்புகளையும் நிலையாகப் பெற்றிருப்பவரைத் தேர்வு செய்வதே நலம் என்றும்

**'அறிந்தாற்றிச் செய்கிற்பாற்கு அல்லால் வினைதான்**

**சிறந்தானென்று ஏவற்பாற் றன்று** (குறள். 515).

என்ற குறட்பாவில் செய்யும் வழிகளை அறிந்து, இடையூறுகளைத் தாங்கிச் செய்து முடிக்கவல்லவனை அல்லாமல், மற்றவனைச் சிறந்தவன் என்று கருதி ஒரு செயலைச் செய்யுமாறு ஏவக்கூடாது என்றும் கூறுகிறார். மேலும்,

**'இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல்** (குறள் 517)

இந்தத் தொழிலை இக்கருவியால் இன்னவன் முடிப்பான் என்று ஆராய்ந்த பிறகு அத்தொழிலை பொருத்தமாவனிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் வழி காட்டுகின்றார்.

**5. மற்றவர்களுடனான உறவைப்பேண வேண்டும்**

பெரியாரைத் துணைக்கோடல்/பெரியாரைப் பிழையாமை / என்ற அதிகாரங்களில் நூலறிவோடு நுண்ணறிவும் அமையப்பெற்ற ஆற்றல் கொண்டவரை - பெரியோர் என்று , திறமையானவர்களைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

**நிறைவுரை**

திருக்குறள் அன்றே காட்டிய வாழ்க்கைக் கோட்பாட்டை நவீன உணர்வுசார் நுண்ணறிவு கோட்பாடு இன்று பின்பற்றுகிறது. வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

இப்படி உளவியல் அடிஅப்படையில் உலகுக்கு வழி காட்டும் திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல் வள்ளுவம் .

**துணைநூற்பட்டியல்**

• பரிமேலழகர் உரை - திருக்குறள்- மணிவாசகர் பதிப்பகம், 5/7 சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை - 600108.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பட்டுக்கோட்டையார் பாடல்களில் சமூக உளவியல்

50

முனைவர் செ. சம்சு ஷஹிதா, உதவிப்பேராசிரியர்,

தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித மனம் உணர்வுகளுக்குக் கட்டுப்பட்டது. மனம் சொல்லும் தகவல்களை மூளை செயல்படுத்துவது இயல்பு. நம் புலனுக்கு அப்பாற்பட்ட ஒரு மாபெரும் சக்தி பேரறிவாக உருக்கொண்டு நமக்கு உதவத் தயாராக இருக்கிறது. பிரபஞ்ச சக்தியுடன் மனித சக்தி ஒன்றுபடும்போது நிறைவு கிடைக்கிறது. திருமூலரின் தன்னை அறிந்தால் தனக்கொரு கேடு இல்லை என்னும் வரிக்கு ஏற்ப தன்னை அறிந்து தனக்குள் இருக்கும் ஆத்மாவை அறிந்து நமக்குள் இருக்கும் சக்தியை அறிய முற்படும்போது மனம் மிகுந்த ஏற்றத்தைஅடையும்.

எவ்வித காரண காரியமுமின்றி நம் உள்ளுணர்வு பொதுநோக்கு சிந்தனையுடன் செயல்படுவது கூட மனவெழுச்சியின் ஒரு அங்கமாகும் . நமது அனுபவங்களின் முடிவுகளை ஆழ் மனம் தெரிவிக்கிறது. அந்த வகையில் பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் பொது நோக்கு சிந்தைனையுடன் உள்ளக்கிடக்கைகளை வெளிப்படுத்துகிறது. ஒரு தனி மனிதனின் உள்ளுணர்வு அன்பு என்ற மனித நேய சக்தி கொண்டதாக இருக்கும்போது பிறரால் ஈர்க்கப்படுகிறது என்பதற்கு பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் தரும் ஆழ்ந்த கருத்துக்கள் உளவியல் ரீதியான எண்ணங்களை கொண்டுள்ளது. அவரின் பாடல்வரிகளில் வெளிப்படும் கருத்துக்கள் நம் உள்ளுணர்வில் ஊடுருவிச்செல்கிறது.

“அங்கே யாருமில்லை சாட்சியாக
மனம்தான் கேள்வியாக
எனக்குள்ளே ஒருவன் நீதி தேவன்
கூண்டிலேற்றினான் குற்றவாளியாக”

மனிதன் பிறந்ததிலிருந்து வெளி உலக நிகழ்ச்சிகளால் பாதிக்கப்படுகிறான். அவற்றிற்கேற்ப அவன் அனுபவம் உருவாகிறது . அனுபவத்தில் இருந்து பல படிப்பினைகளைக் கற்றுக்கொண்டு சமுதாயத்திற்கு நலம் பயக்க முனைவதும் உளவியல் எண்ணம் என்பது மறுக்க முடியாத உண்மை.

**அறிமுகம்**

உளவியல் என்பது உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்தும் தன்மையை அடிப்படையாகக் கொண்டு புரிதலாகும் ஆரம்ப காலத்தில் மனவியல் வல்லுனர்கள் ஆய்வுகளில் ஆன்மாவை அடிப்படையாகக் கொண்டு இவ்வுளவியலை அணுகினர். காலவோட்டத்தில் இவ்வாய்வுகளின் நோக்கமாக மனம் சார்ந்த தாகவும், மன உணர்வுகளின் வெளிப்பாட்டின் அடிப்படையிலும் முடிவுகள் பதிவு செய்யப்பட்டன. சைக்கி (Psyche) லோகஸ் (Loges) என்னும் இரண்டு கிரேக்கச் சொற்களின் இணைப்புச் சொல்லே சைக்காலஜி என்ற சொல் உருவாகக் காரணமாக இருந்துள்ளது. இந்த சைக்காலஜி என்னும் உளவியல் பொருள்படும் சொல் வாழும் எல்லா உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் குறிப்பாக நம்மைப் பற்றி நாமே அறியும் தலைப்பட்ட தேடுதலாகும். நமது உணர்வுகளின் எண்ணங்கள் நாம் செய்யும் செயல்பாடுகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. உளவியல். 'இது நடத்தையைப்பற்றிய அறிவியல் நடத்தையின் வகைகளைப் பற்றிய ஆய்வு உளவியல்' என்கிறார் சிம்லர் என்னும் தலைசிறந்த உளவியல் அறிஞர்.

பின்னோக்கி நகரும் பிழை மலிந்து வாழும் மூட நம்பிக்கைகளில் மூழ்கிக் கிடக்கும் சமத்துவம் என்பது எட்டாக் கனியாகவும் சாதி சமய பூசல்கள் மலிந்து கிடக்கும் சமூகத்தில் அப்படியே வாழ்ந்து சகித்து மாய்ந்து போன மனிதர்கள் பலர். அவ்வாரன்றி பொதுமையை விரும்பி சமத்துவத்தை, அன்பை, இரக்கத்தை, கருணையை உலக மக்கள் மத்தியில் பேசியும் எழுதியும், கொடுமைக் கூடாரங்களைக் கொளுத்தியும், வறுமை இன்னல்களை துடைத்தெறிந்தும் வாழக் கற்று கொடுத்தவர்கள் நாடு தோறும் இருந்துள்ளனர். அப்படியான மனிதர்களை பொதுவுடைமைவாதிகள் என்றும் முற்போக்குச் சிந்தனையாளர்கள் என்றும் சீர்திருத்தச் செம்மல்கள் என்றும் போற்றப்பட்டனர்.

உலகப் புகழ் பெற்ற பாடகர் பால்ராப்சன் அமெரிக்கக் கம்யூனிஸ்ட்டு உறுப்பினர். உலகம் போற்றும் ஓவியர் பிகாஸோ பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட்டு உறுப்பினர் ஆவர். இவர் வரைந்ததுதான் சமாதானத்தின் அறிகுறியாக விவிலியத்தில் வரும் நோவாய் பேழையிலிருந்து வெள்ளப் பெருக்குத் தணிந்து விட்டதைக் காண அனுப்பப்பட்டு ஒரு சிறு பச்சிலையைக் கொத்திக் கொண்டு திரும்பி வந்து நற்செய்தி கூறும் படத்தை ஒரே இழுப்பில் வரைந்தவர். உலகப்புகழ் பெற்ற விஞ்ஞானிகளான கீயூரி தம்பதியரும் அவர்களது புதல்வியும் பிரெஞ்சு நாட்டு பொதுவுடைமைக் கட்சி உறுப்பினர்கள் ஆவர்.

நோபல் பரிசு பெற்ற சிலி நாட்டுக் கவிஞர் பாப்லோ நெருடாவும் பொதுவுடைமையாளராகவே வாழ்ந்து மறைந்தவர்கள். அப்படியான ஒரு இயக்கத்தை இசைத்த புலவர்தான் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரனார் அவர் சார்ந்த மண்ணையும் மனிதர்களையும் வளமையையும் ஏற்றங்களையும் தாழ்வையும் உழைப்பையும் உயர்வையும் பாடிப்பாடி உள்ளக்கிடக்கையை, உளம் சார்ந்த ஆசைகளை மண் வாழும் மனிதர்களெல்லாம் உணரப்பாடியவர்.

**'The dead yesterday the born tomorrow**

**why fret about today be sweet'**

என்று இன்றைய நாளைக் கொண்டாடும் மனிதர்களில் இனிவரும் காலங்களிலேனும் சமூகம் சீர்படப் பாடிய சிந்தனைக் கவிஞன் பட்டுக்கோட்டையார்.

**தமிழர் உளவியல்:**

உயிரினங்களின் அறிவு நடத்தையைக் கீழ்வரும் தொல்காப்பிய நூற்பா உடல் உறுப்புகளின் வழி கணக்கிட்டு அறிவை உளவியல் பாங்கோடு சொல்கிறது.

இரண்டு அறிவதுவே அதனொடு நாவே

**மூன்று அறிவதுவே அவற்றொடு மூக்கே**
**நான்கு அறிவதுவே அவற்றொடு கண்ணே**
**ஐந்து அறிவதுவே அவற்றொடு செவியே**
**ஆறு அறிவதுவே அவற்றொடு மனனே**
**நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத்தினரே.**

(தொல் - 1520)

காலந்தோறும் தமிழ்க்கவிஞர்கள் சூழலைச் சரிபடுத்தவும் சமூகத் தேவைகளை உணர்த்தியும் பாடியுள்ளனர். சாதிகளை உணர்ந்த அவ்வையார் சாதியிரண்டொழிய வேறில்லை என்றார். வள்ளுவன் பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்றான். பாரதி சாதிகள் இல்லையடி பாப்பா என்றான். இதெல்லாம் கவிஞர்களின் உள்ளக் கிடக்கை. சமூகத்தின் மேல் அவர்களுக்கான உளவியல் பார்வை. அவர்கள் சமூகம் சார்ந்த நெறிகளை உணர்த்துவது தன் கடமையைக் கொண்டவர்கள். இது ஒரு வகை சமூக உளவியல் எனக் கொள்ளலாம்.

**பட்டுக்கோட்டையாரின் பொதுமை உளவியல் :**

பொதுமை என்பதை கணியன் பூங்குன்றனார் யாதும் ஊரே யாவரும் கேளீர் எனும் சங்கப்பாடல் வழியே தமிழரை மட்டுமல்ல உலக மாந்தர் இனத்தையே திரும்பத்திரும்பச் சொல்ல வைத்தவர். அந்த இன உணர்வை பாடிய கலஞர்களில் பாரதி, பாவேந்தன் கவிஞர் வரிசையில் பட்டுக்கோட்டையாரும் ஒருவர்.

**புது வாழ்வும் ஒற்றுமையும் புனிதத் தொண்டும்**
**பொலிகவென வணங்கு கின்றோம்**

**(ஜனசக்தி1958)**

என்று பாடுகிறார். மேலும்,

**" உழைப்பை மதித்து பலனைக் கொடுத்து**
**உலகில் போரைத் தடுத்திடு வோம்**
**அண்ணன் தம்பியாய் அனைவரும் வாழ்ந்து**
**அருள் விளக்கேற்றிடுவோம்"**
**இரும்புத்திரை படத்திற்காக எழுதிய பாடலாகும்.**

**கடவுள் கொள்கையில் உளப்பாங்கு :**

சாதிச் சண்டைகளும் சமயப் பூசல்களும் மலிந்துக் கிடந்த தமிழகத்தில் தந்தை பெரியாரின் இறைமறுப்பு கொள்கையையும் சாதிய மறுப்பு சிந்தனைகளையும் பாட்டெழுதி பெருமை சேர்த்த கவிஞர்களில் பாவேந்தருக்கு அடுத்த நிலையில் பட்டுக்கோட்டையார் தனியிடம் பெறுகிறார்.

**'செம்பும் கல்லும் தெய்வமன்று**
**நம்புவோர்கள் பித்தரென்று**
**சித்தர்கள் உரைத்த மொழி மெய்தானோ?**
**சிற்பிகள் செதுக்கி வைத்த**
**சித்திரச் சிலைகளுக்குள்**
**தேவி வந்திருப்பது பொய்தானோ?'**

**(ஆளுக்கொரு நீதி திரைப்படம்)**

எனும் பாடல்களின் வழியே தெய்வம் குடியிருக்கும் இடம் சிலை மட்டுமல்ல செய்யும் தொழிலும் என்று பாடியவர் பட்டுக்கோட்டையார்.

**தமிழ் மண்ணின் இயற்கை உளம் :**

எங்கு பாடினாலும் எச்சூழலிலும் பாடினாலும் தமிழ் மண்ணின் இயற்கை வளத்தைப் பாடாமல் எந்தக் கவிஞரும் இருந்ததில்லை பழம்புலவர் ,

**தண்டை மயில்கள் ஆட**
**தாமரை விளக்கம் தாங்க**
**கொண்டல்கள் முழவின் ரங்க**
**குவளைக் கண்விழித்து நோக்க**

என்று பாடியதை போன்றும், இயற்கையின் அழகை வோர்ட்ஸ்வொர்த் பாடியதை போன்றும் பட்டுக்கோட்டையார் இயற்கையை ரசித்துப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**'பாக்கு மரத்தில் பாளை சிரிக்கும் -பச்சை**
**பட்டாடைப் போல் உதவி இலை விரிக்கும்**
**தேக்கு மரங்கள் விண்ணைப் பிடிக்கும் -இன்னும்**
**சித்திரைச் சோலையெல்லாம் கண்ணைப் பறிக்கும்**
**அழகுக் குயில்கள் வந்து பாடிக்கிடும் தென்னையை**
**மிளகுக் கொடி வந்து மூடிக்கிடும்**
**சிலுசிலுக்கும் அருவி ஓடிக்கிடும் மயில்**
**சிறகை விரிச்சிக்கிட்டு ஆடிக்கிடும்'**

என்ற பாடல் திருமணம் எனும் திரைப்படத்தில் இடம்பெற்றுள்ளது. சொற்களால் இயற்கையின் அழகைப் படம்பிடித்துக் காட்டியவர். பேசும் ஓவியம் கவிதை என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டு மேலும் கலையரசி எனும் திரைப்படத்திற்கு இவர் எழுதிய பாடல்

**'மூனு பக்கமும் கடல் தாலாட்டுது -தன்**
**மானமுள்ள மக்களை பாராட்டுது'**

தமிழகம் முக்கடலால் சூழப்பட்டுள்ளது என்பதும் தன்மானமுள்ள மக்களை அது தாலாட்டுகிறது என்பதும் புதுமையான இயற்கை உளக் கோட்பாடு ஆகும்.

**சமகால படைப்பாளிகளின் மீது அன்புள்ளம்** :

திரையுலகில் ஒன்பது ஆண்டுகள் எழுதிய கவிஞன் பட்டுக்கோட்டையார். அவர் காலத்தில் சம காலத்தில் அதிக பாடல்கள் எழுதியவர் கண்ணதாசன். அவரது மறைவு பட்டுக்கோட்டையாரை மிகவும் பாதித்தது. அதன் வெளிப்பாடாக வந்த கவிதை,

**'தங்க மகன் போன பின்னர்**
**தமிழுக்கு கதியில்லையே'**

என்று குறிப்பிட்டதும்

**'வாழும் தமிழ் நாடும்**
**வளர் தமிழும் கலைஞர்களும்**
**வாழுகின்ற காலம் வரை**
**வாழ்ந்துவரும் நின்பெயரே'**

என்று பாடியுள்ளது பெருமைக்குரியதாகும்.

பாட்டுக் கோட்டைக்கோட்யார் பாட்டாளிக் கூட்டத்தை ஏட்டில் எழுதிய பட்டுக்கோட்டையாரைப் புகழ்ந்து ஜெயகாந்தன் அவர்கள், 'பாட்டெழுதி நமைக்கவர்ந்த பாட்டாளி

**நாட்டிலுள்ள நல்லவரின் கூட்டாளி'** என்றும்

**'காலம் கவிஞனைக் கொன்று விடும் ஆனால்**

கவிதை காலத்தை வென்று விடும்' என்று ஜெயகாந்தன் பாடியது ஆழமான உண்மை மட்டுமின்றி உள்ளத்தின் தன்மையையும் எடுத்துரைக்கிறது.

**நிறைவுரை:**

செங்கப்படுத்தான்காடு கிராமத்திலிருந்து சென்னை மாநகரம் வந்து இருந்து மறைந்தவரல்ல கவிஞன் பட்டுக்கோட்டையார். கண் விரித்து விண்வரைப்பார்த்து தன் விசாலப் பார்வையால் மாந்தர் இனத்தை அணைத்துக் கொண்ட மாமனிதநேயக் கவிஞர்.

**'பாரடா மானுடப் பரப்பை**

**உன்னுடன் பிறந்த பட்டாளம்'**

என்ற பாவேந்தன் வரிகள் போலும்

**'கூட்டி மானுடச் சாதியை ஒன்றைக் கொண்டு**

**வையம் முழுவதும் பயனுற**

என்னும் பாரதியின் வரிகளைப் போலவும் வாழ்வை வாழ்க்கையின்' இலட்சியங்களை உலக மானுடத்திற்காக எழுதி வாழ்ந்து மறைந்தவர் பட்டுக்கோட்டையார்.

தனிமனிதன் இச்சமூகத்தில் அவனுக்கான புறத்தொடர்புகளும், உளக் கிடக்கைகளையும், அவன் சக மனிதர்களோடும் இன்ன பிற உயிர்களோடும் உள்ளார்ந்த மன உணர்வின் வழி கொண்டுள்ள தொடர்புகள் கூட ஒரு வகை உளவியல் என்றே கருதப்படுகிறது. அந்த வகையில் பட்டுக்கோட்டையாரின்

விருப்பங்களும் சமூகம் சார்ந்த அவருடைய கனவுகளும் உளவியலே. அதன் அடிப்படையில் இக்கட்டுரை பட்டுக்கோட்டையாரின் உணர்வெழுச்சிகளை விளக்கியுரைக்கிறது.

**துணை நூற்பட்டியல்**


1. **தொல்காப்பியம் - இளம்பூரணனார் உரை - சாரதா பதிப்பகம் சென்னை 14**
2. **டான் பப்ளிகேஷன், திருநெல்வேலி**
3. **பாரதியார் கவிதைகள் - வானதி பதிப்பகம், 13 தீனதயாளு தெரு, தி நகர், சென்னை.**
4. **பாரதி தாசன் கவிதைகள் - கங்கை புத்தக நிலையம், 13 தீனதயாளு தெரு, தி நகர், சென்னை.**
5. **ஜன சக்தி நாளிதழ்**

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

51

# தமிழ் இலக்கியங்களில் உளவியல் கூறுகள்

**முனைவர் நா.சிவாஜிகபிலன், இணைப்பேராசிரியர், தலைவர்,**

**தமிழ்த்துறை,அ.வீரையா வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி**

**பூண்டி, தஞ்சாவூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

விலங்கிலிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டக் கூடியது மனம் என்கிறது உளவியல். மனித மனதை ஆறாவது அறிவு எனும் பொருளில் "ஆறறிவதுவே அவற்றொடு மனனே" (தொல். பொருள். இளம்) என்றும் தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் எடுத்துரைப்பது சிறப்பாம்.திருவள்ளுவர், கன்பூசியசுக்கு முன்பே மனநலம் குறித்துச் சிந்தித்த அறிஞராகத் திகழ்கிறார். மனிதனின் வளர்ச்சி அறிவை அடிப்படையாக கொண்டதாகும். நல்லறிவு உடையார் என்பது மனத்தில் சிறந்து உயர்ந்தாரைக் குறிக்கும் இவற்றைப் பற்றி ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**முன்னுரை**

உளவு + இயல் என்ற பொருள் தருவதால் உளவியல் என்பது சரியான சொல் ஆகும். இதனை 'மனவியல்' என்றும் கூறுவர். மனோத்தத்துவம்,உளவியல் எனத் தமிழிலும், சைக்காலஜி (Psychology) என ஆங்கிலமொழியிலும் கூறப்படும். முதன்முதலில் உளவியலை ஆன்மாவைப் பற்றிய அறிவியல் என்று வரையறுத்தனர். சைக்கலாஜி எனும் சொல் 'சைக்கி' 'லோஜஸ்' எனும் கிரேக்கச் சொற்களை மூலமாகக் கொண்டது. 'சைக்கி' என்றால் ஆன்மா அல்லது ஆவி என்று பொருள். 'லோஜஸ்' என்றால் அறிவுத்துறை அல்லது ஒருவனுடைய செயல் அறிவியல் அல்லது என்பது பொருள். இவ்விரு கிரேக்கச் சொற்களையும் இணைத்து ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி உளவியலை 'மனித ஆன்மா. அல்லது உள்ளத்தின் தன்மை, செயல், நிகழ்ச்சி பற்றிய ஓர் அறிவியல்' என்று வரையறுக்கிறது

**மனநலம்**

**மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்**
**எல்லாப் புகழும் தரும்** (457)

**மனநலம் நன்குடையா ராயினும் சான்றோர்க்**
**இனநலம் ஏமாப்புடைத்து** (458)

**மனநலத் தினாகும் மறுமை மற்றஃதும்**
**இனநலத்தி னேமாப் புடைத்து** (459)

என்று மனநலத்தைச் சிறப்பிக்கிறார் வள்ளுவர். மனநலம் இழந்த மனிதனை யாரும் மனிதனாக மதிப்பதில்லை. மனிதனுக்கு மனமே சிறப்புடையது. இதன் சிறப்பு கருதியே முன்னோர்கள் மனம், வாக்கு, காரியம் என்பனவற்றுள் மனத்தை முதன்மையாக வைத்துச் சிறப்பித்தனர்.

மேலும், வள்ளுவர் மனநலத்தின் மேன்மை குறித்துச் சிந்திக்கிறார். மனநலம் கெடக் காரணமாக இருப்பது மனத்தில் ஏற்படும் தீய சிந்தனைகள் ஆகும். அதனாலேயே, மனத்துக்கண் மாசிலன் ஆதல்(34) என்றார். மனத்துக்கண் மாசிலன் என்றால் மனத்துள்ள மாசில்லாத முழுமையான செயல்பாடு என்பதாகும். மனம் மாசு அடைவதற்கான மூலங்கள் எவையெனச் சிந்திக்கிறார் வள்ளுவர். களவு, காதல், காமம், மோகம், பொய், மது, தீய சிந்தனை ஆகியவற்றின் அடிப்படையிலேயே ஒருவனது மனம் கெடுகிறது. காதலும், காமமும் உணர்ச்சியின் வயப்பட்டது என்பார் பிராய்டு இவ்விரண்டையும் அடிப்படையாகக் கொண்டே மோகம் பிறக்கும். களவு, பொய், மது போன்றன தீய நடத்தைகளாகும்.

வள்ளுவர் உளவியல் அடிப்படையில் மனத்தின் கண்வந்து பற்றுகின்ற நான்கு தீய பண்புகளின் அடிப்படையில் தீய செயல்கள் அமையும் என்கிறார். அவை களங்க எண்ணங்கள் அல்லது பொறாமை, பேராசை, பெருஞ்சினம், கடுஞ்சொல் என்பதாகும்.

அழுக்காறு. அவா, வெகுளி, இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் (35) எனும் குறள் வழி வள்ளுவர் விளக்கியுள்ளார்.

அழுக்காறு என்பது பிறரது வளமான வாழ்வு கண்டு பொறாமைத் தன்மை நெஞ்சம் பொறுக்காமல் மனஎரிச்சல் அடையும் எனும் பொருள்படும்படியே வள்ளுவர் கூறியிருப்பது சிந்திக்கத் தக்கதாகும். பிறிதொரு குறளில் வள்ளுவர் 'செவ்விய நெஞ்சம் (169) என மனச் செந்தன்மையைக் கூறுகிறார்.

**மோகம்**

திருவள்ளுவரின் திருக்குறளில் இன்பத்துப்பால் எனும் அதிகாரம் காமத்துப்பால் என்றழைக்கப்பட்டதாகும். இவ்வதிகாரம் முழுமையும் காமமும், காதலும், கற்பும், களவும் விரவிக் கிடப்பதைக் காணலாம். காமத்தின் அடிப்படையில் ஏற்படும் மோகத்தை உளவியல் பலவகையாகக் கூறும். அவை;

1.நோக்கு மோகம் அல்லது பார்வை மோகம் (Voyerism)

2.காட்டி மோகம் (Exhibitionism)

3. தன் மோகம் (Narcissism)

4.மாற்றுடுப்பு மோகம் (Transvestism)

5.மாற்றுப் பால் மோகம் (Trans Sexualism)

என்று பலவகையான மோகங்களைக் கூறுகிறது. இவ்வகையான மோகங்களுக்குக் காமமே அடிப்படையாக உள்ளது. ஒருவனுடைய அடி மனத்தில் (Id) அடங்கிக் கிடக்கும் உறுத்தல்களில் "Libido' எனப்படும் காம உணர்ச்சியும் ஒன்றாக உள்ளது.

"காம உந்தலுக்கு வெளிப்பாடு வேண்டும். அதற்கு இடம் கொடாமல் செயற்கையான அடக்கு முறையை மேற்கொண்டால் நரம்பு மண்டலங்கள் கெட்டு, நரம்புக் கோளாறு முதலிய நோய்கள் வரும்" என்று பிராய்டு கூறுகிறார்.

உலகிலுள்ள எல்லா உயிரினங்களுக்கும் காம உணர்ச்சி பொதுவானது. தொல்காப்பியர், எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும் (தொல்.1169) எனக் கூறுவார்.

முத்தொள்ளாயிரத்தில் பாண்டியன் பண்பு நலம் வாய்ந்தவன். இவனது கூரியவேல், வண்டுகள் மொய்க்கும் மலர்மாலை, தாவும் குதிரை இவற்றைக் கொண்டே பாண்டியன், பண்பின் இருப்பிடம் என்பதனை அறியலாம். 'கருமையும், நறுமணமும் உள்ள குவளைமலர்,புதுமணம் பொருந்திய குளத்தில் நாள்தோறும் நீரில் நிலைத்து தன் தண்டாகிய காலால் நின்று புரிந்த தவத்தின் பயன்' எனும் பொருளமைந்த பாடல்,

கார்நறு நீலம் கடிக்கயத்து வைகலும்
நீர்நிலைநின்ற தவம்கொலோ கூர்நுனைவேல் இதுவாகும். இந்நூலுள் உருவெளித்தோற்றம் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

சிலவேளைகளில் நாம், ஏதோ ஒன்று நம் தோலின்மீது ஊர்வதுபோல உணர்வோம். ஆனால், அப்போது உண்மையில் எதுவுமிருக்காது. யாரோ கூப்பிடுகிறார் என்று பதில் தருவோம். ஆனால் எவரும் நம்மைக் கூப்பிட்டிருக்க மாட்டார்கள். இவையெல்லாம் ஒரு வகை வினோதமான தவறான புலன்காட்சிகள். இவை புறவயமான உண்மை நிலையைச் சுட்டி நிற்பன அல்ல. எனவே, திரிபுக்காட்சிகளும் இல்பொருட் காட்சிகளும் , உருவெளிக்காட்சிகளும் உயிரியின் ஒரு சில உடலியல், உளவியல் சார்ந்த நிலைகள் என்று கொள்ளலாம்.

**உருவெளித்தோற்றம்**

உள்ளத்தில் ஏற்பட்ட இறுக்கத்தைக் குறைக்கப் பல வழிகள் உள்ளன. அவற்றுள் ஏதேனும் ஒரு வழியை உள்ளம் கண்டு கொண்டால் ஏற்றுக் கொள்கிறது. பின்னர் உள்ளுணர்ச்சிக்கு இறுக்கம் ஏற்படுகின்றபோது முன்னர் ஏற்பட்ட நிறைவை அனுபவமாகக் கொண்டு உள்ளம் செயல்படுகிறது. இவ்வகையான செயற்பாடுகளின்போது கிட்டாத ஒன்றை உருவெளித் தோற்றத்தின் வழியே நினைத்துப் பார்க்கிறது.

முத்தொள்ளாயிரத்தில், சோழநாட்டு உழவர்கள் நெற்களத்தில் வைக்கோற் போரில், ஏறிநின்று "நாவலோ ஓ" என்று அழைக்கும் ஓசையானது நலங்கிள்ளி தம்பகைவரைக் கொல்ல யானையின் மீது அமர்ந்து யமன் கூவி அழைப்பதைப் போலக் கூவினான்" என்கிறது. அப்பாடல்,

காவலன்தன் கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே(பாடல்.43) என்பதாகும்.

**சந்தேகம் என்னும் மனச்சிதைவு** **(Paranoid )**

உளவியல் கூறுகளுள் சந்தேகம் என்பது மனச்சிதைவு சார்ந்த ஒரு நோயாக உள்ளது. இவ்வகையான நோய் பெரும்பாலும் நடுத்தர வயதினருக்குத் தோன்றும் என்பர். இவர்களிடம் தவறான நம்பிக்கைகள் மேலோங்கி நிற்கும். அவை பொருத்தமற்றும், உண்மைக்குப் புறம்பாகவும் இருக்கும். இவர்களிடம் எதிர்ப்பு மனப்பான்மை இருக்கும். சந்தேக நோயுடையோர் பெரும்பாலும் திருமணமானவர்களே ஆவர். இதன் முதல் அறிகுறி பிறர்மேல் குற்றம் காண்பதாகும். மன ஆய்வுக் கொள்கைப்படி ஆழ்மனதில் அடக்கி வைக்கப்பட்ட பாலினக் காம எண்ணங்களே தவறான சந்தேக எண்ணங்களுக்கும் பிறர்மீது பழி சுமத்துதலுக்கும் காரணமாக அமைகின்றன என்பர் உளவியல் அறிஞர்.

சிலப்பதிகாரத்தில் கோவலன் சந்தேகம் எனும் மனச்சிதைவு சார்ந்த நோயாளனாக இருக்கிறான். கோவலன் மாதவிபிரிவுக்குச் காரணமான, கானல் வரி சந்தேகம் சார்ந்து அமைகின்றது. கோவலன் "நான் கானல் வரிபாட, அவள் அப்படிப்பாடாமல் என்னையொழித்து வேறொன்றின் மேல் மனம் வைத்து, வஞ்சனையுடன் கூடிய பொய்கள் பலவற்றைக் கூட்டும் மாயத்தான ஆகிப் பாடினாள்" என்று எண்ணி, "யாழிசைமேல் வைத்துத் தள ஊழ்வினை வந்து கோபித்தாகலின் உலவாநாளிற் பொருந்திய திங்கள் போலும் முகத்தினை உடைய மாதவியை அகத்திட்ட கை நெகிழ்ந்தவனாய் பொழுது கழிந்ததால் இங்கிருந்து எழுவேம்' என்று மாதவியைப் பிரிந்து சென்றான் (கானல் வரி பாடல்.52). எனினும் அவனது சந்தேகம் சார்ந்த மனநிலையை ஒருவாறு அறியலாம்.

மேலும், வேனிற்காதையில், வயந்தமாலையிடம், "நான் கண்ணகியைப் பிரிந்துறையும் பொழுதில் தான் பிரிவாற்றாது வருந்தினளாகப் பாவித்து எனது உறவினர்களுக்குத் தனது மிகுந்த துயரத்தைத் தேர்ந்து தேர்ந்து உரைக்கின்றாளாக நடித்த நடிப்பும், அதுவன்றியும் வண்டுகளால் அலர்த்தப்படும் பூங்கோதையினை உடையாள் மாலைப்பொழுதிலே மயங்கிக் காணப்பட்ட உறவினர்கள் யாவர்க்கும் தன்பிரிவுத் துன்பத்தைச் சொல்லி, நடித்த நடிப்பும், பலகாலும் அவர் முன்பு தான் மயங்கிய மயக்கத்தை அவர் எடுத்துத் தீர்த்த எடுத்துக்கோள் வரியென்னும் நடிப்பும் வயந்தமாலையே! நாடகமகளேயாதலால் இங்ஙனம் நடித்த நடிப்புக்கள் அப்பைந்தொடிக்குப் பெருமையானவே என்றும் அவை இயல்பானதே என்றும் ஓலையை மறுத்தான்" (வேனிற்காதை 102-110) என்பதனால் மாதவியுடனான கோவலனது சந்தேகம் தெளிவாக விளங்குவதை அறியலாம்.

**குறிப்பு**

உளவியலில் குறிப்புத் தோன்றுமாறு நிகழ்வன, படைப்பாளனின் திறம் பற்றியதாம். படைப்பாளன் என்போன் அகமுகர் எனும் தன்மையாளன் ஆவான். அவன் படைப்பில் தோன்றும் குறிப்பானது உளவியல் நோக்கில் உவமிக்கப்படும் பொருளோடு வெளிப்படுத்தும் தன்மையதாம்.

**இந்திர விழாவெடுத்த காதையில்,**

கண்ணகி கருங்கணும், மாதவி செங்கணும் (பாடல்.236) எனும் தொடர் வந்துள்ளது. கோவலன் பிரிவினை எண்ணிய கண்ணகியின் கண்கள் கருமையானவை எனவும், மாதவிக்குச் செம்மையான கண்கள் எனவும் உவமிக்கப்படுகின்றன. அவரவர் தம் உள்ளத்திலுள்ள பிரிவுத் துன்பத்தைக் கற்பால் மறைத்து அகத்தே ஒளிக்கவும், அவை நீரைச் சொரிந்தன. கண்ணகிக்கு இடப்பக்கக் கண்ணும் மாதவிக்கு வலப்பக்கக் கண்ணும் துடித்தன. கண் இடந்துடிப்பது நன்மை, வலக் கண் துடிப்பது தீமை. கண்ணகிக்குக் கோவலனுடனான கூட்டம் நிகழ இடக்கண்ணும், மாதவிக்குப் பிரிவு உண்மை என்பதால் வலக் கண்ணும் துடித்தன என்பதனைக் குறிப்பால் உணர்த்துவதை அறியலாம். இதனை,

**கள்ளுக நடுங்குங் கழுநீர் போலக் கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்**

**உண்ணிறை கரந்தகத் தொளித்துநீ ருகுத்தன எண்ணுமுறை இடத்தினும் வலத்தினும் துடித்தன**

**(பாடல்.236-239)**

**எனும் பாடல் வழி அறியலாம். மேலும்,**

**அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணிப்**
**பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி**
**வெற்றிவேல் தடக்கைக் கொற்றவையல்லள்**
**அறுவர்க் கிளைய நங்கை இறைவனை**
**ஆடல் கண்டருளிய அணங்கு சூருடைக்**
**கானகம் உகந்த காளிதாருகன்**
**பேருரங் கிழித்த பெண்ணும் அல்லள் 1**
**செற்றனள் போலும், செயிர்த்தனள் போலும்** (**வழக்குரை காதை**, 3-4) **எனும் பாடலின் வழி**,

வெட்டுவாயினின்றும் செறிந்தெழுந்து ஒழுகும் குருதி நீங்காத பசிய துண்டமாகிய, பிடரொடு கூடிய மயிருடன் தலையாகிய பீடத்தின் கண் ஏறிநின்ற இளங்கொடியாகிய வென்றி தரும் வேலினைப் பெரிய கையின் கண் தாங்கிய கொற்றவை அல்லள், கன்னியர் எழுவருள் இளையவளாகிய பிடாரியும், இறைவனை நடனமாடச் செய்த பத்ரகாளியும், அச்சம் தரும் காட்டை உடைய காளியும், தாருகனுடைய மார்பினைப் பிளந்த துர்க்கை ஆகிய அவர்களும் அல்லள். தம் உள்ளத்துக் கனவு கொண்டாள் போலவும், மிக்க சினமுற்றாள் போலவும்" எனக் கண்ணகி நிலை வருணிக்கப்படுகிறது. இது குறிப்பு ஆகும்.

**அறிவார்ந்த விளக்கம் (Rationalization)**

உள்ளத்தின் இயல்பு தோல்விகளையும் போராட்டங் களையும் கவலைகளையும் தணித்துக் கொள்வதும் அவற்றின் உண்மையான காரணங்களைத் தவிர்த்துவிட்டு வேறு ஏற்கத் தகுந்த காரணங்களை உருவாக்கிக் கொள்ளுதலும் ஆகும். இவ் உளநலத் தற்காப்பு இயங்கு முறையே அறிவார்ந்த விளக்கமாகும். உளவியலார் இதனை,"ஏற்க இயலாத நனவிலி மனத்தின் விருப்பங்கள் அல்லது அவ்விருப்பங்களைப் பாதுகாக்கும் போக்கில் நேர்ந்த அறிவுக்குப் பொருந்தாத நடத்தைக்கு நனவிலி மனத்தின் ஊக்கத்தாலும் தன்னியல்பாலும் காரணகாரியத்துடன் நம்பத் தகுந்த விளக்கங்களைக் கூறுதல்" என்றெல்லாம் வரையறை

செய்வர். சிலம்பில் அருக தெய்வம் பற்றிக் கவுந்தியடிகள் கூறுவன அறிவார்ந்த விளக்கம் ஆகும்.

தெய்வம்

அறிவன் - எல்லாவற்றையும் அறியும் அறிவுடையோன் அறவோன் - அறம் செய்தலைத் தொழிலாகவுடையோன் அறிவு வரம்பு இழந்தோன் - மக்கள் அறிவின் எல்லையைக் கடந்து நின்றோன் (மக்கள் தம் அறிவினால் அறிய முடியாதவன்) செல்லும் ஆற்றலுடையன. மனமானது அறிவு, உணர்வு ஆகிய இருவழிகளில் செயல்படுவதாலேயே மனித இனம் சிறப்புறுகிறது.

**முடிவுரை**

தமிழ் இலக்கியங்களின் ஒவ்வொரு கூறுகளும் எவ்வாறான பொருண்மைகளில் அமைந்திருந்தாலும் அப்பொருண்மைகளில் எல்லாம் புலவனால் செலுத்தப்பட்ட மனத்தின் அடிப்படையிலான உளவியல் தன்மைகளௌம் பொருண்மைகளும் கொள்கைகளும் இடம் பெற்றிருப்பதைத் திறனாய்வாளர்களால் ஆராய்ந்து உரைக்க இயலும்.அவ்வாறான திறனாய்வுக்கு ஏற்ற களமாகத் தமிழ் இலக்கியங்கள் பரந்துபட்டுக் கிடக்கின்றன.

**துணைநூற் பட்டியல்**

1. சிலப்பதிகாரம் - ந.மு.வேங்கடசாமி நாட்டார் உரை - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை-1
2. திருக்குறள் – மு.வ.உரை , பாரி நிலையம், ப்ராட்வே, சென்னை-1
3. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை-1
4. முத்தொள்ளாயிரம் - டாக்டர்செ.உலகநாதன் - பாரிநிலையம், ப்ராட்வே, சென்னை-

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

52

# வெள்ளிவீதியார் பாடல்களில் உளவியல் சிந்தனைகள்

**முனைவர் கோ. சுகன்யா, உதவிப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்(பொ.)**
**தமிழ்துறை (சுயநிதிப் பிரிவு),**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர்.**

**ஆய்வுச் சுருக்கம் :**

"வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி" என்பார் மகாகவி பாரதியார். அத்தகைய வளம் நிரம்பியது தமிழ் மொழி. மொழி குறித்துப் பேசும் போதெல்லாம் அது எந்த மொழியாக இருப்பினும் அந்த மொழியின் இலக்கியங்கள் குறித்து நாம் பேச முற்படுகிறோம். ஒரு வகையில் இலக்கியம் குறித்துப் பேசாமல் மொழியை மட்டும் முன்வைத்துப் பேசப்படும் எந்த ஒரு உரையாடலும் முழுமை அடைய முடியாது என்று கருதுகின்றேன். இலக்கியமென்பது அத்தனை அவசியமானது. பள்ளிப் பருவங்கள் முதல் மொழிப்பாட ஆசிரியர்கள் இலக்கியத்தின் சிறப்பையும், மேன்மையையும் பற்றிச் சொல்லிக்கொண்டே இருக்கின்றனர். மொழிப் பாடத்துக்கான பாடத்திட்டங்களில் கூட இலக்கியத்திற்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தைப் பார்த்து அதன் அவசியத்தை புரிந்து கொள்ளலாம். இலக்கியத்தின் வழியாகவே ஒரு மொழியை நாம் செம்மையாகக் கற்கவும், புரிந்து கொள்ளவும் முடிகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு மொழியில் படைக்கப்படும் இலக்கியத்தின் மிக அடிப்படையான நோக்கமே அந்த மக்களின், அந்த இனத்தின், வாழ்க்கைக் கூறுகளை வாழ்வியலைப் பதிவு செய்வதாகும். 2000 ஆண்டு பழமையான இலக்கியங்களே நாம் அந்த காலத்தோடு தொடர்பு கொள்ளக் கூடிய ஒரே நுழைவாயில். அதன் வழியாக நுழைந்து நாம் இல்லாத அந்தக் காலத்தில் வாழ்ந்த மனிதர்களின் வாழ்க்கையை நாம் படித்துக் கொள்ள முடிகிறது.

உளவியல் துறை இன்று அறிவியல் உலகில் ஒரு தனித் துறையாக வளர்ந்து வருகின்ற துறை மட்டுமல்லாது, பிற ஆய்வுத் துறைகளோடு இணைந்து ஆய்வு செய்யும் போக்கு உளவியல் துறையில் காணப்படுகிறது. அவ்வகையில் மனித மனம் பற்றிய சிந்தனைகளை அறிவியல் அடிப்படையில் நோக்கி ஆராயும் துறை உளவியல் துறை. இந்தத் துறையை உருவாக்கியவர் சிக்மண்ட் ஃப்ராய்டு என்பவர் ஆவார். இலக்கியப் படைப்புகளை ஆராய்வதற்கு உளப்பகுப்பாய்வு முறைகளைப் பயன்படுத்தும் விதத்தை சிக்மண்ட் ஃப்ராய்டு எடுத்துக்காட்டினார். இலக்கியமும் உளவியலும் ஒன்றையொன்று நெருங்கி வந்துள்ள நிலையிலும், தமிழில் இலக்கியப் படைப்புகளை உளவியல் அணுகுமுறையில் மதிப்பீடு செய்யும் ஆய்வுகள் குறைவாகவே காணப்படுகின்றன. அண்மைக் காலத்தில் ஓரளவு இத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கட்டுரைகளாகவும், முனைவர் பட்ட ஆய்வேடுகளாகவும் வெளிவந்திருக்கின்றன. என்றபோதிலும் உளவியலில் பல்வேறு சிந்தனைகளும் அணுகுமுறைகளும் காலத்திற்கு காலம்

தோன்றியுள்ளன. இன்று அறிவுத் துறைகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக எந்த ஒரு துறையும் பிறிதின் நிழல் படாமல் இல்லை என்று சொல்லக்கூடியதாக ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. அந்த வகையில் இலக்கியப் படைப்புகளை உளவியல் அணுகுமுறையில் ஆய்வு செய்ய வேண்டும் என்ற அடிப்படையில் பிறந்ததுதான் இந்தக் கட்டுரை. மனித வாழ்வின் ஒவ்வொரு செயல்பாடுகளிலும் உளவியலின் செல்வாக்கு மிகுந்துள்ளது. அந்த வகையில் குறுந்தொகை வெள்ளிவீதியாரின் பாடல்களில் உள்ள உளவியல் சிந்தனைகளைப் பட்டியலிடுகிறது இந்தக் கட்டுரை.

**கடவுச்சொற்கள்** : இலக்கியம், உளவியல் சிந்தனைகள், வெள்ளிவீதியார், பெண்ணிய உளவியல், இடிக்கும் கேளீர், பசுமீன் சொரிந்த மண்டை, மாலைக்காலம்

**முன்னுரை** :

இலக்கியமும் உளவியலும் மிக நெருங்கிய தொடர்புடையவை. சங்க இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதால் அதனுள் உளவியல் கூறுகளை அதிக அளவில் காண முடிகிறது. சங்க இலக்கியத்திற்குப் பிறிதொரு பெயர் சூட்டச் சொன்னால், தயங்காமல் 'உளவியல் இலக்கியம்' என்று குறிப்பிடலாம் எனத் தமிழ்ச் செம்மல் தமிழண்ணல் கூறுவார். அகத்திணைப்பாடல்கள் நூற்றுக்கு நூறு பாடல்கள் உளவியல் பற்றியனவே என்கிறார். வாழ்வில் எதிர்கொண்ட சிக்கல்களில் உருவான ஒரு மன நிலையின் எதிரொலியாகவே அகத்திணைப் பாடல்களும், புறத்திணைப் பாடல்களும் அமைகின்றன. அகத்திணைப் பாடல்களின் பாடு பொருள் ஏதேனுமொரு மனநிலையினையோ அல்லது அந்த மனநிலை விளைவிற்குரிய சூழலையோ பாடு பொருளாகக் கொண்டு விளங்குகின்றன எனலாம். செய்யுள்களில் அகமாந்தர்களின் மன உணர்வுகள் கூறுவோரின் மனநிலைக்கு ஏற்ப, பின்புலங்களின் தன்மைக்கேற்ப, கூறுவோர் உள்ளுறை, இறைச்சிகளைப் பயன்படுத்தி குறிப்பாகவோ, உவமைகளைப் பயன்படுத்தி விளக்கமாகவோ, நேர்முகச் சொற்களைப் பயன்படுத்தி வெளிப்படையாகவோ தம் மன உணர்வினை வெளிப்படுத்துகின்றனர்.

**வெள்ளிவீதியார்** :

சங்க இலக்கியப் பாடல்களின் படைப்பாக்கத்தில் பெண்கள் குறிப்பிடத்தக்க இடத்தை வகித்து உள்ளனர். சங்ககாலப் பெண்களில் அகப் பாடல்களை மட்டும் பாடியவர் என்ற பெருமைக்கும், பிற பெண்பாற் புலவர்களாலும் அறியப் பெற்றவர் என்ற பெருமைக்கும் உரியவராக விளங்குபவர் வெள்ளிவீதியார் என்னும் பெண்பால் புலவர் ஆவார். இவர் பாடியனவாக 13 பாடல்கள் சங்க இலக்கியப் பகுதியில் கிடைக்கின்றன. அகநானூற்றில் 2 பாடல்களும், குறுந்தொகையில் 8 பாடல்களும், நற்றிணையில் 3 பாடல்களுமாக 13 பாடல்கள் இவர் பாடியனவாகக் கிடைக்கப்பெறுகின்றன. இவற்றில் 4 பாடல்கள் பாலைத் திணை சார்ந்தவை. 3 பாடல்கள் குறிஞ்சித் திணை சார்ந்தவை. மருதத் திணை

நெய்தல் திணை ஆகியவற்றுக்கு 2 பாடல்கள் வீதம் பாடியுள்ளார். இவர் பாடாத திணை முல்லைத் திணை மட்டுமே என்கிறார்கள். இதற்கு அடிப்படையான ஒரு காரணத்தையும் குறிப்பிடுகிறார்கள். முல்லைத் திணை பெரும்பாலும் கற்பு வாழ்க்கை சார்ந்தது. கற்பு வாழ்வினைப் பெறாதவர் வெள்ளிவீதியார் என்பதன் காரணமாகவே முல்லைத் திணையைப் பாடாது விடுத்திருக்கக்கூடும் என்று அறிஞர்கள் கூறுகின்றனர். இவர் பாடிய பாடல்களில் பலவற்றைக் “காமம் மிக்க கழிபடர் கிளவி” என்று துறைக் குறிப்பாளர்கள் துறை வகுத்துள்ளனர். இவர் பாடிய நற்றிணையின் 3 பாடல்களும் காமம் மிக்க கழிபடர் கிளவி துறை சார்ந்தனவாக உள்ளன. இவரின் காதல் நிறைவேறாமையின் வெளிப்பாடு இவரின் பல பாடல்களாலும், இவரைப் பற்றி பிறர் பாடிய பாடல் குறிப்புகள் வாயிலாகவும் தெரிந்து கொள்ள முடிகிறது. இவ்வகைப்பட்ட பாடல்களைப் பாடியுள்ள வெள்ளிவீதியாரின் பாடல்கள் பெண்ணிய உளவியல்படி சிந்திக்கத் தக்கனவாக உள்ளன. இவ்வழியில் சிந்திக்கின்றபோது இதுவரை வெள்ளிவீதியார் பாடல்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கும் கருத்துருவாக்கங்கள் மாற்றம் பெறத் தக்கவையாகவும் உள்ளன.

**பெண்ணிய உளவியல் ஓர் அறிமுகம்** :

பெண்ணிய உளவியல் - என்பது பெண்ணின் மனதை மையமாக வைத்து அவளின் நடத்தைகளை எடுத்தறிவிப்பதாகும். பெண்களாலேயே உணரப்படும் பெண் மன இயல்புகளைப் பற்றிய கூறுகளை உட்கொண்டிருப்பது பெண்ணிய உளவியல் ஆகும். இது பற்றிய மேலை நாட்டார்கள் கருத்து விளக்கங்கள் வருமாறு: பெண்ணிய உளவியல் என்பது சமூகக் கட்டமைப்பினையும், பால் வேறுபாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயும் உளவியல் அமைப்பாகும். வரலாற்று அடிப்படையில் ஆண்பால் சார்புடைய உளவியலில் பிறந்ததாக இருந்தாலும் இந்தக் கூறு ஆண்களின் உளவியல் சிந்தனைகளிலிருந்தும், அவர்கள் உருவாக்கிய உருக்களிலிருந்தும் தனிப்பட்டு பெண்கள் பற்றிய உளவியல் ஆய்வுகளைத் தொடங்குவதாக உள்ளது.

பெண்ணிய உளவியல் என்பது பெண்களுக்கான சரிசமமான உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கான தனித்த அழுத்தத்தை ஏற்படுத்தித் தருகிறது. மேற்காட்டப்பட்ட இரண்டு கருத்துகளும் பெண்ணிய உளவியலின் நோக்கங்களைப் பற்றித் தெளிவாக விளங்கிக் கொள்ள உதவுகின்றன. ஆண் சிந்தனை வயப்பட்ட உளவியல் பகுதியை பெண் வழிபட்டதாக மாற்ற எழுந்ததுவே பெண்ணிய உளவியல் ஆகும்.

இதனை முதன்முதலாக உருவாக்கிய உளவியலாளர் ஃபிராய்டின் உளவியல் பள்ளியின் வழி வந்த நீயோ பிராய்டியன் எனப்படும் காரென் ஹார்மனி என்ற பெண்ணியலாளர் ஆவார்.

**வெள்ளிவீதியாரின் அக வாழ்க்கை** :

வெள்ளிவீதியார் தம் அக வாழ்வில் படுமோசமான காதல் தோல்வியைச் சந்தித்தவர் என்பது அவர் குறித்த அவ்வையாரின் பதிவு வாயிலாகவும், வெள்ளிவீதியாரின் சொந்தப் பதிவுகள் வாயிலாகவும் அறியப்படுகின்றன.

"நெறிபடு கவலை நிரம்பா நீளிடை / வெள்ளி வீதியைப் போல நன்றும் / செலவு அயர்ந்திசினால் யானே" (**அகநானூறு** - 147) என்ற அவ்வையாரின் அகநானூற்றுப் பாடலின் வாயிலாக வெள்ளிவீதியார் தன் காதலனைத் தேடி அலைந்தமை தெரியவருகின்றது. மேலும் வெள்ளிவீதியாரின் பின்வரும் பாடலில் ஆதிமந்தியைப் போல காதலனைத் தேடி அலைந்ததாக ஒரு குறிப்பு காணப்படுகிறது. 'ஆதிமந்தி போல பேதுற்று அலந்தனென் உழல்வென் கொல்லோ' (**அகநானூறு** - 5)

மேலும் இவரது குறுந்தொகைப் பாடல் ஒன்றும் இதே சாயலில் உள்ளது. "நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார் / விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்/ நாட்டி னாட்டி னூரி னூரிற் / குடிமுறை குடிமுறை தேரிற் / கெடுநரு முளரோ நங்காதலோரே"(**குறுந்தொகை** - 30) என்ற பாடலின் வாயிலாக, வெள்ளிவீதியாரின் அக வாழ்க்கை பற்றிய செய்திகள் தெரிய வருகின்றன. வெள்ளிவீதியார் அகவாழ்வில் தோல்வியைச் சந்தித்துள்ளார். இதற்கு அடிப்படைக் காரணம் தலைவனைச் சேராமையே ஆகும். தலைவன் ஏன் வெள்ளிவீதியாரைச் சந்திக்க மறுக்கிறான்? அவரைத் திருமணம் செய்ய ஏன் மறுத்தான்? இதுபோன்ற பல கேள்விகள் பாடல்களின் பின்னணியில் எழத்தான் செய்கின்றன. இந்தக் கேள்விகளுக்கு பெண்ணிய உளவியல் அடிப்படையில் பதிலைப் பெற வேண்டியுள்ளது. வெள்ளிவீதியார் என்ற பெண் இலக்கியப் படைப்பாக்க இயல்புகளைக் கொண்டிருந்ததன் காரணமாக அவரிடம் இருக்கும் கூடுதல் தகுதிகள் வெள்ளிவீதியாரால் விரும்பப்பட்ட தலைவனுக்கு ஒரு விதமான அச்சத்தை, அதாவது தனக்குப் பெண் அடங்கி நடப்பாளா? என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கவேண்டும். இதன் காரணமாகத் தலைவன் இவரை விட்டு விலகி இருக்க வேண்டுமென்று அறிய முடிகிறது. இதற்கு பல சான்றுகளும் இவர்தம் பாடல்களில் காணக் கிடைக்கின்றன.

**பழந்தமிழர் பண்பாடு** :

தமிழர்களின் பண்பாட்டில் காதலுக்கும் வீரத்திற்கும் முக்கிய இடம் உண்டு. அவை இரண்டும் நம் பண்பாட்டின் பிரிக்கமுடியாத இரு முக்கியக் கூறுகள். சங்க இலக்கியங்கள் காதலைப் புகழ்ந்து பேசுகின்றன. பாடலின் நடை, சொல்லாடல்கள், பாடு பொருள், யாப்பு, ஓசை நயம், உவமைகள், கவிதை உருவாக்கம், கற்பனைக் காட்சிகள், வாக்கிய ஒழுங்கமைப்புகள் எனப் பல்வேறு வகையிலும் சங்கப்பாடல்கள் சிறந்து விளங்குகின்றன எனத் தமிழறிஞர்கள் பலர் பாராட்டிக் கூறுகின்றனர். அதனால் தான் 2000 ஆண்டுகளுக்கு மேற்பட்டும், அப்பாடல்கள் சாகா வரம் பெற்றவையாகத் திகழ்கின்றன.

சங்ககாலப் பெண்பால் புலவர்களில் அவ்வையாருக்கு அடுத்தபடியாக அதிகமாக அறியப்பட்டவரான வெள்ளிவீதியார் எழுதிய பாடலில், காதல் வந்தால் பெண்களிடம் இயல்பாக இருக்கும் நாணம் போய்விடும் என்று அப் பாடலில் கூறுகிறார். மனிதர்களுக்கு இயல்பாக ஏற்படும் மன உணர்வுகளைக் கூறவும் முயன்று இருக்கிறார் வெள்ளிவீதியார்.

வெள்ளிவீதியார் தனது மன உணர்வுகளைப் புலப்படுத்துவதற்கு தனித்துவமான மொழியினைக் கையாண்டுள்ளமை அவரது சங்க அகப்பாடல்களில் வழியாக வெளிப்படுகிறது. பெண் மொழியின் பயன்பாடும், புலமைச் சிறப்பும் பெண்பாற் புலவர்களின் கவிதைமொழியின் மூலம் இனங்காண முடிகிறது. இந்தப் பாடல்களில் இன்ப துன்ப உணர்வுகளின் வெளிப்பாடுகள் உரையாடல்களாகவோ, தனக்குத்தானே கூறிக் கொள்வனவாகவோ அமைந்தாலும் மன உணர்வுகள் வலுப்பெற்று உள்ளதை காணலாம். இதனால் வெள்ளிவீதியாரின் அகப் பாடல்கள் முழுமையிலும் உளவியல் சிந்தனைகள் நிறைந்து காணப்படுவதை அறியமுடிகிறது.

**தலைவனைக் கொடியவன் என்றல்** :

திருமணத்திற்கான ஏற்பாடுகளைத் தலைவன் செய்யாமல் தலைவியைக் காத்திருக்கச் செய்து வருத்தியதால் தலைவனைத் தோழி கொடியவன் என்று குறிப்பிடுகிறாள். நற்றாயும் செவிலித்தாயும் தலைமகளது வேறுபாடு கண்டு இது எதனால் ஆயிற்று என்று கட்டுவிச்சியைக் கேட்கின்ற பொழுது, தலைமகளது வேறுபாட்டுக்குக் காரணம் பெரியதோர் தெய்வம் என்று கூறித் தோழி அறத்தொடு நின்றதாக இந்தப் பாடலுக்குத் துறை விளக்கம் தரப்படுகிறது. தலைவியும் தலைவனும் சந்தித்தார்கள். பழகினார்கள். தலைவன் தலைவியைத் திருமணம் செய்து கொள்வதாகக் கூறினான். ஆனால் அதற்கான எந்த முயற்சிகளிலும் அவன் ஈடுபடவில்லை. சில நாட்களாக அவன் தலைவியைச் சந்திக்கவும் வரவில்லை. ஆகவே தலைவி உண்ணாமல் உறங்காமல் மனம் வருந்தி உடல் மெலிந்து காணப்படுகிறாள். தன் மகளின் உடல்நிலையைக் கண்ட தாய், தலைவிக்கு என்ன ஆயிற்றோ என்று வருத்தப்படுகிறாள். கட்டுவிச்சியை அழைத்துத் தலைவியின் இந்த நிலைக்குக் காரணம் என்னவென்று கேட்கிறாள். தலைவியின் நிலைக்குக் காரணம் தெய்வத்தால் வந்த குற்றம் என்று கட்டுவிச்சி கூறுகிறாள். அதைக் கேட்ட தோழியோ, தலைவி ஒரு குறிஞ்சி நிலத் தலைவனோடு காதல் கொண்டாள். அவனோடு பழகினாள். அவர்கள் காதலைப்பற்றி அந்த மலையில் வாழும் குரங்குக்குக் கூட தெரியும். அந்தக் குரங்கு பொய் சொல்லாது என்று கூறித் தலைவன் தலைவியின் களவு ஒழுக்கத்தை அவருடைய தாயாருக்குத் தெரிவிக்கிறாள். தோழி அறத்தொடு நிற்கிறாள் என்பது அவளது செயலிலிருந்து தெரிகிறது. "அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை / மேக்கெழு பெருஞ்சினை யிருந்த தோகை / பூக்கொய் மகளிரிற் தோன்று நாடன் / தகாஅன் போலத் தான்றீது மொழியினும் / தன்கண் கண்டது பொய்க்குவ தன்றே / தேக்கொக் கருந்து முள்ளெயிற்றுத்

துவர்வாய் / வரையாடு வன்பறழ்த் தந்தைக் / கடுவனு மறியுமக் கொடியோ னையே" (**குறுந்தொகை - 26)**

அரும்புத்தன்மை இல்லாமல் மலர்ந்த கரிய அடியையுடைய வேங்கை மரத்தின் மேலே வளர்ந்த பெரிய கிளையில் இருந்த மயிலானது, அதன் மலரை கொய்யும் மகளிரைப் போலத் தோன்றுதற்கு இடமாகிய நாட்டையுடைய தலைவன் இவளுக்கு உரியனாகும் தகுதியிலான் என்பது போலக் கட்டுவிச்சி தெய்வத்தால் வந்தது என்று தீங்கானதைக் கூறினும், தேமாவின் கனியை உண்ணுகின்ற முள்ளைப் போன்ற கூரிய பற்களையும், வாயையும் உடைய மலைகளில் விளையாடும் வலிய குட்டியின் தந்தையாகிய ஆண் குரங்கும் அந்தக் கொடியவனாகிய தலைவனைத் தன் கண்ணால் கண்ட நிகழ்ச்சியை காணேன் என்று பொய் சொல்லாது. ஆற்றாமையால் நலியும் தலைவியின் பேதைமை உள்ளத்தை வெளிப்படுத்தும் சான்றாகவே இந்தப் பாடலைக் காண முடிகிறது.

**விசும்பின் மீனும் பலர்:**

உடன்போக்கு சென்றுவிட்ட தலைமகளைப் பின் தொடர்ந்து செல்லும் செவிலித்தாய் இடைச்சுரத்தில் தனக்குத்தானே வருந்திக் கூறுதல் என்ற அமைப்பின் கீழ் குறுந்தொகையின் 44 ஆவது பாடல் இடம் பெறுகின்றது.

"காலே பரிதப் பினவே கண்ணே / நோக்கி நோக்கி வாளிழந் தனவே / அகலிரு விசும்பின் மீனினும் / பலரே மன்றவிவ் வுலகத்துப் பிறரே" (**குறுந்தொகை - 40**) என் கால்கள் நடந்து நடந்து ஒரு சீராக அடி எடுத்து வைக்க முடியாமல் தவறுகின்றன. கண்களும் முன்னே இணை இணையாக வருபவர்கள் என் மகளும் அவளது காதலனுமோ என எண்ணிப் பார்த்துப் பார்த்து ஒளியிழந்து பூத்துப் போயின. பார்ப்பவர் எல்லாம் அவர்களாகத் தெரிவதால் நிச்சயமாக இந்த உலகத்தில் அவர்கள் இருவர் அல்லாத பிறர் அகன்ற பெரிய வானத்தில் தோன்றும் மீன்களை விடப் பலராவர் என வருந்திச் சொல்வதன் வழி அவர்களை மட்டும் கண்டுபிடிக்க முடியவில்லை எனச் சொல்லுகிறாள் செவிலித்தாய். இங்கே செவிலித்தாயாக இருந்து மனம் வருந்திப் பாடிய வெள்ளிவீதியாரின் மனக்கருத்தினை விளங்கிக்கொள்ள முடிகிறது.

**இடிக்கும் கேளிர்:**

வெண்ணை ஞாயிற்றுனுடைய வெப்பத்தால் வெண்மை படர்ந்த பாறையின் மேல் கையில்லாத ஊமை தன் கண்ணினால் காக்கும் வெண்ணை உருகி அழிவதைப் போன்று காமநோய் தன்பால் பரவியுள்ளதாகவும், அதனைப் பொறுத்துக்கொள்ளுதல் அரிதான செயலாகும் என்கிறார் வெள்ளிவீதியார். இடிக்குங் கேளிர் நுங்குறை யாக / நிறுக்க லாற்றினோ நன்றுமற் றில்ல / ஞாயிறு காயும் வெவ்வறை

மருங்கிற் / கையி லூமன் கண்ணிற் காக்கும் / வெண்ணெ யுணங்கல் போலப் / பரந்தன் றிந்நோய் நோன்றுகொளற் கரிதே" (**குறுந்தொகை** - 58)

காதலியைப் பிரிந்த அந்தக் குறுந்தொகைத் தலைவன் உள்ளத்தில் பொங்கும் காதல், காமம் என்னும் எல்லையைத் தொடுகிறது. அவளைப் பார்க்கவும், அவளை அடையவும் அவன் ஏங்குகிறான். தன் பாங்கனை உதவிக்கு அழைக்கிறான். தோழனது ஏக்கத்தைப் பார்த்துப் பாங்கன் அவனைக் கண்டிக்கிறான். நீ நினைப்பது முற்றிலும் தவறானது. உன் நோக்கமும் தவறு. உன் எண்ணத்தை மாற்றிக் கொள் என்று அறிவுறுத்தினான். அவனது எச்சரிக்கையைப் புறக்கணிக்கும் காதலன், நான் என்ன செய்வேன் காமமோ என் உடலெங்கும் பரவி வருகின்றது என்று புலம்புகின்றான். தலைவன் தன்னிடத்துத் தோன்றிய காமநோய் பொறுத்துக்கொள்ள அரிதாய் இருக்கிறது என இடித்துரைக்கும் பாங்கனுக்குக் கூறுகின்ற வெள்ளிவீதியாரின் அருமையான பாடல்.

காம உணர்வினை வெளிப்படுத்தும் தன்மை பெண்களுக்கு பெரும்பாலும் இல்லை என்ற பொதுக் குறிப்பை இந்தப் பாடல்கள் பொய்யாக்குகின்றன எனலாம். வெள்ளிவீதியார் பாடல்களில் கூற்று நிலையில் பல தடுமாற்றங்கள் நிலவுகின்றதாக அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தப் பாடல் தலைவன் கூற்றாகவே பெரும்பாலும் பல உரையாசிரியர்களால் இனம் காணப்பட்டது. அது பிறழ்வாக உணரப்பட்டிருக்க வேண்டுமென்றே தெரிகிறது. இந்தப் பாடலில் தலைவியின் காம வேகம் அதிகரிக்க அதனை இடித்துரைக்கின்றனர் உறவினர்கள். இருப்பினும் அவள் வேதனைப்படுகிறாள். அவளுடைய வேதனை காய்ந்த கல் பரப்பில் வைக்கப்பெற்ற வெண்ணை வெப்பத்தால் உருகி ஓடும் போது, கையில்லாத ஊமையன் ஒருவனால் எப்படித் தடுக்க முடியாதோ அதுபோல இந்தக் காமத்தைத் தலைவியால் தடுக்க இயலவில்லையாம். இவ்வுவமைப் பகுதியில் கையாளப் பெற்றுள்ள வெண்ணை உவமையைக் கொண்டு இந்தப்பாடலைத் தலைவி கூற்றாகவே எடுத்துக் கொள்வதே சிறந்ததாகும். ஏனெனில் ஒரு பெண்ணால் மட்டுமே தன்னுடைய உணர்வுகளை இவ்வாறு வெளிப்படுத்த முடியும்.

**கெடுநரும் உளரோ:**

தலைவனைப் பிரிந்திருக்கும் போது வருந்திய தலைவியை நோக்கி, தலைவர் எங்கேனும் ஓரிடத்தில் இருப்பார். அவரைத் தேடி வருவேன் என்ற பொருள் படத் தோழி கூறியதாக வரும் வெள்ளிவீதியாரின் பாடல் ஒன்று, வெள்ளிவீதியார் தன் கணவனைத் தேடி உழன்றமையை நமக்கு உணர்த்துகிறது. "நிலந்தொட்டுப் புகாஅர் வான மேறார் / விலங்கிரு முந்நீர் காலிற் செல்லார்/ நாட்டி னாட்டி னூரி னூரிற் / குடிமுறை குடிமுறை தேரிற் / கெடுநரு முளரோநங் காதலோரே"( **குறுந்தொகை** - 130)

தோழி! உன்னுடைய காதலர், தலைவர் நிலம் தொட்டு புகுதல், வானம் ஏறுதல், குறுக்கிடுகின்ற பெரிய கடலின்மேல் நடந்து செல்லுதல் முதலிய சித்தி பெற்ற சாரணர்களைப் போலச் செல்ல மாட்டார். இவ்வுலகத்தில் ஏதேனுமொரு நாட்டில் உள்ள ஒரு ஊரில் ஒரு குடியில் இருப்பார். ஆதலால் எல்லா நாட்டிலும் உள்ள ஊர்கள் ஒவ்வொன்றிலும் அமைந்த குடிகளை எல்லாம் தேடினால் அகப்படாமல் போக மாட்டார். அங்கெல்லா ஊரிலும் தேடிக் கண்டுபிடித்துத் தருவேன். நீ வருந்த வேண்டாம் என்று தோழி தலைவியை ஆற்றுவிக்கிறாள். மிகப்பெரிய இந்த விசும்பில் திங்கள் போன்ற தன் கணவனைக் காணாமல் வெள்ளிவீதியார் உழன்றமையை அவருடைய மனக் குறிப்பினை இந்தப் பாடல் மிக அருமையாக வெளிப்படுத்துகிறது.

**பிரிந்தோர் புணர்ப்போர் :**

வெள்ளிவீதியார் பாடல்களைப் பார்க்கும் போது அவரது பாடல்களில் ஒரே ஒரு உணர்ச்சிதான் மீண்டும் மீண்டும் மிக ஆழமாக வெளிப்படுவதை நாம் உணர முடிகிறது. காதலன் அல்லது தலைவன் கிடைக்காததன் அடிப்படையில் பிறந்த ஆழ்ந்த சோகத்தையே அவருடைய பாடல்கள் பெரும்பாலும் வெளிப்படுத்துகின்றன.

தலைவனுக்காக ஏங்கி நிற்கும் தலைவியைத் தோழி, நம் ஊரில் பிரிந்த காதலர்களைச் சேர்த்து வைப்பவர்கள் இருக்கின்றார்கள். எனவே அச்சப்படத் தேவையில்லை என்று தேற்றுகின்ற வெள்ளிவீதியாரின் ஒரு பாடல் குறுந்தொகையில் இடம்பெறுகிறது."அம்ம வாழி தோழி நம்மூர்ப் / பிரிந்தோர்ப் புணர்ப்போ / ரிருந்தனர்கொல்லோ / தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர் / நன்றுநன் றென்னு மாக்களோ / டின்றுபெரி தென்னு மாங்கண தவையே" (**குறுந்தொகை - 146**)

**காமமும் நாணமும் :**

காம வேட்கையால் தலைவனுடன் செல்ல நினைப்பினும் நாணம் தடுக்கின்றது என்கிறாள் தலைவி. நாணத்தை சிறையாக உவமிக்கிறார் வெள்ளிவீதியார். காமம் பெருகி, நாணாகிய சிறையை உடைத்துத் தன் பெண்மை ஒழுக்கத்தைச் சாய்த்ததாக வெள்ளிவீதியாரின் தலைவி கூறுகின்றாள். "அளிதோ தானே நாணே நம்மோடு / நனிநீ டுழந்தன்று மன்னே யினியே / வான்பூங் கரும்பி னோங்குமணற் சிறுசிறை / தீம்புன னெரிதர வீய்ந்துக் காஅங்குத் / தாங்கு மளவைத் தாங்கிக் / காம நெரிதரக் கைந்நில் லாதே" (**குறுந்தொகை - 149**) என்ற பாடலில், வெள்ளத்தினைக் கட்டுப்படுத்தும் கரையில் உள்ள கரும்புகளும், மிகு வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டது போல, காமமானது நாணத்தையும் புறந்தள்ளிக்கொண்டு போய்விடுமோ என்று கலங்குகிறாள் தலைவி. காமத்தின் அளவு கைநில்லாத அளவிற்கு உள்ளதாக இந்தத் தலைவி கருதுகிறாள். ஏறக்குறைய வெள்ளிவீதியாரின் நிலையும் இதுவே ஆகும். பெண்களிடம் இயல்பாக இருக்கும் நாணம் காமம் மிகுதியால் உடைந்து

போயிற்று, இல்லாது போயிற்று என்று காதலின் மற்றுமொரு பரிமாணத்தை எடுத்துரைக்கிறார் வெள்ளிவீதியார்.

**பசுமீன் சொரிந்த மண்டை:**

தலைவனது பரத்தமையால் மிகுந்த சினம் கொண்ட தலைவி, தலைவனோடு நகையாடிய பற்களைப் பார்த்து பற்களே! நீங்கள் பாலை நிலத்தின் வழியில் செல்லும் யானையின் தந்தங்கள் கல்லில் பட்டு முனை மழுங்கி அழகு அழிந்து காணப்படுவதைப் போல ஆவீர்கள் என்று கூறுகிறாள். மேலும் தலைவனின் காதல் தலைவியின் உள்ளத்துள் பாணர்கள் பச்சை மீன்களைப் பிடித்து சுமந்து செல்லும் மண்டை எனப்படும் பாத்திரத்தில் நீங்காது இருக்கின்ற மீன் வாசனை போல நீடித்து இருக்கிறது. அது தனக்கு மேலும் சினத்தைத் தருவதாகவும், தலைவனைப் பெற இயலவில்லை எனவே என்னுடைய உயிர் அழிந்து போகட்டும் என்ற பொருள் பட வெள்ளிவீதியாரின் மன நிலையை இந்தப் பாடல் எடுத்துரைக்கின்றது.

“சுரஞ்செல் யானைக் கல்லுறு கோட்டிற் / றெற்றன விறீஇயரோ வைய மற்றியாம் / நும்மொடு நக்க வால்வெள் ளெயிறே / பாணர் பசுமீன் சொரிந்த மண்டை போல / எமக்கும் பெரும்புல வாகி / நும்மும் பெறேஎ மிறீஇயரெம் முயிரே” **(குறுந்தொகை** - 169) பசுமீன் சொரிந்த மண்டை - என்ற இந்த உவமைக் குறிப்பு சற்றே நினைக்கத்தக்கதாக உள்ளது.

**மாலைக்காலம் துன்பத்தைத் தருவது** :

தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றியிருக்க வேண்டும் என்று வற்புறுத்தும் தோழிக்கு, மாலைக்காலத்தில் காமநோய் மிகுவதனால் துன்புறு கின்றேன் என்று தலைவி இரங்கிக் கூறிய வெள்ளிவீதியாரின் பாடல் ஒன்றில், தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று இருக்கிறான், தலைவனின் பிரிவால் தலைவி வருந்துகின்றாள். ‘முன்பெல்லாம் நீ மாலைக் காலத்தில் இவ்வாறு வருந்தாமல் மகிழ்ச்சியோடு இருந்தாயே! இப்பொழுது என்ன ஆயிற்று? தலைவன் விரைவில் வந்து விடுவான். நீ இவ்வாறு வருந்துவது சரியில்லை என்று தோழி கூறுகிறாள். தோழியின் கூற்றுக்கு மறுமொழியாகத் தலைவி மாலைக்காலம் இத்தனை துன்பத்தையும் தனிமையையும் தரும் என்பதைத் தலைவன் பிரிவதற்கு முன் நான் அறியவில்லை என்று கூறுகிறாள். அப்போது அறியவில்லை என்றதனால் ,இப்பொழுது அறிந்து கொண்டமை புலனாகிறது.

“வாலிழை மகளிர் விழவணி கூட்டும் / மாலையோ வறிவேன் மன்னே மாலை / நிலம்பரந் தன்ன புன்கணோடு / புலம்புடைத் தாகுத லறியேன் யானே” **(குறுந்தொகை** - 386) தலைவனைப் பிரிவதற்கு முன்பு, தான் தூய அணிகலன்களை அணிந்த மகளிர் விழாவிற்குரிய அலங்காரங்களைச்

செய்து கொள்கின்ற மாலைக்காலத்தையே அறிந்திருந்ததாகவும், இப்போது அது கழிந்தது. அந்த மாலைக் காலமே, நிலவுலகம் முழுவதும் பரவியது போன்ற பெரிய துன்பத்தோடு வருத்தத்தைத் தரும் தன்மையுடையது என்பதைத் தான் தற்பொழுது அறிந்து கொண்டதாகவும் வெள்ளிவீதியார் பாடல் புனைந்து இருக்கிறார். இந்தப் பாடலின்மூலம் துன்பத்தோடு புலம்புகின்ற ஒரு பெண்ணின் மன உணர்வுகளை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

**நிறைவுரை:**

சங்க இலக்கியப் பெண்பாற் புலவர்களில் ஒரு புரட்சிப் பெண்பாற் புலவராகத் திகழ்ந்தவர் வெள்ளிவீதியார். மற்ற பெண்பாற் புலவர்களுடன் ஒப்பிடுகையில் தன்னுடைய படைப்புகளாலும், தன் சிந்தனைகளாலும் தனக்கென ஒரு தனி அடையாளத்துடன் விளங்கியவர் வெள்ளிவீதியார். ஆண் ஆதிக்கம் மிகுந்த சங்க இலக்கியச் சமூகச் சூழலில் எல்லா பெண்பாற் புலவர்களும் அதன் சாயலைக் கொண்டு இருக்க, அதிலிருந்து விலகி பெண்ணின் மன உணர்வுகளுக்காகக் குரல் கொடுத்தவர். வெள்ளிவீதியாரின் பாடல்களில் பெண்ணின் மன உணர்வுகள் தன்னுணர்ச்சி நிலையில் வெளிப்படுவது தலைமைப் பொருளாக இருக்கிறது. இவருடைய கவிதைகளில் கணவனைப் பிரிந்த தலைவியின் ஆற்றாமை, அதனால் படும் துன்பம், காமம் படுத்தும் பாடு என்பன விரிவாகப் பேசப்படுகின்றன. காமத்தை இயல்பானதாகவும், அந்த உணர்வை வெளிக்காட்டுவதும் இயல்பாகவும் வெள்ளி வீதியார் தன்னுடைய பாடல்களில் வெளிக்காட்டி இருக்கிறார். காதல் துயரால் வெள்ளிவீதியாரால் படைக்கப்பட்ட பாடல்கள் அவருடைய தன்னனுபவப் பாடல்கள். அவை பல செய்திகளை நமக்கு உணர்த்துகின்றன. வெள்ளிவீதியாரின் பாடல்கள் மனப்பக்குவம் சார்ந்த உளவியல் கருத்துக்களின்படி சிந்திக்கத் தக்கனவாக உள்ளதை அறிய முடிகிறது.

**பயன்கொள்ளப் பெற்ற நூல்கள் :**

1. குறுந்தொகை மூலமும் உரையும் : டாக்டர் உ.வே. சாமிநாதையரவர்கள்,கபீர் அச்சகம், சென்னை, இ.ப. 1947.
2. இலக்கியமும் உளவியலும், மறைமலை சி.இ., மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு.ப. 1991.
3. சங்க இலக்கியத்தில் உளவியல், சிவராஜ், சிவம் பதிப்பகம், வேலூர், மு.ப. 1984.
4. சங்ககால ஔவையாரும் உலகப் பெண்பாற் புலவர்களும், பெ.சு. மணி, 1986.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பெரியபுராணத்தில் பெண்ணின் உளவியல் உணர்வுகள்

53

முனைவர் க.சுப்புலட்சுமி, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, காமராஜ் கல்லூரி, தூத்துக்குடி

**ஆய்வுச்சுருக்கம்**

மக்களுக்கு நல்ல கருத்துக்களை போதிக்கும் வகையில் பக்தி இலக்கியங்கள் தோன்றின. அறக் கருத்துக்களை மக்களுக்கு ஊட்டி நல்வழிப்படுத்த எழுந்த பக்தி இலக்கியங்களில் பெண்களின் உளவியல் உணர்வுகள் குறித்து காணமுடிகிறது. பெண்களுக்கான நிலைப்பாடுகள் அமைந்துள்ள விதம் குறித்து தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது. சேக்கிழாரின் பெரிய புராணத்தில் பெண்களின் மன உணர்வுகள் பெண் மொழி குறித்து அறிவதே இந்த ஆய்வின் நோக்கம். உளவியல் நோக்கில் ஆராயும் போது பெரியபுராணத்தில் பெண்கள் தாங்கள் பிறர் நினைப்பதை செயல்படுத்துபவராய் காணப்படுகின்றனர். பெரும்பாலும் பெண்களின் உணர்வுகளை பெண் மொழியால் மட்டுமே இப்புராணத்தில் அறிய முடிகிறது. பெரிய புராணத்தில் காணப்படும் பெண்கள் பெரும்பாலும் ஆண்களுக்கு அடிமை வாழ்வு வாழ்ந்தனர் என்பதை அறிய முடிகிறது. தந்தை கணவர் மேலும் தன்னை சார்ந்த ஆண்களுக்காகவே அவர்களது வாழ்க்கை அமைந்துள்ளதைக் காணலாம். பெண்ணை ஒரு பொருளாக நினைக்கும் எண்ணமும் பெரிய புராணத்தில் காணப்படுகிறது. மானக்கஞ்ச நாயனாரின் செயலும் அவ்வாறு அமைந்துள்ளது இயற்பகை நாயனார் தன் மனைவியை அடிமை நிலையிலேயே நடத்துகிறார். இத்தகைய பெண்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துவது இல்லை. நாம் பெண் மொழியால் மட்டுமே புரிந்து புரிந்து கொள்ள முடியும். அவர்கள் ஆண்களை சார்ந்து வாழும் வாழ்வை பெரிதாய் எண்ணினர் என்பதை இப்புராணத்தில் காணப்படுகிறது.

பெரியபுராணத்தில் பெண்கள் ஒழுக்கத்தின் காரணமாகவும் கட்டுப்பாட்டின் காரணமாகவும் தனக்கான குரலை எழுப்பாமல் அடிமை வாழ்வை ஏற்று மகிழ்வாய் வாழ்ந்தனர் என்பதை காணமுடிகிறது. பெரியபுராணத்தில் வரும் பெண்களின் மொழியைக் கேட்ட பின் பெண்களின் நிலையை சீரியதோர் பாதைக்கு வழிபடுத்துவது நமது கடமை ஒழுக்கம் கட்டுப்பாடு மட்டுமின்றி பெண்ணுக்கான உணர்வை மதித்துஇ அவர்களுக்கான வாழ்வை அமைத்துக் கொடுக்க வேண்டும் இதை அனைவரும் உறுதிப்படுத்த வேண்டும்.

**முன்னுரை**

உலகத்திலுள்ள மக்கள் இன்புற்று வாழ இறைவன் அருளால் தோன்றியவை பக்தி இலக்கியங்கள். சைவ இலக்கியங்களைப் பன்னிரு திருமுறைகளாக வகுத்துள்ளனர். சைவத்திருமுறைகளுள் பன்னிரு திருமுறையாகத் திகழப்படுவது பெரியபுராணமாகும்.

**“ஆற்றலும் எண்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்**
**போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை**
**பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்**
**அன்பெனப்படுவது தன்கிளை செறா அமை**
**அறிவெனப்படுவது பேதையார் சொல் நோன்றல்”**

**நெய்தல் - கலித்தொகை (133)**

என்ற கலித்தொகை பாடல் அடிகளுக்கு ஏற்ப அறிவு, செறிவு தொண்டு, பொறை போன்ற அறக்கருத்துக்களை மக்களுக்கு எடுத்துக் கூறும் விதத்தில் பெரியபுராணம் அமைந்துள்ளது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் மூன்று பேர் மட்டுமே பெண்கள் அறக்கருத்துக்களை இயம்பும் பெரியபுராணத்தில் பெண்ணின் மனஉணர்வுகள் பெண்மொழி குறித்தும் இவ்வியலில் காண்போம்.

**பெண்மொழி**

மனிதனின் எண்ணத்திற்கு தோற்றுவாயாக அமைந்து இருப்பது மனம். மனிதமனம் உள்ளம் பற்றிய அறிவியல் ஆராய்ச்சியை உளவியல் என்பர். அவ்வாறே பெண்களின் உள்ளக் கருத்தை எடுத்து இயம்புவது பெண்மொழி. இது உளவியல் அடிப்படையிலானது எனலாம்.

பக்தி இலக்கியங்களில் பெண்ணுக்கு உயர்வு கொடுக்கும் பாங்கு பெரும்பாலும் இல்லை எனலாம். பெண்ணுக்கான ஒழுக்க விதிகள் பெருமளவில் கற்பிக்கப்பட்டுள்ளன. பக்தி இலக்கிய காலத்தில் பெண்கள் ஆண்களின் உணர்விற்கும் எண்ணத்திற்கும் கட்டுபட்டு வாழ்ந்தனர் என்பதை பெரியபுராணம் எடுத்துக் காட்டுகின்றது.

**அடிமை வாழ்வியல்**

பெரியபுராணத்தில் இயற்பகைநாயனார் என்னிடம் உள்ள பொருள் யாவும் அடியவர்க்கு உடைமையாகும். நீர் வேண்டியதைத் தெரிவிப்பீர் என்றவுடன் அவரைக் காண வந்த வேதியர் நான் வேண்டி வந்தது உன் அன்பு மனைவியை என்று கேட்கிறார் அதை சேக்கிழார் பெருமான்

**“என்ன அவ்வுரைக் கேட்டு இயற்பகையார் யாதும் ஒன்றும் என் பக்கம் உண்டாகில் அன்னது எம்பிரான் அடியவர் உடைமை ஐயம் இல்லை நீர் அருள் செய்யும் என்ன மன்னு காதல் உன் மனைவியை வேண்டி வந்தது இங்கென அந்தணர் எதிரே சொன்ன போதிலும் முன்னையின் மகிழ்ந்து Àய தொண்டனார் தொழுதுரை செய்வார்”.**

**(பெரியபுராணம் - 410)**

என்ற பாடலில் உரைக்கின்றார். இக்கூற்றால் அக்காலத்தில் பெண்கள் ஒரு பொருள் போலக் கருதப்பட்டனர். என்பதை அறிந்து கொள்ளலாம்... பெரும்பாலான பெண்களுக்கு வாழ்தல் என்பது சடங்காக மாறிவிட்டது எனலாம்.

இயற்பகையாரின் கூற்றைக் கேட்ட அவரது மனைவியின் கூற்றானது,

**“இன்று நீர் எனக்கு அருள் செய்தது இதுவேல் என்னுயிர்க்கு ஒருநாத நீர் உரைத்தது ஒன்றை நான்செயும் அத்தனை அல்லால் உரிமை வேறுஉள தோஎனக்கு”**

**(பெரியபுராணம் - 412)**

இவ்வாறு அமைந்துள்ளது. பெரியபுராணஅடிகள் எனக்கு நீர் செய்த அருள் தன்மை இதுவாயின் என்னுயிர்த் தலைவராகிய தாங்கள் உரைத்த ஆணைவழி நான் நடப்பது அல்லாமல் வேறு உரிமை என்ன இருக்கின்றது என எடுத்துரைக்கின்றன.

**பெண்களின் இப்பண்புகள் குறித்து தொல்காப்பியமும்**

**“தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்தல் எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப் பிறநீர் மாக்களின் இன்றிய ஆயிடைப் பெயந்;நீர் போலும் உணர்விற்றென்ப”**

**(தொல் - 1064)**

இவ்வாறு இயம்புகிறது. பெண்களிடம் அமையும் இப்பண்புகள் தான் அவர்களின் வாழ்வுக்குத் தடைக்கற்களாய் அமைகின்றன. என்பதைப் பெரியபுராணத்தின் வழியும் அறியலாம். மனைவியின் உள்ளக் கருத்தை அறியாமல் தன் எண்ணத்திற்கு மட்டும் முதன்மை கொடுத்து எதிர்த்து வரும் சுற்றத்தாரை எல்லாம் வாளினால் வெட்டி வீழ்த்தி மாதரசியைக் கொண்டு செல்லுங்கள் என்றும், நீங்கள் அச்சம் கொள்ளாதவாறு இக்காட்டினைக் கடந்து செல்வதற்கு துணையாக வந்து வழியனுப்பகிறேன் என்றும் வேதியரிடம் இயற்பகையார் உரைத்ததைத்

**“திருவுடை மனைவி யாரைக் கொடுத்து இடைச் செறத்து முன்ப வருபெரும் சுற்றம் எல்லாம் வாளினால் துணிந்த மாட்டி அருமறை முனியை நோக்கி அடிகள் நீர் அஞ்சா வண்ணம் பொரு அரும் கானம் நீங்க விடுவான் என்று உடனே போந்தார்” (பெரியபுராணம் 428)**

என்ற பெரியபுராணப்பாடல் இயம்புகிறது.

இயற்பகையாரின் இச்சொல் பெண்கள் அடிமை நிலையில் நடத்தப்பட்டதையும், சமூக ஒழுங்கிற்கு மாறுபட்ட செயல்களை ஆண்கள் மேற்கொண்டு விளங்கியதையும் அறியமுடிகிறது . இக்கருத்தை

**"செய்வதற்கு அரிய செய்கை"**

**(பெரியபுராணம் - 431)**

என்ற சேக்கிழார் கூற்று மெய்பிக்கிறது.

**பெண்ணைப் பொருளாய் நினைத்தல்**

'மங்கையராய்ப் பிறப்பதற்கே மாதவம் செய்திடல் வேண்டுமம்மா' என்ற நாமக்கல் கவிஞரின் கூற்றிற்கு வித்தாக அமைந்தது. பெரியபுராணத்தில் மானகஞ்ச நாயனாரின் பெண்பிள்ளையைப் பற்றிச் சேக்கிழார் பெருமான் மகிழ்ந்துரைப்பது என்று கூறலாம். இக்கருத்தை,

**"குழைக்கலையும் வடிகாதில் கூத்தனார் அருளால்**
**மழைக்குதவும் பெருங்கற்பின் மழைக்கிழத்தி யார்தம்பால்**
**இழைக்கும்வினைப்பயன்சூழ்ந்த இப்பிறவிக் கொடுஞ்சூழல்**
**பிழைக்குநெறி தமக்கு தவப்பெண் கொடியைப் பெற்றெடுத்தார்"**

**(பெரியபுராணம் - 881)**

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது. .அழகிய காதில் குழையணிந்து அசைய விளங்கும் நடராசப் பெருமான் திருவருளால் நாட்டில் மழை பெய்வதற் உதவும்கற்பின் மிக்க தன் மனைக் கிழத்தியின் பால் செய்வினைப் பயனால் சூழ்ந்த இப்பிறவியில் தீவினையினின்று மீளும் வகையில் நாயனார் பெண் மகவைப் பெற்றார். என்று கூறுவதால் அறியலாம்.

**"தஞ்சரணத் திடைப்பணிந்து தாழ்ந்தெழுந்த மடக்கொடிதன்**
**மஞ்சுதழைத் தெனவளர்ந்த மலர்க்கூந்தல் புறம்நோக்கி அஞ்சலிமெய்த் தொண்டரைப் பார்த்**
**தணங்கிவள் தன் மயிர் நமக்குப் பஞ்சவடிக்காம் என்றார் பரவஅடித் தலங்கொடுப்பார்."**

**(பெரியபுராணம் - 899)**

மானக்கஞ்ச நாயனாரின் வாழ்வு துணைவிக்கும், மகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பது போல் தோற்றமளிக்கின்றது ஆனால் உண்மையில் நிலை வேறாக உள்ளது.

**"அருள்செய்த மொழிகளோ அடற்கரிகை தனைஉருவிப்**
**பொருள் செய்தாம் எனப்பெற்றேன் எனக்கொண்டு பூங்கொடிதன்**
**இருள்செய்த கருங்கூந்தல் அடியில் அரிந்தெதிர் நின்ற**
**மருள்செய்த பிறப்பறுப்பார் மலர்க்கரத்தி னிடைநீட்ட"**

**(பெரியபுராணம் - 894)**

தன் மகளின் திருமணத்தின் பொழுது இல்லத்திற்கு வந்த முனிவர் கூந்தலைக் கேட்கவே நாயனார் மகள் மீது தான் கொண்ட அன்பு புலப்படும்படி மறுமொழி கூறாமல் முனிவரின் விருப்பத்திற்கு இயைந்து உடைவாளை உருவி அடியோர்க்குரிய பொருள் அதனை கொடுப்பதற்குப் புண்ணியம் வாய்க்கப் பெற்றேன். என்று கூறி தன் மகளின் கூந்தலை அரிந்து வழங்கினார். தன் மகளிடம் அனுமதி கேட்கவில்லை. இச்செய்தியை பெரியபுராணம் இயம்புகிறது.

**பெண்ணின் மன உணர்வுகள்**

பெரியபுராணத்தில் பெரும்பாலான இடங்களில் பெண்கள் தங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்துவது இல்லை ஆடவர்க்கு கட்டுப்பட்டு அடிமையாய் வாழ்ந்தனர் எனலாம் அவர்களது உணர்வுகள் பெண் மொழியாகவே பதிவு செய்யப்பட்டுள்ளன தன்னை சூதாட்டத்தில் வைத்து இழந்தது கணவர்கள் எனினும் பாஞ்சாலி சபதத்தில் பாஞ்சாலியை,

> **"விதியோ கணவரே அம்மி மிதித்து அருந்ததி காட்டி எனை வேதச்சுடர்தீமுன் வேண்டி மணஞ்செய்து முனிந்நாட் பரிசழிதல் காண்பீரோ"**
>
> **(பாஞ்சாலி சபதம் 63)**

பேச வைத்திருக்கிறார். தனக்கான உரிமைக்காக பாஞ்சாலியைப் புரட்சிப் பெண் னாய் பேச வைத்திருக்கிறார் பெரிய புராணத்தில் சில இடங்களில் இவ்வாறு பெண்கள் தன் உரிமைக்காக குரல் கொடுத்துள்ளனர் குறிப்பாக திருநீலகண்ட நாயனார் அவரது மனைவி கற்புக்கரசி தன் கணவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொண்ட காரணத்தினால் தன்னை தொடக்கூடாது என்று கூறி கணவனைத் திருத்தினாள்.

**முடிவுரை**

பெரியபுராணத்தில் பெண்கள் ஒழுக்கத்தின் காரணமாகவும் கட்டுப்பாட்டின் காரணமாகவும் தனக்கான குரலை எழுப்பவில்லை. சில இடங்களில் மட்டுமே பெண்ணுக்கான குரல் எழுப்பப்பட்டுள்ளது. அதீத இடங்களில் பெண்ணின் குரல் பெண் மொழியாக மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. தன் கணவனின் செயலுக்கும், தந்தையின் செயலுக்கும் இசைந்து கொடுத்த பெண்களைப் பெரியபுராணத்தில் காணமுடிகிறது பெரிய புராணத்தில் வரும் பெண்களின் மொழியைக் கேட்டபின் பெண்களின் நிலையை சீரியதோர் பாதைக்கு வழிபடுத்துவது அனைவரின் கடமை என அறிந்து கொள்ளலாம்

**துணைநூற்பட்டியல்**

1. கலித்தொகை- நச்சினார்க்கினியார் மூலமும் உரையும், தமிழ் பல்கலைக்கழகம் தஞ்சாவூர். (1984)

2. தொல்காப்பியம், இளம்பூரணர் உரை (எழுத்து சொல் பொருள்) கௌரா பதிப்பகம் சென்னை.

3. பாஞ்சாலி சபதம், கே. ரா கமலா முருகன், (மூலமும் உரையும்) கௌரா பதிப்பகம், சென்னை

4. பெரியபுராணம், முனைவர் ஜெகத்ரட்சகன், (மூலமும் உரையும்) ஆழ்வார்கள் ஆய்வு மையம், சென்னை. (2017)

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

54

# நாலடியார் உணர்த்தும் இல்லற உளவியல்

**தி. தமிழ்ச்செல்வி, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு),**
**ஈரோடு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு.**

**ஆய்வுச்சுருக்கம்**

இல்லற வாழ்க்கைக்குத் தேவையான ஒழுக்கம், ஈகை, பொறுமை என்ற நற்குணங்களை கடைபிடித்து, பொய், நல்லோரைக்கெடுத்தல், பிறன்மனை நயத்தல் என்ற தீய குணங்களை விடுத்து, இல்லை என்று வருவோருக்கு அரிசி அளவாவது மற்றவர்க்கு கொடுத்து உதவி, பொறுமையைக் கடைபிடித்து, உற்றார், உறவினர்களை உயிர்போல் பாதுகாப்பவனே சிறந்தவன் என்று நாலடியார் வழி உணர முடிகிறது.

**முன்னுரை**

"ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி" என்பதனாலும் "சொல்லாய்ந்த நாலடி நானூறும் நன்கு இனிது" என்பதனாலும், "பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்" என்பதனாலும், இதன் பெருமையை நாலடியார் மூலம் அறியமுடிகிறது. நாலடியார் 'அறத்துப்பாலில் இல்லறவியல்' அதிகாரத்தில் கூறப்பட்ட ஈகை இல்லாதவர்க்கு கொடுத்தல், சுற்றம் ஆலமரம் போல் உறவினர்களின் நட்பு, பொறுமை வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது, பிறர்மனை நயவாமை என்பது ஒருவனுக்கு ஒருத்தி என்பதே நமது பண்பாடு என்ற கருத்துக்கள்; இல்லற வாழ்க்கை பற்றி நாலடியார் வழி உணர முடிகிறது.

**நாலடியார் பற்றி விளக்கம்**

சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களைச் சேர்ந்த தொகுதி, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என வழங்கலாயிற்று. பதினெட்டு நூல்களையும் குறிக்கும் வெண்பா:

**"நாலடி நான்மணி நானாற்ப தைத்திணைமுப்**
**பால்கடுகங் கோவை பழமொழி - மாமூலம்**
**இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே**
**கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில முதலாவதாகக் குறிப்பிடப்படும் சிறப்புடையது நாலடியார். ஒரு தமிழ் நீதிநூல். இது நான்கு அடிகளைக் கொண்ட வெண்பாக்களால் ஆனது. இது சமண முனிவர்களால் இயற்றப்பட்ட நானூறு தனிப்பாடல்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இதனால் இது "நாலடி நானூறு" எனவும் பெயர் பெறும். " வேளாண் வேதம்" என்ற பெயரும் உண்டு. பல நேரங்களில் இது

புகழ்பெற்ற தமிழ் நீதி நூலான திருக்குறளுக்கு இணையாகப் பேசப்படும் சிறப்பைப் பெற்றுள்ளது. வாழ்க்கையின் எளிமையான பொருட்களை உவமைகளாகக் கையாண்டு நீதி புகட்டுவதில் நாலடியார் தனித்துவம் பெற்று விளங்குகிறது. இந்நூலினை ஆங்கிலத்தில் "ஜி.யூ.போப்" மொழிபெயர்த்துள்ளார்.

**இல்லறத்திற்கு வேண்டிய நற்குணங்கள்**

இல்லறநெறி என்பது இல்லத்தில் மனையாளோடு கூடிவாழும் ஒழுக்கம். இல்லறத்திற்குரிய அறங்களை இல்லறவியலில் நாலடியார் மூலம் உணர்த்துகிறது. நல்லறமாகிய இல்லறத்திற்கு தேவையான ஈகை, பொறுமை முதலிய நற்குணங்கள் இனிய இல்லறத்திற்கு அடிப்படையானவை.

**ஈகை**

ஈகை என்றால் கொடுத்தல். இல்லாதவர்க்கு கொடுத்தல். இரப்போருக்கு இல்லையென்னாது கொடுப்பது சிறந்த அறமாகும். நம்மிடம் இருப்பதில் அரிசி அளவாவது மற்றவர்க்கு கொடுக்கவேண்டும் என்ற எண்ணம் எல்லோரிடமும் இல்லை. ஈகைக் குணம் உடையவர். ஊரின் நடுவே பலரும் அணுகிப் பயன்பெற முடியும். மரம் போன்று பலருக்கும் பயன் தருபவர். ஊர் நடுவே இருப்பதால் பெண் பனையைப் போன்றவர். ஈயாதவர் சுடுகாட்டில் உள்ள ஆண் பனையைப் போன்று பயன் தராதவர். மேலும் அணுக இயலாத இடம் என்று பனை மரங்களின் இயல்புகளை மக்களின் பண்புக்கு உவமையாக்கும் அழகை நாமும் ரசிக்கலாம்.

**நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்ற உவமைகள்**

**"பெயற்பால் மழைபெய்யாக் கண்ணும் உலகம்**
**சேயற்பால செய்யா விடினும் - கயற்புலால்**
**புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!**
**என்னை உலகுய்யு மாறு."** (நாலடி - 97 அறத்துப்பால்)

முரசின் ஒலி ஒரு குறிப்பிட்ட தூர அளவுக்குக் கேட்க இயலும். இடியின் ஒலி இன்னும் அதிக தூரம் கேட்கும். சான்றோர் ஒருவர் யாசித்தவர்க்கு ஒன்றைக் கொடுத்தால் என்ற சொல் மூன்று உலகங்களிலும் கேட்கப்படும் சிறப்பை உடையது என்று ஈகையின் சிறப்பைச் சுவைபடச் சொல்லும் ஒரு நாலடிப் பாடல்

**"கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்**
**இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்**
**அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்**
**கொடுத்தார் எனப்படுஞ் சொல்."** (நாலடி - 100 அறத்துப்பால்)

**பொறையுடைமை**

ஈகைக்கு அடுத்து பொறுமை உடைமை. இல்லறத்திற்கு அடிப்படையான ஒன்று. இப்பொறுமைப் பண்பு மிகச் சிறந்தது. பொறுமை இன்றி இருத்தல் பழிக்குக் காரணமாகிவிடும்.

**"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது**
**தாரித் திருத்தல் தகுதிமற்று - ஒரும்**
**புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்**
**சுமழ்மையாக் கொண்டு விடும்."** (நாலடி - 72 அறத்துப்பால்)

கீழ்மக்கள் அறியாமையால் செய்யும் செயல்களைக் பொறுக்க வேண்டும். பொறுமையின்மை பழியை உண்டாக்கும் என்பதால் பொறுக்க வேண்டும் என்பார். நட்பில் கூட பொறுமை வேண்டும் என்பார். தன்னுடய நண்பர்கள் இனிமையல்லாதவற்றைக் கூறும் போதும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பார்.

**"காதலர் சொல்லுங் கடுஞ்சொல் உவந்துரைக்கும்**
**ஏதிலார் இன்சொல்லின் தீதாமோ - போதெல்லாம்**
**மாதவர்வண்டு ஆர்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப!**
**ஆவ தறிவார்ப் பெறின்."** (நாலடி - 73 அறத்துப்பால்)

தன்னைத் தோண்டக் கூடியவரையும் பொறுத்துக் கொள்ளும் நிலம் போலத் தம்மை இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளுதல் தலை சிறந்த அறமாகும்.

**"அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்**
**இகழ்வார்ப் பொறுத்தல் தலை."** (குறள் - 151)

**சுற்றம் :**

இல்லறத்தில் உறவுப்பாலம் அமைப்பவர்கள் சுற்றத்தார். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் எல்லாம் அன்புள்ள உறவினர் கண்டால் நீங்கிவிடும். இப்படிப்பட்ட உறவினைப் பாதுகாப்பவனே சிறந்தவன். தன்னிடம் வந்த உறவினரைப் பாதுகாத்துப் பழுத்த மரம் போலப் பலர்க்கும் பயன்படுபவனே சிறந்தவன். துன்பமடைந்தவர்க்கு உதவும் பண்பு இல்லறத்தார்க்கு வேண்டும். வெயிலினைத் தாங்காது வருகின்றவர்களுக்கு நிழலைத் தந்து இடம் தரும் ஆலமரம் போலவும், பறவைகள் பலவும் உண்ணும் பழங்களைத் தரும் ஆலமரம் போலவும் சுற்றத்தினருக்கு உதவ வேண்டும்.

**"அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்**
**நிழன்மரம் போல் நேரொப்பத் தாங்கிப் பழு மரம்போல்**
**பல்லார் பயன்துய்ப்பத் தான் வருந்தி வாழ்வதே**
**நல்லாண் மகற்குக் கடன்."** (நாலடி - 202 பொருட்பால்)

பல காய்களைத் தாங்கும் மரக்கிளை போலப் பெரியோர்கள் தம்மை வந்தடைந்த உறவினரைக் காப்பாற்ற மாட்டோம் என்று கூறமாட்டார். உண்மையான உறவின் உயர்வைக் கூறும்

கருத்துச் சிறப்பை நாலடிப் பாடலில் காணலாம். பால் சோறு மிக இனிமையானது தான். ஆனால் பகைவரிடமிருந்து அதைப் பெறும்போது அது இனிப்பதில்லை. ஆனால் உயிர் போன்ற உறவினரிடம் பெறும் உப்பிலாக் கஞ்சியோ இன்பம் தரும் என்கிறது.

**"பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்**
**அக்காரம் பாலோடு அமரார்கைத்து உண்டலின்**
**உப்பிலிப் புற்கை உயிர்போல் கிளைஞர்மாட்டு**
**எக்காலத் தானும் இனிது."** (நாலடி - 206 பொருட்பால்)

**இல்லறத்தார் விலக்க வேண்டிய குணங்கள்:**

இல்லறத்திற்கு பொருந்தாதவையாக உள்ளனவற்றை நாலடியார் எடுத்துரைக்கின்றது. உலகமே பெறுவதாயினும் பொய் பேசக்கூடாது. நல்லோரைக் கெடுத்தல், பிறன் மனை நயத்தல் ஆகியன. இல்லறமாகிய நல்லறத்தைக் கெடுப்பனவாம்.

**பொய்யாமை :**

'**எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு**
**பொய்யா விளக்கே விளக்கு.**' (குறள் - 299)

என்று பொய்யாமையை ஒளிதரும் விளக்காகக் கூறுகிறார் திருவள்ளுவர். நாலடியார் பொய்யாமை பற்றி இரவலன் ஒருவன் பொருளை ஒருவனிடம் யாசிக்கிறான். அவன் உடனடியாகப் பொருளைத் தரவில்லை. கொடுக்கமாட்டேன் என்று மரக்கவுமில்லை. பிறகு என்ன செய்தான்? கொடுக்கிறேன், கொடுக்கிறேன் என்று சொல்லிக்கொண்டே இருந்து நீண்டகாலம் கழித்து சொன்ன சொல்லைப் பொய்யாக்கி விட்டான். இந்தப் பொய்யைத் தான் பெரிய குற்றம் என்கிறது நாலடியார். எவ்வளவு பெரிய குற்றம் என்றால் பிறர் செய்த நன்றியைக் கொன்றவரது குற்றத்தைக் காட்டிலும் பெரிய குற்றம் உடையதாகும்.

**" இசையா ஒருபொருள் இல்லென்றால் யார்க்கும்**
**வசையன்று வையத் தியற்கை - நசையழுங்க**
**நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ! செய்ந்நன்றி**
**கொன்றாரின் குற்றம் உடைத்து."** (நாலடி - 111 அறத்துப்பால்)

**பிறர்மனை நயவாமை :**

'ஒருவனுக்கு ஒருத்தி' என்பதே தமிழர் பண்பாடு. பிறர் மனை நயப்பது பண்புக்கு மாறுபட்டது. பிறர்மனை நயப்பதால் வரும் அச்சம் பெர்pது. ஆதலால் நல்லோர் பிறர் மனைவியை விரும்ப மாட்டார். பிறர் மனைவியை விரும்புவாரிடம் " அறம், புகழ், நட்பு, பெருமை" இந்நான்கும் சேரா. " பகை, பழி, பாவம், அச்சம் " ஆகிய நான்கும் சேர்வனவாம்.

**"அறம்புகழ் கேண்மைபெருமைஇந் நான்கும்**
**பிறன்தாரம் நச்சுவார் சேரா - பிறன்தாரம்**

**நச்சுவார் சேரும் பகைபழி பாவம் என்று**
**அச்சத்தோடு இந்நாற் பொருள்** (நாலடி -82 அறத்துப்பால்)

குலப்பழி உண்டாகும்.

**"காணின் குடிப்பழியாம் கையுறின் கால்குறையும்**
**ஆணின்மை செய்யுங்கால் அச்சமாம்: - நீள் நிரையத்**
**துன்பம் பயக்குமால் துச்சாரி நீகண்ட**
**இன்பம் எனக்கெனத்தால் கூறு."** (நாலடி -84 அறத்துப்பால்)

முற்பிறப்பில் அயலார் மனைவியை விரும்பியவரே இப்பிறப்பில் பேடிகளாய்ப் பிறந்து கூத்தாடி உண்பவர்கள்: என பிறன்மனை விரும்பியதால் வரும் தீங்கு அடுத்த பிறவியிலும் தொடரும் என்ற எச்சரிக்கையும் செய்யப்படுகிறது.

**"செம்மையொன் றின்றிச் சிறியார் இனத்தராய்க்**
**கொம்மை வரிமுலையாள் தோள்மரிஇ - உம்மை**
**வலியால் பிறர்மனைமேல் சென்றாரே இம்மை**
**அலியாகி ஆடிஉண் பார்."** (நாலடி - 85 அறத்துப்பால்)

இப்பிறவியில் செய்யும் வினைக்குப் பயன் மறுபிறவியிலும் தொடரும் என்ற சமண சமயக் கொள்கையின் மூலம் இல்லற நெறியைப் பற்றி சமண முனிவர் நாலடியார் மூலம் விளக்கியுள்ளார்கள்.

**முடிவுரை :**

இல்லறத்திற்கு தேவையான நற்குணங்களைக் கடைபிடித்து, தீய குணங்கள் எல்லாம் விடுத்து, உற்றார், உறவினர் மூலம் ஒன்றிணைத்து "ஆலமரம் போல் உலகளவில் அனைவரும் சமம்" என்னும் இல்லற நெறியைப் போற்றி வாழ்வோம்.

**துணைநூற்பட்டியல் :**

1. நாலடியார் மூலமும் தெளிவுரையும், பேராசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன், வர்த்தமானன் பதிப்பகம்.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# பெண்ணிய உளவியல் நோக்கில் கந்தர்வன் கவிதைகள்

55

**முனைவர் இரா.தனசுபா, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**சைவபானு சத்திரிய கல்லூரி, அருப்புக்கோட்டை**

**ஆய்வுச்சுருக்கம்** :

'கந்தர்வன் கவிதைகள்' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள கவிதைகளில் பல பெண்ணின் உளவியல் நோக்கில் ஆராய்ந்து பெண்ணின் பிரச்சனையை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. பெண்ணடிமைத்தனத்தையும் பெண்ணின் வாழ்வியல் போராட்டங்களையும் மையமாக வைத்து பல கவிதைகளை இயற்றியுள்ளார். ஆய்வின் பக்க வரையறை கருதி சில கவிதைகள் மட்டுமே ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. படித்து அலுவலகத்தில் பணியாற்றும் பெண், படிக்காத வறுமையில் வாழும் பெண் என எல்லாத் தளங்களில் இருக்கு ;பெண்களுக்கான பிரச்சனைகளையும் கந்தர்வன் தனது கவிதைகளுக்கு கருவாக்கியுள்ளார்.

## முன்னுரை

தமிழ் இலக்கியப் பரப்பில் 'பெண்ணியம்' என்ற சொல்லாடலும் அதன் தொடர்பான படைப்பாக்கங்களும் நிறையவே வெளிவந்துள்ளன. இன்று வளர்ந்து வரும் பல்வேறு கல்வித் துறைகளுள் பெண்ணியமும் ஒன்று. மானிடவியல், உளவியல், மொழியியல் சமூகவியல், வரலாற்றியல் ஆகிய அறிவுத் துறைகளின் வாயிலாகப் பெண்ணியம் பற்றி ஆராய்ச்சி செய்வது இன்று பெருகி வருகிறது. இதுபோலவே இலக்கியத் துறையிலும் பெண்ணின் படைப்புச் சிக்கல்களை மையமாக வைத்து கவிஞர் பலரின் படைப்புகள் வெளிவந்துள்ளன. அத்தகைய கவிஞர்களுள் ஒருவராக கவிஞர் கந்தர்வன் தமிழ் இலக்கிய உலகில் அடையாளம் காணப்படுகிறார். வானம் பார்த்த பூமியைத் தனக்குள் அடக்கி வைத்திருக்கும் இராமநாதபுரம் மாவட்டம், சிக்கல் என்னும் கிராமத்தில் 1944 ஆம் ஆண்டு கணேசன் - கனகாம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர் கந்தர்வன். இவருக்குப் பெற்றோர் இட்டபெயர் நாகலிங்கம் என்பதாகும். கந்தர்வன் என்பது புனைப்பெயராகும். பெண்ணிய உளவியல் நோக்கில் கந்தர்வன் கவிதைகளை ஆய்வு செய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

## பெண்ணிய உளவியல்

பெண்ணியம் என்ற சொல் 1890ல் இருந்து பாலின சமத்துவக் கோட்பாடுகளையும், பெண்ணுரிமைகளையும் பெறச்செயல்படும் இயக்கங்களையும் குறிக்கப் பயன்பட்டு வருகிறது. கி.பி.19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பெண்ணிய உளவியல் என்ற கோட்பாடு நவீனத்துவத்தின் சூழலமைவில்

எழுந்தது. தொடர்ந்து பிரான்சு நாட்டைச் சார்ந்த சய்மோன் தெபௌவேர் எழுதிய இரண்டாவது பாலினம் (Second Sex 1949) என்ற பிரசித்தமான நூலை முன்னோடியாகக் கொண்டு பெண்ணியம் ஓர் அறிவார்ந்த கொள்கையாகவும் போராட்டக் கருவியாகவும் முன் வைக்கப்பட்டது. பலநாடுகளில் பெண்ணியம் ஒரு பிரச்சினையாகப் பேசப்பட்டது. இயக்கங்களும் தோன்றின. தமிழகத்தில் பெண் விடுதலை பற்றி அழுத்தமாகவும் புதுமைக் கண்ணோட்டத்துடனும் எழுதியவர்கள் இருவர். ஒருவர் மகாகவி பாரதியார், மற்றொருவர் பெரியார் ஈ.வெ.இராமசாமி. இவர்களைத் தொடர்ந்து பெண்ணின் உளவியலை இச்சமுதாயம் புரிந்துகொண்டு அவர்களுக்குரிய உரிமைகளைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் தமிழ் எழுத்தாளர்கள் பலர் தங்கள் படைப்புகளைப் படைத்துள்ளனர்.

**பெண்ணடிமைத் தனம்**

சமுதாயத்தின் முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் காரணிகளுள் ஒன்று பெண்ணடிமைத்தனமாகும். ஆண், பெண் இருபாலரும் சமுதாயத்தின் அங்கங்களாக அமைந்துள்ளனர். இவ்விருவரும் அறிவிலும் ஆற்றலிலும் நிகராக வளரப்பெற்று, ஒத்த உரிமை கொண்டு, அன்போடும், பண்போடும் இணங்கி வாழ்வதே புதிய மானுடமாகும். ஆனால் இன்றைய சமுதாயம் ஆணாதிக்கச் சமுதாயமாக உள்ளது. பெண் அடிமைப்பட்டும் சிறுமைப்பட்டும் கிடக்கிறாள். ஓரளவு உரிமைகள் பெண்ணிற்குக் கொடுக்கப்பட்டாலும் கூட முழுமையான பெண் விடுதலைக்கான அடிப்படை மாற்றங்கள் இன்னும் நிகழவில்லை. அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்து பெண் விடுதலை முழுமையடையும் போதுதான் மானுட விடுதலையும் முழுமை பெற முடியும். "பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால், பெரும் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்" என்பது பாரதியின் வாக்கு. இவ்வாக்கு முற்றிலும் உண்மை. பெண்ணாகப் பிறந்து விட்டால், குழந்தைப் பருவத்தில் தந்தைக்கும்,திருமணமான பிறகு கணவனுக்கும், அதன் பிறகு மகனுக்கும், அடிமையாக வாழவேண்டிய அவலநிலையைக் கவிஞர் கந்தர்வன்,

**"தவழ்ந்த போது**
**பெண்**
**தகப்பனுக்கடிமை**
**கையைப் பிடித்ததும்**
**கணவனுக்கடிமை**
**கிழவியானதும்**
**மகனுக்கடிமை**
**ஆண்கள் பூட்டிய**
**அடிமை விலங்கை**
**அவளிடமிருந்து**
**அகற்றிச் சென்றது**
**மரணம் ஒன்று தான்"**

என்ற வரிகளில் விளக்கியுள்ளார்.

பெண் இல்லத்தில் சிறைப்பட்டுக் கிடந்ததால் இலக்கியங்கள் அவளை 'மனையுறை மகளிர்" என்றும் 'இல்லாள்" என்றும் வருணித்தன. இந்தச் சொற்களுக்கு இணையான ஆண்பாற் சொற்கள் இல்லை. இந்த அடிமைச் சொற்கள் பெண்ணின் அவலநிலைக்குச் சான்றாக அமைந்துள்ளன. இன்று சமுதாய உழைப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் வீட்டுச் சிறையை விட்டு வெளியே வரத் தொடங்கியிருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். பெரும்பாலானோருக்கு இன்னும் வீடு சிறையாகவே உள்ளது. பெண்களின் இந்த நிலையை, 'கிழிசல்கள்" கவிதை தெளிவாக விளக்குகிறது.

பண்டைக் காலத்தில் தோன்றிய சமய, இலக்கிய, இலக்கண நூல்களும் நிலவுடைமையின் சார்பாக நின்று பெண்ணடிமைத்தனம் நிலைக்கவும் ஒடுக்குமுறைகள் வளரவும் துணைபோயின.

**'வினையே ஆடவர்க்கு உயிரே வாள்நுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென"**

என்று இலக்கியங்கள் அறிவுறுத்தின. பெண்கள் தம்விருப்பப்படி எதுவும் செய்யக் கூடாதென சாத்திரங்கள் சட்டங்கள் இயற்றின.

தொல்காப்பியமும்,

**'தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**
**எண்ணுங்காலை கிழத்திக் கில்லை...."**

என்றும்,

**"முந்நீர் வழக்கம் மகடூஉவோடு இல்லை"**

என்றும் பெண்ணை ஒடுக்கும் வகையில் இலக்கண விதிகளைக் கொண்டுள்ளது.

பிறக்கும் போதே பெண்ணுக்கு விலங்கு பூட்டப்படுகிறது. அந்த விலங்கின் சாவியைத் தந்தை தன் கையில் வைத்துக் கொள்கிறார். பெண்ணுக்குத் திருமணம் நடக்கும் போது அவர் அந்தச் சாவியை அவளது கணவன் கையில் கொடுக்கிறார். அவள் விதவையான பின் அந்தச் சாவி அவளது மகனின் கைக்கு வருகிறது. பெண்ணின் கையில் விலங்கும் ஆணின் கையில் சாவியும் தலைமுறைதோறும் தொடர்கின்றன என்கிற கருத்தை 'சாவி' என்ற கவிதையில் விளக்கியுள்ளார்.

மாக்வெர் எனும் சமூகவியலார் குடும்பத் தோற்றம் 1.பாலியல் 2.மக்கட்பேறு 3.பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றியது என்கிறார். குடும்பத் தோற்றத்தின்

காரணங்களுள் ஒன்றாகிய மக்கட்பேறு பெண்களைப் பெருமளவு அடிமைப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**"அம்மா என்றும்**
**தாய்க்குலம் என்றும்**
**உங்களை விளிக்கும்**
**எல்லாப் புனிதச் சொற்களுக்கும்**
**ஓர் அர்த்தம் உண்டு**
**அதுதான் அடிமை என்பது**
**நாளும் கிழமையும்**
**நலிந்தோர்க்கில்லை**
**ஞாயிற்றுக் கிழமையும்**
**பெண்களுக்கு இல்லை"**

என்ற கந்தவர்வனின் கவிதை வரிகள் பெண்ணடிமைத் தனத்தை விளக்குவதாக அமைந்துள்ளது

**பெண்களின் வாழ்வியல் போராட்டங்கள்**

தொடக்கக்காலத்தில் ஆண்கள் பெண்களை அன்பினால் அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். இதன் விளைவால் மிகுதியான பெண்களுக்கு அறியாமை இருந்ததே தவிர, சிக்கல்கள் இல்லை. காலம் செல்லச் செல்ல மரபுநிலைகள் பெண்களை அறியாமைக்கு உட்படுத்தி அடிமையாக்கிததோடு நில்லாமல் கொடுமைப்படுத்தும் இழிநிலையை அடைந்தது. இதன்காரணமாக குழந்தைப் பருவத்திலிருந்து தன் முதுமைக் காலம் வரை பெண் ஆணைச் சார்ந்தே வாழவேண்டிய கட்டாயத்திற்கு உட்படுத்தப்படுகின்றாள். இதனால் சுயமாகச் சிந்திக்கும் ஆற்றலின்றி பலவிதமான சமூக அவலங்களுக்குள்ளாகிறாள். நம்நாட்டை பாரதமாதா என்றும், மொழியைத் தாய்மொழி என்றும், ஆறுகளும் பெண்களின் பெயராலே அமைந்திருப்பதெல்லாம் பெண்களைப் பெருமைப் படுத்துவதற்காக என நினைக்கிறோம். ஆனால் கந்தர்வன் இவ்வுலகத்தினுடைய ஒட்டுமொத்த சோகத்தின் வடிவமே பாரதமாதா என்றும், அவள் வடித்த கண்ணீரே நம்நாட்டின் மூன்றுபுறமும் அமைந்திருக்கும் சமுத்திரங்கள் என்றும், 'வளையல் விலங்குகள்' என்ற கவிதையில் விளக்கியுள்ளார். இதனை,

**"இந்தத் தேசத்தின்**
**சகல சோகத்தையும்**
**ஒரு வடிவாக்க நினைத்தபோது**
**அது பாரதமாதா என்றொரு**
**பெண்ணுருவாகியது**

**அவள் வயது**
**அறிவிற்கப்பாற்பட்டது**
**அவள் தலையே இமயமலை**
**வெள்ளை வெளேரென்றே**
**இமய பர்வதம்**
**அவள் மூத்த வயதை உணர்த்தும்**
**டில்லிக்கருகில் அவள் கண்கள்**
**ஆயிரமாயிரமாண்டுகளாய்**
**அவள் அழுது வந்த கண்ணீர்**
**அவள் உடல் முழுவதும்**
**உருண்டோடி**
**மூன்று சமுத்திரங்களாயின**
**கண்ணீர் சமுத்திரங்களில்**
**அவள் காலூன்றி நிற்கிறாள்**
**இன்னுங்கூட அவள்**
**அழுது கொண்டிருக்கிறாள்"**

என்ற வரிகள் உணர்த்துகின்றன. சோகத்தின் வடிவமே பெண் என்று கூறும் அளவிற்கு பெண்களின் நிலை அமைந்துள்ளது என்பதை இக்கவிதை சுட்டிக்காட்டுகிறது.

பெண்ணின் மீதான ஒடுக்குமுறைகளுள் குறிப்பிடத்தக்க ஒன்று கற்புக்கோட்பாடு அவளுக்குத் திணிக்கப்பட்டதாகும். கற்புக்கோட்பாடும் அதன் பயனால் உண்டான ஒருதார மணமுறையும் நம் முன்னோர்களின் முற்போக்கான சிந்தனைகளைக் காட்டுகின்றன. ஆனால் பழங்காலந் தொட்டே கற்புக்கோட்பாடு என்பது இருபாலருக்கும் பொது என்றில்லாமல் பெண்களுக்கு மட்டுமே வற்புறுத்தப்பட்டது. இதனால் பெண்ணினம் மேலும் அடிமைப்படுத்தப்பட்டது. கற்புக்கோட்பாட்டின் தாக்கம் இப்போதும் நம்நாட்டில் இருப்பதையும் அதன்மூலம் பெண்கள் அடையும் துயரங்களையும்,

**"கற்பின் திறத்தால் ஒரு**
**நகரத்தைக் கரியாக்கலாம்**
**நல்ல மழை பெய்விக்கலாம்**
**என்றார்கள்**
**கற்போடு வேலை கேட்கப்போன**
**உன்னிடம்**
**கற்பையே கேட்டார்கள்"**

என்ற கவிதை தெளிவுப்படுத்துகிறது.

**பெண்விடுதலை**

'லிபர் (Liber) என்னும் இலத்தீன் சொல்லில் இருந்து 'சுதந்திரம்" என்னும் சொல் தோன்றியது. பொதுவாக இச்சொல் சமூக அரசியல் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதைக் குறிக்கிறது.

பெண்ணியவாதிகள் பெண்ணிற்கான விடுதலையைப் பேசுகின்றனர். உரிமைகள் அனைவருக்கும் பொதுவானவையாக இருக்கின்ற போது, பெண்கள் கல்வி, பணிவாய்ப்பு முதலானவற்றில் சமஉரிமை பெற வேண்டும் என்பது கருத்தில் கொள்ளப்படுகிறது. குடும்ப, சமூக தொழில் நிறுவனங்களில் பெண்ணடக்கு முறையை அறிந்து தளைகளிலிருந்து மீட்சி பெறுவதை இச்சொல் விலக்குகிறது. ஆயினும் பெண் விடுதலை என்பது தொழிற்புரட்சி ஏற்பட்டுள்ள நாடுகளில் கூட முழுவதுமாகக் கிட்டவில்லை" என்று முனைவர் அரங்க மல்லிகா பெண் விடுதலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

பெண் விடுதலை என்பது பெண்களால் தான் வர வேண்டுமேயன்றி ஆண்களால் வரமுடியாது. தங்கள் உரிமைகளுக்காக பெண்கள் அழுவதையும், பிறரை நம்பி வாழ்வதையும் கந்தர்வன் வன்மையாகக் கண்டித்துள்ளார். இதனை,

**"அழுவதை நிறுத்துங்கள்**
**யாரையும்**
**தொழுவதை நிறுத்துங்கள்**
**குரல்களை உயர்த்துங்கள்**
**தெருக்களை நிரப்புங்கள்"**

என்ற கவிதையின் மூலம் அறிய முடிகிறது. பெண்களை தங்களின் விடுதலைக்காகப் போர்க்கொடி உயர்த்தச் சொல்கிறார்.

இன்றைய சமூக மறுமலர்ச்சிக்குப் பெண்ணின் எழுச்சித் திறனும் பெண்விடுதலை இயக்கச் செயற்பாடுகளும் அடிப்படையாக அமைகின்றன. அவற்றைத் தற்காலப் படைப்பிலக்கியங்கள் பன்முக வீச்சில் தெளிவுபடுத்துகின்றன. மனித-சமூக மேம்பாட்டிற்காக மிகுந்த அக்கறையோடும், நேர்மையோடும் பெண் விடுதலைச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் படைப்பாசிரியர்களுள் கந்தர்வனும் ஒருவராகத் திகழ்ந்துள்ளார். குடும்ப அமைப்பில் பெண் விடுதலையில்லாமல் இருக்கும் நிலையை,

**"தங்கத்தில் சுவர் வைத்து**
**வைரத்தில் வாசல் வைத்தாலும்**
**அவள் வைக்கப்பட்ட இடம்**
**சிறையல்லவா?"**

என்று பெண்ணின் நிலையை உணர்த்தியுள்ளார்.

**முடிவுரை**

சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் மிகப்பெரிய காரணியாகப் பெண்ணடிமைத்தனம் இருப்பதைக் கவிஞர் கந்தர்வனின் கவிதைகளில் அறியமுடிகிறது. காலந்தோறும் பெண் விலங்கு பூட்டப்பட்ட அடிமை போல வாழும் நிலையே சமுதாயத்தில் நிலவுகிறது என்பதை

உணரமுடிகிறது. விலங்குகளுக்குக் கொடுக்கப்படும் சுதந்திரம் கூட பெண்களுக்குக் கொடுக்கப்படாத மானுடமற்ற போக்கினை வன்மையாகக் கண்டித்துள்ளார். மனமாற்றத்தின் மூலமே பெண்ணியத்தின் மானுட மேன்மையை வளர்க்கமுடியும் என்பதைப் படைப்பின்வழி தீர்வு கண்டுள்ளார்.

**துணைநூற் பட்டியல்**

1. கந்தர்வன் கவிதைகள், பவா செல்லத்துரை, (தொ.ஆ.), வம்சி புக்ஸ், திருவண்ணாமலை. மு.ப. - டிசம்பர், 2012
2. அரங்கமல்லிகா, தமிழ் இலக்கியமும் பெண்ணியமும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. மு.ப. - 2009.
3. சண்முகசுந்தரம்,சு., (தொ.ஆ.), பெண்ணியம், காவ்யா பதிப்பகம், பெங்களூர் - 38. மு.ப. - 1994.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# குறிஞ்சித்திணைக் கூற்றுகளில் உணர்வு வெளிப்பாடு

56

**முனைவர் வே. தனபாக்கியலட்சுமி, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியத்தின் முக்கிய நோக்கமே மானிட வாழ்வை அடையாளப்படுத்துவது தான். மலைகளிலும் காடுகளிலும் குகைகளிலும் காட்டுமிராண்டிகளாகவும், ஆதிவாசிகளாகவும் தான் தோன்றியாகத் திரிந்த ஒரு சமூகம் ஒரு கட்டமைக்கப்பட்ட வாழ்க்கைமுறையை வாழ்ந்தது சங்கச் சமூகத்தில் தான். பின்னர் ஆங்காங்கே தங்கள் இருப்பிடங்களைத் தேடிக்கொண்ட மக்கள் அந்தந்த நிலத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப தங்கள் வாழ்க்கை முறையினை அமைத்துக் கொண்டனர். இயற்கையும் மானிட வாழ்வும் ஒன்றோடொன்று தொடர்புடையது. குறிஞ்சிநில மக்கள் தாங்கள் வாழும் நிலத்திற்கேற்ப உடல் வலிமையும் உண்ணுதல் முறையும், தொழில் திறமையும் பெற்றுத் திகழ்ந்தனர். குறிஞ்சித் திணையின் உரிப்பொருள் புணர்தலும் புணர்தல் நிமித்தமும் இவ்வுரிப்பொருளே பாடல்களின் மையமாகும். இம்மையமின்றி பாடல்கள் அமையாது. புலவர்கள் தங்களது எண்ணங்களையும், அனுபவங்களையும், உணர்வுகளையும் கூற்றுகள் வாயிலாக பதிவு செய்துள்ளனர். கூற்றுகளை உணர்வுகளின் அடிப்படையில் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 1.**கூற்று விளக்கம்**

கூற்று என்பது தான் கூற விழையும் கருத்தினை மற்றவருக்குப் புரியும் வகையில் எடுத்துரைப்பதாகும். கூற்று என்பதற்கு 'சொல்' என்றும், கூற்று என்பதில் பிறந்த கூறுதல் என்பதற்கு 'சொல்லுதல்' என்றும் விளக்கிச் சொல்லுதல் என்றும் தமிழ் அகராதி விளக்கம் தருகிறது. கூற்று என்பதற்கு 'கூறுகை' என்று தமிழ் லெக்சிகன் கூறும். ஆகவே கூற்று என்பதற்குப் பிறருக்குச் சொல்லுதல், கூறுதல் எனப் பொருள் கொள்ளலாம்.

## 2.**தொல்காப்பியத்தில் கூற்று**

தொல்காப்பியர் கூற்று என்பதற்குக் கூறல், கிளவி மேன என்ற சொல்லாடல்களைப் பயன்படுத்தியுள்ளார். முப்பத்திநான்கு செய்யுள் உறுப்புகளில் ஒன்றாகக் கூற்றினையும் குறிப்பிட்டுள்ளார். களவு, கற்பு ஆகிய இரண்டு காலங்களிலும் கூற்றுக்குரியவர்கள் யாவர் என்பதைத் தெளிவுப்படுத்தி கூறியுள்ளார். பார்ப்பன், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவரும் களவில் கூற்று நிகழ்த்துதற்கு உரிமையுடைய மாந்தர்கள் ஆவர். பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவரும், களவில் கூற்றுக்குரிய அறுவரையும் சேர்த்து கற்பில் கூற்றுக்குரிய மாந்தர்கள்

பன்னிரண்டு பேர் ஆவார். இவர்களைத் தவிர கற்பில் வாயில்களாக வரும் பன்னிருவருள் தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், கூத்தன், விறலியர், அறிவர், கண்டோர் ஆகிய ஒன்பதின்மரோடு பாடினி, இளையர், விருந்தினர் ஆகிய மூவரையும் இணைத்துக் கற்பில் கூற்றுக்குரிய மாந்தர்களாக தொல்காப்பியர் குறிப்பிடுவார். கூற்று நிகழுமிடங்களில் தொல்காப்பியர் பார்ப்பன், பாங்கன் ஆகியோர் கூற்றுகள் பற்றி குறிப்பிடவில்லை. இருப்பினும் பாங்கன் நிமித்தம் பன்னிரண்டென்ப என்று கூறுவதால் பாங்கனால் 12 கூட்டங்கள் நிகழும் என கொள்ளலாம். ஆனால் தனித்தனியே விளக்கப்படவில்லை.

தொல்காப்பியர் கூற்றுக்குரிய மாந்தர்கள் எவர் என்பதைத் தெளிவுப்படுத்துவதுடன் அக்கூற்றினை யாரிடம் எப்பொழுது நிகழ்த்த வேண்டும் என்பதனையும் வரையறுத்துள்ளார்.

**இவ்விடத்து இம்மொழி இவர்இவர்க்கு உரிய என்று**

**அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்**

என்ற நூற்பா வழி ஒரு கூற்றினை நிகழ்த்தும் போது எந்த சூழலில் எதனை யாரிடம் கூறுவது என அறிவுறுத்தியுள்ளார். கேட்போர், களன், காலவகை, பயன், மெய்ப்பாடு என்பவை கூற்று என்ற அமைப்பை உருவாக்கும் கூறுகள் ஆகும்.

### 3. தொல்காப்பியரின் கூற்றுக் கொள்கை பற்றிய அறிஞர் கருத்துகள்

"ஒவ்வோர் அகத்திணைப் பாடலும், அதனை படிப்பார் கண்முன்னர் சிறுநாடகக் காட்சி ஒன்றை தோற்றுவிக்குமாறு பாடப்பெற வேண்டும் என்பது தொல்காப்பியர் வரையறுக்கும் ஓர் இலக்கியக் கொள்கையாகும். இதன் பொருட்டே அவர் திணை, கூற்று, கேட்போர், களன் ஆகிய செய்யுள் உறுப்புகளை மொழிகின்றார்.

நாடகத்திற்குப் பின்னணி போல கூற்றை நிகழ்த்தும் பாத்திரங்களும் அவை இடம்பெறும் களமும் மிகவும் அடிப்படை. சரளா இராசகோபாலன், "இக்கூற்றுமுறையானது மேனாட்டாரின் நாடகத்தனிமொழி அல்லது தன்னுணர்ச்சிப் பாடல் என்ற நாடகப் பகுப்பு முறைக்கு ஒத்தாக உள்ளது" என்பார். (சரளா இராசகோபாலன், சங்க இலக்கியத்தில் தோழி, ப. 39)

### 4. கூற்று அணுகுமுறை

ஒரு கூற்றினை அணுகும்போது கூற்றுக்கான சூழல், பின்னணி, கூற்று நிகழ்த்த வேண்டிய காரணம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டே அணுக வேண்டும். அப்பொழுதுதான் கூற்றில் கூறவரும் பொருள் செறிவாகப் புலப்படும். குறிஞ்சித் திணையில் தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, பாங்கன் ஆகியோரது கூற்றுகளில் தோழி, தலைவன், தலைவி ஆகியோரது கூற்றுகளே அதிகம் காணப்படுகின்றன. பாங்கன் கூற்று இரு இடங்களில் மட்டுமே காணமுடிகிறது. பார்ப்பன் கூற்று

காணப்படவில்லை. களவுக்கால கூற்றுகளில் தலைமாந்தர்களைக் காட்டிலும் தோழியின் கூற்றுகளே மிகுதி. தோழி தலைவியுடனே இருப்பவள். அவளது உள்ளுணர்வுகளை அறிந்தவள். எனவே தான் தலைவியின் சார்பில் அவளது உணர்வுகள் தோழியின் வாயிலாக கூற்றுகள் மூலம் வெளிப்பட்டுள்ளன.

5. **புலவர்களின் தனித்தன்மை**

ஒவ்வொரு புலவர்களுக்குள்ளும் ஒவ்வொரு தனித்தன்மை உண்டு. இதனை அவர் பாடல்களைப் பதிவு செய்துள்ள விதத்தினைக் கொண்டு அறியலாம். குறிஞ்சித்திணைப் புலவர்கள் அனைவரும் ஒரே மையத்தினை நோக்கிப் பயணித்தாலும் அதனை வெளிப்படுத்திய விதம் புலவர்களுக்குப் புலவர் வேறுபடுகின்றன. ஒரு காட்சியினைக் காணும்போது தோன்றும் உள்ளார்ந்த கற்பனை, இரசிப்பு, பாதிப்பு என அனைத்தும் ஒருவருக்குத் தோன்றுவது போல் மற்றவருக்கும் தோன்றும் எனக் கூற இயலாது. இது அவரவர் மனவுணர்வுகளைப் பொறுத்தே அமைகின்றன. உதாரணமாக யானையின் குணங்களைப் பாடல்களில் வெளிப்படுத்திய இருவேறு புலவர்களின் பாடல்களைக் காணலாம்.

**"பானை திரள அன்ன பருஏர் எறுழ்த் தடக்கை**
**கொலைச்சினம் தவிரா மதனுடை முன்பின்**
**வண்டுபடு கடாஅத்து உயிர்மருப்பு யானை" (அகநானூறு : 148)**

என்ற பாடலில் பரணர், யானை பனை மரத்தைப் போன்று பருத்தக் கையை உடையது. கொல்லும் சினத்தைக் கொண்டது. நீங்காத செருக்கு பொருந்திய வலிமை கொண்டது. வண்டுகள் மொய்க்கும் மதம் உடையது. உயர்ந்த கொம்புகளை உடையது. அது குளிர்ந்த மணமுடைய பக்க மலையில் உள்ள மரம் விழ, ஒடித்துத்தள்ளும். புலியை கதறுமாறு குத்தி அதன் வெற்றியைத் தொலைக்கும். பின் தினை விளைந்த பெரிய புனத்தைக் கவர்ந்து கொள்ளும் யானையின் உருவ அமைப்பினையும், கொடூர குணத்தையும் குறிப்பிடுகிறார். இதே நிகழ்வினை கபிலர்

**"புணர்நிலை வளகின் குளகு அமர்ந்துண்ட**
**புணர் மருப்பு எழில்கொண்ட வரைபுரை செலவின்**
**வயங்கு எழில் யானை" ( கலித்தொகை : 43 )**

பெண் யானையுடன் சேர்ந்துள்ள இயல்புடைய யானை குளகு என்ற புதரின் தழையை மனம் பொருந்தித் தின்னும். அவற்றின் இளமையான கொம்புகள் அழகு மிக்கவை. மலையே நடந்து போவது போன்ற நடையினைக் கொண்டிருக்கும் என யானையின் உருவத்தினையும் குணத்தையும் அழகுபட வர்ணித்துள்ளார்.

இருவேறு புலவர்களின் நோக்கமும் யானையின் குணங்களையும் உருவத்தினையும் வெளிப்படுத்துவதுதான். பரணரின் பாடல் யானை மீதான அச்சத்தினை உருவாக்குகிறது. கபிலரது பாடல் யானையை அழகுபடக் கூறியுள்ளது.

கூற்றுகளை மொழிவதில் ஆண் பெண் புலவர்களுக்குள்ளும் வேறுபாடினைக் காணமுடிகிறது. பொதுவாக ஆண்கள் என்றாலே வெளியிடங்களுக்குச் செல்லும் உரிமையுடையவர்கள். பெண்கள் தங்கள் நிலப்பகுதிகளுக்குள் மட்டுமே செல்லும் உரிமையுடையவர். இவ்வாறான தன்மையுடைய புலவர்கள் பாடல்கள் புனையும்போது அவர்கள் உணர்ந்து கண்ட நிகழ்வுகளை மட்டுமே பதிவு செய்துள்ளனர்.

தலைவன் வரும் வழியே தாம் கண்டு வருந்தும் தலைவியின் நிலையின் ஆண்பாற் புலவர் வழியும், பெண்பாற் புலவர் வழியும் காணலாம்.

**"பெருங்களிறு உழுவை தாக்கலின் இரும்பிடிக்**
**கருவிமா மழையின் அரவும் அஞ்சுபு**
**போதேர் உண்கண் கலுழவும்**
**............................**
**இரவில் வருதல் அறியா தோற்கே" (நற்றிணை : 144)**

தலைவன் வரும் வழியில் பெண்புலி இரைதேடி அலைகின்றது. தலைவன் ஆழமான நீரோட்டத்தையுடைய காட்டாற்று வெள்ளத்தை நீந்திக் கடந்து வருகிறான். அந்த வழியில் புலி களிற்றியானையைக் கொல்கிறது. அதனைப் பார்த்த பிடியானை இடிபோல் பிளிறுகிறது. இதனைக் கேட்ட தலைவி அச்சம் கொண்டு தலைவனைப் பற்றிய கவலை கொண்டு கண்ணீர் விட்டாள் என கச்சிப்பேட்டுப் பெருந்தச்சனார் தலைவியின் நிலையையும், அவளது தவிப்பையும் காட்சிப் படுத்துகிறார். இதேபோல் தலைவன் வரும் வழியே தடத்தை நினைத்துக் கவலையுறும் தலைவியினை ஔவையாரும் காட்சிப்படுத்துகிறார்.

**""நெடுவரை மருங்கின் பாம்புபட இடிக்கும்**
**கடுவிசை உருமின் கழறுகுரன் அளைஇக்**
**காரொடு வந்த கமஞ்சூழ் மாமழை**
**ஆர் அளி இலையோ நீயே?**
**..................................**
**துணைஇலர் அளியர் பெண்டிர் இஃது எவனே (குறுந்தொகை : 158)**

என்ற பாடலில் தலைவி, தலைவன் இரவுக்குறி வருவதற்கு இடையூறாக மழை பெய்கிறது. இதனால் தலைவனுக்கு பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்று எண்ணி மழையிடம் முறையிடுவதாக அமைந்துள்ளது. இப்பாடலில் இமயமலையையும் அசைக்கும் வல்லமை மழையிடம் உள்ளது. ஆனால் சாதாரணப் பெண் என்னிடம் உன் ஆற்றலைக் காட்ட வேண்டாம் என இரங்கிக் கூறுவதாகத் தலைவி கூற்று மொழியப்பட்டுள்ளது.

இப்பாடல்கள் மூலம் இருபுலவர்களுக்குள்ளும் உண்டான வேறுபாட்டினை அறியலாம். பெண்களுக்கே உண்டான இயலாமை, தவிப்பு போன்ற உணர்வுகளை ஔவையார் பாடலில்

காணமுடிகிறது. குறிஞ்சித்திணைப் பாடல்கள் பாடிய பெண்பாற் புலவர்களது கூற்றுகளில் பெரும்பாலும் மழையினாலேயே இடர்பாடுகள் ஏற்படுவதாகக் காணப்படுகின்றன. ஆனால் ஆண்பாற் புலவர்களது கூற்றுகளில் மலையில் வசிக்கும் விலங்குகளின் நடமாட்டத்தையும், அதன் இயல்புகளையும், அரசர்களது நாடு, ஊர், தொழில் போன்றவற்றையும் காணமுடிகிறது.

**கூற்றுகளில் உணர்வு வெளிப்பாடு**

புலவனது கற்பனைத்திறனை வடிவமைக்கின்ற உயிர்ப்புக் கூறுகள் அவனது வாழ்வியல் நிகழ்ச்சிகளில் இருந்தே பெறப்படுகின்றன. படைப்பாளனின் மன இயல்புகளே அவனது படைப்பில் பாத்திரங்களின் மன இயல்புகளாக வெளிவருகின்றன. குறிஞ்சித்திணைக் கூற்றுகளில் மாந்தர்களுடைய உணர்வுப் போராட்டங்களைக் காணமுடிகிறது. ஏக்கம், கலக்கம், ஏமாற்றம், அச்சம், மகிழ்ச்சி என அனைத்து உணர்வுகளும் கூற்றுகளில் படம் பிடிக்கப்பட்டுள்ளன.

**கலக்கம்**

ஒரு செயலினை மேற்கொள்ளும்போது அது சரியா? தவறா? புரிந்ததா? புரியவில்லையா? நடக்குமா? நடக்காதா? எனப் பல கேள்விகள் மனதினைக் கலங்கச் செய்யும். அதன் முடிவு தங்களுக்கு இணக்கமாக வரும் வரை இந்நிலை காணப்படும். செயலின் முடிவிற்கேற்பவே கலக்கம் நீங்கும் அல்லது தொடரும். களவு மேற்கொள்ளும்போது இவ்வாறான மனக்கலக்கங்கள் தலைவன் தலைவியரிடையே அதிகம் காணப்படுகின்றன.

இயற்கைப் புணர்ச்சி நீங்கிய தலைமகனது மனதில் தலைவி நிறைந்து காணப்படுகிறாள். ஆனால் தலைவியின் மனதில் தான் இருப்பேனா? எனது உள்ளக்குறிப்பை அவள் அறிந்திருப்பாளா? எனத் தலைவியின் நிலையினை எண்ணித் தலைவன் கலங்குகிறான். இவ்வுணர்வு வெளிப்பாட்டினைக் கபிலர்,

**"சுனைப்பூக் குற்றுத் தொடலை தை,**
**புனக்கிளி கடியும் பூங்கட் பேதை**
**தான்அறிந் தனனோ இலளோ பானாள்**
**பள்ளி யானையின் உயிர்த்தது என்**
**உள்ளம் பின்னும் தன் உழை யதுவே"( குறுந்தொகை:142)**

என்ற தலைவன் கூற்று மூலம் வெளிப்படுத்துகிறார். தலைவனது உள்ளம் நடு இரவில் படுத்துறங்கும் யானையைப் போல பெருமூச்சு விட்டு, பிரிந்து வந்த பிறகும் கூட அவள் பக்கத்திலேயே இருக்கிறது. தினைப்புனத்துக்கு வரும் கிளிகளை ஓட்டுபவளும் பூப்போன்ற கண்களை உடையவளுமாகிய அவள் இதனை அறிந்து கொள்ளவில்லையே என் தன் மனக் கலக்கத்தைத் தலைவன் வெளிப்படுத்துவதை உணரலாம்.

**ஏக்கம்**

விரும்பிய ஒன்றைப் பெறாத நிலை ஏற்படும்போது அதனைப் பெறவேண்டும் என மனம் உந்தும். இது ஏக்கமாக மனதில் நிலை கொள்ளும். இந்த ஏக்கம் களைய மனது வேறொன்றை நாடும் அல்லது கிடைத்துவிட்டது போல மனம் தேற்றிக்கொள்ளும். இந்நிலை களவுக் காலத் தலைவியிடம் பிரதிபலிக்கிறது. களவில் தலைவன் தலைவி இருவரும் ஒருவரையொருவர் காண வேண்டும் என அவா தோன்றும். ஆனால் அனைத்து நேரங்களிலும் காணும் நிலை ஏற்படாது. இதனால் இவர்களது மனம் ஏக்கம் கொள்ளும்.

**"வயவுப்பெடை அகவும் பானாட் கங்குல்**
**மன்றம் போழும் இனமணி நெடுந்தேர்**
**வாராது ஆயினும் வருவது போலச்**
**செவிமுதல் இசைக்கும் அரவமொடு**
**துயில் துறந்தனவால் தோழி என் கண்ணே" (குறுந்தொகை : 301)**

என்ற குறுந்தொகைத் தலைவி கூற்றில், தலைவனைக் காண வேண்டும் என்ற வேட்கை மிகுதியாக தலைவிக்கு ஏற்படுகிறது. தலைவன் வரமாட்டான் என்பது தெரியும். இருப்பினும் மாரிகள் பூட்டிய தோ வரவில்லையெனினும் வருவது போலவே தோன்றுகிறது, அதனால் துயில் கொள்ள முடியவில்லை என தன் ஏக்கத்தின் நிலையினைத் தலைவி தோழியிடம் கூறுகிறாள். வராத தலைவன் ஒரு வேளை வந்துவிட்டால் அவனைக் காணலாமே என்ற ஏக்க உணர்வினை இக்கூற்றில் காணமுடிகிறது.

**ஏமாற்றம்**

எதிர்பார்த்த ஒன்று நடைபெறாதபோது மனம் ஏமாற்றம் அடையும். இதனை சிலரின் மனங்கள் ஏற்றுக் கொள்ளாது. அதன் வெளிப்பாடாக சினம், தவிப்பு, விரக்தி போன்றவை வெளிப்படும். குறிமறுத்தல், பிரிவு அல்லக்குறிப்படல், தமர் வரைவு மறுத்தல் போன்ற சூழல்களில் தலைமாந்தாகளது மனம் ஏமாற்றத்தை சந்திக்கும்.

**"வாருறு வணர்கதுப் புளரிப் புறஞ்சேர்பு**
**அழாஅல் என்றுநம் அழுதகண் துடைப்பார்**
**யாரா இவர்கொல் தோழி சாரற்**
**பெரும்புனக் குறவன் சிறுதினை மறுகாற்**
**கொழுங்கொடி அவரைப் பூக்கும்**
**அரும்பினி அச்சிரம் வாராதோரே" (குறுந்தொகை : 82)**

குறித்த பருவத்தில் வருவதாகச் சொல்லிச் சென்ற தலைவன் வருவான் என நினைத்த தலைவி அவன் வராது கண்டு ஏமாற்றமுற்றாள். அதன் வெளிப்பாடு காதலன் தான் வருத்தமுறும் போதெல்லாம்

கண்களில் வழியும் நீரினைத் துடைத்துத் தேற்றுவான். ஆனால் இப்பொழுது வரவில்லை. எனவே என்னை மறந்துவிட்டான் போலும் என தோழியிடம் தன் ஏமாற்றத்தால் ஏற்படும் ஆதங்க உணர்வினை வெளிப்படுத்துகிறாள். இக்கூற்றில் தலைவியது மனவுணர்வினைக் காணமுடிகிறது.

**அச்சம்**

களவொழுக்கம் மேற்கொள்ளும் மாந்தாகளுக்கிடையே பெரிதும் அச்ச உணர்வுடன் தலைவியே படைக்கப்பெற்றுள்ளாள். இரவில் தலைவன் வரும் வழியேதம், அலர், வெறியாட்டு போன்ற சூழ்நிலைகளில் தலைவி மிகுந்த அச்சம் கொண்டவளாகக் காணப்படுவாள். ஆனால் தலைவனிடம் இவ்வுணர்வு காணப்படவில்லை. தலைவிக்குப் பெற்றோர் வெறியாட்டு அயரும்போது தலைவி மிகுந்த அச்சம் கொள்கிறாள்.

**"வெறிகமழ் நெடுவேள் நல்குவன்எனினே**

**செறிதொடி உற்ற செல்லலும் பிறிதி எனக்**

**கான்கெழு நாடன் கேட்பின்**

**யான் உயிர் வாழ்தல் அதனினும் அரிதே" ( அகநானூறு : 98)**

தலைவியின் உடல் மாறுபாட்டினை அறிந்து அன்னை வெறியாட்டு அயருகிறாள். வேலன் வெறியாடிய பின்னரும் தலைவியின் உடல் பொலிவினைப் பெறவில்லை என்றால் அவளுடைய களவொழுக்கம் பலரும் அறிய வெளிப்பட்டு அலராகும். பொலிவுப் பெறச் செய்தால் அப்பொலிவு காணும் தலைவன் இவள் நோய்க்குக் காரணம் தன்பால் வைத்த காதலன்று என எண்ணித் தலைவியை வெறுப்பான். அவ்வாறு தலைவன் வெறுத்தால் உயிர்வாழ மாட்டாள் எனத் தலைவி கூறுவதிலிருந்து அவளது அச்ச உணர்வைக் காணமுடிகிறது.

**மகிழ்வு**

எதிர்பார்த்த ஒன்று நடைபெறும்போது மனம் மிகுந்த மகிழ்ச்சியினை அடையும். களவில் தலைமாந்தர்கள் வரைவினை எதிர்பார்த்திருப்பர். அவ்வரைவானது தமர் ஏற்க நடைபெறும்போது எல்லையற்ற மனமகிழ்ச்சியினைக் கொள்வர்.

**"பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ**

**தண்டுடைக் கையர் வெண்தலைச் சிதவலர்**

**நன்று நன்று என்னும் மாக்க ளோடு**

**இன்று பெரிது என்னும் ஆங்கணது அவையே" (குறுந்தொகை : 146)**

என்ற பாடலில் தலைவியது மனமகிழ்வினைக் காணலாம். வரைவு நீட்டித்த தலைவனால் களவு வெளிப்பட்டு அலராகிவிடுமோ எனத் தலைவி அஞ்சியிருந்தாள். ஆனால் அவ்வச்சம் நீங்கும் பொருட்டு தலைவன் தமருடன் வந்து மகட்கொடை கேட்டதால் தலைவி எல்லையில்லா மகிழ்ச்சி கொண்டாள். அவளது மகிழ்வுணர்வினைத் தோழியிடம் வெளிப்படுத்தும் பாடலில் காணமுடிகிறது.

சங்கப் பாடல்கள் கூற்றுகளாக வடிவமைக்கப்பட்டுள்ளன. அக்கூற்றுகளின் வழி மாந்தர்களது மனவுணர்வுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை அறியலாம்.

**தொகுப்புரை**

1. வரைவிற்கு முன் நிகழும் களவொழுக்கம் இரண்டு மாதங்கள் நடைபெறும். பின் கற்பு வாழ்க்கைக்கு மாறும்.
2. பாடல்களின் மையம் உரிப்பொருளே ஆகும். எனவே புலவர்கள் அதனை மையமிட்டே பாடல்களை வடித்துள்ளனர்.
3. தலைவனும் தலைவியும் வெவ்வேறு ஊரினைச் சேர்ந்தவர்கள். அதனால் இருவருகளுக்கிடையே பிரிவின்பாற்படும் உணர்வுப் போராட்டங்கள் மிகுதியாகப் பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன.
4. கூற்றுகளில் கலக்கம், ஏக்கம், அச்சம், ஏமாற்றம், மகிழ்வு போன்ற மாந்தர்களது உணர்வினைக் காணமுடிகிறது.
5. புலவர்களது தனித்தன்மையும், ஆண்பாற் புலவர்களுக்கும் பெண்பாற் புலவர்களுக்கும் உண்டான வேறுபாடு கூறப்பட்டுள்ளது.

**துணைநூற்பட்டியல்**

1. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (உ.ஆ)
   நற்றிணை மூலமும் உரையும்
   கழக வெளியீடு சென்னை. 2007
2. சோமசுந்தரனார் - பொ .வே
   குறுந்தொகை மூலமும் உரையும்,
   கழக வெளியீடு சென்னை. 2007
3. நச்சினார்க்கினியர்(உ.ஆ)
   கலித்தொகை மூலமும் உரையும் ,
   கழக வெளியீடு சென்னை2007
4. செயபால்.இரா.இ
   அகநானூறு மூலமும் உரையும்
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை. 2005

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்

57

கு.திலகவதி
அ.பெ.மே.நி.பள்ளி, தொண்டாமுத்தூர்- கோவை

**ஆய்வுச்சுருக்கம்**

உளவியல் என்பது நம் மனதில் ஏற்படும் எண்ணங்களை நம் அன்றாட வாழ்க்கையில் எவ்விதமான மாற்றங்களை ஏற்படுத்துகிறது என்பதை அறிவியல் முறையில் ஆய்வுசெய்யும் ஆய்வுக்களம். மற்றவர்களது மன எழுச்சிகளை எண்ணங்களை கூர்ந்து நோக்குவதன் மூலம் நமக்கான தீர்வுகளை நாம் தேட இயலும் அவ்வகையில் சங்க இலக்கியங்களில் மனதின் எண்ணங்களை படம் பிடித்துக் காட்டியிருக்கும் செய்யுள்களின் வழி மனவெழுச்சிகளை உணர்ந்து கொள்வது எளிய வகையில் உளவியல் கற்றுக்கொள்வதாகும்.

**முன்னுரை:**

உளவியல் என்பது மனதின் செயல்பாடுகளை நடத்தைகளை ஆய்வு செய்யும் துறை எனலாம்.மனிதனுடைய மனதின் எண்ண ஓட்டங்களை அழகிய காட்சிகளாய் நம் கண் முன் நிறுத்துவது இலக்கியங்கள் எனலாம். தமிழில் உளவியல் சார்ந்து எண்ணற்ற இலக்கியங்கள் நிறைந்துள்ளன.மனிதனின் அக வாழ்க்கையின் கூறுகளை வெளிப்படுத்தும்.காதல் திருமணம், குடும்ப வாழ்வு ,வாழ்க்கை முறை போன்ற அகம் சார்ந்த உளவியலையும், வீரம், கொடை,தொழில் போன்ற புறம் சார்ந்த உளவியலையும் உள்ளடக்கிய தமிழ் இலக்கியங்களில் பொதிந்துள்ள உளவியல் சிந்தனைகளை பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழ் இலக்கியங்களில் உளவியல்:**

அகத்திணை சார்ந்து வரும் சங்க இலக்கியங்கள் அனைத்துமே உளவியல் இலக்கியங்களே.அவ்வகையில் இலக்கியமும் , உளவியலும் மிக நெருங்கிய தொடர்பு உடையவை.சங்க இலக்கியம் வாழ்வியல் அடிப்படையில் அமைந்துள்ளதால் அதனுள் உளவியல் கூறுகளை அதிக அளவில் காண முடிகிறது.வாழ்வில் எதிர்கொள்ளும் சிக்கல்களில் உருவான ஒரு மனநிலையின் எதிரொலியாகவே அகத்திணையும் புறத்திணையும் அமைகின்றன.

**அகத்திணை பாடல்களில் உளவியல்:**

பெரும்பாலும் அகத்திணைப் பாடல்களின் பாடுபொருள் ஏதெனும் ஒரு மனநிலையினையோ அல்லது அந்த மனநிலை விளைவிற்குரிய சூழலையே பாடுபொருளாகக் கொண்டு விளங்குகின்றன.சங்க இலக்கியத்தில் இடம்பெறும், தலைவி, தலைவன், தாய்,செவிலி, பரத்தை, தோழி வாயில்கள் என்பேராவர்

இவர்கள் மனதில் பொதிந்து வைத்திருப்பதை நேரடியாக கூறாமல் மனதில் கொள்ளும் வகையில் செய்யுளில் மனநிலையை காட்டுகின்றனர்.

**திருக்குறள்:**

வள்ளுவப் பெருந்தகை காதல் சார்ந்த உளவியலை அழகாய் எடுத்துக்காட்டும் இடம்.

**"வலுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தலுதாள்**

**யாருள்ளித் தும்மினீர் என்று" காமத்துப்பால் - குறள்** 1317

தலைவன் தும்மினான். அருகில் இருந்த தலைவி தலைவனை நீடூழி வாழ்க என்று வாழ்த்தினாள். அவன் மனம் மகிழ்வதற்குள் உள்ளம் மாறி அழத் தொடங்கினாள். நான் இங்கிருக்க உங்களை யார் இப்போது நினைத்தார்கள் என்று. எப்படியோ தலைவன் சமாதானம் செய்து முடித்தான். அதற்குள் இன்னொரு தும்மல் தலைவன் பயந்து தும்மலை மறைக்கிறான்.அதற்கு தலைவியின் பதில் வேறுமாதிரி இருந்ததால்

**"தும்முச் செறுப்ப அழுதாள் நுமர்உள்ளம்**

**எம்மை மறைத்திரோ என்று" குறள்-1318**

எனக்கு தெரியாமல் வேரு யாரோ உம்மை நினைப்பதை மறைக்கிறீர்கள் என்று கோபித்து அழுததாக வள்ளுவப் பெருமான் கூறுகிறார். உளவியல் என்பது மற்றவர் மனதை புரிந்து கொள்வது. இங்கு மனைவியின் மனநிலையை அன்பை புரிந்து கொண்ட கணவனின் செயல்பாட்டை அற்புதமாக காட்டியிருக்கிறார் வள்ளுவர்.

**குறுந்தொகையில் உளவியள்;**

மக்களின் அக வாழ்க்கையான காதலை உலகிற்கு எடுத்துக்கூறும் அக இலக்கியத்தில் முக்கிய இடம் பிடிக்கும் குறுந்தொகையில் உளவியல் பாங்குற எடுத்தாளப்பட்டுள்ளது.களவு மற்றும் கற்பு காலத்தில் எற்பட்ட இன்ப துன்ப உணர்வுகளில் மகளிரே மிகுந்த பாதிப்புக்குள்ளாயினர். தலைவனை பிரிந்து இருக்கும் தலைவயின் மனவெழுச்சியை பற்றிக் குறிப்பிடும் போது புறமனதில் உண்டாகும் இயல்பான ஆசைகளை உணர்வுகளை அடக்கி வைக்கும்போது அவை உள்ள இறுக்கமாக உடல் பிணியாக மனவெழுச்சியாக உறுமாறுவதை காணலாம்.

குறுந்தொகை 102 - நெய்தல் தலைவி கூற்று

**"உள்ளின் உள்ளம் வேமே உள்ளா**

**திருப்பினெம் அளவைத் தன்றே வருத்தி**

**வான்நோய் வற்றே காமம்**

**சான்றோர் அல்லர்யாம் மரீஇ யோரே"**

**-அவ்வையார்**

தலைவரை நினைத்தால் உள்ளம் வெதும்பி நிற்கும் நினையாமல் இருக்கவும் இயலவில்லை. வருவார் என்றாலும் அந்த நாளை நினைத்து ஏங்கும் நிலையில் அவளின் உள்ள எழுச்சி அழகாய் விளக்கப்பட்டது.

உள்ளத்திள் அமைதி இல்லாவிட்டால் உடலில் அமைதி இல்லாமல் போகும், உள்ளம் துன்பத்தில் இருக்கும்போது உடலும் வருந்துவது இயற்கையே . தலைவனின் பிரிவால் ஆற்றாது வருந்தும் தலைவி தோழியிடம் தலைவனின் பிரிவை எண்ணினால் தன் உள்ளமானது வெந்து போகிறது என்றும் அதற்கு பயந்தால் இத்துன்பம் தன்னால் தாங்கிக் கொள்ளும் அளவிற்கு உரியது அன்று என்று குறிப்பிடும் நிலையினை

**“ஆ அ ! ஒல் எனக் கூவுவேன் கொல்**

**அலமரல் அசைவளி அலைப்ப என்**

**உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே”**

**குறிந்தொகை -28**

என்று அழகுற காட்சிப்படுத்துகிறார் ஔவையார் .

**நற்றினையில் உளவியல்:**

சங்க இலக்கிய பாடல்களில் மனவெழுச்சியை சரியாக கையாண்டு சூழலை மிகச் சரியாக பயன்படுத்தி நல்லது மட்டும் நடக்குமாறு குறிப்பறிந்து நடப்பதில் முக்கிய பங்கு தோழிக்கே இருக்கிறது.

‘பாம்பும் சாகாமல் தடியும் முறியாமல்’ என்று ஒரு பழமொழி உண்டு. அதுபோல் தலைவன் தலைவி இருவரது மனநிலையையும் நன்கு அறிந்து கொண்டு அதற்கேற்ற சூல்நிலையை சரியாக கையாளுவாள் தோழி. உதாரணமாக நற்றிணை 85-ம் பாடலிலே

தலைமகள் இரவுக்குறி வருவதை அறிந்த தோழி அவள் வரவு மறுக்கிறாள். அதனை தலைவிக்கு நேரடியாகக் கூறாமல் புலிக்கு அஞ்சி விரைந்து செல்லாத நடையையுடைய தன் கன்றை பிடியானை துணை நின்று பாதுகாக்கும். தலைவன் வரும் வழி அத்தகைய கொடிய வழி என்று கூறியதோடு தாங்களும் தலைவனின் பிரிவால் ஏற்படும் துன்பத்திற்க்கு அஞ்சினாலும் அவள் இருளில் வரும்போது ஏற்பட இருக்கும் துன்பத்தை எண்ணி , அவன் நன்மைக்காக அவனை வாராது பாதுகாக்க வேண்டும் என்கிறாள். தலைவனின் வரவினை தடுப்பது தலைவிக்கு வருத்தமும் மன வேதனையையும் உருவாக்கும் என்று அறிந்த தோழி. அவள் மனநுட்பம் தனை உணர்ந்தவளாய் பிறிதோர் எடுத்துக்காட்டை கூறி புரிய வைக்கிறாள்.

**“ஆய் மலர் மழைக் கண் தெண்**

**பனி உறைப்பவும்**

**வேய் மருள் பணைத் தோள்**

**விறள் இழை நெகிழவும்**

**அம்பல் மூதூர் அரவும் ஆயினும்**

**குறு வரி இரும் புலி அஞ்சிக் குறுநடைக்**

**கன்றுடை வேழம் நின்று காத்து அல்கும்"**

**-நற்றிணை 85**

தலைவியை நேரடியாக வேதனைக்குள்ளாக்காமல் குறிப்பு பொருள் மூலம் உணர்த்திய தோழி உள்ள கிளர்ச்சிகளை நன்கு உணர்ந்தவள் எனலாம்.

**கலித்தொகையில் உளவியல்:**

நம் மனது குழப்பத்தில் இருக்கும் பொழுது சாதாரணமாக தோன்றும் தீர்வு கூட மூளைக்கு எட்டாது. மனம் அவதியில் அவசரத்தில் இருந்தால் அறிவு வேலை செய்யாது. அறிவும் உணர்வும் இரு வேரு எதிர்கொணங்களில் செயல்படும். நம் துன்பத்தை மூடி மறைத்து மனதிற்குள்ளே புதைக்கும் போது அது மனச்சிதைவு நேரடியாக மாறுகிறது. மூன்றாமவர் அந்த பிரச்சனையை வெளியே இருந்து பார்ப்பதால் எளிதில் கையாளுகிறார்.

கலித்தொகை பாலைக்கலியில் 9-ம் பாடல் (நல்லந்துவனார்)

**"எறித்தரு கதிர்தாங்கி ஏந்திய குடை நிழல்...."**

என்ற பாடல் உளவியல் சித்திரம் என்றால் மிகையாகாது.

**"என் மகள் ஒருத்தியும் பிறள்மகன் ஒருவனும்**

**தம்முள்ளே புணர்ந்த தாம் அறிபுணர்ச்சியர்**

**அன்னார் இருவரைக் காணீரோ? பெரும!"**

என்று கதறியபடி தாய் செல்ல

**"நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம் என் செய்யும்?**

**தேருங்கால் , நும் மகள் நுமக்கு ஆங்கு அனையளே**

..........

**சிறந்தானை வழிபடீஇச் சென்றனள்**

**அறம் தலைப்பிரியா ஆறும் மற்று அதுவே"**

தலைவனோடு காதல் கொண்ட உணர்வால் உளம் புகுந்த உற்றானோடு உளர் நீங்கும் மகளை தேடி செல்லும் தாயிடம் உன்னால் பிறந்த மகள் உனக்கு மட்டுமே உரியவள் அல்லள். மலயிலே பிறந்த்தால் யாரேனும் சந்தனத்தை அரைத்து மலைமீது பூசுவார்களா,

கடலிலே பிறந்த வெண்முத்தை கடலுக்கே அணிவிப்பார்களா

இன்னிசை தன் பிறந்த யாழுக்கு செய்வது என்ன?

என்று கேள்விகளை எழுப்பி காதலனோடு கற்புநெறியில் போய்விட்ட மகளை குறித்து வருந்தாதே என்று தெளிவான முடிவை சுட்டிக் காட்டுகிறார். மனச்சோர்வுற்றிருந்த தாயை தேற்றும் வழியாக உளவியல் கையாளப்பட்டுள்ளது. தாயின் பிரிவுத் துயரை அழகாக காட்டும் பாடல் இது.

**மனவெழுச்சி:**

உணர்ச்சிகளின் மேலோங்கி நிற்கும் நனவு நிலையே மனவெழுச்சி என்பது.

வினை காரணமாக பிரிந்த தலைவன் காலம் நீட்டிக்கிறான். பிரிவாற்றாமையால் வருந்தும் தலைவி தன் நெஞ்சிடம்

**“தலைவரம்பு அறியாத் தகைவரல்**
**வாடையொடு**
**அலர் அரும்பு ஊழ்ப்பவும்”** -273 **அகநானூறு**

என மொழிகிறாள். தலைவன் மீது கொண்ட பந்தின் காரணமாக அவன் பிரிந்த காலத்தில் தனக்கு நேர்ந்த உள்ளுணர்வுகளை இயம்புகிறாள்.

அகப்பாடலில் கூறப்படும் பசலை நோய் உடல் நோயன்று அது உள்ள நோயே ஆகும்.

**“செலவு அயர்ந்தினால் யானே பலபுந்து**
**உண்ணா உயக்கமொடு உயிர் செலச் சாஅய்**
**தோளும் தொல்கவின் தொலைய நாளும்**
**பிரிந்தோர் பெயர்வுக்கு இராங்கி**
**மருந்து பிறிது இன்மையின் இருந்துவினை இலனே”** -147 **அகநானூறு**

தலைவனின் பிரிவால் உளபாதிப்புக்கு உள்ளான தலைவி யாவற்றையும் வெறுத்து உண்ணாமல் உசல் மெலிவுற்று அழகு கெட்டதாக கூறுகிறாள். உள்ளத்தில் பாதிப்பை ஏற்படுத்திய அவ்வுணர்வே நேரடியாக நிலைமாற்றம் ஆகியது.

இதையே வள்ளுவர்

**“பிணிக்கு மருந்து பிறமன் அணிஇழை**

**தன்நோய்க்குத் தானே மருந்து” -குறள் 1102**

வழி மொழிகிறார்.

இதோடு

**“புலம்புனிரு தீர்ந்த புதுவரல் அற்சிரம்**

**நலம்கவர் பசலை நலியவும் நம்துயர்” -273, அகநானூரு**

என்ற அடிகளும் தலைவியின் நிலைமாற்றத்தை உணர்த்துகின்றன.

**முடிவுரை**

**“உடையும் என் உள்ளம் -நற்றினை 75 (குறிஞ்சி)**

**“இணர் இறுபு உடையும் நெஞ்சம்” -அகநானூறு 217**

என்ற சொற்றொடர்கள் இலக்கியங்களில் உணர்வு வெளிப்பாடுடன் கூடிய உளவியல் பாங்கு அழகுற எடுத்தாளப்பட்டுள்ளது.

உளவியல் என்னும் விளக்கின் துணை கொண்டு இலக்கியத்தை ஆராயும் போது பல புதிய பாதைகள் தெரிய வரும்.

மனித இயக்கங்கள் அனைத்தும் உள்ளம் சார்ந்தவையாகும். உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துவது தான் கலைகள் உளவியல் ஆய்வுகளுக்கும். கலை, இலக்கிய படைப்பிற்கு மனமே அடிப்படை காரணியாய் அமைகிறது. இலக்கியங்கள் அனத்துமே ஏதாவது ஒரு வகையில் உளவியல் சார்ந்தே அமைகின்றன.அதனை சில எடுத்துகட்டுகள் வழி கண்டோம்.

**துணை நூற்பட்டியல்**

1.திருக்குறள் விளக்கம் - முனைவர் பா.வளன் அரசு - சூர்யா பதிப்பகம்

2.குறுந்தொகை – அரவிந்தன்- காவியா பதிப்பகம்

3.நற்றிணை - எட்டுத்தொகை உரைகள் அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு

4.கலித்தொகை தெளிவுரை -புலியூர் கேசிகன்

5.அகநானூறு - சங்க இலக்கிய நூல்கள்

6. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் ராஜா வரதராஜா.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்கற்ப நிராகரணத்தில் தலைமைப் பண்புகள்

58

**முனைவர் ர. நித்யா, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**கோவை**

**ஆய்வுச் சுருக்கம்**

ஆளுமையென்பது பல சிறந்த பண்புகளின் கூட்டமைப்பாகும். அப்பண்புகள் ஒரு தனிமனிதனின் தனித்தன்மையோடு கூடியத் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாகும். தனிமனிதன் தன்னைத்தானே ஆய்வு செய்தல், நேர்மை, நேர்மையற்றிருத்தல் போன்றவைப் பண்புகளாகும். ஒவ்வொரு தனிமனிதனும் ஆதாரப் பண்புகளைப் பெற்றிருக்கின்றான். இவை மறைவானப் பண்புகளாகும். மேற்பரப்புப் பண்புகள் இவற்றை அடிப்படையாக கொண்டுள்ளன. தனியொருவன் ஆதாரக் கூறான மனவெழுச்சியைப் பெற்றிருக்கும் பொழுது மட்டுமே கோபம் அடைகிறான். காட்டல் என்பவரின் கூற்றுப்படி இவ்விருக் கூறுகளின் தொகுப்பே “தனி மனிதனின் ஆளுமை” ஆகும்.

ஒருவனிடம் ஒரு குறிப்பிட்ட செயல் காணப்படுகிறது. இந்தக் குறிப்பிட்டச் செயல் பழக்கச் செயலாக வளர்கிறது. இத்தகைய பழக்க செயலின் செயல்பாடுப் பண்புக் கூறுகள் ஒன்று சேர்ந்து ஆளுமையாக வளர்கிறது. தனிமனிதனின் நல்ல பண்புகளே அவனை உடல்,மனவெழுச்சி, ஒழுக்கம் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்கும் வீடு, பள்ளி, மற்றும் சமுதாயத்தோடும் இணக்கமான முறையில் நடந்துக் கொள்வதற்கு உதவுகின்றது. இதன் மூலம் சமூகம் வளம்பெறும். இக்கட்டுரையில் தனிமனிதத் தலைமைப் பண்புகளை இக்கட்டுரையில் சங்கற்ப நிராகரணப் பாடல்களில் ஆராய்ந்து ஆளுமைக் குறித்த விளக்கத்தினை காணலாம்.

**முன்னுரை**

ஆளுமைப் பண்புகளில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுவது தலைமைப் பண்பாகும். சிக்மண்ட் ஃபிராய்டின் குழந்தைப் பருவத்திலிருந்தே தனிமனிதனின் ஆளுமைப் பண்புகள் வளர்ச்சியடைகின்றன என்ற கோட்பாடு தனி மனிதத் தலைமைப் பண்புகளுக்கு ஊன்றுகோலாக அமைகிறது. மனிதன் தன்னுடைய ஆற்றலினால் பிறரைத் தன்பால் ஈர்த்து, நல்வழிப்படுத்திச் சென்று தான் மேற்கொண்ட குறிக்கோளினை அடையச் செய்வதே தலைமைப் பண்பாகும். சைவ சித்தாந்த நூல்களின் வாயிலாக முழுமுதற் கடவுளான சிவனின் தலைமைப் பண்புகள் வெளிக்கொணரப்பட்டு, ஃபிராய்டின் ஆளுமைக் கொள்கையுடன் பொருந்தச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**உளவியல் சிந்தனை**

உளவியல் வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது ஆளுமையாகும். ஆளுமையும், நடத்தையும் ஒன்றொடொன்று இணைந்தவை. தொடக்கத்தில் மனிதனின் நடத்தையியல் தொடர்பான ஆய்வே செய்யப்பட்டன. அதன் பின் நடத்தைத் தொடர்பான காரணிகளைக் கண்டறியும் நோக்கில் ஆளுமை உளவியல் தோன்றியது. உளவியலும் ஆளுமை உளவியலும் இணைந்தக் கோடுகளாகும். உளவியலின் முன்னோடிகளான கிரேக்கர்களிடமிருந்துத் தொடங்கி வளர்ந்த வந்த உளவியல் துறையானது மனித மெய்ம்மைகளைக் கண்டறியத் தத்துவம், உடலியல், மருத்துவம் ஆகியத் துறைகளின் மூலமாக சோதனைகளின் அடிப்படையில் ஆய்வுகள் பல மேற்கொள்ளப்பட்டது. இதன் விளைவாக உருவானதே நடத்தையியல் உளவியலாகும். இத்துறையின் மூலமாக மனித உள இயல்புகளைக் காண முயற்சித்தது. இதனை தகவமைத்துக் கொள்ளவே ஆளுமை உளவியல் உருவாக்கப்பட்டது. மனிதனின் எண்ணம் செய்கைகள், நடத்தைகள் போன்றவற்றின் மூலமாக உள்ளத்தைக் கட்டமைக்க ஆளுமை உளவியல் பயன்பட்டது. அறிவியல் முறை உளவியலை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட நடத்தையியலும், ஆளுமையியலும் “அணுகுமுறைகள்” எனக் கூறுவதில் ஐயமில்லை. மருத்துவ உளவியலில் நடத்தைகள் மட்டும் கண்காணிக்கப்பட்டது. இவற்றில் நோய்வாய்ப்பட்ட மனிதனும் அடங்குவான். நடத்தைகளின் வழியே நோயாளிகளின் உள இயல்புகளை கண்டறிந்து மருத்துவத்தால் குணமடையச் செய்வதே உளவியலாகும். இப்போக்கிற்கு முன்னோடியாக இருந்தவர் ஃபிராய்ட் ஆவார். “மனித ஆளுமையானது இணையற்றது; எல்லையற்றது” என்பதே இவரின் கருத்தாகும். இவரைத் தொடர்ந்து வந்தத் தத்துவவாதிகள் மனிதனின் குணம், உள்ளம் மற்றும் உடல் அடிப்படைகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

**ஃபிராய்டின் ஆளுமை விளக்கம்**

ஆளுமையென்பது வண்ணம் போன்றது. வண்ணங்களில் பல நிறமிருப்பதைப் போல, ஒவ்வொரு மனிதருக்கும் தனிப்பட்ட ஆளுமைகள் காணப்படுகிறது. ஒருவரின் ஆளுமையைக் குறிப்பிடுவதற்கு முன் அவனது சிறப்பியல்புகளையும், உளப்பண்புகளையும் முழுவதும் ஆராயாமல் முடிவுக்கு வர முடியாது. இவை மனிதருக்கு மனிதர் வேறுபடும் தன்மையுடையது. இவ்வேறுபாடுகளை ஆளுமைக் கோட்பாடுகள் விளக்குகிறது. இவைச் சோதனை மற்றும் பரிமாற்ற உறவுமுறையைச் சார்ந்தது. தனி மனித உள்ளத்தின் “சுருக்க வரையறை” என்பர். மனிதன் பிறரிடம் பழகும் விதம், செயற்பாடுகள், நடத்தைகள், அவனது அனுபவங்கள் போன்ற தனிமனித இயல்புகளை சுருங்கச் சொல்வதே ஆகும். ஆளுமையென்பது அகச்சார்புடையது மட்டுமன்றி சமூகத்துடனும், தனிமனிதச் சூழலுடனும் தொடர்புடையது. உடல் முதிர்ச்சிக்கு ஏற்பத் தோற்றத்தில் மாற்றங்கள் உருவாகுவதுப் போல உள முதிச்சிக்கேற்ப ஆளுமையும் வேறுபடுகின்றன என்ற கருத்தும் நிலவுகிறது. ஆளுமைக்குப் பல்வேறு அறிஞர்களும் பலவிதமான

விளக்கங்களை அளித்துள்ளனர். ஆல்போர்ட் 50 வரையறைகளைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அவற்றுள் முதன்மையானது "உள ஆற்றல்" ஆகும். இவற்றின் ஒழுங்கமைந்தப் பண்புகள் மற்றும் நடத்தைகளை ஒழுங்குப்படுத்துவதே ஆளுமையாகும் என்பதே இவரின் கருத்தாகும். கட்டெலின் கூற்றுப்படி மனிதன் குறிப்பிட்ட சூழலில் எவ்வாறு நடந்திக் கொள்கிறான் என்று கூறுகிறார். இத்தத்துவவாதிகளின் கருத்துக்கள் அனைத்திலும் ஃபிராய்டின் தாக்கம் காணப்படுகிறது. ஏனெனில் இவர்கள் அனைவரும் ஃபிராய்டுக்குப் பின் தோன்றியவர்கள்.

ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையும் , அனுபவங்களும் வேறுபடுகின்றன. அதனால் ஆளுமையும் வேறுபடுகின்றன. இவரைப் பொறுத்தவரை 6 முதல் 8 வயதிலிருந்தே ஆளுமை கட்டமைகிறது என்கிறார். மனித உளச் செயல்கள் அனைத்தும் குழந்தைப் பருவத்தை அடிப்படையாகக் கொண்டவை எனக் கூறுகிறார். உடல் வளர்ச்சியைப் போலவே உள்ளமும் வளர்ச்சி அடைந்து விடும் . ஃபிராய்டின் ஆளுமையானது அமைப்பியல் உளவியல் வகையைச் சார்ந்ததாகும். மனித உள்ளத்திலிருந்து வெளிப்பாடுகளனைத்தும் குறிப்பிட்ட அமைப்புப்பிற்கு உட்படுபவையாகவும், ஒழுங்கமைவு கொண்டவையாகவும் இருக்கும் என்கிறார். இவரதுக் கோட்பாடுகளில் மிகவும் முக்கியமானது "இருமை வாதம் " ஆகும். நனவு மனம் பிளவுபடும் போது மனித உள்ளத்தில் இரண்டு விதமான ஆளுமைகள் உருவாகின்றன எனவும், இவ்வகையான இரட்டை விதமான ஆளுமை உளப்பாங்கு அனைவரிடமும் தோன்றும் எனவும் கூறுகிறார். நனவிலிக்கும் நனவு மனதிற்கும் தனித்தன்மைகள் உண்டு. இவை இரண்டும் ஒரே சமயத்தில் நிகழ்பவை. இதனால் மனித மனதில் உண்டாகும் முரண்பாடு, போராட்டம் ஆகியவற்றிலிருந்து அகமனதிற்குத் தப்பிக்க வழியில்லை. இதனால் தான் நடத்தைகளில் நனவின் இயல்பையும், நனவிலியில் பிறழ்ந்த நிலையையும் காணலாம். ஃபிராய்டின் ஆளுமைத் தன்மை இவற்றை அடித்தளமாகக் கொண்டே அமைந்துள்ளது. ஆளுமைக் குறித்து தனியாகக் கட்டுரை எதுவும் இவர் இயற்றவில்லை. ஆயினும் இவரது உளப்பகுப்பாய்வுகள் அனைத்தும் ஆளுமைக் கோட்பாடுகளை விளக்குவனவாக உள்ளன. இவர் குறிப்பிடும் ஈகோ வளர்ச்சியே ஆளுமையாகும். ஈகோவின் வளர்ச்சிப் படிநிலைகளை விளக்குவதாகவே ஃபிராய்டின் ஆளுமைக் கோட்பாடுகள் அமைந்துள்ளன. ஃபிராய்ட் தனது ஆளுமைக் கோட்பாட்டில் மூன்றுவிதமான உளக்கூறுகளை முன்வைக்கிறார். அவையாவன,

1.உந்தல்கள் - உடல் சார்ந்தவை

2.இறுக்கக் குறைப்பு - உள்ளம் சார்ந்தவை

3.உள்ளுணர்ச்சி - உடலும் உள்ளமும் சார்ந்த உள்ளுணர்வுகள்

மேற்கண்ட கூறுகளின் மூலம் ஆளுமை புலப்படுகிறது.

**சங்கற்ப நிராகரணத்தில் தலைமைப் பண்புகள்**

நவிற்றிய நிரையில் அவித்தையினோன் உரை

நித்தன் அறிவன் சுத்தன் அகண்டிதன்……

உலகைக் காக்கும் பரம்பொருளே பல்வேறு உயிர்களாகக் காட்சி அளிக்கிறார். அப்படிக் காட்சியளிக்கும் காலத்துக் கரும்பின் இனிப்புச் சுவையைக் கரும்பு அறியாதது போல, இறைவனின் இயல்பும் தானே அறியாதிருப்பர். பொன் ஒன்றே பல்வேறு வகைப்பட்ட அணிகலன்களாய் , பல்வேறு பெயர்களில் வழங்கப்படுகிறது. அதுபோல் பரம்பொருளான இறைவனும் வானம், காற்று, தீ, நீர், மண், மருந்து , உணவு இவற்றாலான தாதுக்கள் ஆறாகவும் , ஐந்து கேசங்கள் கொண்ட உடம்பாகவும் பரம்பொருளான உலகப் பொருள்களாய்த் தோன்றுகிறார். மக்கள் அனைவராலும் விரும்பப்படும் பட்டாடையானது சிலந்திப் பூச்சியின் உடலில் தோன்றும் மெல்லிய இலையிலிருந்து உருவாகிறது. நீரானது அலை, திரை, நீர்க்குமிழி, என்றுத் தோன்றி ஒடுங்குகின்றன. உலகத்துப் பொருள்களும் பலவகைப்பட்ட தன்மையுடையதாய்த் தோன்றி அழியும். உலகப் பொருள்களுக்கு நிலைத்த தன்மை இல்லை என்பதை விளக்குகிறது.

மனிதனின் ஒவ்வொரு கட்டங்களிலும் தனித்தனி ஆளுமைப் பண்புகள் உருவாகுகின்றன. ஐந்து பருவங்களில் ஆளுமைக்கான அமைவுகளை மனிதன் அடைகிறான். அவை வாய்க்கட்டம் தொடங்கிப் பாற்குறிக்கட்டம் வரை நடைபெறும். ஒரு கட்டத்திலிருந்து மற்றொரு கட்டத்தைக் கடக்கும் போது நான் எனும் அகங்காரம் (ஈகோ) தன்னைத் தகவமைத்துக் கொள்ளும். ஒவ்வொருக் கட்டத்திலும் பெறும் ஆளுமை எண்ணங்களைப் புறச்சூழலுக்கு ஏற்ப, வடிவமைத்துக் கொள்ளும். ஆயினும் ஆளுமைப் பண்புகள் அனைத்திற்கும் குழந்தைப் பாலுமை ஆதாரமாக அமைகிறது. இவையே தனிமனித நடத்தைகளாக வெளிப்படுகிறது. ஆளுமை வளர வளர நான் எனும் அகங்காரமும் வளர்ந்து இரண்டும் இணைநிலையாக வளர்சிதை மாற்றத்திற்கு உள்ளாகிறது. இதனால் பல ஆளுமைக் கூறுகள் உள்ளத்தில் உருவாகுகிறது. உலகப் பொருள்களில் நிலையாமையை மேற்கண்டப் பாடல் விளக்குவது போலவே ஆளுமைப் பண்புகளும் நிலையில்லாதவை என்று ஃபிராய்டின் ஆளுமைக் கோட்பாட்டின் வழி அறியலாம்.

**காரணத்தை ஒத்தே காரியம் இருக்கும்**

**உரைதரு பிரமம் ஒன்று எனும் உரைக்கண்**

**வருபிரமாணம் மறை எனில் அருமறை….**

சிறு விதையிலிருந்து மரம், கிளை, இலை, காய், கனி முதலியனத் தோன்றுகின்றன. காரணம் சிறு நுட்பமாய் இருக்க அதிலிருந்துத் தோன்றியக் காரியங்கள் பருமையாய் இருக்கும். காரணத்திற்கும்,

காரியத்திற்கும் நெருங்கியத் தொடர்புண்டு. காரணமின்றிக் காரியம் பிறவாது எனலாம். நெல்லானது பதர், வைக்கோல், அரிசி என மாறினாலும் அதற்கு மூலமாக அமைவது நெல்மணியேயாகும்.

ஜெர்மானிய தத்துவாதி கோபன்ஹர் தத்துவ உலகில் குறிப்பிடத்தக்கவர் ஆவார். இவர்" பொருட்கள் அதனதன் இயல்பில் இருப்பதை ஆராய்ந்தவர்" . விசையின் ஆளுமையே இதற்குக் காரணம் எனக் கண்டறிந்தவர். காரணக் காரிய விதிப்படி அனைத்தும் நிகழ்கிறது என்ற நிலைமை விதியினையும், நிரந்திர விதியினையும் அனைத்து இயக்கங்கள் மீதும் பொருத்துகிறார். மனிதன் மனம் தன்நிலைப் பிரிவுக்கு உள்ளாவதை முதன்முதலில் கூறியவர் இவரே. இதனைப் ஃபிராய்ட் அவர்களும் ஏற்றுக் கொள்கிறார். சைவ சித்தாந்தம் உணர்த்தும் காரணமில்லாமல் காரியமில்லை என்ற கருத்தினைக் காரணக் காரிய விதிப்படி அனைத்தும் நிகழ்கிறது என்னும் ஃபிராய்டின் கருத்து ஒத்திருப்பது உற்று நோக்கத்தக்கது.

**தொகுப்புரை**

ஆளுமை வெளிப்பாட்டில், மனித உள மேம்பாடும் மற்றும் ஆசையை நெறிப்படுத்துதல், உள்ளத்தின் தனித்தன்மை நிலையும், மனித நன்னடத்தைத் தொடர்பானச் செய்திகளும், மனிதன் தன் அறியாமையை அகற்றுதலும், மேலும் அகப்புறக் கருவிகளை நெறிப்படுத்தும் தன்மையினையும், ஒன்றுப்பட்ட உள்ளத்தின் தன்மையையும், ஒரு சாரரை மட்டுமே சாராமல் நடுநிலைமையுடன் இருத்தலும், காலத்தின் முக்கியத்துவமும், மனித மனதின் எண்ணங்களும் செயல்பாட்டு முறைகளும், தன் ஐம்புலன்கள் அடக்குதலும், மனித ஆழ்மன வெளிப்பாடுகளும் மற்றும் பிரதிபலிப்புகளும், இயல்பான மனவெழுச்சி நிலைகளும், சிறந்த நடத்தைக்குரிய வழிமுறைகளும், மனிதன் தன் வினைப்பயனை அடைதலும், பேரின்பம் அடையும் சூழலும், இருள்மலம் நீக்கலும் என்பதைப் பின்பற்றி ஆளுமையின் வெளிப்பாடாகத் தலைமைப்பண்பு மிக்கவனாக நம்மை உருவாக்கிக் கொள்ள, சைவசித்தாந்த நூல் வழி அறிய உறுதுணையாக உள்ளது என்பதை இவ்வாய்வு மெய்ப்பிக்கின்றது.

**துணைமை ஆதாரங்கள்**

1. இரத்தினசபாபதி,சைவை., திருமுறைத்தெளிவே - சைவசித்தாந்தம்,1979, ப - 187
2. சிவஞான சித்தியார் , சிவப்பிரசகாசம் -பக்தியிலக்கணம், ப- 121
3. வேதப்பாரம்பரியமும் சைவ சித்தாந்தமும் - சைவ சித்தாந்தப்பதிக் கோட்பாடு எனும் பகுதி, ப-98.
4. ஆ.ஆனந்தராசன், திருவருட்பயன் உரை, நர்மதா பதிப்பகம் - ப -13.
5. உண்மை நெறி விளக்கம். ப - 73.
6. திருவள்ளுவமாலை (50). ப - 7.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

59

## தமிழ் இலக்கியங்களில் உளவியல் சிந்தனைகள்

**க.பெர்னாட்சன்,**
**முனைவர் பட்ட ஆய்வாளர்,**
**புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி.**

### 1. ஆய்வுச்சுருக்கம்

தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கொண்ட உலகின் சிறந்த இலக்கியங்களில் ஒன்று. வாழ்வின் பல்வேறு கூறுகளை தமிழ் இலக்கியங்கள் இயம்புகின்றன. தமிழ் இலக்கியத்தில் வெண்பா, குறள், புதுக்கவிதை, கட்டுரை, பழமொழி, தொண்ணூற்றாறு வகை சிற்றிலக்கியங்கள் என பல வடிவங்கள் உள்ளன. தமிழில் வாய்மொழி இலக்கியங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. வேதகாலத்திற்கு முற்பட்டதான தொல்காப்பியத்திலும் சங்க இலக்கிய நூல்களான எட்டுத்தொகையிலும் உளவியல் கருத்துக்கள் முறையாக விரவிக் கிடப்பதை சுட்டிக்காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### 2. இலக்கிய வரலாறு

மு. வரதராசனின் தமிழ் இலக்கியம் என்னும் நூலில் தரப்பட்டிருக்கும் தமிழ் இலக்கிய கால வகைப்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வகைப்பாடு பின்வருமாறு.

#### 2.1. பழங்காலம்

சங்க இலக்கியம் (கிமு 500 - கிபி 300)

நீதி இலக்கியம் (கிபி 300 - கிபி 500)

#### 2.2.இடைக்காலம்

பக்தி இலக்கியம் (கிபி 700 - கிபி 900)

காப்பிய இலக்கியம் (கிபி 900 கிபி 1200)

உரைநூல்கள் (கிபி 1200 - கிபி 1500)

புராண இலக்கியம் (கிபி 1500 - கிபி 1800)

புராணங்கள், தலபுராணங்கள்

இஸ்லாமிய தமிழ் இலக்கியம்

#### 2.3. இக்காலம்

**பத்தொன்பதாம் நூற்றாண்டு**

கிறிஸ்தவ தமிழ் இலக்கியம்

புதினம்

**இருபதாம் நூற்றாண்டு**

கட்டுரை, சிறுகதை, புதுக்கவிதை, ஆராய்ச்சிக் கட்டுரை

**இருபத்தோராம் நூற்றாண்டு**

அறிவியல் தமிழ், கணினித் தமிழ்.

3. **இலக்கிய உளவியல்**

இலக்கியப் படைப்பில் 'உளவியல் உத்தி' என்பது பற்றி, தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் மிக விரிவாகவே பேசுகிறது. தமிழ் ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் 'உளவியல்' உத்திப்பற்றி மிக விரிவாகவே எடுத்துரை செய்துள்ளனர். 'தமிழ்க்காதல்' என்ற தமது ஆய்வு நூலில் பேரறிஞர் வ.சு.மாணிக்கனார், 'என் ஆராய்ச்சியை 'உளவியல் ஆய்வாகவே செய்கிறேன்' என்பார். உளவியல் என்பது என்ன? என்று ஒரு முக்கியமான வினாவை எழுப்பிக் கொண்டு, 'அது ஒரு தனிமனக்கூறு' என்பார். இப்படியான 'தனி மனக்கூறு'தான் தமிழின் அக இலக்கியங்கள் அனைத்திலும் விரவிக் கிடக்கின்றன. இத்தகைய 'தனிமனக் கூறு பற்றிப் பிறிதோரிடத்தில் அறிஞர் வ.சுப.மா அவர்கள் 'நெஞ்சியல்' என்பார்.

'தனிமனக்கூறு' அதாவது 'நெஞ்சியல்' என்பது இலக்கியப் படைப்புக்களில் எவ்வாறு, எந்த உருவில் வெளிப்படும்? என்ற வினா முக்கியமானது. இந்த வினாவுக்குத் தொல்காப்பியம் விடைசொல்கிறது. உருவகமாக, உவமையாக, உள்ளுறையாக, இறைச்சியாக உளவியல் பாங்கு வெளிப்படும் என்பதே தொல்காப்பிய விளக்கம். உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி என்ற பொருள் புலப்பாட்டு வரிசையில் 'முன்னம்' என்ற உத்தி மிகுந்த இன்றியமையாமை பெறுகிறது. அதாவது தொல்காப்பியம் குறிப்பிடும் 'முன்னம்' என்பது 'உளவியல்' பூர்வமான இலக்கிய வெளிப்பாட்டு அம்சம்.

4. **தொல்காப்பியத்தில் உளவியல் கோட்பாடுகள்**

தமிழர்தம் பழைமையையும், பண்பாட்டு மேம்பாட்டையும் தெளிவாக விளக்கும் இலக்கண நூல் தொல்காப்பியம். தமிழ்மொழியின் மெல்லிய ஒலி நயத்தையும், சிறுசிறு சொற்குழுமத்தையும், தொன்மைக்கால சமுதாயமரபையும், வாழ்வியல் அறத்தையும் ஒருங்கே அதனுள் காண இயலும். நிலநூலாக, உயிர் நூலாக, உளநூலாக, உடல்நூலாக, ஒலிநூலாக, பொருள்நூலாக, அறிவை விரிக்கும் அருள் நூலாகச் சான்றோர் பெருமக்களால் பாராட்டப்படும் ஒப்பற்ற நூல். பண்டைத் தமிழ் மக்களின் உணர்ச்சி நிறைந்த வாழ்க்கை முறையை உலகிற்கு உணர்த்திய முதல்பெருமை தொல்காப்பியத்தையே சாரும். திருமால் உலகத்தை அளந்தார் எனில், தொல்காப்பியர் மாந்தரின் உள்ளத்தை அளந்தார் என்பது சாலப்பொருந்தும்.

5. **உளவியல் (Psychology) விளக்கம்.**

உளவியல் என்பது மனிதனின் நடத்தைகளை உற்று நோக்குவது.

*ஜோஸ்வில்சன்.

தனி மனிதனின் செயல்பாட்டிற்கும் சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பை ஆராய்வது.

*வோர்ட்ஸ் ஒர்த்.

உளவியல் என்பது மனிதனின் நடத்தை மற்றும் மனித உறவுமுறைகளைப் பற்றிய படிப்பு.

*அறிஞர் குரோ.

'மனதின் ஆய்வு' என்ற பொருளைத்தருவது உளவியல்.

*பிரிட்டானிகா தகவல் களஞ்சியம் (பாகம்-1)

அந்தவகையில், தொல்காப்பியம் மனிதனின் நடத்தைகளை அகம், புறம் சார்ந்த இருநிலைகளிலும் எடுத்துரைக்கிறது. தனிமனிதனின் செயல்பாடு காதல், வீரம் என்னும் இருதன்மைகளில் உட்படுத்தப்படும்போது அவனது உள்ள உணர்வுகளின் வெளிப்பாடு எவ்வாறு அமையும் என்பதைத் தெளிவாக விரித்துரைக்கிறது.

ஒவ்வொரு மனிதனும் தன்னை வீரனாக மதிப்பது இயல்பு. வீரயுகக் காலத்தில் படைக்கப்பட்ட தொல்காப்பியம் வீரத்தின் பெருமையையும், வீரனின் மேன்மையையும் பலதுறைகளில் விளக்குகிறது. இன்றைய திரைப்படத்தில் ஒருவன் பலரை அடித்து நொறுக்குவது போன்ற சாகசக்காட்சிகளைக் கண்டதும் வியப்பின் உச்சிக்குச்செல்கிறோம். ஆனால், அக்காலத்தில் தனி ஒருவனாக நின்று பலரை எதிர்த்து வெற்றிபெற்ற நிலையை "நூழில்" என்ற துறையால் குறிப்பிடும் தொல்காப்பியர் அதனை,

**"பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்**
**ஒள்வாள் வீசிய நூழில்"** **(புறத்திணையியல். நூ.எ:72)**

என்று குறிப்பிடுகின்றார்.

**உ.ம்- ஒருவனை ஒருவன்...பொருதுகளத்து அடலே (புறம்:76)**

ஒருவன் தன்மேல் கொண்ட முழுநம்பிக்கையும், உள்ளத்தில் தன்னைத்தலைசிறந்த வீரனாக எண்ணிக்கொள்ளும் தன்னம்பிக்கை மனப்பாங்கும் ஆற்றல் மிக்க சாதனைக்கு வழிவகுக்கும் என்பதனை இதன்மூலம் பதிவுசெய்கிறார்.

6. **களவியலில் உளவியல்**

ஆசையே துன்பத்திற்குக் காரணம் என்பார் புத்தர். மனித வாழ்வு ஆசையற்றதாய் இருக்கமுடியாது. எனவே, துன்பம் பெறுவதும் இயல்பு ஆகிறது. இருபாலாருக்கும் ஆசைகள் பொதுவானவை. ஆயினும், தங்கள் ஆசைகளை வெளிப்படுத்தும் தன்மைகள் மாறுபடுகின்றன. எழுகின்ற ஆசைகளை உள்ளத்திற்குள்ளேயே அடக்குபவளாகப் பெண் இருக்கிறாள்; ஆண் மாறுபட்டவனாக இருக்கிறான்.

**"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்**
**எண்ணுங்காலைக் கிழத்திக்கில்லை**
**பிறநீர் மாக்களின் அறிய ஆயிடைப்**

**பெய்ந்நீர் போலும் உணர்விற் றென்ப"** **(களவியல், நூ.எ:116)**

"தலைவி தனது வேட்கையை அது ஏற்பட்ட உடன் தலைவனிடத்தில் சொல்லுவதில்லை. ஆயினும், புது மண்கலத்தினில் ஊற்றிய நீர் புறத்தினில் கசிந்து தனது இருப்பினைத் தெரிவித்துவிடுவதைப் போல அவளது வேட்கையும் வெளித்தெரியும் பாங்குடையது"- என இதற்கான விளக்கத்தைத்தரும் இளம்பூரணர் அச்சம், மடம், நாணம் பெண்ணுக்குரிய இயற்கை குணங்களாயிருப்பதே வார்த்தைகளால் இச்சையை வெளிப்படுத்த இயலாமைக்குக் காரணம் எனவும் மொழிகிறார். உள்ளம் "சொல்" என்றாலும் நாணம் "நில்" எனத்தடுக்க தடுமாற்ற நிலையிலேயே பெண் நிற்பது இதன்வழி தெரிகிறது. எனினும், அவளது உள்ள உணர்வுகள் உடலிலும் செயலிலும் பலமாறுதல்களை ஏற்படுத்துகின்றன. மெய்ப்பாட்டியல் முழுக்க முழுக்க உள்ளத்து உணர்வுகளால் உடலில் ஏற்படும் மாற்றங்களை விவரிக்கின்றது.

பெண்ணின் உள்ளத்தை ஆராய்ந்துரைக்கும் தொல்காப்பியர், இதன்மூலம் முடிவாகச்சொல்லும் உளவியல்கோட்பாடு என்னவெனில் "'காதல் உணர்வு பெண்ணின் உள்ளத்தை ஆட்கொண்டால் இன்னின்ன செயல்பாடுகள் அவளிடம் குடிபுகும்" என்பதாகும். சான்றாக,

**'புகுமுகம் புரிதல் பொறிநுதல் வியர்த்தல்**
**நகுநய மறைத்தல் சிதைவுபிறர்க் கின்மையொடு**
**தகுமுறை நான்கே ஒன்றென மொழிப'**

**(மெய்ப்பாட்டியல், நூ.எ: 257)**

எனும் நூற்பாவைக் கொள்ளலாம்.

**6.1.உளவியல் நோக்கில் தூது**

காதல் உணர்வின் மிகுதியால் இருபாலாரும் அஃறிணை உயிர்களைத் தூது செல்வனவாகப் பாவிக்கின்றனர். தம் உள்ளத்து நிலைப்பாடு பறவை, விலங்குகளுக்கும் புரியும் என்ற தன்நினைவற்ற சிந்தனை அவர்களிடம் நிலைகொண்டிருக்கின்றது. நிலைபெயர்ந்து செல்வன மட்டுமன்றி ஒரே இடத்தில் நிலைகொண்ட மரம், கடல், கானல் கூட அவர்களுக்குத் துணை செய்வனவாகவும், தூது செல்வனவாகவும் தோற்றம்கொள்கின்றன. அவை தூது செல்லும் என்றநம்பிக்கையில் ஆறுதல்கொண்டு துயரைக்கடக்கலாம் என எண்ணுகின்றனர் தலைவன் தலைவியர். இதன்மூலம், 'உலகின் உண்மைச் சூழலை உணரும் திறத்தினை மாற்றி, கற்பனை உணர்வினைக் உள்ளத்துள் குடிபுகச்செய்யும் தன்மையுடையது காதல் என்பது தெளிவாகிறது. இவ்வுணர்வு

**" சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபில் தொழிற் படுத்தடக்கியும்"**

**(பொருளியல், நூ.எ:194)**

என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**7.எட்டுத்தொகை உளவியல் நோக்கில் ஆய்வு:**

பழந்தமிழர் எழுதிய பாடல்களில் காலத்தால் மறைந்ததும் மறைக்கப்பட்டதும் போக எஞ்சிய, கிடைத்த பாடல்கள் தேவையுணர்ந்த சிலரால் தேடித் தொகுக்கப்பட்டன. அவ்வாறு தொகுக்கப்பட்ட பாடல்களின் தன்மையும் பண்பும் சிறப்பும் கருதி தொகுப்பு ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே பெயர்கள் வைக்கப்பட்டன. இவை பொதுவாக, "பாட்டும் தொகையும்" என்று வழங்கப்படுகின்றன. பாட்டு என்பது "பத்துப்பாட்டு" நூல்களையும், தொகை என்பது "எட்டுத்தொகை" நூல்களையும் குறிக்கும். அதாவது, பல பாடல்களின் தொகுப்பாக அமைந்திருப்பது "தொகை" ; தனியொரு பாடலே ஒரு நூலாக அமைந்திருப்பது "பாட்டு". எட்டுத்தொகை நூல்கள் ஒவ்வொன்றிற்கும் பலர் பாடலாசிரியர்களாக இருப்பர் ; பத்துப்பாட்டு நூல்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொருவரே ஆசிரியர்.

**அகப்பொருள் பற்றியவை:**

நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு.

**புறப்பொருள் பற்றியவை :**

புறநானூறு, பதிற்றுப்பத்து.

**அகமும் புறமும் கலந்து வருவது**

பரிபாடல்.

**7.1 நற்றிணை**

**பெருநகை கேளாய், தோழி! காதலர்**
**ஒருநாள் கழியினும் உயிர் வேறுபடூஉம்**
**பொம்மல் ஓதி!நம் இவண்ஒழியச்**
**செல்ப என்ப, தாமே சென்று,**
**தம்வினை முற்றி வரூஉம் வரை நம் மனை**
**வாழ்தும் என்ப,நாமே, அதன்தலை-**
**கேழ்கிளர்உத்தி அரவுத் தலை பனிப்ப**
**படு மழை உருமின் உரற்று குரல்**
**நடுநாள் யாமத்தும் தமியம் கேட்டே'**

**(நற்றிணை -129)**

நம்மை விட்டு அவர் மட்டும் செல்வாராம்; நாம் இங்கே மழைக்கால நள்ளிரவில் இடியோசை கேட்டு நடுங்கும் பாம்புகளோடு வாழ்வோமாம்; இது நகைப்பிற்கு உரியது' என்று பிரிவின் துயரத்தை எல்லாம் நுட்பமாகக் கூறினாலும், அவற்றைத் துன்ப உணர்ச்சியுடன் காட்டாமல் பிரிவைப் "பெருநகை' எனக் கூறி

அதிர்ச்சியான செய்தியை நகைச்சுவையாக மாற்றுகிறாள். தலைவி விரும்பாத ஒன்றை விரும்பி ஏற்கச் செய்ய அறிவு நுட்பத்தோடு தோழி ஆற்றுப்படுத்துவதில் தன் உள கருத்தை வெளிப்படுத்துகின்றாள்.

7.2 **குறுந்தொகை**

**பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி**

**யாம.்;தயர்கம் சேறுந்தான.்து**

**அஞ்சுவது உடையாளாயின் வெம்போர்**

......................................................................

**கிளையொடுங் காக்கதன் கொழுநன் மார்பே**

**(குறுந். பா. 80)**

இப்பாடல் தலைவி தன்னைப் பழித்துக் கூறியமைக்கு விடை கூறும் முகமாக பரத்தை கூற்றாக அமைகிறது. பரத்தை தலைவன் தன்னுடன் புனலாட வருவதை காண இயலாதவளாக தலைவி அஞ்சுவதாகவும், தலைவனைத் தன்னிடமிருந்து காக்க வேண்டுமாயின் வள்ளல் எழினி பகைவர்களிடமிருந்து தன் ஆநிரைக் கூட்டத்தைக் காத்ததுபோல் தலைவியும் தன் சுற்றத்தாரோடு வந்து தன் கணவனைக் காத்துக் கொள்ளட்டும் என்கிறாள்.

7.3 **ஐங்குறுநூறு**

**“நின்னே போலும் மஞ்ஞை ஆலநின்**

**நன்னுதல் நாறும் முல்லை மலர**

**நின்னே போல மாமருண்டு நோக்க**

**நின்னே உள்ளி வந்தனென்**

**நன்னுதல் அரிவை காரினும் விரைந்தே.”**

**ஐங்குறுநூறு -492**

இப்பாடல் வழி நினைவுகளின் வெளிப்பாடே நாம் காணும் காட்சி என்னும் உளவியல் கூறு உணர்த்தப்படுகிறது. நம் மனதில் நிறைந்த ஏதோ ஒன்று நாம் காணும் பொருள்களிலெல்லாம் வெளிப்படும் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது.

7.4 **கலித்தொகை**

**"பாடு இன்றிப் பசந்தகண், பைதல பணிமல்க**

**வாடுபு வனப்பு ஓடி, வணங்கு இறை வளை ஊர,**

**ஆடு எழில் அழிவு அஞ்சாது அகன்றவர் திறத்து இனி**

**நாடுங்கால், நினைப்பது ஒன்று உடையேன்மன்"( கலித்தொகை 16)**

என்ற பாடல் தலைவன் தலைவியின் மனச்சோர்வுக்குக் காரணமான பிரிவுத் துயரினை அழகாக உளவியல் நோக்கில் விள்க்குகிறது.

**7.5 அகநானூறு**

தலைவி தலைவனோடு வாழ்ந்து இன்பம் அடைந்தவள். தலைவனின் பண்பு நலன்களை நன்கு உணர்ந்தவள். எனவே, தலைவன் பிரிவை ஏற்க அவள் மனம் உடன்படவில்லை. மேலும் அவனில்லா இடம் துன்பம் தருவதாகக் கருதுகிறாள். தன் துன்பம் நீங்க தலைவன் சென்ற வழியில் தானும் செல்ல வேண்டும் என எண்ணுதல் ஒன்றுதல் எனும் உளவெளிப்பாட்டைக் காட்டுகின்றது. இதனை,

**அழிநீர் மீன் பெயர்ந் தாங்கு அவர்**
**வழிநடைச் சேறல் வலித்திசின் யானே**

**(அகநானூறு 303:19-20)**

**7.6 புறநானூறு**

**"ஈஎன இரத்தல் இழிந்தன்று: அதன் எதிர்,**
**ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று, அதன்எதிர்**
**கோள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று, அதன்எதிர்**
**கோள்ளேன் என்றல் அதனினும் உயர்நதன்று"**

**(புறம்.204:1-4)**

'ஒன்றைத் தா' என இரத்தல் இழிவானது. அவ்வாறு இரந்து நின்றார்க்கு ஒன்றை 'ஈயேன்' என்று மறுப்பது அதனினும் இழிவானதாகும். கொள்வாயா என விரும்பிக் கொடுத்தல் இனிது. இவ்வாறு கொடுத்தாலும் கொள்ளோம் என்று கூறுவது அதனினும் உயர்ந்தது என புறநானூறு இரத்தலுக்கான உளவியல் இலக்கணத்தை நம்மால் அறியமுடிகிறது.

**7.7 பதிற்றுப்பத்து**

**"எழுமுடி கெழீஇய திருஞெமர் அகலத்து**

**நோன்புரித் தடக்கைச் சான்றோர் மெய்ம்மறை"**

**(பதிற்றுப்பத்து, பா.14:11-12)**

என்ற பாடலில், ஏழு பேரை வென்று அவர்களது முடிகளாலேயே பொன் செய்த ஆரத்தை உடையவன் என்று கூறுகிறது. முடிகளால் ஆரம் செய்த மன்னனின் மனநிலையை இதன்மூலம் அறியலாம்.

**7.8 பரிபாடல்**

முருகப்பெருமானிடம் பொன்னும் பொருளும் வேண்டாமல், அருளும் அன்பும் வேண்டும் அன்பர்களின் உள்ளத்தை இந்நூலில் காணலாம்.

**"யாம் இரப்பவை**
**பொருளு  பொன்னும் போகமும் அல்ல நின்பால்**
**அருளும் அன்பும் அறனும் மூன்றும்**
**உருள் இணர்க் கடம்பின் ஒலிதாரோயே"**

**(பரி 5 : 78-81)**

**முடிவுரை**

கண்ணிற்குப் புலப்படாத காற்றும், கைக்கு அகப்படாத ஒளியும் இயற்கை மாற்றங்களுக்கு இன்றியமையாக் காரணிகளாக விளங்குகின்றன. அதைப்போலவே, உருவமற்ற உள்ளமும் மனித உணர்வுகளின் உற்பத்திக்கூடமாகத் திகழ்கிறது. அன்புடைமை, அன்பின்மை, வெகுளாமை, வெகுண்டெழுதல், நல்லவை செய்தல், அல்லவை கூறல், பண்புடைமை, பணிவின்மை- போன்ற பல்வேறு முரண்பட்ட மனித நடத்தைகளுக்கும் மூலகாரணமாக அமைவது உள்ளம். அந்த உள்ளத்து இயல்புகளை அறிவியல் முறையில் ஆய்வுசெய்து அதன் முடிவுகளை உளவியல் கோட்பாடுகள் என்று வகைப்படுத்தியுள்ளனர் இக்கால உளவியல் மேதைகள். ஆனால், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எழுத்துக்கும், சொல்லுக்கும், பொருளுக்கும் இலக்கணம் வகுக்க படைக்கப்பட்ட தொல்காப்பியவானில் மனித ஒழுக்கத்தினைக் கருத்திற்கொண்டு படைக்கப்பட்டிருக்கும் உளவியல் கோட்பாடுகள் விண்மீன்களாய் மின்னிக்கொண்டிருக்கின்றன. சங்க இலக்கியத்தில் குறிப்பாக எட்டுத்தொகை நூல்களில் உளவியல் சிந்தனைகள் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**துணைநூல் பட்டியல் :**

1. மு.அருணாச்சலம், தமிழ் இலக்கிய வரலாறு, பாகம்-1, தி.பார்க்கர் வெளியிடு, முதல்பதிப்பு, சென்னை-4
2. முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ், தமிழ் இலக்கிய வரலாறு, புதுப்பிக்கப்பட்ட செம்பதிப்பு, சென்னை.
3. மு.வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு, பாரி நிலையம் வெளியிடு, முதல் பதிப்பு,சென்னை.
4. திரு.கு.இரவிசந்திரன் , எளிய மொழியில் உளவியல் ஆலோசனை, அலைகள் வெளயீட்டகம், முதல் பதிப்பு,சென்னை.
5. பட்லர், மெக்மெனஸ், உளவியல், அடையாளம் பதிப்பகம், முதல் பதிபு, சென்னை.
6. இளம்பூரணனார், தொல்காப்பியம் (எழுத்து - சொல் - பொருள்), கௌரா பதிப்பகக் குழுமம், சென்னை.
7. முனைவர் ந.இரஞ்சன், தொல்காப்பியம் : சிக்கல்களும் தீர்வுகளும், பரிசல் பதிப்பகம், சென்னை.
8. வித்துவான் டாக்டர் எம்.நாராயணவேலுப்பிள்ளை, உரைநடைத் தமிழில் சங்க இலக்கியம் - எட்டுத்தொகை, நர்மதா வெளியீடு, சென்னை.
9. புலியூர்க் கேசிகன், அகநானூறு, மூலமும் உரையும், சாதரா பதிப்பகம், சென்னை.
10. அ.ப.பாலையன், நற்றிணை, கௌரா பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை.
11. சாமி.சிதம்பரனார், எட்டுத்தொகையும் தமிழர் பண்பாடும், கௌரா பதிப்பகம், முதல் பதிப்பு, சென்னை.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

## "சொல்லில் விழுந்த கணம்" உளவியல் பதிவு

60

**முனைவர் இர. மணிமேகலை, உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை.**

**ஆய்வுச்சுருக்கம்** :

தமிழ் இலக்கிய உலகம் எண்ணற்ற கருத்துக்களை நம்முள் விதைக்கவும் நமக்கு உணர்த்தவும் முயலும் சூழலில் கவிஞர் அய்யப்ப மாதவனின் சொல்லில் விழுந்த கணம் கவிதைத் தொகுப்பானது எத்தகைய கருத்துக்களை நம் முன் வைக்கவிரும்புகிறது என்பதை உளவியல் நோக்கில் ஆய்வுக்குட்படுத்தும் முயற்சியைக் கட்டுரை மேற்கொண்டது. எந்தவொரு படைப்பாக இருந்தாலும் அதில் படைப்பாளனின் மனம் வெளிப்படவே செய்யும். அவ்வகையில் கவிஞனின் உளவியலைக் கட்டுரை ஆய்வுசெய்தது.

கவியின் மனம் ஆணுலகு, பெண்ணுலகு என்ற இரு நிலைகளில் செயல்பட்டு கவிதைகளைப் படைத்திருக்கிறது. கவிஞர் சுட்டும் ஆணுலகானது சிறுவயதில் சுதந்திரமான உலகையுடைய ஆணையும் வளர்ந்த பின்னால் பல்வேறு கட்டுப்படுகளுக்கிடையில் வாழும் ஆணுலகையும் சுட்டுகிறது. சமுதாயக்கட்டமைப்பைப் பொறுத்தமட்டிலான ஆண் மன நிலையையும் பதிவிடுகிறது. இக்கவிதைகள் ஆணுக்கும் சமுதாயத்திற்குமான உறவு நிலையைப்பேசுகின்றன.

கவி சுட்டும் பெண்ணுலகானது ஒருவகையில் சார்புநிலையுடையதாகக் கவிதைகள் அமைகின்றன. அய்யப்ப மாதவனின் கவிதையில் வெளிப்படும் ஆண் உளவியல் அகம் சார்ந்து இயங்கும் அதே வேளையில் சமுதாயக்கட்டமைப்பை ஆளும் வர்க்கம் விளிம்பு நிலை மக்கள் எனவும் சமுதா நிலைப்பாடான இன விடுதலை குறித்தும் சிந்திப்பதாக போர்க்குரல் கொடுப்பதாகத் திகழ்கிறது.பெண்ணுலகம் ஆண், ஆணைத் தன்னகப்படுத்தல், பெண் மொழி என இயங்குகிறது.

**முதன்மைச் சொற்கள்**

படைப்பாளனின் படைப்பு மனம் குறித்த விளக்கம் - அய்யப்ப மாதவன் வெளிப்படுத்தும் ஆணுலகு - ஆணின் அகம் பற்றிய வெளிப்பாடு - அய்யப்ப மாதவன் கவிதைகள் வெளிப்படுத்தும் பெண்ணுலகு .

**முன்னுரை**

எல்லை காணவியலா வின்ணெனப் பரந்துகிடக்கும் நம் தமிழ் இலக்கியம் சுட்டாத செய்திகளே இல்லை எனலாம். பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு வடிவங்களில் இன்று காணக்கிடைக்கும் இலக்கியங்கள் அவை எழுந்த சமுதாயத்தை விளக்குவனவாகத் திகழ்கின் றன, ஓர் இலக்கியம் முகிழ்த்தெழ சமுதாயம் களம் அமைக்கின்றது. ஆயின் இலக்கியம் முகிழ்த்தெழுவது படைப்பாளனின் மனமாகிறது. .தான் விரும்பும் சமுதாயத்தைச் சுட்டவும் படைக்கவும் எழுத்தாளன் எழுத்தை ஆயுதமாக்குகிறான். இந்த ஆய்தம் எழுத்தாளனின் மனத்தை மூலமாகக் கொண்டு இயங்குகிறது. எனவே எழுத்துக்கள் படைப்பாளனின் மனத்தை, உளத்தைப் பேசுகின்றன. உளவியலைப் பேசுகின்றன. அவ்வகையில் சிவகங்கை மாவட்டத்தைச் சார்ந்த கவிஞர் அய்யப்ப மாதவனின் 'சொல்லில் விழுந்த கணம்' என்ற கவிதைத் தொகுப்பு எப்படியாகக் கவியின் உளவியலைப் பேசுகிறது என்பதை ஆய்வுக்குட்படுத்தும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**படைப்பாளனின் படைப்பு மனம்**

சங்க இலக்கியங்கள் படைப்பாளனின் மனத்தை உள்ளங்கை நெல்லிக்கனியென பதிவிடுகின்றன.

**" ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே**
**சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல் வடித்துக்கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ஒளிரு வாள்**
**அருஞ்சமம் முருக்கிக் களிறெறிந்து**
**பெயர்தல் காளைக்குக் கடனே "** ( புறநானூறு., பா.எ.312 )

என்ற பொன்முடியாரின் புறநானூற்றுப் பாடலில் அவர் ஈன்று புறந்தருதல் தன் தலையாயக் கடன் என்கிறார். தந்தை வழிச் சமுதாயத்தில் வாழ்ந்த ஒருவரால் அவ்வாறு தான் பேச இயலும். எஞ்சிய அவரது வரிகளில் சமுதாயக் கட்டமைப்பைக் காணமுடியும். சந்ததியை அறிவாக வளர்த்தெடுப்பது தந்தையின் கடமை என்று அறிவு என்பதைத் தந்தைக்குரியதாக்குகின்றார். ஆண்மையை ஆளும் தன்மையை மன்னனுக்குரியதாக்கி கருவிகள் உருவாக்குவதைக் கொல்லனுக்கும் அதைப் பயன்படுத்தி நாட்டையும் தன் மன்னனையும் காப்பதை வீரனுக்குரியதாக்குகிறார். இதில் சமுதாயக் கட்டமைப்பை ஏற்றுக்கொண்ட மனத்தைக் காண முடிகிறது.

ஔவையார் தன்னுடைய “வானம் ஊர்ந்த வயங்கு ஒளி மண்டிலம் “ என்ற அகநானூற்றுப்பாடலில் (பா.எ.11) “ஞாயிறு எரிக்கும் காட்டில் மலர்ந்துள்ள இலவம் பூக்கள் மகளிர் கூட்டம் மகிழ்ந்தெடுக்கும் கார்த்திகை விளக்கு போலத் தோன்றும் வளம் தப்பிய காட்டில் தலைவன் நம்மை உடன் கொண்டு கழிந்தால் கச்சினைப் பரப்பி வைத்ததைப் போன்ற மணற் பரப்பில் மெய்கள் ஒன்றினை ஒன்று புகுவதை ஒத்த முயக்கத்தை அவரும் பெறுவார் நாமும் கண்கள் உறங்கப்பெறுவோம்,” என்று தன் மன உணர்வை எவ்விதக் கட்டுப்பாடுகளுமற்று வெளிப்படுத்தியிருக்கிறார். இதில் சமுதாயக் கட்டமைப்புகளை உடைத்த தன் மன உணர்வைக் காண முடிகிறது. இவ்வாறாக படைப்பாளனின் படைப்பு மனமானது சமுதாயக் கட்டமைப்பைத் தக்கவைத்தல் தன் மன உணர்வைப் புலப்படுத்தல் என்ற நிலைகளில் இயங்குகிறது. அவ்வகையில் அய்யப்ப மாதவன் கவிதைகள் தன் மன உணர்வு, சமுதாயக்கட்டமைப்பு, மனித சமுதாயத்தின் சரி பாதியான பெண் மனம் என்றெல்லாம் இயங்குகிறது.

**அய்யப்ப மாதவன் கவிதைகளில் ஆணுலகு** :

சொல்லில் விழுந்த கணங்கள் கவிதைத் தொகுப்பு ‘முத்தக் குளம்படிகள்’ என்ற கவிதையுடன் தொடங்குகிறது. இரண்டாவது கவிதை “ உடலுக்குள் இறகாகும் மனம்” (ப.எ.15)

**“எனைப்போல் அவர்கள் இதயங்களிலும்**
**வலிகளின் எண்ணிக்கை**
**எண்ணிலடங்காமல் இருக்கக்கூடும்**
**வீடுகளில் கூரைகளில் மர நிழல்களில்**
**நடை மேடைகளில் சாலையோரங்களில்**
**என்னைப்போல் அந்தப் பறவையைப் போல்**
**மனிதர்கள் இறக்கைகள் காய்ந்து**
**அதாவது அந்த இலையைப் போல் கிடக்கின்றன”**

இக்கவிதை வரிகள் மனித மனங்களின் வலிகளை , மனிதர்களை நம்முன் வைக்கின்றது . வீடுகளிலாகட்டும் சாலை ஓரங்களிலாகட்டும் வலி நிறைந்த மனிதர்கள் என்கிறார் அய்யப்பன். மேலும் இக்கவிதையில் அயல் தேசத்துப் பறவையொன்றையும் சுட்டுகிறார்.

**“ சாபமிடப்பட்ட விதியை நம்பத்தூண்டும்**
**இவ்வுலகிடையே இறகுகள் மிதக்கின்றன ரத்தத்தில்”**

என்ற வரிகளில் வலிகளுக்குக் காரணம் விதிகள் என்பதான உலகக்கட்டமைப்பைச் சாடுகின்றார். அதை உடைத்தல் என்ற விருப்பமும் வெளிப்படுகின்றது. மேலும்,

**" ஆகாயத்தின் கீழ் மேல் செல்ல முடியாமல்**
**மறைக்கப்பட்ட கண்ணுக்குத் தெரியா கண்ணிகளும்**
**கண் கொண்டு வான தூரத்தைக் கடக்கின்றேன்**
**அங்கு என் மனம் ஒரு பட்சியின் உடலுள்**
**இறகுகளானது"**

என்ற வரிகளில் அவர் மனம் கட்டற்ற வெளியில் பட்சியின் உடலுள் மனமாவதைச் சுட்டுகிறார். வலிகளற்ற கட்டுப்பாடுகளற்ற ஒரு வெளியை மனமானது நாடுகின்றது.

ஒரு படைப்பாளனிலிருந்து சொற்கள் எவ்வாறெல்லாம் பிரசவமாகின்றன என்பதை ' சொற்களைப் பிரியாதவன்" (ப.எ.17) என்ற கவிதை பேசுகிறது.

**" பெரிய நதி போன்றவளின் தண்ணீர்க்குடம் உடைந்த வேளை**
**அவனின் அழுகைக்குரல் செம்பூமியை வரைந்தது"**

என்று தொடரும் கவிதையானது படைக்கும் தாயிலிருந்து பிறந்த அவன் சிறு சிறு அலைகளில் கற்களாகவும் வானத்தின் வெளியிலும் தீபத்தின் ஒளியில் உறைந்து இருளை எழுதுபவனாகவும் கவிதைகளைப் படைக்கின்றான். மழையைச் சொற்களாக்குகின்றான். இவ்வாறு படைப்பாளியாகி அவன் தன் உடலையே எழுதுபவனாகிறான். வறுமையாளனான அவன் வறுமையைப் புறந்தள்ள தன் சொற்களைத் தேடுகிறான். அவன் புலம் பெயர்ந்தவனுமாவான். ஆகவே தான் புலம் பெயர்ந்த நிலத்தில் இருந்து கொண்டு இறப்பிலாவது தன்னைத் தன் சொந்த புலத்தில் புதையுங்கள் என்று வேண்டுகோள் விடுக்கிறான். ' சொற்களைப் பிரியாதவன் ' கவிதை ஒரு புலம் பெயர் கவிஞனின் பிறப்பையும் புலம் பெயர் வலியையும் பேசுகிறது. அதே வேளையில் பெண்ணாகிய படைப்பு சக்தியிலிருந்து தோன்றியவன் என்ற உண்மையையும் ஏற்கிறது.

"கூதிர் பருவம்" (ப.எ.20) என்ற கவிதையில் சித்திரக்காரன் ஒருவன் தனது ஓவியத்தில் இறந்த காலங்களின் துயரங்களை வரைகிறான். அதில் இரத்தச்சிதறல்களுடன் கூடிய பட்சிய இலைகளையும் இறக்கையொடிந்த பறவைகளையும் காணமுடிகிறது. மேலும் அதில் காணப்படுபவை உண்பதற்கு ஏற்றதல்லாத காய்களும் ஆங்காங்கே காணப்படும் சில பூக்களின் தீட்டல்களுமே. அத்துடன் தெளிவற்ற நீரோடையில் கண்ணற்ற சில மீங்கள். பேய்க்காற்றில் விழுந்த விருட்சத்தின் கீழ் சித்திரக்காரனின் உடல் சிவப்பில் தோய்கிறது. கவிதையெங்கும் துயரமும் வறுமையும் பீறிடுகிறது.

"பாயும் காலம்" (ப.எ.23) என்ற கவிதை ,

**"விளக்கினொளியில் சுடரும்**
**உயர் கட்டிடங்களுக்கிடையில்**
**கொள்ளையாய் கேளிக்கைகளினூடே**
**கண்ணீர் வலியறியா ஜனத்திரள்"**

என்று வாழ்வின் வலியறியாத மனிதர்களைச் சுட்டுகிறது, வலி மிக்க மனிதர்களுக்கான போர்க்குரலும் கூட.

"அப்பழுக்கற்ற பர்வதம்" (ப.எ.27) என்ற கவிதையில் மலையிடம் தன்னை ஒப்புக்கொடுக்கிறார் கவிஞர். ஏனெனில் துர்மனங்கள் படராத மலையது. சூட்சுமங்கள் அறியா பிஞ்சுக்குழந்தையைப் போல அதன் இருப்பு. ஆகவே கவியின் மனம் மலையினுள்ளாக மிதக்கிறது. இறுதியில் அப்பழுக்கற்ற மலையைப் பதுக்கிக் கொள்கிறான் அவன். ஆகவே கவி மனமானது துர்மனங்களற்ற உலகை நாடுவதைக் கவிதை உணர்த்துகிறது.

'குழந்தைமை' யானது விடுவிக்க இயலா புத்தகங்களுக்குள்ளும் பள்ளியினுள்ளும் சிக்குண்டு கிடப்பதை ' கிழித்தனர் சிக்குண்டிருப்பதை' (ப.எ.28) வெளிப்படுத்துகிறது.

'அவனைப்போலில்லாதவர்கள்' (ப.எ.35) கவிதையில் அவனுக்கென்ற இடம் இல்லாத அவலம் சுட்டப்படுகிறது.அவனது வெளியில் வடுக்கள் நிறைந்து விடுகின்றன. அவனது பாதையில் தோன்றும் கொம்புகளையும் பிடிக்க முடிவதில்லை. இவ்வுலகமோ கொம்புகளால் குத்திவிட்டு கவிஞனிடம் புன்னகையைக் கேட்கிறது. எப்படி முடியும்?

'மஞ்சள் நிற ஓவியன்' (ப.எ.40)கவிதையில் வான்னா வறியவர்களுடன் தேநீர் அருந்துகிறான். 'இறந்தவனின் வீடு' (ப.எ.50) கவிதையில் இறந்தவர்களின் வீடு அவர்கள் இல்லாமல் எவ்வாறிருக்கிறது என்பதைக் காட்சிப்படுத்துகிறது. இக்கவிதையில் யாருக்காக பெரும்பாலும் ஆண்கள் வாழ்கிறார்களோ? அவர்கள் ஆண்களின் இறப்புக்குப்பின் பாராமுகமாயிருப்பது அதிர்ச்சியளிக்கிறது. வெள்ளையாய்த் தேம்பித்திரியும் ஆன்மா , தானில்லாத தன் வீட்டில் மனைவி, மகன்,மகள் இன்னோரன்னவர்களைத் தேடுகிறது. காணாமல் திகைத்துப்போகிறது. அவனுடைய வயதான தாய் மகனின் புகைப்படத்தைப் பார்த்துக் கலங்கிக் கொண்டிருக்கிறாள். மாடியில் தன் தம்பி தானில்லாது வறுமையில் ஆழ்ந்துபோயிருப்பதை உணர்கிறது. இவ்வாறாக வாழ்வின் உண்மையைத் தரிசித்த ஆவி பேய்களின் உலகிற்கு விடை பெறுகிறது.

' நாற்பதில் பன்னிரண்டு வயது" (ப.எ.54) என்ற கவிதையோ சிறுவயதிலிருந்து குழந்தையினை வளர்க்கும் தாயைக் காட்சிப்படுத்துகிறது. அதே வேளையில் 40 வயதுவரை சுதந்திரமாக இருந்த ஆணையும் காட்சிப்படுத்துகிறது. 'கால் வயிற்றிரவுகள்' (ப.எ.79) என்ற கவிதை வறுமையில் வாடும் விளிம்பு நிலை மனிதர்களைப் பதிவிடுகிறது. 'பிழைப்பின் வானவில்' (ப.எ.82) என்ற கவிதை இச்சமுதாய வாழ்வின் வளத்துக்காகத் தம் உடலைக் கொடுக்கும் பல்வேறு தொழிலாளிகளைப் பட்டியலிடுகிறது. இவர்கள் செய்யும் தொழில் இவர்களது வாழ்க்கைத்தரத்தை உயர்த்துமா என்பது நம்முன் நிற்கும் வினா.

பிழைப்பின் வானவில் கவிதையில் விளிம்பு நிலை மனிதர்களைப் பட்டியலிட்ட கவிதை ' மரித்த என் மொழி' (ப.எ.84) கவிதையில் விளிம்பு நிலை மனிதர்களின் வறுமை நிலை, மேல்தட்டு வர்க்கத்தின் வளமான வாழ்க்கை,விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வு குறித்த வினாக்களற்ற நிலை என்று சமுதாய நிலைப்பாட்டைப் பேசுகிறது. உயர்த்தட்டுகளில் வாழும் மனிதம் சுயநல வாழ்வில் சுகித்து சுகித்து மானுடம் மரத்துப்போனதைப் பேசுகிறது. 'நிலம் வந்த நட்சத்திரங்கள் ' (ப.எ.88) கவிதையோ சாலையோர மக்களின் அச்சுறுத்தும் வாழ்வைப்பேசுகிறது. இவ்வாழ்வு குறித்து இவர்கள் வளம் பெறுவார்கள் என்று பேசுபவர்களோ நோயாளிகள் என்கிறது கவிதை. இதை ஏற்கத்தான் வேண்டும்.

சமுதாயக் கட்டமைப்பின் மீது வினாக்களைத் தொடுத்த கவிஞரின் அடுத்'த நகர்வு இனப்படு கொலைக்கு எதிரானது. 'உறங்கா யாழ் நகரம்' (ப.எ.29) கவிதையில் இன அழிப்பின் மிருகங்களின் செயல் விளைவைக் காட்சிப்படுத்துகிறது. மனித இனத்தின் பெயரால் மனிதம் சூறையாடப்படுவது வன்முறையின் உச்சம் இலங்கைப் பிரச்சனையை இக்கவிதைகளில் பேசுகிறார் கவிஞர், போர்க்களத்தில் பெண்ணுடல் மீதான வன்முறையையும் இக்கவிதை சாடுகிறது. 'நிலம் மீட்கத் திரும்புவான்' (ப.எ.69) என்ற கவிதையும் இன வெறி கொண்ட மனிதப்பதர்களைத் தன் வரிகளில் காட்சிப்படுத்துகிறது. இனவெறி கொள்ளும் மனிதன் மிருகமே என்பதை உணர்ந்து கொள்ளும் வேளையில் மனம் துயரத்தில் ஆழ்கிறது. இன வெறியில் பலியாகிபோவது காட்டில் வாழும் மனிதர்கள், குழந்தைகள் , பெண்ணுடல் என்று ஏராளம். இத்தகைய நிலங்களை மீட்கத்தான் வேண்டும். ஆனால் கவிஞர் நிலம் மீட்பது என்பது கற்பனை என்றே பதிவிடுகிறார். ' யாழ் இனிது ' (ப.எ.89) கவிதையோ யாழ் நகரத்தை மீட்க முடியுமா என்ற ஏக்கத்தை விதைக்கிறது. விந்தைக்காரன் கவிதையோ(ப.எ.99) பிறத்தல், உறங்குதல், பெண்ணுடன் இருப்பு, காலம் காலமாய் மேல் கீழ் முரணுடன் குத்திக் கொள்ளுதல் என்ற சாமானிய வாழ்வைச் சமுதாயக் கட்டமைப்பை ஆணுக்கான உலகை பதியவிடுகிறது, சாடுகிறது. இன்றைய சமுதாயத்தின் அப்பட்டமான பதிவிது.

**ஆணின் அகம்**

கவிதைத் தொகுப்பில் வெகுவாக ஆணின் அகமன உலகைப் பேசுகிறது. அகம் பேசுகிறது. முதல் கவிதையில் ,

**" தும்பிகளின் பறக்கும் தன்மையிடத்தே**

**அலைவுறும் வெற்றிடத்தில்**

நீயாகும் மாயத்தில் கட்டுண்டிருக்கிறேன்" என்று காதலில் கட்டுண்டிருப்பதை வெளிப்படுத்துகிறார். அவரது ' இறந்த கல்' (ப.எ.35) என்ற கவிதை தவிர்க்க முடியாத காதலின் பதிந்து போன உணர்வை அழகாகச்சுட்டுகிறது. பனிக்கால நினைவு (ப.எ.60) என்ற கவிதை ஆண் பெண் காமத்தைப் பதிவிடுகிறது. 'அந்தியில் ஒரு பறவை இசை' (ப.எ.67) சாலையில் மிதக்கும் பறவையென இசையில் மறைந்திருந்தேன் என்கிறார் கவிஞர் . இவ்வளவு கவித்துவமாகக் காதலைச் சொல்லவும் முடியுமா, " நான் கரைந்தொழுகும் காலத்தை எப்படிச்சொல்லுவேன் காதலே" என்று முடிகிறது கவிதை. காதலில் தேம்பும் ஆணின் மனம் எப்படியிருக்கும்? ' மூழ்கிய எனது கடல்" (ப.எ.70) என்ற கவிதை அதைக் காட்டிவிடும். ஆனால் வாழ்வின் நிலைப்பாடு குறித்தும் இக்கவிதை பேசிவிடுகிறது. நாற்புறமும் சூறையாடப்படும் வாழ்வு என்பதாகக் கவியின் கூற்று அமைந்துவிடுகிறது. 'அரவமற்ற நிலத்திலிருக்கிறேன்' (ப.எ.75) என்ற கவிதையில் உலகின் பெண்களிடம் ஆணினம் சிக்குண்டு கிடப்பதாகப் பேசுகிறார். இவ்வாறாக ஆணின் அகமனம் பேசும் கவிதைத்தொகுப்பு பெண்ணுலக்காகப் பதிவிட்ட கருத்துக்களும் உண்டு.

**பெண்ணுலகு :**

அய்யப்ப மாதவன் பெண் அகம், பெண் வெளி என்பவற்றை உள்ளடக்கித் தம் கவிதைகளைப் புனைந்திருக்கிறார். ஆகப் பெண் மனத்தையும் ஆணின் பார்வையில் நின்று வெளிப்படுத்தியிருக்கிறார். 'தலை வெடிக்கும் பருத்தி'யில் (ப.எ.16) ஆணுள் இரண்டறக் கலக்கும் பெண், பெண்ணுள் இரண்டறக் கலக்கும் ஆண் என இருவர் நிலையையும் பதிவிடுகிறது. இதில் ஆண் மனம் பெண்ணை விரும்புகிறது, அவளை ரசிக்கிறது, கலக்கிறது. ஆனால் பெண்ணாகப்பட்டவள் ஆணைத் தன்னுள் நித்தியமாக வைத்துக்கொள்ள விரும்புகிறாள். ஆணோ நித்தியமாக மறுதலிக்கிறான். ஆணுக்கென்று வெவ்வேறு உலகமிருப்பதை அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் 'தக்கை போல் மையல்' (ப.எ.25) கவிதையில் அவர் கூறும் பெண்ணாகப்பட்டவள் அடர்வன விலங்காயிருக்கிறாள், அவளுள் ஏற்படும் காதல் முற்றிப்போனால் அது அதல பாதாளத்தில் தத்தளித்துப் பின் நொறுங்கிப் போகவும் கூடும் என்பது கவிக்கூற்று. அவளது காதல் நினைவுகளோ காற்றில் மையலாகவும் கூடும் என்று தொடரும் கவிதையில் அவளின் மையலைக் கணிக்க முடியாதிருப்பதாகக் கூறுகிறார். கவிஞரின் வரியெங்கும்

பெண்மன வலிமை செதுக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய பெண் ஊடலின் உச்சத்திற்குச் செல்லும் போது ஆணின் கூவலுக்குச் செவி சாய்ப்பதேயில்லை. 'சன்னல் முறித்தவள்' (ப.எ.31) கவிதையில் ஊடலின் விகாரமான சொற்களில் மடிந்து போன பெண்ணை , வெறுப்புகள் நிறைந்த பெண்ணை, ஆணுடன் கூட மறுக்கும் பெண்ணைக் காணமுடிகிறது. பெண் மனம் சினம் கொண்டால் பேருருக் கொள்கிறது என்பது கவிதையின் பதிவு.

மேற்குறித்த வலிமையான பெண்கள் ஒரு புறம், மறு புறம் வறுமையின் கோரப்பிடியில் சிக்கி தன் உடலை இழக்கும் பெண்கள் மறுபுறம் என்று உணர்த்துகிறது ' பால்வெளி யுவதிகள்' (ப.எ.34) கவிதை. இக்கவிதையில் குழந்தைகளைக் காப்பாற்றும் வகையறியாது அந்நியனிடம் விலை போகும் பெண்களின் மனம் வறண்ட நிலமாகிறது, வெறுமை கொள்கிறது. பெண்ணுடல் வன்முறைக்கு ஆளாவதை 'மிருகம் மெல்லும் சொற்கள்' (ப.எ.39) என்ற கவிதை வெளிப்படுத்தி நிற்கின்றது. பெண்ணை வன்புணரும் ஆண் மிருகங்களை இரு கூராக்குகிறது கவிதை. 'அவள் சொர்க்கத்திற்குச் சென்றிருப்பாள்' (ப.எ.61) என்ற கவிஞர் சுகந்தி சுப்பிரமணியனின் அஞ்சலிக் கவிதையில் தொடரும் மாதவிடாய் காரணமான பெண் வலியைப் பதிவிட்டிருக்கிறார். இவற்றிலிருந்தெல்லாம் ஆகப்பெரும் விடுதலை பெற்று அவள் கவிதைகலைப் புனைவதில் ஆழ்ந்திருப்பாள் என்று பெண் நிலைப்பாட்டைச் சுட்டுகிறார். பெண் வாழும்போது கவிதைகள் புனையும் அறிவார்ந்தவளாகிறாள் என்கிறது கவிதை. 'கிடாய்' (ப.எ.62) கவிதை ஆண் எப்படியிருந்தாலும் ஏற்றுக்கொள்ளும் பெண்ணைப் பதிவிடுகிறது. பெண்ணுலகம் ஆண் எப்படியிருந்தாலும் ஆணைச் சார்ந்து இயங்குகிறது என்பதாக இப்பதிவு. 'வெண்ணெய்யால் ஆன நிலவு' (ப.எ.73) கவிதையோ பருவமடைந்து நாணமுற்ற பெண்ணை உவமையாக்குகிறது.ஆணற்ற நிலையில் பெண்ணின் மனம் பசலையுறுகிறது, சுருங்கிப் போகிறது என்பதை 'நீரற்ற மீன் அவள்' (ப.எ.80) என்ற கவிதை விரிவாகப் பேசுகிறது. 'மெடுசா' (ப.எ.91) கவிதையோ பெண் மொழி குறித்துப் பேசும் மெடுசாவைப் பதிவிடுகிறது.

அய்யப்பமாதவனின் பெண்ணுலகானது வலிமையான மனம் கொண்ட பெண், ஆணைச் சார்ந்து அவனை ஆட்கொள்ளும் பெண், அறிவார்ந்த பெண், பசலையுற்ற பெண், ஆகப்பெரும் வலிமையைப் பேசும் மெடுசா எனப் பல தரப்பட்ட பெண்ணுலகைப் பெண் உளவியலைப் பேசுகிறது இக்கட்டுரை.

**தொகுப்புரை :**

- கவிஞனின் படைப்புகள் வழியே கவிஞனின் உளவியலை

ஆய்வுக்குட்படுத்த இயலும் என்ற நிலையில்' சொல்லில் விழுந்த கணம்' என்ற அய்யப்ப மாதவன் கவிதைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன.

- கவிதைகள் வெளிப்படுத்திய ஆணின் மனமானது சிறு

வயதில் சுதந்திரமான வெளியுடைய ஆணைச் சுட்டுகிறது. ஆனால் ஆணாகப்பட்டவன் வளர்ந்த நிலையில் வயதை அடையும்போது சூழ்நிலை கைதியாகிறான். அவன் மனம் கட்டுப்பாடுகளற்ற உலகை நோக்கிச் சிறகு விரிக்கிறது. வஞ்சனைகளற்ற கள்ளங்கபடமற்ற உலகை அவன் மனம் நாடுகிறது.

- கவிதையில் வெளிப்படும் ஆண் மனமானது சமுதாயக்

கட்டமைப்பைப் பொறுத்தமட்டில் தொழிலாளர் சமுதாயத்தைச் சுட்டுகிறது. தொழிலாளர் வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்ற விடியலை வேண்டி நிற்கிறது.

- ஆண் மனமானது போர்க்களங்களில் வீறு கொள்வது

இயல்பு . இனப் படுகொலைகளைக் காணும் பொழுதெல்லாம் நிலத்தை மீட்க வேண்டுமென்ற கவிஞனின் இன உணர்வு மேலோங்குகிறது. ஆயின் தன்னிடம் சொற்கள் மட்டுமே இருப்பதாகக் கவி மனம் கூறுகிறது. மேலும் கவி மனம் வர்க்க பேதங்கள், ஏற்றத் தாழ்வுகள் நிறைந்த உலகைச் சாடுகிறது.

- ஆணின் அக உலகம் பெண்ணிற்கு ஏங்குவதாயிருக்கிறது,

அவளுள்ளேயே தோய்ந்து கிடப்பதும் ஏற்புடையதில்லை.

- அய்யப்பன் பதிவிடும் பெண்ணுலகு தேவைப்படும்போது

வலிமையானதாக , அவனற்ற நிலையில் வாடியதாக அவனுக்காக ஏங்குவதாயிருக்கிறது. பெண் அறிவார்ந்தவளாகிறாள், பெண் மொழி அவளுக்கானது என்பதையும் பதிவிடுகிறது.

ஆக அய்யப்ப மாதவனின் கவிதையில் வெளிப்படும் ஆண் உளவியல் அகம் சார்ந்து இயங்கும் அதே வேளையில் சமுதாயக்கட்டமைப்பை ஆளும் வர்க்கம் விளிம்பு நிலை மக்கள் எனவும் சமுதா நிலைப்பாடான இன விடுதலை குறித்தும் சிந்திப்பதாக போர்க்குரல் கொடுப்பதாகத் திகழ்கிறது.பெண்ணுலகம் ஆண், ஆணைத் தன்னகப்படுத்தல், பெண் மொழி என இயங்குகிறது.

**துணை நூற் பட்டியல் :**

1. அகநானூறு., களிற்றியானை நிரை., உ.ஆ. நா.மு.வேங்கடசாமி நாட்டார். திரு நெல்வேலி சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழகம்.,திருநெல்வேலி - 6 ., மு.ப.1962.
2. 'சொல்லில் விழுந்த கணம்'.,அய்யப்ப மாதவன்.,ஆழி பப்ளிசர்ஸ்., கோடம்பாக்கம்.,சென்னை மு.ப.திச. 2010

3. புறநானூறு மூலமும் உரையும்., உரையாசிரியர் அ. மாணிக்கனார்.,வர்த்தமானன் பதிப்பகம்.,சென்னை - 17., மு.ப. 1999
4. புறநானூறு மூலமும் உரையும்., உரையாசிரியர் அ. மாணிக்கனார்.,இரண்டாம் பகுதி, வர்த்தமானன் பதிப்பகம்., சென்னை - 17.,மு.ப. 1999

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எழுதுகோலை நேசித்த செங்கோல்கள்



**முனைவர் எம்.மெஹ்முதா, உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை**
**ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குனியமுத்தூர், கோயமுத்தூர்**

**ஆய்வுச் சுருக்கம்**

மக்களின் மனதோடு இழைந்து அவர்களின் தேவைகளை நிறைவு படுத்தி ஆட்சி செய்வதே ஒவ்வொரு தலைவனின் தலையாயக் கடமையாகும். இதனை செவ்வனேச் செய்த, ஆகச்சிறந்த அரசர்களைக் குறித்து ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கம். செங்கோல் பிடித்தக் கைகள் அறக்கோலான எழுதுகோலைக் கொண்டு கல்வியில் தேர்ந்த மனப்பாங்குடன் பாடல்களை இயற்றிய மன்னர்களின் மனத்துலாக்கோலின் நேர்மைத்தன்மையை எடுத்தியம்ப எத்தனித்துள்ளேன் இக்கட்டுரை வாயிலாக, அகத்தை மதிக்கும் மனம் மட்டுமே புறத்திணைப் புகழோடு வடிவமைத்துக் கொள்ள இயலும் என்பதனை இக்கட்டுரை எடுத்துக் கூறுகிறது.

இக்காலகட்டத்தில் அரசியலில் உள்ள அறமற்ற போக்கு ஏற்றதாழ்வுகள் கல்வியற்ற நிலை, ஊழல், மக்களை உறிஞ்சும் வரிச்சுமை, சாதிப் பிரச்சனைகள், இனப்படுகொலைகள் போன்ற கொடுமைகள் நீங்க வேண்டும் என்பதற்கான முயற்சியாக, முறையான ஆட்சி புரிந்த நம் முப்பாட்டன்களான மன்னர்களுக்கு மீண்டும் ஒரு மகுடம் சூட்டி அழகுப் பார்த்து, அறத்தை நிலைநாட்டும் நோக்கத்தை மையமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**முன்னுரை**

உலகில் அறம் தழைக்கவும் அறம் வளர்க்கும் ஆன்றோர் வாழ்வு சிறக்கவும் அரசனின் ஆட்சி முறையே காரணமாக அமையும். அக்காரணங்களை உணர்ந்தே சங்க கால அரசர்கள், நீதி நேர்மை, நடுவுநிலைமை போன்ற நற்பண்புகளோடு விளங்கி நல்லாட்சி புரிந்தனர். காலங்கள் எவ்வளவு மாறினாலும் சங்ககால அரசர்களின் பெருமை மிகுந்த அரசாட்சி முறை இன்றும் போற்றப்பட்டு சங்க காலம் ஒரு பொற்காலம் என்று அழைக்கப்படுகிறது. சங்க காலத்தில் அரசர்கள் முழு அதிகாரத்துடன் ஆட்சி புரிந்து இருந்தாலும் அமைச்சர்கள், அறிஞர்கள், சான்றோர்களின் ஆலோசனைக் கேட்டு முடிவுகளை எடுப்பதில் இணக்கத்துடன் இருந்தனர். அதுமட்டுமின்றி புலவர்களின் அறவுரைகளை பொன்னுரைகளாக மனமேற்றுக் கொண்டனர். இப்படிப்பட்ட அரசர்களில் பலர் பாடல்கள் எழுதும் திறமை பெற்றவர்களாகவும் இருந்தனர். அரசர்களில் சிலரைக் குறித்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

அரசர்கள் சட்ட திட்டங்களால் நாட்டை செம்மைப்படுத்திய காலகட்டங்களில் தம் அக மனதுள் நெய்து கொண்டிருக்கும் எண்ணங்களை எழுதுகோலால் இழைய விட்ட மனச் சூழலையும் நெறியையும் அகமன நோக்கத்துடன் வடிவமைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தன் அதிகாரத்தால் மக்களை அடிமைப்படுத்தாமல் அவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்து பாதுகாத்து வருதலே தலைச்சிறந்த அரசின் கடமையாகும். இக்கடமையை செவ்வனே செய்வதற்கு மன்னன் அறத்தின் வழி நடப்பவனாக இருத்தல் அவசியம். அது மட்டுமல்ல பல நூல்களைக் கற்றுத் தேர்ந்தவனாகவும் இருத்தல் வேண்டும். அவ்விதம் கற்றுத் தேர்ந்து மனதுள் தோன்றிய சிந்தனைகளை எழுத்தாக வடித்த அரசர்கள் பலர், இதில் சிலரைப் பற்றிக் காணலாம்.

**சேரமான் கணைக்கால் இரும்பொறை**

சோழ அரசன் செங்கணான் என்பவரோடு போரிட்டு தோற்றவர். இதனால் சோழ அரசன் இவரை சிறையில் அடைத்தான். சிறையில் வாடிய போது தாகம் எடுக்கவே காவலனிடம் தண்ணீர் கேட்டார். அவனோ, 'தோற்ற உனக்கு தண்ணீர் ஒரு ,கேடா' என்பது போல் தாமதமாக தண்ணீரைக் கொண்டு வந்து கொடுக்க மானம் கருதி அதனை வாங்காமல்

**"குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்**
**ஆ அள் அன்று' என்று வாளின் தப்பார்**
**தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீகிய**
**கேளல் கேளிர் ………………..** **(புறம்: பா-74)**

என்று மன்னர் குடியிலே குழந்தை இறந்து பிறந்தாலும் தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அவற்றை வாளால் வெட்டியே புதைப்பர். நான் பகைவர் வாளால் சாவாமல் போனேனே, சங்கிலியில் கட்டி நாய் போலத் துன்புறுத்தி சிறையிட்டனர். இவர்களிடம் நீர் அருந்தி வாழ்வது அவமானம் இரந்துண்பது அரசர்களுக்கு அழகல்ல என்று கூறி உயிர் துறந்த இம்மன்னனின் பாடல் வரிகள் இவை. அரசர்களுக்கு மானத்தைக் காட்டிலும் மிக உறுதிவாய்ந்த பொருள் ஏதுமில்லை என்ற கூற்றின் வழியே உள்ள எண்ணங்களை சிந்திக்கும் பொழுது இக்கால ஆட்சியாளர்கள் மானத்தைக் கூறு போட்டு விற்கும் நிலையைக் காணும் பொழுது வெட்கக் கேடாய் உள்ளது.

**"உறு பொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த்**
**தெறு பொருளும் வேந்தன் பொருள்"(குறள்:756)**

என்று வள்ளுவர் அரசனுக்குரிய வருவாயாகப் பொருள் வரும் வழிகளைச் சுட்டிக்காட்டியுள்ளார். உரியவர் இல்லாமல் வந்து சேரும் பொருளும் சுங்கப்பொருளும் தம் பகைவரை வென்று வந்த பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகும். இப்படிப்பட்ட கட்டுக்கோப்பில் இருந்த காலங்களில் நகர்ந்து நகர்ந்து பலவித ஊழல்களின் மன்னர்களாய் அனைத்துப் பொருள்களையும் வளைத்துப் போட்டு வாழ வேண்டும்

என்ற சிறுமை எண்ணங்களுடன் 'சிறை' சென்றாலும் சிரித்த முகத்துடன் வலம் வந்து ஆட்சிப் பொறுப்பில் அமர்கின்ற அவலங்களோடு தான் பயணிக்கின்றது இன்றைய காலம்.

**பாலை பாடிய பெருங்கடுங்கோ (பெருஞ்சேரல் இரும்பொறை)**

புறநானூற்றில் ஒரு பாடலும் கலித்தொகை பாலைத் திணையில் 30 பாடல்கள் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு ஆகிய நூல்களில் இவரது பல பாடல்கள் இடம் பெற்றுள்ளன. தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைதான் இலக்கியத்தில் பெருங்கடுங்கோ என்று அழைக்கப்படுகிறார்.

**"எஃகு கழிய இருநில மருங்கின்**
**அருங்கடன் இறுத்த பெருஞ்செ யாளளை,**
**சேண்விளங்கு நல்லிசை நிறீகி**
**நூநவில் புலவர் வாய் உளானே"** **(புறம்-282)**

இப்பாடலைப் பாடிய பெருஞ்சேரல் இரும்பொறை என்ற பெருங்கடுங்கோவின் மீது அளவற்ற மதிப்பு கூடுகின்றது. ஏனெனில் தன் மன்னனுக்காகப் போரில் சிறந்த செயலாற்றி மடிந்த ஒரு மாமறவனை நினைந்துப் பாடிய இச்செய்யுளில் பகைவர் எறிந்த வேல் நெஞ்சிலே பாய, இவ்வுலகிற் பிறந்த கடனை நாட்டுக்காக வீழ்ந்து தீர்த்துக் கொண்ட இம்மறவனின் மார்பில் படைக்கலன்கள் யாவும் தைத்தன. தோற்றம் தரும் உருவமும் தோன்றா உயிரும் ஒரு சேரக் கெட்டன. துண்டு துண்டாகச் சிதறிய கேடயம் களத்திலே கிடக்கின்றது. அவனோ திசையெங்கும் பரவும் நற்புகழாய் புலவர்தம் நாவில் நிலைத்து அமர்ந்து விட்டான் என்று போர்களத்தில் தன் இன்னுயிரைத் தனக்காக இழந்த மறவனை மனதால் எண்ணி உருகி நெகிழ்ந்துள்ள நன்றியுணர்வு மேலிடுகின்றது. மற்றும் குறுந்தொகையில் பல பாடல்களை இயற்றியுள்ளார் எடுத்துக்காட்டாக,

**ஓர் ஊர் வரினும் சேரி வாரார்**
**சேரி வரினும் ஆர முயங்கார்**
**…………………………**
**வில் உமிழ் கணையின் சென்றுசேண் படவே" (குறுந்-பா-231)**

தலைவியைத் தலைவனுடன் சேர்த்து வைக்க தோழி தலைவியிடம் தூதாகச் செல்கின்றாள். ஆனால் தலைவனை ஏற்க மறுக்கிறாள் தலைவி அதற்கு தலைவி கூறும் காரணம், காமத்தின் விளைவால் தன் தலைவன் பாதை மாறிய வேதனையை பகர்கின்றாள். தன் தலைவன் ஒரே ஊரில் இருந்தாலும் நாம் வாழும் சேரி வழியே வந்தாலும் நம் இல்லம் வந்து என்னைத் தழுவப் போவதில்லை. வில்லிலிருந்து விடுபட்ட கணையைப் போல நாணத்தையும் நல்லறிவையும் அழித்து விட்டதால் அயலாருடைய சுடுகாட்டைப் போலக் கருதி நம்மைக் கண்டும் காணாதது போல செல்கின்றார் என்று பெண்மன உளைச்சலை துல்லியமாக எடுத்துக் காட்டியுள்ளார்.

காமம் என்பது நாணத்தை அறிவை கெடுப்பது என்ற விவேகமும் தன் மனைவியையே வெறுக்க வைப்பது குடும்பத்தின் அன்புக் கட்டுகளைக் குலைப்பது எந்தப் பெண்ணும் பரத்தமையை நாடிய கணவனை ஏற்க மாட்டாள் என்ற நுண்ணறிவுச் சிந்தனையும் இல்லற வாழ்வியலின் இணக்கங்கள் உடைகின்ற வேதனையும் இப்பாடல் வழியே உணர்த்தப்படுகின்றது.

**"மனமாணா உட்பகை தோன்றின் கனமாணா**

**ஏதம் பலவுந் தரும்"** **(குறள் - 918)**

என்ற வள்ளுவப் பெருந்தகையின் குறளுக்கு ஏற்ப வரைவின் மகளிரை கூடும் பொழுது சுற்றம் சீர் படாமைக்குக் காரணமான குற்றங்கள் பலவற்றை சந்திக்க நேரும் என்ற கருத்தின் அடிப்படையில் அமைந்த இப்பாடல் அகவாழ்வினை நேர்படுத்தும் செயலைச் செய்கின்றது.

**கோப்பெருஞ்சோழன்**

புலவர்களுக்கும் அரசனுக்குமிடையே உள்ள நட்பை இவன் வாழ்வியலில் அறியலாம். பூதநாதனார், நத்தத்தனார், பிசிராந்தையார், எயிற்றியனார், பொத்தியார் போன்றோருடன் மிகுந்த அன்புடன் வாழ்ந்தவன். ஆனால் இவனுடைய இரண்டு பிள்ளைகள் கூடா நட்பினால் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். அவர்களை அழிக்க நினைத்தான் இதனை சான்றோர்கள் தடுத்து துறவு நெறிக்குச் செலுத்த முயன்றார். ஆனால் இவனோ வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான். இதனை அறிந்த பிசிராந்தையாரும் வடக்கிருந்து உயிர் துறந்தார். பொத்தியாரும் உயிர் துறக்கத் துணிய, நீ மகன் பிறந்த பின் வா என்றான் கோப்பெருஞ்சோழன். அவ்வாறே அவரும் வந்து இவனது நடுக்கல்லருகே அமர்ந்து உயிர் துறந்தார் என்ற இவர்களது வரலாறு விரிவாக உள்ளது.

புறநானூற்றில் மூன்று பாடல்கள் இடம் பெற்றுள்ளது.

**"செய்குவம் கொல்யோ நல்வினை! எனவே**

**ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி**

……………………………………….

**தீதில் யாக்கையொடு மாய்தல் தவத் தலையே"** **(புறம்-214)**

உயிருக்கு உறுதி தரக்கூடிய மெய்நெறிகளின் வழியே செல்லுதலைப் பற்றி வலியுறுத்திக் கூறும் சிறந்த செய்யுள். புகழோடும் தீது இல்லாத உடலோடும் இறப்பதே சிறந்த வாழ்வு என்ற நோக்கத்தின் அடிப்படையில் அமைந்த பாடலில் ஒரு மனிதன் வாழும் வாழ்க்கையில் தீதற்ற புகழுடன் வாழ்தல் என்பதை தவமாகக் கொண்ட நேர்மை நிலை விளங்குகிறது.

**"கவைக்கதிர் வரகின் அவைப்புறு வாக்கல்**

**தாதெரு மறுகின் போதொடு பொதுளிய**

……………………………………….

**அல்லற் காலை நில்லன் மன்னே"** **(புறம்-215)**

என்ற பாடல் நட்பின் நெருக்கத்தை ஓங்கி ஒலிக்கும் குரலாக அமையப் பெற்றுள்ளது. செல்வம் உள்ள போது என்னைக் காண வராத பிசிராந்தையார் என்னுயிர்க்கு இன்னல் நேர்ந்த இச்சமயத்தில் கண்டிப்பாக வருவார் என்று சான்றோர்களிடம் கூறுகின்ற செய்தியாக இருந்தாலும் காணாது கொண்ட நட்பின் ஆழத்தை பதிவு செய்த உன்னதம் நிறைந்த வகையில் அமையப் பெற்ற பாடல்.

**“கேட்டல் மாத்திரை அல்லது யாவதும்**

**காண்டல் இல்லாது யாண்டுபல கழிய**

……………………………………..

**இன்னே வருகுவன் ஒழிக்க அவற்கு இடமே”** **(புறம்-216)**

வடக்கிருந்து உயிர் நீக்கும் பொருட்டு தவமிருந்த கோப்பெருஞ்சோழன் தன்னைத் தேடி பிசிராந்தை வருவான் அவருக்கு தன்னருகே ஓரிடம் ஏற்பாடு செய்யுங்கள் என்று பிசிராந்தை வரமாட்டார். என்றுரைத்த சான்றோர்களிடம் திட்டமாய் கூறுகின்ற செய்தியும் இப்பாடலில் நட்பின் ஆதாரமாய் விளங்குகிறது.

என்னை இகழாத இனிய பண்பினன், உள்ளம் கலந்த நண்பன், பொய்மை வாழ்வை விரும்பாதவன் நான் துயர் கொண்ட காலத்தில் வாராமல் இருக்கமாட்டான் இப்பொழுதே வருவான் என்று நம்பிக்கையோடு இறந்துபட்டான். அந்நம்பிக்கைக்கு ஏற்ப பிசிராந்தையாரும் வந்து வடக்கிருந்து உயிர் நீர்த்தார். இப்பாடல்கள் புறப்பாடல்களாக அமையப் பெற்று இருந்தாலும் அகத்துள் ஊற்றெடுத்த நட்பின் உயர்வை தூக்கி நிறுத்துகிறது. நட்பிற்கு உயர்வளிக்கும் மன்னனின் ஆட்சியின் கீழ் வாழும் மக்களின் வாழ்க்கை எவ்வளவு நலமாய் இருந்திருக்கும் என்ற எண்ணம் தோன்றுகிறது. மேலும் குறுந்தொகையில் இம்மன்னனின் நான்கு பாடல்கள் அமையப் பெற்றுள்ளன.

**சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்**

இவர் பாடிய பாடல் ஒன்று மட்டுமே. உழவர்களின் சிறப்பைப் போற்றும் பாடல்

**“யான் வாழும் நாளும் பண்ணன் வாழிய!**

**பாணர் காண்க, இவன் கடும்பினது இடும்பை**

…………………………………………

**அணித்தோ சேய்த்தோ? கூறுமின் எமக்கே”** **(புறம்-173)**

உழவர்கள் இல்லையேல் உலகம் இல்லை என்பதை தெள்ளத் தெளிவாக உணர்ந்த இவ்வரசன், உழவர்களை, ‘பசி தீர்க்கும் மருத்துவன்’ என்று உயர்த்தியும் உழவன், ‘தன் வாழ்நாளோடு என் வாழ்நாளோடும் சேரப் பெற்று இவ்வுலகில் நெடுங்காலம் வாழ வேண்டும்’ என்று போற்றுகின்ற அறிவுத்

திறமும் எதிர்கால மக்களின் ஏற்றவாழ்வுக்கு ஆதாரம் உழவர்களே என்ற புரிதலை கொண்ட மன்னனின் நெஞ்சம் விளங்குகின்றது.

**பாண்டியன் அறிவுடைநம்பி**

இவரது மற்றொரு பெயர் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். மக்கட் பேற்றின் சிறப்பினைக் கூறும் சிறந்த செய்யுள்.

**"படைப்புப்பல படைத்து பலரோடு உண்ணும்**
**உடைப்பெருஞ் செல்வர் ஆயினும் இடைப்படக்**
**குறுகுறு நடந்து சிறுகை நீட்டி**
**இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்**
**நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்**
**மயக்குறு மக்களை இல்லோர்க்குப்**
**பயக்குறை இல்லைத் தாம் வாழும் நாளே"** **(புறம்.188)**

பெருஞ்செல்வம் வாய்க்கப் பெற்று இருந்தாலும் குறுகுறுவென நடந்து உணவை மேலெல்லாம் சிதறி, குறும்புகளால் மனதை மயக்கும் மக்கள் இல்லாத வாழ்நாளெல்லாம் பயனற்ற நாட்கள் என்று வாளேந்தி போர்களத்தில் பேராடினாலும் மழலைகளின் இருப்பினையும் இன்பத்தையும் உற்று நோக்கி மகிழ்ந்த நுட்ப வெளிபாட்டின் வழியே மன்னனின் மென்மை மனம் தெளிவாகின்றது.

**பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்**

**"நகுதக் கனரே நாடுமீக் கூறுநர்**
**இளையவன் இவன் என உளையக் கூறிப்**
**..................................................**
**இரப்போர்க்கு ஈயா இன்மை யான் உறவே"** **(புறம்-72)**

இம்மன்னன் இயற்றிய இப்பாடல் வழியே வம்பு இழுத்து தூற்றிப் போரிட வந்த மன்னனை சிதறியோடும்படி போரிட்டு முரசை கைப்பற்றுவேன் இல்லையேல் 'கொடியவன்' என்று குடிமக்கள் தூற்றட்டும், புலவர்கள் என்னைப் பாடாது நீங்கட்டும், என் சுற்றம் துயர் மிக்கதாகட்டும், இரப்பவருக்குக் கொடுக்க இயலாத வறுமையுடையவனாக நான் ஆகவேண்டும் என்று வஞ்சினம் கூறும் இம்மனநிலையை நோக்கும் பொழுது குடியோம்பல், புலவர்களைப் போற்றுதல், சுற்றம் காத்தல், இரவலர்க்கு உதவுதல் என்பவை மன்னனின் முதன்மையான கடமைகள் என்பது விளங்குகிறது. மன்னனின் சுயநலமற்ற மனநிலையும் காணக்கிடக்கின்றது. தோற்றால் தான் வறுமையாளனாக மாற வேண்டும் என்ற மனப்போக்கு இக்கால ஆட்சியாளர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது.

இவ்விதமாக மேலும் சில மன்னர்களின் கவித்திறனும் ஆட்சித் சிறப்பும் விளங்கியது. சேரமான் கோட்டம் பத்து துஞ்சிய மாக்கோதை, சேரமான் இளங்குட்டுவன், சோழன் நலங்கிள்ளி, சோழன் நல்லுருத்திரன், ஒல்லையூர் பூதப் பாண்டியன், கோப்பெரும்பெண்டு, அதிவீர ராம பாண்டியர், தொண்டைமான் இளந்திரையன் போன்றோர் நாட்டின் நலம் கருதி பல செய்யுள்களை இயற்றியும் நீதிக் கருத்துக்களைச் விதைத்தும் சென்றுள்ளனர். போரில் புகழும் நாடும் கிடைத்தாலும் தமிழை உயிராக நேசித்தார்கள். அதனால் தமிழ்ப் புலவர்களை ஆதரித்தார்கள். தாங்களும் பலபாடல்கள் இயற்றி தமிழ் மணம் பரப்பித் தம் எழுதுகோலால் அன்பையும் அறிவையும் பரவ விட்டார்கள்.

**துணை நூற் பட்டியல்**

1.புலியூர் கேசிகன் உரை.புறநானூறு - கங்கை புத்தக நிலையம் சென்னை-17-2010

2.புலியூர் கேசிகன் உரை -குறுந்தொகை - கங்கைபுத்தக நிலையம். சென்னை. 17- 2010

3.திருக்குறள் - ஏசியன் அச்சகம்-சென்னை. 19 -1991

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்கப் பெண்பாற் புலவர்களின் பாடல்களில் உளவியல் சிந்தனைகள்

62

**முனைவர் த.மைவிழி, உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**கோயம்புத்தூர்**

**ஆய்வுச்சுருக்கம்**

இலக்கியம் சமூகத்தின் நிறை குறைகளைப் புலப்படுத்துகிறது. இலக்கியம் இன்பம் பயப்பதோடு வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்குரிய கருத்துக்களைத் தந்துதவும் பண்புடையதாகவும் அமைகின்றது. சங்க காலம் என்பது பொற்காலம் என்றும் அழைக்கப்படுகிறது. ஏனெனில் தமிழரின் இயற்கை வாழ்வு, மிகுபொருள் விரும்பாமை, மன்னரின் கொடைச்சிறப்பு, அழியாச்செல்வம், வளமான வாழ்க்கை, வீரம், புகழ், புலவர்களையும் புரவலர்களையும் ஆதரித்த மன்னரின் தன்மைகள் போல்வான காரணமாகும். சங்க காலத்தில் ஆண் புலவர்களுக்கு நிகராகப் பெண்பாற் புலவர்களும் விளங்கியுள்ளனர். இருப்பினும் ஆண் புலவர்களைக் காட்டிலும் பெண்புலவர்களே மிகுந்த வீரியத்துடனும், எழுச்சியுடனும் தன் கவிதைகளைப் படைத்துள்ளனர். அவர் தம் பாடல்களில் காதல், வீரம், வரலாற்றுப் பார்வை, வாழ்க்கைமுறை போன்றவற்றோடு மனவுணர்வுகள், பெண்களின் ஆற்றாமை மனநிலையும் சோகவுணர்வும் பதிவாகியுள்ளன என்பது இவ்வாய்வின் வழி அறியலாம்.

**முன்னுரை**

உலகில் எத்தனை நாள் வாழ்ந்தோம் என்பதைவிட எத்தகைய பண்பு உடையவர்களாய் வாழ்ந்தோம் என்பது மிக மிக முக்கியமான ஒன்றாகும். அத்தகைய பண்புடைய பக்குவமான வாழ்வினை வாழ நமக்கு முன்னின்று உதவும் வகையில் பன்னெடுங்காலம் முன்பாகவே பல்வேறு சான்றோர்கள் தோன்றி உணர்ந்து தெளிந்து நம்மையும் ஆற்றுப் படுத்தும் வகையிலான செயல்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர்.

**உளவியல்**

உள்ளத்து உணர்வுகளைச் சொல்வது உளவியல் எனப்படும். உளவியலின் தந்தை என்று அழைக்கப்படும் “சிக்மண்ட் ப்ராய்டு” அவர்கள் மனிதர்களின் உள்ளத்தில் தோன்றும் எண்ணங்களின் வெளிப்பாடு எனவும் கூறலாம் என்கிறார். அந்த வகையில் சங்க காலப் பெண்கவிஞர்களின் கவிதை வரிகளிலுள்ள உளவியல் சிந்தனைகளைக் எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு தனிமனிதன் தனக்குக் கொடுக்கப்பட்ட சூழ்நிலையில் செயல்படும் தன்மையைக் கூறுவதாகும் என்று ஆர்.பி.காட்டல் ஆளுமையை வரையறை செய்துள்ளார்.

**உளவியல் - விளக்கம்**

உளவியல் (Psychology) என்னும் சொல் கிரேக்க மொழிச்சொற்களான "சைக்கி" என்ற உயிரைக் குறிக்கும் சொல்லையும் "லோகஸ்" என்னும் அறிவியலைக் (Science) குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. எனவே ஆரம்ப காலத்தில் உளவியல் என்பது "ஆன்மா" "மனம்" போன்றவற்றை ஆராயும் இயலாகக் கருதப்பட்டது.

மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை, எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியலாகும்.

உளவியல் என்பது "மனதைப் படிப்பது" உளவியல் என்பது "உள வாழ்வின் அறிவியல்" என்று அமெரிக்க தத்துவவாதி வில்லியம் ஜேம்ஸ் உளவியலுக்கு வரையறை தந்துள்ளார்.

ஒருவர் அவருக்கே உரிய நடத்தை, சிந்தனை ஆகியவற்றை நிச்சயிக்கின்ற அவரது உளநிலை மற்றும் உடல் சார்ந்த அமைப்புகளில் மாறக்கூடிய கூட்டமைப்பு ஆளுமை எனப்படும் என்று கோர்டன் ஆல்போர்ட் ஆளுமையினை வரையறை செய்துள்ளார்.

எதிர் நிற்பவர் எத்தகைய மாற்று எண்ணம் கொண்டவராய் இருப்பினும் ஒருவரின் ஆளுமைக் கூற்றுகள் எதிர்நிற்பவரின் எண்ணத்தை மாற்றி உண்மையை உணரச் செய்யும் இக்கருத்தை வள்ளுவர்.

**"சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை**
**இகல்வெல்லல் யார்க்கும் மரிது."** **(குறள் 648)**

என்று ஆளுமையைக் குறிப்பிட்டுள்ளார்.

ஔவையார் அதியமானுக்காக தொண்டைமானிடம் தூது சென்று போரிடும் நோக்கத்தை அழித்து தம்முடைய ஆளுமைத்தன்மையை நிலைநாட்டினார் என்பதைப் பின்வரும் பாடலில் வலியுறுத்தியுள்ளார்.

**"இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி**
**கண்திரள் நோன்காழ் திருத்தி நெய் அணிந்து"** **(புறம் - 95)**

அதியமானுக்காக ஔவையார் தொண்டைமானிடம் தூது சென்று அவனுடைய படைக்கொட்டில்கள் பற்றிய சிறப்பை எடுத்துக் கூறி கருவிகள் கொல்லன் உலைக்களத்தில் உள்ளன என்று அவனை வஞ்சிப்பது போல தொண்டைமானை புகழ்கின்றார்.

காமக்கண்ணிப் பசலையாரின் பாடலொன்றில் தலைவியின் பிரிவுத்துயர் பேசப்பட்டுள்ளது. பொதுவாகவே பிரிவு என்பது தலைவியை உளவியல் ரீதியில் மிகவும் பாதிப்பது அதன் வெளிப்பாடுகள் வெவ்வேறு நிலைகளில் இருந்தாலும் அவர்களின் நிலை ஒன்றுதான்.

**தேம்படு சிலம்பில் தெள் அறல் தழீஇ**
**துறுகல் அயல தூமணல் அடைகரை,**
**அலங்குசினை பொதுளிய நறுவடி மா அத்துப்**
**பொதும்புதோறு அல்கும் பூங்கண் இருங்குயில்**
**'கவறுபெயர்த் தன்ன நில்லா வாழ்க்கை இட்டு**
**அகறல் ஓம்புமின், அறிவுடையீர்!' என,**
**கையறத் துறப்போர்க் கழறுவ போல,**
**மெய்யுற இருந்து மேவா நுவல...**
**இன்னாது ஆகிய காலைப் பொருள்வயிற் பிரிதல்**
**ஆடவர்க்கு இயல்பு எனின்**
**அரிதுமன்று அம்ம அறத்தினும் பொருளே.** **(நற்றிணை - 243)**

தேனுடையமலை, தெளிந்த நீர்சூழ்ந்த உருண்டைக்கல், மாவடுக்கள் நிரம்பிய மாமரங்கள் இவை அனைத்துமே கலவியின் குறியீடுகள். இளவேனிற் காலம் என்பது பிரிவுத்துயரை அதிகப்படுத்தும் காலம் அப்போது இயல்பாகக் கூவுகின்ற குயில்களின் செயல் தலைவியின் தன்முனைப்பை அழித்துவிட்டு பிரிவைக் குறித்த பிறிதொரு காரணத்தைக் கூற உதவுகின்றன. அதாவது தன்னைப்பிரிவது என்பது தலைவனுக்கு பெரிய வலியைத்தரக்கூடியதல்ல ஆனால் உலகத்தில் செல்வம் நிலையில்லாதது, இருக்கும் வரை தலைவியை பிரியாமல் வாழவேண்டியது அறம், அந்த அறத்தைக்காட்டிலும் செல்வம் ஈட்டுதல் என்பது பெரிதாகப்போய்விட்டது என்று கூறுவது, தலைவியின் தன்முனைப்பு அழிவைக்காட்டுகிறது. எந்த உதவியும் கிடைக்காத நிலையில் துன்பம் ஒன்று உறுதியான தருணத்தில் இத்தகைய நிலை ஏற்படுவது இயல்பு. ஒரு இரண்டாம் நிலைக்காரணத்தை முதன்மைப்படுத்தி பேசுவது என்று உளவியலாளர்கள் இதனைக் கருதுவர். பெரும்பாலான பிரிவுத்துயர் பாடல்களில் இத்தகைய பிறழ்வு மனநிலையினைக் காணமுடிகிறது.

"ஒருவனது மனம் சரியான முடிவெடுக்கும் நிலையில் இல்லாதபோது மனமகிழ்ச்சியற்ற நிலைமையும் துயரத்தையும் உண்டுபண்ணுகிறது என மனப் போரட்டத்திற்கு வரையறை செய்துள்ளார். கி.நாகராஜன் அவர்கள்,

ஓர் இலக்கினை அணுகவும் தூண்டும் வலியான போக்குகள். ஒரே நேரத்தில் நிலவுதே அணுகுதல் - விலகுதல் போரட்டம். கரிகால் வளவனோடு போரிட்ட சேரலாதன் எதிர்பாராமல் நேர்ந்த புறப்புண் நாணி அப்போர்க்களத்திலேயே வடக்கிருந்து உயிர்விடத் துணிந்தான் அதனைக் கேள்வியுற்ற சான்றோர் நிலையை மாமூலனார்."

**"இன்னா இன்னுரை கேட்ட சான்றோர்" (அகம் - 55)**

எனக் கூறுகிறார். சேரலாதன் இறக்கின்றான் என்னும் செய்தி இன்னாதது புறப்புண்ணிற்காக வடக்கிருத்தல் அவனது மானப்பெருமையும் மறவுணர்வின் செறிவையும் விளக்குதலால் இனிமையும் தோன்றுகிறது. சான்றோர் கேட்ட இச்செய்தியில் தலமும் அணுகுதல் விலகுதல் போராட்டத்தில் அடிப்படை உள்ளது. பிரிவுத் துன்பத்தின் வருந்தும் தலைவி நினைந்தால் நெஞ்சு சுடுகின்றது. நினையாதிருப்பது ஆகவில்லை எனக் கூறுகின்றாள்.

**"உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது.**

**இருப்பினெம் அளவைத் தன்றே" (குறுந் -101)**

உளப்போராட்டத்தால் கனலும் நெஞ்சு ஔவையாரின் அழுத்தம் சொற்களில் வெளிப்படுகின்றது. உள்ள முறிவு எவ்வகைத் தீர்வுமின்றி நெடுங்காலம் தொடருமானால் உணர்வியல் சார்ந்த முற்றிய விறைப்பு நிலையில் (Tension) தோன்றும். அந்நிலையை உள்ள இறுக்கம் (Stress) என்றும் உளவியலார் குறிப்பர்.

இரவுக்குறியில் தலைவன், தலைவி இருவர் விருப்பத்தாலும் நிகழ்வது சூழலின் தடைகளால் இரவுக்குறி இடையீடுபடுவதுமுண்டு. அன்பும் இன்பமும் நிறைந்து மகிழ வேண்டிய இரவுக்குறி நேரங்கள் "நெஞ்சு புண்ணுற்ற விழுமம் மிக்க பொழுதுகளாய்" (குறுந் 261) உள்ளத்தைத் துன்புறுத்துகின்றன.

"இரவுச் சிறுநெறி தமியை வருதி'" (அகம் 318) என்றும் இடையூறுகளால் இரவுக்குறி வாய்க்காமையால் தலைவனுக்கு நேரும் வருத்தம் பின்வருமாறு குறிக்கப்படுகின்றது.

**"நசைதர வந்த நன்ன ராளன்**

**நெஞ்சு பழு தாக வறுவியன் பெயரின்" (அகம் - 362)**

இவ்வரிகளில், நெஞ்சு என்பது விரும்பிய எண்ணத்தைக் குறிக்கிறது. இரவுக்குறியில் தலைவன் வரும் ஆறு, வழி பார்த்துற்ற அச்சக் கிளவிகளில் அன்பு, இன்ப வேட்கை, அச்சம் ஆகிய பல்வேறு உணர்வுகள் உறைந்து கலங்கிய உள்ள இறுக்கத்தைக் காணலாம்.

மனித வாழ்வில் கடமை உணர்வு என்பது முக்கிய இடத்தைப் பெறுகிறது. ஒவ்வொரு மனிதனும் ஒரு குறிப்பிட்ட வயதை அடைந்தவுடன் தனக்குரிய கடமைகளை ஆற்றின் சமூகத்தில் அவனுக்குரிய அங்கீகாரம் கிடைக்கின்றது.

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே,**

**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே,**

**வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே,**

**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,**

**ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்,**

**களிறுஎறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே." ( புறம் - 312)**

என்ற பொன்முடியாரின் பாடல் அன்றைய இளைஞர்களுக்கு போர் புரிதல் என்பது இன்றியமையாத கடமை என்கிறது. இன்றைய இளைஞன் அறவழியில் பொருள் சேர்த்து தன் குடும்பத்தையும், தான் சார்ந்த சமூகத்தையும் காக்க வேண்டும் என்பது முக்கிய கடமையாக எண்ணப்படுகிறது. ஆகவே காலத்திற்கு ஏற்ப கடமைகள் மாறினாலும் கடமை என்னும் உணர்வு மாறவில்லை என்பது புலனாகின்றது.

புறத்தோற்றம் என்னும் உளநலத் தற்காப்பு இயங்குமுறையைத் தன்னியக்கமாக நனவிலி மனத்தால் தன்னைச் சார்ந்த, ஆனால் கைவிடப்பட்ட மனப்போக்குகளையும் உந்துதல்களையும் புறமுகமாக்கி, வழக்கமாக வேறு மனிதன் அல்லது மனிதனின் ஏற்றி கற்பித்துக் கூறுதல் என உளவியலாளர் வரையறை செய்வது தான் மறுக்க விரும்பும் கைவிட விரும்பும் பண்புகளை பிறர் மேல் ஏற்றி காணும் முறையை சங்க இலக்கியத்தில் உள்ளது. நமது எண்ணங்களை அல்லது ஆசைகளை பிறர் மேலேற்றி காண்பித்து கூறும்போது நாம் புறத்தோற்றம் புரிகிறோம் என்றும் கூறுவது உளவியலாளர் கருத் .

இயல்பான மனம் காலத்தின் அளவை குறைத்தோ கூட்டியோ உணர இயலாது. ஆனால் அதே உணர்வு வயப்பட்ட மனதிற்கு ஒருகணம் ஒரு யுகம் எனவும் ஒரு யுகம் ஒரு கணம் எனவும் தோன்றுதல் உண்டு. தலைவனைப் பிரிந்து உள்ளமையால் ஒவ்வொரு நாளும் பல நாட்களாக நீளுவதாகத் தலைவி கருதுகிறாள்.

மிக விரைவில் தன்னை இல்லத்தை கொண்டுவந்து சேர்த்த தேர்ப்பாகனிடம் தலைவன்,

"**ஏறிய தறிந்தன்றல்லது வந்தவாறு நனியறிந்**

**தன்றோ இலனே"** **(அகம் - 384)**

எனக் கூறுகின்றான்.

**முடிவுரை**

சங்ககால இலக்கிய பாடல்களில் பெண்பாற் புலவர்களில் அதிகமான பாடல்களை பாடியவர் ஔவையார் தம்முடைய நண்பரான அதியமானுக்காக தொண்டைமானிடம் தூது சென்று தம் ஆளுமைத் தன்மையை நிலைநாட்டியுள்ளார். இதுவே மற்ற பெண்பாற்புலவர்கள் காட்டிலும் அவரை தனித்து அடையாளப்படுத்திக் காட்டுவதற்கான காரணமாக அமைகின்றது. உள்ளப்போராட்டம் என உளவியலாளர் கூறும் தொடரோடும் கருத்தோடும் ஒன்றி நிற்கும் சூழல்கள் பல சங்க இலக்கியத்தில் இடம் பெற்றிருப்பினும் அணுகுதல் விலகுதல் மனப் போராட்டத்தை குறிக்கும் தொடர்களும் சூழல்களும் உளவியல் நுட்பம் மிக்கனவாக காட்சியளிக்கின்றன எனும் செய்தி இக்கட்டுரையில் அறியமுடிகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. முற்போக்கு கல்வி உளவியல் - பேராசிரியர் முனைவர் அ.மீனாட்சி சுந்தரம் காவ்யாமாலா பப்ளிஷர்ஸ், சென்னை- 8.
2. சங்க இலக்கியத்தில் உளவியல் - டாக்டர் து.சிவராஜ் சிவம் பதிப்பகம்.
3. திருக்குறள் பரிமேலழகர் உரை - பரிமேலழகர் - அம்சா பதிப்பகம் , சென்னை.
4. அகநானூறு - நியூ செஞ்சுரி வெளியீடு ,
5. புறநானூறு - நியூ செஞ்சுரி வெளியீடு,
6. நற்றிணை - நியூ செஞ்சுரி வெளியீடு,
7. குறுந்தொகை - நியூ செஞ்சுரி வெளியீடு.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# கலித்தொகையில் உளவியல்

63

**ஜொ.சி.மோனிஷா**
**நடுப்பாளையம்**

**ஆய்வுச் சுருக்கம்;**

தலைவியின் ஆளுமையானது அவளுடைய உள்ளத்தின் அமைப்பு மற்றும் நடத்தைகளின் வடிவமைப்பு போன்றவை உளச்சிக்களாலே நிகழ்கின்றது என்பதை மெய்ப்பிக்கும் வகையில் இவ்வாய்வு அமைந்துள்ளது. மனதில் அழுத்திக்கிடக்கும் சிக்கல்களை வெளிக்கொண்டு வந்து, அவற்றை மறுபடியும் நினைவாற்றலின் மூலமாக அனுபவிக்கும்படி செய்துவிட்டால் அச்சிக்கல்களினால் ஏற்பட்ட கோளாறுகள் தீர்ந்துவிடும் என்பதை உளவியல் வழியாக அறிந்து கொள்ளலாம்

**முன்னுரை**

சங்ககாலத் தமிழர்கள் நமக்கு இரு பெருஞ்செல்வங்களை வழங்கியுள்ளனர். நம் தமிழரின் வரலாற்றை மிகச் சிறப்பாக, இயற்கை வருணனையுடன் மிக அழகாக படைத்துள்ளனர். அத்தகைய புகழுக்குரிய நூல்களாக எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் விளங்குகின்றன. மக்களின் வாழ்க்கை முறை அவர்களின் மரபு, பண்பாடு, பழக்கவழக்கம், வீரம், பெண்களின் சொல்லாற்றல் இயற்கை ஆகியவற்றின் தொகுப்புக் களஞ்சியமாக இந்நூல்கள் அமைந்துள்ளது.

**“நற்றிணை நல்லகுறுந்தொகை ஐங்குறுநூறு**

**ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்**

**கற்றறிந்தோர் ஏத்தும் கலியோடு**

**இத்திறத்த எட்டுத்தொகை” 1 (பக்.51)**

இப்பாடலில் ஆறாவது தொகை நூலாக கலித்தொகை குறிப்பிடப்படுகின்றது. அடை மொழியாகிய ‘**கற்றறிந்தோர் ஏத்தும் கலித்தொகை**’ என்ற சிறப்பினை பெற்றுள்ளது. கலித்தல் என்ற சொல்லுக்கான பொருள் ஆரவாரம் செய்தல், எழுச்சி கொள்ளுதல், மகிழ்தல் ஆகும். பதிற்றுப்பத்தும், புறநானூறும், புறவாழ்வினைப் பற்றி பேசப்படும் நூல் இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்றவை அகவாழ்வினைப் பற்றிய நூல்களாகும். சங்க அக இலக்கியங்கள் ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வுக் கருத்துக்களை ஏற்றிப் பார்ப்பதற்கு சரியான இடம் என்பதை உணர்ந்து கொண்டேன். இந்நிலையில் சங்க இலக்கிய நோக்கம் சிதைவடையாதவாறு எழுத வேண்டும் என்கின்ற மன உறுதியுடன் இவ்வாய்வினை தொடங்கினேன்.

**உளவியல்**

'**சைக்காலஜி**' என்பதன் மூலச்சொல் '**சைக்கிலோக்ஸ்**' என்பதாகும். '**சைக்கி**' என்றால் ஆன்மா என்றும், '**லோகஸ்**' என்றால் அறிவியல் என்று பொருள்கொண்டு '**சைக்காலஜி**' என்பதை ஆன்மாவின் அறிவியல் என்றும் விளக்குவர். '**ஆன்மாவை பற்றிய அறிவியக்கமே உளவியல்**' என்று குறிப்பிட்டுள்ளனர். அரிஸ்டாட்டில் எழுதிய '**ஆன்மாவின் இயல்புகள்**' என்ற நூலே உளவியல் பற்றிய முதல் நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

**உளவியல் விளக்கம்**

மனிதன் என்பவன் உடலும் உள்ளமுமாக கலந்து இருப்பவன். மனிதனின் உள்ளமாது செயல்படுவதால் தான் திறமைமிக்க செயல்களை செய்கின்றான். மனிதன் பிறரிடமும் ஒவ்வொரு சூழலிலும் செயல்படும் அல்லது நடந்து கொள்ளும் விதம் அல்லது நடந்து கொள்ளும் முறையே நடத்தை ஆகும். இவை போன்ற மனிதப் பண்புகளை அம்மனித நடத்தை முறைகளை ஆராயும் துறையே உளவியலாகும். மனித உள்ளத்தின் நிலைகளையும் செயல்களையும் விளக்குவதே உளவியல் ஆகும். இது மனித அக வாழ்விற்கு உயர்வினைத் தருவதாக உள்ளது.

மனிதனின் நடத்தை மூலம் ஒருவரின் நடத்தைகளையும், நடத்தை மாறுபாடுகளையும், விளக்கும் அறிவியலாக உளவியல் உள்ளது. இவ்வுளவியல் மனித வாழ்விற்கு பயன்படும் தன்மை அடிப்படையில் நடத்தைகளை ஆராய்தல், நடத்தை மூலமாக வெளிப்படும் மனநிலையை ஆராய்தல், மனிதனின் உளவெளிப்பாட்டை வெளிக் கொண்டு வருதல், மாறுபட்ட சூழலில் நடத்தைகள் மாறுபடுவதற்கான காரணத்தை ஆராய்தல், மனிதனுக்குள் இருக்கும் உளச்சிக்களை கண்டறிந்து, அத்தகு சிக்கலுக்கான காரணத்தையும் கண்டறிந்து, அதில் இருந்து மீள்வருவதற்கான செயல் முறைகளையும் ஆராய்தல், மனிதனுடைய இயல்புகள், நடத்தைகள் அதற்கான காரணத்தை புரிந்து கொள்ள உதவுகிறது.

1. சமுதாய பிரச்சனைகளை புரிந்து கொண்டு அவற்றிற்கான தீர்வினை காண்பதற்கும் உளவியல் துணை செய்கின்றது. மேலும் மனித மனங்களையும், மனித செயல்பாடுகளையும், அதற்கான காரணங்களையும் ஆராய்வது உளப்பகுப்பாய்வு. இந்நிலையில் இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதை காண. முடிகின்றது. 'மனிதனை பற்றியும், மனித மனம் பற்றியும், மனத்தின் செயல்பாடுகளை பற்றியும், கூறுவதாக இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் அமைகின்றன.' 2 **முனைவர்.செ.சாராதாம்பாள் இலக்கியமும் உளப்பகுப்பாய்வும் (பக்.7)**

கலித்தொகை 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' என புகழ்பெறும் இலக்கியம் ஆகும். கலித்தொகை முல்லைக்கலித் தலைவியின் ஆளுமையானது செயல்வடிவத்திற்கு அடிப்படை. **ஆளுமை** என்பது

ஆங்கிலத்தில் 'Personality' என்று அழைக்கப்பெறுகின்றது. ஆளுமை என்னும் திறனை ஆராய்வதன் மூலம் சமுதாயத்தில் செயலாற்றல் மிக்கவர்களாக திகழவேண்டும் என்னும் நோக்கில் இவ்வாய்வினை தொடங்கியுள்ளேன்.

**சிக்மண்ட் ஃப்ராய்ட் வாழ்வியல்**

ஃப்ராய்ட் கி.பி.1856-ம் ஆண்டு மே மாதம் 6ம் தேதி ஃப்ராய்பெர்க் என்ற ஊரில் தற்போது செக்கஸ்லோவாக்கியாவில் உள்ள மொராவியா நாட்டில் பிறந்தார். 1859 - ஆம் ஆண்டு அவர் குடும்பம் வியன்னா நகருக்குக் குடிபெயர்ந்தது. வியன்னா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் பயின்றார் ஃப்ராய்ட். மனித மூளையைப் பற்றி பல ஆராய்ச்சிகள் செய்தார். விரிவுரையாளராகவும் பணியாற்றினார். மனித மனம் சம்பந்தமா கட்டுரைகளையும் அவ்வப்போது எழுதி வந்தார்.

மனதில் அழுத்திக் கிடக்கும் சிக்கல்களை வெளிக்கொண்டு வந்து, அவற்றை மறுபடியும் நினைவாற்றலின் மூலமாக அனுப்பவிக்கும்படி செய்துவிட்டால் அச்சிக்கல்களினால் ஏற்பட்ட கோளாறுகள் தீர்ந்துவிடும் என்பதைக் கண்டறிந்தார்.

**"மனநோய் உடையவர்கள் நனவிலி மனத்தில் அமுங்கி கிடக்கும் இச்சைகள், அனுபவங்கள் முதலியவற்றை நனவுநிலைக்கு கொண்டு வருமாறு செய்து அவற்றை மீண்டும் மனத்தில் அனுபவிக்கும்படி செய்துவிட்டால் மன நோய் நீங்கும். மனம் தூய்மையாக இருக்கும். இவ்வாறு மனதிற்கு கொண்டு வருவதற்குத் 'தடையில்லாத் தொடர்முறை' என்று பெயரிட்டார்."3. ஃப்ராய்ட் மன அனுபவத்தின் வெளிப்பாடுகளை வைத்துக் கொண்டு நனவு மனம், நனவிலி மனம், நனவடங்கு மனம் என்று மூன்றாக பிரிக்கிறார்.**

**தி.கு.இரவிச்சந்திரன் சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல் (பக்.39)**

**நனவு மனம்**

இது மனித மனதின் மேற்பகுதியாகும். இம்மனமானது சாதாரணமாகச் செயல்படும். வெளித் தூண்டல்களால் அறியப்படும் இருக்கின்ற வெளியுலக அனுபவங்கள், சிந்தனைகள், எண்ணங்கள் கருத்தோட்டங்கள் நிறைந்த பகுதி நனவு மனம் ஆகும்.

**நனவடங்கு மனம்**

நனவுக்கும் நனவிலிக்கும் இடைப்பட்ட மனநிலையாக நனவடங்கு உள்ளது. தாமதமாகவோ இயல்புகளினாலோ எழும் உள்ளடக்கிய மனநிலையை இவ்விடத்தில் உணர இயலும். இம்மனம் நனவு

மனத்துடன் தொடர்புடையது. நனவு மன அனுபவங்கள், எண்ணங்கள் முதலியவை தற்காலிகமாக மறைக்கப்பட்ட நிலையில் இருக்கும்.

**நனவிலி மனம்**

குழந்தைப் பருவத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், அதிர்ச்சிகள், அடக்கிவைக்கப்பட்ட இச்சைகள், ஆகியவை மறைமயாதன. அவை மனித மனதில் வெளிப்பாடாது. ஏதோ ஒரு இடத்தில் அமுங்கியிருக்கும் என்பதை ஃப்ராய்ட் கண்டார். வெளிப்படையாக தெரியாத இப்பகுதிக்கு அடிமனம் அல்லது நனவிலி மனம் என்று பெயரிட்டார். இதை ஆழ்மனம் என்றும் குறிப்பிடுவார். இங்கு விருப்பங்கள் அமுக்கப்பட்டு இருக்கும். இதில் காமம், அச்சம், கோபம், சினம், குரோதம் போன்ற உணர்வுகள் உள்ளன. இவை தீவிர உள்ளுணர்வுகளாக உள்ளக்கிளர்ச்சியுடன் இருக்கும். சமுகம் ஏற்றுக்கொள்ளாதத ஆசைகள் ஏதாவது ஒரு காரணத்தினால் உள்ளடங்கியிருக்கும்.

1. இவ்வுணர்வுகள் உள்ளடங்கியிருப்பதால் உள்ளத்தில் கவனக்கோளாறுகள் ஏற்படும். இவை மிகும் பொழுது மனநோய் உருவாகின்றது. **“ஒரு மனிதனின் பண்பை உருவாக்குவதில் நனவிலி மனம் பெரும்பங்குவகிக்கிறது.” நனவிலி மனம் எண்ணங்களையும், நினைவுகளையும் சேகரித்து வைக்கும் நினைவுக்களஞ்சியம் என்பர். அந்த நினைவுக்களஞ்சியத்தில் வரும் எண்ணங்களுக்கு வலிமை அதிகம். சூழல்வழி எழும் எண்ணம் தான் மனிதனை நல்லவனாகவும் தீயவனாகவும் மாற்றுகின்றது என்பது உளப்பகுப்பாய்வு திறனாய்வாளர்களின் கருத்தாகும்.**

**.தி.கு.இரவிச்சந்திரன் தொல்காப்பியமும் ஃப்ராய்டும்** (பக்.19)

**ஆளுமைத் தன்மை**

ஆளுமை என்பது வண்ணம் போன்றது. அனைத்துப்பொருள்களும் குறிப்பிட்ட வண்ணத்தை கொண்டிருப்பதைப் போல ஒவ்வொரு மனிதரிடத்திலும் குறிப்பிட்ட ஆளுமை உள்ளது. வெகுளி, பயந்தாங்கோலி, திமிர், அமுங்குலி போன்ற சொற்களை நடைமுறையில் காணலாம். இவை அனைத்தும் அந்தந்த மனிதர்களின் ஆளுமைகளைக் குறிப்பதாகும்.

ஒருவரின் குணங்களை அறிந்துகொள்ள ஆளுமைக் கோட்பாடு பெரிதும் பயன்படுகிறது. ஒவ்வொரு மனிதருக்கிடையேயும் ஆளுமைப் பண்புகள் மாறுபடும். பழகும் விதங்கள், செயற்பாடுகள், அனுபவங்கள் போன்றவற்றைக் கொண்டு தனியரின் இயல்பை சுருக்கமான ஒரு முடிவுக்கு கொண்டுவர ஆளுமைக் கோட்பாடு பெரிதும் பயன்படுகிறது.

ஆளுமையை கண்டறிய அவனின் நடத்தைகளையும் பழக்கவழக்கங்களையும் ஆராய வேண்டும். ஒருவனை ஆராயாமல் ஆளுமையை முடிவு செய்துவிட முடியாது. ஒருவரின் சிறப்பியல்புகளையும் உளத்தன்மைகளையும் பல சோதனைகளுக்கு உட்படுத்தலாம். ஆளுமையும் சோதனையும் பரிமாற்ற உறவுமுறையைக் கொண்டதாகும்.

கலித்தொகையில் இடம்பெற்றுள்ள முல்லைக்கலி பாடல்களில் பெரும்பான்மையானவை ஏறுதழுவுதலையும் அதில் வெற்றி பெரும் ஆண் மகனிற்கே 'தன் மகளைத் தருவோம்' எனக் கூறுவதாக அமைந்துள்ளது.

"காதல் என்பது அன்பு வடிவிலானது. எனினும் மறைமுகமாக காமம் உள்ளது. ஆண்மைக்கும் பெண்மைக்கும் இடையே தான் காதல் அரும்பும். இது இயற்கை தேர்வின் வழிபட்டது. அனைத்துச் சமுகங்களிலும் பாலுணர்ச்சி ஒடுக்குதலுக்கு ஆளாகின்றது. அமுக்கப்பட்ட பாலுணர்ச்சி அன்பெனப் பெயர்வாகி இடம்பெயர்வாகி காதலாகிறது. எனவே காதல் என்பது ஒழுக்கத்தின் குறியீடு ஆகும்.

தலைவன் தலைவியின் காதலை பேசுமிடத்து கவிஞர் அதன் மறைபொருளாக காமத்தை எடுத்துரைக்கிறார்.

**உள்ளுணர்ச்சி உந்தல்**

தேவைகள் வேட்கைகள் உந்தல்களால் உருவான துடிப்புகளாகும். இவ்வகை துடிப்புகள் உந்தல் காரணமாக உளஇயக்கங்களின் ஆதாரமாகக் கொண்டவை என்பதால் இதனை 'உள்ளுணர்ச்சி உந்தல்' என்று ஃப்ராய்ட் குறிப்பிடுகிறார்.

ஆயர் சமூக மக்களின் குடி வழக்கத்தின்படி, **"ஏறு தழுவியவர்க்கே என் மகளைத் தருவேன்"** என்கின்ற சமூக விழுமியங்களை .புரிந்து கொண்ட உள்ளம் நாகரீகமாக பாலுணர்ச்சியை வெளிப்படுத்த முற்படுகின்றது.

**"ஏறு கொள்ள வல்லார் என்னை போல எவரும் இல்லை"** என்று தலைவன் வீரம் பேசுவதற்கு அவனது உள்ளுணர்ச்சி உந்தல் காரணமாகின்றது. இவ்வாறு உருவாக்கப்பட்ட உள்ளுணர்ச்சியே வேட்கையாக வெளிப்படுகின்றது. என்கிறார் ஃப்ராய்ட்.

**உளப்போராட்டம்**

உளப்பகுப்பாய்வின்படி ஒவ்வொரு உள்ளுணர்ச்சிக்கென குறித்த புறநிலை உண்டு. அப்புறநிலையைக் கொண்டுதான் குறித்த குறிக்கோளை அவை அடைகின்றன. "பாலுணர்ச்சியின் குறித்த குறிக்கோள்

'எதிர்பாலின மோகிப்பு ஆகும்."2 இதன் அடிப்படையில் ஒரு ஆண் ஒரு பெண்ணை காதலிப்பது இயற்கையின் நியதி.

இதன் காரணமாக களவு வாழ்வில் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுது பல தடைகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. சமூக விழுமியங்களைக் புரிந்து கொண்ட உள்ளம் நாகரீகமமாகப் பாலுணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டும் என்கிற முறைமைக்கு வந்துவிடுகிறது. ஆனால் பாலுணர்ச்சி நாகரீகக் கவலையைக் கொள்வதில்லை. உந்துவிசைப் போக்கில் செயல்பட வேண்டும் என்கிற கொள்கையில் செயல்பட விழைகிறது. சமூக மனிதனிடம் இத்தகு வெளிப்பாட்டிற்கு இடம் இல்லை. இந்த இரு நிலைப்போக்கு '**உளப்போராட்டம்**' ஏற்பட வழிவகுக்கின்றது.

**'நமக்கு ஒரு நாள் உறவினர் ஆகாமல் போவதில்லை'**

என தலைவனைக் கண்டு புறத்தூண்டல் காரணமாக உள்ளுணர்ச்சி வெளிப்படுவதையும், 'உறவினன்' என்ற சொல்லால் மறைமுக பொருளாக காமம் வெளிப்படுத்தப்படுகின்றது. இதனால் தலைவியின் உளபோராட்டத்திற்கு இரு செயல்கள் காரணமாகின்றன. ஒன்று தலைவன் தனக்கு உறவினன் ஆகிவிடுவான் என்கிற நேர்மறை கருத்தும், மற்றொன்று தனக்கு உறவினன் ஆகாமற் போய்விடுவானோ? என்கிற எதிர்மறைக் கருத்துமே தலைவியின் உளபோராட்டத்திற்கு காரணமாகிறது.

நல்லுருத்திரனார் முல்லைக்கலியில்,

**"…………………ஒரு நாள்**

**கேளாளன் ஆகாமை இல்லை, அவன் கண்டு**

**வேளான்மை செய்தன கண்."**

அளவைக் கண்டு எம் கண்கள் காதல் கொண்டுள்ளது எனத் தலைவி கூறுவதன் மூலம் ஃப்ராய்டிய கோட்பாட்டின்படி உள்ளுணர்ச்சி உந்தல் காரணமாக '**அவனை அடைய வேண்டும்**' என்கிற வேட்கை வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

மனித எண்ணகளில் நேர்மறைக் கருத்துக்கள் தோன்றும் போது நன்மையும், எதிர்மறைக் கருத்துக்கள் தோன்றும் போது தீமையும் உண்டாகின்றது.

நேர்மறைக் கருத்துக்கள் தோன்றும் பொழுது உளச்சிக்கல், உளப்போராட்டம் நிகழ்வதில்லை என்பதை இவ்வாய்வின் வழி அறிய முடிகிறது. குழந்தைப் பருவ அனுபவங்கள் ஆளுமைகளைக் கட்டமைக்கின்றது என்பதை ஆய்வில் அறிய முடிகிறது.

தேவை மற்றும் வேட்கைகள் வாயிலாக உள்ளுணர்ச்சி உந்தல் வெளிப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**துணை நூற்பட்டியல்**

**1.கலித்தொகை - முல்லைக்கலி புலியூர்கேசிகன் உரை சாரதாப்பதிப்பகம் சென்னை (2005)**

**2. கலித்தொகை - உ.வே.சாமிநாதஜயர் திருவேட்டீஸ்வரன்பேட்டை சென்னை (1925)**

**துணைமைச் சான்றாதாரம் தி.கு.இரவிச்சந்திரன் சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல் அலைகள் வெளியீட்டகம் சென்னை (2005)**

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

64

# பாரதி - உளவியல் பார்வை

**முனைவர் மா. ரேணுகா, உதவிப்பேராசிரியர்**
**தமிழ்த்துறை,பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோவை**

**ஆய்வுச் சுருக்கம்**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்திலுள்ள எட்டயபுரத்தில் 1882 இல் தோன்றி 1921 வரை வாழ்ந்து இன்றும் மக்கள் மனதில் நீங்காத ஓரிடத்தில் வாழ்பவர் மகாகவி பாரதியார். இவரின் 267 கவித படைப்புக்களை ஆய்வுச் செய்து உளவியல் பார்வைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. படைப்பாளன் கால சூழலுக்கு ஏற்ப தன் படைப்புகளைப் படைத்தாலும் நிறைவேறாத ஆசைகள், எண்ணங்கள் ஆகியவற்றை மனதில் புதைக்காமல் தன் படைப்புகளில் படைத்தலும் செய்கின்றார். அப்படிப்பட்ட கவிஞர்களின் வகைகளில் மகாகவி பாரதியாரும் ஒருவராவார். பாரதியின் கவிதை ஆளுமை பெறுவதற்குக் காலச்சூழல் மிகவும் உதவியாக இருந்துள்ளது. காலநிலையையும் சமூக நிலையையும் குறித்து சிந்தித்த பாரதி தன் கவிதைகள் வழியாக மக்களிடத்து மண்ணின் பெருமையை எடுத்து இயம்பினார். பொருளுக்காக கவிதை படைத்தவன் அல்ல பாரதி தன் உள்ளத்தின் தேடலுக்காக கவிதை படைத்தவன் பாரதி. அவருடைய படைப்புகள் பெரும்பாலும் அவரது உள்ளத்தின் வெளிப்பாடாகப் புலப்படுவதை நாம் உணர முடியும். எண்ணங்களுக்கு ஆற்றல் உண்டு என்ற சான்றோர் மெய்ம்மொழிக்கேற்ப பாரதி மக்களிடம் நல்லெண்ணங்களை வளர்க்க நல்ல கருத்துக்களைக் கவிதைகளில் புகுத்திப் பாடினார். தீய எண்ணங்கள் மக்களுக்குத் தீங்கு விளைவிப்பது அவற்றை விலக்க கவிதை எழுதியுள்ளார்.பெண் நினைத்தால் நாட்டை விடுதலை பெற செய்ய முடியும் என்று பாரதி உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து வைத்திருந்தார். இவற்றை இக்கட்டுரை ஆராய்ந்து வெளிப்படுத்துகின்றது.

**முன்னுரை**

ஓர் இலக்கியப் படைப்பாளிக்கு இரண்டு மனநிலை காணப்படுவதை வெளிப்படுவதைக் காணலாம் ஒன்று கற்பனைத் தன்மை மற்றொன்று எதார்த்தத் தன்மை. இவற்றில் எதை வேண்டுமானாலும் சமூகத்திடம் பிரதிபலித்து காட்ட முடியும் படைப்பாளன் எதார்த்தத்தை வெளிக்காட்டும் போது சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டிய சூழலில் தள்ளப்படுகின்றான் இருந்தாலும் சமூக நீதியை கடைபிடிக்க வேண்டியது படைப்பாளியின் பெரும் பங்காகவும் கடமையாகும் அமைகின்றது. படைப்பாளன் கால சூழலுக்கு ஏற்ப தன் படைப்புகளைப் படைத்தாலும் நிறைவேறாத ஆசைகள் எண்ணங்கள் ஆகியவற்றை மனதில் புதைக்காமல் தன் படைப்புகளில் படைத்தலும் செய்கின்றார். அப்படிப்பட்ட கவிஞர்களின் வகைகளில் மகாகவி பாரதியாரும் உள்ளார். அவர்தம் உள்ளத்தில் ஏற்பட்ட உணர்வுகள் கொந்தளிப்புகள் கவிதையாக வெளிப்பட்டு இருப்பதையும் காணலாம். உளவியல் பற்றி டாக்டர் சு

சண்முகசுந்தரம் கூறும்போது "உளவியல் என்பது மனித உள்ளத்தின் தன்மைகளை எடுத்து விளக்குவது. சைக்கி (Psyche) லோகஸ்(logus) என்ற இரு கிரேக்கச் சொற்கள் இணைந்து சைக்காலஜி என்று வழங்கப்படுகிறது என்றார் என்பார்"[1] பாரதியாரும் தன் உள்ளத்தின் வெளிப்பாடாக தான் கவிதைகள் புனைந்துள்ளார் இருந்தாலும் ஏராளமான கவிதைகள் மனதில் ஆழமாகப் பதிந்த பதிவுகளை வெளிக்காட்டும் போது இன்னல்கள் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் தன் படைப்பில் அவற்றைப் பிரதிபலித்து காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக

**எண்ணிய முடிதல் வேண்டும்**
**நல்லதே எண்ணல் வேண்டும்**
**நினைவு நல்லது வேண்டும்**
**நெருங்கிய பொருள் கைப்பட வேண்டும்.**

**(மஹாசக்திக்கு விண்ணப்பம்; பாடல்-1 )**

என்ற வரிகள் வழியாக பாரதியின் உள்ளக்கிடக்கை வெளிப்படுவதைக் காணலாம். பாரதியின் கவிதை ஆளுமை பெறுவதற்குக் காலச்சூழல் மிகவும் உதவியாக இருந்துள்ளது என்று நாம் கருதலாம். விழிப்புணர்வோடு பரந்துபட்ட உணர்வுடையது பாரதியார் ஆளுமைத்திறன் எனலாம். ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நின்று விடாமல் அதற்கும் அப்பால் மனதைச் செலுத்திச் சிந்தித்தத் தொலைநோக்குப் பார்வை உடையது என்றால் யாராலும் மறக்க இயலாது. மரபுவழிக் கவிஞர்களிடையே இருந்து சற்று வேறுபட்டு அறிவுத் திறமையால் அனைவரும் புரிந்து கொள்ளும் எளிமையான சொல்லாட்சியைக் கொண்டு கவிதைகள் படைத்து தன் ஆளுமையை நிலை நாட்டியவர் என்று கூறலாம். மு.இராசமாணிக்கம் அவர்கள் உளவியலை ஏழு வகையாகப் பகுப்பார்.[2] பாரதியின் கவிதைகளை பொதுஉளவியல், ஒப்பு உளவியல்,பிறழ்வுஉளவியல்,உடற்கூற்றியல்உளவியல்,சமூகஉளவியல், கல்வி உளவியல் என ஐந்து நிலைகளில் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**பொதுநிலை,தேச மற்றும்சமூகநிலையிலான உளவியல்**

பாரதியின் சிந்தனை எப்போதும் தேசத்தின் மீது தான் இருந்ததே தவிர தன்மீதோ குடும்பத்தின் மீதோ இருந்ததில்லை. இவ்வுலகத்தார் அனைவரையும் தம் உறவினராக எண்ணி வாழ்ந்தவர் பாரதியார் ஆவார். பாரதியின் நோக்கு பொதுதன்மையான நோக்காகும். இதனை

**பாருக்குள்ளே நல்ல நாடு -எங்கள்**
**பாரத நாடு (பாரதநாடு: பாடல் :4)**

என்ற அடிகளும்

**செய்யும் வினைகள் அனைத்திலும் வெற்றி**
**சேர்ந்திட நல்லருள் செய்க(வையமுழுதும்: பாடல் :1)**

என்ற அடிகளும்

**முப்பது கோடி ஜனங்களின் ஸங்கமுழுமைக்கும் பொதுஉடைமை ஒப்பிலா சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை**

(பாரத சமுதாயம்; பாடல்:2)

என்ற அடிகளும்

**காக்கை குருவி எங்கள் ஜாதி நீர்**

**கடலும் மலையும் எங்கள் கூட்டம்(ஜயபேரிகை; பாடல்:4)**

என்ற அடிகள் பாரதிக்கு தேசத்தின் மீது இருந்த பிரச்சினை பிரதிபலிக்கிறது.

காலநிலையையும் சமூக நிலையையும் குறித்து சிந்தித்த பாரதி தன் கவிதைகள் வழியாக மக்களிடத்து மண்ணின் பெருமையை எடுத்து இயம்பினார் உயிர் தன்மைக்கு மூலகாரணமாக விளங்கும் பேராற்றல் நம்முள்ளும் நமக்கு வெளியேயும் இருக்கிறது. இதை புரிந்து கொண்டால் நான் வேறு உயிர்கள் வேறு என்று கருதும் நிலை மாறும். இச்சிந்தனையை ஆழமாக மனதில் பதித்துக்கொண்டு கவிதைகள் தந்துள்ளார் எனலாம்.

பொருளுக்காக கவிதை படைத்தவன் அல்ல பாரதி. தன் உள்ளத்தின் தேடலுக்காக கவிதை படைத்தவன் பாரதி அவருடைய படைப்புகள் பெரும்பாலும் அவரது உள்ளத்தின் வெளிப்பாடு புலப்படுவதை நாம் உணர முடியும். கவிதையின் பின்புலத்தை வைத்து உள்ளத்தை அவன் வாழ்ந்த காலத்தில் இந்திய திருநாடு தமிழகம் மக்களின் நிலை அனைத்தும் கவிதைகளில் பிரதிபலிப்பதைக் காணலாம். அந்த கவிதைகளை ஆழ்ந்து நோக்கினால் அவரது உள்ளக்கிடக்கையும் உள்ளத்தின் தேடலும் வெளிப்படும்.அவரின் வாழ்க்கை கூட பல நேரங்களில் உளவியலைத் தாண்டி உடலுளவியலாக வெளிப்பட்டு இருப்பதை அவர் வரலாற்றைப் படிக்கும்போது தெளிவாகிறது

உதாரணமாக ஒரு முறை பாரதி திருச்சிராப்பள்ளி இரயில் நிலையத்திற்கு வருகை புரிந்தார் அவரது ரசிகர்கள் அவரை வரவேற்க குழுமி இருந்தனர். இரயிலிலிருந்து இறங்கும் போது கால் இடறி இரயில் நடைபாதையில் விழுந்து விட்டார். ரசிகர்கள் ஓடிவந்து அவரை தூக்க முற்பட்டனர் பாரதி அவர்களிடம் என்னை தொடாதீர்கள் என தடுத்து விட்டார். அதோடு இது என் பாரத மண் அதில் விழுவேன் புரளுவேன் என்று இரண்டு முறை புரண்டு சென்றதாக அவரது வாழ்க்கைக் குறிப்பு காட்டுகிறது. இந்நிகழ்வு அவர்தன் தந்தையர் நாட்டின் மேல் கொண்ட மனப்பற்று வெளிப்படுவதைக் காணலாம்.

தேசிய விடுதலையை எதிர்நோக்கி என்ற பாரதியின் யதார்த்த வாழ்வு அவரின் கவிதையாய் வெளிப்படுவதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக

**கணபதிராயன் அவனிரு காலைப் பிடித்திடுவோம்**

**குணம் உயர்ந்திடவே விடுதலை கூடி மகிழ்ந்திடவே**

(ஆறு துணை; பாடல்: 2)

கடவுளைப் பாடுகின்ற இடத்திலும் கூட விடுதலை சிந்தனை மிஞ்சி நிற்பதை காணலாம். சாதிகள் பாரத நாட்டை பிளவுபடுத்துகிறது ஒற்றுமையோடு இருந்தால்தான் நாடு விடுதலை பெற முடியும் என்ற உணர்வு பாரதிக்கு இருந்ததை தன் கவிதையில் ஒரு கோணங்கி பாடுவதாகச் சுட்டியுள்ளார். கோணங்கி மீது மக்கள் நம்பிக்கை வைத்ததால் அவர் கூறுவது போல் இந்நல் எண்ணத்தை மக்களின் மனதில் புகுத்த கீழ்வரும் கவிதையை தந்துள்ளார்.

**குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு**
**நல்ல காலம் பொறக்குது நல்ல காலம் பிறக்குது**
**ஜாதிகள் சேருது சண்டைகள் தொலையுது**
**சொல்லடி சொல்லடி சக்தி மாகாளி**

**(புதிய கோணங்கி; பாடல்: 16 )**

பாரதி இளம் பருவத்தில் ஆங்கிலேயரின் அடக்கு முறைகளையும் வன்முறைகளையும் பார்த்து வளர்ந்தவர். அந்த பிஞ்சு உள்ளத்தில் எப்போதுமே விடுதலை என்ற உணர்வு தீப்பிழம்பு போல எரிந்து கொண்டிருந்தது. மக்களிடம் காணப்படுகின்ற எதிர்மறையான எண்ணங்கள் செயல்கள் போன்றவற்றை ஆராய்ந்து நன்கு அறிந்து மக்களுக்கு கவிதையின் வழியாக வெளிப்படுத்தி இருப்பதைக் காணலாம். இதனை

**ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும் தாழ்வு (பாரதநாடு; பாடல் :4)**

என்ற அடிகள் புலப்படுத்தும்.

ஆங்கிலேயரின் அடக்குமுறையால் பார்த்து என் மனம் அல்லல்பட்டு தாங்காத ஒரு மன உணர்வு கவிதையாக வெளிப்படுவதைக் காணலாம். இதனை

**நெஞ்சுபொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட**
**மனிதரை நினைத்துவிட்டால்**

( பாரத ஜனங்களின் தற்கால நிலைமை; நொண்டிச் சிந்து; பாடல்:1) என்ற அடிகள் உணர்த்தும்.

எண்ணங்களுக்கு ஆற்றல் உண்டு என்றசான்றோர் மெய்ம்மொழிக்கேற்ப பாரதியின் மக்களிடம் நல்லெண்ணங்களை வளர்க்க நல்ல கருத்துக்களைக் கவிதைகளில் புகுத்திப் பாடினார். தீய எண்ணங்கள் மக்களுக்கு தீங்கு விளைவிப்பது அவற்றை விலக கவிதை எழுதியுள்ளார் எடுத்துக்காட்டாக ,

**வலிமையற்ற தோளினாய் போ போ போ**
**கிலிபி டித்த நெஞ்சினாய் போ போ போ**
**( போகின்ற பாரதமும் வருகின்ற பாரதமும்; பாடல் :1)**

என்கிறார்.

**பாரதியும் பெண் சிந்தனையும்:**

பாரதியின் உள்ளத்தில் பெண்ணைத் தாயாக சக்தியாக பார்க்க இந்த தன்மையைப் பெரும்பாலான கவிதைகளில் காணலாம்.பெண் நினைத்தால் நாட்டை விடுதலை பெற செய்ய முடியும் என்று பாரதி உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து வைத்திருந்தார். அதனை

**விடுதலைக்கு மகளிர் எல்லோரும்**

**வேட்கை கொண்டனம் வெல்லுவமென்றே.**

**(பெண்விடுதலை; பாடல்: 243)**

என்றும் சுட்டியுள்ளார்.

எந்த சமுதாயம் பெண்ணை வாழ்த்துகின்றதோ அச்சமுதாயம் முன்னேறும். பெண்ணை மதிக்கின்ற உளநிலை பாரதியின் கவிதைகளில் பிரதிபலிப்பதை உணரமுடிகின்றது. எடுத்துக்காட்டாக பெண்மை

**வாழ்கென்று கூத்திடுவோமடா**

**பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா**

**(பெண்மை; பாடல்:1)**

என்றும்

**பெண்ணறத்தினை யாண்மக்கள் வீரந்தான்**

**பேணுமாயின் பிறகொரு தாழ்வில்லை.**

**(பெண்மை; பாடல்:4)**

என்றும் கூறியிருப்பது நல்ல சாலப் பொருத்தமாக அமைந்துள்ளது.

**தெய்வப் பாடல்களில் பாரதியின் உளவியல்:**

பாரதி அறிவே தெய்வம் என்று கூறினாலும் இறை நம்பிக்கை கொண்டவர் என்ற நிலையை அவர் தம் பாடல்களில் பார்க்க முடிகின்றது இந்து, இஸ்லாமிய, கிறித்தவமக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களைச் சூட்டினாலும் பாடல்களின் வழியாக நாட்டுப்பற்றையும் ஆங்கிலேயர்களின் தீமையையும் மறைமுகமாகவும் நேரிடையாகவும் வெளிப்படுத்தி இருப்பதைக் காணமுடிகின்றது. எடுத்துக்காட்டாக கண்ணனை நினைக்கின்ற மனத்தின் வழியாக தீர்ப்பான் இருளைப் பேர்ப்பான் கலியை (மனமே;பாடல்: 62)

என்று சுட்டியுள்ளார். அல்லாவை சுட்டும்போது ,

**ஏழைகளுக்கும் செல்வதற்கும் இறங்கி அருளும் ஓர்பிதா**

**கோழைகட்கும் வீரருக்குங் குறை தவிர்த்து ஓர் குரு**

(அல்லா;பாடல்:4)

என்றும் இயேசு நாதர் குறித்து பாடும்போது

**நாச மின்றி நமை நித்தங் காப்பர்**

**நம் அகந்தையை கொன்று விட்டால்**

**(யேசுகிறித்து; பாடல்:1)**

எனக்கூறுவதிலிருந்து அல்லா, யேசுநாதர் போன்றோர் மக்களை நல்வழி கல்விக்காகப் பாடுபட்டு இருப்பது தெரிகின்றது.

**முடிவுரை**:

மேற்படி பாடல் தரவுகளை அடிப்படையாக வைத்து பார்க்கின்ற பொழுது பாரதியின் உள்ளம் தேசிய விடுதலையின் மீது ஆழமான பதிவு கொண்டு உள்ளது என த்தெரிகிறது. உள்ளத்தின் பாதிப்புகள் அனைத்தும் கவிதைகளாய் வெளிப்பட்டுள்ளன. கடவுளை வணங்கும் பொழுது உள்ளத்தில் விடுதலை தாக்கம் கவிதைகள் வழியாக வெளிப்படுகின்றன. நாடு விடுதலை பெறுவதற்கு வேண்டிய விதிமுறைகளையும் கவிதைகளிலேயே வடித்துள்ளார் .அவை சாதி வேறுபாடு ,ஒற்றுமை பெண்மை, இறைவழிபாடு என்பன மொத்தத்தில் பாரதியின் கவிதைகள் அவரது உள்ளத்தின் பதிவுகளையும் உளவியல் மனநிலையையும் வெளிப்படுத்துகின்றன என்பது உறுதி.

**துணை நின்ற நூல்கள்:**

டாக்டர்.சு.சண்முகசுந்தரம்; நாட்டுப்புறவியலில் உளவியல் பார்வை: ப:1;1991

மு. இராசமாணிக்கம்;மனித உள்ளம்; ப:21; 1977

பாரதி பாடல்கள் ஆய்வும் பதிப்பும்;1987

மகாகவி பாரதியார் கவிதைகள்;1962

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# தீபம் நா. பார்த்தசாரதியின் பட்டுப்பூச்சி நாவலில் உளவியல் கூறுகள்

65

முனைவர் க.ர.லதா, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, துவாரகதாஸ் கோவர்தன்தாஸ் வைணவக் கல்லூரி,
சென்னை.

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் புறச் செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அவை எவ்வாறு அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியல் எனப்படும். தொடக்க காலத்தில் உளவியல் என்பது மனம் மற்றும் ஆன்மாவை ஆராயும் இயலாகத் தத்துவ இயலின் ஒரு பகுதியாக இருந்தது. ஆனால் தற்போது நடத்தை பற்றி முறையாக ஆராயும் இயலாக ஒரு தனித் துறையாக வளர்ச்சிப் பெற்றுள்ளது. ஆரம்ப காலத்தில் யதார்த்த மனித வாழ்க்கை மட்டும் உளவியல் அடிப்படையில் ஆராயப்பட்டது. தற்போது புனைவிலக்கிய மாந்தர்களும் உளவியல் அடிப்படையில் ஆராயப்படுகின்றனர். அதன்படி தீபம் பார்த்தசாரதியின் பட்டுப்பூச்சி எனும் நாவலில் பாத்திரப் படைப்பில் இடம்பெற்றுள்ள உளவியல் கூறுகளை ஆராயும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

**முன்னுரை**

உளவியல் எனப்படுவது ஒரு மனிதனைப் பற்றியும் அவன் தன் சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் ஆராயும் சமூக அறிவியல் ஆகும். உளவியல் என்னும் சொல் கிரேக்க மொழிச் சொற்களான 'சைக்கி' என்ற உயிரைக் குறிக்கும் சொல்லையும் 'லோகஸ்' என்னும் அறிவியலைக் குறிக்கும் சொல்லையும் மூலமாகக் கொண்டு உருவாக்கப்பட்டது இது கலை அறிவியல் ஆகிய இரண்டு துறைகளையும் சார்ந்து இருப்பதால் இதனை கலை மற்றும் அறிவியல் துறைகளுக்கு அப்பால் இருக்கக்கூடிய ஒரு புதுமையான மூன்றாவது புலமாகக் கொள்ளலாம். மனிதனின் ஒவ்வொரு செயலும் அவனின் உளவியல் அடிப்படையிலேயே நிகழ்கிறது. ஒவ்வொருவரின் உளவியலும் தனித்தன்மை வாய்ந்தது. மனித உளவியல் கட்டமைப்பு, பருவத்திற்குப் பருவம் வேறுபடுகிறது. மனித உளவியல் தீர்மானிக்கும் அடிப்படைக் காரணிகளாக மரபும் சூழ்நிலையும் உள்ளன. 'பட்டுப் பூச்சி' நாவலின் முக்கிய கதாபாத்திரங்களான சுகுணா, வடமலைப் பிள்ளை, விவேகானந்த மூர்த்தி ஆகியோரின் உள்ள இயல்புகளை ஆராயும் வேளையில் ஃப்ராய்டி'ன் உளப் பகுப்பாய்வு முறையின்படி படைக்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகிறது.

**முதன்மைச் சொற்கள்:** வடமலைப் பிள்ளை, விவேகானந்த மூர்த்தி, சுகுணா

**வடமலைப் பிள்ளை**

தாமரைக் குளம் என்னும் அழகிய கிராமத்தில் பெரிய மனிதர் வடமலைப்பிள்ளை. கோழிப் பண்ணை நடத்துவதாகப் பொய் சொல்லி, அரசுப் பணத்தை அனுபவிப்பவர். அந்த ஊருக்கு வந்த இளம் சமூக சேவகி சுகுணா நக்கீரன் தைரியமுள்ளவள். வடமலைப் பிள்ளையின் கோழிப் பண்ணை விவகாரத்தை அரசுக்கு உணர்த்தி மானியத்தை நிறுத்தி விடுகிறாள். அவருக்குத் துணை புரிவோரின் மிரட்டல்களுக்கு அடிபணியாமல் தனது முடிவில் உறுதியாக நிற்கிறாள். புகாரைத் திரும்பப் பெற மறுக்கிறாள். வடமலைப் பிள்ளை அவளைப் பழிவாங்க நினைக்கிறார். அவருக்கு அந்த ஊரின் பஞ்சாயத்துத் தலைவரும் கிராம முன்சீப்பும் துணை போகின்றனர்.

தாமரைக் குளத்திற்குப் பக்கத்து ஊரான கன்னிகாபுரத்தில் வாழும் ரகுராமன் என்ற உடல் ஊனமுற்ற இளைஞனோடு சுகுணாவைத் தொடர்புப் படுத்திப் பேசுகின்றனர், இல்லாததையும் பொல்லாததையும் கதை கட்டி விடுகிறனர். அவர்களது உண்மையில்லாதப் பழிச் சொல்லைத் தாங்க முடியாத சுகுணா வேலையைத் துறந்துவிட்டு அவளது தாயாருடன் ஊர் திரும்புகிறாள். வடமலைப் பிள்ளையின் வக்கிர மனத்தால் சுகுணாவிற்கும் ரகுராமனுக்கும் இடையூறு உண்டாகிறது.

"தாமரைக் குளத்தில் சுகுணாவிற்கு அபவாதம் ஏற்படக் காரணமாக இருந்த தாமரைக் குளத்து பிரமுகர்கள் யாவரும் தோற்றத்தால் நாகரிகம் அடையாதவர்கள்"[1] என்றும் "வம்பு பேசுவதையும் புறம் பேசுவதையும் பாவம் என்று சொல்லிக் கொண்டே அவற்றை நாத்தழும்பேறப் பேசுவதன் மூலம் அந்தப் பாவத்தையே செய்து கொண்டிருப்பார்கள்"[2] என்றும் வடமலைப் பிள்ளையைப் படம் பிடித்துக் காட்டுகின்ற வேளையில் தன் மனத்தையும் விளக்குகிறார் ஆசிரியர் நா.பா.

**துன்புறுத்தி இன்பம் காணுதல்:**

துன்புறுத்தி இன்பம் காணும் ஆசை (Sadistic Pleasure) மனிதனின் அடிமனத்தில் புதைந்து கிடக்கும் என உளவியலாளர்கள் கூறுகின்றனர். வண்ணத்துப் பூச்சியைப் பிடித்து அதன் சிறகுகளை ஒவ்வொன்றாக அகற்றிவிட்டு அது தவிப்பதை கண்டு மகிழும் சிறுவர்களின் மனப்போக்கை உதாரணமாகக் கொள்ளலாம். இந்த மனநிலையை உடைய மாந்தர்கள் கற்பனையில் அனைவரையும் தன் எதிரிகளாக பாவித்து பழிதீர்க்கும் செய்களில் ஈடுபட்டு அதில் இன்பம் காண்பர். பட்டுப் பூச்சி நாவலில் வடமலைப்பிள்ளை இத்தகைய இயல்பினர் என்பதற்கும் அவரால் பெண்கள் அடையும் துன்பங்களை விளக்குகையில், "வண்ணக் கவர்ச்சியும் வனப்பும் கொண்டு எண்ணத்தில் மோகம் நிறைக்கும் கோலத்தில் பரந்து திரியும் பட்டுப்பூச்சிகளைப் போன்றவர்கள் இந்த நாட்டுப் பெண்கள். பரந்து திரியும் போது யார் பிடித்து விளையாட்டிற்காக தீப்பெட்டியில் அடைப்பது போல அடைப்பார்கள் என்று உறுதி கூற முடியாது"[3] என்று எழுதுகிறார்.

**விவேகானந்த மூர்த்தி**

நாவலில் வரும் விவேகானந்த மூர்த்தி நாவலாசிரியர் வாசகன். அவரது படைப்பில் இடம்பெற்ற பாத்திரங்களைப் பற்றிச் சிந்தித்து அவற்றின் செயல்பாடுகளுக்கு விளக்கம் தந்து ஆராயும் தன்மை உடையவனாக உள்ளான். “மனத்தின் குறிக்கோள் உடலின் சேர்க்கையினால் ஆன்மீகக் கூட்டிற்கு வகை செய்தலே. தெய்வீக அல்லது உலக அன்பை எய்த உதவுவதாய் இடையில் அமைந்துள்ள படிக்கட்டே ஆண்-பெண் உறவு[4]. ஆசிரியர் படைப்புக்களில் இவ்வகை மானசீக இணைகள் மனப்பக்குவம் உள்ளவர். வெறும் உடலின்பம் விரும்பாமல் உடலின்பத்திலும் உள்ளம் இணைந்து பெறும் முதன்மையாகக் கருதும் உயர்வுடையவர் மீமனிதர் எனப் பெயர் பெறுவர்.”[5]

இக்கூற்றுக்களின் எடுத்துக்காட்டாய் படைக்கப்பட்ட குறிஞ்சிமலர் பூரணியின் பாத்திரப்படைப்பை பட்டுப்பூச்சியில் வரும் விவேகானந்த மூர்த்தியை மிகவும் கவர்ந்துவிடுகிறது. அவன் அப்பாத்திரப் படைப்பை நன்கு ஆராய்கிறான். “காதலுக்கும் தூய்மையான அன்புக்கும் ஒரு பெண்ணின் மனம் எவ்வளவு மரியாதையும் பக்தியும் செலுத்திப் பிடிவாதமாக இருக்க முடியுமோ அவ்வளவு பிடிவாதமாக ஒரு ஆண்பிள்ளை இருக்க முடியுமோ?”[6]. பெண்ணை இழந்து ஆண்மகன் அவளது இழப்பிற்காக கைம்மை நோன்பு நோற்கத் துணிவது போன்ற கற்பு நெறியைப் பேசும் கதாநாயகனைத் தான். நான் என்முன்னால் காண்கிறேன்.”[7] என்கிற பதிவிலிருந்து ஆசிரியரது இலக்கிய அறிவு புலப்படுவதோடு அவர் ‘தபுதாரநிலை’ மீது கொண்ட ஈடுபாடும், அது இலக்கியப் படைப்புக்களின் மூலம் வெளிவர வேண்டும் என்று உள்ள நிலையும் வெளிப்படுகிறது.

**சுகுணா**

‘பட்டுப்பூச்சி’ நாவலின் நாயகி சுகுணா என்னும் பாத்திரம் இரண்டு வெவ்வேறு வகைகளில் சித்திரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியரின் கதை போலவே தனது வாழ்க்கையிலும் நடந்ததாகக் கூறும் சுகுணா ஓர் இளம் விதவை. இவள் அல்லியூரணி எனும் கிராமத்தில் தன் தாயோடு தங்கிச் சமூகப் பணி செய்கிறாள். எழுத்தாளரின் முயற்சியால் பரந்த மனம் கொண்ட முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞன் ஒருவன் இவளை மறுமணம் செய்து கொள்ள முன்வருகிறான். ஆனால் சுகுணாவோ திடீரென்று தற்கொலை செய்து கொள்கிறாள். “படித்துப் பட்டம் பெற்று இந்தக் கிராமத்தைத் தேடி உழைக்க வந்த ஒரு பெண்ணுக்கு இந்த ஊர் பழம்பெருச்சாளிகள் அளித்த பரிசுகள் தான் இந்த மஞ்சள் பத்திரிகையில் வெளிவந்திருக்கும் துஷ்பிரயோகமான செய்திகள். ‘விதவையா விபச்சாரியா’ எனும் தலைப்பிட்டு எழுதியுள்ளனர். மானம் போகிறது. வெளியில் தலை காட்ட முடியவில்லை. என்னிடம் பல்லை இளித்த வஞ்சகர்களை நான் அனுகூலமான முறையில் சமாளித்திருந்தால் என்னுடைய மானம் போயிருந்தாலும் இப்படி எல்லாம் துன்பம் செய்யும் எதிரிகள் உருவாகி இருக்க மாட்டார்கள். நான்

கடுமையாக நியாயத்தைக் கடைப்பிடித்ததால் வந்த விளைவு"[8] என்று கடிதம் எழுதி வைத்துவிட்டு தன் முடிவைத் தேடிக்கொள்கிறாள்.

'பட்டுப்பூச்சி' நாயகி சுகுணா ஓர் இலட்சியவாதி. அவளது இலட்சிய வேட்கையை தூண்டும் வகையில் பட்டமளிப்பு விழாவில் பேருரை ஆற்றிய பேரறிஞர், 'இரயில்வே நிலையத்தில் காசை உள்ளே போட்டதும் நடைமேடை கட்டணம் வெளியே தள்ளுகிற எந்திரம் போல உங்களில் பலர் இந்தப் பட்டப்படிப்பை நினைக்கலாம். ஆனால் நான் அப்படி நினைக்கவில்லை. மெய்யான படிப்பு உங்களுக்குள்ளே இருக்கும் அகக்கண்களை நன்றாக திறக்க வேண்டும். நீங்கள் பல பேருடைய அகக் கண்களைத் திறந்து உதவுவதற்கும் பயன்பட வேண்டும்"[9] என்று கூறிய கருத்துக்கள் அமைந்தன . அதே சிந்தையுடன் 'தாமரைக் குளம்' என்ற கிராமத்தைச் சார்ந்துள்ள பகுதிகளுக்காகச் சர்க்கார் அமைத்திருந்த தேசிய வளர்ச்சித் திட்டத்தில் வேலை பெற்றாள். அந்த ஊரின் பெரியவர் வடமலைப் பிள்ளையின் பகையைச் சம்பாதிக்கிறாள் அதனால் அவளைப் பற்றி அவதூறு செய்திகளைப் பரப்பி விடுகிறனர். அதனால் மனம் வெறுத்துப் போனவள் வேலையை ராஜினாமா செய்துவிட்டுத் தன் தாயுடன் வேறு ஊருக்குச் செல்கிறாள். தாயிடம் சுகுணா , "நான் செய்தது தவறு தான். இங்கே மனம் விரிந்தவர்கள் இல்லை. நியாயமாக நடந்து கொள்வதை விடத் தவற்றை அனுசரித்துப் போகிறவர்கள் தான் இன்றைய மனிதர்களுக்குத் தேவையாயிருக்கிறது. இந்தத் தலைமுறையில் எல்லோரும் தவறுகளையும் கண்டும் காணாத மாதிரி இருந்து விட்டால் 'நல்லவள்' என்பார்கள். தப்பைத் துணிந்து தப்பென்று சொன்னால் அப்படிச் சொன்னவளைக் கெட்டவளாக்கிக் காட்டிவிடுவார்கள்".[10] என்று கூறுகிற வார்த்தைகளில் அவளது உள்ளப் போராட்டம் தெளிவாகிறது.

சமூக சேவையைத் தொண்டாகக் கருதுகின்ற இலட்சியவாதியான சுகுணா தாமரைக் குளத்தில் நடந்த அநியாயகளுக்கெதிராகக் குரல் கொடுத்து, பழிச் சொல்லுக்கு ஆளாகிறாள். இறுதியில் அந்த ஊரைவிட்டு வெளியேறுகிறாள். அவளைப் போன்று சமூகத் தொண்டில் ஈடுபாடு கொண்டு அல்லியூரணி கிராமத்திற்கு வரும் மற்றொரு சுகுணாவோ, சமூக விரோதிகள் தன் பெண்மையைக் களங்கப்படுத்தி வெளியிடும் செய்திகளைக் கண்டு தன்னை மாய்த்துக் கொள்கிறாள். சமூகத்தின் கசப்பான பகுதியை வெளிக் கொணர்ந்து வாசகனின் மனத்தில் நிறையச் செய்யும் வகையில் இவர்களது பாத்திரங்கள் அமைந்துள்ளன. ஒரு சுகுணா தீமையை எதிர்த்துப் போராடாமல் வெளியேறுகிறாள். மற்றொருத்தி மனத் துணிவை இழந்து தன்னையே மாய்த்துக் கொள்கிறாள். இவர்களது முடிவுகளுக்கு சூழ்நிலையும் காரணமாக அமைகிறது. "முற்போக்கு எண்ணமும் வெள்ளை மனமும் கொண்ட தூய பெண்களுக்கு இது ஒரு சோதனைக் காலமாக இருக்கிறது. அவர்களுடைய நல்ல எண்ணங்களும் கூடத் தவறாகப் புரிந்து கொள்ளப்படுகின்றன. சில சமயங்களில் அவர்களே தவறாக புரிந்துக் கொள்ளப்பட்டு

விடுகிறார்கள். பட்டுப்பூச்சி நாவலில் விளக்க முயன்றதும் இது தான். (11) என்று குறிப்பிடுவதிலிருந்து பெண்களின் உளப் போராட்டங்களுக்கு காலமும் சூழ்நிலையும் காரணமாக இருப்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

நா. பார்த்தசாரதி நாட்டுக்கும் பண்பாட்டுக்கும் உதவுகின்ற வகையில் நல்ல இலக்கியங்களை உருவாக்கியவர். ஒரு படைப்பாளியின் சொந்த அனுபவங்களும் வாழ்வியல் கோட்பாடுகளும் படைப்பின் உருவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கின்றதை அறிய முடிகிறது. பட்டுப்பூச்சியில் இடம்பெற்ற பாத்திரங்கள் உளவியல் அறிஞர்களின் கருத்துகளுடன் இயைபு கொண்டவர்களாகப் படைக்கப்பட்டுளனர். பாத்திரங்கள் உளவியல் கருத்துக்களைப் பேசுகின்றவர்களாகவும் உள்ளனர். ஃப்ராயிடின் உளப்பகுப்பாய்வு ஆசிரியரது பாத்திரங்களில் அமைந்துள்ளது. ஆசிரியரது பாத்திரங்கள் வாழ்க்கையையும் மனிதர்களையும் உற்று நோக்கும் இயல்பினார் என்பதும் அறியப்படுகிறது. வருங்காலத்தில் ஆசிரியரது மாற்றப் படைப்புகளில் இடம்பெற்றுள்ள உளவியல் கூறுகளை வெளிக் கொணரும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளலாம்.

**அடிக்குறிப்புகள்:**

1. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 30
2. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 25
3. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப.
4. மகாத்மா காந்தி, சமூகத்தில் பெண்கள் - ப. 20
5. தி. பாக்கியமுத்து, இன்றைய தமிழ் இலக்கியங்களில் மனிதன் - ப. 116
6. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 94
7. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 115
8. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 111-112
9. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 4
10. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. **78**
11. நா. பார்த்தசாரதி, பட்டுப்பூச்சி - ப. 80.

**துணை நின்ற நூல்கள்:**

| | | | |
|---|---|---|---|
| **1.** | பார்த்தசாரதி. நா | - | பட்டுப்பூச்சி,<br>சீதை பதிப்பகம்,<br>சென்னை |
| **2.** | மகாத்மா காந்தி | - | சமூகத்தில் பெண்கள்<br>தமிழ்நாடு காந்தி நிதி<br>மதுரை |
| **3.** | பாக்கியமுத்து. தி | - | இன்றைய தமிழ் இலக்கியத்தில் மனிதன்<br>கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்<br>சென்னை. |

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

66

# சங்க இலக்கியத்தில் உளவியல்

நா. வளர்மதி, தலைமை ஆசிரியை
கல்லிடைக்குறிச்சி.

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு மனநிலையை மட்டுமே அல்லது அம்மனநிலை விளைவுக்குரிய சூழலை மட்டுமே அவை பாடுபொருளாய்க் கொண்டவை. எனவே உளவியற் கொள்கைகளையும் பிராய்டு, (இ)யங்கு, என்பாரின், பாலியல், உளவியற் ஆய்வுகளையும் கற்றுணர்ந்தால் சங்க இலக்கியக் கல்விக்கு அது பெரிதும் துணைபுரியும்.

உள்ளம் என்பதனை அடுக்கு நிலையில் இருப்பதாக பிராய்டு கூறுகிறார்.வெளிப்படையாகத் தெரிய வரும் நனவுடை மனம், வெளிப்படையாகத் தெரியாத ஆனால் வெளிப்படையாக அமைத்த அனைத்து செயல்கள், வெளிப்பாடுகள் இவற்றிற்கு காரணமான நனவிலி மனம், அதற்கும் உள்ளே ஆழ் மனதில் புதைந்து கிடக்கும் அடி மனம் என்று மூன்று அடுக்குகளாக பகுக்கிறார் பிராய்டு . அடி மனம் தன் முனைப்பு கொண்டது

**பெண்களின் மனவியல்**

அக்கடலின் ஆழத்தை விட பன்மடங்கு ஆழமானது பெண்களின் மனம். பெண்களின் மனதை மிகவும் மென்மையானது என்று இலக்கியங்கள் வருணிக்கின்றன. இந்த மென்மையான மனம்.

சங்க இலக்கியத்தில் 'உளவியல் பாங்கு' அல்லது 'சிறப்பு' என்பது கூற்று நிலைபற்றியதும் ஆகும். எல்லாக் கருத்துக்களையும் எல்லாரும் கூறிவிடமுடியாது. நினைத்த கருத்துக்களை நினைத்தவாறும் கூறிவிடமுடியாது. இந்த வரையறை 'உளவியல்' தொடர்பானது. ஒரு சூழ்நிலையில் நற்றாய் பேச முடியாத நிலையில், அவளது நிலைப்பற்றித்தோழி எடுத்து மொழிகிறாள். இவ்வாறு ஒரு பாத்திரதின் நிலை பற்றி வேறு ஒரு பாத்திரம் பேசுவதைக் 'கொண்டெடுத்து மொழி' என்று தொல்காப்பியம் (1447) குறிப்பிடுகிறது. இத்தகைய 'கொண்டெடுத்து மொழி' அமையும் இடம்பற்றி விளக்கும் இடத்தில் டாக்டர் ஆ. அமிர்தகௌரி (சங்க இலக்கியத்தில் உரையாடல்) 'உரையாடல் பண்பு மிகுதியும் ஒளிர்கிறது' என்று எடுத்துக்காட்டுவார் . இத்தகைய கொண்டெடுத்து மொழி' அமைந்த உளவியல் ரீதியான அழகிய சான்றுக்கு அகநானூறு ஊட்டியார் பாட்டு (68) அறிஞர்களால் எடுத்துக்காட்டப்படுகிறது. தலைவன் இரவில் தலைவியைச் சந்திக்க வந்து நிற்கிறான். அவனுடைய வரவைத் தலைவிக்கு அறிவிக்க வேண்டும். இந்த நிலையில் அன்னை துயில்கிறாளா, துயிலாதிருக்கின்றாளா என்று அறிந்து கொள்ளவேண்டும். தான், எவ்வாறெல்லாம் உரை செய்து, அன்னை தூங்குகிறாள் என்று ஆராய்ந்தேன் என்று விளக்கி, தோழி உரை செய்வதே இந்தப்பாட்டு. இது தோழி 'துயில் ஆராய்ந்த முறை' என்று அறிஞர்கள் எடுத்துக்காட்டுவர்.

இத்தகைய 'கொண்டெடுத்து மொழி' அமையும் இடத்தில் 'ஒரே களத்தில் இரண்டு காட்சிகள் தோன்றும்' என்று டாக்டர் ஆ. அமிர்தகௌரி சுட்டிக்காட்டும் இடம் முக்கியமானது ஆகும்.

கண்ணகியின் கணவன் கோவலன், ஆடலரசி மாதவியின் நடனத்தின் நயத்தில், தன் இதயத்தை அவளிடத்தில் இழந்து விட்டான். அதனால் இதுவரையிலும் தன்னுடன் இணை பிரியாது, ஈருடல் ஓருயிராக வாழ்ந்து வந்த கணவன் கோவலன், தன் மனைவி கண்ணகியைப் பிரிந்து மாதவியை மணந்து, அவளுடன் இல்லறம் நடத்தத் தொடங்கினான்.தன் அன்புக் கணவன் தன்னை விட்டுப் பிரிந்துச் சென்றதால் கண்ணகி, சொல்லி மாளாத துயரத்திற்கு ஆளானாள். அதனால் ஊணும் உறக்கமுமின்றி, ஆடை அலங்காரம் ஏதுமின்றி, தோழியரைக் கூட சந்திப்பதைத் தவிர்த்து தனிமையின் துயரத்தில் துடித்திருந்தாள்.

**உளவியல் உத்திகள்:**

இலக்கியப்படைப்பில் 'உளவியல் உத்தி' என்பது பற்றி, தமிழின் முதல் நூலான தொல்காப்பியம் மிக விரிவாகவே பேசுகிறது. தமிழ் ஆராய்ச்சிப் பேரறிஞர்கள் 'உளவியல்' உத்திபற்றி மிக விரிவாகவே எடுத்துரை செய்துள்ளனர். 'தமிழ்க்காதல்' என்ற தமது ஆய்வு நூலில் பேரறிஞர் வ.சுப.மாணிக்கனார், 'என் ஆராய்ச்சியை 'உளவியல் ஆய்வாகவே செய்கிறேன்' என்பார். உளவியல் என்பது என்ன? என்று ஒரு முக்கியமான வினாவை எழுப்பிக்கொண்டு, 'அது ஒரு தனிமனக்கூறு' என்பார். இப்படியான 'தனி மனக்கூறு'தான் தமிழின் அக இலக்கியங்கள் அனைத்திலும் விரவிக் கிடக்கின்றன. இத்தகைய 'தனிமனக் கூறு பற்றிப் பிறிதோரிடத்தில் அறிஞர் வ.சுப.மா அவர்கள் 'நெஞ்சியல்' என்பார்.

'தனிமனக்கூறு' அதாவது 'நெஞ்சியல்' என்பது இலக்கியப்படைப்புக்களில் எவ்வாறு, எந்த உருவில் வெளிப்படும்? என்ற வினா முக்கியமானது. இந்த வினாவுக்குத் தொல்காப்பியம் விடைசொல்கிறது. உருவகமாக, உவமையாக, உள்ளுறையாக, இறைச்சியாக உளவியல் பாங்கு வெளிப்படும் என்பதே தொல்காப்பிய விளக்கம். உவமை, உருவகம், உள்ளுறை, இறைச்சி என்ற பொருள் புலப்பாட்டு வரிசையில் 'முன்னம்' என்ற உத்தி மிகுந்த இன்றியமையாமை பெறுகிறது. அதாவது தொல்காப்பியம் குறிப்பிடும் 'முன்னம்' என்பது 'உளவியல்' பூர்வமான இலக்கிய வெளிப்பாட்டு அம்சம் எனக் கொள்ளலாம்.

'இவ்விடத்து, இம்மொழி, இவர் இவர்க்கு உரிய என்று அவ்விடத்து அவரவர்க்கு உரைப்பது முன்னம்' (தொல். 1443ஆம சூத்திரம்) தொல்காப்பியம் சொல்லும் இந்த நூற்பாவுக்கு அறிஞர் கூறும் பொருள்விளக்கம் முக்கியமானது ஆகும். அறிஞர் தமிழண்ணல் அவர்கள், 'முன்னம் என்பது பொதுவாகக் 'குறிப்பு' என்றும், ஒருவரது 'உள்ளக்குறிப்பு' என்றும் பொருள்படும்' என்பார். 'முன்னம்' என்ற கவித்துவ

அமைப்பு முறைபற்றிச்சொல்ல வந்த அறிஞர் ச. வே. சுப்பிரமணியன் அவர்களும், 'இவ்விடத்து இம்மொழியை, இவர்க்குச் சொல்லத் தகும் என்று குறித்து, அவ்விடத்து. அவரவர் தம்மொழியை உரைப்பது முன்னம்' என்று உரைக்கக் காணலாம்.

இத்தகைய 'முன்னம்' என்ற 'உளவியல்' சார்ந்த அழகியல் கவிதைகளுக்குச் சங்கத்தமிழ் அகத்திணைப்பாடல்களே மிக உயரிய சான்றுகளாக விளங்குகின்றன. இந்தச் சிறிய கட்டுரையில் மூன்று சான்றுகளைக் காண்போம்.

**'அகவன் மகளேஅகவன் மகளே**
**மனவுக் கோப்பன்ன நன்னெடுங் கூந்தல்**
**அகவன் மகளே , பாடுக பாட்டே!**
**இன்னும் பாடுக பாட்டே, அவர்**
**நன்னெடுங் குன்றம் பாடிய பாட்டே!'**

என்ற ஔவையார் பாட்டு, 'உளவியல்' அமைப்புக்கும் அழகுக்கும் புகழ்பெற்ற பாட்டு. தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வாளர்கள் அனைவரும் சுட்டிக்காட்டும் பாட்டு இந்தப்பாட்டு தோழி பாடுவதாக அமைகிறது

**ஐங்குறுநூறு உணர்த்தும் உளவியல்:**

முன்னம்' என்ற அழகியல் பொருந்திய உளவியல் பாட்டுக்கு இன்னொரு சான்றாக மற்றுமொரு பாட்டு, ஐங்குறுநூறு , 203ஆம்பாட்டு, குறிஞ்சி கபிலர் தீட்டிய அழகிய சொல்லோவியம்.

**'அன்னாய் , வாழி, வேண்டு, அன்னை, நம்படப்பைத்**
**தேன் மயங்கு பாலினும் இனிய -அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ்**
**மான் உண்டு எஞ்சிய கலுழி நீரே!'**

தலைவனோடு தலைவி உடன்போய், அவனை மணம் செய்துகொண்டு, தாய்வீட்டுக்கு வருகிறாள். அவளைப் பார்த்த தோழி, 'நீ உன் தலைவனோடு போய்விட்டாய், அவனுடைய நாட்டில் கிணற்று நீர் நல்ல நீர் இல்லையாமே, இலைகளும், தலைகளும் விழுந்து அழுகிப்போன தண்ணீர்தான் கிடைக்குமாமே! நமது நாட்டில், தோட்டத்தில், தேனும் பாலும் கலந்தது போன்ற தண்ணீர் குடித்தாய்! அப்படியிருக்க, உன் தலைவனுடைய ஊரின் கிணற்று நீரை எப்படி அருந்தினாய்?' என்று கேட்டாள் அவளுக்குத் தலைவி சொன்ன மறுமொழிதான் இந்தப்பாட்டு 'நீ சொல்வதுபோல, அவர் நாட்டில் கிடைக்கும் தண்ணீர் இலை

மக்கியதும், விலங்குகள் கலக்கியதுமாக இருக்கலாம். ஆனால் அதுதான், எனக்கு இனிமை தந்த தண்ணீர் ' என்று தலைவி சொல்கிறாள். ஐங்குறுநூற்றின் - இந்த நான்கு அடிப்பாட்டுக்கு உரை எழுதிய உரையாசிரிகள், 'இந்தப்பாட்டு ஓர் அழகிய உளவியல் பாட்டு, இன்ப உணர்வுக்கும், துன்ப உணர்வுக்கும் மனம்தான் காரணம், உளவியல் ரீதியாக தலைவி துன்பச் சூழ்நிலையை இன்பச் சூழ்நிலையாக மாற்றிக்கொள்கிறாள்' என்று எழுதினார்கள்.

**புறநானூறு கூறும் உளவியல்:**

**யாதும் ஊரே, யாவரும் கேளிர்;**
**தீதும், நன்றும், பிறர் தர வாரா;**
**நோதலும், தணிதலும், அவற்றோர் அன்ன;**
**சாதலும் புதுவது அன்றே! வாழ்தல்**
**இனிது என மகிழ்ந்தன்றும் இலமே! முனிவின்**
**இன்னாது என்றலும் இலமே! மின்னொடு**
**வானம் தண் துளி தலைஇ ஆனாது,**
**கல்பொருது இரங்கும், மல்லல் பேர்யாற்று**
**நீர்வழிப் படூஉம் புனை போல், ஆருயிர்**
**முறைவழிப் படூஉம் என்பது திறவோர்**
**காட்சியில் தெளிந்தனம் ஆகலின், மாட்சியில்**
**பெரியோரை வியத்தலும் இலமே!**
**சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே!**

-<u>கணியன் பூங்குன்றனார்</u> (*<u>புறநானூறு</u>* - 192)

*மேற்கண்ட புறநானூறுப் பாடலில் மனித வாழ்வில் கடைபிடிக்க வேண்டிய நல்லறங்கள் பற்றிக் கூறப்பட்டு உள்ளது. உள்ளம் நலமாக இருக்க வேண்டும் என்றால் முதலில் மனம் நலமாக இருக்க வேண்டும். மனம் நலமாக இருந்தாலே போதும் அனேக நோய்கள் வராது. மூத்தோர்கள் சொன்ன அமுத மொழிகள் கடை பிடித்தாலே வாழ்வினில் நிம்மதி கிடைக்கும். சங்க இலக்கியங்களில் கூறப்பட்டுள்ள அனேக செய்திகள் உளவியல் சம்பந்தப் பட்டது தான். எந்தெந்த மாதிரியாக அறம் களைக் கடை பிடித்து வாழ்ந்தால் வாழ்வினில் அமைதியாக வாழலாம். நிம்மதியாக வாழலாம். என்ற உளவியலைத் தான் எல்லா இலக்கியங்களிலும் வலியுறுத்தி இருக்கிறார்கள்.*

*'சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற்று உற்றெனப்*
*பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்*
*கட்டில் நிணக்கும் இழிசினன் கையது*
*போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ* - (*புறம்*, 82)

என்று உவமை கூறுகிறார். அதாவது ஊரிலே விழா நடைபெற உள்ளது. அவ்விழாவிற்கு உதவப் போக வேண்டும்; மனைவிக்குப் பிள்ளைப்பேறு மழை பெய்து கொண்டிருக்கிறது. பிறக்கும் குழந்தையைத் தரையில் போடமுடியாது. அதற்காகக் கட்டில் பின்னுகின்றான் ஓர் ஏழைத் தொழிலாளி. இவ்வளவு செயல்களையும் ஒருசேரச் செய்ய மனம் விழையும் நேரத்தில் கை எவ்வளவு வேகமாகக் கட்டில் பிணிக்குமோ அதே வேகத்தில் சோழன் வாள் சுழற்றுகின்றான் என்கிறார் புலவர்..

ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதலிப்பது, காதலைத் தோழி மூலம் செவிலித்தாய், நற்றாய் ஆகியோருக்கு மெல்லத் தெரியப்படுத்துவதும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன. இவ்வாறு காதலைத் தெரியப்படுத்துவதற்கு அறத்தொடு நிற்றல் என்ற பெயரும் உண்டு. பெற்றோர் திருமணத்திற்கு ஒத்துக் கொள்ளாத சூழலில் காதலனும் காதலியும் ஊரை விட்டு வெளியூர் சென்று விடுதல் உண்டு. இதற்கு உடன்போக்கு என்று பெயர். அக்காலத்தில் காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பத்துடன் வாழ்ந்து வரும் தலைமகன் வேறு பெண்களை நாடிச் செல்வதும் வழக்கமாக இருந்திருக்கிறது. இதற்கு பரத்தையிற் பிரிவு என்று பெயர். அதனால் தலைவி அவனிடம் சினம் கொண்டு ஊடல் கொள்ளுதலும் பழக்கமாக இருந்துள்ளது. அகப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனைப் பாடல்களாக இருந்தாலும், அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை முழுமையாகவே வெளிப்படுத்துகின்றன.

**கலித்தொகையில் உளவியல்:**

கலித்தொகையில் ஓர் உவமை. பாலை நிலத்தின் கொடுமையைக் கூற வந்த பாலை பாடிய பெருங்கடுங்கோ என்னும் புலவர்,

*வறியவன் இளமைபோல் வாடிய சினையவாய்ச்*
*சிறியவன் செல்வம்போல் சேர்ந்தார்க்கு நிழல்இன்றி*
*யார்கண்ணும் இகந்துசெய்து இசைகெட்டான் இறுதிபோல்*
*வேரொடு மரம்வெம்ப, விரிகதிர் தெறுதலின்*

(*பாடல்* - 10)

எனப் பாடியுள்ளார். இளமையிலேயே வறுமையுற்றவன் போலத் தளிர்கள் வாடிய கொம்புகளை உடையனவாக மரங்கள் நின்றன. கொடுத்தற்கு மனம் இல்லாதவனுடைய (சிறுமனம் கொண்ட கருமி) செல்வம், தன்னைச் சேர்ந்தார்க்குப் பயன்படாதவாறு போலத் தன்னைச் சேர்ந்தவர்களுக்கு நிழலின்றி

இருந்தன. யாவரிடத்தும் ஒழுக்கத்தைக் கடந்து தீங்கு செய்பவனின் புகழ்கெட்டு, இறுதிக் காலத்தே அவன் சுற்றத்தார் மட்டுமன்றி அவனும் கெடுவான். அதுபோல் கதிரவனின் கதிர்கள் சுடுதலினால் கிளைகள் மட்டுமன்றி, மரங்கள் வேரொடே வெம்பி நின்றன என்று மிகச் சிறப்பான உவமையால் விளக்குகிறார். இவ்வாறு சங்க இலக்கியம் முழுமையும் பல்வேறு சிறந்த உவமைகளோடு பாடல்கள் இயற்றப்பட்டிருப்பதை அறியலாம்.

முடிவுரை;

சங்க இலக்கியங்கள் அனைத்துமே நாம் உற்று நோக்கிப் பார்த்தோம் என்றால், அவற்றில் கூறப்பட்ட அறங்கள் அனைத்தும் உளவியல் சார்ந்தே இருக்கும். கற்பியல் ,களவியல், இல்லறவியல் அனைத்துமே உளவியல் பற்றியே எடுத்துக் கூறுகின்றன. தலைவன், தலைவி, தோழி, தாய் என ஒவ்வொருவர் உள்ளத்தில் உள்ள மனப்பாங்குகள் இவற்றைப் பற்றிதான் சங்க காலத்தில் புலவர்கள் எடுத்துக் கூறி உள்ளார்கள்.

**துணைநூற்பட்டியல்**

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை-1.

2. செயபால்.இரா.இ - அகநானூறு மூலமும் உரையும் ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை - 2005.

3. தமிழ்க்காதல் - பேராசிரியர் வ.சுப.மாணிக்கனார்,சாரதா பதிப்பகம்,சென்னை.

4. சங்க இலக்கிய ஐங்குறுநூறு மூலமும் உரையும் - முனைவர் அ.மா பரிமணம், முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.

5. சோமசுந்தரனார் - பொ .வே - குறுந்தொகை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை - 2007.

6. புறநானூறு - நியூ செஞ்சுரி வெளியீடு, சென்னை.

7. நச்சினார்க்கினியர் (உ.ஆ) - கலித்தொகை மூலமும் உரையும் , கழக வெளியீடு, சென்னை - 2007.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எட்டுத்தொகை நூல்களில் உளவியல் சிந்தனைகள்

முனைவர் உ.ஜோதிமலர், உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, அ.வீ.வா.நி.திரு புட்பம் கல்லூரி
பூண்டி, தஞ்சாவூர்

67

**ஆய்வுச்சுருக்கம்**

உளவியல் என்பது உயிரினங்களின் நடத்தையைப் பற்றி அறியும் மைய முயற்சியாகும். குறிப்பாக நம்மை நாமே அறியும் தனிப்பட்ட தேடுதலாகும். நமது உணர்வுகள், எண்ணங்கள், நாம் செய்யும் செயல்கள் போன்றவற்றோடு, தொடர்புடையது உளவியல். இதனை உள்ளத்தைப் பற்றிய அறிவியல் உளவியல் (Science of Mind) என்கிறார் சிக்மண்ட் ஃப்ராய்டு. இது நடத்தையைப் பற்றிய அறிவியல் நடத் தையின் வகைகளைப் பற்றிப் படிப்பது அல்லது ஆராய்வது என்றும் இதற்கு எளிய விளக்கம் அளிக்கப்படுகிறது.

**முன்னுரை**

இலக்கிய உருவாக்கத்திற்கும், உணர்வுகளின் கலவையாக இருக்கும் மனிதர்களின் செயல்பாடுகள், பண்புகள் போன்றவற்றை, இலக்கியத்தில் படைப்பதற்கும் பல்வேறுப்பட்ட உணர்வுகளே அடிப்படையாக அ மைகின்றன. இந்த அடிப்படையில் ஓர் இலக்கியத்தை அணுகுவது உளவியல் அணுகுமுறை (Pysychological Approach) எனப்படுகிறது. மனித மனதின் உணர்வே எல்லா அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும், க லைகளுக்கும் ஊற்றாக விளங்குகின்றது என்ற வகையில் இலக்கியத்தில் உளவியல் சிறப்பிடம் பெறுகிறது. சர்க இலக்கியத்தைப் பொறுத்தவரையில் புலவர்கள் தாம் உரைக்கும் கருத்துக்களைப் பாடல்க ளைப் பயில்வேரும், கேட்போரும் விரும்பிக் கற்கும் வகையில் உளவியல் நுட்பத்தோடு உரைத்துள்ளனர், சங்க அகப் பாடல்கள் அனைத்தும் உளவியல் கூறுகளைத் தாங்கி நிற்கும் உணர்ச்சிக் குவியல்களாக உள்ளன என்பதை உளவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய முற்படுகிறது.

**நற்றிணையில் காணப்படும் உளவியல் செய்திகள்**

நற்றிணைப் பாடல்கள் வாயிலாக அக்கால மக்களிடம் பரவிக் கிடந்த பழக்கவழக்கங்களை அறியலாம். தலைவன் பிரிவால் வாடும் தலைவி, தன் தலைவனின் வரவைச் சுவரில் கோடிட்டுக் கணக்கிடும் பழக்கமும், காதலன் வரவைப் பல்லி கத்தும் ஓசையை வைத்துச் சகுனம் பார்க்கும் வழக்கமும் அக்கால மக்களிடம் இருந்த நம்பிக்கையைக் காட்டுகிறது. மேலும் பிற்காலத்தில் சிறந்து விளங்கிய 'தூது' என்ற சிற்றிலக்கியத்திற்கு வழிகாட்டியாக குருவி, கிளி, நாரை ஆகியவற்றைத் தூதுவிடும் பாங்கையும் நற்றிணையில் காணலாம்.

**புன்னை ஓங்கிய, துறைவனோடு அன்னை**
**தான் அறிந்தன்றோ இலளே! பானாள்**

**சேரிஅம் பெண்டிர் சிறிதுசொல் நம்பி**

**சுடுவான் போல் நோக்கும்,**

**அடுபால் அன்ன என் பசலை மெய்யே**[1]

நறுமணம் கமழும் மலர்களைக் கொண்ட புன்னை மரங்கள் ஓங்கியிருக்கும் துறைவனை நாம் களவிலே புணர்ந்ததனை அன்னை முன்னரே அறியவில்லை. அவ்வாறிருக்கவும் இரவு நடுயாமத்தில் நம் சேரியில் உள்ள பெண்கள் கூறும் இழிந்த சொற்களை நம்பிக்கையோடு கேட்டுக் கொதிக்கின்ற பால் போன்ற பசலை படர்ந்த என் மேனியைச் சுடுவது போல அன்னை நோக்குவாள். எனவே அன்னை என் வீட்டினிடத்தே செறித்து வைப்பாள் போலும் என்று தன்னுடைய பயத்தை வெளிப்படுத்துகின்றாள். தன்னுடைய உள்ளத்தில் தோன்றிய குறிப்பைத் தோழியிடம் கூறுகின்றாள்.

**நினக்குத் தீது அறிந்தன்றோ இலமே,**

**பணைத் தோள் எல்வளை ஞெகிழ்ந்த எம் காதலர்**

**அருஞ் செயல் பொருட் பிணிப் பிரிந்தனராக**

**யாரும் இல் ஒரு சிறை இருந்து**

**பேர் அஞர் உருவியை வருந்தாதீமே!**[2]

நாங்கள் ஒருபோதும் என் மனத்திடையே உனக்குத் தீமை எதையும் நினைந்தோமில்லை. அவ்வாறிருக்கவும், எங்களது பருத்த தோளிற் செறித்த ஒளி பொருந்திய வளை நெகிழும்படியாகச் செய்த காதலர் பொருள் ஈட்டுவதனை அரிய செயலைக் கருதிப் பிரிந்ததனால், எமக்கு ஆதரவாக உடனமைந்த துணையாக ஒருவருமின்றி ஒரு பக்கத்தே இருந்து பெரிய துன்பத்தை அமையும் எம்மை வருந்தாதே என்று வாடை காற்றை அவள் வசைபாடுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. தலைவனை பிரிந்த தலைவி உள்ளம் எவ்வாறு இருக்கும் என்பதற்கு இப்பாடல் சான்றாகும்.

**தலைவியின் தன்மையும் வாடையின் வருகையும்**

**தூஉம் துவலைத் துயர்கூர் வாடையும்**
**வாரார் போல்வர் நம் காதலர்;**
**வாழேன் போல்வல் - தோழி! - யானே**[3]

துயரம் மிகுந்த வாடைகாற்று வீசும் கூதிர் காலத்திலும் நம்முடைய காதலர் வரமாட்டார் போலிருக்கிறது. நான் இனி உயிர் வாழமாட்டேன் என்று கூறுகிறாள். தலைவன் தன்னுடைய பொருள் தேடும் முயற்சியை ஒழித்துத் தன்னிடம் திரும்பி வரமாட்டோரோ என்று தலைவி எண்ணுவதாக உள்ளது.

**உடம்பின் உளவியல் மெய்பாடுகள்**

உடம்பில் தோன்றுகின்ற உணர்வுகளைத்தான் மெய்ப்பாடுகள் என்கின்றார் தொல்காப்பியர். மெய்யாகிய உடம்பின் வழியாகத் தோன்றும் மெய்பாடுகளை எட்டு வகையாகக் குறிப்பிடுகின்றார்.

**நகையே அழுகை இளிவரல் மருட்கை**

**அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று**

**அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப[4]**

“வாடிக்கைக்கு இன்றியமையாத நகையை முன்னரும் அதற்கு மறுதலையாகிய அழுகையை அதனை அடுத்தும் அழுகையுடன் இயைபுடைய இளிவரலை அதனை அடுத்தும் தான் இளிவந்து பிரிதொரு பொருளை வியக்குமாதலின் வியப்பினை அதனை அடுத்து வியப்புப் பற்றியும் அச்சம் பிறத்தலின் அச்சத்தை அதனை அடுத்தும் அச்சத்திற்கு மறுதலையாகிய வீரத்தை அதனை அடுத்தும் வீரத்தின் பயனாகப் பிறக்கும் வெகுளியை அதனை அடுத்தும் வெகுளிக்கு மறுதலையாகியச் சுவைகளுள் நகையைப் போலச் சிறந்த உவகையை அதனை அடுத்து இறுதிக்கண்ணும் வைத்தார்.”[5]

இவ்வாறு மெய்ப்பாட்டியலில் தொல்காப்பிர் உடம்பின் உளவியல் கூறுகளை வரிசைப்படுத்தியுள்ளார்.

**தலைவியின் பிரிவு ஆற்றாமை**

தலைவி தலைவன் வினைவயிற் பிரிவதறிந்து உடல் மெலிய வேறுபட்டாள். அவள் தோழியிடம், நாம் நம் தலைவனிடம் சென்று நம் காதலைச் சொல்வோம். அவர் பிரிந்தால் யானிறந்து போவேன் என்பதுறுதி. ஆதலால் நம் காதலைக் கூறிச் செல்லாமல் தடுப்பதே தக்கது என்று மனதில் வருந்தியது.

**பிரிந்தோர் வந்து, நப்புணரப் புணர்ந்தோர்**
**பிரிதல் சூழ்தலின், அரியதும் உண்டோ?**
**என்று நாம்கூறி காமம் செப்புதும்**
**செப்பாது விடினே உயிரொடும் வந்தன்று**
**அம்ம வாழி தோழி[6]**

மக்கள் கூட்டம் செல்ல அரியதுமான கவர்ந்த பல வழிகளை உடையதுமான பாலைநில வழி விளங்கும். இவ்வழியில் நீங்கள் பிரிந்து போகக் கருதினீர். இப்பருவத்தில் எம்மைக் கூடித் தழுவி எம்முடன் இருக்க வேண்டிய தாங்கள் பிரிந்து போகக் கருதினீர். இப்பிரிவினைவிட கொடுமை பிறிதொன்றும் உண்டோ என்று தன்னுடைய எண்ண அலைகளையும், மனக்குமுறல்களையும் தலைவியினிடத்து கூறி புலம்புவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

**தலைவன் கலக்கம்**

இலக்கியங்களில் தலைவிதான் கலக்கமுறுவதாக அதிக பாடல் எண்ணிக்கையில் கூறப்பட்டுள்ளது. நற்றிணையில் தலைவன் கலக்கம் அடைவதாகக் காட்டப்பட்டுள்ளது. தலைவன் தவறு செய்கிறான். தலைவிக்கு தெரிந்து விடுமோ என்று எண்ணி நடுங்கி வருத்தமுற்றதாக கூறப்பட்டுள்ளது.

**குண்டு நீர் ஆப்பற் தன்துறை ஊரன்**
**தேம் கமழ் ஐம்பால் பற்றி, என் வயின்**
**வான் கோல் எல் வளை வெளவிய பூசல்**
**சினவிய முகத்து ‘சினவாது சென்று’ நின்**
**மனையோட்டு உரைப்பல்[7]**

ஆழ்ந்த நீரின் முளைத்த ஆம்பற் பூவையுடைய தண்ணிய துறையையுடைய ஊரன் நெய்ம் மணங் மகிழ்கின்ற என் கூந்தலைப் பற்றி யீர்த்து வைத்து என் கையிலுள்ள வெளிய கோற்றொழிலமைந்த ஒளி யையுடைய வளையை கழற்றிக் கோடலினாகிய பூசலாலே என்றாள். தலைவன் பரத்தையின் கூந்தலைப் பற்றி வளையலைக் கவர்ந்தமையினைப் பரத்தை தலைவியிடம் கூறுவதாகக் கூறியவுடன் தலைவன் மனம் நடுங்கினான். பலவாறு கலக்கமுற்றான். தலைவி தன்னை வெறுத்து ஒதுக்கி விடுவாள் என்று.

**தலைவியின் தடுமாற்றம்**

தலைவனின் பிரிவால் மெலிவுற்ற தலைவியை தோழி ஆற்றியிருக்கும்படி வற்புறுத்தினாள். த லைவி சமாதானத்தை ஏற்றுக் கொள்ளாமல் தடுமாறுகிறாள்.

**எனை விரும்புடையர் ஆயினும், நினைவில்!**
**நேர்ந்த நெஞ்சும் நெகழ்ந்த தோளும்**
**வாடிய வரியும் நோக்கி, நீடாது,**
**எவன் செய்தனள் இப்பேர் அஞர் உறுவி? என்று**
**ஒருநாள் கூறின்றுமிலரே; விரிநீர்**
**வையக வரையளவு இறந்த**
**எவ்வ நோய்; பிறிது உயவுத் துணை இன்றே.[8]**

அவர் என்னை விரும்பிவந்தான். என்னை மணந்து கொண்டு தம் குடும்பத்தின் பங்களிப்பைத் தர வேண்டு மே என்னும் நினைவே இல்லாதவராக இருக்கின்றாரே! அவருக்கு என் நெஞ்சைக் கொடுத்து விட்டேன். என் தோள் மெலிகிறது. அல்குல் வரிகோடுகள் வாடுகின்றன. நிலையிழந்து நிற்கும் என் தோளையும், வரியையும் பார்த்து காலம் தாழ்த்தாமல் என்ன ஆயிற்று பெரிதும் துன்பப்படுகிறாளே! என்று ஒருநாள்கூட கேட்கவில்லையே என்று தலைவி தவிக்கின்றாள், தடுமாறி நிற்கின்றாள்.

**நாகரீகம் உள்ளோரின் மனநிலை**

புதல்வனுக்குப் பாலூட்டும் தாயின் கை போல் வாழைப்பூ காந்தள் மலரைத் தொடும் வாழைப் பூவில் பட்டு ஒழுகும் அருவி நீரை செம்முக மந்தி பருகும். இப்படிப்பட்ட நாட்டை உடையவனே,

உறவுக்காரர் கண்முன் இருந்து கொண்டு நஞ்சினைக் கொடுத்தாலும் அதனை வாங்கி உண்பவர் சிறந்த நாகரிகம் உள்ளவர் ஆவார்.

**முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர்நனி நாகரீகர்[9]**
**பெயக்கண்டும் நஞ்சு உண்டுஅமைவர் நயந்தக்க**
**நாகரீகம் வேண்டு பவர்[10]**

நீ நாகரீகம் உள்ளவனாக நடந்து கொள், உனக்கு விருப்பம் இல்லை என்றாலும் நான் சொல்கிறேன் என்பதற்காக உன் மனைவியை அணைத்துக் கொள். இது தான் நாகரீகம்.

அவளும் நாகரீகம் உள்ளவளாக நடந்து கொள்வாள். நீ அவளை விரும்பாமல் அணைக்கிறாய் என்று அறிந்தாலும் உன்னை ஏற்றுக் கொள்வாள்.

**முடிவுரை**

பழந்தமிழரிடையே பொருள் தேடும் பிரிவு மிகுதியாகக் காணப்பட்டுள்ளது. அப்போது தலைவி தனியாக ஆற்றியிருக்கின்றாள். அப்போது அவர் தலைவனை நினைத்து படும் துன்பங்கள், அவளுடைய உடலில் ஏற்படும் மாற்றங்கள், அதை அவர் வெளிபடுத்தும் விதம் மிகவும் அழகாக உள்ளது.

பழந்தமிழரிடையே உளவியல்சார் சிந்தனைகள் ஒரு துறையாக வளர்ச்சி அடைந்திராத போதும் உளவியல் எண்ணக் கருத்துகளும், சிந்தனை முயற்சிகளும் இடம்பெற்றிருப்பதனை இலக்கியச் சான்றுகள் மூலம் அறிய முடிகின்றது.

நற்றிணைச் செய்யுள்கள் பலவற்றிலும் உளவியல் சார் சிந்தனைச் சிதறல்களையும், மனப்பதிவுகளின் அடையாளங்களையும் கண்டுகொள்ள முடிகிறது, பழந்தமிழரின் வாழ்க்கையிலும் உளவியல்சார் சிந்தனைகள் வாழப்பட்டிருக்கின்றமைக்கு பல அகச் சான்றுகளைக் காட்ட முடியும்.

**சான்றெண் விளக்கம்**

1. **நற்றிணை,** பா.175.
2. மேலது., பா.193.
3. வாயிலான் தேவன், **குறுந்தொகை,** பா.103.
4. **தொல்காப்பியம், பொருள்.,** நூ.3,
5. “மெய்ப்பாடு”, **தமிழ் இலக்கணப் பேரகராதி,** ப.36.
6. கண்ணகனார், **நற்றிணை,** பா.79.
7. பரணர், **நற்றிணை,** பா.100.
8. நெய்தல் தத்தனார், **நற்றிணை,** பா.130.
9. மேலது., பா.355.
10. **திருக்குறள்,** கண்ணோட்டம் அதிகாரம், குறள்.580.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# நற்றிணைப் பாடல்களில் உளவியல் கோட்பாடுகள்

68

**முனைவர் இரா. ஜோதிமணி, உதவிப்பேராசிரியர்,**
**தமிழ்த்துறை, பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,**
**கோயம்புத்தூர்.**

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியங்களில் தாய் இலக்கியங்கள் எனப் போற்றப்படுகின்றன சங்ககால மக்களின் வாழ்வியலைப் பதிவு செய்யும் ஆவணங்களாக சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. அகவாழ்வையும் புற வாழ்வையும் இருகண்கள் எனப் போற்றியுள்ளன. ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் சுற்றத்தார் அறியாமல் சந்திக்கின்றனர். இதனைக் களவு என்று பதிவு செய்யப்பட்டுள்ளது. களவு வாழ்க்கை கற்பு வாழ்க்கையாக மாற்றுவதற்குத் தலைவன் பொருள் தேடச் செல்கிறான், சென்ற தலைவன் மீண்டும் வருவதற்குள் தலைவி தோழியிடம் தன் உள்ளத்து உணர்வுகளை பகிர்ந்து உரையாடினாள். சங்கப்பாடல்களில் அகப்பாடல்கள் அனைத்தும் காதல் உணர்வுகளும், காதலின் மிகுதியால் உண்டாகும் காம வேட்கையும், மீதுரப் பெற்றவை இக்கட்டுரையில் நற்றிணைப் பாடல்கள் மூலம் ஆராயப் படுகிறது.

**ஆய்வுக்களம்**

சங்ககாலத்தில் ஆண்பால் புலவர்களைப் போலவே பெண்பாற் புலவர்களும் பாடல்களை இயற்றியுள்ளனர். சங்க இலக்கியப் படைப்பாக்கத்தில் பெண்கள் சிறந்ததொரு இடத்தைப் பெற்றுள்ளனர். சங்ககாலப் பெண்பாற் புலவர்களில் அகப்பாடல்கள் மட்டும் பாடிய பெருமைக்குரியவர் வெள்ளிவீதியார். பிற பெண்பால் புலவராலும் அறியப் பெற்றவர். வெள்ளிவீதியார் பாடியனவாக சங்க இலக்கியங்களில் 13 பாடல்கள் இடம்பெற்றுள்ளன அகநானூற்றில் இரண்டுப் பாடல்கள் ஆகும், குறுந்தொகையில் எட்டுப் பாடல்கள், நற்றிணையில் மூன்று பாடல்கள் இவற்றுள் நற்றிணையில் இடம்பெறும் வெள்ளிவீதியாரின் பாடல்கள் (70, 335, 343) மூன்றும் ஆய்வுக்களமாக விளங்குகின்றன.

**ஆய்வு அணுகுமுறை**

நற்றிணையில் உள்ள வெள்ளிவீதியாரின் பாடல்கள் மூன்றும் உளவியல் அணுகுமுறையில் ஆராயப்படுகிறது.

**வெள்ளிவீதியார் பாடல்களில் உளவியல் கோட்பாடுகள்**

கோட்பாடு என்பதற்கு கொள்கை, நடத்தை, கொண்டிருக்கும் தன்மை எனக் கழகத் தமிழ் அகராதி பொருள் கூறுகிறது. இவ்வடிப்படையில் ஆராய்ந்தால் வெள்ளிவீதியாரின் பாடல்கள் உளவியல் கருத்துக்களை எவ்வாறு கொண்டிருக்கிறது என்றும், தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவியின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களும் ஆராயப்படுகிறது.

**உளவியல் சொற்பொருள் விளக்கம்**

உளம் என்பது ஆன்மா, நெஞ்சு, உள்ளம், கருத்து, மனம் என்று தமிழ்மொழி அகராதி என்ற தனது நூலில் நா. கதிரைவேற்பிள்ளை குறிப்பிட்டுள்ளார். மனித மனம் செயல்படுவதைக் குறிக்கும் மனத்தின் வெளிப்பாடு குணம் குறித்து ஆராயும் அறிவியல் துறை என்பர்.

சூழ்நிலை அல்லது செயல்பாட்டை நிர்வகிக்கும் மனம் மற்றும் உணர்ச்சி காரணிகளாக மன வாழ்க்கையின் ஆன்மா, அறிவியல் வாழ்க்கை, ஆத்மா, மனம் என பல காரணிகளைக் குறிப்பிடுகின்றனர். இக்காரணிகளைக் கொண்டு வெள்ளிவீதியாரின் நற்றிணைப் பாடல்களை ஒப்பிட்டு ஆராயும் போது பெண்ணிய உளவியல் தன்மை மிகுந்ததாக விளங்குகின்றது. பெண்ணிய உளவியல் என்பது சமூக கட்டமைப்பினையும் பால் வேறுபாட்டினையும் அடிப்படையாகக் கொண்டு ஆராயும் உளவியல் அமைப்பாகும் என்று மேலை நாட்டினர் குறிப்பிடுகின்றனர்.

**காமம் மிக்க கழிபடர் கிளவி**

'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பது அகத் துறைகளுள் ஒன்றாகும். நற்றிணையில் வெள்ளிவீதியார் பாடிய மூன்று பாடல்களும் காமம் மிக்க கழிபடர் கிளவி என்ற அகத்துறையைச் சார்ந்தவையாக உள்ளன. உளவியல் அடிப்படையில் மன அழுத்தம் நீக்கும் முறையாக இதனைக் குறிப்பிடுவர். தற்காலத்தில் 'காமம்' என்ற சொல்லை தரம் தாழ்ந்த சொல்லாக கருதும் நிலையில் நாம் வாழ்ந்து வருகிறோம்.சங்க காலத்தில் காமம் என்ற சொல்லுக்கு அன்பு என்பதே பொருளாக இருந்தது. அன்பின் நிறைவையே காமம் என்று பழந்தமிழர்கள் அழைத்தனர். தலைவி, தலைவன் மீது உள்ள அன்பின் மிகுதியால் அஃறிணைப் பொருள்களிடம் தூது அனுப்புவாள்.. இன்றைய தூது இலக்கியங்களுக்கு எல்லாம் முன்னோடி 'காமம் மிக்க கழிபடர் கிளவி' அமைகிறது. இதன் பொருள் அன்பின் மிகுதி, அன்பு உள்ளத்தின் வெளிப்பாடு ஆகையால் வெள்ளிவீதியார் பாடல்கள் உளவியல் தன்மையைக் கொண்டுள்ளது எனலாம்.

இரவும் பகலும் வந்து தலைவியைச் சந்தித்து மகிழ்ந்த தலைவன் பொருள் தேடவும் பிற காரணங்களுக்காகவும் பிரிந்து செல்கிறான். பிரிவு தலைவியைத் துன்புறுத்துகிறது. திருமண வேட்கை

கொண்ட தலைவி நாரையை நோக்கித் தன்னிலை கூறி, அதனைத் தலைவனிடம் கூறுமாறு வேண்டுகிறாள். நாரை இவள் சொல்வதை தலைவனிடம் கூறுமா? சென்று கூறாது என்பது தலைவிக்குத் தெரிந்த போதிலும் தன் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்துகிறாள். நற்றிணையில் உள்ள 70 ஆவது பாடலிது. சுவை அழுகைச் சுவை உடையது. மருதத்திணைப் பாடல், இப்பாடலின் பயன் அவாவுயிர்த்தல் - அதாவது பெருமூச்சு விடுதல், தன்னைத்தானே நொந்து கொள்ளுதல், தலைவியின் உள்ளத்து உணர்வுகளை வெளிப்படுத்தும் இப்பாடல் உளவியல் தன்மை கொண்டதாகும்.

சிறிய மென்மையான கால்களை உடைய குருகே! நீர்த் துறையில் துவைத்து வெளுத்த ஆடை போன்ற நல்ல நிறம் பொருந்திய சிறிய வெண்மையான குருகே! நீ தலைவன் வாழும் நிலத்தில் இருந்து தினமும் எம் நிலத்துக்கு வருகிறாய், இங்குள்ள நீர்நிலைகளில் சினையாகவுள்ள ஆரல் மீன்களை உண்கிறாய். பின் அவர் ஊருக்குப் பெயர்ந்து சென்று விடுகிறாய். தினமும் என்நிலையை நீ பார்க்கிறாயே! நான் அணிந்த அணிகலன்கள் அவன் பிரிவால் என் உடலைவிட்டு நெகிழ்ந்து கீழே விழுகின்றன. எனது துன்பத்தை தலைவனிடம் கூற மாட்டாயா? என்ற தலைவியின் கூற்றை

**ஆங்கன் தீம்புனல் ஈங்கண் பார்க்கும்**
**கழினி நல் ஊர் மகிழ்நர்க்கு என்**
**இழை நெகிழ் பருவரல் செப்பா தோயே! (நற்:70:7-9)**

நற்றிணையில் நற்றிணைப் பாடல் 335 ஆவது பாடலில் தன் காம உணர்வின் மிகுதியை தலைவி தோழியிடம் சொல்லிக் கலங்குகிறாள். இயற்கையின் இயக்கத்தையும் நள்ளிரவில் தலைவியின் மன நிலையும் இப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

நிலா வானில் உலாவுகிறது. கொந்தளிக்கும் கடல் அலையின் ஓசை கேட்டுக்கொண்டே இருக்கிறது. ஆற்றில் அலைமோதிக் கொண்டே இருக்கிறது. ஆற்றுப் புனல் பாயும் கானலில் முள் இருக்கும் தாழம்பூ குழியிலைக் குடையில் போட்ட சோறு போல மொட்டு விரித்துப் பூத்திருக்கிறது.அடிக்கும் காற்றில் மணம் கமழ்கிறது. பனைமரத்தில் இருக்கும் அன்றில் என் எலும்பே உருகும்படி தன் துணையை அழைக்கும் குரல் கேட்கிறது. நான் என் மன மாற்றத்திற்காக யாழை மீட்டி என் விரல்கள் ஓய்ந்தன. நள்ளிரவு பொழுது போகவே இல்லை. என் காம உணர்வு பெருகிக்கொண்டே இருக்கிறது என்று குறிப்பிடும் பாடலில் தலைவியின் உள்ளத்தின் ஏக்கம் புலனாகிறது. தலைவியின் மன உளைச்சலை,

**அன்றிலும் என்புற நரலும்: அன்றி**
**விரல் கவர்ந்து உழந்த கவர்வின் நல் யாழ்**
**யாமம் உய்யாமல் நின்றன்று**
**காமம் பெரிதே களைஞரோ இலரே.(நற்:335: 9-2)**

என்ற பாடல் பதிவு குறிப்பிடுகின்றது.

தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் தன் மன வருத்தம் புலப்பட தோழியிடம் கூறுவதாக நற்றிணை 348 ஆவது பாடல் அமைந்துள்ளது.

நிலவு, நீல நிற வானத்தில் பால் போன்ற தன் கதிரைப் பரப்புவதால் பால் போன்ற கடலில் முளைத்தெழுகிறது. ஊர்மக்கள் தழைக்கும் ஆரவாரத்துடன் மகிழ்ந்து ஒன்றாக தெருவில் விழாக் கொண்டாடுகின்றனர் காட்டில் மலர்கள் பூத்துக் கிடப்பதால் வண்டுகள் தாம் விரும்பும் துணையோடு தேனுண்டு ஒலிக்கின்றன. எங்கும் மகிழ்ச்சி ஆரவாரம். நானோ என் அணிகலன்கள் கழன்று என் காதலர் அருகில் இல்லாததால் உண்டாகும் இருண்டு கிடக்கும் இரவிலும் கண் மூடாமல் கலங்கி கொண்டிருக்கிறேன். அதனால் இந்த உலகம் என்னோடு போரிடுகிறதா? அல்லது துன்புறும் என் நெஞ்சம் இந்த உலகத்தோடு போரிடுகிறதா? என்பது விளங்கவில்லை!...என மனப் போராட்டத்தை.

**நிலவே நீல் நிற விசும்பில் பல் கதிர் பரப்பி**

**பால் மலி கடலின் பரந்து பட்டன்றே(நற்:348:1-2)**

என்ற பாடல் விளக்குகிறது.

நற்றிணைப் பாடல்களில் வெள்ளிவீதியார் மூன்று பாடல்களும் உளவியல் கருத்துக்களை கொண்டிருக்கிறது. தலைவியின் மனதில் ஏற்படும் வருத்தம், துன்பம், காம உணர்வு போன்ற தன்மைகளை ஆராயும்போது உளவியல் சிந்தனை புலனாகின்றது.

**நிறைவுரை**

நற்றிணையில் இடம்பெறும் வெள்ளிவீதியார் பாடல்கள் மூன்றும் (70,335,348)உளவியல் கருத்துக்களைக் கொண்டுள்ளன.காமம் மிக்க கழிபடர் கிளவி என்பது தலைவன் மீது கொண்ட காதலின் மிகுதியால் தலைவியின் உள்ளம் தானாகவே அஃறிணையுடன் பேசுவதைப் போல் அமைந்துள்ளது.வெள்ளிவீதியாரின் நற்றிணைப் பாடல்கள் தலைவி கூற்றுப் பாடல்களாக அமைந்துள்ளன.குருகு, அன்றில், நிலவு, ஊர், யாழ் போன்றவற்றின் தன்மையும் தலைவனைப் பிரிந்து இருப்பதால் ஏற்படும் துன்பமும் ஆராயப்பட்டுள்ளன. மூன்று பாடல்களும் நற்றிணையில் இடம்பெறும் 'காமம் மிக்க கழிபடர்' என்ற துறையை சார்ந்த பாடல்களாக அமைந்துள்ளன.நற்றிணைப் பாடல்களில் வெள்ளிவீதியாரின் பாடல்கள் உளவியல் சிந்தனையைப் பெற்று விளங்குகிறது என கூற இடமுளது.

**மேற்கோள் நூல்கள்**

1. கழகத் தமிழ் அகராதி திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட் 154, டி,டி,கே சாலை சென்னை 600018 மார்ச் 2010.

2. நா. கதிரைவேற்பிள்ளை 'தமிழ்மொழி அகராதி' சாரதாபதிப்பகம், ஜி. சாந்தி குடியிருப்பு, நெ 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, இராயப்பேட்டை சென்னை-14 முதற்பதிப்பு மார்ச் 2003.

3. நற்றிணை மூலமும் உரையும், பதிப்பாசிரியர் வித்துவான் வேங்கடராமன் மகாமகோபாத்தியாய டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், பெசன்ட் நகர், சென்னை - 90. முதற்பதிப்பு 1989.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# புறநானூற்றில் போர் அற உளவியல்

69

முனைவர் பா.ஷியாமளாதேவி, உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைத்தமிழர் வாழ்வில் பெரிதும் பேசப்பட்ட அகம், புறம் எனப்படும் காதலும் வீரமும்தான் இன்றைய இலக்கியங்களிலும், ஊடகங்களிலும்கூடப் பேசு பொருளாக இருக்கின்றன. தமிழர்களின் வீரத்தின் அடையாளமாகப் புறவாழ்க்கையையே எல்லா நிலையிலும் உயர்த்திப் பேசுகின்றோம். புறவாழ்க்கை எனப்படும் வீரநிலை உணர்வுகள் அகத்தில் இருந்தே தோற்றம் பெற்றிருக்க வேண்டும். அகவாழ்விலுள்ள தனக்கான ஒன்றை மற்றவர்கள் அபகரிக்க முற்படும் நிலையிலிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவே புறவாழ்க்கை என்ற போரியல் அறிவு முக்கியத்துவம் பெறுகின்றன, மனிதராகப் பிறந்த எவரும் இயல்பாகப் போரை விரும்புவதில்லை.

மனிதர்களின் மனதில் தற்காப்புக்காக ஏற்பட்ட வீரநிலை உணர்வுகளின் வெளிப்பாடுகள் காலப்போக்கில் மற்றவர்களை அடக்கும் எண்ணத்திற்கும் ஆளும் நிலைக்கும் கொண்டுச் சேர்த்தன. இப்போர்களில் பல்வேறு உத்திமுறைகளையும் கையாண்டுள்ளனர். வலிமை, ஆற்றல் வெற்றி, சிறப்பு, புகழ் ஆகிய அனைத்தும் வெறும் உடல் வலிமையினாலோ, பொருள் வளத்தினாலோ, படைகள், படைக்கலன்கள் பல பெற்றிருந்ததினாலோ மட்டும் வருவதில்லை. மாறாக மனத்திட்பம், மதிநுட்பம், நிர்வாகத்திறன், அரசமைப்பு முறைகள், நற்பயிற்சியாளர்கள். நல்லறம் மீது நாட்டம் கொண்டவர்கள் இடம், காலத்திற்கு ஏற்றவாறு எண்ணிச் செயல்படும் ஆற்றல் பெற்றிருக்கின்றனர்.அத்தகைய நல்லறச் சிந்தனைகளைப் பற்றி இக்கட்டுரை வாயிலாக அறிய முயற்சிப்போம்.

**முன்னுரை**

புறநானூறு போரியல் சார்ந்த புறநூல் என்பதனால் போர், போரியல் செயல்பாடுகள், உத்திகள் போன்றவைகள் குறுநிலத்தலைவர்கள், மன்னர்கள், பேரரசர்கள் போன்றவர்களின் மதிநுட்பத்தால் மட்டுமே கட்டமைக்கப்பட்ட அரசியல் உளவியலை வெளிப்படுத்துகின்றன. அரசியலோடு சமுதாயம் என்ற பொதுவெளிக்கு வருகின்றப் பொழுது அமைச்சர்கள், புலவர்கள், கற்றறிந்த சான்றோர்கள், அந்தணர்கள் போன்றோர் அரசர்களின் கட்டமைப்பிற்குள் இணைந்த மாந்தர்களாக உள்ளனர். ஆனால் போர் செய்தல், நாட்டைக் கைப்பற்றுதல் என்னும் சூழலில் முழுக்க முழுக்க தலைமைத்துவம் வகிக்கின்ற நபர்களாகிய அரசர்கள் மட்டுமே போரியல் நெறிமுறைகளை வகுக்கின்ற காரணத்தினால் அவர்களின் போரியல் அற உளவியலை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வுக் கட்டுரை அமைந்துள்ளது.

மனிதகுல வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு இயல்பு சிறப்பாக போற்றப்படுவதுண்டு. இவ்வியலினை அவ்வக்கால இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.சங்ககாலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. வீரம் மிக்கவர்களே சிறப்புக்குரியவர்களாகக் கருதப்பட்டனர்.

தமிழ் மொழியைப் பொறுத்தவரை,போர் தொடர்பான செய்திகளையே அடிப்படையாகக் கொண்டு எழுந்த இலக்கியங்கள் பல உண்டு. அவை புற வாழ்க்கையைப் பற்றிய இலக்கியங்கள் என்று பாகுப்படுத்தப்பட்டன. புறப்பொருள் பற்றிய இலக்கியங்களில் மட்டுமே அன்றி அக வாழ்க்கையைப் பற்றி கூறும் அக இலக்கியங்களிலும் போர் செய்திகள் சிற்சில இடங்களில் சுவைபட இணைத்துக் கூறப்பட்டுள்ள முறைமையைத் தமிழ் இலக்கியங்களில் காணமுடிகிறது.

காலம் செல்லச் செல்ல போர் நடத்தும் முறைகளில் மாற்றம் ஏற்பட்டது.இன்றைய தற்காலப் போர் முறைகள் வன்முறையை கையாளுவது ஆகவே உள்ளது.அறப்போர் என்னும் நிலைமாறி அணுசக்திப் போர் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.இந்த மாற்றத்திற்கு காரணம் பழங்காலப் போர் உத்திகளையும்,அறங்களை கற்றுத் தெரியாமல் இருப்பதே ஆகும்.இதற்கு புறநானூறு போன்ற பழம்பெரும் இலக்கியங்களை வாசிக்காமல் இருப்பதே காரணம் ஆகும்.

பண்டைய காலத்தில் இக்காலத்தைப் போலவே போரினால் நாட்டுக்கு கேடு விளைந்தது என்பதில் ஐயமில்லை.ஆனால், பண்டங்கள் பாழாயினவே அன்றி பொதுமக்கள் உயிரை அவர்கள் பாழ்படுத்தியதில்லை.போர் முனையில் நிற்பார்கள் தான் உயிரிழந்தனர்.போர் முனைக்குத்தகுதியற்றவர்கள் பாதுகாக்கப்பட்டனர்.போரை விரும்பாத மக்களும் தப்பித்துக்கொள்ளலாம்.போர் தொடங்குவதற்கு முன்போ அவர்கள் பொதுமக்களுக்கு அறிவித்து விடுவார்கள்.பொதுமக்கள் போர் நிகழும் இடத்திலிருந்து தப்பித்து வெளியேறுவதற்கு காலம் கொடுப்பார்கள்.அவர்கள் வெளியேறிய பின்பே போர் தொடுப்பார்கள்.இதுதான் சிறந்த யுத்த தர்மம் ஆகும்.

**ஆவும், ஆனியற் பார்ப்பன மாக்களும்**
**பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்**
**தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்**
**பொன்போல் புதல்வர் பெறா அ தீரும்**
**எம்அம்புகடிவிடுதும்நும்அரண்சேர்மின்** **(புறம் - 9; 1 - 5)**

என்று கூறி போருக்கு முன்னே எச்சரிக்கும் அரசியலும் வீர மறக் குணமும் உடையவர்கள் தமிழர் என நெட்டிமையார் குறிப்பிடுகிறார்.

**போருக்கான காரணங்கள்**

ஆநிரை கவர்தலும்,மீட்டலும் போருக்குரிய காரணங்களாகத் தொடக்கத்தில் இருந்தன. அவ்வாறு மீட்ட ஆநிரைகளைத் தமக்கென வைத்திராது பலருக்கும் பகிர்ந்து கொடுக்கும் பண்பு உடையவராக விளங்கினார்கள்.இந்நிலை மாறி,பின்னர் நில எல்லைக்காகவும், ஆட்சித் தலைமைக்காகவும், கொள்கைக்காகவும், இனமானம் கருதியும் போர்கள் நடைபெறலாயின.

தன் நாட்டில் வாழும் குடிகள் வளத்துடன் வாழ்வதற்குப் போதிய இடம் இன்மையாலும் இடம் சிறிது என்னும் ஊக்க மேலீட்டினாலும் வேந்தர் போர் தொடுப்பர் என்பதனை,

**“எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச்சென் றடல் குறித்தன்றே"**

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.சங்ககாலம் வீரத்திற்கு முதன்மையளித்த காலம். போர் என்பது தவிர்க்க முடியாத நிகழ்ச்சி என்றும் இது உலகத்தின் இயற்கை என்றும் பண்டைத் தமிழர் கருதினர்.

**போர் முறைகள்**

பண்டைத் தமிழர் தம் போர்களையும் அப்போர்களில் கையாளப்பட்ட போர் முறைகளை அறிந்து கொள்வதற்குப் புறநானூறு பெரிதும் துணை புரிகிறது. போர் அறம், போரின் தொடக்கம், காவல் மரம் வெட்டுதல், முரசு கவித்தல்,பகை நாட்டை அழித்தல், கள வேள்வி செய்தல் ஆகிய பல செய்திகளை புறநானூறு விளக்குகிறது.

**"மன்னன் போரில் ஈடுபடும் முன் நாட்டு மக்களுக்கு போர் நடைபெறப் போகிறது என்பதை அறிவித்து விடுவான்.பொதுமக்களில் குறிப்பிட்டவர்கள் போர் நிகழும் இடத்திலிருந்து நீங்கிச் சென்று போரினின்றும் தப்பித்துக் கொள்வதற்குக் காலம் கொடுப்பான்.இதுவே போர் அறமாகக் கருதப்பட்டது. போரை அறவே ஒழிக்க இயலாத நிலையில் , எல்லாக் காலத்திலும் எல்லா இடத்திலும் எந்த முறையிலும் போரிட்டு உலகை நாசம் ஆக்காமல் இருப்பதற்குரிய வழி முறைகளை ஆன்றோர்கள் வகுத்தார்கள் .ஆதலின் போரிலும் அறப்போர் என்ற வகை உண்டாயிற்று என்கிறார்" கி.வா ஜெகநாதன்.**

கொலை மலிந்த போர்களிலும் அற அடிப்படையிலான சில வரையறைக்குட்பட்ட நடைமுறைகள் சங்ககாலத்தில் இருந்திருக்கின்றன.

**வஞ்சினம்**

போருக்குச் செல்லும் முன் வேந்தரும்,வீரரும் வஞ்சினம் உரைத்தல் மரபு.வேந்தர் உரைக்கும் வஞ்சினம் படைவீரர்களை ஊக்கப்படுத்தி, சிறக்கப் போரிடச் செய்யும்,தாம் எண்ணிய இலக்கை அடைவதற்கும்,உள்ளத்து உறுதி குலையாமல் இருப்பதற்கும் வஞ்சினம் பயன்பட்டது.வஞ்சி இனத்தை ஒன்று மொழி என்றும் உரைப்பர்.வீரர் தாம் உரைத்த வஞ்சினம் பொய்த்துப் போகாதவாறு செயல்படும் மரப் பண்புடையவர் என்பதை,

**வஞ்சின முடித்த வொன்று மொழிக் கோசர்**

**ஒன்று மொழிக் கோசர்**

என்ற பாடல் வரிகள் மூலம் அறியலாம்.

**தூதும் அறமும்**

போர் நிகழ்தலைத் தடுக்கத் தூது அறநெறியாகப் பயன்பட்டிருக்கிறது. தூதும் வெற்றிப் பெறாத நிலையில் போர் நிகழ்ந்தன. மன்னர்கள் தன்னைவிட ஆற்றலில் குறைந்தவரோடு போர் செய்ய நேரிடும் போது தூதுவரை அனுப்பிப் போரைத் தடுத்தனர். அதியமானிடம் இருந்து தமிழ்ப்புலமைக்காக அரிய நெல்லிக்கனியைப் பரிசாகப் பெற்ற ஔவையார் தொண்டைமானிடம் தூதராகவும் சென்றுள்ளார். அதியமானின் போர்வீரத்தினையும் பேராற்றலையும் உயர்த்தியும் எதிர்த்துப் போரிட்டால் நீ தோல்வி அடைவதோடு நாடும் அழியும் என்று கூறிப் போரைத் தவிர்க்கும் நோக்கத்தோடு தூது சென்றார். இது அன்றைய மகளிரின் வீரத்திற்கும் அறத்திற்கும் சான்றாகும்.

எனவே, போர்க்குற்றங்கள் என்பது நெடுங்காலத்திற்கு முன்பிருந்தே நீடிக்கின்றன. அதன் விளைவுகள் அவ்வக்கால புலவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்றன.இதன்மூலம் போர்க்களம் என்பது கொலைக் களமாக மட்டும் விளங்காமல் துயரம் கண்டு இரங்கும் களமாகவும் இருந்துள்ளது.

**துணை நின்ற நூல்கள்**

1. புறநானூறு - நியூ செஞ்சுரி வெளியீடு,
2. கோசர் - ரா.இராகவையங்கார்,அண்ணாமலை பல்கலைக்கழகம்,
3. சங்ககாலப் போர்முறைகளில் படைகளும் படைக்கலன்களும்-செல்லமுத்து ,மதுரை பல்கலைக்கழகம்,
4. தொல்காப்பியம் - இளம்பூரணார்,சாரதா பதிப்பகம்.

ISSN:2582-9599



# காரைக்கால் அம்மையார் வாழ்வியல் ஓர் உளவியல் பார்வை

70

முனைவர் ம.ஷீலா, உதவிப்பேராசிரியர்,
தமிழ்துறை, இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலைக்கல்லூரி,
செங்கல்பட்டு.

**ஆய்வுச்சுருக்கம்**

'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்பது வழக்கு. அகத்தின் போக்குகள் ஒருவர் குணத்தில் எதிரொலிக்கும். உள்ளம் நலமாக இருந்தால் வாழ்வும் நலமாகும். நம் எண்ணங்கள், சிந்தனைகள் நம் உலகியல் மற்றும் ஆன்மீக வாழ்வியலைத் தீர்மானிக்கின்றன. நாயன்மார்களின் வாழ்வியல் சிக்கல்களும் அவர்கள்மேற் கொண்ட அடியார் வாழ்க்கைக் கொள்கைக்கேற்பவே நடந்துள்ளமையை நாம் காரைக்கால் அம்மையார் வாழ்வு வழியும் விளக்கலாம்.காரைக்காலார் வாழ்வியலைப் பிராய்டின் உள்ளுணர்வு கோட்பாடுவழி தெளிவாக புரிந்து கொள்ளலாம் என்பதே இக்கட்டுரையின் செய்தியாம்.

**கடவுச் சொற்கள்**

புனிதவதியார், பரமதத்தன், சிக்மண்ட்பிராய்டு, உள்ளுணர்ச்சிக் கோட்பாடு , சாவுணர்ச்சிகள், வாழ்வுணர்ச்சிகள், பேய்வடிவு.

**முன்னுரை**

உலகம் என்பது ஆண்,பெண் என்னும் உயிர்களை உள்ளடக்கியதே. உலகம் இயங்கவும்,உயிர்கள் வாழவும் இவ் இரண்டு உயிர்களும் தேவை.உலக வாழ்வில் ஒன்றில்லையேல் இன்னொன்று முழுமையாகாது. ஆயின் கணினி யுகமாய இன்றும் சமூகம் இவ்வுயிர்களிடையே பேதம் பார்க்கத்தான் செய்கின்றது. உலகம் தோன்றி பலயுகங்களான பாரம்பரியசிந்தனைப்போக்குகளும் காரணம் எனலாம். தற்காலத்தில் சிறகடிப்பும், ஒடுக்கமும், அடக்கலும் இல்லாமல் இல்லை.பெண் உணர்வைப் பெண்ணே வெளிப்படுத்தும் பாங்குதற்பொழுது மலர்ந்தும் , வளர்ந்தும் வருகின்றது. அவ்வகையில் மனைத்தக்க மனையாளாய் வாழ்ந்தும் தம்பக்தி வாழ்வால் இல்லறத்திலிருந்துப் புறக்கணிக்கப்பட்ட காரைக்கால் அம்மையார் வாழ்வுணர்த்தும் உளவியல் பற்றி நாமிங்குக் காணலாம்.சூழல்கள்நம்மைத் தாக்கும் போது செயல்படும் பாங்கினை இவர்வாழ்க்கை உணர்த்தும் நிலையில் உள்ளதால் அதனைப்பற்றி அறிவது தற்காலத்துக்குரியதாய், மானுடம் அறியத்தக்கப் பாடமாக உள்ளதாலும் இக்கட்டுரை இங்கு இயல்பாகின்றதாம்.

**1. புனிதவதியாராம் மனைக்கிழவி**

காரைக்கால் நகரின் தனதத்தன் என்னும் செல்வர் வணிக மகள் புனிதவதியார். இவருக்கு நாகைப்பட்டின நிதிபதியின் மகன் பரமதத்தனுடன் திருமணம் நடக்கின்றது. இருவரும் செல்வ வளக் குடியினரே. தனத்தனோ ஒரே மகளைப் பிரியும் மனமின்றி காரைக்காலிலே தனிக்குடித்தனமும் வைக்கின்றார்.உலகியல் வாழ்வியலில் வாழும் புனிதவதியார் சிவபக்தியில் ஆழ்ந்தவருமாவார். இச்சிவ உணர்வு இடையில் வந்து ஒட்டிக் கொண்டதோ வாழ்வின் வழக்கிற்கேற்ப கைக் கொண்டதோ அன்று; அவர் வார்த்தைகளில் கூற வேண்டுமாயின்,

**"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம்காதல்**
**சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்"(அற். தி.**1:2)

என்பதாம். மனைத்தக்க மாண்புடையவராயும், சைவசிவவுணர்வினராயும் விளங்கினார். சைவ அடியார்களைப் போற்றலும், அவர்க்கு உரியன செய்தலும்தம்வாழ்வின் இயல்பாய் செய்து வந்தார் புனிதவதியார்.ஒருமுறை கணவர் இரு மாம்பழங்களை வீட்டிற்கு அனுப்புகின்றார்.அன்று வந்த அடியார்க்கு உணவு முழுவதும் செய்யுமுன் பசியுடன் வந்தவராதலின் ஒருமாம்பழத்தை அரிந்துவைத்து உணவு படைக்கிறார். அடியாரும் உண்டு மகிழ்வுடன் செல்கின்றார்.கணவர் இல்லம் வந்து உணவு உண்தற்கு முன் சமையலை முடித்தவர் அவர்க்கு உணவு பரிமாறுகின்றார்.பின் அங்கிருந்த இன்னொரு மாங்கனியை அரிந்தும் வைக்கின்றார். உண்ட கணவனோ சுவையில் விருப்புடையவராக, மனைவி சாப்பிட வேண்டுமெனும் உணர்வின்றி இன்னொரு மாம்பழத்தையும் கொண்டு வரச் சொல்கின்றார்.சேக்கிழாரும் இதனை,

**".....இனியசுவை ஆராமைத் தார்வணிகன்**
**இனியது ஒருபழம் இன்னும் உளது அதனை இடுகவென" (பன்.திரு.**1745:2-3)

மனையாளின் சைவவுணர்வும் அடியார் போற்றல் பாங்கும் கணவர் அறிந்ததுதான். அடியார் வந்தார். அவர்க்கு அளித்து விட்டேன் என நடந்தது கூறின் ஏன் கொடுத்தாய் என கேட்கப்போவது இல்லை. உளச்சிக்கல் இங்கு ஆரம்பிக்கின்றது. புனிதவதியாரும் இறைவனிடம் வேண்டுகின்றார். இறைவனும் மாம்பழத்தைத் தருகின்றார்.'அப்பம் தின்றால் போதாதா. குழி எண்ணவும் வேண்டுமா?' என்பது மலையாளப் பழமொழி. மாம்பழச்சுவை வேறுபட கணவனும் 'ஏது இக் கனி? ஒருமரக்கனி என்றல்லவோ கூறினார் என்று வினவ இங்கும் தடுமாற்றம் அடைகின்றார் புனிதவதியார். இறுதியில் இறைவனிடம் வேண்டகிடைத்தது என்றுகூற, மனிதனல்லவா...இறைவன் தந்தாராயின் மீண்டும் கேள் எனக் கூறவும் மறுக்கவியலாது மீண்டும் கேட்க, மறுபடியும் கனி வந்தது. கணவர் கையில் அதைக் கொடுக்க கனியும் மறைந்தது. இந்த அற்புத செயல் கண்டு ஆண்மனம் தடுமாறுகின்றது.

வாழ்வது காரைக்கால் மட்டுமல்ல... பிறரிடம் கூறினால் சமரசம் செய்து விடுவர் என்னும் நினைவுகளால் புனிதவதியாம்மனையாளைப்பிரியும் எண்ணத்தைமறைத்து கடல் கடந்துப் பொருளீட்டி வருகிறேனென செல்கின்றார். பல நாடுகளுக்கும் சென்று பொருளீட்டியவர் பாண்டிய நாட்டில் செல்வ வணிகனாய் வணிக மகளை மணந்து பெண் குழந்தையும் பெற்றெடுக்கின்றான். அக்குழந்தைக்குப் புனிதவதியெனப் பெயருமிட்டு வாழ்ந்து வரலானான். காரைக்கால் நகரிலோ புனிதவதியார் கணவர் வரவை எதிர்பார்த்து மனைவாழ்க்கை வாழ்ந்து வரலானார்.

**2. பேய் வடிவம் பெறல்:**

பரமதத்தனின் இரண்டாம் மனைவாழ்க்கை அறிந்த புனிதவதியார் உறவினர் இவருடன் பரமதத்தனைக்காண செல்கின்றனர்.நகரில் இவர்கள் வந்த தகவல் அறிந்த பரமதத்தனோ, மனைவி, மகளுடன் வந்து புனிதவதியாரைத் தன் மனைவியெனும் நினைப்பு ஒழிந்தவனாதலால் சுற்றத்தினர் முன்னால் காலில் விழுந்து வணங்குகின்றான். இல்லறத்தில் ஊடல்காலங்ளில் கணவன்மனைவி காலில் விழுந்து வணங்கி ஊடல் தீர்ப்பதாக இலக்கியங்களில் வழக்கு உண்டு.காரைக்காலார் பாடலும் இதற்குச் சான்றாம்.

**"சிலம்படியாள் ஊடலைத்தான் றவிர்ப்பான் வேண்டிச்**
**சிலம்புமேல் செவ்வரத்தம் சேர்த்தி-நலம்பெற்**
**றெதிராய செக்கரினும் இக்கோலஞ் செய்தான்**
**முதிரா மதியின்முடி' (அற். தி.68)**

ஆனால் நடைமுறை வாழ்க்கையில் மனையாள் கணவன் காலில் விழுந்து வணங்குவாளே அன்றி கணவன் மனையாள் காலில் விழுவது கிடையாது.'சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை', 'சிங்கக்குட்டி' அல்லவா அவன்...? ஆண்மய சமுதாயமும் இதனை ஏற்காதன்றோ..? உறவுகள் எல்லாம் என் செய்தாயென கேலி செய்தது.உறவின்முன் நடந்த இந்த பழக்கமல்லாத செயலால் புனிதவதியும் வெட்கி ஒதுங்கினார்.பரமத்தனோ கொஞ்சமும் தயங்காமல் இவர் மனித உருவாயினும் தெய்வமகள் ;வணங்கத்தக்கவர். நீங்களும் வணங்குங்கள் என்றான்.

**".....மானுடம் இவர்தாம் அல்லர்**
**நல் பெருந் தெய்வம் ஆதல் நானறிந்து அகன்ற பின்பு**
**பெற்ற மகவு தன்னைப் பேரிட்டேன் ஆத லாலே**
**பொன்பதம் பணிந்தேன் நீரும் போற்றுதல் செய்மின் என்றான்"** (பன்.திரு.1768)

"இளமையில் தந்தையாலும், பருவகாலத்தில் கணவனாலும், முதுமையில் கணவனாலும் காக்கப்பட வேண்டியவர்.ஆதலால் மாதர் எஞ்ஞான்றும் தன்னிச்சையாக இருக்கக்கூடாதவர்"(ஏ.கே.கோபாலன் ,ப.ஆர்.மநுதர்ம சாஸ்திரம் 9:3, .232)என்பது மனுசாத்திரம்.இந்த சூழலில் வளர்க்கப்பட்டவராதலின் இல்லறம் மறுக்கப்பட ,பக்தி வாழ்விற்கெனத் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றார்.அழகிய பெண், இளம்பெண் கணவன் புறக்கணித்தால் சமூகமும் மதியா சூழலாதலின் புனிதவதிபோராடவோ செய்யாமல் கம்பீரமாக முடிவெடுக்கின்றார்.சாதகமற்ற சூழலில் திகைக்காமல் தன் வாழ்க்கைப் பாதையைத் தீர்மானிக்கின்றார்.கணவனே 'அணங்கு' என விலகின் உறவுகளிடம் மட்டும் இயல்பாக முடியுமோ? எனும் நினைவால் இறைவனிடம் பேய்வடிவு வேண்டுகின்றார்.

**"ஈங்கிவன் குறித்த கொள்கை இதுவினி இவனுக்காகத்**
**தாங்கிய வனப்புநின்ற தசைப்பொதி கழித்து இங்குன்பால்**
**ஆங்குநின் தாள்கள் போற்றுப் பேய்டிவு அடியெனுக்குப்**
**பாங்குற வேண்டுமென் றுபரமர் தாள் பரவி நின்றார்"** (பன்.திரு.1770) .

அழகை விரும்பும் மனம்;அழகே ஆசை விருப்பிற்குக் காரணமென்பதை உணர்ந்துஅது தன் பக்தி வாழ்விற்குத் தடையாக இருக்குமென நினைந்து பேய்வடிவு வேண்டிப் பெற்றார்.பெருமான் அருள் உணர்ந்து அற்புதத்திருவந்தாதி, திரூவிரட்டைமணிமாலைபோல்வபாடலானார்.அக்கால பக்தி மரபின்படி ஊர்ஊராகச் சென்று சிவாலயங்கள் தரிசனம் செய்யலானார்.

**3. காரைக்கால் அம்மையாராதல்**

என்பு வடிவாய் இறைத் தலங்கள் கண்டவர் தம் வடிவு கண்டு பிறர் கொள்ளும் அச்சம் , இழிப்பைப் பொருட்படுத்தாதவரானார். "கண்டவர் வியப்புற்று அஞ்சிக்கை அகன்று ஓடுவார்கள்

**கொண்டதோர்வேடத்தன்மை உள்ளவர் கூறக்கேட்டே**
**அண்டர் நாயகனார் என்னை அறிவாரேல் அறியா வாய்மை**
**எண்டிசை மாக்களுக்கியான்எவ்வுரு வாயென் பார்" (பன்.திரு.1775).**

பெருமான் பக்தி தடையற இயல்வதற்காய் விரும்பி வேண்டிப் பெற்ற உருவமன்றோ.. அம்மையாரும் இதனை,

**"பெறினும் பிறிதியாதும் வேண்டேம் எமக்கீ**
**துறினும் உறாதொழி யுமேனும்- சிறிதுணர்த்தி**
**மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்தன் பேயாய**
**நற்கணத்தில் ஒன்றாய நாம்" (அற்.தி.86)**

சைவர்கள் இலக்காய கயிலைமலை சென்று பெருமானை வணங்க விரும்பிச் செல்கின்றார் என்புருவில் காரைக்கால் அம்மையார்.இறை வாழிடம், இருப்பிம் ஆதலின் தலையால் நடந்து செல்கின்றார்.

பெருமானுடன் இருக்கும் உமையம்மையாரோ இவ் அன்புருவம் யாரெனக் கேட்கவும் 'எமையாளும் அம்மை' என்றவர், 'அம்மையே வருக' எனவும் காரைக்காலரோ 'அப்பா' என அன்புடன் அழைக்கலானார். பிறவா யாக்கைப் பெரியோனும் தாயுமானவராலால் தானும் தாய்மை அன்பை வேண்டுவார் போல் எம்மைப்பேணும் அம்மையெனத் தன் விருப்பையும் மொழிகின்றார். அடியார்வழிபாடு ஈசனை அடையும் எளியவழியாம்(அற்.தி.40;திரு.மணி.13). அடியார்என்கையில் இறையுடன் இருத்தலையே விரும்புவர். உலகியலிலேயே உரிமை வேட்பில்லாதவராதலின், இங்கும் பிறவி வேண்டாம் எனக் கேளாது விடுகின்றார். ஆயின் இறைநடனமே உலகியக்கமாதலின் மறவாமை, நடனம்காண் விருப்பென அடுக்குகின்றார். இறைவனும் திருவாலங்காட்டில் நடனம், ஆடும்போது அடிக்கீழ்இருக்கலாமென அருள்கின்றார். திருவாலங்காடு சென்ற அம்மையார் அங்கும் தலையால் நடந்து செல்கின்றார்.அங்கு இறைநடம் கண்டு மகிழ்ந்தவராய் 'மூத்த திருப்பதிகங்கள்' பாடலானார்.

**"கடுவன் உகளும் கழைசூழ் பொதும்பிற் கமுகும் பேயுமாய்**
**இடுவெண் டலையும் ஈமப்புகையும் எழுந்த பெருங்காட்டில்**
**கொடுவெண் மழுவும் பிறையுந் ததும்பக் கொள்ளென் றிசைப்பாடப்**
**படுவெண் துடியும் பறையும் கறங்கப் பரமன் ஆடுமே"(மூத்.திரு.**2:9).

**4. காரைக்கால் அம்மையார் வாழ்வியல்**

இயல்பாய உலகியல் வாழ்வியலுடன் சிவபக்தி வாழ்வுடையவராக வாழ்ந்தவர் புனிதவதியார்.அடியார் வழிபாடு இறைவனையடையத் துணைசெய்யும் என்பதில் நம்பிக்கையுடையவர்; செயல்பாட்டாளராகவும் விளங்கினார் (அற். தி. 40). நிகழ்வை மறைப்பதுதுயரையே, சிக்கலையே தரும் என்பதற்கு இவர் வாழ்க்கைசான்றாம். அடியார்க்கு மாம்பழம் வழங்கியதை முதலில் கூறாது விட்டவர்இறையருளால்மாம்பழம் பெற்றபின் மறுப்பு, மறைப்பு தன் ஒழுக்கத்தையே தவறாகப் புரிதலுக்கு இடம் தரும் என்பதை உணர்ந்தவராய் வெளிப்படுத்த இல்லறம் தகர்ந்தது.

கணவன் 'தெய்வமகள்' என இல்லறத்திலிருந்து விலக, புனிதவதியும்' புளியம்பழத்திலிருந்து தோடு விலகியது போல் பக்தி வாழ்க்கையில் முழுமையாக ஈடுபடுகின்றார்.தன்னுருவம், பருவம் அதற்குத் தடையாக இருக்கலாமென்று உணர்ந்தவர் போல்என்புருவாய்,பேய்வடிவம் பெற்று அடியார் வாழ்வினராகின்றார். கயிலை சென்று சிவபெருமானைக் கண்டவர் இறைவனால் 'அம்மா' என்று ழைக்கும் பேறு பெற்றபின்பும் ,உலகியல் மறவாமல்' பிறவாமை, மறவாமை, என்றும் ஆடல் காணும்பேறு விரும்பித் திருவாலங்காட்டில் பெறுகின்றார். காரைக்கால் அம்மையார் இறைவழிபாட்டுடன் அடியார் வழிபாடும் தலவழிபாடும் செய்தார்.

5. **பக்தி உளவியல்**

இறையுணர்வு உடையவராக விளங்கினாலும் அடியாராகத்தான் வாழ்வேன் என்று காரைக்காலம்மையார் இல்லலறத்தைப் புறக்கணிக்கவில்லை. கணவர் மாம்பழம் விரும்பிக் கேட்கையில், 'இல்லை; இன்னொருவருக்குக் கொடுத்துவிட்டேன்' என்றால் கணவர் ஏமாற்றமடைலாம் ; கோபப்படலாம் என்று அவரிடம்கூறாது இறைவனிடம் தன் சிக்கலுக்கு வழி கேட்கின்றார்.கணரும் இயல்பாய மானிடமாய் மனையாளின் அற்புத நிலை-இயற்க்கைக்கு மாறான நிலை கண்டு தன்னினும் மேம்பட்டவரென ஒதுங்கித் தன் வாழ்வை அமைக்கின்றார்.

உளவியலின் ஒரு பிரிவே சமூக உளவியலாம்.இவ்வுளவியல் ஒரு தனியன் தன் சக மனிதர்களிடம் கொண்டுள்ள உறவை ஆராய்கின்றது(பி. குப்புசாமி,தமிழாக்கம் நா. சந்தானகிருஷ்ணன்,சமூக உவியலுக்கு ஓர் அறிமுகம் (1) .1)ஒரே சமூகத்தில் பலர் இருந்தாலும் சிலரிடம் சிலவுணர்வுகள் மட்டும் அதிகம் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.இறை -இன்பம்துய்ப்பு ,நிலையான வாழ்வென யாவரும் விரும்பினும் பக்தி சிலரிடம் மேலோட்டமாக உள்ளதாம். இதனை, "ஒவ்வொரு உள்ளுணர்ச்சிகளும் சம ஆற்றல் கொண்டவையல்ல.அதேநேரத்தில் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி (சான்றாகப் பசி) அனைவரிடமும் ஒரே தன்மையோடு அல்லது வலிமையோடு இருக்குமென்று கருதமுடியாது.." ( தி.கு.இரவிச்சந்திரன் ,சிக்மெண்ட் ஃப்ராய்ட் , ப.196).

பிராய்டு அவர்களின் உள்ளுணர்ச்சிக் கோட்பாடு காரைக்கால் அம்மையாரின் வாழ்வியலைப் புரிந்து கொள்ளத் துணைபுரியக் காணலாம். உள்ளுணர்ச்சிக் கோட்பாடு பற்றிக் கூறுகையில், "மனிதனின் நனவிலிக்குள் வாழ்வுணர்ச்சிகள்(life indtincts) சாவுணர்ச்சிகள்(death instincts) ஆகியவை உள்ளன.உடலியல் வாழ்வுக்குத் தேவையான பசி,தாகம், காமம், தூக்கம் போன்றவை வாழ்வியல் உணர்ச்சிகளாம். இவையல்லாது வாழ்க்கைக்கு எதிரான உணர்ச்சிகளான சாவுவிழைவு (death wish), மூர்க்கம் (aggression) அழிப்பு (அ) சிதைப்பு (destruction) போன்றவை சாவுணர்ச்சிகளாகும் "(சிக்மண்ட்ஃப்ராய்ட், மேற்படி .209) என்றவர் ,"அழிப்புணர்ச்சிகளில் இருமுனைகள்(poles) உள்ளன. ஒன்று புறநிலையை அழிப்பது, தன்னையே அழித்துக் கொள்வது. புறப்பொருளை அழிக்க வாழ்வுணர்ச்சிகள் ஆதாரமாக உள்ளது." தன்னையே அழிக்க சாவுணர்ச்சிகள் காரணமாக உள்ளனவாம்.

காரைக்காலார் வாழ்வைக் காண்கையில் பரமதத்தனாம் கணவரிடம் வாழ்வுணர்ச்சியையும் புனிதவதியாரிடம் சாவுணர்ச்சியையும் காண்கிறோம். பரமதத்தன் தனக்கே புரியாத சூழல் என்றவுடன்,சினத்தைக் காட்டாமல் தன் வாழ்வுக்குரிய வழிகளை அமைத்துக் கொள்கின்றார்.மனையாளை விட்டு விலகும் தம்நிலையை வெளிப்படுத்தாமை,'திரைகடலோடித் திரவியம் தேடப் போகிறேன்' என யாவும் தயார் செய்து வணிகம் செய்ய சென்றவர்,பெரும் பொருளீட்டியதுடன் மணமும் செய்து மகள்

பெற்று வாழ்கின்றார்.மனையாள் மீது கொண்ட பயமே'இவர் மானுடமல்ல தெய்வம்' என்னும் உணர்வே காரணமென்பதற்கு மகளுக்கு புனிதவதியென முதல் மனைவியின் பெயரிட்டமையும், உறவுகள் மனையாளை அழைத்து வந்த போது யாவர் முன்பாக விழுந்து வணங்கியமையாலும் அறியலாம்.

புனிதவதியார் இல்லற வாழ்விலிருந்தாலும்அவர்க்கு இறைபற்று சற்று அதிகம் என்பதை அவர்வாழ்வின் சிக்கல்கள் வழி உணரலாம். உடனிருக்கும் கணவரிடம் கூறாமல் இறைவனிடமே வேண்டக் காண்கிறோம்.இதுவே பெருஞ்சிக்ககலுக்கு வழி வகுத்துஇல்லம்சிதைய, இறையடியாராய் முழுமையும்மாறவும் வழி செய்கின்றது. கணவர்மறுமணம், மகள்பேறு,மட்டுமல்ல தன்னைத் தெய்வமாகநினைத்து விலகுகின்றார்;அவர் மனதில்தான் மனையாளாக இல்லை என்ப உணர்ந்ததும் இறைவாழ்வில் முழுமையாக ஈடுபட முயல்கின்றார். ஒருவகையில் இதை வாய்ப்பாகப் பயன்படுத்துகின்றார்உலகியல் வாழ்வுணர்வுகள் விலக, உளவியலார் கூறும் சாவுணர்ச்சிகள் மேலோங்குகின்றன.இங்கு உலகியல் வாழ்வு முடிப்புணர்வே தவிர ஆன்மீக வாழ்வில் முழுமைபெறம் நோக்கிற்குத் தடையாக இருக்கும் இளமை, அழகிலிருந்து விடுபட முனைவாராய் என்புவுருபேய்வடிவு வேண்டிப்பெறுகின்றார். இதைப் பிராய்டின் கூற்றில் கூறுவதாக இருந்தால் இது தன்னையழிக்கும் சாவுணர்ச்சியின் வெளிப்பாடே.இயற்கையின் மாறுட்ட செயலால் தன்னை நிலைநிறுத்தும் போக்கே பேய்வடிவு,தலையால் நடத்தல் போன்ற செயல்களைச் சான்றாகக் கொள்ளலாம்.

**தொகுப்புரை**

காரணமின்றி எதுவும் நடப்பதில்லை என்பது நடைமுறை. வெளிப்படையாகத் தெரியவில்லை என்றாலும் காரைக்காலாரின் வாழ்வும் இதனையே உணர்த்துகின்றது.சேக்கிழார் கூறுவதுபோல் மயிலை காளைக்கு மணம் செய்து வைத்தனர்(1732;3-4). உலகியலைவிட இறையுணர்வு மேம்பட்டு புனிதவதியும், முழுமையான உலகியல் மனிதனாய் பரமதத்தன் விளங்கக் காணலாம். வாழ்வில் சிக்ககல் என்றதுமே புனிதவதி எப்போதும் நாடித்தீர்வுபெற (மாம்பழம்,பேய்வடிவு) பரமதத்தனோ தானேதீர்வு காண்கின்றான்(மனையாளை விட்டு விலகல்,கடல் கடந்து வணிகம் செயல்,மணம், தன்கருத்தில் உறுதியாய் நின்றுமனையாள் காலில்விழுந்து வணங்கல்...).பரமதத்தனிடம் உலகியலில் பிறர்மதிக்க வேண்டும்என்னும் வாழ்வுணர்ச்சி விளங்கக் காரைக்காலரிடமோ சாவுணர்ச்சிகளாய தன்னையே வருத்தித் தன் மேம்பாடு காட்டும் பாங்காய்ப் பேய்வடிவு,தலையால் நடத்தல் என ஆன்மிகத்தில் உறுதியாய் நிற்கின்றார்.இறுதியில் விருப்பாய இறைநட காட்சியும் அடிக்கீழ் இருந்துபாடி நடம் காணும் பேறும் பெறக்காண்கிறோம்.

**முடிவுரை**

எண்ணமே மனிதனை உருவாக்குகின்றது.உலகியலில் இறையுணர்வு மேம்பட்டதால் புனிதவதியாம் காரைக்கால் அம்மையாருக்கு பேய்வடிவு, தலையால் நடத்தல் எனத்தன் பக்தியை ஆளுமையை வளர்த்து சென்றமையை உளவியல் தெளிவாக விளக்குகின்றதாம். எதிர் துருவங்கள்ஈர்க்கும் என்றாலும் அங்கும் சமரசம் -'இருவர் பொறை ஒருவர் நட்பு'- இல்லையேல் அது நிலைக்காது என்பதற்குப் புனிதவதியார்(காரைக்கால் அம்மையார்) பரமதத்தன் வாழ்வு சான்றாகும்.

துணைநின்ற நூல்கள்:

1. இரவிச்சந்திரன், தி.கு.,சிக்மண்ட் ஃப்ராய்டு உளப்பகுப்பாய்வியல்,அலைகளௌ வெளியீட்டகம், 25,தெற்கு சிவன் கோயில் தெரு,கோடம்பாக்கம், சென்னை-24, 2007.

2. காரைக்கால் அம்மையார், அற்புதத்திருவந்தாதி உரையுடன், ஒரத்தூர் சு. குஞ்சிதபாதம் அவர்கள் மணிவிழா மலர்,தில்லைத் திருமுறைக் கழகம்,1970.

3. சிவா, கலைமணி., காரைக்காலம்மையார் வாழ்வும் வாக்கும், 1,யமுனைவீதி, நைனார் மண்டபம், கடலூர்ச்சாலை,புதுச்சேரி-605007, 2001.

4. சுப்பிரமணியன், ச. வே., (ப. ஆர்.) பன்னிருதிருமுறை , மணிவாசகர் பதிப்பகம், 31,சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108, 2007.

5. சுப்புலெட்சுமி மோகன், செ.,காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி,சென்னை-113 , 2010.

6. வசந்தகுமார், இராச.(ப.ஆர்.), பதினோராந்திருமுறை(1), பன்னிருதிருமுறை ஆய்வு மையம், கற்பகம் பல்கலைக்கழகம், ஈச்சநாரி, கோவை-23,

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# உளவியல் நோக்கில் திருக்குறள் சுட்டும் உடல்நலமும் உணவுமுறையும்

71

**முனைவர் இரா. சீதாலட்சுமி இராதாகிருஷ்ணன், முதுநிலை விரிவுரையாளர்,**

**இந்திய ஆய்வியல் துறை, மலாயாப் பல்கலைக்கழகம், கோலாலம்பூர்.**

**ஆய்வுச் சுருக்கம்**

'கடவுள் மனிதனுக்குக் கூறியது பகவத்கீதை; மனிதன் கடவுளுக்குக் கூறியது திருவாசகம்; மனிதன் மனிதனுக்குக் கூறியது திருக்குறள்' எனத் திருக்குறளைச் சிறப்பித்துக் கூறுவர். மனிதன் மனிதனாக வாழ்வதற்குத் திருவள்ளுவர் திருக்குறளை இயற்றியுள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனிதனுக்கு வாழ்வியலைக் கற்றுத்தந்த மாமேதையாக திருவள்ளுவர் விளங்குகின்றார். மனிதன் தனது வாழ்க்கையை எப்படி வாழவேண்டும் என்பதனை முப்பாலாக வகுத்துக் கொடுத்தவர் திருவள்ளுவர். திருக்குறளில் வாழ்வியலுக்குத் தேவைப்படும் நூற்றுக்கணக்கான துறை சார்ந்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஆகவே, திருக்குறளில் வெளிப்படும் வாழ்வியல் கூறுகளைக் கற்றுணர்ந்து ஒழுகும் ஒருவர், வளம்பெற வாழ முடியும் என்பது திண்ணம்.

மானிடர்கள் இப்பூமியில் வாழ்வாங்கு வாழ்வதற்கு அவர்களின் நடத்தையும் செயல்பாடுகளும் ஆதாரமாக விளங்குகின்றன. இதனையே உளவியல் என்று பேரறிஞர்கள் அறிவியல்பூர்வமாக நிரூபித்துள்ளனர். ஒவ்வொருவரும் இயல்பாகச் செயல்படுவற்கு அவரவர் உடல்நலம் முக்கியப் பங்காற்றுகின்றது. உடல்நல மேம்பாட்டிற்கு உணவுமுறை மிகப்பெரிய பங்கு வகிக்கின்றது. அவ்வகையில் திருவள்ளுவர் 'மருந்து' எனும் அதிகாரத்தின்வழி உடல்நலத்திற்கும் உணவுமுறைக்கும் உள்ள தொடர்பினை உளவியல் அடிப்படையில் மிகத் தெளிவாக விவரித்துள்ளார். ஆக திருக்குறளில், 'மருந்து' எனும் அதிகாரத்தில் வெளிப்படும் உணவுமுறைவழி உடல்நலம் பேணல் தொடர்பான உளவியல் சிந்தனைகளை ஆராய்வதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டு இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**கருச்சொற்கள்** : திருவள்ளுவர், திருக்குறள், உளவியல், உடல்நலம், உணவுமுறை

## 1.0. முன்னுரை

திருக்குறள் மனித குலத்தின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு வழிகாட்டக்கூடிய ஓர் அரிய நூலாகும். திருக்குறளின் அடிப்படையே மனிதமும், மனிதநேயமும் மட்டும்தான். திருக்குறளை முழுமையாகப் படித்து, பொருளை உணர்ந்து, அதன்படி நடப்பவனே ஒரு முழுமையான மனிதன் எனக் கூறப்படுகின்றது. ஒரு முழுமையான மனிதன், தான் சரிவர இயங்குவதற்குத் துணையாக நிற்பது அவனது உடல்நலமே.

அந்த உடல்நலத்திற்கு வித்திடுவது ஒருவரின் உணவுமுறையே ஆகும். மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி, முறையாக ஆராய்ந்து அதன் மூலம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களைத் தொடர்புபடுத்துவதே உளவியலாகும் (நாகராஜன். கி, 2009, 1). ஆகவே, புறச்செயலான உணவுமுறைக்கும் அகச்செயலான சிந்தனைக்கும் நெருங்கிய தொடர்புள்ளது. இந்தத் தொடர்பினை ஆராய்வதையே 'உடல்நல உளவியல்' என உளவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர். திருக்குறளின் பல அதிகாரங்களில் உளவியல் கருத்துகள் மேலோங்கிக் காணப்படுவதால், அஃது உலகிலேயே தலைசிறந்த உளவியல் நூலாகப் போற்றப்படுகின்றது. ஆக, பல்துறைசார்களஞ்சியம் எனக் கூறப்படும் திருக்குறளில் பொதிந்துள்ள உடல்நல உளவியல் தொடர்பான செய்திகள் இவ்ஆய்வின் மூலம் பதிவு செய்யப்படுகின்றன.

### 1.1. திருக்குறள் ஓர் அறிமுகம்

கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட திருக்குறள் மனிதனின் வாழ்க்கைக்கு இன்றும் வழிகாட்டியாக இருப்பது அதன் தொன்மையைப் பறைச்சாற்றுகின்றது. திருக்குறளின் தனிப்பெரும் சிறப்பை மாங்குடி மருதனாரின் பாடல்வரிகள் கீழ்க்கண்டவாறு எடுத்தியம்புகின்றது.

*ஓதற் கெளிதாய் உணர்தற்கு அரிதாகி*
*வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீதற்றோர்*
*உள்ளுந்தொ றுள்ளுந்தொ றுள்ளம் உருக்குமே*
*வள்ளுவர் வாய்மொழி மாண்பு.*

(திருவள்ளுவமாலை : 24)

இச்செய்யுள்வழி, "படிப்பதற்கு எளிய சொற்களைக் கொண்டுள்ளது; அறியப்படுவதற்கு அருமைப்பாடுடைய நுட்பமான பொருளையுடையதும் வடமொழியில் சிறப்பித்துச் சொல்லப்படும் வேதங்களின் பொருளை உள்ளடக்கியுள்ளது; அந்த வேதங்களை விடவும் சிறப்புப்பெற்றுள்ளது; குற்றமற்றவர்கள் நினைவுகூறும்போது, அவர்களுடைய மனதை உருக்கக் கூடியதாகவும் வள்ளுவப்பெருந்தகையின் திருக்குறள் விளங்குகிறது" என மாங்குடி மருதனார், திருக்குறளின் பெருமையை உலக மக்களுக்கு உணர்த்துகின்றார்.

அத்தகைய பெருமைகளைக் கொண்டுள்ள திருக்குறளானது, மனிதனின் வாழ்வியலுக்குத் தேவையான பல்வேறு துறைசார் கருத்துகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றுள் உளவியல் சிந்தனைகள் பற்றிய செய்திகள் பல்வேறு குறள்களில் காணப்படுவதால், திருக்குறள் 'அருமையான ஆற்றுப்படுத்தும் மனநூல்' எனவும் அழைக்கப்படுகின்றது. திருக்குறளில் காணப்படும் உளவியல் சிந்தனைகளில், உடல்நலம் மற்றும் உணவுமுறை தொடர்பானச் செய்திகள், குறிப்பாக 'மருந்து' எனும் அதிகாரத்தின்வழி எடுத்தாளப்பட்டுள்ளன.

**1.2 உடல்நலமும் உணவுமுறையும்**

மனிதன் செயல்படுவதற்கு மிக முக்கியக் காரணியாக அமைவது உடல்நலமே. 'சுவரை வைத்துத்தான் சித்திரம் வரைய வேண்டும்' எனும் பழமொழிக்கேற்ப நம் உடல், நலமாக இருந்தால்தான் நமது எண்ணங்களுக்குச் செயல்வடிவம் கொடுத்துக் காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிக்க முடியும் (இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான விளக்கவுரை, 2016, 49). நோயின்றி இருக்கும் ஆரோக்கியமான உடலே மனிதனின் செயல்களைச் சிறப்பாகச் செய்து முடிக்கத் துணைபுரியும். ஆகையால், கிடைத்தற்கரிய இவ்வுடலை நோய்வுறாது பேணிக்காக்க சரியான உணவுமுறையும் அத்தியாவசியமாகின்றது. முறையான உணவை, முறையான நேரத்துக்குச் சாப்பிட வேண்டும் என்பதும் மிக அவசியம். உரிய காலத்தில் உகந்த உணவை உட்கொள்ளாவிட்டால், மனிதனின் அறிவு மற்றும் உடல் ஆகியவற்றின் ஆற்றல்கள் திசைமாறிப் பயணிக்கத் துவங்கிவிடும் என்பது வேதாத்திரி மகரிஷியின் அருள்வாக்கு (வேதாத்திரி மகரிஷி, 2011, 24). அதே வேளை, உணவை உட்கொள்ளாமல் இருந்தாலும்கூட உடலுக்குத் தேவையான சக்தி கிடைக்காமல் சோர்வு ஏற்படக்கூடிய சூழல் அமைந்துவிடுகின்றது. ஆகவே, உடலுக்கேற்ற உணவால் அறிவும், நல்லறிவால் சிந்தனையும், நற்சிந்தனையால் செயலும் சிறப்படையும் என்பது கண்கூடு. உடல்நலத்திற்கு முக்கியத் தூணாக விளங்கும் உணவுமுறையைச் சரியான வகையில் பின்பற்றினால் நோயற்ற பெருவாழ்வு வாழ்வது உறுதியாகும்.

**1.3 உளவியல் சிந்தனை**

உளவியல் எனும் தமிழ்ச் சொல்லின் அடிப்படையாக விளங்குவது 'சைக்காலஜி' (Psychology) எனும் ஆங்கிலச் சொல்லாகும். இதன் மூலச்சொற்களாக அமைந்துள்ளது 'சைக்கி' மற்றும் 'லோஜஸ்' எனும் கிரேக்கச் சொற்களாகும். 'சைக்கி' என்றால் ஆன்மா அல்லது ஆவி எனப் பொருள்படும். 'லோஜஸ்' எனப்படுவது அறிவியல் அல்லது அறிவுத்துறை அல்லது ஒருவருடைய குணம் அல்லது வினை ஆகும் (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1978, 2). இதன் அடிப்படையிலேயே ஆக்ஸ்ஃபோர்டு ஆங்கில அகராதி, உளவியலை மனித ஆன்மா அல்லது உள்ளத்து தன்மை, வினைகள், நிகழ்ச்சி பற்றிய ஓர் அறிவியல் என்று வரையறை செய்கிறது.

உளவியல், மனிதர்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறையாக அறிகின்ற ஓர் அறிவியலாகும். மனிதன் ஒருமைப்படுத்தப்பட்ட ஓர் உயிரியல் அலகு என்றும் உளவியல் கருதுகின்றது (Dr. மு. இராசமாணிக்கம், 1974, 1). உளவியல் பொருள்சார்ந்த அறிவியல்கள், சமூக அறிவியல்கள் மூலமாகக் கூடுதலான, பயன்மிக்க விவரங்களைச் சேகரித்துக் கொண்டுள்ளது. அவ்வகையில் இயற்பியல் சார்ந்த அறிவியல்களான இயற்பியல், வானியல், வேதியல் போன்ற அறிவியல்கள் மூலம் புற இயற்பியல் சார்ந்த உலகத்தைப் பற்றியும், உடலியல், மருத்துவம் மற்றும் சமூக அறிவியல்களான மனிதவியல், சமூகவியல், வரலாறு, பொருளியல் போன்ற அறிவியல்கள் மூலம் அக உடலில் மெய்ப்பட்டு, உலகத்தைச் சார்ந்த

விவரங்களையும் உளவியல் தன் பயன் கருதிச் சேர்த்துக் கொண்டிருக்கிறது (தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1978, 1-2). எனவே புற உலகம், அக உலகம் ஆகிய இரு உலகங்களையும் சார்ந்த விவரங்களைத் தன் ஆய்வில் கூட்டி இணைக்கும் ஒரே அறிவியல் உளவியல்தான் என்று கூறலாம்.

உளவியல் தனி மனிதனின் நடவடிக்கைகளை அவரது பிறப்பிற்கு முன்பிருந்து ஆரம்பித்து, சிறு குழந்தைப் பருவம், முதிர்ச்சிப் பருவம், தளர்ச்சிப் பருவம் ஆகிய வாழ்வின் அனைத்துப் பருவங்களையும் ஆராய்கின்றது. ஒவ்வொரு உளவியல் செயல்முறையும் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த பரப்பளவாகக் காணப்படுகின்றது. ஒவ்வொரு பரப்பும் மனித நடத்தையின் ஒரு பகுதியில் அக்கறை கொண்டுள்ளது. அவற்றுள், மனிதனின் உடல்நலப் பராமரிப்பினை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ள உடல்நல உளவியல் குறிப்பிடத்தக்கது.

### 1.4 உடல்நல உளவியல்

உடல்நல உளவியல் எனப்படுவது மனிதனின் ஆரோக்கியத்திற்கான உளவியல் காரணங்கள், பராமரித்தல், வலுப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றின் வழிமுறைகளை எடுத்துரைக்கும் அறிவியலாகும். இது கருத்தரித்தல் முதல் இறப்பு வரையிலான ஒரு நபரின் ஆரோக்கியத்தைப் பராமரிக்கும் நடைமுறைகளை உட்படுத்தியது (https://dinelli.ru/ta/manikyur/referat-zdorovyi-obraz-zhizni-i-psihologiya-psihologiya-zdorovya---nauka.html). உடல்நல உளவியல் மனோரீதியிலான கோட்பாடு மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றின் பயன்பாடு, உடல்நலம், நோய்ப்பாடு, உடல்நலக் கவனிப்புப் போன்றவற்றைச் சார்ந்துள்ளது. இவ்வகை உளவியலானது, உடல்நலம் தொடர்பான நடத்தைகளில் அக்கறை செலுத்துவதோடு ஆரோக்கிய உணவுமுறை, நோயின் தன்மை, நோயாளியின் உடல்நலம் போன்றவற்றிலும் ஆதிக்கம் கொண்டுள்ளது. எனவே, மனிதனின் உடல்நல மேம்பாட்டிற்கு வித்திடும் வகையில் சுகாதாரத்தின் துணைப்பிரிவாக இந்த உளவியல் அமைக்கப்பட்டுள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனைச் செயல்படுத்துவதற்கு உளவியலாளர்கள் கண்டறிந்த உளவியல் கோட்பாடுகளும் முக்கியப் பங்காற்றுகின்றன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

### 1.5 உளப்பகுப்பாய்வு கோட்பாடு

பல்வேறு காலங்களில் தோன்றிய உளவியலாளர்களின் ஆய்வுகளுக்கேற்ப, உளவியலின் உள்ளடக்கமும், ஆய்வு எல்லைகளும், வரைவிலக்கணங்களும் மாற்றமடைந்து கொண்டே வந்துள்ளன. உளவியலாளர்களுள் குறிப்பிடத்தக்கவர் சிக்மண்ட ஃபிராய்ட் (Sigmund Freud) ஆவார். பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தோன்றிய சிக்மண்ட ஃபிராய்ட் (1856 - 1939) உளவியல் துறையை அறிவியல்சார் முறையில் ஆய்வுக்குட்படுத்தினார். மனித மனத்தின் நடத்தைகளுக்கு, இயல்பு பிறழ்ந்த

நடத்தைகளுக்கு அவனது குழந்தை பருவ பால்சார் உணர்வுகளே முக்கியக் காரணமாக விளங்குகின்றன என்பதனை மனநோய் ஆய்வுகளின் வழிக் கண்டறிந்தார். அவ்வாறு கண்டறிந்த வழிமுறைகளுக்கு ‘ஃபிராய்ட் உளப்பகுப்பாய்வு (Psychoanalysis) முறை’ என்றழைக்கப்பட்டது (இளங்கோ. சு, 2015, 1).

சிக்மண்ட ஃபிராய்ட் உளப்பகுப்பாய்வு கோட்பாட்டை அடிநிலை மனம் (Id), நனவுநிலை மனம் (Ego) மற்றும் மேனிலை மனம் (Super Ego) என மூன்றாக வகைப்படுத்தியுள்ளார். அடிநிலை மனம் என்பது எந்தச் சமூகத்திற்கும், மரபிற்கும் கட்டுப்படாமல் செயல்படும்; தன் இன்பத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும்; அறநெறியைப் பின்பற்றாது. நனவுநிலை மனம் என்பது அடிநிலை மனம் செய்யக்கூடிய செயலைச் செய்யாமல், சமுதாய நலனைக் காக்கத் தடுப்பது அல்லது கட்டுப்படுத்துவது எனப் பொருள்படும். மேனிலை மனம் என்பது மனித வாழ்க்கையில் உயர்ந்தவையை மட்டுமே கருதும் தனித்துவ குணம்; சமுதாயத்தைக் காப்பதற்காக அறநெறியைப் பின்பற்றும் (கார்த்திகா. கு, 2017, 184). ஆக, இந்த மூன்று உளவியல் கோட்பாடுகளைக் கொண்டு எக்காலத்திற்கும் பொருந்திய திருக்குறளில், உடல்நலப் பாதுகாப்புக்கு வித்திடும் உணவுமுறையை நிறுவுவதே இந்த ஆய்வின் முதன்மை நோக்கமாகும்.

அடிநிலை மனநிலையில் மனிதனுக்கு உணவின் மீது பேராசை மிகுந்து அதனை அளவுக்கதிகமாக உட்கொள்கின்றான். இந்நிலையில், அவன் சுயநலத்தோடு செயல்பட்டு, சமூகத்திற்கும், மரபுக்கும் கட்டுப்படாமல் இருக்கிறான். அளவோடு உண்ண வேண்டும் என்ற மரபுக்குக் கட்டுப்படாமல் தமது ஆசைக்கேற்ப உட்கொண்டு பலவித நோய்கள் ஏற்படுவதற்கும் மனிதனே காரணமாகின்றான்.

நனவுநிலை மனநிலையின் போது அடிநிலை மனம் செய்யக்கூடிய செயல்களைச் செய்யாமல் சமுதாய நலனுக்கு முக்கியத்துவம் தந்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும். இந்நிலையில், மனிதன் தமது சுயநலனுக்காகச் செயல்படாமல், மரபுகளுக்குக் கட்டுப்பட்டு, சரியான உணவுமுறையைத் தேர்ந்தெடுக்கின்றான். இதன் மூலம், மனிதன் தன் உடல்நலத்திற்கு முக்கியத்துவம் அளித்துச் சரியான உணவுமுறையைக் கடைப்பிடிக்கத் தொடங்குகிறான். அதனால், உடல்நலம் மேம்பட்டு நோய்கள் தவிர்க்கப்படுகின்றன.

மேனிலை மனமானது சிறந்த பண்புகளைப் பின்பற்றி அறநெறியோடு வாழ்வதற்கு வழி வகுக்கின்றது. இந்த நிலையில் ஒருவர் தமது வாழ்வில் எப்போதும் சரியான உணவுமுறையைக் கடைப்பிடித்து நோயில்லா வாழ்க்கையை வாழ முற்படுகின்றார். இதன் வழி, எந்தவொரு நோய்நொடியும் ஏற்படாமல் தமது உடல்நலம் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்கின்றார்.

இம்மூன்று மனநிலைகளின் தன்மைக்கேற்ப ஒருவரது உணவுமுறை அமைவதனால் நிகழக்கூடிய உடல்நல மாற்றத்தை உளவியல் நோக்கில் திருவள்ளுவர் பகுத்தாராய்ந்து கூறியுள்ளார். இவரது அறிவார்ந்த கருத்துகளை நாம் நம் மனதிற்கொண்டு ஒழுகி வருவோமானால் நோயற்ற நல்வாழ்க்கை வாழ்வது நிச்சயம்.

**2.0. ஆய்வு நெறி**

இந்த ஆய்வுக்கட்டுரை நூலக ஆராய்ச்சி அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த ஆய்வின் முதன்மைநூலாக திருக்குறளும் துணைநூல்களாக உளவியல் தொடர்பான நூல்களும் இடம்பெறுகின்றன. திருக்குறள் மற்றும் உளவியலைப் பற்றிய ஆய்வு நூல், கட்டுரை மற்றும் அதன் தொடர்புடைய பல நூல்களை ஆராய்ந்து இவ்ஆய்வு மேற்கொள்ளப்படுகின்றது. திருவள்ளுவப் பெருமான் தமது திருக்குறளில் எடுத்துரைத்த உடல்நலத்தைப் பாதுகாக்கும் உணவுமுறை தொடர்பான உளவியல் சிந்தனைகளை உள்ளடக்கி இந்த ஆய்வுக்கட்டுரை அமைகின்றது.

**3.0. கருத்துரை**

சிக்மண்ட ஃபிராய்ட் முன்வைத்துள்ள உளப்பகுப்பாய்வு கோட்பாடுகளின் அடிப்படையில் திருக்குறளின் 'மருந்து' அதிகாரத்தின் குறட்பாக்கள் ஆய்ந்தறியப்படுகின்றன. இதன்வழி பெறப்படும் தரவுகள், அடிநிலை மனமும் உடல்நலக் கேடும், நனவுநிலை மனமும் உடல்நலம் பேணுதலும் மற்றும் மேனிலை மனமும் உடல்நல மேம்பாடும் ஆகிய தலைப்புகளில் விவரிக்கப்படுகின்றன.

**3.1. அடிநிலை மனமும் உடல்நலக்கேடும்**

அடிநிலை மனத்தின் அடிப்படையில் ஒருவர் தமது மனம்போன போக்கிற்கு ஏற்பச் செயல்பட்டுத் தமது தேவைக்கு மேல் உணவினை உட்கொள்கின்றார். 'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு' எனும் பழமொழிக்கேற்ப எதனையும் அளவாக எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படிச் செயல்படாமல், தேவைக்கும் கூடுதலான உணவை உட்கொள்வதால் உடலின் உள்ளுறுப்புச் செயல்பாடுகளில் மாற்றம் கண்டு, பல்வாறான நோய்ப்பாடுகளில் சிக்கிக் கொள்வதற்கு வாய்ப்புகள் அதிகமாகின்றன. மனித உடலானது வாதம், பித்தம், கபம் ஆகிய திரிதோஷ தத்துவத்தை உள்ளடக்கியது (அசோக்குமார்.A.S., 2013, 212). இவற்றில் ஏதேனும் ஒன்று கூடினாலும் குறைந்தாலும் மனிதனின் உடல் அல்லது உள்ளத்தில் நிச்சயம் பாதிப்பு ஏற்படும். இதனால், நோய் ஏற்படுவது உறுதி. இதனைப் பற்றி திருவள்ளுவரும் தமது திருக்குறளில்,

*மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்*
*வளிமுதலா எண்ணிய மூன்று*

**(திருக்குறள் : 941)**

எனக் கூறியுள்ளார். இக்குறள் வாதம், பித்தம், கபம் எனும் தோஷங்களைக் குறிப்பிடுவதோடு விட்டுவிடவில்லை. மாறாக, அதன் பொருளை ஆழ்ந்து நோக்கும்பொழுது உடல்நலத்திற்கு உரிய உணவுமுறைகளை நுட்பமாக வலியுறுத்துவதைக் காண முடிகின்றது.

உயிர் வாழ்க்கைக்கு மிக முக்கியமானது மூச்சு. மூச்சு வழியாகக் காற்றை உட்கொள்கிறோம். அதற்கு அடுத்ததாக முக்கியமாவது இரத்த ஓட்டம். இரத்த ஓட்டத்திற்காக நீரை உண்கிறோம். அதற்குப் பிறகு உடலுறுதி, உடல் வளத்துக்காகச் சோறு, கறி, காய் முதலிய பலவற்றை உண்கிறோம். இந்த மூன்று உணவுகளையும் அளவோடு உண்ண வேண்டும். இவை மிகுந்தாலும் குறைந்தாலும் நோயுண்டாக்கும். நோய்களுக்கெல்லாம் முக்கியக் காரணம் அடுத்தடுத்து நாக்குக்குச் சுவை ஆசையால் வயிற்றை நிரப்புவதே ஆகும். ஆக உணவுக்கட்டுப்பாடு, நோய்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் என நாமக்கல் கவிஞர் எடுத்தியம்புகின்றார் (இராமலிங்கனார்.வே., 2004, 502).

அதோடுமட்டுமல்லாமல், மனிதர்கள் பின்பற்றக்கூடாத உணவுமுறையையும் தமது திருக்குறளின் மூலம் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இதனை,

*மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துண்ணின்*
*ஊறுபாடு இல்லை உயிர்க்கு .*

**(திருக்குறள் : 945)**

எனும் குறளின் வழி அறிய முடிகின்றது. தமது உடலுக்குப் பொருந்தக்கூடிய உணவை இச்சை மிகுந்து அளவுக்கு மீறி உண்ணாமல், ஜீரணமாகும் அளவிற்கு உட்கொண்டால் உயிருக்குப் பிணித்துன்பம் இல்லை. மாறாக, உடலுக்குப் பொருந்தாத உணவுகளை மனம் சென்ற போக்கில் சுவைக்க முனைந்தால் ‘ஒவ்வாமை’ எனும் துன்பக் கடலில் தத்தளிக்க நேரிடும் என வள்ளுவப் பெருமான் எச்சரிக்கை விடுக்கின்றார். இம்மாதிரியான உணவுமுறையை மனிதர்கள் கைவிட வேண்டும் என்பதை மறைமுகமாக எடுத்துரைக்கும் திருவள்ளுவர், உடலுக்கு நோய் ஏற்படுவதற்கு வித்தாக விளங்குவதே இவ்வாறான இயல்பால்தான் என இடித்துரைக்கின்றார்.

மேலும், மனிதனானவன் தமது பசியளவினை அறிந்தே தகுந்த நேரத்திற்கேற்ப உணவினைத் தேர்ந்தெடுத்துச் சாப்பிட வேண்டும் எனப் பொய்யாமொழிப் புலவர் வேண்டுகோள் விடுக்கின்றார். ஒரு நபரின் பசியளவு அறியாமல், அளவுக்கு அதிகமான உணவினைக் கட்டுப்பாடின்றி உட்கொள்வதால் பல்வகை நோய்களில் அகப்பட்டு அல்லல்படுவது உறுதி என்பதனை,

*தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்*
*நோயள வின்றிப் படும்.*

**(திருக்குறள் : 947)**

எனும் திருக்குறள் எடுத்தியம்புகின்றது. ஆகவே, உடல்நலம் காப்பதற்கு முதலில் மனக்கட்டுப்பாடு அவசியமாகின்றது.

ஆக, அளவுக்கு மீறி உண்ணுதல், உடலுக்கு ஒவ்வாத உணவுகளை உட்கொள்ளுதல், எளிதில் ஜீரணமாகாத உணவுகளை எடுத்துக்கொள்ளுதல், பசியளவு அறியாமல் உண்ணுதல், நேரம் தவறி சாப்பிடுதல் போன்ற உணவுமுறைகளைப் பின்பற்றாமல் முற்றிலும் கைவிடுதல் நன்மை பயக்கும் எனத் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார். இவற்றால் ஏற்படக்கூடிய பின்விளைவுகளையும் அவர் மேற்கண்ட குறட்பாக்களின் மூலம் உணர்த்துகின்றார். ஆகவே, நாவின் சுவைக்கு அடிமையாகி உடல்நலம் கெடுவதனால் மனநலமும் பாதிப்புற்றுப் பல துன்பங்களுக்கு மனிதன் ஆளாகின்றான். இதுவே, அடிமனநிலை உளவியல் கோட்பாடு வலியுறுத்தும் உண்மையாகும்.

**3.2 நனவுநிலை மனமும் உடல்நலத்தேற்றமும்**

சமுதாய நலனைக் காப்பதற்காக அடிநிலை மனம் செய்யக்கூடிய செயல்களைத் தவிர்த்துக், கட்டுப்படுத்துவது நனவுநிலை மனதின் தன்மையாகும். சரியான உணவுமுறை மரபுகளைப் பின்பற்றுவதும் பொதுநலமாகச் செயல்படுவதும் இவ்வகை மனத்தின் செயல்பாடுகளாகும். செரிமானம் கண்டபின் உண்ணுதல், பசிக்கும்போது உண்ணுதல், உடலுக்குப் பொருந்தாத உணவுகளைத் தவிர்த்தல் போன்றவை பழந்தமிழர்கள் மேற்கொண்டு வந்த உணவுமுறை மரபுகளாகும். மனிதர்கள் இதனைச் சரிவரக் கடைப்பிடித்து வருவதே சாலச் சிறந்தது எனத் திருவள்ளுவர்,

***அற்றது அறிந்து கடைப்பிடித்து மாறல்ல***
***துய்க்க துவரப் பசித்து.***

**(திருக்குறள் : 944)**

எனும் திருக்குறளின் மூலம் அறிவுறுத்துகின்றார். இதற்கு முன் உண்ட உணவானது ஜீரணமானதை அறிதல், உடலுக்கு ஒவ்வாத உணவுகளை விலக்குதல், பசி எடுத்த பின்னரே தகுந்த நேரத்தில் உண்ணுதல் போன்ற உணவுமுறைகளைப் பின்பற்றுதல் நலம் தரும். இதன் வழி திருவள்ளுவர், பசியைப் போக்குவதற்கு உணவினை உட்கொள்ள வேண்டுமே தவிர, ஆசையைப் பூர்த்தி செய்ய உணவு உட்கொள்ளுதல் கூடாது என உணவுமுறையினை வரையறை செய்கின்றார்.

அதோடு, தன் தேவையை அறிந்து அளவுக்கு மீறாமல் தேவையானவற்றை மட்டும் உண்ணும் ஒருவருக்கு கிடைக்கும் இன்பமானது நீங்காமல் நிலைத்து இருக்கும். அதே வேளையில், இதற்கு முன் உண்ட உணவானது ஜீரணமாகாமலும் அவ்வாறு உள்ளதைக் கவனிக்காமலும் மென்மேலும் அளவுக்கு அதிகமாக உண்பவனது உடலில் நோய்களும் நிலைத்து பெருந்துன்பத்தை ஏற்படுத்தும் என்பதனை,

***இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்***
***கழிபேர் இரையான்கண் நோய் .***

**(திருக்குறள் : 946)**

எனும் திருக்குறள் சான்று பகர்கின்றது. நாக்கின் ருசிக்கு அடிமையாகி, இரைக்கருவிகளின் சக்திக்கு மீறிய அளவுக்கு உண்பதினாலேயே நோய்கள் ஏற்படுகின்றன. ஆதலால், ஆசைக்கேற்ப அதிகமாக உண்ணாமல், தமது உடலுக்கும் உயிருக்கும் ஏற்ற அளவில் உணவினைச் சுவைக்க வேண்டும் எனத் திருவள்ளுவர் விவரிக்கின்றார்.

தம் உடல் அளவுக்கு ஏற்ப உண்ணுதல், பசியறிந்து உண்ணுதல், ஒவ்வாத உணவு வகைகளை உட்கொள்ளாமை, எளிதில் ஜீரணமாகக் கூடிய உணவுகளை உண்ணுதல் போன்றவற்றை மனிதர்கள் அவசியம் கடைப்பிடிக்க வேண்டும். இவ்வாறான உணவுமுறைகளைப் பின்பற்றும் ஒருவருக்கு ஏற்படும் இன்பமானது நிலைத்திருந்து உடல்நலத் தேற்றத்திற்குத் துணைபுரியும். அவ்வாறு செய்யத் தவறுபவர்களிடம் நோய்களே நிலைத்திருந்து உடல்நலத்திற்குப் பங்கம் விளைவிக்கும் என்பது திருவள்ளுவரின் வாக்காகும். இதுவே நனவுநிலை மனத்தின் விளைவை உணர்த்தும் உளவியல் சிந்தனையாகும்.

### 3.3 மேனிலை மனமும் உடல்நலவளமும்

மேனிலை மனநிலையில் இருக்கும் ஒருவர் உயர்ந்த பண்புகளைக் கடைப்பிடித்து இவ்வுலகில் வாழ வேண்டிய அறநெறிகளைத் தவறாமல் பின்பற்றி, சிறந்த உடல்நலத்தோடு வாழ்ந்து வருவர். இதனால், எந்தவொரு நோய்நொடியும் ஏற்படாமல் தம் உடல்நலத்தைக் காத்திட முடியும். இவ்வாறான மனிதர்களுக்கு மருந்து என்ற ஒன்றே தேவைப்படாது. 'மருந்தே உணவு; உணவே மருந்து' எனும் கோட்பாட்டின் அடிப்படையில் இந்நிலை மாந்தர்கள் செயல்படுவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனையே வள்ளுவப் பெருமான்,

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின் .*

**(திருக்குறள் : 942)**

எனப் பகர்ந்துள்ளார். இதற்கு முன் உண்ட உணவானது செரிமானம் ஆனதை அறிந்த பின்னரே அதற்கேற்ப தக்க உணவுகளை உட்கொள்வதால் மனித உடலுக்கு 'மருந்து' எனும் எதுவுமே வேண்டாம் எனத் திருவள்ளுவர் விவரிக்கின்றார்.

மேலும், இப்பூவுலகில் பன்னெடுங்காலம் திடமாக வாழ விரும்பும் ஒருவர் உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்து தன் உடலுக்கேற்ற உணவினைக் கால அளவோடு உண்ண வேண்டும் எனத் திருவள்ளுவர் விளக்குகின்றார். இதனை,

*அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு*
*பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு .*

**(திருக்குறள் : 943)**

எனும் குறளின் மூலம் தெளிவாக அறிய முடிகின்றது. ஒருமுறை உண்டதற்கும் மறுமுறை உண்பதற்கும் இடையில் இருக்க வேண்டிய கால அளவினை அறிந்து உண்டால், கிடைத்தற்கரிய இந்த மானிட உடம்பின் பயனை நெடுங்காலம் அனுபவிக்கலாம். ஆக, நோயின்றி வாழவும் நீண்ட ஆயுள் பெறவும் உணவுக்கட்டுப்பாடு முக்கியமாகின்றது.

அதோடுமட்டுமல்லாமல், ஒருவர் தமக்கு ஏற்பட்டுள்ள நோய்களின் அறிகுறிகளை அறிந்து, அவை ஏற்பட்டதற்கான காரணங்களையும் அறிந்தால் மட்டுமே அதற்குத் தீர்வு காண முடியும். மேலும், அந்நோயைத் தீர்க்க வல்ல இடத்தை (மருத்துவரை) நாடி, செய்ய வேண்டிய முறையில் (மருத்துவம்) செய்ய வேண்டும். இதனை,

***நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல் .***

**(திருக்குறள் : 948)**

எனும் குறட்பாவின் மூலம் திருவள்ளுவ நாயனார் விவரிக்கின்றார். நோய்களின் அறிகுறிகளையும் அதன் காரணங்களையும் அறியாமல் செய்யும் மருத்துவம் வீண் என வள்ளுவப் பெருந்தகை தெளிவாகக் கூறுகின்றார்.

வாழ்வில் மிகச் சிறந்த பண்புகளைக் கடைப்பிடிக்கும் மேனிலை மனத்தின் மாந்தர்கள் உணவினை அளவோடு உட்கொள்வர்; முன் உண்ட உணவுகள் செரித்த பின்னரே உண்ணுவர். நோய் ஏற்படாமல் உடல்நலத்தைப் பாதுகாப்பதால் இவர்களுக்கு மருந்தே தேவைப்படாது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' எனும் முதுமொழிக்கேற்ப உடல்நலத்தோடு வாழ்வதே வாழ்க்கையில் ஒருவருக்குக் கிடைத்த பெரும் பேறாகும் (இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான விளக்கவுரை, 2016, 49). ஆகவே, உடல்நலத்திற்கு முன்னுரிமை அளித்திட சரியான உணவுமுறையினைக் கையாள்வதே சிறப்பாகும். இதுவே, மேனிலை மனத்தின் உளவியல் கோட்பாட்டினைப் பறைசாற்றுகின்றது.

**4.0. முடிவுரை**

உடல்நலமே மனித வாழ்வின் அடித்தளமாக இருந்து அன்றாடச் செயல்பாடுகளை மேற்கொள்ளத் துணைபுரிகின்றது. 'அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது' எனும் ஔவையாரின் வாக்குக்கேற்ப கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியில் உயிர் குடிகொண்டுள்ள உடல்நலத்தைப் பாதுகாக்க வேண்டியது தனிமனிதனின் ஒழுக்கமாகும். உடல்நலத்தைப் பேணுவதற்குச் சரியான உணவுமுறையும் அவசியமாகின்றதால், உடலுக்கு நலத்தைத் தருகின்ற உணவுகளைத் தேர்ந்தெடுத்து விருப்பத்துடன் உண்ண வேண்டும் எனப் பாரதியார் 'ஊண்மிக விரும்பு' என்ற தமது புதிய ஆத்திசூடியின் மூலம்

அறைகூவல் விடுக்கின்றார் (மேற்படி, 31). திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ள உணவுமுறையை ஒவ்வொரு மனிதனும் தவறாமல் கடைப்பிடித்து வந்தால், நோயில்லாப் பெருவாழ்வாகிய இன்பத்தைத் துய்த்திட முடியும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

**துணைநூல் பட்டியல்**

அசோக்குமார்.A.S.Dr. எட்டாம் பதிப்பு. (2013). *ஆரோக்கிய வாழ்வுக்கு வழிகாட்டும் யோகாசனங்கள்.* சென்னை : யோகா புக்ஸ் பப்ளிகேஷன்.

இராசமாணிக்கம்.மு.டாக்டர். (1974). *உளவியல் துறைகள் (இரண்டாம் தொகுதி).* சென்னை : தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

இளங்கோ.சு. (2015.) *தமிழ் உளவியல் திறனாய்வு : தோற்றமும் வளர்ச்சியும் - ஒரு வரலாற்று நோக்கு.* நியூ டெல்லி : பஹதூர் ஸாசாபர் மார்க்.

கலாநிதி.ஐ.எல்.எம்.மாஹிர். (2015). *உளவியலின் அடிப்படைப் பிரச்சினைகள்.* இலங்கை : வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் மற்றும் தொழில்சார் கற்கைகளுக்கான நிலையம், இலங்கை தென்கிழக்கும் பல்கலைக்கழகம்.

கார்த்திகா.கு. (2017). *உளவியல் நோக்கில் திருக்குறள்.* சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், 1(2), 184-190.

சங்கப்புலவர்கள். (2021). *திருவள்ளுவமாலை.* மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்புத்திட்டம்.

நாகராஜன்.கி. (2009). *கற்றல் மனித வளர்ச்சி தொடர்பான உளவியல்.* சென்னை : இராம் பதிப்பகம்.

இராமலிங்கனார்.வே. (2004). *திருக்குறள் நாமக்கல் கவிஞர் உரை.* சென்னை : பூம்புகார் பதிப்பகம்

வேதாத்திரி மகரிஷி. (2011). *வாழ்க வளமுடன்.* சென்னை : விகடன் பிரசுரம்.

ஜகந்நாதன்.கி.வா. (2014). *திருக்குறள் (ஆராய்ச்சிப் பதிப்பு).* கோயம்புத்தூர் : ராமகிருஷ்ண மிஷன் வித்யாலயம்.

(2022). *ஆரோக்கியமான வாழ்க்கை முறை மற்றும் உளவியல்.* 18 மே 2022-ஆம் நாள் https://dinelli.ru/ta/manikyur/referat-zdorovyi-obraz-zhizni-i-psihologiya-psihologiya-zdorovya---nauka.html எனும் வலைத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டது.

*இலக்கணம், செய்யுள், மொழியணிக்கான விளக்கவுரை (தமிழ்ப்பள்ளி).* (2016). புத்ராஜெயா : கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு.

(1978). *உளவியல் (மேல் நிலை - முதலாம் ஆண்டு).* சென்னை : தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# ஃப்ராய்டிய நோக்கில் சங்கப்புலவர் பொன்முடியார் பாடல்கள்

72

**பொருநை க.மாரியப்பன், உதவிப்பேராசிரியர்,**

**தமிழ் மொழி மற்றும் மொழிபெயர்ப்பியல் துறை,**

**திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம்,**

**சித்தூர் மாவட்டம், ஆந்திரப்பிரதேசம்.**

**ஆய்வுச் சுருக்கம்**

சிக்மண்ட் ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வு நோக்கில் சங்கப்புலவர் பொன்முடியார் பாடல்களில் அகம் மற்றும் புற அமைப்பின்கண் மட்டும் காணும் போக்கில் இருந்து உளப்பகுப்பாய்வின் வழி நனவிலியில் அமுக்கப்பட்ட ஆண்மைச் சிக்கல் (Masculinity Complex), இடிப்பஸ் மனஉணர்வு (Oedipus Complex), முதலியவற்றை வெளிக் கொணர்வது நோக்கமாகக் கொண்டது.

**முன்னுரை**

இலக்கியம் என்பது மனித மனத்தின் அவசானம் என்பார் ஜெயகாந்தன். தமிழ் மொழிக்கென்று செவ்வியல் தன்மைப் பெறுவதற்கு முதன்மைக் காரணியாகவும் தொல் தமிழ்ச் சமூக மக்களின் வாழ்வு முதல் மனப்பதிவு வரை அனைத்திற்கும் கருவூலமாகவும் விளங்குவது சங்க இலக்கியம். இதில் அகம், புறம் இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு அதில் முறையே காதல், வீரம் என்ற விவரணைகள் தமிழ் கூறு நல்லுலகம் அறிந்ததே. சங்கப்பாக்கள் காலநிலைக்கு ஏற்ப உணர்ந்து கொண்ட பொருளையும், அதனைப் பிறர் புரிந்து கொள்ளும் வகையிலும், தற்கால மொழிநடையில் உள்வாங்கிக் கொள்வதற்கு உரைகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. இலக்கியங்கள் வெறும் நிகழ்வையோ, வருணனைகளையோ, வாழ்வியலையோ, கற்பனைகளையோ மட்டும் விட்டுச் செல்வது அல்ல. மாறாக படைப்பாளியின் பகற்கனவின் வழி பண்பாட்டுப் போர்வையினுள் வெளிப்படும் நனவிலியின் வெளிப்பாடு இதனைக் கண்டுபிடித்தவர் இருபதாம் நூற்றாண்டு ஜெர்மானிய உளப்பகுப்பாய்வு மேதை சிக்மண்ட் ஃப்ராய்டு. அவர் கூறுவது,

**என்னைப் பொறுத்த வரை கவிஞர்களும் தத்துவவாதிகளும் தான் மனிதனின் நனவிலி மனத்தைக் கண்டுபிடித்துக் கூறினார்கள். நானோ அம்மனத்தை ஆராய்வதற்கானஅறிவியல் பூர்வமான முறையியலைத் தான் கண்டுபிடித்தேன்**

என்பார். இவர் கூற்றின் படி நனவிலி என்பது கடலுக்கு அடியில் மறைந்திருக்கும் பெரிய பனிப்பாறையைப் போன்றது. அது இருளான பகுதி பண்பாட்டு மனமான நனவு. நனவடங்கு இவற்றால் அமுக்கப்பட்டது அப்படி இருந்தும் சில நேரங்களில் வெளிப்படும். அது தூக்கத்தில் கனவாக, விழிப்பின் போது கலை,

இலக்கியம், ஓவியம் இவற்றின் வழியே வெளிப்படும். ஃப்ராய்டின் உளப்பகுப்பாய்வு கோட்பாடுகளைக் கொண்டு இலக்கியத்தில் பொருத்தி அது ஆய்வாகவும் வெளிவந்துள்ளது. அந்த வகையில் சங்கச் செய்யுளில் புறநானூற்றில் பொன்முடியார் பாடல்களில் ஃப்ராய்டிய உளப்பகுப்பாய்வு வழி காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பொன்முடியார்**

நாற்பத்தோரு சங்கப் பெண்பாற்புலவர்கள் நூற்றுஎண்பத்தொன்று சங்கப்பாக்களைத் தந்துள்ளனர். அதில் நூற்று முப்பத்தொன்று அகப்பாடல்களும், ஐம்பது புறப்பாடல்களும் உள்ளன. நாற்பத்தொன்று பெண் புலவர்களுள் ஒருவர் பொன்முடியார். இவர் சேர நாட்டைச் சார்ந்தவர். இவர் மூன்று பாடல்களைப் பாடியுள்ளார். இவை மூன்றும் புறப்பொருள் சார்ந்தவை. இவை முறையே புறநானூற்றில் 299, 310, 312 ஆகிய பாக்களாக அமைந்திருக்கிறது.

**மூன்று பாடல்கள்**

**பாடல் 1**

**பருத்தி வேலிச் சீறூர் மன்னன்**
**உழுத்து அதர் உண்ட ஓய் நடைப் புரவி,**
**கடல் மண்டு தோணியின், படை முகம் போழ**
**நெய்மிதி அருந்திய, கொய் சுவல் எருத்தின்,**
**தண்ணடை மன்னர், தாருடைப் புரவி,**
**அணங்குடை முருகன் கோட்டத்துக்**
**கலம் தொடா மகளிரின், இகந்து நின்றவ்வே. (புறம் 299)**

**திணை:** நொச்சி, துறை: குதிரை மறம், பொன்முடியார் பாடியது

**இதன் பொருள்**: இரண்டு சிற்றூர் மன்னர்களுக்கு இடையே போர். இருவரும் குதிரைமீது வந்து போரிட்டனர். ஒருவன் பருத்திச்செடி வேலியாக விளங்கும் சீறூர் மன்னன். அவன் குதிரை, உழுந்துச் சக்கையை உண்டு வளர்ந்தது. மற்றொருவன் தண்ணடை (நன்செய்நிலம்) அரசன். மருதநில அரசன். இவன் குதிரை நெய் ஊற்றி மிதித்த சோற்றினைத் தின்று வளர்ந்தது. இது பிடரி மயிர் கத்திரிக்கப்பட்டு அழகிய தோற்றம் கொண்டது. மாலையிட்டு அழகு செய்யப்பட்டது.

உழுந்து சக்கையைத் தின்ற குதிரை போரிடுவோரை விலக்கிக் கொண்டு பாய்ந்தது. நெய்ச்சோறு தின்ற குதிரை அந்தக் குதிரைப் பக்கம் செல்லாமல் ஒதுங்கி நின்றது. குதிரைமீது வந்த மன்னர்கள் இவ்வாறு போரிட்டனர். குதிரை எப்படி ஒதுங்கி நின்றது, மாதவிடாய்க் காலத்தில் சமையல் செய்யாமல்

ஓய்ந்திருக்கும் மகளிர் முருகன் கோயிலுக்குள் நுழையாமல் அதன் வெளிப்புறம் நின்று வழிபடுவது போல நெய்ச்சோறு தின்ற குதிரை ஒதுங்கி நின்றது.

**பாடல் 2**

**பால் கொண்டு மடுப்பவும் உண்ணான் ஆகலின்**
**செறாஅது ஓச்சிய சிறு கோல் அஞ்சியொடு,**
**உயவொடு வருந்தும் மன்னே! இனியே**
**புகர் நிறம் கொண்ட களிறு அட்டு ஆனான்,**
**முன்நாள் வீழ்ந்த உரவோர் மகனே,**
**உன்னிலன் என்னும், புண் ஒன்று அம்பு**
**மான் உளை அன்ன குடுமித்**
**தோல் மிசைக் கிடந்த புல் அணலோனே (புறம் 310)**

**திணை** : தும்பை துறை: நூழிலாட்டு பொன்முடியார் பாடியது.

**இதன் பொருள்:**

அன்றும் இன்றும் அஞ்சியின் (அஞ்சி - ஒரு குறுநில மன்னன் பெயர்) தாய்க்கு வருத்தம். வெவ்வேறு வருத்தம்.

**நொந்த வருத்தம்**

அன்று கிண்ணத்தில் பால் ஊட்டினாள். அஞ்சி அதனை உண்ண மறுத்தான். அவளுக்கு அப்போது சினம் வரவில்லை. என்றாலும் கையில் கோலை வைத்துக்கொண்டு அவனை அடித்தாள். அப்போது உயவெ(அசந்துபோய்) வருந்தினாள்.

**இன்ப வருத்தம்**

இப்போதும் வருந்துகிறாள். அன்றைக்கு முதல்நாள் அவளது கணவன் போரில் வீழ்ந்தான். அதனை அவன் மகன் உன்னிலன் (நினைத்துப் பார்க்கவில்லை). அன்று போர்களம் சென்றான். பகைமன்னன் பட்டது யானையை வீழ்த்தினான். பகைவனின் அம்பு புண்ணில் தைத்திருக்கும் நிலையில் தன் கையிலிருந்த கேடயத்தின் மேல் விழுந்துகிடக்கிறான். இளந்தாடி அரும்பும் பருவத்தன் அவன். இது கண்ட தாய்க்கு இன்ப வருத்தம்.

**பாடல் 3**

**ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே;**

**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே;**

**நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே,**

**ஒளிறு வாள் அருஞ் சமம் முருக்கி,**

**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. (புறம் 312)**

திணை: வாகை துறை: மூதின்முல்லை பொன்முடியார் பாடியது

**இதன் பொருள்:**

யார் யார் என்னென்ன கடமைகளைச் செய்யவேண்டும் என்று மகனைப் பெற்ற தாய் ஒருத்தி கூறுகிறாள்.

மகனைப் பெற்றுப் பேணிக் காத்தல் என் தலையாய கடமை, மகனைப் படிக்கவைத்துச் சான்றோனாக விளங்கச் செய்தல் அவன் தந்தையின் கடமை. போர் புரிய வேலை வடித்துக் கொடுத்தல் ஊர்க் கொல்லனின் கடமை. நன்னடத்தை உள்ளவனாக விளங்கச் செய்தல் வேந்தனின் கடமை. வாளைச் சுழற்றிப் போர்க்களத்தில் பகைவேந்தன் யானையை வீழ்த்திவிட்டு வெற்றியுடன் திரும்புதல் மகனாகிய காளையின் கடமை.

மேற்காணும் மூன்று பாடல்களிலும் ஃப்ராய்டிய அணுகுமுறையில் பொதுவான சிக்கலாக விளங்குவது ஆண்மைச் சிக்கல் (Masculinity Complex).

**அரங்க. நலங்கிள்ளி கருத்து**

"ஆண்மை சிக்கல் என்பது ஆண்குறி ஏக்கம், ஆண்குறிப் பொறாமையாக உருப்பெற்று வக்கிர உணர்வை அடைகின்ற மனநிலையை குறிக்கின்றது. இந்நிலையில் பெண் தன்னை ஆணாகக் கருதித் கொள்கிற மனோநிலையும், ஆண்மைப் பண்புடைய நடத்தைகளும் பெண்ணிடம் உண்டாகின்றன. இத்தகு பெண்ணை ஆளுமைப் பெண் (Active Women) எனலாம். இத்தகு ஆளுமைப் பெண் பண்பில் மென்மை, தன்மை, தாய்மை, இரக்கம், பிறர்நலம் போன்றவற்றுக்கு மாறாக வீரம், கோபம், பழிக்குப்பழி, அதிகாரம் போன்ற ஆண்மைப் பண்புகள் உருவாகிவிடுகின்றன. இவ்வாறு பெண் ஆண்மைப் பண்புடையவளாக விளங்குவதைத் தான் ஆண்மைச் சிக்கல்"1 என்கிறார். இதன்படி ஆண்மைத் தன்மை வெளிப்படுவதை பொன்முடியாரின் மூன்று பாடல்களிலும் காணப்படுகிறது.

**ஒப்பீடு**

பொன்முடியாரின் 299ஆம் பாடல், புறநானூற்றின் ஔவையாரின் 95ஆம் பாடல், தொண்டைமானிடம் தூது சென்ற பாடலுடன் ஒப்பிடப்படுகின்றது.

**இவ்வே, பீலி அணிந்து, மாலை சூட்டி,**
**கண் திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து,**
**கடியுடை வியல் நகரவ்வே; அவ்வே,**
**பகைவர்க் குத்தி, கோடு, நுதி, சிதைந்து,**
**கொல் துறைக் குற்றில மாதோ என்றும்**
**உண்டாயின் பதம் கொடுத்து,**
**இல்லாயின் உடன் உண்ணும்,**
**இல்லோர் ஒக்கல் தலைவன்,**
**அண்ணல் எம் கோமான், வைந் நுதி வேலே.** (புறம்.95)

திணை: பாடாண்திணை துறை: வாள்மங்கலம் பாடியது: ஔவையார்

**இதன் பொருள்:**

ஔவையார் தொண்டைமானிடம் சொல்கிறார். இங்கு உன் போர்ப்படைக் கருவிகள், பாதுகாப்பாகப் படைக்கொட்டிலில் மயில்பீலி அணிவித்து, மாலை சூட்டப்பெற்று, கூர்முனை திருத்தம் செய்யப்பட்டு, அதில் துருப் பிடிக்காமல் இருக்க நெய் பூசப்பட்டு, அழகாக வைக்கப்பட்டுள்ளன. அங்கு, என் தலைவன் அதியமான் பயன்படுத்திய வேல்கள், பகைவரைக் குத்தி, நுனி ஒடிந்தும், மழுங்கியும் சிதைந்து, செப்பம் செய்வதற்காகக் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன. உன்னிடம் படை இருக்கிறது. வீரர்களின் பயிற்சி இல்லை. என் தலைவனிடம் பயிற்சி பெற்ற வீரர்கள் மிகுதி. என் தலைவன் பொருள் இல்லாதவர்களுக்கு உறவுக்காரன். தன்னிடம் பொருள் இருக்கும்போது, அதன் பயனைப் பிறருக்குக் கொடுத்துவிடுவான். தன்னிடம் இல்லாதபோது அவர்களோடு பங்கிட்டுக்கொண்டு உண்பான். மக்களுக்கும் அவனுக்கும் நெருங்கிய உறவு. போர் என்றால் அவனைவிட அவன் மக்கள் முன்வந்து நிற்பர்.

**புறம் - 299**

| | | |
|---|---|---|
| 1.சிற்றரசன் | x | மருதநில மன்னன் |
| 2.உழுத்தின் சக்கைத் | | நெய்பெய்து தின்று |
| வளர்ந்த தளர்ந்த | x | மிதித்தமைத்து உணவு |
| குதிரை | | வளர்ந்த குதிரை |
| 3.போர்க் களத்தில் | | அணங்குடை முருகன் |
| குதிரைகள் கடல்நீரைப் | | கோட்டத்தில் |
| பிளந்துச் செல்வது | | விலக்குடை மகளிரைப் |
| போன்று போர்க்களத்தைக் போன்று | | |
| கிழித்துச் செல்லுதல் | x | போர்க்களத்தில் |
| | | குதிரை அஞ்சி |
| | | ஒதுங்கி நின்றது |

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

புறம்-95

| | | |
|---|---|---|
| 1.அதியன் | x | தொண்டைமான |
| 2.பகைவர்களைக் குத்தி கோடு நுதி சிதைந்த வேல் | | நெய்யணிந்த பளபளப்பு நினைந்த வேல் |
| 3. முனை உடைந்து முனை ஆற்றல் சார் வேல் | x | உடையாத ஆற்றலற்ற வேல் |

மேல் அட்டவனைப்படி எப்படி ஔவையார், தொண்டைமானிடம் தூது சென்ற பாடலில் வேல், ஆண்குறி ஆயிற்றோ, பொன்முடியார் பாடலில் குதிரை ஆண் குறி ஆயிற்று. ஆண்மைச் சிக்கல் குறித்தான விளக்கத்தில் உள்ளபடி மென்மை முதலாகிய தன்மையை விடுத்து, வீரம், கோபம் முதலான பண்புகள் வெளிப்படுவதன் மூலம் நம்மால் அறியமுடிகின்றது.

**அணங்குடை முருகன் கோட்டத்துக்**
**கலம் தொடா மகளிரின், இகந்து நின்றவ்வே**

என்பதில் முருகன் குறிஞ்சி நிலத் தெய்வம் (அ) தலைவன் என்ற அடிப்படையில் காணும் போது முருகன் ஸ்ரீ தந்தை என்பது, கலம் தொடாமகளிர் என்பது காயடிப்புச் சிக்கலுக்கு உண்டான மகன் என்ற கோணத்திலும் எடுத்துக் கொள்ளலாம்.

மேலும், திணைப் பகுப்பில் நொச்சித் திணையைத் தழுவிய பாடல் என்னும் போது, நொச்சித் திணைக் காணும்போது மதிலை முற்றுகையிட்ட பகையரசனை உள்ளே வரவிடாமல் இருப்பது மதில் காத்தல் "எயில் காத்தல் நொச்சி' என்பது நாடு, நிலம் முதலியவை தாயின் குறியீடாகவும், அதைக் காத்தல் அதற்குப் போராடுவது மகன் என்ற முறையிலும் இதனை இடிப்பஸ் சிக்கலுக்கு (Oedipus Complex) உள்ளாக்கப்பட்டது என்பதைக் காணமுடிகிறது.

"பெண் இயற்கையிலேயே இருபால் மனத்தவளாக இருப்பதாலும் பெண்ணிடம் ஆண்மைச் சிக்கல் என்னும் பண்புருவாக்கம் தோன்ற முடிகிறது"2 என்பது குறிப்பிடத்தக்கது. இதன் அடிப்படையில் இருபால் மனத்தில் ஆண் என்ற முறையில் வெளிப்படுத்திக் கொண்டுள்ளமை அறியமுடிகிறது. "ஆண்மைச் சிக்கல் நடத்தைகளுக்கெல்லாம் நனவிலி மனம் தூண்டுகோலாக இருப்பது அன்னோரின் காயடிப்புச் சிக்கல் உணர்ச்சி எனலாம்"3

இந்த இடத்தில் ஆண்குறியைப் பழித்தும் புகழ்ந்தும் பேசுவது என்பது 'பெண்மகளின் நனவிலியில் குறி உணர்வு பருவத்தில் தோற்றம் கொண்ட ஆண் குறி இழப்புணர்வும், அது தனக்கு இல்லாததால் ஏற்பட்ட ஆண்குறிப் பொறாமையுணர்ச்சியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றன"4 என்ற ஃப்ராய்டியச் சிந்தனையும் இணைந்து காணமுடிகிறது.

மேலும் 310ஆம் பாடலில் காணும்போது, அஞ்சி தன் மகன், பால் அருந்தாமைக் காரணமாகச் சிறுகோல் ஓச்சியதால், மகன் இவன் மெலிவுற்று வருந்தியதை இடிப்பஸ் சிக்கலினோடும் பின் யானைகளைக் கொன்று சினம் அடங்காதவனாய், தன் புண்ணில் பொருந்திய அம்பினை யான் கண்டிலன் என்பது சாவிச்சை உணர்வின் வெளிப்பாட்டின் காரணமாகவும் திணை, துறைக் காணும் போது தும்பை, நூழிலாட்டு. தும்பை மைந்து காரணமாக நிகழ்த்தப் பெறுவது.

"சாவிச்சை உணர்வு எனக்கருதும் அதே நேரத்தில் தன் மைந்து மீதான எல்லையற்ற நம்பிக்கை"5 'தன்னிலை மனம் (Egoistic) சார்ந்த நனவிலி மனக் காரணத்தோடும் தொடர்புடையதாக இருக்க வேண்டும் எனக் கணிக்க இடமுள்ளது'6 இதன் அடிப்படையிலேயே தன்னை மகன் என்ற முறை வைத்துக் கொண்டு, நனவிலி மன உளச்சிக்கலை வெளிப்படுத்தியுள்ளார் என்று எடுத்துக்கொள்ளலாம்.

312ஆம் பாடலின் கண்ணும் ஆண்மைச் சிக்கல் வெளிப்படுவதையும் காணமுடிகிறது. இவ்வாறாக பொன்முடியார் பாடலில் மேலே வேறு பொருளையும் உளப்பகுப்பாய்வின் வழி நோக்கும்போது வேறு பொருளையும் தருவதை நாம் அறியலாம்.

**முடிவுரை**

உளப்பகுப்பாய்வுக் கோட்பாட்டு அடிப்படையில், பொன்முடியாரின் பாடல்கள் மூன்றையும் நோக்கும் பொழுது, நமக்கு மேல் கூறப்பட்ட கருத்துப்புலப்பாட்டுப்படி பாடல்களை அணுக முடிகிறது. பொன்முடியார் பெண் புலவர் என்பதினாலும் பெண்ணின் மன நிலையில் நாம் இப்பாடல்களைக் காணுவதற்கும் உளவியலைப் பொருத்திப்பார்ப்பதற்கும் காரணமாக அமைகிறது என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. அரங்க.நலங்கிள்ளி, சங்க இலக்கியம்: ஒரு ஃப்ராய்டிய வாசிப்பு,
2. மேலது,
3. மேலது
4. மேலது
5. மேலது
6. மேலது

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

73

# சங்க இலக்கியங்களில் மருதநில மகளிரின் உளப்பாங்கு

**முனைவர் தி. கமலி, நெறியாளர், மேனாள் பேராசிரியர் மற்றும் தமிழியல் துறைத்தலைவர்,**

**சு.உமா முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல் துறை,**
**அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம்**
**கொடைக்கானல்-624101, தமிழ்நாடு,**

**ஆய்வுச்சுருக்கம்**

தலைவன் தலைவியர் அன்பின் திறத்தை குறுந்தொகை மருதப் பாடலில் காணமுடிகின்றது. இப்பாடலில் தலைவி தலைவனின் அன்பின் திறத்தை காணமுடிகின்றது. இப்பாடலில் தலைவியின் மாற்றம் அவளின் இளமை காலத்தில் வேப்பங்காய் பின் கட்டியாக உணரப்படுகின்றது. தலைவியின் முதுமைக் காலத்தில் அவன் தலைவியிடம் காட்டும் அன்பு சுனை நீருக்கு ஒப்ப உணரப்படுகின்றது.

ஓரம்போகியாரின் குறுந்தொகை பாடல் மருதத்தலைவியின் இல்வாழ்க்கை நுட்பத்தை புலப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது. தலைவனின் பரத்தமை செயலைக் கண்டு நிகழாமல் அவனை ஏற்றுக்கொண்ட தலைவியின் செயல் அவள் அந்த முதிர்ந்த மனப்பக்குவத்தை பெறுவதற்கு அவள் அடைந்த தாய்மைப்பேறு காரணம் என்கின்றது. கிளிமங்கலம் கிழார் பாடிய குறுந்தொகையின் மருதப் பாடலில் தலைவியின் பொரை உணர்வும், குடும்ப கடமையும் பேசப்படுகின்றன. காமநுகர்ச்சி ஒன்று மட்டும் வாழ்வின் நோக்கமானது. மனைவியரின் பொறை உணர்வும், இல்லறம் காக்கும் கடமையுணர்வுமே மருத நிலத்தில் குடும்பத்தைக் கட்டிக்காப்பதை அறியமுடிகிறது.

இனியன செய்தலை கணவன் இயல்பாக இருக்க வேண்டும் என அள்ளூர் நன்முல்லையார் பாடிய குறுந்தொகை மருதப் பாடல் ஒன்று எடுத்துரைப்பது சிந்தனைக்குரியதாகும்.

தமிழர் தம் பண்பாட்டு வாழ்க்கை மரபுகளுள் விருந்து பேணுதல் சிறப்புடையது. மருதநிலத் தலைவன் விருந்தினரையும், தன் மகனையும் வாயில்களாகக் கொண்டு தலைவியின் ஊடலைத் தணிவிக்கின்றான். மருதநிலத் தலைவனின் வாழ்க்கை முறையிலும் பண்பாட்டிலும் பரத்தையின் ஆதிக்கமும் ஊடுருவலும் மிகுதியாகக் காணப்படுகிறன.

**முன்னுரை**

சமுதாயத்தின் உண்மையான ஏற்றம் அம்மக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது. சங்ககாலத் தமிழக மக்களின் வாழ்க்கை முறை என்பது அகம், புறம் என்று இரண்டு கூறுகளாகச் சொல்லப்பட்டுள்ளது. அகம் என்பது காதல் கடிமண வாழ்க்கையைச் சுட்டுகிறது. புறம் என்பது காதலினைத் தவிர மற்ற நிகழ்வினைக் குறிக்கிறது. இவ்விரண்டு வாழ்க்கையும் பண்பாட்டுடன் அமைவது தான் வாழ்க்கையியல் ஆகும்.

**இல்வாழ்க்கை**

ஆணும் பெண்ணும் விருப்பப்பட்டு ஏற்றுக்கொள்ளும் இல்லற வாழ்க்கையில் இன்பம், துன்பம் எது நேர்ந்தாலும் இருவரும் சமமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் ஒன்றுபட்டு வாழும் வாழ்க்கை முறையும் அதனால் தோன்றும் உறவு முறையும் அறமாகும். 'அன்பினால் ஊக்கப் பெறுவதும் அறிவினால் அதுதான் வாழ்க்கை (கே.எஸ். லட்சுமணன், உலக தத்துவஞானிகளின் குரல்.ப.182) என்பார் காரல் மார்ச்சு. இல்லற வாழ்வில் மனைவிகளே அவர்களுக்கு அமைச்சர்கள் ஆவார்.

**"குடும்பம் என்பது சமூகத்தின் மூலக்கூறு குடும்பமே சமூகத்து வளர்ப்புப் பண்ணை நாற்றங்கால்",** (கில்பர்ட் பாஸ்கல், சமூகவியலில் அடிப்படை கோட்பாடுகள் (தமிழாக்கம்) ஜெ. நாராயணன்.ப.121) என்பார். கில்பர்ட் பாஸ்கல் குடும்பத்தைக் கட்டிக்காக்கும் பொறுப்பானது பெண்ணிடமே உள்ளது. பெண்ணின் கடமையுணர்வே ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாகும். 'மனிதர்களுக்கு இன்பம் வாழ்க்கையின் வெற்றி, ஆக்கம் ஆகியன ஆக்கப்படுவதும் பெண்களால் அழிக்கப்படுவதும் பெண்களால் என்ற பொன்மொழி, பெண்ணை பலிக்கும் புன் மொழியாக பிற்காலத்தில் திரிந்து வேதனைக்குரியதாகும்." (தா. பாண்டியன், இயக்கத்தை இசைத்த புலவன் பட்டுக்கோட்டை.ப.87)

மருத்திணை பாடல்களில் மருத நில மக்களின் வாழ்க்கை சிறப்பித்துப் பேசப்படுகின்றது. பரத்தையிற் பிரிந்து வந்த தலைவன் வாயில் வேண்டிப் பெறாது தானே புக்கக் கூடியது கண்டு தோழி பாணனுக்கு கூறுவதாக பேயன் பாடிய மருத பாடலொன்று குறுந்தொகையில் இடம் பெற்றுள்ளது. அப்பாடலில் புதல்வனை தழுவித் தன் பக்கத்தில் இட்டுக் கட்டிலில் அமைந்த அழகிய சேர்க்கையில் தலைவி கிடக்கிறாள். ஆண்டு சென்ற தலைவன் தன் அன்புடைமைத் தோன்றத் தன் புதல்வனைத் தழுவினான். அந்நிலையில் அத்தலைவி அப்புதல்வனை அனைத்தபடியே அவனை கையினால் புறஞ்சேர அணைத்தனள். இருவர் அன்பின் விளைவாக புதல்வன் இருவருக்குமிடையே துயில்கின்றான். தலைவன் பரத்தையிற் பிரிந்த வலி தனிமையில் துயருற்று அவன் மனைவி தன் குழந்தையின் மெய்தீண்டி உறங்கும் இயல்பினையும் பாடலால் அறியமுடிகின்றது. கற்பு, காமம், நற்பால் ஒழுக்கம், பொறை, நிறை, விருந்து, புறந்தருதல், சுற்றம் ஓம்பல் முதலான தலைவியின் மாண்புகளில் காமம் என்ற மாண்பினை வாயில்கள் தலைவனுக்கு கூறியதாக இப்பாடலை இளம்பூரணர் தம் உரையில் எடுத்துக்காட்டியுள்ளார். ஒருவர் தாம் வேண்டிய பொருளை பெறாத வலி உயர்தல் உண்டு அவ்வுளவியல் உண்மை படியே தலைவனும் தலைவியும் பெறாத நிலையில் படுக்கையில் காமனுக்கு உயிர்தனன் அக்குறிப்பினை அறிந்த தலைவியும் காமம் கொண்டு தலைவன் செய்த பிழையை மறந்து புலத்தல் நீங்கி ஏற்றுக்கொள்கிறாள். இவ்வாறு அவர்களுடைய வாழ்க்கை அன்புடைய இல்வாழ்க்கையாக அமைந்து விடுகிறது. அக்குறுந்தொகை பாடல் வருமாறு

**“கண்டிசின் பாண! பண்பு உடைந்து அம்ம:**

**மாலை விரிந்த பசுவெண் நிலவின்**

**குறுங்காற் கட்டில் நறும் பூஞ் சேக்கை**

**பள்ளி யனையின் உயிர்ந்தவன் நசைஇ**

**புதல்வற் தழிஇயினன் விறலவள்**

**புதல்வன்தாய் அவன் புறம் கவைஇ யினளே”** (குறுந்தொகை.359:1-6)

பிரிவிடை ஆற்றாள் எனக் கவன்ற தோழிக்குத் தலைவி ‘ஆற்றுவேன்’ எனக் கூறுவதாக புலவர் மாமிலாடன் பாடிய மருத பாடலொன்று குறுந்தொகையில் இடம்பெற்றுள்ளது. தன்னைப் போன்றே பிரிவுத்துயரம் தலைவனுக்கும் உண்டு. ஆதலால் அவன் விரைந்து வருவான் என்று தலைவி காத்திருத்தல் இப்பாடலின் பொருளாகும்.

**ஆம்பற் பூவின் சாம்பல் அன்ன**

**கூம்பிய சிறகர் மனையுறை குரீஇ**

**மூன்றில் உணங்கல் மாந்தி மன்றத்து**

**எருவின் நுண்தாது குடைவன ஆடி,**

**இல்இறைப் பள்ளித்தம் பிள்ளையோடு வதியும்**

**புன்கண் மாலையும் புலம்பும்**

**இன்று கொல் தோழி, அவர் சென்ற நாடே?** (குறுந்தொகை.46:1-7))

என்பது அப்பாடலாகும். ஆம்பல் பூவின் வாடையைப் போன்ற குவிந்த சிறகுகளைக் கொண்ட வீட்டின் கண் தங்கும் குருவிகள் முற்றத்தில் உள்ள புழுக்களை உண்டு பொதுவிடத்தில் உள்ள நுண்ணிய இறப்பின்கண் தங்கியிருக்கும். இந்நிலை தலைவர் பிரிந்து சென்ற நாட்டில் இல்லையோ! எனத் தலைவி ஏங்கி நின்றாள்.

குருவிகள் தாங்கள் வாழும் வீட்டின் முன் உள்ள இடத்தில் விளையாடி மகிழ்கின்றன. முற்றத்தில் உலர்த்தப்பட்ட உணவினை உண்கின்றன. கூரைக்கு அடியிலுள்ள இறப்பில் தன் குஞ்சுகளோடு தங்கி துயில் கொள்கின்றன. அத்தகைய வாழ்வு தனக்கு அமைய, பொறாமை உடைய தலைவி எண்ணி வருந்துகிறாள். தலைவியுடன் தங்கி இல்லறம் பேண வேண்டிய தலைவன் நெடுந்தொலைவில் தங்கியுள்ளான் காலத்தாலும் இடத்தாலும் ஏற்படும் பிரிவு துன்பம் மனையுறை குருவிகளுக்குத் தன்னைக் காண வர வேண்டும் என விரும்புகிறாள். உணவு விளையாட்டு உறைவிடம் உடல்நிலை வாழ்க்கை உறக்கம் ஆகிய அனைத்தும் தலைவன் பிரிவினால் பெறாமை குறித்து மனையுறை குருவிகளின் வாழ்க்கை தலைவியால் நினைக்கப்படுகின்றது. இத்தகைய அன்புடைய இல்லற தலைமைகளால் தான் மனையுறை வாழ்க்கை வளம் பெறும் என்பதை அறிய முடிகின்றது.

**தலைவன் தலைவி அன்பின் திறம்**

தலைவன் தலைவியர் இடையே காணப்படும் அன்பின் திறம் காலப்போக்கில் மாறுவதை மிளைக்கூத்தன் பாடிய குறுந்தொகைப் பாடலில் காணமுடிகின்றது. அப்பாடல் பின்வருமாறு

**"வேம்பின் பைங்காய் என்தோழி தானே**

**'தேம்பூங்கட்டி' என்றனிர்: இனியே**

**பாரிபறம்பின் பனிச்சுனைத் தெண்ணீர்**

**தைஇத் திங்கள் தண்ணிய தரினும்**

**'வெய்ய உவர்க்கும்' என்றனீர்**

**ஐய ! அற்றால் அன்பின் பாலே"** (குறுந்தொகை.196:1-6)

வாயில் வேண்டிய தலைவனுக்குத் தோழி கூறுவதாக இப்பாடல் அமைந்திருக்கின்றது. வேம்பினது பசிய காயை என் தோழியாகிய தலைவி கையால் தரும் போது, அதனை இனிய பூ மணமுள்ள 'கருப்புக்கட்டி' என்று தலைவியின் இளமைப்பருவத்தில் கூறினிர். என் தோழி பெருமுது பெண்ணாகிய் இப்பொழுது பாரிவள்ளல் உரிய பறம்பு மலையில் உள்ள தைத்திங்களின் குளிர்ச்சி உடைய சுனையில் உள்ள தெளிந்த நீரை தந்தாலும் வெம்மையாய் உவர்த்தலைச் செய்யும் என்று கூறுகின்றீர்!. இது வியப்பாக இருக்கின்றது. அன்பின் திறம் அத்தகையது போலும் என்று கூறித் தோழி தலைவனுக்கு வாயில் மறுக்கின்றாள்.

**கணவனின் அன்பற்ற தன்மை**

மருதநில தலைவன் பரத்தமையைத் தொடர்புடையவன் ஆகவும் தலைவியின்பால் அன்பற்றவனாகவே இருப்பதை மருதப் பாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதற்குச் சான்றாக ஐங்குறுநூற்றின் 'கள்வன்பத்து" பகுதியில் வரும் பின்வரும் பாடலை சான்றாகக் காட்டலாம்.

**"அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்**

**முள்வேர் அளைச் செல்லும் ஊரன்**

**நல்ல சொல்லி மணந்து இனி**

**நீயேன் என்றது எவன்கொல்? அன்னாய்!"** (ஐங்குறுநூறு. 22:1-4)

தன் உடல் முழுவதும் சேற்றைப் பூசிக்கொண்ட வயல்வாழ் நண்டு அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் அச்சேற்றினுடையே தன் வளையின்கண் சென்று தங்கும் 'ஊரன்" என்றது தகுதிபாடு மிகுதியும் உடைய தலைவன், தன் பரத்தமை தொடர்பாகிய தீயொழுக்கம் குறித்து ஊரார் பேசும் பழிச்சொல்லைப் பற்றிச் சிறிதும் கவலை கொள்ளாமல் பரத்தையர் இல்லத்திற்கு செல்கிறார் என்பதை உணர்த்துகின்றது.

**'கழுநீர் மேய்ந்த கருந் தாள் எருமை**

**பழனத் தாமரைப் பனிமலர் முனைஇ**

**தண்டுசேர் மள்ளரின் இயலி அயலது**

**குன்றுசேர் வெண்மணல் துஞ்சும் ஊர!"** (நற்றிணை.260:1-4)

என்னும் நற்றிணையில் மருதப்பாடலடிகள் 'தாமரை மலரை வெறுத்தக் கழநீரை மேய்ந்த எருமை மணற்குன்றில் சென்றுறங்கும்" என்பது தலைவி நலனை வெறுத்துக் காதற்பரத்தையிடம் கூடி இன்புற்ற தலைவன் அவளிடத்தும் தங்காமல் சேரி பரத்தையின் இல்லம் சென்று உறங்கும் தன்மையினன் என்று உள்ளுறுத்தி நிற்பதால், தலைவன் தலைவி மாட்டு தூய அன்பில்லாதவன் என்பது புலனாகின்றது. மற்றொரு நற்றிணைப் பாடலில் தலைவன் வண்டின் இயல்பினன். ஆதலால் நீ அவனுடன் கூடல் கொள்ள வேண்டாம் என்று தலைவியின் புலவியைத் தணிக்கிறாள் காமக்கிழத்தி. தலைவன் நள்ளிரவில் புதிய பரத்தையை விரும்பித் துய்ப்பவன் என்பது பொருள்பட காமக்கிழத்தி, நடுயாமத்து விரியும் பூவை உண்ணுகின்ற வண்டென அவனை கூறுகின்றாள். இதனை,

**"நெடுநீர்ப் பொய்கை நடுநாள் எய்தி**
**தன் கமழ் புதுமலர்; ஊதும்**
**வண்டு என மொழிப 'மகன்' என்னாரே"** (நற்றிணை:290:7-9)

என்னும் பாடலடிகள் மூலம் அறிய முடிகின்றது. தலைவனின் அன்பற்ற தன்மையும் பரத்தையரின் புறத்தோற்றத்தில் தலைவன் மயங்கி தலைவியின் நலத்திற்கு கொடுமை செய்வதையும்

**"கரைசேர் வேழம் கரும்பில் பூக்கும்**
**துறைகேழ் ஊரன் கொடுமை"** (ஐங்குறுநூறு.12:1-2)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலடிகளாலும் அறிய முடிகிறது. வயலின் கொற்கைச்சிக்கும் கரும்புக்கும் பொதுவான பெயர் வேழம் என்பதாகும். வயலின் வரப்பிற்குள் அடங்காமல் தன் விருப்பப்படி வளரும் வேழம் தன்னகத்தே சாறும் இனிமையையும் அற்றதாக உட்டுக்களை கொண்டிருக்கும் அகத்தே செறியுடையதும் இனிமையான சாற்றினைக் கொண்டதும் பெரும்பயன் விளைவிப்பதுமான வயலகத்தே அடங்கி வாழும் கரும்பு போலப் பூத்து வேழம் காண்போரை மருட்டு என்பது இப்பாடலின் பொருளாகும். இப்பாடலில் 'வேழம்' பரத்தையையும் 'கரும்பு' மனைவியையும் குறிக்கும். கணவன் அகத்தில் அன்பும் இனிமையும் அற்றவரும் பொய்மை உள்ளம் கொண்டவருமான பரத்தையின் புறத்தோற்றத்தில் மயங்கி மனைவியை புறக்கணிக்கிறான் என்பது இதிலிருந்து வெளிவரும் உண்மையாகும்.

**"தாய் சாப் பிறக்கும் புள்ளிக் களவனொடு**
**பிள்ளை தின்னும் முதலைத்து அவன் ஊர்"** (ஐங்குறுநூறு.24:1-2)

என்னும் ஐங்குறுநூற்றுப் பாடலடிகளும் அத்தகையதே. இப்பாடல் தோழி கூற்றாக அமைந்திருக்கின்றது. நண்டு கரு உயிர்த்த உடனேயே இறந்து விடும். அதன் இறப்பிற்கு அதன் குஞ்சுகளே காரணமாகும். இதனால் தான் குஞ்சுகளின் கொடுமை குறித்து தாய்சாப் பிறக்கும் புள்ளிக் கள்வன் என்கிறாள் தோழி. தானீன்ற பிள்ளையைத் தன்னுயிர் நீத்தும் காக்கும் தாய்மைப் பண்பிற்கு முற்றும் மாறாகத் தான் ஈன்ற பிள்ளையை அன்பு சிறிதும் இல்லாமல் தானே இரையாகக் கொள்ளும் இயல்புடையதால் "பிள்ளை

திண்ணும் முதலை" என்கிறாள். தாயிடம் பிள்ளையும் பிள்ளையிடம் தாயும் அன்பு கொள்ளும் உலகில் இயல்புக்கு மாறாக நண்டும் முதலையும் வாழ்வதால் அவை தலைவன் தலைவியிடம் தன்மையினன் என்பதற்குச் சான்றுகளாக அமைந்தன.

**களவு காலத்தில் காதலர் இயல்பு**

இனியன செய்தலே காதலன் இயல்பாக இருக்க வேண்டும் என அறிஞர் நன்முல்லையார் பாடிய குறுந்தொகைப் பாடல் ஒன்று வெளிப்படுத்துவது சிந்திக்கத்தக்கதாகும். "பால்நிலத்தில் சிறிய இலைகளைக் கொண்டு முளைத்து வளரும் நெருஞ்சியானது முதலில் கண்ணுக்கு இனிய விருந்தாக அமைந்தது பின்னர் முள்ளாக மாறி உடலுக்கு இன்னாமையைத் தருவது போல களவுக் காலத்தில் தலைவிக்கு இனியவற்றைச் செய்த காதலன் கற்புக்காலத்தில் இன்னாத செயல்களைச் செய்ததால் தலைவி நெஞ்சம் வருந்துகிறாள். இதனை,

**"நோம் என் நெஞ்சே! நோம் என் நெஞ்சே!**
**புன்புலத்து அமன்ற சிறியிலை நெருஞ்சிக்**
**கட்குகன் புதுமலர் முட்பயந் தாங்கு**
**இனிய செய்த நம் காதலர்**
**இன்னா செய்தல் நோம்என் நெஞ்சே!"** (குறுந்தொகை.202:1-5)

என்னும் குறுந்தொகைப்பாடல் வலியுறுத்திக் கூறுகின்றன. சூரியனை நோக்கி நிற்கும் நெருஞ்சிப் பூப்போல தலைவன் களவுகாலத்தில் தலைவியை நோக்கி அவள் கண்ணுக்கு விருந்தளித்தான். முன்னர் பூவும் பின்னர்க் கனியும் தந்து உதவுவதைப் போல களவினும் கற்பினும் இன்பமே செய்யும் காதலர் பலர் உலகில் உள்ளனர். ஆனால் தான் மட்டும் அத்தகைய பேறு பெறாமல் நெருஞ்சிப் புது மலர் போல கண்ணுக்கு இனியன காட்டி அதன் பழம்போலப் பல வகையானனும் இன்னாமையைச் செய்யும் காதலனை உடையேன் எனத் தன்பேறு இன்மைக் குறித்துத் தலைவி வருந்துகின்றாள். இனியன செய்தல், காதலர் இயல்பு என்னும், இன்னா செய்தால் அவர் இயல்பு இல்லையென்றும் தலைவி வலியுறுத்துகிறாள்.

**விருந்தோம்பல்**

தமிழர் தம் பண்பாட்டு வாழ்க்கை மரபுகளுள் விருந்து பேணுதல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். ஊடல் தீர்க்கும் வாயில்களும் விருந்தினர் வருகையும் ஒன்றாகும். கண்ணகி கோவலன் தன்னைப் பிரிந்திருந்தைமையால் விருந்தினரைப் பேணும் வாய்ப்பை இழந்ததாகக் கூறுகின்றாள். 'விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை' என்பது அவள் வாக்காகும். சீதையும் விருந்து கண்டபோது இராமன் என் செய்வான் என்று வருந்துகின்றாள். ஆதலில் விருந்து இல்லற வாழ்வில் சிறப்புக்கூறுகளுள் ஒன்றாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும். மருதகலிப் பாடலின் தலைவன் நுண்ணறிவுடையவன் மனைவியின் ஊடலை எளிதாகத் தீர்க்கும் முறையை அறிந்தவன். வீட்டிற்க்கு விருந்து வரும்போது தலைவனும்

தலைவியும் தம் ஊடலை காட்டிக் கொள்ளாதவாறு விருந்து பேணுவர். அதனால்தான் தலைவன் விருந்தினரோடு இல்லத்திற்கு வருகின்றான். தலைவியால் புலவிக் கொள்ள இயலவில்லை. தலைவி சத்தியம் செய்வதை கண்டு அஞ்சுவாள். தலைவன் பொயச்சூளுரைப்பதில் வல்லவன். அவன்தன் மகனுடன் வந்து அவனை அணைத்துக் கொண்டு தூங்குவதால் தலைவியால் ஊடல் கொள்ள முடியவில்லை. இவ்வாறு தலைவி ஊடல் கொள்ள கருதியிருந்தும் ஊடல் கொள்ள இயலாத நிலையைத் தோழியிடம் கூறுகின்றாள். தலைவியின் இல்லற மாண்பு அவள் தன் செயலால் உயர்ந்து நிற்கிறாள்.

**“விருந்து எதிர் கொள்ளவும் பொய்ச்சூள் அஞ்சவும்**

**அரும்பெறல் புதல்வனை முயங்க் காணவும்**

**அங்குஅவிந்து ஒளியும் என் பிறவி தாங்காது**

**அவஅவ இடத்தான் அவை அவைகான**

**பூங்கண் மகளிர் புனைநலம் சிதைக்கும்**

**மாய மகிழ்நன் பரத்தைமை**

**நோவேன் தோழி கடன் நமக்கு எனவே”** (கலித்தொகை.75:27-33)

இவ்வாறு மருதநிலப் பாடல்களில் அந்நிலமக்களின் இல்வாழ்க்கைச் சிறப்பித்து பேசப்படுவது நோக்கத்தக்கதாகும்.

**தலைவியின் பொறை குடும்ப கடமை**

கிளிமங்கலம் கிழார் பாடிய குறுந்தொகையின் மருதப் பாடல் தலைவியின் பொறையுணர்வும் குடும்ப கடமையும் பேசப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

**“இதுமற்று எவனோ தோழி! துனியிடை**

**இன்னர் என்னும் இன்னாக் கிளவி**

**இருமருப்பு எருமை ஈன்றணிக் காரன்**

**உழவன் யாத்த குழவியின் அகலாது**

**பாஅல் பைம்பயிர் ஆகும் ஊரன்**

**திருமனைப் பல்கடம் பூண்ட**

**பெருமுது பெண்டிரேம் ஆகிய நமக்கே?”** (குறுந்தொகை. 181:1-7)

எனும் பாடல் மூலம் தலைவனுடைய புறத்தொழுக்கத்தைத் தோழி சுட்டிக்காட்டி இழித்துக் கூறினாள். அப்போது தலைவி தலைவனைக் குறித்து உயர்வாகவும், இடற்படவும் கூறுதல் இப்பாடலின் பொருளாகும். இல்லறத்தில் இணைவோர் செய்ய வேண்டிய கடமைகள் பல. காமநுகர்ச்சி ஒன்று மட்டும் வாழ்வின் நோக்கமன்று. தலைவன் காமத்தால் தன்கடமைகளில் நெகிழ்ந்தானாயினும், அவன் மனைவி அவற்றை அறியும் அறிவு பெற்றிருந்தாள். கடமைகளை நடுநிலைமையுடன் சிந்திக்கும் திறன் அவளிடத்தில் காணப்பட்டது.

**பரத்தைமை ஒழுக்கம்**

மருதத்திணைப் பாடல்களில் பரத்தையரைக் குறிக்கும் தொடர்களாக காமக்கிழத்தி, காதற்பரத்தை, நயப்புப் பரத்தை, இற்பரத்தை, தலை நிற்றொழுக்கப்பட்ட பரத்தை எனப் பல பெயர்களிட்டு குறிக்கப்படுகின்றனர்.

பரத்தையர் ஒழுக்கம் தொல்காப்பியர் காலத்திலும் இருந்துள்ளது என்பதனை,

**"பூப்பின் புறபாடு ஈராறு நாளும்,**

**நீத்து அகன்று உறையார்** என்மனார் புலவர்,

பரத்தையிற் பிரிந்த காலையான," (தொல்காப்பியம் - நூற்பா.1133)

எனும் பாடல் மூலம் அறியமுடிகிறது.

மருதநில மக்களின் வாழ்க்கை முறையிலும், பண்பாட்டிலும் பரத்தையர் ஆதிக்கமும், ஊடுருவலுமே மிகுதி. தலைவன் பரத்தையரிடம் தொடர்பு கொள்வதாலே தலைவி ஊடல் கொள்கிறாள். இதனை மருதத்திணைப் பாடல்களில் காணமுடிகிறது.

**"நனைய காஞ்சிச் சினைய சிறுமீன்!**

**யாணர் ஊரன்"** (ஐங்குறுநூறு.1:3-4)

எனும் பாடலில் அரும்புகள் நிரம்பிய புன்னை மரமானது தலைவியாகவும் மிகுதியான முட்டைகளைக் கொண்ட நாற்றம் வீசும் சிறுமீன் பரத்தையாகவும் தோழி மூலம் தலைவனுக்கு உணர்த்தப்படுகிறது.

பரத்தைப் பெண்கள் நேரடியாகத் தன்னைத் தேடிவரும் ஆண்களிடம் பொருள் பெறுகிறாள் என்று குறிப்பிடப்படவில்லை. எனினும் அவள் அணிந்திருக்கும் அணிகலன்கள் தம்மை நாடி வரும் ஆண்கள் தந்த விலையால் பெற்றவை எனலாம். "சுணங்கு அணிவுற்ற விளங்கு பூணர்" (நற்றிணை. 20:8) என்று அணிகளை அணிந்தவள் தலைவனைப் பிரிந்து தெருவில் சென்றாள் என்றும், தூய அணிகளை அணிந்த பரத்தையை "வால் இழை மகளிர் சேரித் தோன்றும்" (நற்றிணை.380:5) என்றும் வருகின்றன. பரத்தையர்கள் மற்ற தொழில்கள் செய்தனர் என்று குறிப்பிடப்படவில்லை. எனவே அவளை நாடி வருபவர்களிடமே பொருள் பெற்றாள் என்று கூறலாம். அதனைச் சில பாடல்கள் வெளிப்படுத்தவும் செய்கின்றன.

**"மேல்நின்றும் எள்ளி, இது இவன் கைத்தந்தாள்**

**தான்யாரோ? என்று வினவிய, நோய்ப்பாலேன்**

**யானே தவறுடை யேன்!"** (கலித்தொகை.84:39-41)

என்கின்ற பாடல் வரிகள் தலைவன் பரத்தையருக்குக் கையணியைக் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, தன் கையணியைத் தன்னுடைய மகனின் கைகளில் அணிவித்தத் தலைவனை நோக்கி இதே போன்று பரத்தையரிடம் தந்திருப்பான் என்கிறாள்.

தலைவனால் பரத்தைக்கு அளிக்கப்பட்ட தனது அணிகளைக் கண்டு அவளோடு புலந்து பேசுகின்றாள் தலைவி. இருவருக்குமான கலந்துரையாடல் அன்றைய சூழலில் பரத்தைப் பெண்கள்

ஆண்களிடம் பொருள் பெற்றனர் என்பதையும் அதனால்தான் விலைகணிகை என்று கூறுவதையும் அறியமுடிகின்றன.

**"ஆயத்து ஒருத்தி, அவளை, அமர்காமம்**
**மாயப்பொய் கூட்டி மயக்கும் விலைக்கணிகை!**
**பெண்மைப் பொதுமைப் பிணையிலி! ஐம்புலத்தைத்**
**துற்றுவ துற்றும் துணைஇதழ் வாய்த்தொட்டி!**
**முற்றா நறுநறா மொய்புனல் அட்டி,**
**காரிகைநீர் ஏர்வயல்,காமக்களி நாஞ்சில்,**
**மூரி தவிர முடுக்கு முதுசாடி!**
**மடமதர் உண்கண் கயிறாக வைத்துத்**
**தடமென் தோள் தொட்டு, தகைத்து, மடவிரலால்**
**இட்டார்க்கு யாழ்யார்த்தும் பாணியில், எம்இழையைத்**
**தொட்டு, ஆர்த்தும் இன்பத் துறைப்பொதுவி!"** (பரிபாடல்.20:48-58)

என்னும் பாடல்வரிகள் விளக்குகின்றன. பொது மகளிர் எனப்படும் பெண்டிர் ஆண்கள் யாவராலும் விரும்பப்படும் வகையினர் ஆவர். தலைவியின் அணிகலன்களைக் கவர்ந்து கொண்ட பரத்தையரிடம் தலைவி,

**"அ......... சொல் நல்லவை நாணாமல்**
**தந்து முழவின் வருவாய்! நீ வாய்வாளர்**
**எந்தைஎனக்கு ஈத்த இடுவளை, ஆரப்பூண்**
**வந்தவழி நின்பால் மாயக் களவுஅன்றேல்,**
**தந்தாணைத் தந்தே, தருக்கு."** (பரிபாடல்.20:74-78)

எனக் கூறினாள். என் தந்தை எனக்கு அளித்த அணிகலன்களான ஆரமும் வளையலும் உன்னிடம் இருப்பது வஞ்சனையால் என் தலைவனிடமிருந்து பறித்ததாக இருக்கும் என்கிறாள். முன்னதாகப் பரத்தையை இனிய சொற்களைக் கொண்டு ஆடுவதற்கு முழவோடு வருபவள் என்கிறாள். தன்னுடைய இனிமையான பேச்சால் ஆண்களைக் கவர்ந்து அவர்களிடமிருந்து பொருள்களைப் பறிப்பவள் என்று கூறுவதாக அமைகிறது. தலைவியின் கேள்விக்கு பரத்தையும் பதிலுரைக்கிறாள்.

**"மாலை அணிய விலைதந்தான் மாதர்நின்.**
**கால் சிலம்பும் கழற்றுவான்; சால,**
**அதிரல்அம் கண்ணி! நீ அன்பன்எற்கு அன்பன்;**
**கதுவாய்; அவன் கள்வன்; கள்விநான் அல்லேன்.**
**என ஆங்கு"** (பரிபாடல்.20:79-83)

என்கின்ற பாடலடிகள் விளக்குகிறது. தலைவன் தான் இந்தப் பொருட்களைக் கொடுத்தான். உன்னுடைய சிலம்புகளையும் கழற்ற வைப்பேன். கள்வன் அவன் தான், நான் கிடையாது என்று கூறுகின்றாள். பரத்தையரிடம் செல்லும் ஆண்கள் தம்முடைய பொருள்களை இழந்தனர் என்பது இதன் மூலம்

அறியப்படுகிறது. பொதுமக்களும் பரத்தையரை அங்கீகரித்துத் தலைவியிடம் தலைவனின் செயல்கள் நியாயமானதுதான் என்று கூறினார்கள்.

**“சேக்கை இனியர்பால் செவ்வான் மனையாளால்**
**காக்கை கடிந்துஒழுகல் கூடுமோ? கூடர்**
**தகவுடை மங்கையர் சாண்றாண்மை சான்றார்**
**இகழினும், கேள்வரை ஏத்தி இறைஞ்சுவார்;**
**நிகழ்வது அறியாது - நில்லுநீ நல்லாய்!”** (பரிபாடல்.20:86-90)

என்ற வரிகளில் தலைவனின் இயல்பேதான் இனியது என்று கருதியவாறு பரத்தையரிடம் செல்வதுதான். அதற்காக தலைவனைத் தனித்து விடுதலும் அவனோடு முரண்படுவதும் கூடாது. மற்றவர்கள் தலைவனை இகழ்ந்தாலும் தலைவி அவனை ஒதுக்கக் கூடாது என்று கூறினர்.

**முடிவுரை**

சங்க காலப் பெண்களின் நிலையில் போற்றத்தக்க பண்புகள் இருந்ததாக சங்க இலக்கியங்கள் சுட்டுகின்றன. பெண் உளவியல் உளப்பகுப்பும் கற்பொழுக்கத்தால் கற்பு, திருமண வாழ்க்கையில் விட்டுக்கொடுத்தல் தலைவன் தவறு இழைக்கும் போது அவற்றை எப்படி திருத்தலாம் என்பதையும், விருந்தினர் வரும் பொழுது உளப்பாங்கோடு எப்படி நடந்தனர் என்பதனை அறியும்போது சங்க கால மகளிரின் உளவியல் தன்னை ஈண்டு நோக்கத்தக்கது.

**துணைநூற் பட்டியல்**

1. இராமநாதன் செட்டியார், லெ.ப.கரு, சங்ககாலத் தமிழர் வாழ்வு, முத்தையா நிலையம், சென்னை. நான்காம் பதிப்பு, 1977

2. சண்முகம் பிள்ளை. குறுந்தொகை, தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை. 1985

3. சிவராஜ். து, சங்க இலக்கியத்தில் உளவியல், சிவம் பதிப்பகம், வேலூர். 1994

4. சுப்பிரமணியன். ந, சங்ககால வாழ்வியல், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி.) லிட், சென்னை. திருத்திய பதிப்பு, 2010.

5. சுப்பிரமணியன். ச.வே. தொல்காப்பியம் தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. மூன்றாம் பதிப்பு 1999

6. சோமசுந்தரனார் போ.வே. (உ.ஆ) பரிபாடல், கழக வெளியீடு, சென்னை. 2008

7. சோமசுந்தரனார் போ.வே. (உ.ஆ), ஐங்குறுநூறு, கழக வெளியீடு, சென்னை. 1966

8. நச்சினார்க்கினியர். (உ.ஆ), கலித்தொகை, கழக வெளியீடு, சென்னை. மறுபதிப்பு 2007

9. வெங்கட்ராமன்.என். (பதி) நற்றிணை, உ.வே.சா நூல் நிலையம், சென்னை. 1989

ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சங்கப்பாடல்களில் தலைவனின் உள்ளப்பாங்கு

74

**முனைவர் க.ஆனந்தி**
**தமிழ்த்துறை, உதவிப்பேராசிரியர்,**
**பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.**

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கப் பாடல்களில் தலைவன் கூற்றுகளை விட, தலைவி உள்ளிட்ட பெண்களின் கூற்றுகளே மிகுதியாக இருப்பினும் அவர்களை இயங்கச் செய்யும் இயங்கு சக்தியாக இருப்பவன் தலைவனே. ள் அனைத்தும் தலைவனை மையமிட்டதாகவே இதனால்தான் அப்பெண் மாந்தர்களின் கூற்றுக எனவே .அமைந்திருக்கின்றன, சங்க மாந்தர்களை நகர்த்திச்செல்லும் மையப்புள்ளியாகத் தலைவன் திகழ்கின்றான் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. களவு, கற்பு வாழ்க்கையில் தலைவியை விடுத்துத் தலைவன் பிரிந்துறையும் போது பிறமாந்தர்களின் கூற்றுகளில் அவன் அன்பின்மையைப் பற்றியும், குணநலன்களைக் குறித்தும் இடம்பெற்றிருப்பதை உணரமுடியும். அப்படிப்பட்ட ஆளுமைத் தன்மை உடைய தலைவன் புணர்ந்து பிரிந்த காலத்திலும், கற்புக்காலத்தில் பிரிந்த போதிலும், மீண்டு வந்து தலைவியோடு இணைந்த காலத்திலும் தலைவனுக்கு ஏற்பட்ட உள்ள மாறுதல்களை உளவியல் கூறுகள் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது .

**தலைவனின் பண்புகள்**

தலைவனின் பண்பு நலனைக் கூறும்போது தொல்காப்பியர், “பெருமையும் வலிமையும் ஆடவர் இயல்பு” என்பர். இது உலகம் முழுவதும் பொருந்தும் என்பதை , “பெருமையும் உரனும் ஆடுஉ மேன” (தொல்.,கனவு.,நூ.1044) என்ற நூற்பாவில் கூறிச் செல்கின்றார். தலைவன் பிறரால் போற்றப்பட வேண்டுமெனில் பொருளை ஈட்டும் இயல்புடையவனாக இருக்க வேண்டும். பொருள் அவ்வாறு ஈட்டப்பிரியும்போது தலைவி கலங்குவாளாயின் அவள் மனம் சமாதானம் அடையும் வரை காத்திருந்து பின்னர் தன் பயணத்தை மேற்கொள்ளும் வலியுடைவன் என்பதை,

**“செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும்” (தொல்., கற்பு., நூ.1131)**

எனக் குறித்துள்ளார் தொல்காப்பியர் .

தலைவனுக்கு நற்குடிபிறப்பு, ஆண்மை, பருவத்தோற்றம், அன்பு, சான்றாண்மை, கருணை, செல்வம் ஆகிய பண்புகள் தலைவனிடம் இருக்க வேண்டும் என்கிறது தொல்காப்பியம். தொல்காப்பியர் காழ்ப்புணர்வு, கொடுமை, கர்வம், புறங்கூறல், கடுஞ்சொல், துணிவின்மை, சோம்பேறித்தனம், குடியிருப்பு பற்றிய கர்வம்,

பிறன்பழிகூறல், ஏழ்மையை மறுத்தல், பொருந்தாக் காமம் ஆகிய பன்னிரு பண்புகள் இருத்தல் கூடாது என்று மொழிகிறார் .

**"முன்னிலை யாக்கல், சொல்வழிப்படுத்தல்**
**நன்னயம் உரைத்தல், நகைநனி உறாஅது" (தொல்.நூற்.களவியல்.1047)**
**"குறை அவள் சார்தி மெய்யுறக் கூறலும்**
**மெய்தொட்டுப் பயிரல், பொய்பாராட்டல்" (தொல்.நூற்.களவியல்.1048)**

என்று இத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்டிருக்கும் தலைவனின் உள்ள உணர்வுகளை அகப்பாடல்கள் சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளன .

**அகப்பாடல்களில் தலைவன்**

"தலைவியை நினையாது போரில் ஈடுபட்ட தலைவனின் மன உணர்வுகள் புறத்திலும், காதலுக்குச் சிறப்பிடம் தந்து காதலியை நினைந்துருகும் தலைவனின் மன உணர்வுகள் அகத்திலும் இடம் பெறுகின்றன" என்பார் ஆ. இராமகிருஷ்ணன்(அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு, ப.182). "வினைமேற் செல்ல எண்ணிய நிலையிலிருந்து வினை நிறைவு அடையும் வரை ஆற்றாமையே தலைவனிடம் பொதுப் பண்பாக அமைந்திருத்தல் தெளிவுறும். பாடல்களிலும் இப்பண்பு உணர்ச்சியொழுக எல்லாத் தனிமொழிப் உருப்பெறுதல் உணர்த்தும்" என்பார். மு.இராசமாணிக்கம் (உள்ளத்தில் விந்தைகள். ப.32) எனவே, வினையை விரும்பினும் அதனினும் தலைவியை விரும்பும் பண்புடையவன் தலைவன்.

தலைவி மீது தலைவனுக்குள்ள ஆறாக் காதல், தலைவி இல்லாது வாழ இயலாத தலைவனின் மனநிலை, இல்வாழ்வின் செம்மைக்கு இயற்ற வேண்டிய கடமை என்னும் தலைவனின் உளவியலை அறிதற்குத் தலைவன் கூற்றுப் பாடல்களே சான்றுகளாக அமைகின்றன . அகப்பாடல்களில் காதல் உணர்வும், வினை உணர்வும் கொண்டு அவ்விரு உணர்வைத் தவிர்க்க முடியாதவனாகி தன்னுள்ளம் பெறும் உளமாற்றத்தைச் சங்கப்பாடல்களில் வடித்துச் சிறப்பிடம் பெறுகிறான் தலைவன் .

**தலைவன் கூற்று நிகழும் இடங்கள்**

தலைவன் தன் நெஞ்சோடு கிளத்தும் தனிமொழிப் பாடல்களே சங்கப்பாடல்களில் மிகுதியாக உள்ளன. த்காரணம் என்னவெனில் தலைவிக்கு தோழி தக்க துணையாக அமைந்தது போலத் பாங்கன் உள்ளங்கலந்த உறவுடையவனாக அமையாமையே காரணமாகு தலைவனுக்குப்ம். எனவே கூற்றுகள் அவன்தன் நெஞ்சிடமே மிகுதியும் நிகழ்கின்றன தலைவன்

**உள்ளமுறிவு**

"ஓர் அழுத்தமான தேவையும் அதனை எய்தி நிறைவுற இயலாத உணர்வும் உடனியையும் போது நேரும் அனுபவமே உள்ள முறிவு" என்று பிரித்தானியக் கலைக்களஞ்சியம் வரையறுக்கின்றது. வளமான வாழ்வு வாழப்பொருள் தேவை ஆனால் பொருள் . ஈட்டப்புக நினைப்பின் தலைவியை பிரிய வேண்டும். இவ்விரண்டையும் வேண்டி நிற்கும் தலைவன், ஆறலைக்கள்வர்கள் இருக்கும் பாலை வழியை எளிதில் கடந்து விடலாம். ன் தோளில் துயிலப் பெறுவதை ஆனால் காதலைக் கடந்து செல்லவும் அவளி விடமுடியாது என்பதை, "பெருந்தோள் இன்துயில் கைவிடு கலனே" (அகம்., பா.193:14) எனக் கூறித்தன் பயணத்தைத் தவிர்க்கின்றான் .

தலைவனின் ஆசை நிறைவேறாததற்குத் தடையாக இருப்பது மனமே, ஏனெனில் தலைவியுடன் உறைய நினைப்பினும் மனமோ பொருள்கருதிப் பிரிய நினைக்கின்றது. இதனால் பிரிவை ஏற்க முடியாத தலைவன், உறுதியில்லாத நெஞ்சே தலைவியைப் பிரியின் தக்கதா? நீ செல்லும் வழி கானல் நீர் நிறைந்து, பாறைகள் பொருந்தியிருக்கும் இடங்களுக்கு நீ சென்றால் தலைவியைப் நினைக்காது நீ எம்மையும் மறந்து போவாயா? (அகம்., பா.327) என உள்ளமுறிவு அடைகின்றான். மனமானது, நாளது செலவினையும், மூப்பினது வரவையும், அரிது பெரிது சிறப்பினர் காமத்து இயற்கையையும் அறியாது. இதனால் தலைவன் தன்மனதிடம் மனமே, நீ பொருளை விரும்பினாலும் கூட, "நம்மொடு நன்மொழி நவிலும், பொம்மல் ஓதிப் புனையிழை குணனே"(அகம்.,பா.353:22-23) என்னும் அகநானூற்று வரிகளில் தலைவனின் இனிய மொழியையும், நற்குணத்தையும் நினைத்து இருக்கின்றாய். எனவே பொருளை விட்டுவிட்டு என உரைத்து உள்ளமுறிவடைகிறான்.

**நிறைவுறாத உணர்வு**

"தலைவன் பாங்கனுக்குக் கூறும் பாடல்களுள் இடித்துரைக்கும் பாங்கனுக்குப் புகல்பவையாகவே உள்ளன. இதனால் தலைவன் தன் எண்ணங்களுக்கு வடிகாலாக தன் உணர்வுகளைப் பங்கிட்டுக்கொள்வதற்கு உறுதுணையாகத் தன் நெஞ்சினையே கொள்கிறான்" என்பர் ஆ. இராதாகிருஷ்ணன் (அகத்திணை மாந்தர் ஓர் ஆய்வு.ப.169).

எனினும் இங்கு, தலைவி அருங்கடிக் காப்பினள், சொல் எதிர் கொள்ளாள், இளையள், அணையோள். எனவே, அவளை உள்ளல் கூடாது எனப் பாங்கன் இடித்துரைப்பினும் தலைவன் தன் பாங்கனிடமே, 'காற்று மோதி அடிப்பினும், மழை விரைந்து பெய்யினும், முழக்கத்துடன் இடியிடிப்பினும் இவை போன்ற இயற்கைப் பேரழிவு ஏற்பட்டு உலகமே சினப்பினும், "போதல் ஒல்லாள் என்நெஞ்சத் தானே" (நற்.,பா.201:12) என்ற வரியில் நினைவிலிருந்து நீங்காதவள் என்று அவளைப் பெறமுடியாத சூழலில் விளம்புகின்றான் .

தலைவன் தன் பாங்கனிடம் அவள் கிளியை குளிர் எனும் இசைக் கருவியால் விரட்ட, அவ்வொலி கேட்டு வேறிடம் செல்லாததைக் கண்ட தலைவி வருந்தி, "அதுபுலந்து அழுதகண்" (குறுந்., பா.291:5) உடையவளாக இருக்கக் காணும் போது அவள் கண்கள் குவளை போன்று இருந்தது என்று கூறுகின்றான் ."அகப்பாடல்கள் பெரும்பாலும் நிகழ்ந்த ஒன்றை ஒருவர் மற்றொருவருக்குக் கூறுவது போல் அமைந்துள்ளனகளின் இதனால் இவை நாடகங் .நிகழ்வை நம்மையே நேரில் காணச் செய்கின்றன அமைப்பு முறையைத் தழுவி இயன்ற சின்னஞ்சிறு நாடகங்களாகவே ஆகிவிடுகின்றன" எனும் கூற்று உண்மையே என்பர் ஆர்மார்க்கபந்து (குறிஞ்சிக்கலி. வழித்துணை விளக்கம், முன்னுரை, ப.20) தலைவியும் தன்னை விரும்ப வேண்டும் என்ற வேட்கையுடன் உள்ளான் தலைவன் . ருக்கும் இதனால் வருந்தியி தலைவனைக் கண்டு அவள் நகைக்க, இதைக் கண்ட தலைவன் நீ வேறு வகையாகச் சிரித்த செய்தியைக் கூறின் என் நெஞ்சம் தாங்காது என்று கூறி, " என் பைதல் நெஞ்சம் உய்யு மாறே"

(நற்., பா.75:10) எனும் வரியில் எனக்கு நன்மொழி கூறுவாயாக ! உ ஏன்றுளமுறிவால் வினவுகின்றான் தலைவன்.

தலைவியை விரும்பிய தலைவன் அவள்மீது கொண்ட அன்பினை அவள் உணர்ந்து; ஏற்கும் பொருட்டு ஊரார்க்குத் தெரியும்படி 'மடலூர்வேன்' என்கின்றான். ய்யுஇவ்வாறு செயலைச் செம் போது, அனைவரும் அறியும்படியான ஆற்றின் நீர்ச்சுழியில் அகப்பட்டவனைக் கண்டு கரையில் உள்ளளோர் பயங்கொள்ளாதே என்றதும் ஒருவாறு ஆறுதல் பெறுவான் . ஆனால் இவ்வூரோ, 'செறிந்தஏர் முறுவலாள் செய்த இக்காமம் அறிந்தும், அறியாது இவ்வூர்" (கலி., பா.140:27-28) என்று கூறித் தலைவியை அடைய இவ்வூர் உதவி செய்யாத நிலையாலும் உள்ள முறிவு பெறுகின்றான் "களவு ஒழுக்கத்தில் தலைவன் தன் சுற்றத்தாருக்கோ, ஊரார்க்கோ அஞ்சாதவனாக உள்ளான்" என்கிறார் ஆசங்க இலக்கியத்தில் ) அமிர்தகௌரி. உரையாடல், ப.87). தலைவியுடன் இனிது உரையவேண்டும் என நினைப்பினும் பொருளின் தேவை கருதிப் பாலை வழிச்செல்லும் பொழுதும் தலைவி தன்னை விரும்பாவிடின் உதவி செய்யாத ஊரினைக் கண்டும் தலைவன் உள்ளமுறிவடைகின்றான்.

**உள்ளப்போராட்டம்**

"ஒரே நேரத்தில் ஒன்றிற்கும் மேற்பட்ட விருப்பங்கள் உடனிகழ்வாய்த் தோன்றுமாயின் எதனை ஏற்பது எதனை விடுப்பது என்னும் ஐயம் தோன்றும், இதன் அடிப்படையில் முடிவெடுக்க இயலா நிலையும் செயற்பட இயலா நிலையும் தோன்றும் நிலையே இத்தகைய .'உள்ளப்போராட்டம்' எனப்படும்" என்பர் துசங்க இலக்கியத்தில் உளவியல்) -சிவரா., ப.16) வினையும் மனையும் தலைவன் பொருளீட்டப் பிரிய நினைக்கின்றான். ஆனால் மனமோ தலைவியோ? பொருளோ? என மனப்போரட்டம் நிகழ்த்துகின்றது. அப்பொழுது மனதிடம், "நெஞ்சே நீ தலைவியை விரும்புகிறாயா? பொருளை

விரும்புகிறாயா?" இரண்டில் ஏதேனும் ஒன்றை மட்டும் கூறுக. ஏனெனில், " புணரின் புணராது பொருளை; பொருள்வயின் பிரியின் புணராது புணர்வே" (நற்., பா.16:1-2) என்னும் வரிகளில் தலைவியோடு உறைய விரும்பினால் பொருள்பெற இயலாது. டு உறையமுடியாது பொருளைப் பெற விரும்பினால் தலைவியோ எனக் கூறி"நெஞ்சே, நீ பொருளுக்காகச் செல்வாயாயினும் செல்க, அல்லது இல்லத்தே தங்குவதாய் ஆயினும் தங்குக" என முடிவெடுக்காது போராடுகின்றான் இதுபோன்று ."மாந்தரின் உள்ளப் போராட்டத்தை விளக்க, சேக்சுபியர் தனிமொழியைப் பயன்படுத்தினார்" என்பர் .ஒரு வெடுக்காது அலைபாயும் முடி மனதுடன் தலைவன் வருந்தி அதனிடம் பொருளை விரும்பிப் பாலையில் செல்வதா? அல்லது தலைவியைக் காண ஊர்திரும்புவதா? ஏனத் தெரியவில்லை. ஆகவே மனமே, "ஆள்வினைக்கு அகல்வாம் எனினும், மீள்வாம் எனினும் நீதுணிந் ததுவே" (நற்., பா.103:10-11) என விளித்து இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்குமாறு கூறுகின்றான் தலைவன் .

அகநானூற்றுத் தலைவனோ, தன் மனதிடம் நீ குன்றைக் கடந்து பொருளீட்டியும் வரவில்லை. நும் தலைவியைத் தழுவி இல்லத்தில் வாழ்ந்தாலும் வறுமை வரும் என அஞ்சுகின்றாய் எனவே நீ ஒரு முடிவுக்கு வராது, "பெருங்கடல் ஓதம் போல, ஒன்றில் கொள்ளாய், சென்று தரு பொருட்கே" (அகம்., பா.123:13-14) என்றவாறு போராடும் மனமே முடிவெடுக்கட்டும் என விட்டுவிடுகின்றான். ஆண்மை என்பது ரிடயாமும் பொருளை யாசிக்காது தான் ஈட்டி வந்த பொருட்களைப் பிறர்க்கு ஈயும் குணத்திலே நிற்கும். அகத்தலைவனும் தன் ஆள்வினைத் தன்மையானது .ம் பொருந்தும்இது ஆண்மை கொண்ட அனைவர்க்கு ருபொளீநினைக்கிறது ட்டத் தலைவியைவிட்டுப் பிரிய. ள்மனமோ அவமீது கொண்ட காதலால் தலைவனைப் போகவிடாது தடுக்கின்றது. இதனால் தலைவனின் உள்ளமானது, " இருதலைக் கொள்ளி இடைநின்று வருந்தி ஒருதலைப் படாஅ உறவி போன்றனம்" (அகம்., பா.339:9-10) என அகநானூறு உரைப்பது போல் புலம்பி ஒருநிலை காணா உள்ளறும்பு போலத் துயரடைகின்றான் தலைவன் .

**இல்லாமையின் இரக்கம்**

"மனிதன் இன்பமயமான வாழ்க்கையை எய்தும் பொருட்டுச் சில குறிக் கோள்களை அமைத்துக் கொள்கின்றான். அக்குறிக்கோள்கள், அவனுக்கு மறைமெய்ம்மைகளாக, உள்ளிருந்து அவனைச் செய்யும்படி தூண்டுகின்றன" என்று கூறுவர் மு. இராசாமாணிக்கம் (உள்ளத்தில் விந்தைகள், ப.32). எனினும் அக்குறிக் கோள்கள் தலைவியுடன் உறையும் போதே பிறக்கும். பிரியின் குறிக்கோளை மறந்து ஏங்குவான். போது தலைவன் பொருள்தேடத் தலைவியைப் பிரிந்த எவ்வித நினைப்பும் இன்றி மனமே நீ என்னுடன் வந்தாய்! வந்த நீ இடைவெளியில் அவளை நினைத்து வருந்துகின்றாய். எனவே,

**"செல்இனி, சிறக்கநின் உள்ளம்வல்லே !**

**மறவல் ஓம்புமதி" (அகம்., பா.19:8-9)**

என்னும் அகநானூற்று வரிகளில் பாலைவழிப் பயணம் மேற்கொள்வதா? வேண்டாமா? ஏன உள்ளப்போராட்டம் மேற்கொள்கின்றான். முன்பு நிகழ்ந்ததைப் பின்பு நினைத்தற்குக் காரணங்களும் அமையும் என்பதை, "நிகழ்ந்தது நினைத்தற்கு ஏதுவும் ஆகும்" (தொல்.நூ.அகத் .989) என்பார் தொல்காப்பியர். தலைவனும் பாலைவழிச் செல்லும் போது அவ்வழியின் கொடுமைக்கும், தலைவியின் குணநலன்களுக்கும் இடையில் அவன் உள்ளம் தடுமாற, போராட்டம் மீதுர, "இன்னா மன்ற சுரமே; இனிய மன்ற, யான் ஒழிந்தோள் பண்பே!" (ஐங்., பா.326: 4-5) எனக் கூறுகின்றான். மனம் குரங்காட்டம் போட்டு, ஒரு நிலையாய் நிற்காதது.

பொருளீட்டவும் மனதிற்கு ஆசை தோன்றித் தலைவியுடனும் தங்கிருக்க விரும்புகின்றதுஆனால் இஃதறிந்தும் மனம் ஆசைப்படுவதைக் கண்டு . இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றையே பெறமுடியும், "ஒருதிறம், பற்றாய் வாழி, எம் நெஞ்சே!" (நற்., பா.298: 7-8) எனத் தன்நெஞ்சினை இகழ்ச்சியாகக் கூறியும், வாழ்த்திக் கூறியும், அடைய வேண்டுவது பொருளா? தலைவியா? எனப் போராட்டம் அடைகின்றான். தலைவன் தலைவியை விரும்பும் தூய அன்பை எவ்வகையில் தெரிவிப்பது எனக் குழப்பம் அடைந்து றாஉளப்போராட்டம் அடைகின்ன். அப்போராட்டத்தை, "கூறுவதும் கொல்லோ? கூறலாம் கொல்? எனக், கரந்த காமம் கைந்நிறுக் கல்லாது" (அகம்., பா.198: 1-2) என்ற அகநானூற்றுத் தலைவனின் கூற்றிலிருந்து மனம் தடுமாறிப் போனதைத் தன்னுடைய திகழ்வை பின்னோக்கு உத்திமூலம் பாகனிடம் தெரிவிக்கின்றான் மற்றொரு .தலைவனோ, தன் துணிவில்லாத நெஞ்சிடம், பொருளீட்டத் தலைவியை விடுத்துப் பாலை வழியில் செல்லும்போது அவளைச் சிறிதேனும் நினைப்பாயா? பாலை வழியில் நான்செல்வது தகுமா? என்பதைச் சிந்தனை செய்து கூறு .அகம்), பா.327) கூறாது விட்டுவிடாதே என்ற பாடல் கருத்தால் பாலை வழிக்கும், தலைவியின் அன்புக்கும் இடையில் போராட்டம் நிகழ்த்துகின்றான் .

**பார்வையும் குற்ற உணர்வும்**

பெண்ணுக்கு இயல்பு நாணம். தான்விரும்பும் தலைவன் எதிர்ப்பட்டு மொழியும் பொழுது அதுவும் அவன் முகம் காணாதும், பேசாதும் நாணத்தால் தலை கவிழ்ந்து நிற்பாள் அந்நிலையில் அவளைக் காணும்போது அன்பு மிகுதியாகிக் கைகடந்து செல்லும்போது அதைத்தாங்குவதற்கு, இயலாத நிலையில் அவள்மீது கொண்ட ஆர்வக் கிளர்ச்சியால், "காமம் கைம்மிகின் தாங்குதல் எளிதோ?" (நற்., பா.39:3) எனக் கூறி, அவளின் பார்வையும் தோளும் தன்னை விரும்பச் செய்வதாகக் கூறுகின்றான். அவ்வாறு விரும்பினும் அவ்விருப்பம் நிறைவேறாது போய்விடுமோ எனும் ஏக்கத்தாலும் அவளுடன் இணையவேண்டும் எனும் விருப்பாலும் தன்னுடைய தோழியிடம்,

"ஒருநாள் புணரப் புணரின்,

அரைநாள் வாழ்க்கையும் வேண்டலென் யானே" (நற்.,பா.280:4-5)

எனும் வரிகளில் தலைவியின் மீதுள்ள ஆர்வத்தால் அவன் எமக்கு இல்லையெனில் அரைநாள்வாழ்க்கை கூட வேண்டாம் என உளஇறுக்கம் அடைகின்றான் .

தலைவன் சிலநேரம் பயணத்தைத் தவிர்த்துச் செலவழுங்குதல் அவள் மீது கொண்ட அன்பாலும் தான் குற்றமுடையவனாக இருக்காது திகழவேண்டும் என்ற காரணத்தாலும் அம்முடிவினை எடுக்கின்றான். இப்பிரிவை சிலபோது பொருளீட்டும் அவசியம் ஏற்பட்டவுடன் தலைவியிடம் நீ பொறுத்திருக்க முடியுமா? எனக் குற்றவுணர்வுடன் அவளைக் கேட்பதற்கு முன்பாகவே, அவள் கண்கள், "நில்லா ஆகி, நீர்விலங்கு அழுதல்" (நற்., பா.256:7) எனும் இந்நிலையால் தலைவன் தன் பயணத்தைத் தவிர்த்தொழுகினான். எனவே அவள் .தலைவனின் அணைப்பு நெகிழ்ந்தாலும் வருந்தும் இயல்புடைவள் தலைவி தலைவனையும், அவள் பிரிவையும் நினைந்து வருந்தாத நேரம் இருக்காது. தலைவனின் வருகையை நினைத்து, "நாள்முறை இழைத்த திண்சுவர் நோக்கியும்" (அகம்., பா.289:9-10) என்ற பாடல் வரிகளில் சுவரில் பல்லி ஒலிப்பின் தெய்வத்தை வணங்கி நற்குறி சொல்வாயாக என வேண்டும் தன்மை கொண்டவள். பாளோஅவள் மாலைக் காலத்தில் எவ்வாறு ஆற்றியிருப்? எனத் தலைவியைப் பிரிந்த குற்ற உணர்வால் தலைவன் உளஇறுக்கம் அடைகின்றான்.

தலைவியை அடையவேண்டும் என்ற ஓர் அழுத்தமான தேவையிருப்பினும் அதனை அடைய முடியாதபடி உள்ளம் பொருளீட்ட விழையும்போது தலைவனுக்கு உளமுறிவு ஏற்படுகின்றது. உலகத்தில் உள்ள இன்பங்களுள் தலைவியால் பெறும் நுகர்வு இன்பமே சிறந்தது எனக் கொள்ளினும் பொருளை விரும்பும் மனதோடு தலைவியைப் பிரிய, "அழல்எழு தித்தியம் அடுத்த யாமை நிழலுடை நெடுங்கயம் புகல்வேட் டாஅங்கு" (அகம்., பா.361:11-12) என்ற வரிகளில் விரும்புதல் போலக் குற்றமுடைய நெஞ்சமே, நீ மீண்டும் அவளிடம் சேர முயற்சிக்காதே என்று தலைவன் பொருள்கடைக் கூட்டிய நெஞ்சை விளித்து அடக்க முயல்கின்றான். விரும்பியவர்கள் எவ்விதத் துன்பமும் அடையக் கூடாதென விரும்பித் தொழுதல் அன்புடையாரின் இயல்பு.

பலகாரணங்களால் தலைவியைத் தலைவன் பிரிய நேர்ந்தாலும் அவளது அன்பினையே மையப்புள்ளியாகக் கொண்டு தலைவன் உளக்கூற்றுகள் நிகழ்த்துகின்றான். தலைவன் தன் காதலியை ன்நினைத்துருகும் மனவுணர்வுகள் அகத்தில் இடம்பெற்று அவனி நிலையை தெளிவாக எடுத்துரைக்கின்றனயில்வினைமேற் செல்லும் தலைவனின் மனப்போராட்டம் இடைச்சுரவழி . நீண்டு இரக்க உணர்வைத் தோற்றுவிக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,சென்னை-1.

2. செயபால்.இரா.இ - அகநானூறு மூலமும் உரையும் ,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் சென்னை - 2005.
3. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (உ.ஆ) - நற்றிணை மூலமும் உரையும்,கழக வெளியீடு சென்னை- 2007.
4. சங்க இலக்கிய ஐங்குறுநூறு மூலமும் உரையும் - முனைவர் அ.மா பரிமணம்,
5. முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியன் - நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
6. சோமசுந்தரனார் - பொ .வே - குறுந்தொகை மூலமும் உரையும், கழக வெளியீடு, சென்னை - 2007.
7. நச்சினார்க்கினியர்(உ.ஆ) - கலித்தொகை மூலமும் உரையும் ,கழக வெளியீடு, சென்னை - 2007.

# The usage of Word 'ANJADI' among Malaysian Tamils – A Psycho lexical Study

75

**Dr.Kingston Pal Thamburaj**
**Faculty of Modern Languages and communication**
**Sultan Idris Educational University, Perak**
**Malaysia**

**ABSTRACT:**

Tamil Malaysians or Malaysian Tamils refer to the Malaysians of Tamil ethnic origin from India and Sri Lanka in Malaysia. They make up over 75% of the Malaysian Indian populations in Malaysia. Although bulk of the migration happened during the British there were established Tamil communities. Early Tamil communities suffered from social problems in education and family. In this period Aloysius Thivy founded the Malaysian Indian Congress to protect the Indian communities in Malaysia. In this period the foreign companies started selling their lands to the localities and the separation of lands made 22,500 people from 290 estates jobless and suffered. The problem continued till 1980's. In this period the living space of the land was calculated and fixed as 20*25 feet. In front of the every house five feet was left. This system continued for several years and the word Anjadi (Five feet) was coined and it became a regular usage among Tamils in Malaysia. It has both cultural and social importance. This paper focuses the Social usage and semiotic study of this particular word. The words people use in their lives can reveal important aspects of their social and psychological worlds.

Key words: Tamil; Malaysians; ethnic; system; anjadi - five feet; lexical,psychological worlds.

**Introduction:**

Linguistics is a descriptive rather than a prescriptive discipline. By this we mean that our objective is to describe the systematic nature of language as used by the members of particular speech communities rather than to pass (prescriptive) judgments about how well they speak or how they should or should not be using their language. The study of people's attitudes towards one variety or another is an interesting sub field of linguistics, one which can help us to

understand the social distribution of dialects or the direction of language change. Lexical differences are not as salient in distinguishing the speech of different social or socioeconomic classes, and they have accordingly played a much smaller role in social dialectology. Here the usage of the word Anjadi is described how it shows during the British colonization; many Indians were brought in as laborers' to work in the rubber and sugar cane plantations (David & Govindasamy, 2007). The positioning of different races to specified areas by the British paved way for isolation between the races and less interaction between thembeing pushed to the interior of the state from the beginning, the poor Tamils have been confined to the estates.Their lives were marked by lack of upward mobility and continued marginalization from the British colony and later, after independence by the ruling party in Malaysia (Morris & Maniam, 2001). The country had been ruled by race based parties from the time of independence. The Malays, who are the majority are represented by United Malays National Organization (UMNO), while the Chinese by Malaysian Chinese Association (MCA) and Indians by Malaysian Indian Congress (MIC) (Saw, 2006). These three major parties unites as National Front and had been leading the country for more than half a century from the time Malaysia gained its independence in 1957. The members of the leading parties are more interested in fulfilling their individual agenda rather than addressing the public agenda. Many pressing issues such as inequality of wealth distribution, unequal education and job opportunity, cultural and religious matters, displacement of the Indian from estates due to commercialization and residential purposesespecially the Indians begin to feel the marginalization and pressed for a change in the ruling government (Osman, 2007; Retnanathan, 2010).

**The Estate Scenario**

The settlement pattern of Pal Melayu has changed in response to the change of crops, reductionin labour force, change in the ethnic composition of estate workers and the replacement of aEuropean manager by an Asian one (a Chinese until 1997, then succeeded by a MalaysianMalayalee from 1998 onwards). The important change is that instead of three clear-cut nucleatedresidential 'labour lines' (Division I & II and 'factory Division'), there is only one labour lines area – aportion of former Division II. The houses are no longer the type of kampong houses (Jain 1970:13-21), but single storeyed flats made of concrete and cement. There are no longer

communal bathing and toilet facilities, but individual bathrooms and flush toilets in the flats.The drastically reduced numbers of dwelling units in the labour lines are also ethnically mixed - Indian, Indonesian and Bangladeshi labourers and their families live cheek-by-jowl. The centrallylocated Mariamman temple, football field and Divisional Office buildings - including the Manager's office – remain where they were in the 1960s.

**The origin of the word Anjadi in Malaysia**

Foreign companies started selling their lands to the localities and the separation of lands made 22,500 people from 290 estates jobless and suffered. The problem continued till 1980's. In this period the living space of the land was calculated and fixed as 20*25 feet. In front of the every house five feet was left. This system continued for several years and the word Anjadi (Five feet) was coined and it became a regular usage among Tamils in Malaysia. It has both cultural and social importance.

**Usage of the word Anjadi in modern context**

Earlier days the number five is called Ainthu in Tamil language and the word feet is called Adi the combination of the two words calledas Anjadi. It means the space givenin front side of the house. But in the modern days whatever space it is lesser than five feet or more than thosefive feet is called Anjadi, because the practice of earlier days made them to use and practice in present days also.

**Purposes of the Place**:

This place was utilised for different purposes by the Malaysians depending upon their convenient. The following are some of the purposes :

- This place was considered as *Holy Place* by some of the people. In few houses Small idols statute of god also kept in this Anjadi for worshiping. People believed that by keeping this no bad deeds enter their homeeasily. So, this place was commonly used for worship.
- In most of the houses it is found that this place was kept as area for shoesand slippers.
- Few people make use of this place for keeping old things, unused things, waste things.

**Present usage of the 'Anjadi'**

The word ‘Anjadi’ is used to scold the people who are lazy e.g.,Anjadi–Karan.It means that the person who is involved in cheating. The reason for this is, usually the place Anjadi is located in corner of the house and this place was used to keep shoes, waste things, and unused things. Sometimes animalsalso petted here and moreover this place is dirty and unclean. In view of this, the immoral person will be called by the name Anjadi (place)-Karan (masculine gender). It indicates that the persons' attitude is not good.

One more word'Anjadi Karan (Masculine)Nayey' is also used by the people to scold, it meansstreet dog. It is known fact that the street dog will not own any permanent place to live and will be roaming here and there and it lives wherever it gets place. Keeping in mind this fact, any men who are doing any mistakes will be called this word.

After the several text analyses we summaries with the evidence the wordAnjadi is use to personality, social and situational fluctuations, and psychological interventions. We can conclude with the statement languageis a fundamental element in emotion experience and perceptions.

According to the psychological constructionist conceptual Act theory, an instance of emotion occurs when information from one’s body or others people bodies is made meaningful in light of the present situation using concept knowledge about emotion. Surely, the things that people say affect our emotions.

**The origin of thethought 'Anjadi'**

Since Malaysians were the people from India, it is the perception of the people that the word Anjadi thought has been brought from the Indian context. In south India the Tamil speaking community is using this word in other form. The word is Thinnai. This is the front elevation of the typical rural house in Tamilnadu. In olden days the houses are built along with 'thinnai' having passage way leads to the main door of the house, and both a sides there will be a plat form or a space.This type of house is called as 'Thinnaiviidu'.

**Use of the Thinnai in Tamilnadu**

In those days, the 'Thinnai' houses are built keeping in mind it will be a great help for the strangers to sit outside of the house and take rest for sometime, kids to play, and it will be useful during any functions, moreover, Thinnai brings all the local community news right to the door step, all can sit together and chit chat with everyone. This is the place make the street as a one family for the mutual sharing of fun, grief and happiness.

**The modern meaning of the word 'Thinnai'**

In India, Tamil the word 'Thinnai' is used by printing media to share the local news to the common people, few blogs are also incorporated in the name of Thinnai.

**Conclusion**

Concluded that the usage of words 'Anjadi' & 'Thinnai' and their meaning are culture bound. In the present days although the space left in front side is more than or lesser than 'five feet' it is called as 'anjadi' only. The idea behind the thought 'thinnai' and 'anjadi' are considered as same. Whether it may be a 'thinnai' or 'anjadi' place, now a days this place was utilised for vehicle parking, or garden, etc. The ‘Anjadi’ word goes beyond describing emotion after the fact is consistent with psychological constructionist theories of emotions.

References

1. David, M. K., & Govindasamy, S. (2007). The construction of national identity and globalization in multilingualMalaysia. Language policy, culture, and identity in Asian contexts, 55-72.
2. Morris, P., & Maniam, T. (2001). Ethnicity and suicidal behaviour in Malaysia: A review of the literature. Transcultural psychiatry, 38(1), 51-63.
3. Osman, M. N. M. (2007). Marginalisation and the Indian community in Malaysia. Available from Nanyang University of Technology Singapore, from Nanyang Technological University
4. Saw, S. H., &Kesavapany, K. (Ed.). (2006). Malaysia: Recent trends and challenges. Singapore: Institute of Southeast Asian Studies.
5. Ravindra K. Jain.(1970) culture and economy:Tamils on the plantation frontierin Malaysia revisited, 1998-99.Centre for the Study of Social SystemsJawaharlal Nehru University. New Delhi .